2835

T. N. L. A. Debates

Official Report

Vol. II  No. 3 & 4

8, 9th April 1985

D 1
V211, 31 N85
N85.5.3 & 4
136432

31|86

2835

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 8, 1985 - தொகுதி V எண் 3

Monday the 8th April 1985 - Volume V No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George

Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்) Price Rs. 3-50 paise

D
V211,31 N85
N85·5·3 f4
[stamp] 136432 ... 600 008.

உள்ளடக்கம்

8—4—1985


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்— விடைகள் | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 245—258 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம் | |
| | சிறப்பு காவல் படையினரில் சிலர் சேர்ந்து கொண்டு ஆவடி ராமரத்னா திரையரங்கை யும், அதன் உள்ளும் வெளியும் இருந்த பொதுமக்களையும் தாக்கியுள்ளது. | 258—272 |
| 3. | கவன ஈர்ப்புகள் | |
| | (அ) விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை குறைந்த வாடகைக்கு அளித்தல் | 273—274 |
| | (ஆ) உத்திரமேரூர் பகுதியில் நெல்பயிர் பாது காப்புக்காக எலி ஒழிப்பு நடவடிக்கை | 27 —276 |
| 4. | அரசினர் சட்ட முன்வடிவுகள் | |
| | (அ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 276—284 |
| | (ஆ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 | 284—287 |
| | (இ) அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு 1985 | 287 |
| 5. | வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம் (தொடர்ச்சி) | 290—310 |
| | திரு. கி. மனோகரன் | |
| | திரு. என். எஸ். வி. சித்தன் | 310—335 |
| | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 335—370 |
| 6. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 370 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஏப்ரல் 8, திங்கட்கிழமை

பங்குனி 26, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்."

இறையாக வந்து சேரும் பொருளும், சுங்கமாகக் கொள்ளும் பொருளும், தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் அரசனுடைய பொருள்களாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### பஞ்சாலைத் தொழிலாளர் பணிக்கொடை

*49—(*வினா எண் 1018)*—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்வீஸ் முடிந்த தொழிலாளர்களுக்கு பணிக்கொடைத் திருத்தச் சட்டபடியும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புப் படியும் பணிக்கொடை வழங்க பல பஞ்சாலை முதலாளிகள் முன் வருவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) பணிக்கொடை திருத்தச் சட்டத்தின்படியும், உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படியும் பணிக்காலம் (சர்வீஸ்) முடிந்து ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்கு பணிக்கொடை வழங்க பல பஞ்சாலை முதலாளிகள் முன்வருவதில்லை என்பது பற்றி புகார் விவரங்கள் தொழிலாளர் துறைக்கு இதுவரையில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவரவர்களே, கடந்த 1984-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் தேதியில், திருத்தப்பட்ட பணிக்கொடைத் திருத்தச் சட்டத்தின்படி பஞ்சாலை முதலாளிகள் தமிழ் நாட்டில் கிராஜூட்டி வழங்குவதில்லை. ஆனால் வழங்கப் பட வேண்டும் என்று முதலாளிகள் சங்கத்திலேயிருந்து ஒரு சர்க்குலர் மட்டும்தான் போடப் பட்டிருக்கிறதே தவிர, நடைமுறையில் எங்கும் கிராஜூட்டி திருந்தச் சட்டபடி வழங்கப்படுவது இல்லை.

ஆகவே, பணிக்கொடைத் திருத்தச் சட்டப்படி பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் கிராஜுட்டி வழங்கப்பட வேண்டும் என்பதற்கான முறையில், முதலாளிகளுக்கு எதிரான நிர்பந்த நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் சகோதரர்களுக்குச் சட்டப்படி பாதுகாப்பு இருக்கிறது. எனவே, அவர்கள் விண்ணப்பித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரு. சுப்பராயன் :** பேரவைத் தலைவரவர்களே, சட்டப்படி பாதுகாப்பு இருந்தாலும்கூட, அவற்றை நடைமுறைப்படுத்துவது இல்லை என்பதைத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களோடு 12—3—84-இல் பேச்சுவார்த்தை நடத்தியபோது, முதலாளிகள் பஞ்சப்படி தராமல் இருக்கிறார்கள் என்று சொல்லி அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே குறிப்பாக நான் சுட்டிக்காட்டுவது, பொதுப்படையாக, திருத்தச் சட்டப்படி பஞ்சப்படி வழங்கப்பட வேண்டும் என்று முதலாளிகள் மீது நிர்பந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். அதை அரசு மேற்கொள்ளுமா என்பதைத்தான் திரும்பவும் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டத்தில் வாய்ப்பு இருக்கிறது; சாத்தியம் இருக்கிறது. இவைகளை விட்டுவிட்டு நிர்பந்தம் நிர்பந்தம் என்று வற்புறுத்துவதில் பொருள் இல்லை. அதற்கு உரிய அதிகாரிகளை அரசாங்கம் நியமித்திருக்கிறது. ஆகவே, பாதிக்கப்பட்ட அல்லது கிடைக்காத தொழிலாளர்கள் இவர்களிடத்தில் விண்ணப்பித்து விட்டு, பிறகு அதிகாரிகள் ஏதாவது சுணக்கமாக இருந்தால் அல்லது தாமதித்து இருந்தால் அல்லது அக்கறை இல்லாமல் கடமையிலிருந்து தவறினால் அதை நீங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவரவர்களே, மின்சார இலாக்கா, அரசு போக்குவரத்துக் கழகம் போன்ற இடங்களில் இத்தகைய பணம் கிடைக்கவில்லை என்பதற்காக சுப்ரீம் கோர்ட் வரையில் வழக்கு நடத்தப்பட்டது. இன்றைக்கும் ஆயிரக் கணக்கானவர்களுக்கு அந்தத் தொகைகள் கிடைக்காமல் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? இதுகுறித்து அமைச்சரவர்கள் தலையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. சம்பந்தப்பட்ட துறையினிடத்தில் விசாரித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறேன்.



**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே இந்தத் தொழிலாளர்களினுடைய கிராஜுட்டி சம்பந்தமாக, மத்திய அரசாங்கமானது இந்தச் சட்டத்தைத் திருத்தி சுற்றறிக்கையாக அனுப்பி இருக்கிறார்கள். அது நம்முடைய அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானால் உடனடியாக அது ஏன் அமல் நடத்தப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்மையில் கோவையிலிருந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உட்பட தொழிற் சங்கத் தலைவர்கள் அரசினிடத்தில் தகவல் அளித்திருக்கிறார்கள். மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### சென்னையில் தடையிலா வர்த்தக மண்டலம்

50—(*வினா எண். 4)—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. மா. சின்னராசு, திரு. செ. செம்மலை : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் அமைக்கப்பட்டு வரும் தடையிலா வர்த்தக மண்டலம் எப்போது முதல் செயல்படும்?

(ஆ) எந்தெந்த தொழில்கள் தொடங்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) சென்னையில் அமைக்கப்பட்டு வரும் ஏற்றமதி தொழில் மண்டலத்தின் முதல் பகுதி இந்த ஆண்டு இறுதியிலிருந்து செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ள தொழில்கள்—

| | | |
|---|---|---|
| 1. | உடுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் | 12 |
| 2. | சிறு பொறியியற் தொழிற்சாலைகள் | 3 |
| 3. | தோல் பெல்ட் தயாரிக்கும் தொழிற்சாலை | 1 |
| 4. | ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிற்சாலைகள் | 2 |
| 5. | பொன் ஆபரணத் தொழிற்சாலை | 1 |
| 6. | டிடானியம் உலோக கருவிகள் தொழிற்சாலை | 1 |
| 7. | சோப்புத் தொழிற்சாலை | 1 |
| 8. | எலக்ட்ரானிக்ஸ் | 2 |
| 9. | கம்ப்யூட்டர் | 1 |
| 10. | செயற்கை வைரத் தொழிற்சாலை | 1 |
| 11. | மருந்து தொழிற்சாலை | 1 |
| | மொத்தம் .. | 26 |

மொத்தம் 26 தொழில்களை அந்தப் பகுதியில் நிறுவ அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெட்ராஸ் எக்ஸ்போர்ட் ப்ராசஸிங் ஸோன் என்று சொல்லக்கூடிய இந்த ஏற்றுமதிக்கான வர்த்தக மண்டலம் சென்ற ஆண்டே தன்னுடைய தொழிலைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. என்ன காரணத்தால் காலம் நீடித்துக்கொண்டே போகிறது? இந்த ஆண்டாவது அது தன்னுடைய பணியைத் தொடங்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்தச் சுற்றுச் சுவர் கட்டுகின்ற பணி கூட இன்னும் நிறைவு பெறவில்லை. அப்படி சுற்றுச் சுவர் கட்டினால்தான் சுங்க இலாக்காவினர் அதை நோட்டிஃபை பண்ணுவார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சரை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒரு திட்டவட்டமான பதிலை. இது எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது குறித்துச் சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்துவதற்குச் சற்று கால தாமதம் ஆகியது. முதலிலே 100 ஏக்கரா வரை எடுப்பதாகத் தீர்மானித்து இருந்தார்கள். அதற்குப் பிறகு அந்த ஏற்றுமதி வர்த்தகர்கள் அதிகமாக இடங்களைக் கோருவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டு இப்போது 292 ஏக்கரா வரையில் கையகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. 100 ஏக்கரா வரையில் சுற்றுச் சுவர் கட்டுகின்ற வேலைகள் இப்போது நடந்துகொண்டிருக்கின்றது. அந்த வேலைகள் அனேகமாக இன்னும் 10 நாட்களில் முடியும் என்று கருதுகிறேன். நான் 15 நாட்களுக்கு முன்பு போய்ப் பார்த்தபோது 40 நாட்களில் இந்த சுற்றுச் சுவர் கட்டுகின்ற வேலை முடிந்துவிடும் என்று சொன்னார்கள். எனவே அந்த வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கிடையில் கட்டிட வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இந்த ஆண்டு எப்படியும் அந்தத் தொழில் பேட்டை துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 26-க்கும் அதிகமான மனுதாரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றது. அங்கே யாருக்காவது இடம் வழங்கப்பட்டிருக்கின்றதா? யாருக்கும் இன்னும் இடம் வழங்கப்படவில்லை என்று அறிகிறேன். அந்த ஏற்றுமதி தொழில் மண்டலத்தில் வேறு என்னென்ன சலுகைகளை அரசு கொடுக்க இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் ;** பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு என்பது கட்டிடங்களைக் கட்டி அதற்குப் பிறகு ஒதுக்கவேண்டிய ஒன்றாகும். கட்டிடங்கள் வேலைகள் இப்போதுதான் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே முதலிலே கட்டிடங்களைக் கட்டவேண்டும். பிறகு தொழிலாளர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டவேண்டும். அதற்காக





வீட்டுவசதி இலாக்காவின் மூலமாக அதைச் செய்யும்படி நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு தொழிலாளர்கள் தங்குவதற்கும் மற்றும் பல வசதிகளுக்காகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அந்தந்த இடங்களில் ஒவ்வொரு இலாக்காவினரும் வேலைகளைத் தொடங்கி இருக்கிறார்கள். இது முக்கியமாகக் காலதாமதம் ஆனதற்குக் காரணம் அந்த நிலத்தைச் சமப்படுத்த வேண்டியிருந்ததுதான். அது ஒரு குன்றை ஒட்டிய பகுதியாகும். எனவே அந்தப் பகுதியில் எல்லா வேலைகளையும் செய்து தரையைச் சமப்படுத்தித்தான் கட்டிடங்கள் கட்ட வேண்டி இருக்கிறது. அந்த வேலைகள் நடைபெற்ற பிறகு இப்போது ஏற்றுமதிப் பெருக்கத்திற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டதற்குப் பிறகுதான் அவர்களுக்குத் தரப்படும். அங்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்பட இருக்கின்றன என்று கேட்டார்கள். மூலப்பொருட்கள், துணைப்பொருட்கள், மூலதன இயந்திரங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய அந்த இடத்தில் நல் சலுகைகள் அளிக்கப்படும்.

**திரு. மா. சின்னராசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்றுமதியை ஊக்குவிக்கின்ற திட்டமாக இருப்பதால் இதன் மூலம் அன்னியச்செலாவணியை மிச்சப்படுத்த வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே மத்திய அரசிடமிருந்து இதற்காக நாம் என்னென்ன உதவிகளைப் பெறுவோம் என்பதையும் ஏற்கனவே பல ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்கிற கோவை மாவட்டத்தில், அதாவது பனியன் மற்றும் துணிகளை ஏற்றுமதித் தரத்திற்கு உற்பத்தி செய்கின்ற கோவை மாவட்டத்தில் இதுபோன்ற மையம் ஏற்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்வதன் காரணத்தால் அன்னியச் செலாவணியை நாம் அதிக அளவில் ஈட்டுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. இந்தப் பகுதியில் உள்ள 100 சதவீத உற்பத்தியையும் நாம் ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதுதான் தற்போது நாம் வகுத்துள்ள கொள்கை. எனவே 100 சதவீதம் ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில் அதிபர்கள்தான் அந்தப் பகுதிக்கு வர முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

(முற்பகல் 9-10)

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் ஏதாவது தொழில் துவங்க முன் வந்திருக்கின்றனவா? கூட்டு நிறுவனங்களோ அல்லது தனியார்-வெளியார் நிறுவனங்களோ முன் வந்திருக்கின்றனவா? அப்படி முன் வரவில்லையென்றால் அதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏறக்குறைய வெளிநாட்டு அறிவோடுதான் அநேகமாக தொழில் ஆரம்பிக்க வருகிறவர்கள் அங்கே வருவார்கள். வெளிநாட்டோடு தொடர்புடையவர்கள்தான் அங்கே வருவார்கள். ஏனென்றால் அங்கே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமைகளுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே, ஏற்றுமதி செய்யக்கூடிய தரமான பொருள்களை உற்பத்தி செய்யக்கூடியவர்களும் வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவை அறிந்தவர்களும் வெளிநாட்டுப் பெரிய தொழில் அதிபர்களோடு, தொழிற்சாலைகளோடு கூட்டு வைத்திருப்பவர்கள்தான் அநேகமாக இந்த இடத்திலே தொழில்களைத் தொடங்க முடியும்.

### தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம்.

51—(*வினா எண் 50)—திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்திற்கு, புதிதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு உதவியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

(இ) பல்கலைக் கழகத்திற்கு, மைய அரசு அங்கீகாரம் அளித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தமிழக அரசு, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குப் புதிதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு இதுவரை ரூ. 289.75 இலட்சம் அளித்துள்ளது.

(இ) பல்கலைக் கழக மானியக் குழு சட்டப் பிரிவு 12(ஏ)ன் கீழ், நிறுவன வளர்ச்சி நிதி தவிர ஏனைய திட்டங்களுக்கான மைய அரசிடமிருந்து உதவி பெற தமிழ்ப் பல்கலைக் கழகம் தகுதியானது என்று மானியக் குழு அறிவித்துள்ளது. கட்டிடங்கள் கட்ட மைய அரசு பல்கலைக் கழக மானியக் குழுவினால் மானியம் ஏதும் அளிக்கப்படவில்லை.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகத்திற்கு மைய அரசிலிருந்து மீண்டும் மானிய உதவி பெறுவதற்கு இந்த அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற நிலையில் இந்த உதவி இதுவரையில் கிடைக்கவில்லை என்று சொன்னோம். ஆனால் அது வளர்ச்சியுறுகிறபொழுது அந்த உதவி நிச்சயமாகக் கிடைக்கும்.



1985 ஏப்ரல் 8]

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய கட்டிடத்திற்கு நம்முடைய தமிழ்நாட்டு மாவட்டப் பெயர்கள் வைக்கப்படும் என்று முன்பு அறிவிக்கப்பட்டதே. அப்படிப்பட்ட பெயர்கள் இப்பொழுது அங்கே வைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பல்கலைக் கழக வளாகம் தமிழகத்தை ஒத்ததாக வகுக்கப்பட்டு, அதற்குள்ளே மாவட்ட எல்லைகளும் அதைப் போலவே அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்ட எல்லைக்குள்ளும் அந்த மாவட்டக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலே கட்டிடங்கள் கட்டவேண்டுமென்று ஒவ்வொரு கட்டிடங்கள் கட்டிக்கொண்டு வருகிறோம். அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு ஏற்ப வளாகம் அமைக்கப்படுவதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டினுடைய பண்டையக் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் எழுநிலை மாடம் ஒன்றாவது சட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத்திற்குப் பயனுள்ள கட்டிடங்கள் கட்டும்போது இந்த வடிவமைப்புகளை நாம் அதிலே கொண்டு வரலாம் என்பதுதான் கருத்தே தவிர, வேறு நினைவுச் சின்னங்கள் போன்றவற்றைக் கட்ட வேண்டுமென்ற எண்ணம் இல்லை.

திரு. வி. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மைசூரிலே இருக்கக்கூடிய கல்வெட்டுக்களிலே இருக்கக் கூடிய தமிழ் ஆவணங்களைத் தஞ்சாவூர் பல்கலைக் கழகத்திற்குக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பல்கலைக் கழகம் பார்த்து முடிவு செய்ய வேண்டிய ஒன்று.

### அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்கல்.

52—(*வினா எண் 106)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு வீடுகட்ட கொடுக்கும் கடன் தொகையை உயர்த்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டக் கொடுக்கும் கடன் சமீபத்தில் எப்பொழுது உயர்த்தப்பட்டது? தமிழ்நாடு மட்டத்தில் எத்தனை அரசு ஊழியர்களுக்கு எவ்வளவு ரூபாய் தொகையில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24—9—1982 அன்று, அரசு ஊழியர்களுக்குக் கடன் கொடுக்கின்ற ரூ. 1 இலட்சம் தொயை ரூ. 1½ இலட்சமாக உயர்த்தி இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரை இதுவரை மொத்தம் 15,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ரூ. 38 கோடி இது வரை வீடுகளுக்காக இந்த அரசு ஒதுக்கி இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்களுடைய தொகுதியில், அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் போல, வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை வெகுநாளாக இருந்து வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து வருடங்களாக இருப்பதால், வீடுகள் கட்டிக் கொடுத்தால் பணம் வசூலிக்க முடியுமா என்று யோசிப்பதாக தெரிகிறது. ஆகவே இதற்கு விதிவிலக்கு அளித்து அவர்களுக்கு அந்தந்தத் தொகுதிகளில் வாடகையில் வீடு கட்டிக்கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில் கடன் பெறுகிற தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு 20 ஆண்டுகாலம் அவகாசம் இருக்கிறது. நான் அளிக்க வேண்டிய பதிலை உறுப்பினர் அவர்களே அளித்து விட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பதவிக்காலம் 5ஆண்டுகள் என்பதும் உறுதியாக சொல்லமுடியாத நிலையில் இருக்கிறது. அவர்களுடைய அடுத்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் மாவட்ட தலைநகரிலோ அல்லது வட்டத் தலைநகரிலோ இருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கோ அல்லது வாடகை வீடு கொடுப்பதற்கோ அனுமதி கோருகிறதை பொறுத்தவரையில் ஏற்கனவே பொதுவாக இருக்கிறது. வேறு வீடுகளை கட்டுவதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்குரிய மனுவை கொடுத்தால் அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் நல்ல வீடுகள் இல்லாத காரணத்தால் அதிகாரிகள் அங்கே தங்க மறுக்கிறார்கள். எனவே கிராமப்பகுதிக்கும் வீடு கட்டும் திட்டத்தை, விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடனுதவி கொடுப்பதை விரிவுபடுத்தவேண்டும். அரசிடம் அதற்கான உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் கிராமப்பகுதிகளுக்கு வந்தால் தங்க மறுக்கிறார்கள் என்ற முதல் கேள்வியைப் பொறுத்தவரையில், வீட்டு வசதி வாரியம் வட்டத் தலைநகரத்தை முடித்துவிட்டுதான் கிராமப்பகுதிகளுக்கு வரமுடியும். ஆகவே அடுத்து கிராமங்களில் இருப்பவர்களுக்கு கடன் தருகிற நிலையைப் பொறுத்தவரையில் அங்கே வீடு கட்டும் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கத்தின் மூலமாக வீடு கட்டுபவர்கள் கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களுக்கு கொடுக்கப்படுகிற உச்ச அளவு தொகை எவ்வளவு? அந்தத் தொகையை ஒரு லட்சமாக ஆக்குவதற்கு அரசிடம் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 5 ஆண்டுகள் பதவிக்காலம் முடிந்த பின்னாலே வாழ்க்கை முழுவதும் ஓய்வூதியமாக 250 ரூபாய் என்ற அளவில் இப்போது கொடுக்கிறார்கள். அந்த ஓய்வூதியத்தை பிடித்துக்கொண்டு அந்த அடிப்படையிலே வீடுகளை ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, ஒரு ஆண்டு காலத்திற்கு பிறகு இதனைப் பரிசீலிப்போம்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்காக கடன் கொடுப்பதிலே மூன்று தவணைகளாக கொடுப்பதால் அவர்கள் நிச்சயித்த காலத்தில் வீடுகளை கட்டமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அத்தகைய கடனை ஒரே தவணையில் அல்லது இரண்டு தவணைகளில் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, பெரிய அளவு தொகையை ஒரே நேரத்தில் கொடுத்தால் அரசு ஊழியர்கள் வேறு தவிர்க்க முடியாத செலவினங்களுக்கு அதை செலவுசெய்து, வீடு கட்டுவதில் இறுதி நிலையை அடைவதற்கு கடினமாக இருக்கும். இப்போதே அவர்கள் மேலும் கடனுதவி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலையில் ஏற்கனவே இருக்கிற அந்த முறைதான் அவர்களுக்கும் நல்லது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு திட்டம் மாநில அளவில் இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் அரூர் நகருக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு முன்னாள் வீட்டுவசதித் துறை அமைச்சர் இராஜாராம் அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் அமலாக்கப்படவில்லை. அதை அமலாக்கவேண்டுமென்று அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். கிராம வீட்டுவசதித் திட்டத்தைப் பொறுத்த வரையில் என்னுடைய தாலுக்காவில் 800 பேர்களுக்கு வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுத்து, அதற்கான நிதிவசதி இல்லாமையால் ஓராண்டு காலமாக அந்த வீடுகள் பேஸ்மெண்ட் போன்று பல்வேறு நிலைகளில் நின்று கொண்டிருக்கின்றன. அரூர் தாலுக்கா முழுவதிலும் பரவலாக இந்த நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதனை கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பூர்த்தி செய்து கொடுப்பதற்கு அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்? எப்போது அவை பூர்த்தி செய்து கொடுக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அவர்கள் குறிப்பிட்ட ஊருக்கு அனுமதி அளித்திருந்தால் அது பரிசீலிக்கப்படும். அடுத்து, 800 வீடுகளுக்குமேல் கட்ட ஆரம்பித்து முடியாமல் இருப்பதாகவும் அதற்கு கடன் உதவி செய்யும் வாய்ப்பு இருக்கிறதா என்றும் கேட்டார்கள். வீடு கட்டும் சொசைட்டி மூலம் மனு செய்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தாலூகா மையத்திலும் வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடு கட்டிக்கொடுக்கப்படுகிறது என்று அறிவித்தார்கள். ஒவ்வொரு தாலூகாவிலும் இரண்டு, மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளடங்கி இருக்கின்றன. அந்தப் பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அங்கே தங்கி பணியாற்றக்கூடிய அளவுக்கு வீட்டுவசதி இல்லாத காரணத்தால் 20, 30 மைல் தூரத்தில் நகரப்புறங்களில் தங்கியிருந்து, பணியாற்றச் செல்கிறபோது காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் அவர்கள் செய்யவேண்டிய காரியங்களில் தடை ஏற்படுகிறது. அதை எல்லாம் மனதிலே கொண்டு பஞ்சாயத்து யூனியன்கள் உள்ளடங்கி இருக்கிற பகுதிகளில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இரண்டாவது கட்டமாக, அதிகாரிகள் மற்றுள்ள ஊழியர்கள் தங்குவதற்கு ஏற்றவகையில் வீடு கட்டிக்கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, நம்முடைய துறையிலிருந்து ஆர்.டி.எல்.ஏ. துறைக்கு நிதி அளித்து, அவர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களில் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. அந்த வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நாட்டுக்கு நல்லது என்று கருதுகிறோம்.



சிவகெங்கையில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்.

53—(*வினா எண் 856)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகெங்கையில் அரசு ஊழியர்களுக்காக வீட்டுவசதி வாரியம் மூலமாக வீடுகள் கட்டும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) சிவகெங்கையில் அரசு அலுவலர்களுக்காக ரூ. 210·05 இலட்சம் செலவில் 288 வீடுகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் நடப்பு ஆண்டில் (1984-85-ல்) கட்டுவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதிலே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் வீடு கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகத் தெரிவித்தார்கள். அதைப்போன்று பெரும் தலைவர் காமராஜர் பெயரால் அமைந்துள்ள காமராஜர் ம வட்டத்தின் தலைநகரான விருதுநகரிலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரான இராமநாதபுரத்திலும் அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இதே நிதிஆண்டில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு வழிவகைக் காணுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரான இராமநாதபுரத்தில் 96 வீடுகள் 87.5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று காமராஜர் மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரில் 80.60 இலட்சம் ரூபாய் செலவில் புதிய குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட கடன்தொகை வழங்கப்படுவதைப்போல பத்திரிக்கை நிருபர்களுக்கும் கடன் வழங்கப்படுமா? அவர்கள் 300 ரூபாய், 800 ரூபாய் வாடகைக் கட்டவேண்டிய நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் சிறிய வீடு கட்டுவதற்கு 16,000 ரூபாயும், பெரிய வீடு கட்டுவதற்கு 30,000 ரூபாயும் முதலில் கட்ட வேண்டும். இது பெரிய பத்திரிகை நிருபர்களுக்கு சரியாக இருக்கும். ஆனால் ஏழை, அப்பாவி பத்திரிகை நிருபர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு 16,000 ரூபாய் கட்டுவது மிகவும் சிரமமான காரியம். ஆகையால் இந்த ஏழை எளிய, அப்பாவி பத்திரிகை நிருபர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப்போன்று கட்டிக்கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, அவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தான். இன்னும் வீடு இல்லாத மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென்று விரும்பினால், ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடு கட்டும் சொசைட்டி இருக்கிறது ; அங்கே மனு செய்தால் முறைப்படி கவனிக்கப்படும்.

திரு. கி. வெங்கடாசலம் : தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை மக்களுக்கு, வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் சென்னையிலிருந்து இப்போதுதான் மற்ற நகர்புறங்களுக்கு விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறது. காலப்போக்கில்தான் அது கவனிக்கப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, பல இடங்களில் நீதித்துறையில் இருக்கிற நடுவர்களுக்கு வீட்டுவசதி இல்லை. அதனால் அவர்கள் வாடகை வீட்டில் குடியிருக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. வாடகை வீட்டில் இருப்பதால் நீதித் துறையில் சில நேரங்களில் சலசலப்பு ஏற்படும் சாத்தியம் உண்டாகிறது. தென்காசியில் கூட இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டது. இந்த நிலை எற்படாமலிருக்க நீதிபதிகளுக்கு தகுந்த குடியிருப்புகளைக் கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இப்போதே பல்வேறு நகரங்களில், உதாரணமாக திருச்சி நகரத்தைப் பொறுத்தவரையில் நீதிபதிகள் மற்றவர்களுக்கு இப்போது தனிக் காலனிகள் இருந்து அவர்களுக்கு வீடுகள் எல்லாம் இருக்கிறது. எனவே ஆங்காங்கு அவர்களுடைய அவசியத்தைப் பொறுத்து. அதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

டாக்டர் ந. மாரிலாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் இந்த மாநிலத்தில் எத்தனை தாலுக்காக்களில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டில் 34 இடங்களை நம்முடைய தமிழக அரசு தேர்ந்தெடுத்து இருக்கிறது. இந்த இடங்களில் 4,500 குடியிருப்புகளை கட்ட இருக்கிறோம்.



1985 ஏப்ரல் 8]

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட குடியிருப்புகள் எல்லாம் சுகாதாரச் சீர்கேடுகள் அடைந்திருக்கின்ற நிலையில் இருக்கின்றன. எனவே அவைகளை குடிசை மாற்று வாரியத்தில் இருந்து மாநகராட்சிக்கு ஒப்படைத்து, அந்தப் பணிகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் மட்டும் இங்கே பதில் சொல்வது முறையல்ல. ஆகவே இதற்கு விடை அளிப்பதற்கு இயலவில்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, சென்னையில் இருக்கிற குடிசைகள் மட்டும் மாற்றியமைப்பது என்பது மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கும் பயன் அளிக்கின்ற வகையில் திட்டம் தீட்டி, ஒரு பேஸ்டு புராகிராம் என்ற அடிப்படையில், 3 ஆண்டுக் காலத்தில் எல்லா கிராமங்களிலும் வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியை அனுசரித்து இப்படிப்பட்ட திட்டங்கள் கவனிக்கப்படும்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தற்போது பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால் அங்கே பல்வேறு மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு உத்தேசித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கூடலூர் இ.வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பணி புரியும் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு வீடு கட்டி வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் கடையோரத்தில் இருக்கக்கூடிய நரிக் குறவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தந்திருக்கிறது. எந்தெந்த மாவட்டங்களில் அந்த நரிக் குறவர்களுக்கு வீட்டுவசதி வாரியம் வீடுகள் கட்டித் தந்திருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை, சேலம் போன்ற பகுதிகளில் நரிக் குறவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்கனவே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை பல இடங்களில் உள்ளாட்சி மன்றங்களோ அல்லது நகராட்சிகளோ, அதை மெயின்டெனன்ஸ், நிர்வகிப்பதை ஏற்றுக்கொள்வதில்லை. வீட்டுவசதி வாரியம் ஏற்றுக்கொள்வதில்லை என்ற பிரச்சனை அமைச்சரின் கவனத் திற்கு வந்திருக்கிறதா? அப்படி என்றால், அதைத் தீர்க்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதித் துறையைப் பொறுத்த வரையில், கட்டுகின்ற அந்த வீடுகளில், மின்விளக்கு, கழிவுநீர் வசதி, மற்றும் குடிநீர் வசதிகளை வீட்டுவசதித் துறையைச் சேர்ந்தவர்கள்தான் செய்துகொண்டு இருக்கிறார்கள். எனவே நடைமுறையில் அப்படித்தான் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**சிறப்பு காவல் படையினரில் சிலர் சேர்ந்துகொண்டு ஆவடி ராமரத்னா திரையரங்கையும், அதன் உள்ளும் வெளியும் இருந்த பொதுமக்களையும் தாக்கியுள்ளது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வி.பி. சிந்தன், ஜி. ஆனந்த கிருஷ்ணா, அ. ரகுமான்கான், டி. ஆர். வேங்கட ரமணன், கு. சுப்பராயன், எஸ்.என், இராமசாமி, சு. பாலன், பரிதி இளம்வழுதி, கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து ஆகியோர், ''சென்னை ஆவடியிலுள்ள ராமரத்னா சினிமா தியேட்டரில் 1—4—85 இரவு சுமார் 11 மணி அளவில் ஆவடி போலீஸ் முகாமைச் சேர்ந்த சுமார் 100 எஸ்.ஏ.பி. போலீசார்





உள்ளே புகுந்து ஜனங்களை அடித்தும், சொத்துக்களை நொறுக்கியும் கடைகளில் புகுந்து அடித்தும், பலருக்குக் காயமேற்பபடுத்தியதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதிகோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று வலியுறுத்துவதற்கான காரணங்களை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் குறிப்பிட்ட திரையரங்கில் சிறப்பு அதிகாரிகள் இரண்டு மூன்று பேர்கள் உள்ளே நுழைய முயன்றபோது அங்கே கேட் கீப்பர்களுக்கும் அவர்களுக்கும் சச்சரவு ஏற்பட்டு அவர்கள் அந்த இடத்திலிருந்து வாபஸ் பெற்று அவர்களுடைய நிலையத்திற்குச் சென்று அந்த அதிகாரிகள் அபாயச் சங்கை ஊதி நூற்றுக்கணக்கான சிறப்பு அதிகாரி களை, எஸ். ஏ. பி. காம்ப் நடைபெற்ற காரணத்தால், அவர் களைப் பூராவும் திரட்டி திரையரங்குக்குள்ளே நுழைந்து அடித் தார்கள். பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் என்று எந்த வித்தியாசமுமில்லாமல் மிருகத்தனமாக போலீஸ்காரர்கள் அவர் களைத் தாக்கினார்கள். கண்டவர்களையெல்லாம் அடித்தார் கள். அதற்குப் பிறகு அவர்களுடைய ஆத்திரம் தனியாத கார ணத்தினால் கடைத் தெருவுக்குள்ளே புகுந்து சில கடைகளை சூறையாடி அங்கே உள்ளவர்களையும் அடித்தார்கள்.

அதுமட்டுமல்ல. பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே நுழைந்து போலீஸ்காரர்களை கழுத்தைப் பிடித்து தள்ளினார் கள், எஸ். ஏ. பி. போலீஸ். இது முதல் தடவையல்ல. அந்த அளவிற்கு ஆவடியில் உள்ள சிறப்பு போலீஸ்காரர்கள் இத்தகைய நடவடிக்கைகளை திரையரங்கில், கடைத்தெருவில் பலமுறை நடத்தியது உண்டு. ஒருமுறை இப்படிப்பட்ட வன்முறைக்கு உள் ளானவன் என்ற முறையில் அவர்களுடைய நடவடிக்கைகள் எப்படி என்பது எனக்கும் தெரியும். மிருகத்தனமாக நாங்கள் எல்லாம் அன்றையதினம் தாக்கப்பட்டோம். ஆகவே இதற் குள்ள காரணங்களை ஆராயவும் இத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு முயற்சி செய்வதும் அவசியம் என்ற காரணத்தால் இந்தத் தீர்மானத்தை இங்கே வலியுறுத்துவது அவசியமாகிறது. நம்முடைய ஜவான்களுக்கு நாம் பயிற்சி அளிக்கிற முறையிலே ஒரு அடிப்படை மாற்றம் தேவை என்பது என் கருத்து. இன்றையதினம் அவர்களுக்கு அத்தகைய ஒரு பயிற்சி, அத்தகைய ஒரு அவுட்லுக், ஒரு அணுகுமுறை வழங்கப் படுவதில்லை. இது போலீஸ் கமிஷனருடைய விசாரணைக்குழு

வழங்கிய 4, 5 அல்லது 6–வது வால்யூமை பரிசீலனை செய்து பார்த்தால், சபாநாயகர் அவர்களே, அது நன்கு தெளிவாகும். அங்கே ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அடிக்கிறபோது செத்துப் போகிறார்களே என்று. அதற்கு ஒரு உயர்தர அதிகாரி கொடுத்த பதில் We do not teach our Jawans anctcmy என்று தான் பதில் அளித்தார்கள். ஆகவே போலீஸ்காரர்களுடைய போலீஸ் அதிகாரிகளுடைய கண்ணோட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். அதுவும் குறிப்பாக தமிழகத்திலே கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக போலீசுனுடைய, போலீஸ் அதிகாரிகளின் அராஜகச் செயல்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. போலீஸ் நிலைடங்களில் பெண்களை இரவு நேரத்தில் வைக்கக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டாலும் போலீஸ் நிலையங்களில் பெண்கள் கற்பழிக்கப்படுவதும்—வட ஆற்காடு மாவட்டத்தில் கட்டிப் போட்டு, கையையும் காலையும் கட்டிப்போட்டு விவசாயிகள் கூலி கேட்ட காரணத்தினால் சுடப்பட்டதும் உங்களுக்குத் தெரியாததல்ல. அரசாங்கத்தினுடைய கொள்கையிலேயும் ஒரு மாற்றம் வேண்டும். அரசாங்கம் போலீஸ் இலாகாவைக் கட்டுப்படுத்துவதில் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். போலீஸ்காரர்களுடைய கண்ணோட்டத்திலேயும் ஒரு மாற்றம் தேவை. அன்றையதினம் அவர்களுடைய கையில் துப்பாக்கி இருந்திருந்தால் எத்தனை பேர்களைச் சுட்டுக் கொன்றிருப்பார்கள் என்று தெரியாது. அவர்கள் சோபத்தின் உருவமாக மிருகத்தனத்தின் உருவமாக வந்து தாக்கினார்கள். ஆர். டி. ஓ. விசாரணை நடத்தினால் மட்டும் போதாது. பகிரங்க விசாரணை நடத்தவேண்டும். ஆகவே சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து ஆழமான ஒரு விவாதம் இதுபற்றி இந்த சபையில் நடத்தவேண்டும். பகிரங்க நீதி விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி நான் அமர்கிறேன். வணக்கம்,

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நம்முடைய காவல்துறையிலே எவ்வளவு கட்டுப்பாடின்மை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பகுதி என்னுடைய தொகுதியிலே இருக்கின்றது. அங்கு இரவு 10½ மணி அளவிலிருந்து 12 மணி வரையிலே அங்குள்ள சினிமா கொட்டகையிலும், அங்கேயிருக்கின்ற கடைத்தெருவிலும் இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள், கட்டுப்பாட்டை காக்கவேண்டிய காவல் துறையே இப்படிப்பட்ட வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது என்றால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் காவல் துறையைப் பற்றி பீதி அடைந்திருக்கிறார்கள். இதற்கு ஒரு எல்லையே கிடையாதா என்கிற ஒரு நிலை அங்குள்ள மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது.

1972-லே இப்பகுதியிலே தனி காவல் படையினரால் இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் நடத்தப்பட்டன. 1975-லே மீண்டும் இதே சினிமா கொட்டகையில், கடைத் தெருவில் இப்





படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. 60 சிறு தொழில்கள் நடத்துகின்றவர்கள் தங்கள் பெட்டிக் கடைகள் சூறையாடப்பட்டு, தகர்க்கப்பட்டு, தூக்கியெறியப்பட்டுள்ளது என்று என்னிடம் கூறினார்கள். அதோடு, அங்கேயுள்ள சிறு சிறு கடைகளின் கொட்டகைகளும் தூக்கியெறியப்பட்டன. அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஆட்டோ ரிக்ஷாக்கள் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே சிறு வியாபாரம் செய்கிறவர்கள், பூ வியாபாரம் செய்கிறவர்கள் காய்கறி வியாபாரம் செய்கிறவர்கள் ஆகியோருடைய கொட்டகைகள் எல்லாம் நாசமாக்கப்பட்டு, சுமார் 500–லிருந்து 2,000 3,000 ரூபாய் வரையில் நஷ்டமேற்பட்டிருக்கிறது. இப்படி நிலையிருந்தால், அங்கே அந்த இடத்திலே வியாபாரம் செய்ய முடியுமா, முடியாதா என்ற நிலை வியாபாரிகள் மத்தியில் ஏற்பட்டதனால், இரண்டு நாட்கள் கடையடைப்பு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அங்கேயிருக்கிற அசிஸ்டென்ட் கமான்டென்ட் என்று சொல்லுவார்களே, அவர்கள் உறுதுணையாக இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இதுவரையில் 5 காவல்துறை ஜவான்கள், போலீஸ்காரர்கள்தான் தான் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இதிலே ஈடுபட்டவர்கள் 100-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள், அவர்களின் மீது டி.ஆர்.ஓ. விசாரணை வைத்து அவர்களுடைய ஐடென்டிபிகேஷன் பரேட் நடத்தி, நடவடிக்கை எடுப்பதாக டி. ஜி. பி. அவர்கள் என்னிடம் நேரிலே கூறினார்கள், ஆனால் அவர்கள் எப்போது நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரியவில்லை, அங்கே இருக்கின்ற சப் இன்ஸ்பெக்டர் கருப்பையாதான், இதற்கு தலைமை தாங்கி நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது, ஆனால், இது வரையில் அவர்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அங்கே டி. ஐ. ஜி. அவர்கள் அரசுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும், நாங்கள் பரிந்துரை செய்யவேண்டுமென்று சொன்னார்களே தவிர, இதுவரையில் கலவரம் நடந்து ஒரு வாரம் ஆகியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தனிக் காவல் படைக்கும், ரெகுலர் போலீஸ் அதாவது சாதாரணமாக இருக்கின்ற காவல்துறைக்கும் இடையே அங்கே பெரும் கலவரம் நடந்திருக்கிறது, அங்கே இருக்கின்ற காவல் நிலையத்திற்குள்ளே புகுந்து அங்கே இருக்கின்ற இன்ஸ்பெக்டர் ஒருவரின் கையை ஒடித்திருக்கிறார்கள். இந்தத் தனிக் காவல்படையினர். டி. எஸ். பி. கணேசன் அவர்களை தரக்குறைவாகப் பேசி, தாக்க முயற்சி செய்திருக்கிறார்கள், இந்தச் செயலினால் நாடு முழுவதிலும் உள்ள போலீஸ் காவல் துறையினர் மத்தியில் கட்டுப்பாடின்மை கிராஸ் இன்டிசிப்ளின் இருக்கிறதா என்று எண்ணவேண்டியிருக்கிறது. நம்மைக் காப்பாற்ற வேண்டிய காவல் துறையினரே இந்த நிலையில் இருந்தால், எப்படி சட்டம் ஒழுங்கை காப்பாற்ற முடியும். எப்படி அரசு இயந்திரம் நடக்க இயலும் என்ற பீதி மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், இது ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருப்பதனால், மக்களுடைய அக்கறையையும்

இன்றைக்கு கவனத்தை ஈர்க்கின்ற பிரச்சினை என்பதினால், இந்தச் சபையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விவாதம் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, ஏற்கனவே உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதுபோல், ஆவடியிலுள்ள இராமரத்தினா சினிமா தியேட்டரில், தமிழ்நாடு ரிசர்வ் போலீசை சார்ந்த ஐந்து பேர்கள் சினிமா பார்ப்பதற்காக அங்கே சென்றிருக்கிறார்கள். படம் 'ஆயிரத்தில் ஒருவன்' என்பதாகும். ஆனால், பொதுமக்கள் இடத்தில் அவர்கள் காலையில் கொடுத்த டிக்கட் கவுண்டர்-பாயிலை இரவுக் காட்சிக்கு சென்றபோது காட்டியிருக்கிறார்கள். அப்போது அங்கே அந்த தியேட்டரில் பணியாற்றும் கேட்-கீப்பர் இந்த டிக்கட் செல்லாது என்றும், உள்ளே அனுமதிக்க முடியாது என்றும் சொன்னார். உடனே அவர்கள் 'சட்டம் என் கையில்' என்று சொல்வதுபோல், சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு, போலீஸ்காரர்களுக்கு அதுவும் சிறப்புக் காவல் படையினருக்கு படம் பார்க்க உரிமை இல்லையா என்று சொல்லி, அந்த கேட்-கீப்பரை அடித்து, அதைத் தடுக்கப் போன தியேட்டர் மானேஜரை அடித்து, அதறகுப் பிறகு அங்கே ஒரு பெரிய கலவரமே ஏற்பட்டது.

(முற்பகல் 9-40)

அந்தக் கலவரத்தில் 3, 4 பேர்கள் இடத்தை விட்டே ஓடியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அங்கே சைரன் என்று சொல்லக்கூடிய சங்கின் ஒலியை எழுப்பி, 100-க்கும் மேற்பட்ட காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஒரு வேனிலே வந்து, அது கூட எப்படி, 3 பிரிவுகளாக வந்திருக்கிறார்கள். ஒரு பிரிவு பொதுமக்களை தாக்குகின்றனர். இன்னொரு பிரிவு உள்ளூர் போலீஸ்காரர்களை தாக்குகின்றனர், மூன்றாவது பிரிவு சினிமா தியேட்டர்காரர்களை தாக்குகின்றனர். இதிலே வேடிக்கை என்னவென்று கேட்டால், ஆவடியிலே இருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டரை அடித்திருக்கிறார்கள். சப்-இன்ஸ்பெக்டரை அடித்திருக்கிறார்கள். அது போல கான்ஸ்டபிளை அடித்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனையே தாக்கியிருக்கிறார்கள். சம்பந்தமான வழக்கும் கூட அந்த ஆவடி போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டராலேயே பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொரு கொடுமையென்னவென்றால், வெளியிலே இருக்கிற இந்த சம்பவத்திற்கு சம்பந்தம் இல்லாத பொது மக்களையும் அடித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, வெளியிலே அவர்களுடைய கண்ணிலே தென்படுகின்றவர்களையெல்லாம், அது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, குழந்தைகளாக இருந்தாலும் சரி, எல்லோரையும் தாக்கினார்கள்; ஆவடி ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியிலே ஒருவர் சைக்கிள்



கடை வைத்திருக்கிறார். அவர் இரவு நேரத்தில் கடைக்கு வெளியே தூங்கிக் கொண்டிருந்தபோது - அவர் பெயர் கூட சின்னப்பா என்று சொன்னார்கள் - தூங்குபவரை தட்டி எழுப்பி அடித்திருக்கிறார்கள். அத்தோடு அந்தக் கடையில் இருந்த சைக்கிள்களையெல்லாம் தூக்கியெறிந்து நாசப்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்தப் பகுதியிலே உள்ள அண்ணா ஸ்குயர் என்னும் இடத்திற்கு பக்கத்தில் இருக்கக்கூடிய பஜாரில் வைக்கப்பட்டிருந்த அத்தனை ஸ்கூட்டர்களையும், சைக்கிள்களையும், வேன்களையும் தூக்கியெறிந்து, அடித்து நொறுக்கி நாசப்படுத்தியிருக்கிறார்கள். ஆக ஒரு உள்நாட்டு யுத்தமே அங்கே நடைபெற்றது என்பதைப் போன்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டு, அந்தப் பகுதி மக்கள் மிகுந்த பதட்ட நிலைக்கு ஆளாகியிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

இதிலே மிக முக்கியமான விஷயம் என்னவென்று கேட்டால் பொதுமக்கள், உள்ளே படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரும் அவர்கள் என்ன தப்பு செய்தார்கள் இதில் என்று தெரியவில்லை. மாமன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தயவுசெய்து உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்த்துக் கேட்க விரும்புகிறேன். தியேட்டர் ஊழியர்களுக்கும் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கும் கூட தகராறு இருக்கலாம், அதிலே கூட நியாயங்கள் வேறு விதமாக இருக்கலாம். ஆனால் நான் கேட்க விரும்புவது, படம் பார்த்துக்கொண்டிருந்த தாய்மார்கள் என்ன தப்பு செய்தார்கள் ? படம் பார்த்துக்கொண்டிருந்த குழந்தைகள் என்ன தப்பு செய்தார்கள் ? இந்த பிரச்சனைக்கு சம்மந்தமே இல்லாத பொது மக்கள் அங்கே உள்ளே இருக்கிறார்கள். நான்கு புறமும் கதவை மூடிக்கொண்டு உள்ளே படம் பார்த்துக் கொண்டிருப்பவர்களை கையிலே கத்தியோடும் துப்பாக்கி முனையாலும் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள்.

இதிலும் கொடுமை என்ன என்றால், பல தாய்மார்களை பலவந்தப்படுத்தியிருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்கள் அங்கே போய் பார்த்தபோது கூட, ஜாக்கெட்டினுடைய துண்டுகள், சேலையினுடையகிழிந்த துண்டுகள், பாவாடையின் கிழிந்த துண்டுகள், சவுரி முடிகள், கத்தி, லத்தி போன்றவைகள் கீழே கிடந்திருக்கின்றன என்பதைப் பார்த்திருக்கிறார்கள். யாரோ செய்த தவற்றுக்காக மூர்க்கத்தனமாக முடிவெடுத்து, நிரபராதிகளை தண்டித்தது என்பது என்ன நியாயம். அதிலும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய காவல்துறையினரே இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டால் எப்படி ? போலீஸ் ஸ்டேஷனையே தாக்கியிருக்கிறார்கள், இது என்ன நியாயம் ? இப்படி அன்றாடம் ஏதாவது சம்பவம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதே வழக்கமான காரியமாக இருக்கிறது. இதிலே டி. ஆர். ஓ. வை வைத்து விசாரணை என்பது சரியானது அல்ல இதுவரையில் வந்த விசாரணைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவு

என்ன ? உதாரணத்திற்குச் சொல்கிறேன், நான் சப்ஜெக்டை விட்டு வேறு பிரச்னைக்கு செல்வதாக தயவுசெய்து எண்ணக் கூடாது, உதாரணத்திற்காகத்தான் சொல்கிறேன்.

இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பு வந்தாயிற்று, தப்பு செய்தவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா ? பல் கமிஷன் தீர்ப்பு வந்திருக்கிறது, அதிலே ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா ? எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் நீதி விசாரணைக் கமிஷன்களின் மீதே நடவடிக்கை இல்லாத போது, வெறும் டி. ஆர். ஓ. விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் அவர்கள் குற்றவாளிகளை அடையாளம் காட்டச் சொல்லி, என்னதான் முடிவு சொன்னாலும், நடவடிக்கை எங்கே இருக்கப்போகிறது ? ஆளும் கட்சி தலையீடு விருப்பு வெறுப்புகள் அதனுள்ளே வந்துவிடுமே. ஆகவே, டி. ஆர். ஓ. விசாரணை என்று இருந்தால் நிச்சயமாக நியாயம் கிடைக்காது, நீதி விசாரணை இருந்தால்தான் நியாயம் கிடைக்க வேண்டிய ஒரு சூழலாவது ஏற்படும், இதிலே இன்னொரு வேடிக்கை யார் அடித்தார்கள் என்று தெரிந்துகொள்வதற்காக இந்த டி. ஆர். ஓ. ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள், (குறுக்கீடு) அந்த ஒரு உதாரணத்திற்காகத்தான் சொன்னேன் என்று ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இதிலே ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்று கேட்டால், யார் அடித்தார்கள் என்று தெரிந்துகொள்வதற்கு, சினிமாத் தியேட்டாகாரர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் ஆணோ பெண்ணோ அவர்கள் முன்னால் காவல் துறையைச் சார்ந்தவர்களை வரிசையாக நிற்கவைத்து, ஒரு அணிவகுப்பு பேரடு நடத்தப்போகிறார்களாம், அடித்தவர்களை, ஐடென்டிபிகேஷன் பண்ணவேண்டுமாம், இப்படி ஒரு ஏற்பாடு. இதை போலீஸ்காரர்கள், டி. ஆர். ஓ. மற்றும் கலெக்டர் ஆகியோர் சேர்ந்து செய்திருக்கிறார்கள்.

தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன், அடியை வாங்கிக்கொண்டு, பிழைத்தால் போதும் என்று தப்பி பிழைத்து ஓடுகிற தாய்மார்களும், மற்ற பொதுமக்களும், தங்களை யார் அடித்தார்கள் என்று பார்த்திருக்க முடியுமா, அடையாளம் காட்டமுடியுமா, அப்படியே அடையாளம் காட்டினாலும், அவர்கள் இவர்களை பழிவாங்காமல் விடுவார்களா, எனவே நீதி விசாரணைதான் வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். தற்போது போலீஸ் ராஜ்யம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஐ. பி. எஸ். அதிகாரிகள்தான் தமிழகத்திலே ஆளுகிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் இதற்கு முன்னால் இல்லாத அளவு கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன. டி. ஆர். ஓ. என்கொயரி இருக்கிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்





என்ற சாதாரண வாசகங்கள் தான் இன்றைக்கு இருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. எனவே இந்த சபையை ஒத்திவைத்து நீதி விசாரணை வழங்கவேண்டும். குற்றவாளிகள் ராணுவ கோர்ட்டிலே தண்டனை விதிப்பதைப் போல கடுமையாக தண்டிக்கப்பட்டால் தப்பு செய்கின்ற போலீஸ்காரர்கள் சட்டத்தை தன் கையில் எடுத்துக் கொண்டிருக்கிற போலீசார் திருந்துவதற்கான ஒரு நல்ல நிலைமை ஏற்படும். சட்டம் ஒழுங்கை நாட்டிலே பாதுகாக்கின்ற நல்ல நிலைமை ஏற்படும். துரதிருஷ்டவசமாக சட்டம் தன் கடமையைச் செய்யும் என்பதற்கு பதிலாக, சட்டத்தை பாதுகாக்கவேண்டிய காவல் துறை கடமையைச் செய்வதற்குப் பதிலாக, சட்டத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு தப்பான காரியத்தை செய்கிறார்கள். எனவே, இது அவசரபொது முக்கியத்துவம் வாய்ந்த மிக முக்கியமான பிரச்சினை. ஆவடியில் அடிபட்டவர்களாக நாம் இல்லாமல் இருந்தாலும், அன்றைக்கு அவர்கள் பட்ட அடி நமக்கு நிச்சயமாக வலிக்கிறது என்ற காரணத்தினால் சபையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, இந்த அவை மீது இரண்டாவது முறையாக காவல்துறை நடவடிக்கையை பற்றி இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் முன்மொழியப்பட்டு இருக்கிறது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியவர்கள் சட்டம் ஒழுங்கைக் கேள்விக் குறியாக்கியிருக்கிறார்கள்.

ஆவடியில் இராமரத்தினா தியேட்டரில் நடைபெற்றிருக்கின்ற இந்தச் சம்பவம் ஏதோ எதிர்க் கட்சிகளால் கொண்டு வரப்படுகின்ற வழக்கப்படியான ஒன்று என்று ஆளும் கட்சி நண்பர்கள் கருதக்கூடாது. காவல் துறையைப் பொறுத்த வரையில், ஆட்சியிலே இருக்கின்றபோது ஆட்சியிலே இருக்கின்றவர்களை மதிக்கின்றார்கள். ஆட்சியைவிட்டு அகற்றப்பட்ட பின்னால், ஆட்சியிலே இருந்தவர்களை மிதிக்கிறார்கள் என்பதுதான் நடைமுறை ஆகும். குறிப்பாக ஆவடியில் இராமரத்தினா தியேட்டரில் போலீசார் நடந்துகொண்ட முறை என்பது ஒழுங்கை கடைபிடிக்க வேண்டியவர்களே ஒழுங்காகச் சென்றிருக்கிறார்களா என்பதே கேள்விக்குறி.

பஞ்ச் பண்ணப்பட்ட டிக்கட்டோடு அவர்கள் உள்ளே சென்று இருக்கிறார்கள். தங்களுடைய கடமை என்ற அடிப்படையிலே செல்லாத பஞ்ச் பண்ணப்பட்ட டிக்கெட்டோடு வந்தவர்களை ஊழியர்கள் தடுத்திருக்கிறார்கள். தடுத்த உடனே போலீசார் தாக்குதலைத் தொடுத்திருக்கிறார்கள். அந்தத் தாக்குதலின் ஆழத்தைப் பற்றி அதிகமாக குறிப்பிட வேண்டியதில்லை. ஆட்சியிலே அமர்ந்திருக்கின்றவர்களுக்கு அதுபற்றி முழுமையான விவரங்கள் கிடைத்து இருக்கும் என்று கருதுகிறேன். நடைபெற்ற கொடுமை என்பது அநேகமாக, சமீப காலத்திலே இல்லாத மிகப் பெரிய கொடுமையாகும் அதைக் காவல் துறையினர் அங்கே நடத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அங்கே தியேட்டர் ஊழியர்கள் தங்களுடைய கடமையை செய்கிறார்கள். செல்லாத டிக்கெட்டோடு உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது என்று ஊழியர்கள் சொன்னதற்குப் பின்னர் அவர்கள் தங்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்று மேலும் 60, 70 காவல்துறை ஊழியர்களோடு வந்து கண்மண் தெரியாமல் தாக்கியிருக்கிறார்கள். 'பெண் என்றால் பேயும் இறங்கும்' என்பார்கள். ஆனால் இந்தக் காவல் படையினர் பெண்களைக் கண்டும் இணங்கவில்லை. குழந்தைகளையும் தூக்கி எறிந்திருக்கிறார்கள். காலால் உதைத்தும் இருக்கிறார்கள். 10, 12 சேலைகள் அந்தத் தியேட்டர் காம்பௌண்ட் வளாகத்திலே கிடந்திருக்கிறது. என்றால், அவர்கள் எந்த அளவிற்குத் தாக்கியிருக்கிறார்கள் என்பதை தயவு செய்து பரிசீலிக்க வேண்டும். குறிப்பாகக் காவல் துறை நடத்தியிருக்கின்ற ஆர்ப்பாட்டம் என்பது நவீன துச்சாதனர்களாகப் பெண்களைத் துயில் உரியத் தொடங்கி, தாம் காவல் துறையினர் என்பதை மறந்து, வேறு பல காரியத்திற்குக் கூட முயற்சித்திருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். நடைபெற்ற சம்பவம் என்பது கடுமையானது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியவர்கள், சட்டம் ஒழுங்கிற்கு சவால் விட்டிருக்கிறார்கள். சட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒழுங்கை மீறுவோம் என்று செய்து காட்டியுள்ளனர். என்ன காரணம்? தொடர்ந்து காவல்துறை சட்டவிரோத நடவடிக்கைகளை நீங்கள் மூடி மறைத்துவிடுகிறீர்கள், பாதுகாக்கின்றீர்கள் என்பது தான். நான் வலியுறுத்த விரும்புவது, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டும். அனுமதிக்கப்படுவதன் மூலம் காவல்துறையின் சட்ட விரோதப் போக்கைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமையை நடைமுறையில் உருவாக்குவதற்கு நாம் துணை புரிய முடியும்.

காவல்துறை என்பது தடி எடுத்து பொது மக்களைத் தாக்குவதற்கு அல்ல. பாதுகாப்பதற்குத்தான். ஆனால் பாதுகாத்திருக்கிறார்களா என்றால் இல்லை. ஆளுகின்ற கட்சி என்ற ஒரே காரணத்திற்காக இந்தக் காவல் துறையின் காட்டாட்சி தர்பாரை அனுமதிக்காதீர்கள், அரக்கத்தனத்தை மேலும் பாதுகாப்பது சரியல்ல என்பதையும் வலியுறுத்துகிறேன்.

(முற்பகல் 9-50)

அதோடு இங்கே, ஆளும் தரப்பிலே டி. ஆர். ஓ. என்கொயரி போடப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லலாம். சம்பந்தப்பட்ட 4, 5 பேர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதுபற்றிச் சொல்லலாம். நான் குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டுகிறேன். இவ்வளவு சம்பவங்களும் நடைபெற்ற பிறகு குற்றத்தின் தன்மைக்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக தற்காலிக நீக்கம் செய்து, டி. ஆர். ஓ. என்கொயரி போடுவது குற்றவாளிகளைத் தண்டிப்பதாகாது. இந்த நடவடிக்கைக்குப் பின்னாலே ஒழுங்குமுறைகளை நிலைநாட்டும்



வகையில் தமிழ்நாட்டிலே காவல் துறையினரின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். எந்த விதத்தில் முடிவு கட்டுவது என்பதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி ராமரத்தினா தியேட்டரில், காவல் புரிகிறவர்கள் எந்த அடிப்படையிலே அங்கே இருந்தார்கள், அல்லது அவர்கள் முன்னுரிமை பெற்றுச் சினிமாப் பார்க்கப் போனார்களா என்பதையெல்லாம் நாம் முதலிலே ஆராயவேண்டும். அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்கெனவே தகராறு நடைபெற்றிருக்கிறது. அந்தத் தகராறு அடிப்படையின் காரணமாக மீண்டும் அந்தப் போலீசார் எப்படி அங்கே வரவழைக்கப்பட்டார்கள் என்பதை அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் திரைப்படம் பார்க்கக்கூடிய திரையரங்கிலே போலீசார் சென்று ஒழுங்கான முறையிலே படம் பார்த்து விட்டுத் திரும்புவார்களானால் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றிருக்காது. அது மட்டுமல்ல, இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அங்கே கடை வைத்திருக்கிற பேவ்மெண்ட் கடைக்காரர்களையெல்லாம் அவர்கள் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள், பெண்களைச் சித்திரவதை செய்திருக்கிறார்கள். கடைவைத்தவர்களுக்கு அதனால் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் வரையிலே நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த வகையிலே குழப்பங்களை பொதுமக்களிடம் ஏற்படுத்துவதிலே முதலாவதாக இருந்திருக்கிறார்கள். எனவே பாதிக்கப்பட்ட அந்தக் கடைக்காரர்களுக்கு நமது அரசு நட்டஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டி. ஆர். ஓ. என்குயரி போடுவதாகச் சொல்லப்படுகிறது. அதைச் சரியான முறையிலே என்குயரி செய்து வன்மையாளர்களைக் கண்டிக்கும் வகையிலே முடிவுசெய்வதற்காக இப்பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-4-85 அன்று ஆவடியிலே உள்ள ராமரத்தினா திரை அரங்கத்திலே நடைபெற்ற நிகழ்ச்சிகளையொட்டி மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து ஏன் அவையை ஒத்திவைக்க வேண்டுமென்பதற்கான காரணங்களை விளக்கிச் சொல்லி இருக்கிறார்கள். 1-4-85 அன்று ஆவடிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி உள்ளபடியே வேதனைக்குரிய ஒரு நிகழ்ச்சியாகும். சிறப்புக் காவல் படையினர் கடமை தவறிய ஒரு செயலாகும். சிறப்புக் காவல் துறைக்கு இது ஒரு களங்கத்தை உருவாக்குகின்ற ஒரு செயல் என்றுதான் கருதவேண்டும். அதையொட்டி

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய உணர்ச்சிகளின் அடிப்படையிலே கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இப்படிபட்ட நிகழ்ச்சிகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக அவ்வப்போது எல்லா ஆட்சிகளிலேயும் எல்லா மாநிலங்களிலேயும் எப்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனவே தவிர அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. ஆகவே போலீஸ் ராஜ்யமாகியிருக்கிறது என்று ஒட்டுமொத்தமாக முடிவு கட்டுவது என்பது சரியான பேச்சல்ல. ஆனால் காவல் துறையினர் இல்லாமல் எந்த ஒரு ஜனநாயக நாட்டிலேயும் மக்களுக்குப் பாதுகாப்பு, உயிருக்கு, உடமைக்கு, உடலுக்கு, மற்றவைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்பது இயலாத ஒன்று. ஆனால் சிறப்புக் காவல் துனறயினர் தங்களது கடமையை ஆற்றும் வகையிலே அவர்கள் காரியத்தை ஆற்ற வேண்டுமென்ற முறையிலே அரசு கண்காணிப்பாக இருந்து நடைமுறைபடுத்துகின்ற முறையிலே இந்த அரசு பணியாற்றிக் கொண்டு வருகிறது.

ஆவடியில், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டாவது, ஐந்தாவது அணிகள், ரெஜிமெண்டல் மையத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன. ஆவடியில், தற்போது இந்த அணிகள் முழு அளவில் இல்லை. தற்போது தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாவது அணியின் இரு குழுக்கள், ஐந்தாவது அணியின் இரு குழுக்களுடன் சேர்ந்து, தீவிரப் பயிற்சி பெற்று வருகின்றன. மற்ற குழுக்கள் (கம்பெனிகள்) பிரிவுப் பணிகளில் வெளியே உள்ளனர். தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் இரண்டாவது அணித்தளவாயாக திரு. குணசேகரனும், ஐந்தாம் அணி தளவாயாக திரு. ஜெ. பி. ஜோசப்பும், ரெஜிமெண்டல் மையத்தின் தளவாயாக திரு.வி.ராமச்சந்திரனும் உள்ளனர். ரெஜிமெண்டல் மையத் தளவாய், வளாகத்தின் ஒரு கோடியில் தங்கியுள்ளார். திரு. ஜெ. பி. ஜோசப் வளாகத்திற்கு வெளியே, சத்தியமூர்த்திநகரில் தங்கியுள்ளார். இரண்டாவது அணித்தளவாய்க்கு, ஒரு வீடு ஒதுக்கப்பட்டு இருந்தபோதிலும் திரு. குணசேசகரனுக்கு முன்பு இப்பதவியில் இருந்தவர் அவ்வீட்டை காலி செய்யாததால், மேற்படி இல்லம், காலியாவதை எதிர்ப்பார்த்து திரு. குணசேகரன் சென்னையில் தங்கியுள்ளார்.

1-4-1985 அன்று இரவு, சுமார் 10-00 மணியளவில் இரண்டாவது அணியைச் சேர்ந்த இரு காவலர்கள், உள்ளூர் திரையரங்கு இராமரத்தினா தியேட்டர் ஒன்றுக்கு சென்றதாகவும் மேற்படி காவலர்கள் உரிய அனுமதிச்சீட்டுகள் இன்றி, திரையரங்கினுள் நுழைய முற்பட்டபோது, வாயிற்காப்போருக்கும் இக்காவலர்களுக்கிடையே சண்டை நிகழ்ந்ததாகவும் அதன் காரணமாகத் திரையரங்கு பணியாளர்கள், இக்காவலர்கள் இடையே தாக்குதல்கள் நடைப்பெற்றிருக்கின்றன, ஆவடி காவல் நிலையத்திற்குத் தக்க தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அந்த இடத்திற்கு வருவதற்குள், அவ்விரு காவலர்களும், அந்த





இடத்தைவிட்டுச் சென்று விட்டனர். காவலர்கள் தாக்கப்பட்டதானது, ஒரு தொடர் எதிர்தாக்குதலுக்கு காரணமாக அமைந்தது. சுமார் 10.30 மணியளவில், தமிழ்நாடு சிறப்புக் காவல்படைக் காவலர்கள், சுமார் 100 பேர் பெரும்பாலும் இரண்டாவது அணியைச் சேர்ந்தவர்க்ள், கழிகள் மற்றும் பெல்ட்களுடன் அத்திரையரங்கில் கூடி, அத்திரையரங்கின் கண்ணாடிகள் ஆகியவற்றிக்கு சேதம் விளைவித்து, ஐஸ் விற்பனை செய்யும் இயந்திரம் உட்பட, திரையரங்கினுள்ளும் அதன் வெளியேயும் இருந்த பொதுமக்களைத் தாக்கினர். இது முன்னர் நடந்த சம்பவத்திற்கு பதிலடியாக முற்றிலும் ஒரு வேண்டத்தகாத செயலாகும். திரையரங்கு உரிமையாளரின் புகாரின் மீது, முதலில் நடந்த சம்பவமான அனுமதிச் சீட்டின்றி உள்ளே நுழைய முற்பட்டமைக்கும், இரண்டாவது பெரிய சம்பவமான தாக்குதலுக்கும் சட்ட விரோதமான கூடுதல் ஆகியவற்றிற்கும், இந்திய தண்டனைச்சட்டம் 147, 148, 323, 324, 448 மற்றும் 427 பிரிவுகளின் கீழ் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பதினொரு ஆண்களும் ஒரு பெண்ணும் காயம் அடைந்தனர். ஆனால் அவை அளவில் சிறிய காயங்களானாலும் அவர்கள் புறநோயாளிகளாக சிகிச்சைப் பெற்றனர். பின்னர் காவல் துறை 2. 4.1985 அன்று நேரடி விசாரணை செய்து கொண்டிருக்கையில் மேலும் 7 பேர் காயங்கள் அடைந்ததாக புகார் செய்தனர். அவர்களும் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் அவர்களது காயங்கள் சிறிய காயங்கள் ஆகும். தமிழ்நாடு சிறப்புக் காவல்படை காவலர்கள், ஆத்திரத்துடன் செயல்பட்டு திரும்புகையில், சில பெட்டிக் கடைகளை சேதப்படுத்தினர். ஒரு கடையின் உரிமையாளரான மோகன் என்பவரது புகாரின் மீது இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 323, 448 மற்றும் 427 பிரிவுகளின் கீழ், ஒரு வழக்கு சிறப்புகாவலர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் நடந்துக் கொண்டிருக்கையில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை உதவி ஆய்வாளர் கருப்பையா காவல் நிலையத்திற்குச் சென்று தனது காவலர் ஒருவர், திரையரங்கில் தாக்கப்பட்டதாக அறிவித்துப் புகார் கொடுத்ததன் பேரில், உரிய நடவக்கைக்காக அப் புகாரும் பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை காவலர்களின் ஒழுங்கீன நடவடிக்கையால், ஆத்திரமுற்று கூடியிருந்த ஒரு பெரும் கூட்டத்தினரை உள்ளூர் துணைக்காவல் கண்காணிப்பாளர் திரு. கணேசன், சமாதானப்படுத்தி‘ உரிய புலன் விசாரணை நடைபெறும் என்றும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி கூறியதின் பேரில், கூடியிருந்தோர் அமைதியுற்றனர். கூட்டத்தினர் கலைந்து சென்று கொண்டிருக்கையில் இரவு சுமார் 11.00 மணியளவில், லான்ஸ் நாயக் 600 கணேசன் என்பவர் முகாமைவிட்டு வெளியே வந்தபோது சிலரால் தாக்கப்பட்டார். இது பற்றியும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, அதன் மீது ஒரு வழக்கு பதிவு செய்யபட்டது. லான்ஸ்நாயக் கணேசன் தாக்கப்பட்டதை அறிந்து இரண்டாவது அணியைச் சேர்ந்த தமிழ்நாடு சிறப்புக்

காவல்படை காவலர்கள், சுமார் 60 பேர், மீண்டும் ஆத்திர மூட்டும் செயல்களில் ஈடுபட்டு பெட்டி கடைகளுக்கு சேதம் விளைவித்தனர். அவ்விஷமிகளால் காய்கறி மற்றும் சோடா ஆகியவை விற்கும் சிறு வண்டிகள் கவிழ்க்கப்பட்டன. மீண்டும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. உள்ளூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் பொது மக்களிடையே பெருமளவில் நம்பிக்கையூட்டியதால், உணர்ச்சிவயப்பட்ட மக்கள் மெதுவாகக் கலைந்து செல்லத் தொடங்கினர்.

இச்சம்பவங்களைப் பற்றி தகவல் அறிந்ததும், செங்கை கிழக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளரும், செங்கற்பட்டு சரக காவல் துணைத் தலைவரும் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு கைவசமிருந்த செங்கை கிழக்கு ஆயுதப் படையினருடன் சென்றனர்.

(முற்பகல் 10-00)

மேலும் தென் ஆற்காடு மற்றும் செங்கை மேற்கு மாவட்டங்களில் இருந்தும், கூடுதல் காவல்படையினரை அனுப்பவும் உத்தர விட்டனர். அதன்பின், வட ஆற்காடு மாவட்டத்திலிருந்தும் கூடுதல் காவல்படையை காவல்துறை இயக்குநர் அனுப்பியுள்ளார். ஆயுதக் காவல் படை காவல் துணைத் தலைவரும், விசாரணைக்காக உடனே ஆவடிக்குச் சென்றார்.

காலையில் இதுபற்றி தகவல் அறிந்து காவல்துறை இயக்குநர் உடனே காவல்துறைத் தலைவருடன் (சட்டம்-ஒழுங்கு) ஆவடிக்கு விரைந்து சென்றார். முன்னதாக காவல்துறை இயக்குநர் (நுண்ணறிவு) தனிப் பிரிவினரை உஷார்படுத்தினார். செங்கை கிழக்கு மாவட்ட கண்காணிப்பாளரும், இச்சம்பவங்கள் பற்றி மாவட்ட ஆட்சியாளருக்கு தகவல் தெரிவித்திருந்தார். இந்நிகழ்ச்சிகளில் காவல்துறையினர் சம்பந்தப் பட்டிருப்பதாலும், விசாரணை நடத்துவது பொதுமக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்ற காரணத்தாலும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி உடனடியாக விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

காவல்துறை இயக்குநரும், காவல்துறைத் தலைவரும் முந்தைய நாள் இரவு வன்முறை நிகழ்ச்சிகள் நடந்த இடத்தைப் பார்வையிட்டு, சேதம் பற்றிய சரியான படங்களைப் பெறுவதற்காக, சம்பவம் நடைபெற்ற இடங்களை வீடியோ படமெடுக்க ஏற்பாடு செய்தனர். மூத்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் சம்பவம் நடந்த இடங்களைப் பார்வை பட்டது உட்பட, எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கைகள், காவலர்களின் தவறான நடத்தைப் பற்றிய எந்த உண்மையும் மறைக்கப்படமாட்டாது என்று பொதுமக்களுக்கு உறுதியளிக்கப் பட்டுள்ளது.



தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் இரண்டாவது அணியைச் சேர்ந்த காவலர்கள மட்டுமே, இச்சம்பவங்களில் சம்பந்தப் பட்டுள்ளார்கள் என்றும், ரெஜிமெண்டல் செண்டர் மற்றும் ஐந்தாம் அணியைச் சேர்ந்தவர்கள் கட்டுப்பாட்டுடனும், நிதானத்துடனும் நடந்து கொண்டார்கள் என்றும் விசாரணைகள் தெளிவாக்குகின்றன. இரண்டாம் அணியின் 4 காவலர்களும், நான்காம் அணியைச் சேர்ந்த ஆவடியில் விளையாட்டுப் போட்டிக்காகப் பயிற்சிப் பணியிலிருந்த ஒரு காவலரும், பல்வேறு வன்முறை சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது.

அவர்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1 | காவலர் 571 பவார் சிங் | — இரண்டாம் அணியில் விளையாட்டுப் போட்டிப் பயிற்சியிலிருந்து 4-ம் அணியைச் சேர்ந்தவர். |
| 2 | காவலர் 551 ஹரிமோகன் | — 2-ம் அணியைச் சேர்ந்தவர். |
| 3 | காவலர் 3027 ராமசந்திரன் | — 2-ம் அணியைச் சேந்தவர். |
| 4 | நாயக் 376 நாராயணன் | — 2-ம் அணியைச் சேர்ந்தவர். |
| 5 | காவலர் 616 ராமச்சந்திரன் | — 2-ம் அணியைச் சேர்ந்தவர். |

இவர்கள் உடனடியாக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மற்றவர்கள் யார் என்று அறிவதற்காக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

கொந்தளிப்பு சம்பவம் பற்றி அறிந்த உதவித் தளவாய் திரு. சுரேந்திர மோகன், காவலர்களைக் கேட்டுக்கொண்ட போதிலும், அது பலன் அளிக்கவில்லை. காவலர்கள் அனைவரும் தங்குமிடங்களிலிருந்து படுக்கையை விட்டு எழுந்து வந்த காரணத்தால், அவர்கள் எவரும் சீருடை அணிந்திருக்கவில்லை. எனினும், சம்பவம் பற்றி அவர் உடனடியாக முகாமிற்கு சற்றே வெளியில் வசித்துக் கொண்டிருக்கும் ஐந்தாவது அணி தளவாய்க்கு தகவல் கொடுக்கத் தவறிவிட்டார், அவ்வாறு, தகவல் கொடுக்கப்பட்டிருந்தால், தளவாய் உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து, அவர்கள் போவதைத் தடுத்திருக்க முடிந்திருக்கும். இந்த உதவித் தளவாய், தனிப்பட்ட முறையில் முயற்சிகளை மேற்கொண்டாரே தவிர, பிற அணிகளின் உதவியைப் பெறும் அடுத்த கட்ட நடவடிக்கையை அவர் மேற்கொள்ளவில்லை. அவர், தனது அணியில் தளவாய்க்கு மட்டும் தொலைபேசியில் பேசினார். அந்தத் தளவாய் அதிகாலை 02-00 மணிக்குத்தான் வந்தார். அவரது இந்த தவறுதலுக்காக அவர்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவரை காவல்துறை இயக்குநர் மற்றொரு அணிக்கு மாற்றுவதாக கூறியுள்ளார்.

குற்றம் புரிந்தவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும், இரண்டரம் அணியில் இரண்டு கம்பெனிகள், உடனடியாக அந்த இடத்திலிருந்து திருப்பத்தூருக்கும், கிருஷ்ணகிரிக்கும் தீவிரப் பயிற்சி பெற பயன்படுத்துவதற்காக மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்களை இந்த இடத்திலிருந்து அகற்றுவதால், பொதுமக்களின் எரிச்சல் அகலுவதற்கு வழிகோலுவதற்கும்; பிறகு மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்தும்போது, நபர்களை முறையாக அடையாளம் கண்டுகொள்வதற்கும் மேலும் இது உதவியாக இருக்கும்.

குடியிருப்பு உள்ளதோ, இல்லையோ, தளவாய் உடனடியாக முகாமிற்கு உள்ளேயே தங்கி இருக்கவேண்டுமென்று காவல்துறை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார். நிலைமை அமைதியாகும் வரையில், சில நாட்களுக்காவது" தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக் காவலர்கள் அனுமதியின்றியோ, சீருடையின்றியோ, வெளியே செல்லாமலிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விசாரணை குறித்தும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் உள்ளூர் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அமைதி காட்டி வருகின்றனர்.

காவல்துறை புலன் விசாரணைகளை அடுத்த 15 நாட்களுக்குள் முடித்து, அதன் பின்னர், அரசாங்கம் மேற்கொண்டு வழக்குகள் தொடருவது உள்ளிட்ட உத்திரவுகளைப் பிறப்பிக்க, வழிகோலும் வகையில், மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணைக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த நிலைமைகளைப் பொறுத்தவரையிலும், யாருக்கும் தயவு தாட்சண்யம் காட்டாமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல் துறையினருக்கும், மாவட்ட ஆட்சியாளருக்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் இது குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மேற்கொண்டு விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை, ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.



## 3. கவன ஈர்ப்புகள்

### (அ) விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை குறைந்த வாடகைக்கு அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ம. மணிமாறன், மற்றும் ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''விவசாயப் பொறியியல் மையங்கள் மூலம் ஆழ்குழாய் கிணறு இறக்குவதற்கு வாடகை உயர்த்தியுள்ளது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே. வேளாண் கருவிகளை, விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கு வாடகை 1969-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி கருவிகளுக்கு வாடகை நிர்ணயம் செய்து பதினைந்து ஆண்டுகள் ஆனபடியாலும், துறைக்கு இதனால் ஏற்படும் செலவினமும் அதிகப்படியானதாலும், விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில், விலை நிர்ணயம் செய்ய, வாடகை வீதத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, இக்கருவிகளை வாடகைக்கு வழங்கும்போது, துளையிடுவதற்கான முனை மற்றும் தேவையான உசலையும், முன்னால் விவசாயிகளே அளித்து வந்தனர். இதனால் 100, 200 அடி துளை போடுவதற்கு, சுமார் ஆயிரம் ரூபாய் கொடுத்து இந்த முனையை விவசாயிகள் வாங்க வேண்டியுள்ளதால், சிரமம் ஏற்படுவதாகவும், எல்லா இடுபொருள்களின் செலவினங்களையும் சேர்த்து அடிக்கு இவ்வளவு என வாடகை நிர்ணயம் செய்ய இயலுமா என கோரப்பட்டது. எனவே, அரசு இக்கருவிகளின் வாடகை விகிதத்தை விவசாயிகள் பாதிக்கப்படாத வகையிலும், அவர்களுக்கு சிரமமின்றி கருவிகள் வாடகைக்கு கிடைக்கும் வகையிலும், மாற்றி அமைத்து 22-11-1984-ம் நாளிட்ட அரசு வேளாண்மைத்துறை நிலை ஆணை எண். 271-ல் ஆணை வெளியிடப்பட்டது. இந்த வாடகைகள் 1-1-1985-லிருந்து நடைமுறைப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயிகளைப் பொறுத்தவரையில் எல்லா இடுபொருட்களின் செலவினங்களையும் சேர்த்து வாடகை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற ஆலோசனை அடிப்படையில் வாடகை ஏற்றப்பட்டிருப்பது நியாயம் என்று ஒத்துக்கொள்ள முடியாது. 33 ரூபாய் என்றிருந்த வாடகையை திடீரென்று 250 ரூபாய்

[திரு. மா. மணிமாறன்] [1985 ஏப்ரல் 8

என்று ரிக்கைப் பொறுத்தவரையில் ஏற்றியிருக்கிறார்கள். கை செட்டைப் பொறுத்தவரையில் 5 ரூபாய் என்றிருந்ததை 25 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். இப்படி கை செட்டைப் பொறுத்தவரையில் 5 மடங்கும், ரிக்கைப் பொறுத்தவரையில் 8 மடங்கும் ஏற்றியிருக்கிறார்கள். சில இடங்களில் எளிமையாக இருக்கக்கூடிய வகையில் மண் இருக்கிறது. அப்படி எளிதாக இறக்கக்கூடிய இடங்களில் விவசாயிகளுக்கு டீசலை வாங்கிக்கொடுத்தால் அது அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் அரசுக்கும் பெருத்த இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் விவசாயிகளும் மிகச் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், அவர்கள் இடுபொருட்செலவுகள் மிக அதிகமாக ஆகியிருக்கின்ற நிலையில், அவர்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காத நிலையில். வெள்ளம், புயல் போன்றவற்றால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் இப்படி 8 மடங்கு, 5 மடங்கு என்று வாடகையை ஏற்றியது மிக அதிகமான பளுவாக இருக்கின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி ஏற்றிய வாடகையை மறுபரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த முறையில் விவசாயிகளுக்கு இருந்த சிக்கல்களை நாம் எண்ணிப்பார்த்துத்தான் டீசல் போன்றவைகளை முறையே வழங்குவது என்ற முறையில் எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாகத்தான் இது அதிகமாக ஆகியிருக்கின்றது. பழைய முறையே உகந்தது என்று விவசாயப் பெருமக்கள் கருத்து தெரிவித்தால் அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். வாடகையைப் பொறுத்தவரையில் அட்வான்ஸாக 4,500 ரூபாய் கட்டவேண்டும் என்று விதித்திருக்கிறார்கள். இதற்கு முன்னாலே 1,500 ரூபாய்தான் கட்டவேண்டும் என்று இருந்தது. எனவே 4,500 ரூபாய் கட்டுவது என்பது மிகச் சிரமமாக இருக்கின்றது. எனவே இந்தத் துறையைப் பொறுத்தவரையில் 5 நாள் வாடகை, 10 நாள் வாடகையை மட்டும் அட்வான்ஸாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் அந்த அட்வான்ஸ் தொகையைக் குறைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே. விவசாயப் பெருமக்களுக்கு எந்த அளவுக்குச் சலுகைகளை அளிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அளிப்பதில் எந்தவகையிலும் அரசு பின்தங்கி இருக்காது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களை ஆராய்ந்து அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 8]

(ஆ) உத்திரமேரூர் பகுதியில் நெல் பயிர் பாதுகாப்புக்காக எலி ஒழிப்பு நடவடிக்கை.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கை மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியில் நெல் பயிரை எலிகள் நாசப்படுத்துவதைத் தடுப்பது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் பகுதியில் சுமார் 4,200 ஏக்கர் நெற்பரப்பில் எலி தாக்குதல் காணப்பட்டது. தாக்குதல் தென்பட்டவுடன், 4,200 ஏக்கரிலும் எலி ஒழிப்பு நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டு 20 கிலோ சிங்பாஸ்பைடு, 10 கிலோ கோடபரின் மற்றும் 2 கிலோ செல்பாஸ் எலி மருந்துகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டு எலிகள் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேவையான எலி மருந்துகள் எல்லா விவசாய கிடங்குகளிலும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் எலிகளினால் நெற்பயிருக்கு பெரும் சேதம் இல்லை.

(முற்பகல் 10-10)

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டு மிகவும் தொல்லைக்குள்ளானார்கள். அதற்குப் பிறகு வானம் மழை பொழிந்து, பின் எங்கள் பகுதியைப் பொறுத்த அளவுக்கு, புகையான் பூச்சிகளால் மிகவும் பாதிக்கப்பட்டு நிலத்திலுள்ள பயிர்களைத் தீயிட்டுக் கொளுத்தி அந்தப் பூச்சிகளை ஒழிக்கின்ற அளவுக்குக்கூட ஈடுபட்டார்கள். ஆனால், கடந்த ஓராண்டுக் காலமாக, எலிகள் அதிகமாகப் பெருக்கெடுத்து, தானியங்களை நாசப்படுத்துகின்ற அளவில், பயிர்களை நாசப்படுத்துகின்ற அளவில் இருக்கின்றன. இன்றைய தினம் உலகத்திலேயே மனிதனுக்குப் போட்டியாக இருப்பது தானியங்களை அழிப்பதில் எலிகள்தான். ஆகவே, எலிகளை ஒழிப்பதற்குத் தீவிரத் திட்டம் ஒன்றை வகுத்து அரசு செயல்படுமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய உணர்வு நியாயமானதுதான். விவசாயிகளுக்குத் தொடர்ந்து ஏற்படக்கூடிய சோதனைகளை அரசு அறிகிறது. அந்தச் சோதனைகளிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு அரசும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. எலிகளினால் ஏற்படக்கூடிய இழப்பைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். உத்திரமேரூர் தொகுதியைப் பற்றி இந்த விவரத்தைத் துறை வழங்கியிருப்பதை நாம் ஏற்கனவே தெரிவித்தேன். ஆனால்,

தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்தும் இதுபோன்ற நிலைமைகள் நமக்குச் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே கேட்டுக் கொண்டிருக்கிற முறைப்படி எலிகள் ஒழிப்பு தடவடிக்கையாகத் தனி திட்டத்தை வேளாண்மைத் துறை வகுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எலி ஒழிப்புப் திட்டத்தைச் செயல்படுத்துகின்றபொழுது, குறிப்பாக, விவசாயிகளுக்குத் தொல்லை இல்லாமல் ஊர் நல அலுவலர் அல்லது விரிவாக்கப் பணியாளர்களைப் பயன்படுத்தி நேரடியாக வயல்களிலே மருந்துகளை வைத்து, எலிகளை ஒழிக்கப் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். அவ்வாறு செய்யப்படுமா என்று நான் அரசைக் கேட்க ஆசைப்படுகிறேன்,

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. திட்டம் வகுக்கும்போது இவைகளை எல்லாம் கருத்திலே கொண்டு நாம் செயல்படுத்தலாம்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டு வரப்படுகின்ற இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கவில்லை. தேர்தல் நடைபெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்படுவதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், மீண்டும் அபாயம் வந்துவிடக் கூடாது. ஏற்கனவே, அரசாங்கம் தேர்தலை அறிவித்து, நடைபெறாததற்கு என்ன காரணம் ? இட ஒதுக்கீட்டிலே முறைகேடுகள் இருக்கின்றன என்று கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள். எனவே, இப்பொழுது மறுபடியும் ஒரு சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, சட்டமாக நிறைவேற்றப்படும். மீண்டும் அதே தவறுகள் வந்துவிடுமானால், நாங்கள் அறிவித்து விட்டோம், கோர்ட்டுக்குப் போய் விட்டார்கள், நாங்கள் என்ன செய்வது என்று தப்பித்துக் கொள்ளக்கூடாது. எனவே, இதிலே உள்ள சில முக்கியமான குறைகளைச் சொன்னால் அரசாங்கம் திருத்திக் கொள்வதற்கு வசதியாக இருக்கும்,





மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமுன்வடிவு ஆய்வுக்கு வரும்போது இதையெல்லாம் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத் தலைவர் அவர்களே, ஆய்வுக்கு வருவதற்கு முன்பாகவே, I oppose the introduction of the Bill on technical grounds என்று சொல்லலாம். அந்த அடிப்படையிலே சொல்கிறேன். உதாரணமாக, இந்த மாநகராட்சித் தலைவர், மாநகராட்சி உறுப்பினர்கள், பஞ்சாயத்து உறுப்பினர், பஞ்சாயத்து தலைவர் இவர்களுக்கெல்லாம் பதவிக் காலம் 5 ஆண்டு என்று இருப்பதை 4 ஆண்டாக மாற்ற இருக்கிறார்கள், ஓராண்டு குறைக்க இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினருக்கு 5 ஆண்டுகள், சட்டமன்ற மேலவை உறுப்பினருக்கு 6 ஆண்டுகள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 ஆண்டுகள். ஆனால், இதிலே வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன, ஐந்தை நான்காக ஏன் ஆக்குகிறோம் என்பதற்குக் காரணம் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்சில் சொல்லப்படவில்லை. பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்பதை 4 ஆண்டுகள் என்று ஏன் மாற்ற இருக்கின்றோம் என்பதற்காகக் காரணம் சொல்லப்பட வேண்டும், ஆனால், அது சொல்லப்படவில்லை.

இரண்டாவது, 1981-வது ஆண்டு ஜனத்தொகை அடிப்படையிலே பெண்களுக்கோ, தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, மலை ஜாதியினருக்கோ இட ஒதுக்கீடு கிடையாது. டிவிஷன் வார்டு கிடையாது; உறுப்பினர் எண்ணிக்கை கிடையாது. 1971-ஆம் ஆண்டு ஜனத்தொகை கணக்கை எடுத்துக் கொண்டுதான் பெண்களுக்கும். மலை ஜாதியினருக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்படும். வார்டுகள் அந்தப் பிரிவிலே எதுவோ அதுதான் கணக்கிலே எடுக்கப்படும், 1971-ஆம் ஆண்டு சென்சஸ் படி என்ன உறுப்பினர்களோ அவர்கள் தான் பஞ்சாயத்திற்கும், பஞ்சாயத்து யூனியனுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் என்று சொல்கிற இதிலே ஒரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. ஏற்கனவே சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று இருக்கிறது. நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்று இருக்கிறது. அதற்கு என்ன அடிப்படையோ அதை வைக்க வேண்டும். இல்லையென்றால் 1981-ம் ஆண்டு சென்சஸ் அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் 1971-ஆம் ஆண்டு சென்சஸ் என்று சொன்னால், நம்முடைய அமைச்சர் அவர்கள் வெளியிலே புரட்சிகரமான திட்டம் என்று கூட சொல்லி இருக்கிறார்கள், 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை என்று சொல்லியிருக்கிறார்கள்; பலபேர்களுக்கு இந்த வாக்குரிமை கிடைக்காமல் போய்விடும், 1981-ஐ 1971 ஆக முன்னாலே தள்ளிப்போடுகிறதாலே, பலபேர்களுக்கு ஓட்டுரிமை இல்லாமல் போகிற காரணத்தாலே அவர்களுக்கு மாநகராட்சித் தலைவராக வருகிற வாய்ப்பு போகும். உறுப்பினர்களாக வருகிற வாய்ப்பு போகும். பஞ்சாயத்துத் தலைவராக வருகிற வாய்ப்பு போகும். ஆகவே இது உள்நோக்கம் நிரம்பியது.

வாக்காளர்கள் ஆகிய எங்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டு விட்டது என்ற ஒரு கிரவுண்ட் அபாயசரமானது. அதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். நாமினேஷன் பை கலெக்டர். வழக்கறிஞர் என்பதால் உங்களுக்குத் தெரியும். ரொம்பவும் டேன்ஜரான விஷயம் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கலெக்டர் அவர்கள் இட ஒதுக்கீடு செய்வதற்கு அதிகாரம் அவருக்கு தரப்பட்டிருக்கிறது. எவ்வளவு எண்ணிக்கை என்றால், 'லிமிடட் நம்பர்ஸ்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மலை ஜாதியினர். தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் இவர்களில் ஒதுக்கீட்டிற்கு கலெக்டருக்கு நாமினேஷன் போடலாம். அதற்கு அதிகாரத்தை தருவதோடு, அவர் ரூரல் டெவலப்மெண்டில் ஒரளவிற்கு உற்சாகமாக இருக்கிறார் என்று கலெக்டர் திருப்தியடைந்தால் ரூரல் டெவலப்மெண்டில் இவர் ரொம்பவும் ஆர்வமுடையவர் என்று சொல்லி அவரே நியமிக்கலாம்; நாமினேஷன் போடலாம் என்ற அமைப்பு அதிலே வருகிறது. இது மிஸ்யூஸ் ஆப் பவர். அதிகார துஷ்பிரயோகம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அடுத்தது பொலிட்டிகல் மோட்டிவோடு, அரசு உள்நோக்கத்தோடு ஆளும் கட்சிக்காரர்களை புகுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே சட்டத்திலே இந்தச் சிக்கல்கள் இருக்கின்றன. எனவே மீண்டும் இந்தச் சிக்கல்கள் உருவாகாமல் இருப்பதற்காக இந்தச் சட்டமுன்வடிவை இந்த நிலையிலேயே எதிர்க்கிறேன். இன்னொன்றும் சொல்லப்படுகிறது.

Without elected representatives for a long time நீண்ட காலமாக மக்கள் பிரதிநிதிகள் சபையில் இல்லாததால் இந்தத் தேர்தலைக் கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறார்கள், நான் சென்னை சட்டமன்ற உறுப்பினர். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் கூட இருக்கிறார்கள். இங்கேயும் நீண்ட நாட்களாக ரெப்ரசன்டேட்டிவ்ஸ் இல்லை. கோர்ட்டிலே கேஸ் இல்லை. இதைக் கொண்டு வருவற்கு என்ன தடை? எனவே சென்னை ம நகராட்சிக்கு தேர்தல் தேதி அறிவியுங்கள் என்று கேட்டு, இந்தச் சட்டத்திலே இருக்கிற குறைகளைத் தீர்த்து அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவந்தால் நாங்கள் ஆதரிப்பதற்கு தயாராக இருக்கிறோம். ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதே சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. இட ஒதுக்கீடு முறையை எதிர்த்து கோர்ட்டிற்கு போய்விட்டதால், ஸ்டே கொடுத்துவிட்டதால் நாங்கள் தேர்தலை நடத்த முடியவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள், அதற்கு நீங்களும் பொறுப்பாக இருக்கிறீர்கள். இட ஒதுக்கீட்டிலே முறைகேடுகள் இருந்தால் வேறு என்ன செய்ய முடியும்? உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால் தென் ஆற்காடு மாவட்டத்தில் அண்ணா கிராமத்தில் அரிஜனங்களே கிடையாது. அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அது தவறு தானே? அப்படியானால் அந்தத் தவறை கண்டிக்க





மாட்டார்களா? ஆகவே நாங்கள் கோர்ட்டிற்குப் போவதை விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால் தேர்தல் நடத்த வேண்டும், இந்தத் தவறுகளை திருத்திக்கொண்டு அரசாங்கம் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

*திரு. கு. தமிழரசன்: பேரவை தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே இந்திய குடியரசுக் கட்சியின் சார்பாக எதிர்க்க விரும்புகிறேன். உள்ளாட்சிகளுக்கு தேர்தல் விரைவில் நடத்தவேண்டுமென்கிற நல்ல எண்ணத்தோடு இந்தச் சட்டமுன்வடிவினை கொண்டு வந்திருந்தாலும், தமிழகத்திலே உள்ள 106 நகரசபைகளில் 20-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர்களாக வருகிற நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது. 378 ஒன்றியங்களில் 68-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர்களாக வருகிற நிலை தவிர்க்கப்பட்டிருக்கிறது, எனவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லாமல் வருகிற இந்தத் தேர்தலை, சட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1983-ஆம் ஆண்டில் உள்ளாட்சித் துறையில் தாழ்த்தப்பட்ட மக்களும் ஆட்சி அதிகாரத்திற்கு வரவேண்டுமென்ற பெரிய நோக்கோடு இந்தத் தேர்தலைக் கொண்டுவந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கீடு செய்தார்கள். நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். ஆனால் சில சுயநலவாதிகளும், ஜாதி வெறியர்களும் வழக்கு மன்றத்திற்கு போய், தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளாட்சித் துறையில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிடக் கூடாது என்கிற கெட்ட எண்ணத்தோடு

தடை வாங்கினார்கள். அந்த சுயநலவாதிகள், ஜாதி வெறியர்களுக்குப் பயந்து அரசாங்கம் மீண்டும் பழய முறைப்படி தேர்தலை நடத்துவதை நான் ஆட்சேபிக்கிறேன். இந்த இட ஒதுக்கீடு இங்கு மட்டுமல்ல, பல மாநிலங்களில் இருக்கிறது, பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே கூட இட ஒதுக்கீடு இருக்கிறது. இட ஒதுக்கீடு செய்வது பற்றி தமிழ் நாட்டில் இருக்கிற எந்த அதிகாரப் பூர்வமான கட்சியும் எதிர்க்கவில்லை. இந்த சட்ட மன்றத்தில் இருக்கிற எந்த அரசியல் கட்சியும் அதிகாரப்பூர்வமாக எதிர்க்கவில்லை. யாரோ ஒரு சிலர் கோர்ட்டுக்குப் போனால் அதற்காக அரசு பின் வாங்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

தமிழ்நாட்டில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் இப்படிப்பட்ட சலுகைகள் வரும் என்ற எண்ணத்தில் மிக்க மகிழ்ச்சியாக இருந்தார்கள். அவர்களுடைய மகிழ்ச்சி வீணாகும் வகையில் பழைய முறைப்படி மீண்டும் தேர்தல் நடக்கக்கூடாது. கோர்ட்டிலே தடை வாங்கியிருக்கிறார்களே தவிர அந்த வழக்கு முடியவில்லை, நடந்துகொண்டிருக்கிறது. வழக்கு எப்பொழுது

[திரு. கு. தமிழரசன்] [1985 ஏப்ரல் 8

முடியும் என்று நிச்சயமாகத் தெரியாத நிலை இருக்கிறது. எனவே வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறபோது அவசரம் அவசரமாக இப்படிப்பட்ட ஒரு தேர்தலை அறிவிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நியமனம் என்ற முறையில் இட ஒதுக்கீடு செய்கின்ற அதிகாரத்தைக் கொடுத்தால், இப்படிப் பட்ட சட்ட முன் வடிவின் மூலம் 'கைதூக்கிகள்' தான் வர முடியும். எந்தவிதமான அதிகாரமும் இல்லாத உறுப்பினர் களாகத்தான் அவர்கள் இருப்பார்களே தவிர, அவர்களுடைய எண்ணங்களை அங்கே தெரிவிக்கின்ற வாய்ப்பு இருக்க முடியாது. கை தூக்கிகளாக இருப்பவர்களைத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் நியமனம் செய்வார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளாட்சி மன்றத்தின் அதிகாரத் திற்கு வரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் இட ஒதுக்கீடுச் சட்டம் கொண்டுவரப்பட்டது. யாரோ ஒரு சிலர் எதிர்க்கிறார்கள் என்பதற்காக இந்த அரசு தன் கொள்கையிலி ருந்து பின்வாங்கி விடக்கூடாது. பழைய முறைப்படி, அதாவது ஏற்கெனவே அறிவித்த ஒதுக்கீடு முறைப்படி சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நேற்றய தினம்கூட குறிப்பிட்டது பத்திரிகைச் செய்தியாக வந்திருக்கிறது. செப்டம்பர் 15-ம் தேதி தமிழ் நாட்டில் உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல், புதிய தலைவர்கள் வருவார்கள் என்று அறிவித்திருக் கிறார்கள். இதைப் பார்க்கும்போது உண்மையிலேயே தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய கிராம மக்கள் முழுமையாக வரவேற் கிறார்கள். காரணம் எப்படிப்பட்ட நெருக்கடி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். தேர்தல் நடக்க வேண்மென்று தான் நாங்கள் விரும்புகிறோம்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒன்றை சொன்னார்கள். 18 வயதான வர்களுக்கு எல்லாம் வாக்குரிமை ஊராட்சித் தேர்தலில் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இந்த முறையிலே பார்த்தால் அவர்கள் ஓட்டுப் போட முடியுமா என்பது சந்தேகம்தான். இதிலே குழப்பம் இருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் சில உறுப்பினர்களை நியமிக்கலாம் என்று சொல்லி, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் இதற்கு முன்னாலே ஊராட்சி ஒன்றியத் தேர்தல் முடிந்த பிறகு அந்த ஊராட்சி ஒன்றியத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் உறுப்பினர்களும் தலைவரும் இரண்டு பெண் உறுப்பினர்களை நியமனம் செய்யலாம் : ஆதிதிராவிடர்களை நியமிக்கலாம் என்று இருக்கிறது. அந்த மாதிரி நியமித்து வந்தார்கள். அப்படி



1985 ஏப்ரல் 8] [திரு. பொ. உத்திராபதி]

இருக்கும்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த அதிகாரத் தைக் கொடுத்தால் நிச்சயமாக எதிர் காலத்தில் ஆளும் கட்சிக்கு கெட்ட பெயர்தான் வரும். மாவட்ட ஆட்சித் தலைவர் பட்டியல் கேட்பார். ஆளும் கட்சியிலிருந்துதான் பட்டியல் கொடுப்பார்கள். இப்பொழுது பாண்டிச்சேரியில் பற்றாக்குறை என்பதற்காக மூன்று உறுப்பினர்களை நியமித்து ஆளும் கட்சிக்கு அதிகபலம் சேர்த்து கொண்டதைப்போல இங்கேயும் செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை உருவாகும், அது கூடாது. எந்த விதமான குழப்ப மான சூழ்நிலைக்கும் இடம் கொடுக்காமல் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். தேர்தல் முடிந்த பிறகு, தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெண் உறுப்பினர்களையும் ஆதி திராவிட மக்களையும், நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையைச் சேர்ப்பதற்கு, அவர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற முறையில் திருத்தம் செய்து சட்டத்தைக் கொண்டுவந்தால்தான் நல்லது. அப்போதுதான் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். இல்லை என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கு இருக்கிற அதிகாரம் அதிகாரிகளுடைய கைக்குப்போய், ஆளும் கட்சிக்குத் தான் இதன் மூலம் ஆதாயம் கிடைக்கும் வகையில் இது அமையும். ஆகவே, பழைய முறைப்படி கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு குடியரசுக் கட்சி உறுப்பினர் பேசும் போது ஆதி திராவிடர்களும் பெண் உறுப்பினர்களும் நியமனம் செய்யப் படுவதை சிலர் எதிர்க்கிறார்கள் என்று சொன்னார். அதை யாரும் எதிர்க்கவில்லை. வர வேண்டுமென்று எல்லோரும் வர வேற்கிறோம். ஏதோ ஒரு காரணத்தால் கோர்ட்டில் தடை வாங்கியிருக்கிறார்கள். 14 ஆண்டு காலமாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாத ஒரு சூழ்நிலையில் பல பிரச்சினைகள் கிராமங்களில் உருவாகியிருக்கின்றன. இந்தச் சூழ்நிலை இல்லாமல், குழப்பத்திற்கு இடமில்லாமல் தேர்தல் வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் குழப்பத்திற்கு இடமில்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இல்லாமல், ஆளும் கட்சிக்கு அதிகாரம் செலுத்தும் நிலை இல்லாமல் தேர்தல் நடை பெற வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்ட முன்வடிவுக்கு என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்திலே பஞ்சாயத்துக்களுக்கும் நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்ற அரசினுடைய எண்ணத்தை நாங்கள் வரவேற்கிறோம், ஆதரிக்கிறோம். தேர்தலை எந்த அளவிற்கு விரைவிலே நடத்த முடியுமோ, அந்த அளவிற்கு விரைவிலே நடந்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அந்த அவையில் சொல்லப்பட்டது. அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும், ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் தேர்தல் நடத்தப்படும் என்று இந்த அவையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு இணங்க இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன், ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில்

இந்த இன்ட்ரட்யூஸ் பண்ணும் நேரத்திலே சில கருத்துக்களைச் சொல்லி, எதிர்க்கவேண்டிய துரதிருஷ்டவசமான நிலையில் நாங்கள் இருந்துகொண்டிருக்கிறோம். ஏன் என்றால், 18 சதவீதம் ரிசர்வேசன் என்பது பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று 1983-ஆம் ஆண்டிலே இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்திலே குறிப்பிடப் பட்டு இருக்கிறது என்பதை, இந்தச் சட்டத்தினுடைய ஸ்டேட் மென்ட் அன்ட் ஆப்ஜெக்டிலே மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் அதற்கு பதிலாக இங்கே ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

:' It among the members of the panchyat union council' there are no women or members of the Scheduled Castes Scheduled Tribes' the panchayat union council may co-opt one women and one member of the Scheduled Castes or Scheduled Tribes ;'

அதற்குப் பிறகு, கலெக்டரைப் பொறுத்தவரையில்

the Collector may nominate one woman and one member of the "Scheduled Castes or Scheduled Tribes."

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், 18 சதவீதத்தினுடைய அடிப்படையிலே நாமினேட் பண்ணுவதற்கு அதிலே இடம் கொடுக்கப்பட்டு இருக்கவேண்டும். ஏன் என்றால், 18 சதவீதம் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டதற்குப் பிறகு, நேரடியாக தேர்தல் நடத்த முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டாலும்கூட, நாமினேட் பண்ணக்கூடிய நேரத்திலே, 18 சதவீதம் ஒதுக்கீடு என்ற அந்த பிரின்சிபில் அடிப்படையிலே, அந்த அளவிற்கு எண்ணிக்கையை ஆட்களை நாமினேட் பண்ணுவதற்கு இடம் ஒதுக்கியிருக்க வேண்டும். அந்த முறையில் இல்லை. இரண்டாவது, கலெக்டர் அவர்களிடத்திலே நாமினேட் பண்ணுவதற்கு உரிமை கொடுப்பது ஒரு ஜனநாயக முறையல்ல. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், யார் யாரை நாமினேட் பண்ணவேண்டும் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் முடிவு செய்யவேண்டும். அது அல்லாமல், கலெக்டர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பது சரியல்ல. முன்பிருந்த முறையிலே பஞ்சாயத்து கவுன்சில்—யாரை நாமினேட் செய்யவேண்டும் என்பது குறித்து—அந்தப் கவுன்சிலுடைய மெஜாரிட்டி மெம்பர்ஸ் எடுக்கக்கூடிய முடிவின் அடிப்படையிலே நாமினேட் பண்ணுவதற்கு அதிகாரம் இருக்கவேண்டுமே தவிர கலெக்டர் நாமினேட் பண்ணுவதற்கு அதிகாரம் கொடுப்பது என்பது பல சிக்கல்களை ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும். ஆகவே இப்படிப்பட்ட திருத்தங்கள்தான் இங்கே கொண்டுவரப் படவேண்டும். அந்த முறையிலே உள்ள திருத்தங்களைக்கொண்டு வந்து, ரீ-இன்ட்ரட்யூஸ் பண்ணவேண்டும் என்று சொல்லி, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்டத்தைப் பற்றி அறிமுக நிலையிலேயே அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். விவாதத்தின்போது, அவர்கள் எழுப்பியிருந்தால் விளக்கங்கள் தருவதற்கு வசதியாக இருந்திருக்கும். இருப்பினும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும், இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த நல்ல சட்டத்தை தமிழரசன் போன்றவர்கள் ஆதரிக்கிறார்கள், பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சமுதாயத்திலே இருக்கிற சில தீய சக்திகள் அது கூடாது என்று நீதி மன்றத்திலே போய் தடை வாங்கிவிட்ட காரணத்தாலும் நீதிமன்றத்திலே இருக்கிற அந்தத் தடை எப்போது முடியும் என்று தெரியாத நிலை இருப்பதாலும் விரைவிலே உள்ளாட்சி, ஊராட்சி தேர்தல்களை நடத்த வேண்டும் என்று இந்த மன்றத்திலே வலியுறுத்திய காரணத்தாலும், அவை முன்னவர் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் நிச்சயமாக தேர்தல் நடக்கும் என்று வாக்குறுதி கொடுத்த காரணத்தாலும், வேறு வழியில்லாமல்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய அவசியம் இருக்கிறதே தவிர, இட ஒதுக்கீட்டைப் பொறுத்த வரையில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்பதிலே எந்த விதமான மாறுபட்ட கருத்தும் புரட்சித் தலைவருக்கு ஏற்பட்டுவிடவில்லை. இன்னும் அழுத்தந் திருத்தமாக அந்த கருத்தைத்தான் தெரிவித்திருக்கிறார்கள், இந்த அரசும் தெரிவித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன். இன்னும் சொல்லப்போனால், உள்ளாட்சி, ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்ற நல்ல எண்ணத் தோடுதான் இந்த திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்,

(முற்பகல் 10-30)

18 வயதானவர்கள் வாக்களிக்கவேண்டும், அவர்கள் எல்லாம் வாக்களிக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று ரகுமான்கான் போன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தார்கள். நாம் சம்மரி ரிவிசனுக்கு இடம் வைத்திருக்கிறோம். வாக்காளர்கள் பட்டியல் திருத்தப்பட இருக்கிறது. திருத்தியதற்குப் பிறகுதான் தேர்தல் அறிவிக்கப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்தப் பிரச்சனை எழாது. சேர விரும்புகிறவர்கள் அதிலே சேர்ந்துவிடலாம். அடுத்து இட ஒதுக்கீட்டைப் பற்றிச் சொன்னார்கள். 1971 ஆம் ஆண்டின் இட ஒதுக்கீட்டில்தான் செய்திருக்கிறார்கள். அந்த 1971 ஆம் ஆண்டின் சட்டப்படிதானே இடத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதைப்பற்றியெல்லாம் கூட நாங்கள் நீண்ட காலம், நாங்கள் அதிகாரிகளிடமும், மற்றவர்களிடமும் வாதிட்டு பார்த்து, விவாதம் நடத்தி முடிவெடுத்திருக்கிறோம். தற்போது கொண்டு வந்திருக்கிற சட்டத்தின்படி, அந்த முடிவின்படி இடம் ஒதுக்குவது என்று ஆரம்பித்தால், எந்த

வார்டுக்கு பெண்களை ஒதுக்கீடு செய்வது என்ற பிரச்சினை வரும். இந்த வார்டுக்கு ஒதுக்கவில்லை, அந்த வார்டுக்கு ஒதுக்கவில்லை, இந்த வார்டுக்கு ஒதுக்கிவிட்டார்கள், அந்த வார்டுக்கு ஒதுக்கிவிட்டார்கள் என்ற சர்ச்சை எழுப்பப்படக்கூடும்:

எனவே அப்போது—அதாவது முன்பிருந்த காலத்தில்—தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எந்தெந்த வார்டுகளில் நின்றார்களோ, எது எது ரிசர்வ் பகுதி என்று அப்போது அறிவித்திருந்தார்களோ, அவைகளை, அது எதுவாக இருந்தாலும் சரி, அப்படியே ஏற்றுக்கொள்ளலாம் என்ற நல்ல எண்ணத்தோடுதான் அரசு அதை ஒத்துக் கொண்டிருக்கிறதே தவிர, வேறு தவறான நோக்கம் ஒன்றும் இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதை ஆரம்பக் காலத்திலேயே, அறிமுக காலத்திலேயே எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது, நடைபெறும் விவாதத்தின்போது அங்கத்தினர்கள் தம் கருத்துக்களை எடுத்துச் சொல்வார்களேயானால், அரசு தரப்பில் முழு விவரங்களையும் பெற்று, நான் பதில் சொல்கிறேன் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துவதற்கு, இந்த அவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இது குறித்து பல்வேறு கருத்துக்களை எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், முந்தைய பில்லிலே என்ன இருந்ததோ அதே பொருள்படத்தான் இதிலும் இருக்கிறது. இருந்தாலும் ஒன்றை மட்டும் அமைச்சரிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.





'The term of the Office of the Chairman and Councillors i reduced from 5 years to 4 years. But in Madurai it is for 6 years. ரெட்யூஸ் பண்ணியிருக்கிறார்கள் 5 வருடத்திலிருந்து 4 வருடமாக. ஏதோ ஒரு சில வெறுப்பு விருப்புகளுக்கு இணங்க இப்படி ரெட்யூஸ் பண்ணியிருக்கிறார்கள். தங்களுடைய விருப்பு வெறுப்புகளை இதில் காட்டியிருக்கிறார்கள். ஏன் இப்படி பதவிக் காலத்தை குறைக்க வேண்டும்? சாதாரணமாக நாம் தேர்தலே நடத்துவது இல்லை. மக்களின் ரெப்ரசன்டேடிவ்ஸ் இந்த உள்ளாட்சி மன்றங்களில் வருவதற்கே வழி செய்வதில்லை. ஆனால் வழி செய்ய முற்படும்போது, ஏன் இப்படி 5 வருஷத்தை 4 வருஷமாகக் குறைக்க வேண்டும்? என்ன காரணம்? இதை நான் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல மதுரை மாநகராட்சிக்கு 5 வருடமாக இருந்ததை 6 வருடமாக உயர்த்தியிருக்கிறார்கள். அங்கே இது தலைகீழ் பாடமாக இருக்கிறது. மதுரை மாநகராட்சிக்கு 5 வருஷத்திலிருந்து 6 வருஷம். இங்கே 5 வருடத்திலிருந்து 4 வருஷம். இதனால் பொதுமக்களுக்கும் ரொம்ப கஷ்டம் ஏற்படும் நாம் அடிககடி தேர்தல்நடத்த வேண்டிய அவசியம் ஏற்படும் நாம் தேர்தல் நடத்தி அவர்களை கஷ்டப்படுத்துவதே இல்லை, அது வேறு விஷயம். ஆனால் தொடர்ந்து தேர்தலை நடத்த வேண்டும் என்ற முடிவிற்கு வந்ததற்குப் பிறகு, இந்த கவுன்சிலர்களின், பஞ்சாயத்து சேர்மேன்களின் பதவிக் காலத்தை 5 வருஷத்திலிருந்து 4 வருஷமாகக் குறைப்பது நியாயம் இல்லை. மதுரை மாநகராட்சிக்கு உயர்த்தியிருக்கிறபோது, இதற்கு குறைப்பது என்ற நடவடிக்கை ஒரு கண்ணில் சுண்ணாம்பு, ஒரு கண்ணில் வெண்ணெய் காட்டுவது போல் இருக்கிறது.

எதற்கு இந்த இரண்டு அளவு கோல்? சர்க்கார் இப்படிப்பட்ட மாறுபட்ட முறைகளை கையாள்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இதற்கு பதிலை வேண்டுமானால், அமைச்சர் அவர்கள், சட்ட முன்வடிவை ஆய்வு செய்யும்போது, தன்னுடைய பதில் உரையிலே சொல்லட்டும். ஆனால் நான் இங்கே மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இங்கே நாம் இந்த சட்ட மன்றத்திலேயே ஒரு பில்லை பாஸ் பண்ணியிருக்கிறோம். அதை நான் கோட் செய்ய விரும்புகிறேன்.

'The term of office of councillors shall, save as otherwise expressely provided in this Act, be (six years) beginning and expiring at noon on such date as the Government may, by notification, appoint in that behalf:

Provided that the Government may, by notification, for sufficient cause, direct that the term of office of the Councillors as a whole be extended or reduced by such period not exceeding one year as may be specified in the notification.' என்று சொல்லி, ஒரு சப்ஸ்டிடியூட் பண்ணியிருக்கிறோம். 5 வருஷத்தை 6 வருஷமாக ஆக்கியிருக்கிறோம், ஆனால் நம்முடைய பஞ்சாயத்து

பஞ்சாயத்து போர்டு, முனிசிப்பாலிட்டி போன்றவைகள் என்ன தப்பு செய்தன? அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? ஆகவே இந்த திருத்தத்தை இதிலே சேர்த்துக் கொண்டு வந்திருப்பதை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றாலும் அவர்களுடைய உணர்வை நான் மதிக்கிறேன். தவறான நோக்கத்தோடு குறைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு குறைக்கவில்லை. ஏற்கனவே நகராட்சிகளுக்கு மூன்றாண்டுகள் என்றுதான் காலம் இருந்தது. அப்படி 3 ஆண்டு என்று இருந்ததை 5 ஆண்டுக் காலமாக ஆக்கினோம். 5 ஆண்டுக் காலமாக ஆக்கியதற்குப் பிறகு, தேர்தலே நடக்கவில்லை. இப்போது போடும்போது மாநகராட்சிகளுக்கு 4 ஆண்டுக்காலமாக அதைப் போடலாம் என்று குறைத்து, உள்ளாட்சிகளுக்கு மட்டும் 4 ஆண்டு வைக்கலாம் என்று வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வராசு அவர்கள் மதுரை மாநகராட்சியைப் பற்றிக் கேட்கிறார்கள். மதுரை மாநகராட்சி சம்பந்தமான சட்டம் வரும்போது அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன் என்கிற வகையில் சொல்கிறேன். சென்னை மாநகராட்சி சட்டம் வரும்போது, எப்படிச் செய்யவேண்டுமோ பார்த்துச் செய்யலாம். உள்ளாட்சிகளைப் பொறுத்த மட்டில் 4 ஆண்டுகள் என்று போட்டிருக்கிறோம். இப்படி நான்கு ஆண்டுகள் என்று போடுகிற காரணத்தால் அரசுக்கு ஆதாயம் ஒன்றும் கிடையாது. இப்படி 4 ஆண்டுகள் என்று குறைத்ததற்கு என்ன காரணம் என்று கேட்கிறார்கள். இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்து இப்போது அமலாக்கிற பரீட்சை செய்யப் போகிறோம்.

இந்த எட்டாவது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றுகின்ற இந்தச் சட்டம், எந்த நிலையில் இவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. அமுலாக்கப்பட்டிருக்கின்றன, இந்த மன்ற உறுப்பினர்கள் எப்படி பணியாற்றியிருக்கிறார்கள் என்று மீண்டும் பரிசீலனை செய்கின்ற வாய்ப்பை மன்றத்திற்கு அளிக்க வேண்டும் என்ற கருத்தில் குறைத்து இருக்கிறோமே தவிர வேறு தவறான நோக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு நான் அறிமுகம் செய்த சட்டத்தை அவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: ''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## (இ) அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1985-86 பொது விவாதம் (தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் தொடரும்; திரு. கி. மனோகரன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, நாஞ்சிலார் அவர்கள் பேசுவதற்கு முன்னால் நான் ஒரு விளக்கத்தை திரு. ரகுமான்கான் அவர்களிடமிருந்து பெற விரும்புகிறேன். கடந்த வியாழக்கிழமை அன்று உறுப்பினர் வஜ்ரவேலு அவர்கள் இங்கே பேசுகின்றபோது, இந்தி வெளி நாட்டிலே பரவியிருக்கின்றதா என்று பார்ப்பதற்காக சென்ற குழுவில் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்றார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். திரு ரகுமான்கான் அவர்கள் எழுந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் சென்றார்கள் என்று குறிப்பிட்டார். நான் இல்லை என்று மறுத்தேன். அவர்கள் நான் அதனை நிரூபிக்கிறேன், அமைச்சர் உண்மைக்கு மாறாக சொல்கிறார், அமைச்சர் மீது உரிமைப் பிரச்சனை கொண்டுவர இருக்கிறேன் என்றார், அதற்கு ஆதாரம் ஏதாவது இன்றைக்கு கொண்டு வந்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆதாரம் கேட்கிறார்கள். வெங்கா அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தபோது அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்தார். பாலாபழனூர் அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தபோது, அவர்களும் அந்தக் குழுவிலே உறுப்பினராக இருந்தார்கள். அதுமட்டுமல்ல. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். தெரிந்து கொள்ளத் தயார் என்று சொன்னால், சொல்ல விரும்புகிறேன். ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள், வழக்கு வாபஸ் பெறப்பட்டதற்குப் பிறகுதான் மந்திரியானார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அன்றைக்குச் சொன்ன வாதத்தை இன்றைக்கு வளர்க்க நினைக்கிறார். அன்றைக்கு வெளிநாட்டு தூதுவராலயங்களில் இந்தி பரவியிருக்கிறதா என்று பார்ப்பதற்கு வெளிநாடு சென்ற அந்தக் குழுவில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்தான் சென்றார்கள் என்பது வஜ்ரவேலு அவர்களுடைய கருத்து. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சென்றார்கள் என்பது திரு. ரகுமான்கான் அவர்களுடைய கருத்து. வெங்கா அவர்களும், முருகையன் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத்தான் சென்றார்கள், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக செல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியதற்கு பின்னால் ஒரு உரிமைப் பிரச்சனை எழுப்பலாம் என்று சொன்னாலும், கேள்வி நேரத்திலே, அமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்பி நான் முந்தினேன். ஆனால் அமைச்சர் அவர்கள் முந்திக்கொண்டு விட்டார். பரவாயில்லை. திரும்பவும் சொல்கிறேன். தகவல் பெறுவதற்கு சிரமம் இல்லை. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது வெங்கா அவர்களும், பாலாபழனூர் அவர்களும் அந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தக் குழுவிலே இடம் பெற்றார்களா என்பது வேறு, அந்தக் குழு வெளிநாட்டிற்குச் சென்றது, இந்தி பரப்பப்படுவதை பார்க்கத்தான் என்ற கருத்தின் அடிப்படையிலே வஜ்ரவேலு அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இப்போதும் சொல்கிறேன். இப்போது நானே என்னுடைய மாண்புமிகு சகோதரர் ரகுமான்கான் அவர்கள் மீது உரிமைப் பிரச்சனை கொண்டு வரலாம். இருந்தாலும் பழைய நண்பர் என்பதற்காக மன்னித்துவிடுகிறேன்.



திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு குழுவிலே உறுப்பினராக இருப்பதும், அந்தக் குழுவிலே போய் வருவதும் இவைகளுக்கு இடையிலே கூட வேற்றுமை இருப்பதாகச் சொல்கிறார். தாலி கட்டுவதற்கும், திருமண வாழ்க்கை நடத்துவதற்கும் இடையிலும் வேற்றுமை இருப்பதாக கருதுவது போல் தெரிகிறது. உறுப்பினராக இல்லை என்று அப்போது அந்தக் கட்சியிலிருந்த நண்பர்கள் மறுக்கவில்லை. உறுப்பினராக இருந்தார்கள். உறுப்பினராக இருந்த நிலைமையில் அவர்கள் மறுக்கவில்லை. அதை விட்டு வெளியேறவில்லை என்ற காரணத்தால் அந்தப் பொறுப்பு அனைவருக்கும் சமமானதே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதில், உறுப்பினர்கள் சென்றது மட்டும் அல்ல. அவர்கள் வெளிநாட்டிலே இந்தி பரப்பப்படுகிறதா என்று பார்த்து வருவதற்கு, அவர்களுடைய தலைவர் உட்லண்ட்ஸிலே விருந்து வைத்து, வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள். அதுதான் பிரச்சனை.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பேர்களும் என்னுடைய அறையிலே வந்து அதைப்பற்றிச் சொல்லுங்கள். நான் எது உண்மை என்று பார்த்துச் சொல்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தாங்கள் அதை அனுமதிக்கிறபோது முறையைக் கவனித்து அனுமதித்து இருக்க வேண்டும். அனுமதிக்கிறபோது உங்களுடைய அனுமதியில்லாமல் தங்களுக்குத் தெரிவிக்கப்படாமல் தாங்கள் அனுமதித்தது மூலம் அது அனுமதிக்கப்பட்டுவிட்டது. ஆகவே அது முடிக்கப்படவேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. விருந்து வைப்பதும் விருந்து வைக்காததும் எங்கெங்கே யார் யார் தனித்தனியாக விருந்து வைத்தார்கள் என்பதையெல்லாம் இங்கே பேசமுடியாது. அவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்ற அளவிலே வேற்றுமை கிடையாது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தனியாக விருந்து வைக்கவில்லை. அப்படி விருந்துவைத்து வழியனுப்பியது பத்திரிகைகளில் பெரிய செய்தியாக வந்து, அவர்களுக்குப் பாராட்டுரையோடு அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள். உங்கள் மீது களங்கம் கற்பிக்கப்படுகிறபோது, களங்கம் சுமத்தப்படுகிறபோது அந்தக் களங்கத்தைக் கழுவுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமே தவிர திருப்பி எங்கள்மீது சேற்றை வாரி இறைப்பது சரியல்ல,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி இதோடு அதை முடித்து விடுவோம்.

திரு. கி. மனோகரன்: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையின் முன்பு நிதியமைச்சர் அவர்கள் சமர்பித்த நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதம் கடந்த 7 நாட்களாக நடைபெற்று இன்றைக்கு முடிவடையும் கட்டத்தை எதிர் நோக்கி இருக்கிறது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்த அவையிலே வரவும் பழைய பாசமுள்ள நண்பர்களோடு பழகுகின்ற வாய்ப்பினைப் பெறவும் சபாநாயகராக உயர்ந்து விட்ட தங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கவும் எல்லாவற்றிற்கும் மேலாக உடல் நலம் குன்றி இன்றைக்குப் பூரண நலத்தோடு தாயகம் திரும்பி முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும்—முதல்வராக என்று நான் தெரிவிக்கின்றபோது இலாக்காக்களை மூழுமையாகப் பெற்றிருக்கிற மூதல்வரை நான் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெறவும் அவருக்குப் பல்லாண்டு கூறவுமான வாய்ப்பினை எல்லோரும் தெரிவித்ததைப்போல எனக்கு வழங்கிய புரசைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு முதற்கண் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப்பற்றி அரசு தரப்பிலேயிருந்தும் எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்தும் எடுத்து வைக்கப்பட்ட விவாதங்களை மிக உன்னிப்பாகவும் கவனத்தோடும் எல்லோரும் கேட்டார்கள். குறிப்பாக பதில் சொல்ல இருக்கிற நிதியமைச்சர் அவர்கள் அவையை விட்டு எழுந்து போகாமலேயே உட்கார்ந்து பேசப்பட்ட கருத்துக்களைக் கேட்டுக் குறிப்புகளை எடுத்துக்கொண்டு இன்றைக்கு பதில் சொல்ல இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

இது ஒரு பட்ஜெட் சீசன் என்பது நமக்குத் தெரியும். இரயில்வே பட்ஜெட்டை சமர்பித்ததற்குப் பிறகு, பொது பட்ஜெட்டையும் சமர்பித்ததற்குப் பிறகு நாமும் இங்கே நிதிநிலை அறிக்கையைச் சமர்பித்து இருக்கிறோம். நான் இந்த நிதிநிலை அறிக்கையில் நுழைவதற்கு முன்பு மத்திய அரசு சமர்பித்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே விவாதிக்கலாமா என்ற கேள்வி சரியான கேள்வியல்ல என்பதையும் இந்த பட்ஜெட்டும் அந்த பட்ஜெட்டும் இன்டக்ரேட்டடாக இருக்கிற காரணத்தினால் அந்த பட்ஜெட் மூலம் விளைகிற இன்சிடன்ஸ் அல்லது இம்பேக்ட் இங்கே இருக்கிற மக்களைப் பாதுகாக்கும் அல்லது பாதிக்கக்கூடும் என்ற காரணத்தினால் அந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் முறையாகப் பிரதமர் பொறுப்பை திரு. ராஜீவ்காந்தி அவர்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு இந்த நிதிநிலை அறிக்கை அங்கே சமர்ப்பிக்கப்பட்டது. திரு. ராஜீவ்காந்தி அவர்களைப் பொறுத்தவரையில் எனக்கு மிக்க மரியாதை உண்டு. அவரது அன்னையார்





அன்னை இந்திரா காந்தி அவர்கள் இரக்கமில்லாத அரக்கர்களால் சுட்டுக்கொல்லப்பட்டு நமது இதயம் எல்லாம் பிளந்து எறிகின்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடந்து, முடிந்ததற்குப் பிறகு அமைதியான அளவுக்கு அவர் பிரதம அமைச்சராக ஆனார் என்பதில் நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக பிரதம அமைச்சர் காலம் சென்ற இந்திரா காந்தி அம்மையார் அவர்களை தெரிந்தவன் என்ற முறையில் அவரது உடலுக்கு மலர் வளையம் வைப்பதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் என்னை அனுப்பினார். நான் மலர் வளையம் வைத்ததும் உங்களுக்குத் தெரியும். 2 நாட்களுக்குப் பிறகு புதிய பொறுப்பை ஏற்ற ராஜீவ்காந்தி அவர்களை சந்திக்கின்ற வாய்ப்பையும் பெற்றேன். அவரிடம் முதலில் ஆழ்ந்த இரங்கலை கழகத்தின் சார்பாகவும், தலைமையின் சார்பாகவும் தெரிவித்ததற்குப் பிறகு அவர் பெற்று இருக்கிற பெரும் பொறுப்புக்காக எனது வாழ்த்துக்களையும் அவர்களுக்கு நான் உவந்து அளித்தேன். அப்போது அவர் என்னில் உருவாக்கிய உணர்வுகளை நான் இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன். அடக்கமாக ஆனால் அழுத்தமாக நிதானமாக தொலைதூர பார்வை பெற்றவராக அவர் என்னுள் தோன்றினார். அவர் நிச்சயமாக நாடு என்ற கப்பலை செலுத்த வேண்டிய முறையில் செலுத்தி செல்ல வேண்டிய இடத்திற்கு சென்று சேர்ப்பார் என்ற நம்பிக்கையை அவர் உருவாக்கினார். அந்த நம்பிக்கையோடு தான் நான் டெல்லியை விட்டு தமிழகம் வந்தேன். ஆனால் வந்ததற்குப் பிறகு அவரது பேச்சிலே நடவடிக்கைகளிலே சில மாற்றங்கள் ஏற்பட்டு விட்டனவே என்ற வேதனை எனக்கு இல்லாமல் இல்லை. தேர்தல் காலத்தில் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பிரதம அமைச்சராக இருந்து கொண்டே பிரித்துப் பார்க்க என்னால் இயலாது, அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக சென்றார் என்றோ அல்லது பிரதமராக அவர் சொல்லவில்லை என்றோ பிரித்துப் பார்க்க நான் விரும்பவில்லை. முடியாது. ஏன் என்றால் இரண்டு பொறுப்புக்களையும ஒருவரே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் அந்த காரணத்தால் அந்த இரண்டையும் அவரே வகிக்கின்ற காரணத்தால் தான் நான் அவரது பேச்சை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களுக்குச் சென்று அவர் பேசிய பேச்சுக்கள் பருவத்திற்குரிய பேச்சுக்களாக அமைந்து இருக்கக் கூடுமே தவிர இடத்திற்கு மரியாதைத் தருகின்ற பேச்சாக இல்லை என்பதை மெத்த பணிவன்போடு இந்த மன்றத்திற்கு நான் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். அதற்காக யாரும் வருத்தப்படக் கூடாது, எனக்கு அவரிடம் இருக்கின்ற மரியாதையை விட காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இருக்க முடியும் என்று நான் நம்ப மாட்டேன். ஆனாலும் சில உண்மைகளை (கூச்சல்—குழப்பம்)—I am not yielding—சொல்ல வேண்டிய கருத்துக்களை சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்தக் கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். (கூச்சல்—குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வார்த்தைக்கு வார்த்தை மறுப்பு தெரிவிக்க அனுமதிக்க முடியாது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசவிருக்கிறார்கள். அவர்கள் மறுப்பு தெரிவிக்கலாம். அனைவரும் உட்காருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே திரு. நாஞ்சிலார் அவர்கள் இந்த மன்றத்திலே முதல் முறையாக பேசுகிறார்கள். அவர்கள் பேச்சிலே நாங்கள் மிகுந்த அக்கரை கொண்டு, மரியாதை கொண்டு கேட்டுக் கொண்டு இருக்கிறோம். அவர் பேச்சு தொடங்கிய முறை ஒரு மாதிரியாக இருந்தாலும் கூட நாம் எல்லாம் பெரிதும் மதிக்கின்ற, பாராட்டுகின்ற இந்திய திருநாட்டினுடைய பிரதமர் அவர்களைப் பற்றி பேசுகின்ற நேரத்தில் அவர் நாகரீகமாக பேசினாலும் கூட அவரை தாக்குகின்ற முறையில் அந்தப்பேச்சு அமைந்ததன் காரணத்தால் தான் எங்கள் கட்சியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அவரைக் கேட்டுக்கொள்கிறேன், இந்தமாதிரி சர்ச்சைக்குரிய கருத்துக்களைச் சொல்லாமலேயே இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்கள் பயன்படுகிற கருத்துக்களைச் சொல்வார்களானால் அவர்கள் விமர்சனம் செய்யட்டும் அல்லது தாக்குதல் செய்யட்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அதனை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். இப்படி எடுத்த எடுப்பிலேயே புதியதாக பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற இந்திய பிரதரைப் பற்றிச் சொல்வது எங்கள் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு வேதனையைத் தருகிறது என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : நாஞ்சிலாருடைய பேச்சு கன்னிப் பேச்சாக இருந்தாலும், கண்ணியம் உள்ள பேச்சாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சித்தன் அவர்கள் ஒரு சில கருத்துக்களைச் சொல்லி நான் ஏதோ பாரதப் பிரதமரைத் தாக்குகிறேன் என்ற வகையிலே சொன்னார்கள். நான் காங்கிரஸ் கட்சித் தலைவர் இராஜீவ் காந்தி அவர்களைத் தாக்கவில்லை அல்லது குறைசொல்லவில்லை— ஆனால், எனக்கும் பிரதமராக இருக்கின்ற ராஜீவ் காந்திக்கும் இடையே பேசிய பேச்சுக்களைத்தான் இங்கே எடுத்துக் காட்டுகிறேனே தவிர. தயவு செய்து பாரதப் பிரதமரை எங்களிடமிருந்து பிரித்து வீட்டிற்குக் கொண்டு போக வேண்டாமென்று சித்தனாரையும்,* * கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(கூச்சல்—குழப்பம்)

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்ற வார்த்தையை நீக்க உத்திரவிடுகிறேன். உறுப்பினர்களுடைய மனதைப் புண்படுத்துகின்ற வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு). அந்த வார்த்தையை நீக்குவதற்கு உத்தரவிட்டாகி விட்டது; நீக்கியாகிவிட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, என்னைப்பற்றி நாஞ்சிலார் சொன்னதைப் பற்றி எனக்கு வருத்தம் இல்லை. அவர் சொன்ன பதம் நல்ல பதம் என்றுதான் கருதுகிறேன். ஆனால் அது பற்றித் தாங்கள் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு நான் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. எங்கள் கட்சி உறுப்பினர்களை கொஞ்சம் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன் : * * என்பவர் சமுதாயத்திலே அவ்வளவு தாழ்த்தப்பட்டவராகக் கருதப்படுவதாக நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு வார்த்தைகளையும் இணைத்துச் சொன்னதால் தான் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். * * என்ற வார்த்தையை நீக்கி விட்டேன்.

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நீங்கள் விரும்புவீர்களேயானால் * * வெளியே அனுப்பிவிடலாம்.

திரு. டி. ஆர் வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கோட்டையை இடித்தற்காக வாக்காளர்கள் என்ற * * * * * மீது அவர்கள் கோபமாக இருப்பதைக் கண்டு நாங்கள் ஆச்சரியப்படவில்லை.

திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, ஐதராபாத்தில் பேசிய மரியாதைக்குரிய பிரதம அமைச்சர் அவர்கள் பேசும் பொழுது கூறியதை, உங்களுடைய அனுமதியோடு அதைப் படித்துக்காட்ட விரும்புகிறேன். State was going with a begging bowl. இதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு மாநில முதல்வர்கள், அதுவும் காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களை ஆளுகின்ற முதல்வர்கள் with a begging bowl பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு டெல்லிக்கு வருகிறார்கள் என்ற கருத்தை பாரதப் பிரதமர் பேசலாமா என்பதையும், அப்படி பேசுவது நியாயம் தானா என்பதையும், இன்னும் சொல்லப்போனால், அது நாகரீகமான கருத்துதானா என்பதையும் இந்த அவையின் முடிவிற்கு விட்டுவிடுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கி. மனோகரன்] [1985 ஏப்ரல் 8

ஆனால், பிச்சைப் பாத்திரம் ஏந்துகிற முதலமைச்சர்கள் என்று அவர்கள் கூறுகின்றபொழுது, நான் அவரைப் பார்த்துப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், வாதத்திற்காக பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு காங்கிரஸ் அல்லாத மாநிலங்கள் ஆளுகின்ற முதலமைச்சர்கள் டெல்லிக்குச் செல்கிறார்கள் என்றே எடுத்துக்கொள்வோம், அவர்களை பிச்சைப் பாத்திரங்களை ஏந்த வைத்த ஆள் யார்? அமைப்பு எது என்று தெரிந்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதை விளக்குவதற்கு முன்பு, இன்னொன்றையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி அல்லாத மாநிலங்களின் முதலமைச்சர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு ஆளத் தெரியாது என்றும், ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவழிக்கிறார்கள் என்றும், உருப்படியான திட்டங்களைப் போட அவர்களுக்குத் தெரியவில்லை என்றும் அவர்கள் கருத்து மழை பொழிந்திருக்கிறார்கள்.

எனக்கு இருக்கின்ற வேதனை எல்லாம் இந்த நேரத்தில் மாமன்றம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக நான் தெரிவிக்கிறேன், இன்றைய மைய அரசு உலகவங்கியிடமிருந்தும், இன்டர்நேஷனல் மானிடரி ஃபண்டிடமிருந்தும் மற்றைய பல்வேறுபட்ட நிதி நிறுவனங்களிலிருந்தும் இதுவரை குறுகியகாலத் தவணைக்கடனாக, நீண்டகாலத் தவணைக் கடனாகப் பெற்றிருக்கிற தொகை மட்டும் 25,000 கோடி ரூபாய். நினைத்த நேரத்தில் அவர்களுக்குத் தேவைப்பட்டால் அச்சடித்துக்கொள்வதற்கு நாசிக் ப்ரெஸ் எப்போதும் கதவுகளைத திறந்தே வைத்துக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், அவர் பேசும்போது இன்னொன்றையும் சொன்னார். ஆந்திரா மாநிலம் இதுவரையில் பெற்றிருக்கிற ஓவர் டிராஃப்ட் 350 கோடி அவர்களுக்கு ஆளத்தெரியுமா என்றும் கேட்டிருக்கிறார்கள். நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், ஹெக்டேயைத் தாக்கினார்: என்; டி. ஆர், அவர்களைத் தாக்கினார்; திரிபுரா சக்கரவர்த்தியைத் தாக்கினார்: சிக்கிம் முதலமைச்சரைத் தாக்கினார்: ஆனால் என்ன காரணத்தாலோ நமது மாநில முதலமைச்சர் அந்தத் தாக்குதலிலிருந்து விடுபட்டிருக்கிறார், இவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிட்ட திரு. ராஜிவ் காந்தி அவர்கள் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் பெயரை மட்டும் குறிப்பிடவில்லை.

ஆனால் குறி வைக்கப்படுகிறது என்பதை மட்டும் நான் ஆட்சித் தரப்பிலே இருக்கின்ற அருமை உடன்பிறப்புகளுக்கு இந்த நேரத்தில் தெரிவிக்க மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு 25 ஆயிரம் கோடியிலிருந்து 30 ஆயிரம் கோடி, நாசிக் ப்ரெஸிலே இருந்து இவ்வளவு என்று சொன்ன அவர் 350 கோடி ரூபாய் ஓவர் டிரர்ஃப்ட் என்று தெரிவித்த கருத்துக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

ஓவர் டிராஃப்ட் வாங்குவது என்பது ஒரு பெரிய பாவகாரியம் அல்ல. அது பொருளாதாரம் தெரிந்த, சிறு அரிச்சுவடி தெரிந்த நண்பர்களுக்குத் தெரியும். Overdraft is not a sin. வளருகின்ற நாடுகளானாலும் சரி, வளருகின்ற மாநிலங்களானாலும் சரி ஓவர் டிராஃப்ட் வாங்குவது இயற்கை. ஆனால் இத்தனை மாநிலங்களைப்பற்றிச் சொன்ன அவர் உத்தரபிரதேசம் இவ்வளவு ஓவர் டிராஃப்ட் வாங்கிற்று, ராஜஸ்தான் இவ்வளவு ஓவர் டிராஃப்ட் வாங்கிற்று: மத்தியபிரதேசம் இவ்வளவு ஓவர் டிராஃப்ட் வாங்கிற்று என்பதைப் பற்றிய ஒரு குறிப்பாவது பிரதம அமைச்சர் தெரிவித்தாரா என்றால் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் மிகப்பணிவோடு உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவு செய்கிறார்கள் என்று சொல்கிற மாண்புமிகு பிரதம அமைச்சருக்கு நான் அவரைத் தெரிந்தவன் என்ற முறையில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குக் கொஞ்சம் விளக்கம் தரவேண்டும் இந்த மன்றத்தின் வாயிலாக என்பதையும் இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

வாங்காத கடனுக்கு உலகவங்கிக்கு 70 ஆயிரம் ரூபாய் தினசரி கட்டணம் செலுத்தப்படுகிறது. நான் இதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இதனை உங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன். இரயில்வேக்களுக்கு 280 கோடி ரூபாய் கடன் அளிக்கப்படும் என்று உலகவங்கி உத்தரவாதம் அளித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் கடந்த ஜூலை மாதமே கையெழுத்தாகிவிட்டது. ஆனால் இரயில்வே நிர்வாகம் இன்னும் இந்தக் கடனை வாங்கவில்லை. எனினும் இதற்கு உத்தரவாதக் கடனாக மத்திய அரசு உலகவங்கிக்குத் தினசரி சுமார் 70 ஆயிரம் ரூபாய் அளிக்கவேண்டியிருக்க வேண்டும் என்ற கருத்தைத் தினமணி பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது. ஊதாரித்தனமாகப் பணத்தைச் செலவழிக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டு வாங்காத கடனுக்குத் தினசரி வட்டியாக 70 ஆயிரம் ரூபாய் கட்டணம் கொடுக்கிறார்களே, இது ஊதாரித்தனத்தின் கீழ் வருகிறதா அல்லது உபகாரத்தின் கீழ் வருகிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிச்சைப் பாத்திரங்களை ஏந்திக்கொண்டு இங்கே வருகிறார்கள் என்று பேசுகின்ற நமது பிரதம அமைச்சருக்கு இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மத்திய அரசினுடைய பாலிசியைப் பற்றிப் பேசுவது தவறல்ல. ஆனால் சில புள்ளிவிவரங்களைப் பற்றி இங்கே சொல்கிறபோது அதை மறுப்பதற்கு மத்திய அரசின் சார்பிலே இங்கே பிரதிநிதிகள்

இல்லை என்பதால் அதைப்பற்றிக் குறிப்பிடுவது தேவையில்லை. 280 கோடி ரூபாய் கடன் வாங்குகிறார்கள் என்று சொன்னால், அதுபற்றி மறுப்பு விளக்கம் தருவதற்கு இங்கே ஆள் இல்லை (குறுக்கீடுகள்) மாநில சுயாட்சி பற்றிச் சொல்கிறபோது அதைப்பற்றி மறுத்துச் சொல்ல இங்கே வாய்ப்பு இருக்கின்றது.

(முற்பகல் 11-00)

ஆனால் ஒரு துறையிலே உலக வங்கியிலே ரூ. 250 கோடியை வாங்காமல், வட்டி கட்டிக் கொண்டிருக்கிறது என்றால் அதை மறுப்பதற்கு சென்ட்ரல் கவர்மென்ட்டின் பிரதிநிதி இங்கே இல்லை. (குறுக்கீடுகள்) மத்திய சர்க்காரை எதிர்த்து பேசக் கூடாது என்று சொல்லவில்லை. எந்த அளவுக்கு மத்திய அரசினுடைய பட்ஜெட் இந்த மாநில அரசு பட்ஜெட்டைப் பாதிக்கிறது என்று பேச ஆட்சேபணை இல்லை. ஆனால், குறிப்பிட்ட ஒரு துறையில் இவ்வளவு கோடி ரூபாயை வாங்காத மத்திய அரசு வட்டி கட்டிக் கொண்டிருக்கிறது என்றால், அது உண்மையா, பொய்யா, என்று அதற்கு விளக்கம் சொல்வதற்கு மத்திய அரசு சார்பிலே இங்கே பிரதிநிதி இல்லை. எனவே, அந்த அளவிற்கு ஆழமாக போகாமல் கொள்கையை விவாதிப்பதில் தவறில்லை,

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : துணைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வார்த்தைக்கு வார்த்தை மறுப்பதை விட அடுத்த உறுப்பினர் திரு. சித்தன் பேசும் பொழுது அவர் பதில் சொல்லலாம்.

திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் எனக்கு நெடு நாளைய நண்பர். அவர் எனக்கு ஒத்துழைப்பு தருவார் என்ற நம்பிக்கையில்....

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் இந்த மாமன்றத்திலே நிதி அமைச்சராக இருந்தவர்—நிதி அமைச்சராகப் பொறுப்பேற்று நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தவர்கள். அவர்கள் பேசுகின்றார்கள். மத்திய சர்க்காருக்கு நாசிக்கிலே நோட்டு அடிக்கக்கூடிய அதிகாரம் இருக்கிறது, என்று. நோட்டு அடித்தால் பிரச்னை தீர்ந்து போகுமா என்பதை அவர்கள் விளக்க வேண்டும். நோட்டு அடித்து, தேசத்தினுடைய பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்து விட முடியுமா என்பதை விளக்கினால் நாங்கள் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : நாசிக்கிலே நோட்டே அடிக்க மாட்டீர்களா?





திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : நாசிக்கிலே நோட்டு அடித்தால் பிரச்னை தீருமா—பொருளாதாரப் பிரச்னை தீருமா? நிதி அமைச்சராகப் பொறுப்பிலிருந்து, நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்தவர்; நோட்டு அடித்து பிரச்னையைத்தீர்க்க முடியுமா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே விளக்கிக் கொண்டு வருவதெல்லாம் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக் கொண்டு .. .. (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன் : பிச்சைப் பாத்திரம் என்று வார்த்தைகளைத் திருப்பி. திருப்பிச் சொல்லிக் கொண்டு வருகிறார்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பிச்சைப் பாத்திரம் என்று சொல்லுகிறார், அதைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

திரு. கி. மனோகரன்: துணைத்தலைவர் அவர்களே, பேசிய பாரதப் பிரதமர் அட்சயப் பாத்திரம் என்று சொல்லி இருந்தால் நான் அதைப் பயன்படுத்தியிருப்பேன். அவர் பிச்சை பாத்திரம் என்று சொன்ன காரணத்தினாலேதான், அது பத்திரிகைகளிலே எல்லாம் வெளியாகியிருக்கிற காரணத்தினால், அதை மாண்புமிகு உறுப்பினர் சுறுசுறுப்புக்குப் பெயர் போன திரு. சித்தன் அவர்கள் படித்திருப்பார் என்ற காரணத்தினால், அவரும் அதை உணரவேண்டுமென்ற நல்லெண்ணத்தில் நான் அதை எடுத்து வைக்கிறேனே தவிர, மற்று அல்ல. அவரை பிச்சை பாத்திரம் ஏந்துபவராகத் துரத்தியது எது? அல்லது எந்த அமைப்பு? யார் என்றுதான் ஆரம்பத்திலே கேட்டேன். அதற்கு விளக்கம் தருகின்ற பொறுப்பு எங்களுக்கு உண்டு.

The Seventh Finance Commission had recommended that 40% of the Central Excise Duty should be transferred to the State. In the last three years the Centre has not touched the Excise Duty on items like petroleum, Iron and Steel Aluminium and Coal but only raised the prices. The entire benefit of this increase in the price goes to the Centre which is the Producer and Seller of the goods.

According to a recent speech of the West Bengal Finance Minister by raising prices instead of Excise Duty the Centre gathered additional revenue to the tune of Rs. 7000 crores to which the States are not entitled. whereas if the Excise Duty has been increased Rs. 3000 crores would come to the States as per the recommendations of the Seventh Finance Commission.

சுருக்கமாக தமிழாக்கம் சொல்கிறேன். நான் கீழே குறிப்பிட்ட அயர்ன், ஸ்டீல், அலுமினியம், கோல் இவைகளின் எக்சைஸ் டியூட்டியை ஏற்றாமல், மாறாக இவைகளின் விலையை உயர்த்துவதன் மூலம், எக்சைஸ் டியூட்டி என்றால் ஷேரபிள் மாநிலத்

திற்கும் உண்டு ; மத்திய அரசிற்கும் உண்டு. பகிர்ந்துகொள்ளக் கூடிய நிதி எக்சைஸ் டியூட்டி. ஆனால் எக்சைஸ் டியூட்டியை ஏற்றாமல் இந்தப் பொருள்களின் விலையை ஏற்றுவதால் அது மொத்தமாக மத்திய அரசிற்குச் செல்லும். அப்படி மத்திய அரசிற்குச் சென்று கொண்டிருக்கிற தொகை மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 7,000 கோடி ரூபாய். விலை ஏற்றம் செய்வதற்கு பதிலாக எக்சைஸ் டியூட்டியை உயர்த்தியிருப்பார்களானால் இந்நேரம் கிடைக்கிற தொகை 3,000 கோடியாக இருந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : துணைத் தலைவர் அவர்களே, விலை ஏறினால் எக்சைஸ் டியூட்டியும் ஆட்டோமாடிக்காக ஏறும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்ல முடியாது. மாநிலத்திற்கு வருமானம் வருவதற்கான வழிகளைப் பற்றி தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் ஏதாவது கருத்து தெரிவிக்க வேண்டுமென்றால் உங்கள் கட்சியிலிருந்து பேசுகிறவர்கள் மூலம் சொல்லலாம்.

திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, நமக்கு கிடைக்க வேண்டிய, மாநிலங்களுக்கு கிடைக்கவேண்டிய பெரிய தொகை அத்தனையும் மத்திய அரசால் கபளீகரம் செய்யப்படுகிறது என்பதை எடுத்து விளக்கிக் காட்டுவதற்காகத் தான் நான் இதைச் சொல்லுகிறேன். அடுத்தாற்போல நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதையும் நீங்கள் தயவுசெய்து குறிப்பினில் ஏற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இண்டஸ்ட்ரிஸ் என்ற தலைப்பு ஆரம்பத்தில் ஸ்டேட் லிஸ்டில் இருந்தது. மாநில பட்டியல். ஆனால், Without any amendment to the Constitution, Industries என்பதை யூனியன் லிஸ்ட்டில் அவர்கள் இணைத்துக்கொண்டு அதன்மூலம் 93 சதவீதம் ஆர்கனைசிங் இண்டஸ்ட்ரிஸ் in terms of value output உதாரணத்திற்குச் சொல்கிறேன், Items like Razor blade, paper gum, match sticks, household electrical appliances, cosmetics, soaps, and other toilet requisites, fabrics, foot wears, pressure cookers, cutleries, steel-furniture, steel-fasteners, hurricane lantern bicycles, dry cells, T.V. sets, agricultural implements have all gone under the Centre's control.

இதற்கு லைசென்ஸ் பெறவேண்டுமென்றால் டெல்லியில் தொங்கிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லையென்ற நிலையை உருவாக்கி விட்டு, பிச்சைப் பாத்திரம் ஏந்திக் கொண்டு வருகிறார்கள் என்று வாதாடுவதிலே, பேசுவதிலே பெரிய அளவில் பொருள் இருக்குமென்று விவரம் புரிந்தவர்கள் நம்பமாட்டார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இப்போது 25 ஆண்டுகாலமாக 'இன்பிளேஷன் அதாவது பணவீக்கம் பெருகி இருக்கிறது என்றால் அது 428 சதவீதம். 1964-ஆம் ஆண்டு 100 ரூபாய் என்றால் அதன் மதிப்பு இன்றைக்கு எந்த அளவிற்கு குறைந்திருக்கிறது என்றால் 19 ரூபாய் என்ற அளவிற்கு குறைந்திருக்கிறது. இப்படிப்பட்ட இடர்பாடுகளுக்கு இடையில் தான் மாநிலங்கள் இன்றைக்கு புழுங்கிக் கொண்டிருக்கின்றன. செய்வதறியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களைப் பார்க்கும் போது எனக்கு பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் குரல் கொடுக்கிறார் டெல்லியை பார்த்து.

(முற்பகல் 11-10)

என்னுடைய பணிவான வேண்டுகோளை நான் இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன். பிளானிங் கமிஷன் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. அது சூப்பர் காபினெட் அந்தஸ்து என்ற நிலையில் இருந்து செயல்படுகிறது. அந்த நிலையிலே இருந்த அவர்கள் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். எயர் கண்டிஷன் அறையிலே உட்கார்ந்து கொண்டு, படித்துவிட்டோம் என்ற காரணத்திற்காக, எந்த மாநிலத்தினுடைய 'டோப்போகிராபி' யும் தெரியாமல், 'ஜியாகிரபி'யும் தெரியாமல், பூகோள அமைப்பே தெரியாமல், தேவை என்ன என்பது தெரியாமல், மக்களின் அன்றாட நிலைமை பற்றி புரிந்துகொள்ளாமல், தங்களுடைய திறமைக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டுவதும், இவ்வளவுதான் இந்த மாநிலத்திற்கு ஒதுக்குவோம் என்று சொல்வதும் முரண்பாடான கருத்துக்கள் என்று நான் பாராளுமன்றத்திலும் சொல்வேன் ; இங்கேயும் சொல்லுகிறேன். அதனால்தான் தெரிவிக்கிறேன். Scrap that Planning Commission. அந்தக் கமிஷன் அங்கே இருப்பதில் பயன் இல்லை. ஏனென்றால் மாநிலங்களுக்கு திட்டக் குழு (பிளானிங் கமிஷன்) இருக்கிறது. அது ஒழுங்காகச் செயல்பட நிதி அமைச்சர் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் 'டூப்ளிக்கேஷன்' வராது. அந்தப் பிளானிங் கமிஷனைப் பொறுத்தவரையில் எனக்கு இருக்கிற அச்சம், கிரான்ட் இன் எய்டு, ரெவின்யூ நம்முடைய தேவைக்கு ஏற்ப கிடைப்பதில்லை. நிதி ஒதுக்கீடு செய்வது ஃபிளான்ஸ் கமிஷன். That is a statutory body. இன்னொரு பிளானிங் கமிஷன் தேவையில்லை. அது தன்னுடைய 'டிஸ்கிரிஷன்' படி ரெக்கமென்டேஷன் தரும், பரிந்துரை தரும். நான் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகிறேன். அந்தப் பிளானிங் கமிஷன் The Planning Commission itself is a leverage. தங்களுக்கு சாதகமாக சில மாநிலங்களை கையடக்கம் செய்வதற்கு 'டிஸ்கிரிஷனரி கிரான்ட்' என்று சொல்லி, அவர்களுடைய விருப்பப்படி பணம் வழங்குகிறார்கள்; நிதியை பகிர்ந்தளிக்கிறார்கள். இது நமக்கு பெருத்த பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதால் இந்த மன்றத்தில் இந்தக் கருத்தைச் சொல்கிறேன்.

நண்பர்கள் எல்லாம் ரொம்ப வருத்தப்பட்டார்கள். இந்த நாட்டின் பிரதமரைப்பற்றி இப்படிப் பேசலாமா என்று வருத்தப்பட்டார்கள். அவர்களுடைய கவனத்திற்காகச் சொல்கிறேன். ஹைதராபாத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது அவர் சொல்கிறார்—திட்டங்களைத் தீட்டுவது டெல்லி; புரோகிராம் போடுவது டெல்லி; அனைத்தும் செய்வது நாங்கள்; பணம் தருவது நாங்கள்; நீங்கள் இங்கே ஓட்டு போட்டால் உறுப்படியாக இருப்பீர்கள் ஓட்டுப் போடாவிட்டால் அதன் பலனை அறிவீர்கள் என்று தேர்தல் நேரத்தில் ஒரு பிரதம அமைச்சர் மிரட்டுகின்ற பாணியில் பேசுவது விரும்பத்தக்கது அல்ல. நான் பிரதமரைப் பற்றித்தான் சொல்கிறேனே தவிர காங்கிரஸ் கட்சித் தலைவர் கருதுவது போன்று மரியாதைக்குரிய இராஜீவ் காந்தியைப்பற்றி சொல்லவே இல்லை.

இன்னும் சொல்லப் போனால் எனக்கு அவரிடம் தனிப்பட்ட மரியாதை உண்டு. அந்த மரியாதையின் காரணமாகச் சொல்கிறேன். * * * (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே நிறைய சொல்வார்கள் என்று எதிர்பார்த்தோம். அவர்கள் மீண்டும் அவர்களுடைய பாணியிலேதான் தொடர்ந்து பேசுகிறார்கள். நாங்கள் எல்லாம் மதிக்கின்ற மரியாதைக்குரிய இந்தியப் பிரதமரைப்பற்றி * * என்று நாசூக்காகச் சொல்கிறார்கள். தயவுசெய்து அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுத் தேர்தலில் மக்கள் ஆதரவைப் பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தியப் பிரதமராக வந்துள்ள ஒருவரைப்பற்றி இப்படிப் பேசுவது பொருத்தமாக இல்லை. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, நான் நல்ல எண்ணத்தில் அந்தக் கருத்தைச் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ** ** என்று சொல்லுவது எந்தக் காரணத்தைக் கொண்டும் குற்றமல்ல. எனவே அவைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கக்கூடாது என்று நான் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு). எனது பாணியிலேதான் நான் பேச முடியும். பிறர் பாணியைப் பின்பற்றுவதற்கு நான் தயாராக இல்லை. ஆகவே அவர்கள் தயவு செய்து கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும் என்று நான் சித்தன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு).

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுத் தேர்தலிலே நின்று, பெருவாரியான மக்களின் ஆதரவைப் பெற்று தேர்தலில் ஜெயித்து வந்து இருக்கிறார்கள். எனவே மக்கள் புண்படுகிற மாதிரிப் பேசவேண்டாம்.

திரு. கி. மனோகரன் : அதைத்தான் நான் சொன்னேனே தவிர, அவர்களைப் புண்படுத்தவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதற்குப் பிறகு நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தொகுதியிலே பேசுகிறபோது ஒரு கருத்தை சொன்னார்கள். அந்தக் கருத்தை ஆட்சிக் கட்சியிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களின் முதல்வர்களாக இருந்தாலும் சரி, நிச்சயமாக ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன். அவர் தெரிவிக்கிறார்....Sales tax must be replaced by excise duty;'' என்று குறிப்பிட்டு இருக்கிறார். சேல்ஸ் டாக்ஸ் என்பது நிதியமைச்சருக்குத் தெரியும். மாநிலங்களுக்கு கிடைத்துவிட்ட காமதேனு. அதை மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளும் என்று ராஜீவ் காந்தி அவர்கள் பன்னிப் பன்னி தெரிவித்து இருக்கிறார்கள். அதை இந்த மன்றத்திலே நான் கடுமையாக எதிர்க்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தேசிய அபிவிருத்திக் கூட்டத்திற்கு நானும் மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களும் சென்று இருந்த நேரத்திலே, அப்போது பிரதமராக இருந்த மொரார்ஜி அவர்கள் எழுந்து, ஏற்கனவே 3 ஐட்டங்களை எடுத்துகொண்டோம், textiles, tobacco and sugar. மேற்கொண்டு சில ஐட்டங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் கருத்து தெரிவித்தபோது, சேல்ஸ் டாக்சை அறவே நீக்கிவிட்டு, எக்சைஸ் டியூட்டியைக் கொண்டு வரலாம் என்று தெரிவித்த நேரத்திலே முதலிலே எழுந்து 'எதிர்ப்புக் குரல் கொடுத்தவன் நான். உடனடியாக அவர்கள் பெருந்தன்மையோடு எழுந்து, எந்த மாநிலத்திலேயாவது, ஒரு முதலமைச்சர் எதிர்ப்பாரானால், நான் நிச்சயமாக அந்தத் துறைக்கு வரமாட்டேன் என்ற உறுதியை தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்திலே அவர்கள் அளித்தார்கள் என்பதை நான் உங்கள் மூலமாக, இந்த அவையின் உணர்வாக டெல்லிக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏன் என்றால் நிதியமைச்சர் அவர்கள் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். சேல்ஸ் டாக்சை நாங்கள் விடமாட்டோம் என்று பேசியிருக்கிறரர்கள். அதிலே அவர்கள் உறுதியாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஏன் என்றால் நான் பெருமையோடு சொல்கிறேன், பழகியவர்கள் அல்லவா? ஆறடி உயரம், ஆண் அழகன், ஆஜானுபாகு, நடமாடுகின்ற பல்கலைக் கழகம், நல்லவற்றை எல்லாம் தெரிந்து வைத்திருக்கிற, புள்ளிவிவரக் கணக்குகளை வழங்குவதிலே வித்தகர், வல்லவர், அவர்கள் பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். நாங்கள் சேல்ஸ் டாக்சை விட்டுவிட மாட்டோம். அதிலே அவர்கள் உறுதியாக இருக்கவேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

136432

[திரு. கி. மனோகரன்] [1985 ஏப்ரல் 8

அதுமட்டுமல்ல, மத்திய சர்க்கார், தந்திருக்கிற அந்த பட்ஜெட் எவ்வளவு பற்றாக்குறையை பற்றிக்கொண்டு இருக்கிறது என்றால், 3,349 கோடி ரூபாயைப் பற்றாக்குறையாக பற்றிக்கொண்டு இருக்கிறது. அந்த பட்ஜெட்டைப் பொறுத்த வரையில், 'How are you going :o bridge the gap ? என்று கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. ஆனால் இங்கே நமது நாவலர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற பற்றாக்குறை 262·5 கோடி என்று கருதுகிறேன். அது எப்படி நிவர்த்திக்கப் படும் என்று அவர்களே சொல்லி இருக்கிறார்கள். நான் பைனான்ஸ் கமிஷனை நயந்து கேட்டு இருக்கிறோம், நலினமாக கேட்டு இருக்கிறோம், அவர்கள் அதை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடு கேட்டு இருக்கிறோம், அதுவும் சேர்த்து, சிக்கன நடவடிக் க மூலம் அந்த சேப்பை பிரிட்ஜ் செய்ய முடியும் என்று அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். இவ்வளவு கோடிகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள், எப்படி அதை சமாளிக்கப் போகிறார்கள் என்பதற்கு பதில் இல்லை. ஆனால் உங்களிடம் கேட்டதற்கு, கேட்காமலேயே நீங்கள் சொன்ன பதில், பைனான்ஸ் கமிஷனை நம்பியிருக்கிறோம் என்று தெரிவித் திருக்கிறீர்கள். எங்களது சிக்கன நடவடிக்கைகளின் மூலம், சிக்கனத்தை செயலில் காட்டுவதன் மூலம் அதைச் செய்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் இங்கே இன்னொன்றை தெரிவிக்க விரும்புகிறேன். சிக்கன நடவடிக்கைகள் மூலம் என்று சொல்லுகிற போது, டெல்லியிலே உள்ள அரசு எந்தச் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது என்ற கேள்வியினை ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கே விட்டுவிடுகிறேன். அவர்கள் மன சாட்சியோடு அதை அணுகிப் பார்க்கட்டும் என்று மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

அது மட்டுமல்ல, பாஃரின் எக்ஸ்சேன்ஞ் பொசிஷின் இருக்கிறதே அதில், மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் மிகவும் பலகீனமாக இருக்கிறது என்பதை மேலே இருக்கிறவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த பலகீனத்தை எப்படி போக்குவது என்று தீவிரமான ஆராய்ச்சியிலே அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கருத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல்வாதிகள் எப்பொழுதுமே ஒரு வகையானவர்கள், எப்படிப்பட்டவர்கள் என்பதற்கு நான் விளக்கம் தருகிறபோது இங்கேயிருக்கிற அரசியல்வாதிகள் என்னோடு கோபித்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். என்னையும் உட்பட்டு வேண்டுமானால், நான் சொல்கிற கருத்துக்களில் கூட, நீங்கள் அதை எடுத்துக் கொள்ளலாம்.



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

சர்ச்சிலிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்வி. He was asked to define the qualifications necessary to become a politician. ஒரு அரசியல்வாதியாக இருப்பவனுக்கு அடிப்படையான தகுதிகள் என்ன என்று கேட்டார்கள். சர்ச்சில் தெரிவித்த கருத்து, " It is an ability to foretell what is going to happen tomorrow' next week next month and next year." நாளைக்கு என்ன நடக்கும் என்று கணித்துச் சொல்கிற திறமை நாளைக்கு, மறுவாரம், அடுத்த மாதம், அடுத்த ஆண்டு என்று கணித்துச் சொல்கிற தகுதி ஒரு அரசியல்வாதிக்கு உண்டு, என்று சொல்லி விட்டு, சர்ச்சில் அடுத்தாற்போல் இன்னொன்றையும் சொன்னார். ....and have the ability to retort and explain why it did not happen.... அதற்குப் பிறகு அவர்களுக்கு இருக்கிற இன்னொரு தகுதி, தான் சொன்னது எல்லாம் ஏன் நடக்கவில்லை என்பதைப் பற்றி விளக்கமாக கணித்துச் சொல்கிற தகுதி என்று குறிப்பிட்டார்கள். அந்தத் தகுதிக்கு உரியவராக நாவலர் அவர்கள் இருக்கிறார் என்று குற்றம் சாட்டமாட்டேன். நாங்களும் அந்தத் தகுதிக்கு உரியவ்ராக இருக்கிறோம் என்று நான் வாதாடவில்லை. ஆகவே மத்திய சர்க்கார் போட்டிருக்கக் கூடிய வரிகள் எந்த அளவிற்கு நம்மை பாதிக்கின்றன என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது யாரும் வருத்தப்படக் கூடாது.

அவர்களுடைய பட்ஜெட்டில் என்ஜினீயரிங் கூட்ஸ்ஸைப் பொறுத்த வரையில். there is no specific measure to boost the Engineering experts. சாதாரணமாக இப்பொழுது குடிசைகளுக்கு போனால்—முன்னால் எல்லாம் அலுமினியப் பாத்திரங்கள் தாம் இருக்கும், அதைப் பார்த்திருக்கிறோம். எவர்சில்வர் பாத்திரங் கள் எப்போதுமே குடிசையினுள் எட்டிக் கூட பார்க்காது. ஆனால் இப்போது நாம் குடிசைகளில் பாரார்த்தோமானால்—பிளாஸ்டிக் பக்கெட்டுகளும், மற்றும் பிளாஸ்டிக் சம்பந்தமான பாத்திரங்கள் மட்டுமே அங்கே இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், no concession is given to plastic company, அதற்குப் பிறகு காட்டன் யார்ன்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள். 25 சதவீதம் வரியை, அந்த டியூட்டியை உயர்த்தியிருக்கிறார்கள். இதன் மூலம் 8 லட்சம் பவர் லூம்ஸ் பாதிக்கப்படப் போகிறது. இன்னும் நான் தெரிவிக்கவிரும்புகிறேன். கிட்டத்தட்ட 28 லட்சம் நெசவாளர் கள் தெருவிலே வந்து நிற்கப்போகிறார்கள், இது நிறை வேற்றப்படுமானால்.

அதற்குப் பிறகு ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ். பிக்சட் இன்கம் என்று சொல்வார்களே, அப்படி நிர்ணயமான ஊதியம் பெற்றுக் கொண்டு, கிடைத்ததை வைத்துக் கொண்டு, வாழ்நாளை கடத்திக் கொண்டே கடன் வாங்கியும் வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்களே அந்த பல்வேறு பட்ட மக்களுக்கு தேவையான அடிப்படை சாதனமாக இருப்பது ஸ்டீல். அந்த ஸ்டீலுக்கும், அந்த ஸ்டீலிருந்து உருவாக்கப்படுகிற சாதனங்களுக்கும் 10 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது

[திரு. கி. மனோகரன்] [1985 ஏப்ரல் 8

என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன். அதற்குப் பிறகு, 'prices of cement, petrol, commercial vehicles' அது உயர்த்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் குழந்தைகள் எழுத பயன்படுத்துகிற நோட்டு புத்தகங்களுக்கும், நியூஸ்பிரிண்ட் ககிதங்களுக்கும் வரியை உயர்த்தியிருக்கிறகர்கள். ஒரே ஒரு ஆறுதல் என்ன வென்று சொன்னால், வருமான வரியில் 16 ஆயிரமாக இருந்த உச்ச வரம்பை 18 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதை 25 ஆயிரமாக உயர்த்திருப்பார்களேயானால், நடுத்தர வர்க்கத் தினருக்கு அது உதவியாக இருந்திருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த மத்திய அரசின் பட்ஜெட்டிலே சாகசத்தின் சங்கநாதத்தைத் தான் பார்க்கிறோம் என்று சொல்லி, அத்தோடு அந்த பட்ஜெட்டை ஒதுக்கி வைக்கிறேன்.

அதற்கு பிறகு நாவலரிடம் வருகிறேன். நாவலர் அவர்கள் அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். மெத்த சிரமப்பட்டு அவர்கள் அந்த அறிக்கையை தயாரித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவருக்கு என் நன்றியைத் தெரிவிக்கிற அளவுக்கு எனக்கு உள்ளம் இல்லை. அவர் தயாரித்திருக்கின்ற அந்த பட்ஜெட் இருக்கிறதே — அவர் தமிழுக்கு பெயர் போனவர், வல்லவர்—ஆனால் அவர் தமிழிலே தந்திருக்கிற அறிக்கைகள் அவற்றில் ஒரு சில பகுதி கள் எனக்கு புரிந்துகொள்ள முடியவில்லை. கொஞ்சு தமிழ் பேசுகின்ற தம்பி காளிமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் எனக்கு விளக்குவார்களானால் நான் நன்றி உள்ள வனாக இருப்பேன். நான் படிக்கிறேன். பாரா 12-லே நாவலர் அவர்கள் தந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலேயிருந்து தெரிந்து கொள்ள விரும்புறேன். "தமிழ்நாட்டில், புதிய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வாயில்களை மேம்படுத்தவும், அது குறித்து பிரச்சாரம் செய்யவும் அரசு அண்மையில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அடுத்தாற் போல் 1985-86 ஆம் ஆண்டிற்கு தொழில்களுக்குத் தேவைப் படக்கூடிய வெப்பச் சக்தியைப் பெற, சூரிய சக்தியைப் பயன் படுத்தலாம் என்பதைப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் சூரிய வெப்ப சக்தி பயன்பாட்டு நடவடிக்கை களுக்கு ரூ. 95 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது, என்று தெரிவித்திருக்கிறார், செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு போவதை விட்டுவிட்டு இந்த வெப்பத்திலே மின் சாரம் எடுக்க முடியும், சூரிய வெளிச்சத்திலிருந்து மின்சாரம் எடுக்க முடியும் என்பதை ஊருக்கு தெரிவிக்க ரூ. 95 இலட்சம் தெவைதானா என்பதை நாவலர் அவர்களைப் பார்த்து கேட்டுக் கோள்கிறேன்.

ரூ. 102.44 கோடி செலவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங் களை வலுப்படுத்துவதற்கான திட்டம் உலக வங்கியின் மதிப் பீட்டிற்காக அனுப்பப்பட்டு உள்ளது. உலக வங்கியிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் இசைவு பெற்ற பிறகு, இத் திட்டம்



1985 ஏப்ரல் 8] [திரு. கி. மனோகரன்]

1985-86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித் திருக்கிறார். ஒரு பக்கத்திலே திட்டக் கமிஷன் உதவி வர வில்லை என்று சொல்லியிருக்கிறார். இங்கே சொல்கிறார் ரூ.102 கோடி மத்திய அரசு உதவி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் அதுமட்டுமல்லாமல், உலக வங்கியின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்.

அதற்கு பிறகு பாரா 25ஐ படித்துக்காட்ட விரும்புறேன். நாவலர் விளக்கம் தரவேண்டும். கூட்டுத் துறையில் ரூ. 108 கோடி திட்டச் செலவில் ஆண்டொன்றுக்கு 50,000 டன் லைனியர் ஆல்கையல் பென்ஜின் தயாரிப்பதற்கான பெருந் திட் டத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண் டுள்ளது. இதனால் 300 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். அடுத்தாற்போல் 1985—86 ஆம் ஆண்டில் வணிக முறையில் உற் பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படும் மற்றொரு திட்டம் ஆண்டொன்றுக்கு 15,000 டன் நிட்ரோ கிளைசிரின் கொண்ட வெடிமருந்துகளைத் தயாரிக்கும் திட்டம். இதற்கான செலவினை கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரூ. 20·85 கோடி. இதனால் வேலைவாய்ப்பு எத்தனை பேருக்கு கிடைக்கும் என்றால் 540, தயவு செய்து புள்ளி விவரத்தை விளக்கித்தர கேட்டுக்கொள்கிறேன். ரூ. 100 கோடி செலவில் வேலைவாய்ப்பு 300 பேர்களுக்கு. ரூ. 20 கோடி மட்டும் செய்தால் வேலைவாய்ப்பு 540 பேர்களுக்கு கிடைக்கும். இது ஸ்டாட்டஸ்டிகல் எர்ரரா என்பது புரியவில்லை. இதைப் போல் ஏறத்தாழ சொல்லிய அத்தனையும் இந்த பட்ஜெட்டில் முரண்பாடாக இருக்கின்றன.

(முற்பகல் 11-30)

Mark Twain-ஐப் பார்த்துக் கேட்டார்கள், "Will you please define Statistics" என்று. அதற்கு அவர் பதில் சொன்னார். நான் இப்படி அதை விளக்குகிறேன் என்று சொல்லிவிட்டுச் சொன்னார். முதலாவது 'Lie' : அடுத்த கட்டம் 'Utter Lie' உச்ச கட்டம் 'Statistics' என்று சொன்னார். நிதியமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிற Statistics என்பது Mark Twain அவர்களை நினைவுபடுத்துகிறது என்பதை நான் மெத்த வருத் தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், நான் ஆடிட் டர் ஜெனரல் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சரண்டர் சரண்டர் என்றுதான் இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை. 50 லட்ச ரூபாய் இதற்காக என்று ஒரு பக்கத்திலே ஒதுக்கப் பட்டிருக்கிறது, இன்னொரு பக்கத்திலே அது சரண்டர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக சரண்டர் செய்யாத அரசு இருக்கிறது என்று நான் வாதாடத் தயாராக இல்லை ஆனால் எல்லாமே, சரண்டர், சரண்டர் என்று ஆனால் இதிலேயும் சரண்டரா ? நான் இந்த சர்க்காருக்குத் தந்திருக்கிற பெயர் சரண்டர் சர்க்கார். மேற்கொண்டு நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது சரண்டர் சர்க்கார் என்பதை மாற்றி காங்கிரஸ்

சர்க்கார் என்ற அளவுக்கு உங்களை உயர்த்திக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மிக முக்கியமான காரணம், மூன்றாவது முறையும் அதிகப்படியான வாக்குகளை பெற்று முதலமைச்சரின் தனித்தன்மையினாலும், அவருக்கு மக்கள் மத்தியிலே இருக்கிற பிடிப்பு காரணமாகவும் அவரை முதலமைச்சராக ஆக்கிப் பார்த்த காரணத்தினால் நான் தெரிவித்துக் கொள்கிறேன், மக்களின் ஆசைகளை எதிர்பார்ப்புகளை எந்தக் காரணத்தைக்கொண்டும் நீங்கள் சாகடித்து விடாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய நாவலருக்கு இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் பேசும்போதுகூட நான் குறுக்கிட்டுக் கேட்டேன். ஆமாம், நீங்கள் சொல்வது சரி, மாநில சுயாட்சி என்று நாங்கள் கேட்கிறோம், என்று கேட்டபோது அவர் அதற்குச் சொன்ன பதில், நாங்கள் விட்டுவிடவில்லை, என்பது. நான் உட்கார்ந்த இடத்திலே இருந்து கேட்டேன், அப்படிக் கேட்டிருக்கக் கூடாது அதற்கு அவர் பதில் சொன்னார், அடுத்த பட்ஜெட்டிலே இதை விட வேகமாகவும் வரும் என்று. இந்த பட்ஜெட் என்று சொன்னார். அவர் சமர்ப்பித்த சென்ற ஆண்டு பட்ஜெட்டிலேயே அவர் K. C. Wheare—ஐ மேற்கோள் காட்டினார், அதிலே எழுதப்பட்டிருப்பது இதுதான்.

By the Federal Principle, I mean, the method of dividing powers so that the Central and regional Governments are each within its sphere co-ordinating and independent ; each Government should be limited to its own sphere and within that sphere, should be independent of the other. Neither Central nor regional Government is subordinate to ihe other.'

என்பதை நாவலருக்குத் தெரிவித்து ஒவ்வொரு ஸ்பிரிலும் மாநிலங்கள் தமக்கென தனி அதிகாரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று சொன்னதோடு வரையறுக்கப்படாத அதிகாரங்கள் யாருக்குப் போகவேண்டும் என்றால் அந்த அதிகாரங்களும் மாநிலங்களுக்குத்தான் இருக்கவேண்டுமென்பதை விரிவாகவும் ஆழமாகவும் பேசியிருக்கிறார்கள். K. C. Wheare அவர்களைத் தொட்டுச் சொன்ன காரணத்தால் நான் நாவலரத் தொட்டுப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே கொஞ்சம் கொஞ்சமாக சுருதி இறங்குவதைப் பார்க்கிறேன். கேட்கப்படுகிறது, எதிர்பார்க்கப்படுகிறது, உத்தேசிக்கப்படுகிறது, நம்பப்படுகிறது, வரும் என்று எதிர்பார்க்கிறோம், ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறோம், எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறதே தவிர உறுதியாக நாங்கள் வாதாடுவோம் என்று சொல்லவில்லை. நான் மோதச் சொல்லவில்லை, மத்திய சர்க்காரைமோத வேண்டிய





அவசியம் நமக்கு கிடையாது. ஆனால் வாதாட வேண்டிய இடத்திலே வாதாட வேணடுமா ? வேண்டாமா ? நான் வதாடினேன் நீ பார்த்தாயா என்று சொல்லக்கூடும். நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பிளானிங் கமிஷனிலே முன்னால் முதல்வராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் சென்றார்கள், வாதாடினார்கள், அவர்கள் கேட்ட தொகையை ஒதுக்குவதற்கு அவர்கள் மறுத்தார்க்ள், உடனே அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டுச் சென்னை வந்தார்கள். அதற்குப் பிறகு அழைத்துக் கொடுத்தார்கள் என்பதை நான் நாவலர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். பரிதாபப் புலம்பலொலியைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்க்க முடிகிறதே தவிர சங்கநாதத்தை நான் இதிலே பார்க்கமுடியவில்லை. வேண்டுமானால் நாவலர் தனது நீண்ட பேச்சில் பல கருத்துக்களைச் சொல்லக்கூடும். எனது அழுத்தமான கருத்துக்களை நான் இந்த நேரத்திலே அவருக்குச் சொல்லிவிட்டேன். தயவுசெய்து மேற்கொண்டாவது உருப்படியான முறையிலே திட்டங்களைத் தீட்டுங்கள், நீங்கள் தீட்டியதாகச் சொல்லப்பட்ட பல திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. வைகையாற்றை நவீனப்படுத்துகிற திட்டம் என்று அறிவித்தீர்கள், அந்தத் தொகை சரண்டர் செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா ? எத்தனை ஆலைகள் கட்டுவதற்கு என்று பணம் ஒதுக்கப்பட்டது. அந்தப் பணம் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா ? ஆடிட் ரிப்போர்டில் home wcrk இல்லை என்றும் Proper planning இல்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. காரியங்களை தொலை தூர நோக்கில் செய்யவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

1981-82 ஆம் ஆண்டு, 1982-83 ஆம் ஆண்டு இரண்டையும் அவர் படித்துப் பார்த்தால் அவருக்குத் தெரியும் என்று நான் மனதார நம்புகிறேன். மேற்கொண்டு நான் இந்த அவையில் நேரத்தை எடுக்க விரும்பவில்லை. மாண்புமிகு சித்தன் அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவருக்கு வழிவிட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் கடைசியாக ஒன்றை மட்டும் இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அரசு ஏராளமான வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றது. வாக்குறுதிகள் என்றால் சாதாரணமான வாக்குறுதிகள் அல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொஞ்சம் அவகாசம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் அதிக நேரம் எடுத்ததாகவும் எனக்கு நினைவு இல்லை.

அடுத்து வீட்டுக்கு ஒருவருக்கு வேலை அறிவிப்பு. அறிவிப்புக்குப் பிறகு ஆதாரங்களைத் தேடுகிறீர்களே தவிர ஆதாரங்களை வைத்துக்கொண்டு அறிவிப்புகளை தருவது இல்லை. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தந்தீர்களா ? தந்தால் அதை இந்த மாமன்றத்திற்கு நாவலர் அவர்கள் எடுத்து வைக்கட்டும்.

வறுமை கோட்டுக்கு கீழே இருப்பவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு 2 ரூபாய் கொடுத்தீர்களா ? இவர்கள் கையில் இந்த வறுமை கோடு படாத பாடு படுகிறது என்பதை தெரிந்துதான் நாவலர் அவர்களே முன்வந்து ஏழ்மை கோடு என்று அந்த வறுமைக் கோட்டுக்கு பெயர் சூட்டியிருக்கிறார்கள். பெயர் சூட்டுவதற்கு நாவலர் அவர்கள் திறமையாக இருக்கிறார்களே தவிர இதைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாமன்றம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக சொல்ல விரும்புகிறேன். திசை திருப்புகிற பேச்சு நீண்டகாலத்திற்கு எடுபடாது, 7 மாதம் நிரம்பிய கர்ப்பினிகளுக்கு மாதம் ஒன்றுக்கு-10 வது மாதத்தில் குழந்தை பிறக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்--3 மாதங்களுக்கு 150 ரூபாய், 50 ரூபாய், 50 ரூபாய், 50 ரூபாய் என்ற அளவுக்கு தரப்படும் என்று 2, 3 ஆண்டுகளுக்கு முன்பே இது சொல்லப்பட்டது. இதே மாமன்றத்தில் அப்போது நான் இல்லை, கழக உறுப்பினர்கள் நாவலர் அவர்களைப் பார்த்து கேட்டார்கள், அந்த 50 ரூபாய், 50 ரூபாய், 50 ரூபாய் 7 மாதம் நிரம்பிய கர்ப்பினிகளுக்கு தரப்பட்டதா ? என்று கேட்டதற்கு நாவலர் அவர்கள் சொன்ன பதிலை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். மதுரை மாவட்டத்திலே மேலூர் தொகுதியிலெ தொட்டாம்பட்டி என்ற ஊரிலே சென்சஸ் எடுத்துக்கொண்டு இருக்கிறோம் இது நிதி அமைச்சர் அவர்கள் பதில். மேலூரில் சென்சஸ் எடுத்து, தமிழகம் முழுவதும் சென்சஸ் முடித்து எல்லா சென்சஸ்ஸையும் கொண்டு போய் ஒரு ஏர்கண்டிஷன் ரூமில் உட்கார்ந்து கொண்டு அதை ப்ராசஸ் செய்து வருவதற்குள் அந்த குழந்தைகளுக்கு வயது 5 ஆகும். அதற்கு பிறகு அந்த 5 வயது குழந்தைக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எப்க்ட் மூலம் பணம் பெற முடியாது, நான் நாவலர் அவர்களைக் கேட்கிறேன், நீங்கள் இந்த அறிவிப்பை தந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டில் 7 மாதம் நிரம்பிய கர்ப்பிணிகள் யாருமே உருவாகவில்லையா ? ஏன் ஊரை ஏமாற்றுகிறீர்கள் ? என்பதற்காக நான் இதைக் கேட்கிறேன். படித்து வேலை அற்று இருப்பவர்களுக்கு 50 ரூபாய் கொடுத்தீர்களா ? அதை அவர் எனக்கு தெரிவிக்கவேண்டும். நான் கடைசியாக அவரைப் பார்த்து கேட்கிறேன், உங்கள் ஆட்சியில் ஜனநாயக நிறுவனங்கள் கொச்சைப்படுத்தப் படுகின்றன. உதாரணம் சொல்லவேண்டும் என்றால் ஜுடிசியரி தனக்கு சாதகமான தீர்ப்பை அந்த நீதிபதிகள் வழங்காவிட்டால் அவர்கள் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் வேதனையான செய்தி, ஒரு நீதிபதியின் வீடு தாக்கப்பட்டு இருக்கிறது. கண்காணிப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று கொண்டிருக்கின்றன. அந்த நீதிபதிகள் எல்லோரும் கூடி Are we second grade citizens ? என்று கேட்டு இருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, Are we Criminals ? என்று கூட கேட்டிருக்கிறார்கள்,



அந்த அளவுக்கு நீதி மன்றங்கள் கொச்சைப் படுத்தப்பட்டிருக்கின்றன. Fourth Estate என்று சொல்லுகின்ற பத்திரிகை உங்களுக்குத் தெரியும். அந்த ஆசிரியர்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டிருக்கிறார்கள். அலுவலகங்கள் தாக்கப்பட்டு இருக்கின்றன. தினகரன் அலுவலகம் தாக்கப்பட்டது. மாலை முரசு அலுவலகம் தாக்கப்பட்டது. ஆட்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். இத்தனையும் செய்கிறார்கள் தனக்கு சாதகமான செய்தி வராவிட்டால். இப்படிப்பட்ட வன்முறைகளில் ஈடுபடுவதன் மூலம் காரியங்களை சாதித்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுமானால் இந்த அரசு ஏதோ ஒரு சொர்க்கத்தில் இருக்கிறது என்று மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியில் நாவலர் அவர்களைப் பார்த்து கேட்கிறேன், நான் நிதி அமைச்சராக பணியாற்றியபோது ஒரு நிறுவனத்தை உருவாக்கவேண்டும் என்று திட்டமிட்டு அந்த நிறுவனத்தை உருவாக்கினேன். அந்த நிறுவனத்திற்குப் பெயர் Overseas Manpower Corporation அது இப்போது இருக்கிறதா ? பயன்படுகிறதா ? வளைகுடா நாடுகளுக்கு நீங்கள் ஆட்களை அனுப்பிக் கொண்டு இருக்கிறீர்களா ? அப்படி எத்தனை பேரை அனுப்பியிருக்கிறீர்கள் ? அனுப்பவில்லை என்றால் இந்த நிறுவனம் இருக்கிறதா ? இருக்கிறது என்றால் இதில் பணியாற்றுகிறார்களா ? சம்பளம் தரப்படுகிறதா ? ஒன்றுமே வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு சம்பளம் தருவது நியாயம்தானா ? முறைதானா ? எனக்குத் தெரிய, இந்த நிறுவனம் இயங்குவதாகத் தெரியவில்லை ; ஆனால் நிறுவனம் இருப்பதாக நான் மிகத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதற்குப் பிறகு, நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அருள்கூர்ந்து உங்களது வார்த்தை ஜாலங்களோடு உங்களது பதிலை முடிக்காமல், எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு அவரை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனது மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேருக்கு நான் பேசிய பேச்சுக்கள் புண்படக்கூடிய வகையிலே அமைந்திருக்குமேயானால், குற்றவாளி நான் அல்ல என்பதையும் சந்தர்ப்பம் அப்படி என்னை பேச வைத்தது என்பதையும் அவர்களுக்குச் சமாதானமாகச் சொல்லி எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிலேயிருந்து துளியளவும் நான் இறங்கத் தயாராகவில்லைஎன்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் என்னை வளர்த்துவிட்டவர், ஆளாக்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதையும், அதுமட்டுமல்ல, எனக்குப் பகுத்தறிவுப் பாலை

ஊட்டியவர் பெரியார் இராமசாமி அவர்கள் என்பதையும் இந்த மாமன்றத்திற்குச் சொல்லி, என்னை இன்றைக்கு இந்த அளவிற்கு உருவாக்கிய பெருமைக்குரியவர் சிற்பி பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதையும் உங்களுக்கெல்லாம் நினைவூட்டி அந்தப் பரம்பரையில் வந்த நான் பணிந்து கிடப்பேன் என்று மட்டும் யாரும் கனவு காணக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்து, உங்களுடைய பட்ஜெட் புலம்பலொலி பரிதாபத்தின் புலம்பலொலி என்று தெரிவித்து, அமைகிறேன் வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவரவர்களே, எட்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னாலே மூன்றாவது முறையாகத் தமிழக மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பிலே அணிசெய்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் இந்தப் பொதுத் தேர்தலுக்குப் பின்னாலே கொடுத்திருக்கின்ற இந்த முதல் நிதி நிலை அறிக்கையிலே இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஏறத்தாழ இருபது உறுப்பினர்கள் கலந்து கொண்டு இந்த மாமன்றத்திற்கு வழங்கிய கருத்துக்களை யொட்டி நிறைவுரையாக என்னுடைய கருத்துக்களையும் இந்த மாமன்றத்திற்கு முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னாலே, பொதுவாக இந்த மாமன்றத்திலே பேசுகின்ற நேரத்தில் மைய அரசினுடைய நிதிநிலை அறிக்கையை ஒட்டியும், தங்களுடைய கருத்துக்களை வழங்குவது என்பது இந்த மாமன்றத்தில் கடைபிடித்து வருகின்ற ஒரு மரபு. எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்கள் நீண்ட நெடுநாட்களாக நாடாளுமன்றத்திலே இருந்தவர்கள் ; நாடாளுமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் கூடப் பணியாற்றியவர்கள் இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற பல்வேறு பணிகளை ஆற்றிய முக்கியமான அமைச்சர்களோடு மெத்த நெருக்கமான உறவு கொண்டவர்கள். இப்படி நாடாளுமன்றத்தில் அடிக்கடி விவாதத்திலே பங்கு கொண்ட காரணத்தினாலேயோ என்னவோ அல்லது நாடாளுமன்றத்திற்குச் சென்றிருக்கவேண்டிய அவர் இங்கே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு வந்த காரணத்தினாலேயோ என்னவோ தெரியவில்லை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே, நாடாளுமன்றத்திலே நிகழ்த்தவேண்டிய உரையின் பெரும் பகுதியினை— முழுக்க முழுக்க என்று சொல்ல மாட்டேன் —பெரும் பகுதியை எடுத்துக்கொண்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் அரசுச் கட்சியிலேயும் சரி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பிலேயும் நாங்கள் சொல்லுகின்ற ஒரு வாதம், இங்கே மைய அரசாங்கத்தினுடைய





நிதிநிலை அறிக்கையைப்பற்றி விமர்சிக்கின்ற உங்களுடைய பணிகளைப்பற்றி நாங்கள் கருத்து வேறுபாடு கொள்ளப் போவதில்லை ; ஆனால் வரிக்கு வரி மத்திய அரசாங்கத்தினுடைய நிதிநிலை அறிக்கையை நீங்கள் விமர்சனம் செய்வீர்களேயானால், உங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுவீர்களேயானால், மத்திய அரசினுடைய சார்பிலே பதில் சொல்வதற்கு இங்கே அமைச்சர் பெருமக்கள் இல்லை.

எனவே, உங்களுக்கு என்று சர்வ வல்லமை வாய்ந்த, எல்லாத் திறமையும் வாய்ந்த, எல்லா துறைகளிலேயும் புகழ் பெற்ற அந்த நாடளுமன்றத்தில் இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் ; அந்த இரண்டு பெரும் உறுப்பினர்கள் மத்தியிலே உங்கள் கருத்துக்களைக் சொல்வீர்களேயானால், நாடாளுமன்றத்திலே உங்கள் குரல் ஒலிக்குமேயானால் அதற்குப் பதில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி கொடுக்கும்.

நமது திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவரவர்கள் நளினமாகப் பேசக் கூடியவர்கள் ; மென்மையாகப் பேசக் கூடியவர்கள் ; ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, இன்றைக்கு அவருடைய உரையில் சற்றுக் காரம் அதிகமாகவே இருந்தது. அதற்காகக்கூட நான் கவலைபட மாட்டேன் ; வருத்தப்பட மாட்டேன். ஆனால், இந்தியாவின் இணையற்ற பிரதமராக, இன்றைக்கு இளைய பிரதமராக, 40 வயதிலேயே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அந்தத் திருமகனைப்பற்றி அவர்கள் சொன்னதால்தான் எங்களுடைய கவலையைக் காட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது. நான் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன், இந்திய நாட்டினுடைய பிரதமராக, 16 ஆண்டுக்காலம் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையிலே பணியாற்றி, எதிரிகளாலே நாட்டைக் கூறுபோட நினைக்கின்ற துரோகிகளாலே, காக்கையைப்போல, குருவியைப் போல, உலகத்திலே வேறு எந்த ஜீவனுக்குமே இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான மரணம் ஏற்பட்டு இருக்காது என்கின்ற அளவிற்கு அன்னை இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட நேரத்திலே இந்த இளைய பிரதமர், இந்த இளைய மகன் மீது இந்த நாட்டிடைய சுமை ஏற்பட்டது.

உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்திய நாடு. அந்த நாட்டினுடைய பிரதமராக இளைஞர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்திலே, அவரிடத்திலே பொறுப்பு ஏற்றப்பட்ட நேரத்தில் அவர் அழுதுகொண்டிருக்கவில்லை ; கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கவில்லை; வாளாவிருக்கவில்லை ; சும்மா இருக்கவில்லை ; அன்னையார் அவர்களுடைய அருமைச் சடலம் டெல்லியிலே வீட்டிலே இருந்த நேரத்தில் அவர் டெல்லி தெருக்களில் எல்லாம் சுற்றுப்பயணம் செய்தார், எதற்காக ? இந்த நாட்டிலே துயரம் அபிவிருத்தி அடைந்துவிடக்கூடாது; இந்த நாட்டிலே இருக்கின்ற சிறு

பான்மையோருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் பாதுகாப்பே இல்லாமல் இந்தியாவின் பிரதமராகப் பொறுப்பேற்ற சில மணி நேரத்தில் டெல்லி தெருக்களிலே அவர்கள் வலம் வந்து அந்த மக்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தார்கள், அவ்வாறு பாதுகாப்பு கொடுத்த அந்தப் பெருமகனைப் பற்றி இவ்வளவு கடுமையான வார்த்தைகளைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத்தலைவர் சொல்லியிருக்க வேண்டியதில்லை.

அவர்கள் சொன்னார்கள். அது அவர்களுடைய உரிமை. அது அவருடைய இன்றைய கருத்து. அது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு தியாகமும் செய்யாமல் அவர்கள் இந்தப் பதவிக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார் என்று அவரால் எப்படிச் சொல்ல முடிகிறது? இந்த நாட்டிலே சமீபத்தில் தான் பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. 1952 ஆம் ஆண்டிலே இருந்து இந்த நாட்டிலே நடந்து வருகின்ற பொதுத் தேர்தல்களிலே இந்த 8-வது பொதுத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு மொத்தமுள்ள 508 இடங்களில் 401 இடங்களைப்பெற்று அந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதமராகத்தான் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறாரே தவிர நீங்கள் சொன்னது போல் ஏனோதானோ என்று இந்தப் பதவிக்கு அவர் உயர்த்தப் பட்டுவிடவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

பாரதி சொன்னாரே, நோக்கும் இடம் எல்லாம் நாமன்றி வேறில்லை, நோக்க நோக்கக் களியாட்டம் என்று அதுபோல நாடாளு மன்றத்திலே நாம் அதைப் பார்த்து மகிழ்கிறோம். நீங்கள்தான் அங்கே போகவில்லையே, 508 இடங்களில் 401 இடங்களை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கின்றது. அதுமட்டுமல்ல, எங்களுடைய தோழமைக் கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 16 இடங்களை பெற்று அங்கே வந்திருக்கின்றது. நான் உங்களுக்கு இரண்டு இடங்கள்தான் கிடைத்திருக்கின்றன என்று இந்த நேரத்திலே சொல்ல மாட்டேன். உங்களுக்கு கஷ்டமாக இருக்கும். அவர் தன்னுடைய திறமையாலே இந்திய அரசியலில் எந்த தலைவனும் செய்யாத சாதனையைச் செய்திருக்கிறார். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையான ஆண்டுகள் ஆட்சியிலே இருந்திருக்கிறது, மாற்றுக் கட்சியும் வந்திருக்கிறது. ஆனால் இந்தியாவிலே எந்தத் தலைவரும் செய்யமுடியாத ஒரு சாதனையை இளைஞராக இருந்தாலும் நாற்பது வயதிலே செய்து காட்டியிருக்கிறார். நாடாளுமன்றம் கூடியவுடன் அவர் என்ன செய்தார்? கட்சி மாறுகின்ற ஒரு அநாகரீகப் போக்கைக் கட்டுப் படுத்துகின்ற முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து—இவரை பார்த்துச் சொல்லக்கூடாது—உங்களால் எப்படி இப்படி சொல்ல முடிகிறது என்றுதான் புரியவில்லை. நான் இன்னமும் சொல்வேன். ராஜீவ் காந்தி அவர்கள் தலைமையிலே இந்தியா சரித்திரம் படைக்க இருக்கிறது. இந்தியாவில் உள்ள அனைத்து நதிகளையும்



தேசியமயமாக்க இருக்கிறார். கறுப்புப் பணத்தை ஒழிக்காமல் ஓயமாட்டேன் என்று சொல்லியிருக்கிற அந்த நெஞ்சுறுதி அந்த இளைஞருக்குத்தான் வந்திருக்கிறதே தவிர வேறு யாருக்கும் வரவில்லை. வரிக்கு, வரி இவருடைய பேச்சிற்கு நான் பதில் சொன்னால் என்னுடைய உரையின் பெரும் பகுதி இவருடைய பேச்சிற்கு பதிலாகவே போய்விடும் என்று கருதுகிறேன்.

அவர் சொன்னார். நாடாளுமன்றத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். என்ன காரணத்தாலோ அவருக்கு இப்போது அண்மைக் காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொஞ்சம் பாசம் அதிகமாக இருக்கின்றது. அது எதனால் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருக்கு இப்போதிருக்கின்ற நிலை என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள் அல்லவா? நாவலர் அவர்கள் இன்னும் கொஞ்சம் உரக்கக் குரல் கொடுக்கலாம், நாங்கள் கேட்கிறோம், எதிர் பார்க்கிறோம், காத்திருக்கிறோம் என்றுதானே அவர்கள் சொல்கிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். நான் இப்போது எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் இருந்த இடத்தில் இவர்கள் ஒரு காலத்திலே நிதி அமைச்சராக இருந்து நிதிநிலை அறிக்கையைக் கொடுத்தார்கள். அப்படி கொடுக்கின்ற நேரத்தில் சொன்னது பற்றி நான் நிதி அமைச்சராக இருந்தபோது இப்படியெல்லாம் சொன்னேன், இப்படி எல்லாம் சவால் விட்டேன், இப்படி எல்லாம் கேட்டேன் என்று அவருடைய வாதத்திற்குத் துணையாக ஏதாவது சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. ஆகவே அங்கே இருந்தால் பேச்சின் தொனி வேறு மாதிரியாக இருக்கிறது; இங்கே வந்துவிட்டதற்குப் பிறகு வேறுவிதமாகப் பேசுகிறார் என்றுதான் என்னால் எண்ண முடிகிறது.

அடுத்து மத்திய அரசினுடைய வரிக்கொள்கை பற்றிச் சொன்னார்கள். உருக்கைப் பற்றிச் சொல்கிற நேரத்திலேகூட எக்ஸைஸ் ட்யூட்டியை உயர்த்தாமல் உருக்கின் விலையை உயர்த்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். உற்பத்தி செய்கின்ற செலவு அதிகமாகின்ற நேரத்திலே விலையைக் கூட்டுகின்ற பொறுப்பு இருப்பதன் காரணத்தால்தான் மத்திய அரசு உயர்த்துகிறதே தவிர ஏதோ மத்திய அரசு என்பது நமக்கு சொந்தம் இல்லாத ஒரு அரசுபோல் மாற்றார் அரசுபோல் இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களின் மீது அவர்களுக்குக் கவனம் இல்லை என்று சொல்வது நமக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. நம்மில் இருக்கின்ற மக்கள் வாக்களித்து நமக்காக இருக்கின்ற அரசு இந்தியாவினுடைய பாதுகாப்பை ஏற்றுக் அரசுக்கு நிறைய செலவுகள் இருக்கின்றன. அவற்றைச் சரிக்கட்டுகின்ற முறையில் அரசாங்கம் இன்றைக்குப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கொண்டிருக்கிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஏப்ரல் 8

அதுமட்டுமல்ல. அவர்கள் சொல்கிற நேரத்தில் 2,500 கோடி ரூபாய் உலக வங்கிக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது என்றும் நாசிக் அச்சகத்தில் ஏதோ அச்சடிக்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் சொன்னார்கள். இது எல்லாம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்ததற்குப் பின்னாலே நடந்துவிட்ட நிகழ்ச்சிகள்போலும், அந்தப் பகுதியிலே அவர்கள் இருக்கும்போது நாடாளுமன்றத்திலே இல்லாத ஒரு நிகழ்ச்சிபோலும் அவர்கள் சொல்கிறார்கள் என்று நான் நிச்சயமாக நம்பமாட்டேன். நாட்டினுடைய பிரதம அமைச்சர் பற்றி அவர்கள் ஒன்று சொன்னார்கள். இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

இதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அவர், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரைச் சொல்லவில்லை, பிரதமரைச் சொல்கிறேன் எனறு நாசுக்காகச் சொன்னார்கள். கட்சியினுடைய தலைவராக இருக்கின்றவர்கள், தேர்தலைச் சந்திக்கிற நேரத்திலே, மக்களைச் சந்திக்கிற நேரத்திலே, மக்களுக்கு வாக்குறுதி கொடுக்கிற நேரத்திலே அப்படித்தானே சொல்ல வேண்டும். எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டாம் என்றா சொல்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலின்பொழுது—நீங்கள் என்ன எல்லாம் சொன்னீர்கள்? நாட்டு மக்கள் மறந்துவிடமாட்டார்கள். அட, அட, அட....தேர்தல் நடந்து முடிந்து ஒட்டு எண்ணுவதற்குள்ளாக, நீங்கள் பண்ணிய ஆர்ப்பாட்டம் இருக்கிறதே, எத்தனை ஊர்களிலே எப்படி எல்லாம் சொல்லி சொல்லி நீங்கள் ரசித்துக் கொண்டிருந்தீர்கள்; நாங்களும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். ஓட்டு போட்டு முடிந்து இரண்டு மூன்று நாட்களுக்குள், எண்ணி முடியவில்லை, இவர்தான் முதலமைச்சர், இவர் அந்த அமைச்சர் என்று மாலை வாங்கவில்லையா, வேட்டி போடவில்லையா? என்ன ஆர்ப்பாட்டம் எல்லாம் நீங்கள் நடத்தினீர்கள்?

(முற்பகல் 11-50)

இப்பொழுது இருக்கிற அரசு மக்களுடைய வாக்குகளைப் பெற்று இன்றைக்கு இந்தப் பொறுப்பிலே அமர்ந்திருக்கிறது. நான் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், அடுத்த முறை அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அல்லது நாடாளுமன்றத்திலே அவர் கட்சி உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்திலே இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்வார்களானால், அங்கே பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். நிச்சயமாகப் பதில் கிடைக்கும். அல்லது அதிலே, அவரது திறமையிலே அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், அவர் விடுக்கின்ற வினாக்களை எல்லாம், ஐயங்களை எல்லாம் அங்கே இருக்கிற தலைமை அமைச்சருக்கோ, நிதி அமைச்சருக்கோ, அவர்கள் எழுதுவார்களானால் நிச்சயமாகப் பதில் கிடைக்கும் என்று மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 8] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அது மட்டுமல்ல, அவர்கள் உரையை முடிக்கின்ற நேரத்திலே, மத்திய சர்க்கார் நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்கின்ற நேரத்திலே சாகசத்தின் சங்கநாதம் என்று சொன்னார்கள். அதிலே எங்களுக்கு ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. சங்கநாதம்தான் அது. முதல் சங்கநாதத்தைக் கேட்டீர்கள். போகப்போக அடுத்து வருகின்ற சங்கநாதங்கள் உங்களுக்குக் கேட்கும். அதிலே, என்.டி.சி. பற்றி எல்லாம் அவர்கள் சொன்னார்கள். தேவைகளையெல்லாம் இந்த அரசின் சார்பிலே நீங்கள் சொல்வீர்களானால் நம்முடைய மாநிலத்திற்குச் சேர வேண்டிய அதிகாரங்கள், சேர வேண்டிய நிதிகள், இவற்றைப் பெறுவதிலே இந்த அரசுக்கு நாங்கள் என்றும் துணையாக இருப்போம். இன்றைக்கு நான் பார்க்கின்றேன், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஒரு இணக்கமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், தயவு செய்து, நீங்கள் ஊடே புகுந்து உறவைக் கெடுத்து விடாதீர்கள். தமிழகத்திற்கு அதிகமான நிதி உதவி வேண்டும், வளர்ச்சித் திட்டங்கள் வேண்டும், தமிழகம் முன்னேற வேண்டுமென்பதிலே இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நாங்கள் ஒரே கருத்திலே இருக்கிறோம்; நீங்களும் எங்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டு, மாநிலத்திற்குப் பெறவேண்டிய நல்ல பணிகளை, திட்டங்களைப் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சொல்கின்ற நேரத்திலே இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழை, நடுத்தர மக்களை நேரிடையாகப் பாதிக்கின்ற புதிய வரி விதிப்புகள் எதுவுமே இல்லை என்பது நமக்குக் கொஞ்சம் நிம்மதியைக் கொடுக்கிறது. ஆனால், அதே நேரத்திலே தொலைதூர நோக்கோடு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் படுகிறதா என்று கேட்டால் என்னாலே முழுமையாக ஆம் என்று சொல்ல முடியவில்லை. வருங்கால சந்ததியினர் வளம் பெறுவதற்கு நல்ல பல திட்டங்கள் ஏதேனும் இருக்கின்றனவா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்வேன். எங்களுடைய கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பற்றி செய்தியாளர்களிடம் பேசுகின்ற நேரத்திலே 'நாட் ப்ரடக்ஷன் ஓரியன்டட்' என்று சொன்னார்கள். அதைப் போலவே வளர்ச்சித் திட்டங்களிலே இன்னும் கொஞ்சம் அக்கறை காட்டியிருப்பார்களானால், அடுத்து வருகின்ற தலைமுறை பாராட்டுகின்ற நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருப்பார்களானால், நிச்சயமாக நாங்கள் பாராட்டி இருப்போம்.

நான் ஒரு தடவை எண்ணிப் பார்க்கிறேன், 1966—67-லே காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபொழுது கொடுத்த நிதிநிலை அறிக்கையிலே தமிழகத்தினுடைய வருமானம் ரூ. 188 கோடி ஆண்டு ஒன்றுக்கு. 1975-76-லே திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மன்றத்திற்கு அளித்த நிதிநிலை அறிக்கை ரூ. 501 கோடி; ஆனால் இன்றைக்கு இந்த ஆண்டு, 1985—86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ரூ. 2,368 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதோடு சில ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த தமிழக அரசினுடைய மொத்த வருமானத்தைவிட பற்றாக்குறை இன்றைக்கு அதிகமாக இருக்கிறது என்பதை நாம் சொல்லியே ஆகவேண்டும்.

நிதிநிலை அறிக்கையிலே ஏழை மக்களைப் பாதிக்கின்ற வரிகள் இல்லாவிட்டாலும், நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திற்குக் கொடுத்ததற்குப் பின்னாலே, நம்முடைய பால் வளத்துறை அமைச்சர் அவர்கள் பால் விலையை உயர்த்தி இருக்கிறார்கள். அதைப்போல் பஸ் கட்டண உயர்வு ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே, ஏழை நடுத்தர மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150-லிருந்து ரூ. 200 வரை இந்த அறிவிப்புகளாலே பாதகம் ஏற்பட்டிருக்கிறது. சுமை அதிகமாகி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லித்தான் ஆகவேண்டும்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 20 அம்சத் திட்டத்தினைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். இறந்தும் இறவாத புகழோடு வாழ்கின்ற நம்முடைய அருமைத தலைவி இந்திரா காந்தி அவர்கள் நாட்டு மக்களுக்கு வழங்கிய 20 அம்சத் திட்டத்தினைத் தமிழக அரசு முனைப்போடு செயல்படுத்துவதை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களில் 1983-84 ஆம் ஆண்டில் 80-லிருந்து 90 சதவீதம் வரை நிறைவேற்றப்பட்டு இருப்பதாகவும், தமிழகம் இந்தியாவில் முதன்மை இடத்தில் இருப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்றும் சொல்வதைப் பார்க்கிறபோது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதே நேரத்தில் இன்னொன்றையும் தெரிவிப்பதற்கு விட்டு விட்டேன். கம்யூனிஸ்ட் கட்சி இடதுசாரி கட்சியின் தலைவர் ரமணி அவர்கள் பேசுகிறபோது, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத்தலைவர் என்னென்ன சொன்னார்களோ, அதைவிட அதிகமாக அவர்கள் பாணியிலே சொன்னார்கள். அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் எப்போதுமே மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையையோ அல்லது எந்த நடவடிக்கையையும் குறை சொல்வார்கள். தோழர் ரமணி அவர்கள் பேசுகிற போது சொன்னார்கள். 37 ஆண்டுகாலத்தில் இப்போது இது போன்ற ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருப்பது பிற்போக்குத்தனமான அறிக்கை என்று சொன்னார்கள். அப்படியானால் இதற்கு முன்னாலே வந்த அறிக்கைகளை அவர் மறைமுகமாக வரவேற்கிறார் என்று எடுத்துக் கொள்கிறேன்.



அதே நேரத்தில் மத்திய பட்ஜெட்டைப் பற்றி சொல்கிறபோது, பணக்காரர்களுக்கு வரிச்சலுகைகளைச் செய்து விட்டதாகவும் அல்லது ஏழை மக்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகவும் கருத்து வருகிறது. இந்த நேரத்தில் பல்கிவாலா அவர்கள் கருத்து சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். மத்திய அரசு கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கை ஏழ்மைக்கும், நேர்மைக்கும், திறமைக்கும், சமூக நலத்திற்கும் ஏற்றதாக அமைந்திருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை அந்த அளவிற்கு வரவேற்று இருக்கிறார்கள். தொழில் துறையில் பல்வேறு முன்னேற்றங்களைப் பெறுவதற்கு இந்தப் பட்ஜெட் ஊக்கம் தருவதாக அமைந்திருக்கிறது. நேர்மைக்கு ஊக்கம் தருவதாக அமைந்திருக்கிறது இந்த பட்ஜெட் என்று அவர்கள் சொல்லியிருப்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய 1985—86ஆம் ஆண்டின் வரவு—செலவுத் திட்டத்தில் 1102 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, ஏற்கனவே பட்ஜெட் பற்றாக்குறை 264 கோடி இருக்க மேலும் 100 கோடி ரூபாய்க்கு அடிஷனல் புரவிஷன் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 100 கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டங்கள் இருக்கிறதா, சமூக நலத்திட்டங்கள் எதுவும் இருக்கிறதா என்று பார்த்தால் 100 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் எதுவும் இல்லை. ஒருவேளை இந்த அரசாங்கம் நடப்பு நிதியாண்டில் இன்ப்ளேஷன் என்று சொல்லக்கூடிய பணவீக்கம் 10 சதவீதம் இருக்குமென்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்திருக்கிறார்களோ என்று நாங்கள் எண்ண வேண்டியிருக்கிறது. நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் விளக்கம் தருவார்கள் என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக பணத்தை அடிப்படையாக வைத்துத்தான் திட்டங்கள் தீட்டுவதைப் பார்க்கிறேன். அதாவது பினான்ஷியல் பிளானிங். அந்த முறையில் இல்லாமல் பிஸ்கல் பிளானிங் என்ற முறையில் ஒரு மாற்றம் இருக்க வேண்டும். இந்த ஆண்டில் இவ்வளவு இலக்கை நாம் அடைகிறோம். இவ்வளவு மின்சாரம் பெறுகிறோம்: இத்தனை தொழிற்சாலைகள் மூலமாக இவ்வளவு உற்பத்தியைப் பெறுகிறோம் என்று இருக்குமானால் அது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். அது இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லையென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய அரசு ஒதுக்கப்பட்ட பல்வேறு இனங்களில் பணத்தை செலவழிக்காமல் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின்

துணைத்தலைவர் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன், ரிப்போர்ட் ஆப் தி காம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் என்பதில் 1982—83ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் 45 இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் 240.60 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை என்ற கருத்தை அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், தொழு நோய் கட்டுப்படுத்த மத்திய அரசாங்கம் கொடுத்த 47 கோடியே 53 லட்சத்தில் 42.14 லட்சம் பயன்படுத்தாமல் திரும்ப கொடுக்கப்பட்டிருப்பதாக, சரண்டர் செய்யப்பட்டிருப்பதாக அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதையெல்லாம்விட டானிடா புராஜக்ட்டிலே ஒதுக்கப்பட்ட 284.53 லட்சத்தில் 267.56 லட்சம் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு இனங்களில் ‘சர்வீஸ் ட்ரெயினிங் அண்ட் மேன் பவர் டெவலப்மெண்ட், என்பதில் டானிடாவில் அந்தப் பணம் திரும்பகொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மக்களுடைய வளவாழ்விற்கு அடிப்படையாக இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில்கூட ஒதுக்கப்பட்ட நிதி 111.54 கோடியில் முழுமையாக அந்தப் பணம் திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியவில்லை, சென்னை, குடிநீர் வழங்கல் என்ற இனத்தில் 250 லட்சம் ரூபாய் ஒதுக்கியும் கூட அந்த 250 லட்சமும் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிறது. மலேரியா தடுப்புத் திட்டத்திலே மத்திய அரசு கொடுத்த பணம் 38 லட்சம் ரூபாயில் 25.44 லட்சம் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு இனங்களில் நம்முடைய அரசிற்கு மத்திய அரசு கொடுத்திருக்கிற பணத்தை செலவு செய்யாமல் திரும்ப கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் நம்முடைய மாநில மக்களின் வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு மாநில அரசின்பால் அக்கறை கொண்டு, தமிழக மக்கள்மீது அக்கறை கொண்டு ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களுக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு கொடுத்து வருகிறார்கள். அவைகளை முறையாக பயன்படுத்த வேண்டும். அவைகளை முறையாக செலவழிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மாநில சுயாட்சி பற்றி இந்த மாமன்றத்தில் பல்வேறு காலக்கட்டங்களில் நாம் பேசியிருக்கிறோம். மாநிலங்களின் அதிகாரங்களும், நிதியாதாரங்களும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதாகவும், மாநில அரசு மத்திய அரசினுடைய உதவிகளை பெறும் அளவிற்கு வாய்ப்பை எதிர்பார்க்க வேண்டிய அவசிய நிலை ஏற்படுகிறது என்றும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.





(நண்பகல் 12-00)

தன்னாட்சி உரிமைகளும், அதிகாரங்களும், நிதிப்பங்கீடுகளும் மாநிலங்களுக்கு விரைவில் அளிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அதிகாரங்களோடு நிதிப்பிரச்சனைப் போன்றவை இணைக்கப்பட்டது இன்று நேற்று அல்ல 30, 35 ஆண்டுகளுக்கு மேலாகிறது, என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். வளர்ந்து வரும் தேவைக்கேற்ப என்னஎன்ன அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்கலாம் என்பது பற்றி ஆராயத்தான் சர்க்காரியா கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இதே அதிகாரத்தை வைத்துக்கொண்டுதான், காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, தமிழ் நாட்டில் பல்வேறு சாதனைகளை எட்ட முடிந்தது. இன்றைக்குக் கூட காங்கிரஸ் ஆட்சி இருக்கிற பல மாநிலங்களில் பல சாதனைகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் மத்திய அரசின் தயவை எதிர்பார்க்கிற நாம் உள்ளாட்சி மன்றங்களுக்கு கூடுதல் அதிகாரம் கொடுப்பது பற்றி 2, 3 நாட்களுக்கு முன்னால் இங்கே பேசியிருக்கிறோம். மத்திய அரசால் அமைக்கப்பட்டிருக்கிற சர்க்காரியா கமிஷன் மத்திய மாநில உறவு பற்றி மட்டுமல்ல, உள்ளாட்சிமன்ற நிதி வாயில்கள் பற்றியும் கருத்து கூறும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதுபற்றியும் பரிசீலிப்பதால் நிச்சயமாக நல்லமுறையில் நாட்டு மக்களுக்கு பலன் கிடைக்கும். உள்ளாட்சி மன்றங்கள் நல்லமுறையில் செயல்பட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளாட்சிமன்றங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிற அதே நேரத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் செப்டம்பர் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே தேர்தலை மீண்டும் ஒத்திபோடுகின்ற நிலைமை இல்லாமல் செப்டம்பர் மாதத்தில் நிச்சயமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடத்தாமல் இனியும் ஒத்திப்போடுவது எந்த வகையிலும் நியாயம் இல்லை. உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்தாத காரணத்தால் சட்டமன்றத்திற்கும் அரசுக்கும் அவப்பெயர் வருகிறது. பொதுத் தேர்தலை நடத்துவதற்கு முன்னால் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்தியிருந்தால் நம்முடைய அணி இன்னும் பல இடங்களில் வெற்றி பெற்றிருக்கும் என்பது எங்களுடைய கருத்து. எனவே, உள்ளாட்சித் தேர்தலை விரைவிலே நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

இலங்கைப் பிரச்சனைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சனைக்கு விரைவில் நன்முறையில் தீர்வு

காண மாநில அரசு, மத்திய அரசை வற்புறுத்துவதன் மூலம் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துவருகிறது என்று மிகப்பொறுப்போடு சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு தலையிட்டு இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை நிறுத்த முன்வரும் என்று மாநில அரசு நம்புகிறது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு அனைத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு எடுத்து வருகிறது என்று தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.

இலங்கை வாழ் தமிழர்களுக்கு அளிக்கப்படும் இன்னல்கள் குறித்து பல்வேறு காலகட்டங்களில் எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கிறோம். தமிழர்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தின் வெறிச்செயல் உள்ளபடியே சகித்துக்கொள்ள முடியாததாக இருக்கிறது, அவர்களுடைய வெறியாட்டத்தைக் கேட்டு நெஞ்சம் குமுறுகிறது; நாடி நரம்புகள் முறுக்கேறி வெடிக்கின்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்றால் அதை யாரும் அனுமதிக்க மாட்டார்கள். பாரதப் பிரதமர் அவர்களும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அனுமதிக்க மாட்டோம் ; இப்படிப்பட்ட வெறியாட்டம் நிறுத்தப்பட வேண்டுமென்று Front line பத்திரிகைக்கு பேட்டியளிக்கும்போது கூறியிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்ற ஒரே கருத்தில்தான் அனைவரும் இருக்கிறோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நமக்கும் இதிலே சிறிது கருத்து வேறுபாடு இருக்கிறது. இந்தப் பிரச்சனையில் அக்கறை கொண்டிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களுக்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ற முறையில் நான் சொல்லவில்லை: இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நம்பூதிரிபாட் அவர்கள் கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன். நிலைமையை மேலும் மோசமாகச் செய்கின்ற கருத்துக்களை தெரிவிக்காமல் இருக்க வேண்டுமென்று தமிழ் நாட்டுக்காரர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். தங்கள் கருத்துக்களை மத்திய அரசுக்கு எழுதி அனுப்பாமல் வெளியிலே சொல்வது சரியல்ல என்று இ.எம்.எஸ், நம்பூதிரிபாட் அவர்கள் திருச்சியில் தெரிவித்ததாக தினமணி பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

இலங்கையில் இருக்கிற தமிழர்கள் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும், தமிழர்கள் காக்கப்பட வேண்டும், அதை மத்திய அரசு செய்யும் என்று திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் நான் இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினரைக் கேட்டுக்கொள்வது நம்முடைய கருத்துக்கள், ஆலோசனைகள் இலங்கைத் தமிழர் நலனுக்குத் துணையாக இருக்க வேண்டுமே தவிர நம்முடைய பேச்சினால் அல்லல்படும் இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான்.



இன்னொன்றையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்துக்கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி, இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை பற்றி பேசியிருக்கிறார்கள். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும், இந்தியப் பிரதமர் அவர்களையும் ஏனைய மத்திய அமைச்சர்களையும் கலந்து பேச, தூதுக் குழுவாகச் செல்லயிருப்பதாக அறிகிறேன். ஆகவே, இந்த நேரத்தில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இதற்கு துணையாக இருந்து, முதலமைச்சர் கரத்தை வலுப்படுத்தி, மாநில அரசு தூதுக்குழுவில் பங்குபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கூட குறிப்பாகவும், சிறப்பாகவும், இந்த மன்றத்திலே தமிழகத்தினுடைய முதலமைச்சராகவும், 5, 6 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே இருந்தவரும், பிறகு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவருமான, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தக் குழுவிலே சேர்ந்து டெல்லிக்கு போகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கேயிருந்து அவர்கள் கருத்துக்களைச் சொல்வதைவிட, இந்த தூதுக் குழுவிலே அங்கம் வகித்து டெல்லி போய்ச் சொல்வாரானால், உரிய இடத்திலே கருத்துக்களைச் சொல்வாரானால், அதற்கான பதில் கிடைக்கும்.
இன்னும் முனைப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதிலே நாம் எல்லோரும் ஒரே அணியிலே இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அங்கேபோய் பேசினால். அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே இலங்கைப் பிரச்சனைக்கு ஏற்பட்ட நிலை பற்றியும், இன்றுள்ள நிலை பற்றியும் அவர்கள் எடுத்துச்சொல்வார்களானால், அங்கே பதில் கிடைக்கும். மத்திய அரசும் தக்க நடவடிக்கையை எடுத்துக்கொண்டு இருக்கிறது, ஆனால் எடுக்கின்ற நடவடிக்கைகளைச் சொல்ல முடியாது. ராஜ தந்திரம் என்ற முறையில் மத்திய அரசாங்கம் எந்த நடவடிக்கை எடுத்தாலும், அதைச் சொல்ல முடியாது, இந்தப் பிரச்சனையை மக்கள் முன்னாலே வைத்து, மக்கள் மத்தியிலே தங்களுடைய செல்வாக்கை அதிகரிக்கவேண்டும் என்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருப்பதாக நாங்சள் கருதுகிறோம். ஆகவே தி.மு. கழகத்தை நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழகத்தை இந்தப் பிரச்சனையை முன்னாலே வைத்து, தயவுசெய்து அமளிக்காடாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக்சொள்கிறேன். மாணவர்களைத் தூண்டிவிடுவதும் பிரிவினை உணர்ச்சி மனப்பான்மையை மறைவாகச் சுட்டுவதும் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு ஆகாது. எனவே அந்த வழியிலே தி.மு.சழகம் செல்லவேண்டாம் என்று சொல்லி, மத்திய அரசும், மாநில அரசும் எடுக்கின்ற முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய மாநில அரசுகள் இந்தப் பிரச்சனையில் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றுதான் மக்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள். தமிழகத்திலே அண்மையில் தடைபெற்ற தேர்தலிலே

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஏப்ரல் 8

தாங்கள் போட்டியிட்ட அணியில், அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம், 133 இடங்களையும், இந்திய தேசிய காங்கிரஸ் 63 இடங்களையும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் 2 இடங்களையும் பெற்று இருக்கிறது. ஆகவே 234 இடங்களில் இந்த அணியினர் 198 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அரசும், மத்திய அரசும் இலங்கைத் தமிழர் பிரச்சனையிலே உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையில்தான் வாக்களித்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். தி.மு.கழகம் இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் எனக்கு இருக்கிற வருத்தம் 62 பக்கங்களுக்கு மேலாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே படித்திருக்கிறார்கள். தன்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒரு பக்கத்திலேகூட வறட்சியைப் பற்றிச் சொல்லவில்லை என்பது எனக்கு ஆதங்கமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் வறட்சியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், எந்த இடத்திலே தெரியுமா? '1984–85ஆம் ஆண்டிலே தென்மேற்கு பருவமழை போதுமான அளவில் பெய்தபோதிலும், வடகிழக்கு பருவமழை போதிய அளவில் இல்லை, எனினும் பல இடர்பாடுகள் இருந்தபோதிலும்..' என்று சொல்லிவிட்டு, வேளாண்மைப் பெருக்கத்திற்கு நான் இன்னும் போதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, இந்த அரசாங்கம் வறட்சியைப்பற்றி குறிப்பிடவில்லை என்பதை நான் சொல்லியாக வேண்டும். இன்றைக்கு தமிழகம் கடுமையாக வறட்சியை எதிர்நோக்கி இருக்கிறது. என்றால் குடிநீர் பஞ்சம் தானாக வந்துவிடுகிறது. குடிநீர் பற்றாக்குறை இப்போதே மோசமாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னாலே, இந்த மன்றத்திலே ஆளுநர் உரைக்குப் பின்னாலே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். இப்போவே மோசமாக இருக்கிறது என்று சொன்னால், வருகின்ற காலங்களில் இன்னும் கடுமையாக இருக்கும். காரணம் கோடைக்காலமாக இருப்பதால், எனவே குடிநீர்ப் பிரச்சனை இன்னும் மிக மோசமாக இருக்கும், நான் இன்னும் சொல்வேன். கைப்பம்புகளைப் போட்டு இருக்கிறார்கள் ஊராட்சி ஒன்றியங்களில். ஒரு ஒன்றியத்திலே கணக்கு எடுக்கச்சொன்னோம். மொத்தம் இருக்கின்ற கைப்பம்புகளிலே பாதிக்குமேலே பழுதடைந்து இருக்கின்றன. இந்த அரசாங்கத்திற்கு வருகின்ற கணக்குகள் தவறான கணக்குகள். ஆகவே இப்போது நிலைமை மோசமாக இருப்பதால், வருகின்ற காலங்களில் குடிநீர் பிரச்னை சமாளிக்கின்ற வகையில், இப்போது இருக்கின்ற கைப்பம்புகளை விசைப்பம்புகளை சீர் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 8] [திரு. என். எஸ்.வி. சித்தன்]

அதேநேரத்தில் ஆண்டுக்காண்டு வறட்சி வந்து கொண்டு இருக்கிறது. தமிழகத்திலே ஏதாவது ஒரு மாவட்டத்திலே வந்துகொண்டு இருக்கிறது. வெள்ளம் வருகிறதோ, இல்லையோ வறட்சி வந்துகொண்டு இருக்கிறது. அப்படி என்று சொன்னால், "மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்" என்று சொல்வார்கள், அதைப்போல, இதற்காக ஒரு பேஸ்டு புரோகிராம் என்ற வகையில் ஏன் திட்டம் தீட்டக்கூடாது என்று நான் கேட்கிறேன். நேச்சுரல் கலாமிட்டிஸ்க்கு ஒரு ஹைபவர் கமிட்டி போட்டு ஒரு நிரந்தரமான தீர்வுகாண்கின்ற வகையில்: ஒரு தொலைதூர நோக்கத்தில், ஏன் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற வினாவை என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. அந்த முறையில் இந்த அரசாங்கம் செயல்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

குடிநீர் வடிகால் வாரியத்திலே இந்த ஆழ்துளைக் கிணறுகளைக் போடக்கூடிய ரிக்குள் இருக்கின்றன. போதுமான அளவிற்கு இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால் அந்த ரிக்குகள் எல்லாம் சரியாக பராமரிக்கப் படாமல் இருக்கின்ற காரணத்தால், அவைகள் ஆண்டுதோறும் பயன்படுத்தப் முடியவில்லை. எனவே வறட்சி வருகின்ற காலத்திலே தனியார்களுக்கு இந்த ஆழ்குழாய்களைப் போடுகின்ற அந்த உரிமை பொறுப்பு வழங்கப்படுகிறது, என்று கேள்விப்படுகிறேன். அந்த மாதிரி இல்லாமல், நம்முடைய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே, தேவைப்படுமானால், ரிக்குகளை சரியான முறையில் வாங்கி, ஆண்டுதோறும் அந்தப் பணியைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு வாரியத்தின் நிர்வாக இயக்குநர் பொறியாளராக இல்லை என்றும், தனியார் நிறுவனங்களில் பணம் கொடுத்து ஆலோசனைகளைப் பெறுவதாகச் சொல்கிறார்கள். உதாரணமாக கிரிலோஸ்கர் கன்சல்டன்சி, பார்கூசான் கன்சல்டன்சி, டாடா கன்சல்டன்சி என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு பல லட்சம் ரூபாயை கொடுத்து நாம் ஆலோசனைகளை வாங்குவோமேயானால், அவர்கள் அவர்களுடைய நிறுவனத்தில் தயாராகிற கருவிகளை பயன்படுத்துவதற்குத்தான் ஆலோசனைகளை சொல்வார்கள். ஆகவே இந்த அரசாங்கம் அதை எண்ணிப் பார்த்து வருங்காலத்தில் அதைத் தடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நான் இன்னும் ஒன்றைக் கேள்விப் படுகிறேன். வாரியம் தோன்றியது முதல் இன்று வரை, ஆயுள் காப்பீட்டுக் கழகம்—அது இந்திய பேரரசின் நிறுவனம்—யூனிசெப், டேனிடா போன்ற தமிழக அரசின் நிறுவனங்களுக்கு உரிய கணக்குகளே இல்லையாம். கையிருப்புப் பொருள்களுக்கு உரிய சேமிப்பு கிடங்குகள் இல்லை என்றும், இருப்பு கணக்குகளும் சரியாக இல்லை என்றும் அவர்கள்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஏப்ரல் 8

சொல்லுகிறார்கள். 1984-85 ஆம் ஆண்டின் குறியீட்டிலே 25 சதவீதத்தைக் கூட எட்ட முடியவில்லை என்றும் எனக்கு தகவல்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்பார் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக மின் உற்பத்தியை பொறுத்த அளவிலே தமிழகம் இன்றைக்கும் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. 1967-க்கு முன்னாலே மின் உற்பத்தியிலே இருந்த தீவிரம் குறைக்கப்பட்ட காரணத்தாலேயும், தகுந்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேயும் தமிழகம் மின் உற்பத்தியில் இந்த நிலையில் இருக்கிறது. ஆனால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதி அறிக்கையிலே சொல்கிற நோக்கிலே 1985-86 ஆம் ஆண்டிலே நிதி ஒதுக்கீட்டில், 237 கோடியிலிருந்து 326 கோடியாக உயர்த்தக் கருதப்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றியும் நான் கேள்விபட்ட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், நம்முடைய மின்சார வாரியத்திற்கு அதன் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக, அண்மைக் காலத்திலே செலவிடப்படவில்லை என்று.

1983-84 ஆம் ஆண்டு பைனல் மாடிஃபைடு அப்பிரோப்பிரியேஷனிலேக் கூட சில விவரங்களை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அது சரியில்லை என்றால், தெரிவிப்பார்களேயானால், அல்லது அதற்கு விளக்கம் கொடுப்பார்களேயானால், நான் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே காடம்பாறை நீர்த்தேக்கத் திட்டத்திற்காக 28 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அது செலவிடும்போது 17½ கோடியாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். குந்தா மின் திட்டத்தில் கூட 2 கோடியே 83 லட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, வெறும் 83 லட்சத்து 98 ஆயிரமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பார்ஸன் ஸ்கீம் மின் திட்டத்தில் கூட 2 கோடி ரூபாய் ஒதுக்கியதில் வெறும் 5 ஆயிரம் தான் செலவிடப்பட்டது என்று சொல்லுகிறார்சள். மைக்ரோ அலைகளைத் தயாரிக்கும், பைகாரா மற்றும் லோயர் பவானி திட்டத்திற்கென்று, 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அதிலே வெறும் 40 ஆயிரம்தான் செலவழிக்கப்பட்டதாக எனக்கு விவரங்கள் வந்திருக்கின்றன.

இதுபோன்று பல்வேறு இடங்களிலே இன்னும் குறிப்பாக மேட்டூர் தெர்மல் ஸ்கீம் கூட 38 கோடி ரூபாயை ஒதுக்கி அதில் 32 கோடி ரூபாயைத்தான் செலவழித்திருக்கிறது என்றும்; அது போல மேட்டூர் எக்ஸ்டென்ஷன் ஸ்கீம், கேஸ் டர்பைன் போன்ற பணிகளுக்கு 18 கோடி ரூபாயை ஒதுக்கி, 74 ஆயிரம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது என்கிற அளவுக்கு விவரங்களை எனக்கு கொடுத்திருக்கிறார்கள். இன்வெஸ்டிகேஷன் மற்றும் ரிசர்ச் என்று சொல்லப்படுகிற அதிலே கூட 1 கோடியே 63 லட்சம் ரூபாய்



1985 ஏப்ரல் 8] [திரு. என். எஸ்.வி. சித்தன்]

ஒதுக்கப்பட்டு, ஒரு கோடி ரூபாயைத்தான் செலவிட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆக 224 கோடி ஒதுக்கியதில் 145 கோடி ரூபாய்தான் இந்த இனங்களுக்காக செலவிடப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் எனக்கு வந்திருக்கின்றன....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பொதுவாக நிதி பற்றாக்குறை. அதனால்தான் அந்த திட்டங்களுக்கு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருக்கிற நிதியை வைத்து, நமக்கு ஏராளமாக மின் உற்பத்தி தரக்கூடிய ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்கிற அளவிலே மேட்டூர் புனல் மின் திட்டத்திற்கு, அவ்வளவு நிதியும் ஒதுக்கப்பட்டு அந்த திட்டத்தில் செலவிடப்பட்டு வருகிறது. சான்றாக காடம்பாறை நீரேற்று மின் திட்டம் செயல்படுத்தப்படுவதன் மூலமாக நமக்கு மின் உற்பத்தி ஒன்றும் வராது. இந்த பீக் அவர்ஸுக்கு வேண்டுமானால் பயன்படுத்தலாமே தவிர, அவெய்லபிலிட்டி வராது. ஆகவே இருந்த நிதியை வைத்து மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு, குறிப்பிடத்தக்க அளவிற்கு செலவு செய்திருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பற்றாக்குறையை வைத்து, இந்த இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு இனத்திற்கு, அதாவது மேட்டூர் தெர்மல் ஸ்டேஷனுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். மின்சாரத்திற்கு பற்றாக்குறை இருக்கிற நேரத்திலே, அரசாங்கம் வேறு இனங்களிலிருந்தாவது எடுத்து இதற்கு ஒதுக்கியிருக்க வேண்டுமே தவிர, பணப்பற்றாக் குறையை காரணம் காட்டி, அதை வேறு இடத்திற்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வது சரியா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே நிதி வேண்டுமானால் வேறு இடத்திலேயிருந்து அதிகமாக எடுத்திருக்க வேண்டும். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் நாங்கள் ஒதுக்கியது இவ்வளவுதான், ஆனால் தமிழகத்திலே மின்சாரத்தை அதிகப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தை கருத்திலே கொண்டு இத்தனை கோடி ரூபாயை அதிகமாகச் செலவழித்திருக்கிறோம் என்று சொல்லியிருப்பார்களேயானால், அவர்களை நான் பாராட்டுவேன். என்னுடைய ஆதங்கம் எல்லாம் ஒதுக்கப்பட்ட நிதிகளும் குறைக்கப்பட்டிருக்கிறது. முழுமையாக அவைகள் அந்த திட்டங்களுக்கு செலவிடப்படவில்லை என்பது தான்.

அந்த முறையிலே பார்க்கிறபோது, வருகிற காலத்தில் அதிகமாக நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பெரும் தலைவர் காமராசர் தமிழக முதலமைச்சராக இருந்த காலத்திலே தனியார்களுக்கு மின்சாரம் தயாரிக்கும் அனுமதியைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை, தம்முடைய கருத்திலே கொண்டிருந்தார்கள். சர்வதேச தொழிலதிபராக இருந்த திரு. ஏ. ஆர். முதலியார் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழுவை அமைத்து அதன் மூலமாக உற்பத்தி

செய்கிற மின்சாரத்திலே 75 சதவீதம் தனியார்களுக்கும், 25 சதவீதம் அரசுக்கும் கொடுக்க வேண்டுமென்ற அளவிலேயும், அந்த திட்டங்களை அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ், கண்டிரோலின் கீழ் செய்யவேண்டுமென்றும் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டதாக நான் அறிகிறேன்.

அது காலாகாலத்தில் செயல்படுத்தப்பட்டிருக்குமேயானால் இன்றைக்கு தமிழகத்தில் இந்த அளவுக்கு மின்சாரப் பற்றாக் குறை ஏற்பட்டு இருக்காது என்று நான் சொல்ல விரும்புகிறேன். அதே நேரத்தில் மின் வாரியத்திற்கு வரியாக, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து 8 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள், இன்றைக்கு அந்த 8 கோடி ரூபாயும் 11 கோடி ரூபாயாக, வட்டி வரி எல்லாம் சேர்ந்து வந்திருக்கும். இவ்வளவு ரூபாயை இன்னமும் அரசாங்கம் பாக்கியாக வைத்திருப்பது முறையாக இல்லை. நாம் சாதாரண விவசாயப் பெரு மக்களை, நடுத்தர மக்களை எல்லாம் வருத்தி வரி வசூலிக்கக்கூடிய நேரத்தில் இவ்வளவு கோடி ரூபாயை விட்டு வைத்திருப்பது முறையாக இருக்காது. அதை பலமுறை நானே இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன். அரசாங்கம் அந்த பாக்கியை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களை பொறுத்தளவிலே எதிர்காலத் திட்டங்களை மனதிலே கொண்டு தொலைதூர நோக்கோடு திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. நம்முடைய நிதி அமைச்சர் தன்னுடைய அறிக்கையிலே தொழிலைப்பற்றி சொல்லுகின்ற நேரத்திலே ரூ. 108 கோடி செலவிலே 300 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அடிப்படையில் லைனியர் ஆல்கையல் பென்ஜின் என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும், ரூ. 20.85 கோடி 540 பேர்களுக்கு நிட்ரோ கிளைசிரின் கொண்ட வெடி மருந்து தயாரிக்கும் திட்டம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன். ஏறக்குறைய ரூ. 130 கோடி செலவில் 840 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற திட்டங்கள்தான் சொல்ல முடிகிறது. இதே பணத்தை செலவழித்து தொழிலைப் பெருக்குகின்ற, தொழில் வளர்ச்சி அடைகின்ற பல திட்டங்களை அரசாங்கம் உருவாக்கலாமே. நம்முடைய திட்டங்கள் கூட்டுத் துறையிலே தயாரிக்கப்படுகின்ற திட்டங்கள். நாம் பாதி அவர்கள் பாதி. பணம் நாம் பாதி போடுகிறோம். நிர்வாகம் அவர்கள் கையிலே இருக்கும். நிர்வாகத்தை அவர்கள் கையிலே கொடுத்தால் அவர்கள் லாபமா காட்டப் போகிறார்கள். அவர்களிடம் அத்தனை கண்ட்ரோலும் இருக்கும். ஆக வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட புதியத் திட்டங்களைத் துவங்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய தொழில் அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு





மத்திய அரசாங்கத்திடம் நல்ல உறவு இருப்பதாகச் சொல்கிறார்கள். இனிமேலாவது தொழில் துறையில் அதிகமாக அக்கரை காட்டுகின்ற விதத்தில் நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையில் புதியத் திட்டங்கள் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். 42 ஆம் பக்கத்திலே நிதியமைச்சர் சொல்கிறார்கள். அரசு ரப்பர் மேம்பாட்டுக் கழகம் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் அமைக்கப்பட்டது. மூன்று மாத காலத்திற்குள் 2 கோடி ரூபாய் லாபம் ஈட்டப்பட்டதாகச் சொல்கிறார். இந்த நிறுவனம் ரப்பரை உற்பத்தி செய்து விற்கின்றது. பல காலங்களில் இந்தப் பக்கத்திலே இருந்து அல்ல, அந்தப் பக்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில்தான் ரப்பர் விளைகின்ற காரணத்தினால் பெரிய தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று. ஒரு தொழிற்சாலையும் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டதாக அறிகிறேன். உற்பத்தி தொடங்கியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. 4,785 எக்டேரில் இந்த ஆண்டிலே ரப்பர் தொழிலுக்கு அரசாங்கம் கையகப்படுத்தியதாகச் சொல்கிறார்கள். குமரி மாவட்டத்தில் ரப்பரை அடிபபடையாகக் கொண்டு புதிய பல திட்டங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். அரசுத் துறையிலே அரசுக்குச் சொந்தமான காடுகளிலிருந்து வருகின்ற ரப்பரை எல்லாம், அரசு தொழிற்சாலை ஏற்று தமிழகத்தின் வளர்ச்சியை பெருக்குகின்ற முயற்சியை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

சமையல் எண்ணெயினுடைய வரிப் பிரச்சனையைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இது எல்லாத் தரப்பிலும் பயன்படுத்துகின்ற எடிபில் ஆயில் என்று இருப்பதால் தமிழகத்திலே பலமுனை வரி வீதத்தில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் மஸ்டர் ஆயிலுக்கு வரி இல்லை. இங்கு 10% வரி என்று சொல்வது, லக்சுரி கூட்ஸ்—பணக்காரர்கள் உபயோகிக்கின்ற விலை உயர்ந்த பொருள்களுக்குப் போடப்படுகின்ற வரியைப் போல் இந்த பல முனை வரி இருக்கிறது. இது சில்லரை வியாபாரிகளுக்கும், உபயோகப்படுத்துகின்றவர்களுக்கும் தொல்லையாக இருப்பதால் அரசாங்கம் இந்த வரியை ரத்துச் செய்வது பொறுத்தமாக இருக்கும். 1—10—84 ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்படும், இரால், நண்டு, தவளை போன்ற பொருள்களுக்கு அரசாங்கம் கொள்முதல் வரி விதித்து இருக்கிறது. மத்திய அரசாங்கமே 1—4—76-ம் ஆண்டு முதல் வரி விலக்கு அளித்த வேளையிலே, உலக சந்தையிலே நமது மீனவர்கள் போட்டி போடுகின்ற அளவுக்கு போட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது 5% பல முனை வரி வெல்லத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. வெல்லத்தைப் பற்றி சொல்ல வேண்டுமானால் ஒரு பெரிய சரித்திரத்தையே சொல்லவேண்டி

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஏப்ரல் 8

இருக்கிறது. இந்த வெல்லம் மட்டும் எந்த அரசாங்கம் ஆட்சியிலே இருந்தாலும் கூட அவர்கள் பார்வையிலிருந்து தப்புவது இல்லை. வரி விலக்கு, வருகிறது. ஒரு முனை வரி வருகிறது, வரி உயர்த்தப்படுகிறது. பல முனை வரியாக உயர்த்தப்படுகிறது. இது நம்முடைய தமிழகத்தில் ஒரு குடிசைத் தொழிலாக இருக்கின்ற ஒன்று. முதன் முதலாக 1956 ஆம் ஆண்டு இதற்கு வரி விதிக்கப்பட்டது. பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது 1958 ஆம் ஆண்டு இதற்கு பூரண வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

1—1—68 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு பல முனை வரியிலே கொண்டுவரப்பட்டது. 18—10—69-ல் 5% ஒரு முனை வரியாக மீண்டும் மாற்றப்பட்டது. 18—8—77-ல் மீண்டும் 3% பல முனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது. 2—5—82-லே 5% பல முனை வரியாக உயர்த்தப்பட்டு இருப்பதால் வெல்லம் அழுகும் பொருளாக இருப்பதால் 15 நாட்களுக்குள் அது கெட்டுப் போகக்கூடிய காரணத்தினாலே இந்த பல முனை வரியினை அரசாங்கம் ஒரு முனை வரியாக மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

நாட்டிலே உற்பத்தியாகிற மொத்த வெல்லத்திலே 40% உ.பி.யிலே உற்பத்தியாகிறது. அங்கே அதற்கு வரி கிடையாது. மராட்டியத்திலே 14% உற்பத்தியாகிறது, அங்கே அதற்கு வரியில்லை, மேற்கு வங்கம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலே அதற்கு வரியில்லை. கர்நாடகத்திலே அதற்கு 2% தான் வரி, ஆந்திரத்திலே 2% வரி, ஆனால் தமிழகத்திலே தான் அதற்கு 5% வரியாக இருக்கிறது. சாதாரண மக்கள் பயன்படுத்துகிற இதனுடைய விலையேற்றத்தின் காரணமாக அவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. பலமுனையாக்கப்பட்டவற்றிற்கு வரி குறைந்து இருக்கிறது. எனவே பரீட்சார்த்தமாக ஒரு ஆண்டிற்கு, இதற்கு ஒருமுனை வரியாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி மாநிலத்திலே பலமுனை வரிகளை வணிகர்களுக்கு ஒழிக்கப்பட்டு ஒருமுனை வரியாக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கமும் பல முனை வரிகளை ஒழித்துவிட்டு ஒருமுனை வரியாக்கவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்கிறது. ஆகவே பல பொருட்களுக்கு பலமுனை வரிகளை எடுத்துவிட்டு ஒருமுனை வரியாக விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயத்தை நான் சொல்லாமல் இருக்க முடியாது. சென்னையிலே குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. காங்கிரஸ் கட்சிக்காரர்களின் கொள்கை குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற வகையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 8] [திரு. என். எஸ். வி. சித்தன்]

குதிரைப் பந்தயத்திலே பல்வேறு மோசடிகள் நடைபெறுகின்றன. பல கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வந்தும்கூட அந்த கிளப் நட்டத்தில் ஓடுகிறது என்று சொல்கிறார்கள். அந்த வருமானத்திலிருந்து அரசாங்கத்திற்கு ஒரு அம்மன் காசுகூட வருவது கிடையாது. அன்றைய தினம் பேசிய காந்தி காமராஜ் தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள். பக்கத்திலே இருக்கிற கர்நாடக மாநிலத்திலே 3 லட்ச ரூபாய் வரி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் தமிழகத்திலே வரியே கிடையாது. குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய லட்சியம். ஆனால் அதுவரையில் அதற்கு ஒரு தடங்கல் இருக்கிறபோது அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பணத்தை அங்கே இருக்கிறவர்கள் கூட்டாகப் பங்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். எந்தத் தகுதியும் இல்லாத ஒரு அதிகாரிக்கு அங்கே 2½ லட்ச ரூபாய் சம்பளம் தரப்படுகிறது என்றால்—எனக்குத் தெரிந்த வரையில் இந்தியக் குடியரசுத் தலைவருக்குக்கூட அவ்வளவு சம்பளம் இல்லை—அங்கேயுள்ள பெரிய அதிகாரிகள் 4, 5 பேர்களுக்கு 1 லட்சம் ரூபாய் என்று சம்பளம் தருகிற நிலைமை இருக்கிறது. இந்தியாவிலே உள்ள எந்தப் பகுதியிலாவது ரேஸ் நடந்தாலும்கூட அங்கே இருக்கிறவர்களுக்கு படி கிடைக்கிறது. பள்ளிக்கூடம் கூட அந்த அளவுக்கு நாட்கள் நடப்பதில்லை, வருடத்திற்கு 250 நாட்கள் அவர்களுக்குப் படி கொடுக்கப்படுகிறது. குதிரைப் பந்தயத்திலே மோசடிகள் நடைபெறுகின்றன. ஆகவே அரசாங்கம் ஒரு குழுவை அமைத்து சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக இருந்தாலும் பரவாயில்லை, அங்கே என்ன நடக்கிறது என்பதை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை கொடுக்குமாறு செய்யவேண்டும். ஆகவே ஏதாவது ஒரு அறிவிப்பை நிதியமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இந்தியாவிலேயே மகத்தான சாதனை புரிந்தவர்களில் ஒருவர் எம். ஏ. எம். ராமசாமி செட்டியார். அவரைப்பற்றி ஒரு வெள்ளைக்கார ஜாக்கி ஏதோ அவதூறாக, மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டார் என்றும் அதுபற்றி ரேஸ் கிளப் மன்னித்து விட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. உலகத்திலே உள்ள கின்னஸ் புத்தகத்திலே இந்தியாவைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றவர்கள் இரண்டே இரண்டு பேர்கள்தான், ஒருவர் கவாஸ்கர், இன்னொருவர் எம்.ஏ.எம். ராமசாமி செட்டியார், பெரிய சாதனையை அவர் நிகழ்த்தியிருக்கிறார். தமிழ் மண்ணில் பிறந்த ஒரு தமிழனை வெள்ளையன் அவதூறாகப் பேசியிருக்கிறான் என்றால் மன்னித்துவிடுவது மட்டும் போதாது, அரசாங்கம் அதைப் பற்றி அவர்களிடம் ஒரு அறிக்கை கேட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அரசாங்கம் ரேஸ் கிளப் கொடுத்த தகவலைப் பெற்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு வேதனையான செய்தியையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். கிராமிய கூட்டுறவுச் சங்கம் ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு 4,500 ரூபாய் கொடுக்கிறது. 1,000 ரூபாய் மானியமாகவும், 3,500 ரூபாய் வட்டியில்லாத கடனாகவும் கொடுக்கிறது 1978ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தேர்தல் நேரத்திலே நான் கிராமப்புறங்களிலே சென்றபோதுகூட இந்தத் திட்டத்தைப் பார்த்து நல்ல திட்டம் என்று புகழ்ந்து விட்டு வந்தேன். கிராம மக்களுக்கு அது நல்ல வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஆனால் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களிலே மதுரை மாவட்டத்திலே 3 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு அவர்கள் சங்கத்திற்குப் பத்திரங்கள் எல்லாம் பதிந்து கொடுத்து கடன்பெறுகிற சூழ்நிலையில் அரசாங்கம் கடன் தர இயலாது என்று அறிவித்து இருக்கிறது, என்று எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். 200 ரூபாய் அளவுக்கு அந்த ஏழை ஆதிதிராவிடர்கள் செலவழித்து பிறகு கடன் இல்லை என்று சொன்னால் எப்படி அது சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. தமிழகம் முழுவதும் இதைப் போல 25 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த 25 ஆயிரம் பேருக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும். அதைப்போல இந்தத் திட்டம் தொடர்ந்த திட்டமாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கிராமப் புறத்தில் இருக்கிறவர்களுக்கு இது நல்ல வரப்பிரசாதமாக இருக்கின்ற காரணத்தால் இந்தத் திட்டத்தை அரசாங்கம் தொடர்ந்து செயலாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அறிக்கையிலே குடும்ப நலத் திட்டத்திலே அறுவை சிகிச்சையிலே தமிழகம் முதலிடத்தில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். ஆனால் இந்த அறுவை சிகிச்சையைப் பொறுத்தவரையில் வேறு மாநிலங்களில் இல்லாத ஒரு நிலை தமிழகத்தில் பின்பற்றப்படுகிறது. உள்ளாட்சி மன்றங்களில் இருக்கிற அலுவலர்களை பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற ஸ்டாப்புகள் தான் இந்த அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடிக்கின்ற முறை தமிழகத்தில் மட்டும்தான் இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். வேறு மாநிலங்களில் இந்த மாதிரி இல்லை. உள்ளாட்சித் துறையில் இருக்கின்ற அலுவலர்கள் கிராம வளர்ச்சியில் அக்கறை செலுத்துவதை விட்டுவிட்டு அந்த பணியில் இருக்கிறவர்களை எங்கே போய் இருக்கிறார்கள் என்று கேட்டால் குடும்ப கட்டுப் பாட்டுக்கு அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடிக்கப் போய் இருக்கிறார்கள் என்று சொல்லும் நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இந்த அளவில் அவர்கள் மன நிம்மதி அற்ற நிலையில் அவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிற காரணத்தால் பல பொது நலப்பணிகள் இன்றைக்கு முடங்கியிருக்கின்றன. ஆகவே, நான் இன்றைக்கு கேட்டுக் கொள்கிறேன், இந்த அறுவை சிகிச்சையில் தமிழகம் முன்னனியில் இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த துறையில் இருப்பவர்கள் அந்தப் பணியைச்





செய்ய வேண்டுமே தவிர வேறு துறையில் இருப்பவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தச் செய்வது என்ற முறையை அரசாங்கம் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

மதுரை மாவட்டத்தில் பிறமலைக் கள்ளர் என்ற ஒரு சமுதாயம் இருக்கின்றது. வெள்ளைக்காரன் ஆட்சியில் இருந்த காலத்தில் அந்த சமுதாயத்தில் பிறந்தவர்கள் எல்லாம் வயது வந்த ஆண்கள் எல்லாம் இரவு நேரம் வந்தால் போலீஸ் ஸ்டேஷனில் போய் படுக்க வேண்டும். வீட்டில் இருக்கக் கூடாது. புதியதாக திருமணம் செய்து கொண்டாலும் சரி, திருமண வயதில் இருந்தாலும் சரி அவர்கள் அங்கே போய் படுத்துக் கொள்ள வேண்டும். அப்படி ஒரு அநாகரீகமான சட்டம் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்ததற்கு பின்னால்தான் அந்தச் சட்டம் எடுக்கப்பட்டது. கை ரேகைச் சட்டம் என்று சொல்லுவார்கள். அதை குற்றப் பரம்பரையில் பிரிக்கப்பட்ட சமுதாயம் என்பார்கள். அதற்குப் பின்னால் வந்த அரசுகள் இந்த பிறமலைக் கள்ளர்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு சீரமைப்புத் திட்டங்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அந்த பிறமலைக்கள்ளர் சீரமைப்புத் திட்டம் இன்றைக்கு தேய்ந்து கொண்டே இருக்கிறது. அந்த சமுதாய முன்னேற்றத்திற்கு மாடு வாங்க, ஆடு வாங்க, பம்புசெட்டு வாங்க, கிணறு வெட்ட, வீடு கட்ட போன்ற பல நல்ல திட்டங்கள் எல்லாம் இன்றைக்கு அதற்கான நிதி ஒதுக்கப்படாமல் வெறும் அதிகாரிகள் மட்டும் இருந்துக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அரசாங்கம் இந்த சமுதாய முன்னேற்றத்திற்கு இதுபோன்ற வேறு சமுதாயம் இருக்குமானால் அந்த சமுதாயங்களின் முன்னேற்றத்திற்கும் நிதியை தாராளமாக வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் நமக்கு நிதி கொடுக்கிறது. அந்த நிதியை நாம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செலவழித்துக்கொண்டு வருகிறோம். பல இனங்களில். ஆனால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மரம் வளர்ப்பதற்கு பணம் ஒதுக்குகிறோம். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு தேசியவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 10 அல்லது 15 லட்சம் ரூபாய் ஒதுக்குகிறோம் என்று சொன்னால் 10 சதவீதம் மரம் வைப்பதற்கு செடி வளர்ப்பதற்கு நம்முடைய அரசு ஒதுக்குகிறது. ஆனால் அப்படி ஒதுக்குகிற பணம் முறையாக செலவிடுகிறதா என்று பார்க்க வேண்டும். நாட்டில் எத்தனை லட்சம் மரங்கள் இன்றைக்கு நிழல் தருகின்றன அல்லது பயன்படுகின்றன என்று பார்த்தால் அந்த கணக்கு நமக்கு உற்சாகம் ஊட்டுவதாக இருக்காது என்று கருதுகிறேன். ஒரு திட்டத்திலே ஆண்டு ஒன்றுக்கு 10 அல்லது 15 லட்சம் செடிகள் நட வேண்டும். 7, 8 ஆண்டுகள் என்று சொன்னால் பல கோடிக் கணக்கான, பல லட்சக் கணக்கான மரங்கள் இன்றைக்கு

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஏப்ரல் 8

வளர்ந்து இருக்க வேண்டும். அதிலே ஒரு செடிக்கு கிட்டத்தட்ட 15 ரூபாய் என்று செலவிடப்படுகிறது. ஆனால் இந்தப் பணம் பெரும்பாலும் தவறானவைகளுக்கு, அல்லது ஊழல்கள் செய்வதற்கு துணையாக இருக்கிறதே தவிர இந்த இனத்திற்கு பயன் பட்டதாக தெரியவில்லை. ஆகவே அந்த இனத்திற்கு முறையாக செம்மையாக செயல் படுத்த வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அலுவலர்களைப் பொறுத்தவரையில், தமிழக அரசில் பல ஆண்டு காலமாக பதவி உயர்வு இல்லாமல் இருந்து கொண்டு இருக்கிறார்கள். பல துறைகளிலே பல அதிகாரிகளை நாம் சொல்லமுடியும். 20 ஆண்டு 25 ஆண்டு காலம் ஒரே பணியில் இருக்கின்ற காரணத்தால் பதவி உயர்வு இல்லாமல் இருக்கிற காரணத்தால் இன்றைக்கு அலுவலர்கள் மத்தியிலே இருக்கின்ற மன சோர்வு சஞ்சலத்தை நான் சொல்லியாகவேண்டும். அரசு நல்ல திட்டங்களை வகுத்து அவர்கள் பதவி உயர்வதற்கான பல வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இன்னொரு கொடுமை பதவி இறக்கம், மத்திய அரசிலே கூட அந்த பழக்கம் இல்லை. தமிழ் நாடு அரசிலே ஒருவரை ஒரு பதவிக்கு உயர்த்தி ஆனால் சில வாரங்களில் சில மாதங்களில் பதவி இறக்கம் செய்வது இது கொடுமையான பழக்கம். 20, 25 ஆண்டு காலம் காத்து இருந்து பதவி உயர்வு கிடைத்து மீண்டும் பதவி இறக்கம் செய்கிற முறை கொடுமையான பழக்கம். ஒரு முறை பதவி உயர்வு ஒருவர் பெற்று விடுவார்களானால் என்ன காரணத்தாலும் அவருக்கு பதவி இறக்கம் இருக்கக்கூடாது என்கிற அளவுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு தேர்தல் அறிக்கையிலே அரசு அலுவலர்களுக்கு புரபஷனல் டாக்ஸ் திரும்பப் பெறப்படும் என்ற ஒரு இனம் சேர்க்கப்பட்டதாக நான் அறிகிறேன். ஆனால் இதை இந்த நிதிநிலை அறிக்கையில் அந்த புரபசனல் டாக்ஸ் ரத்து செய்வதற்கான அறிவிப்பு இல்லை. அதுபோல் அரசு ஊழியர்களுக்கு லீவ டிராவல் கன்செஷன் அதில் ஒரு பயணத்திற்கு இருக்கிறது. போய் வருவதற்கு பயணச் சலுகை அதில் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அடுத்து, மதுரை மாவட்டத்திலே பாண்டிய ராஜபுரம் சர்க்கரை ஆலை இருக்கிறது. இந்தச் சர்க்கரை ஆலை முன்பு தனியாருக்கு சொந்தமாக இருந்தது. அப்பொழுது அது முறையாகச் செயல்படாததன் காரணமாக அதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. தனியார் நிறுவனமாக இருந்தபொழுது, விவசாயிகள் வங்கிகளிடமிருந்து வாங்கிய கடனை இவர்கள் செலுத்துவதாகச் சொல்லி, அந்தக் கரும்பை ஆலைக்குக் கொடுத்தவர்களிடமிருந்து



1985 ஏப்ரல் 8] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பணத்தைப் பெற்றுக் கொண்டது. பிறகு அந்த ஆலை அதிபர்கள் அந்த வங்கிக்குப் பணத்தைக் கொடுக்காத காரணத்தாலே இன்னும் பாக்கியாக இருக்கிறது. தனியாரும் இப்படி கொடுக்கவில்லை, அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகும் அந்தத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிக்கு இந்தப் பணம் போகாத காரணத்தாலே இன்னமும் அவர்கள் விவசாயிகளிடம் பணத்தைக் கேட்கின்ற நிலைமை இருக்கிறது. ஒரு கோடி ரூபாய் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். உடனடியாக அந்தப் பணம் சம்பந்தப்பட்ட வங்கிக்கு அரசாங்கத்தாலே செலுத்தப்பட வேண்டும், இனியும், வங்கிகளிலே இருக்கின்றவர்கள் தனிப்பட்ட விவசாயிகளிடம கேட்பது முறை அல்ல, ஏனென்றால் விவசாயிகள் தங்களுக்கு இருக்கின்ற சிரமங்களுக்கு மத்தியிலே, பணத்தைக் கொடுத்ததற்குப் பிறகு, வங்கிகளுக்குப் போகாமல் இருப்பது முறையாகாது. எனவே, அரசாங்கம் இதில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தியாகப் பெரு மக்களைப் பொறுத்தவரையில், இந்தத் தியாக பரம்பரை இன்றைக்கு அருகி வருகின்ற பரம்பரையாக இருக்கிறது, கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வருகிறது. நம்முடைய அரசாங்கம், அந்தத் தியாகத்தைச் செய்தவர்களுடைய தியாகத்தைக் கருத்திலேகொண்டு அவர்களுக்கு வழங்குகின்ற சலுகைகளைக் கொடுக்கின்ற நேரத்திலே, இன்றைக்கு 150 ரூபாய்களை இந்த அரசாங்கம் கொடுக்கிறது என்று நான் கருதுகிறேன்—இதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தை இன்றைக்கு நம்முடைய அரசு நிறைவேற்றி வருகிறது. ஆனால், இன்றைக்குச் சத்துணவுத் திட்டத்திலே பல முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, காய்கறி கூட்டுறவு சொஸைட்டி என்ற ஒரு சங்கத்தை ஆரம்பித்திருக்கிறோம், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும். இது தேவையில்லாத ஒன்று. இப்படிக் காய்கறிச் சங்கம் என்று வைத்து, அதிலே சிலரைப் பொறுப்பிலே போட்டுக்கொண்டு, அதன் மூலம் பல தவறுகள் நடைபெறுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. என்னாலே சொல்லவும் முடியும். தனிப்பட்ட முறையிலேகூடச் சொல்ல முடியும். பின்னாலே சொல்கிறேன். ஆகவே, இந்தக் காய்கறிக் கூட்டுறவுச் சங்கம் என்பது, இந்தச் சத்துணவு வழங்குகின்றவர்களுக்கு சுமையாக இருக்கிறது, அதிகமாகப் பணச் செலவு இருக்கின்ற காரணத்தினாலே இந்தக் காய்கறி சொஸைட்டிகளை நடத்துவது தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நல்லமுறையிலே நடைபெறுவதற்கு உயர்மட்ட ஆணைக் குழு ஒன்றை அரசாங்கம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்

கொள்கிறேன். ஒரு பொருளாதார வல்லுநர், ஒரு மருத்துவ வல்லுனர் நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு உயர் மட்டக் குழு வைஅமைத்து, இந்தச் சத்துணவுத் திட்டம் உள்ளபடியே சத்துணவுத் திட்டமாக, ஏழை எளிய மாணவர் களுக்குக் கிடைக்கின்ற அளவிற்கு இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துகின்ற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். நம்முடைய தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1980 ஆம் ஆண்டிலே ஒரு தனியார் நிறுவனத்திற்கு, இரும்புக் கம்பிகள் கொடுப்பதற்காக ஒரு டென்டர் வாங்கியிருக்கிறார்கள். 1,140 மெட்ரிக் டன் ஸ்டீல் கொடுப்பதற்காக, 44,23,595 ரூபாய்க்கு டெண்டர் கோரப்பட்டு, அமர் இன்டஸ்டரீஸ் என்று சொல்கி றார்கள், அந்த நிறுவனத்திற்கு அந்த டென்டர் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் இந்த இரும்புக் கம்பிகள் 31-3-80 ஆம் தேதிக்குள் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் கொடுக்கவில்லை. கொடுக்காமலேயே இந்தக் காலக் கெடுவை நீட்டிக்க வேண்டு மென்று அவர்கள் இந்த வாரியத்திற்கு மனுச் செய்கிறார்கள். காலம் நீட்டித்துக் கொடுக்கப்படுகிறது. 31-3-80-லேயிருந்து 30-4-80-க்கு நீட்டித்துக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அப் பொழுதும் கொடுக்கவில்லை. மீண்டும், 31-7-80, 30-9-80, 31-12-80 என்று இப்படிப் பல நிலைகளிலே அவர்களுக்கு அந்த இரும்பு கொடுப்பதற்கான காலக்கெடு நீட்டித்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு நீட்டித்துக் கொடுத்தும்கூட, அந்தநிறுவனம்கொடுத்திருக்கிறது என்னவென்று பார்த்தால் 20சத வீதம் கூடக் கொடுக்கவில்லை. இப்படி 20 சதவீதம்கூட டென்டர் எடுத்துக்கொண்ட அளவிற்குக் கொடுக்காத சாரணத்தால், இன்றைக்குத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். ஏன் இப்படித் தேவை இல்லாத அளவிற்குக் காலக்கெடு நீட்டித்துக் கொடுக்கப்பட்டது என்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு நஷ்டம் வருவதோடுகூட, இந்த வீடுகள் உரிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டிருக்கமேயானால், குறைந்த செல விலே கட்டி முடிக்கப்பட்டு இருக்கும், இங்கே வீடு இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு அந்த வீட்டைப் பயன்படுத்தி இருக்கமுடியும் எனவே, இப்படி முறையற்ற முறையில் கால நீட்டிப்பு கொடுத்தவர் களின் மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிறுவனத்தின்மீதும் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும் அவர் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

முடிப்பதற்கு முன்னாலே ஒன்றைச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தேர்தலுக்கு முன்னாலே சொன்னார்கள், அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம்



தேதிக்குப் பின்னாலே தமிழகத்திலே பூரண மதுவிலக்கு இருக்கும் என்று அவர்கள் சொன்னதாக எனக்கு நினைவு இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே அப்படிப்பட்ட அறிவிப்பு வரும் என்று எதிர்பார்த்தோம். தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் – முன்பு எப்படி மதுவிலக்கு அமலில் இருந்த காலத்தில் மகிழ்ச்சியாக இருந் தார்களோ அதைப்போல, ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள் இந்தக் குடியினாலே கெட்டுப் போகக் கூடாது, சீரழிந்துப் போகக் கூடாது என்று எண்ணுகின்ற கொள்கையினை உடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள், வேறு மாநிலங்களை இதற்கு உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது. தமிழகம் வழிகாட்டியாக இருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், வேறு மாநிலங்களிலே ஏற்கனவே திறந்திருக்கிறார்கள், நாம் மூடி இருப்பதை திறந்திருக் கிறோம். ஆகையினாலே இதற்கு வழிகாட்டியாக இருக்கின்ற அளவிற்கு அந்த அறிவிப்பை அவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்கிறேன்.

ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே, சாராயத்திற்கு வரியைக் கூட்டியிருக்கிறார்கள். அவர்கள், 6 சதவீதத்திலிருந்து 25சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதிலும்கூட, நம்முடைய நிதியமைச்சரவர்கள் பேசிய விதத்திலே, "விற்பனையாளர்களின் ஆதாய விகிதம், நியாயமான அளவிற்கும் அதிகமாகவே இருப்ப தால்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, அந்த விற்பனை யாளர்களுக்கு ஆதாய விகிதம் அதிகமாக இருக்கிறது என்று அவர்கள் மறைமுகமாக ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அது தான் இங்கே சொல்லப்பட்ட குற்றச்சாட்டு.

ஆகவே இங்கே வரி அரசாங்கத்திற்கு வருவதற்காகத்தான் இதைப் போட்டிருக்கிறார்கள் என்பது சரியான உதாரணமாக இருக்காது. எனவே நிச்சயமாக அரசாங்கம் பூரண மதுவிலக் கினைக் கொண்டுவரவேண்டும். அப்படிக் கொண்டுவருவதற்குத் துணையாக நாங்கள் இருப்போம். அப்படிப்பட்ட அந்த நிலைமையை, முதலமைச்சர் அவர்களின் ஆசையை இந்த நிதி நிலை அறிக்கையிலேயே அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வரைக்கும் காத்துக் கொண்டிருக்காமல், இப்போதே அமலுக்குக் கொண்டுவரவேண்டும், எனவே அந்த வகையில் பூரண மது விலக்கை அமலாக்கவேண்டும் என்று வற்புறுத்தி என்னுடைய உரையை நிறைவாக்குகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985 86-ஆம் ஆண்டுக் கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற பொது விவாதத்தில் 73 உறுப்பினர்கள் 7 நாட்களாகத் தங்களுடைய கருத்துக்களை 21½ மணிநேரம் இங்கே தங்களுடைய உரையிலே எடுத்து வைத்தார்கள். நிதிநிலை அறிக்கையை உள்ளன்புடன், உவகைப் பெருக்குடன் போற்றியும், பாராட்டியும், வரவேற்றும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 8

தங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்க முன் வந்துள்ள உறுப்பினர் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியைச் சொல்வதில் நான் பூரிப்பையும பெருமையையும் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள், குறிக்கோள்கள், சாதனைகள், திட்டங்கள் ஆகியவற்றில் பெரும் பாலானவற்றை ஏற்று மேலும் சிறந்த வளமும் நல்ல வாழவும் இந்த நாடு தொடர்ந்து பெறவேண்டும் என்பதற்கான முறையில் சீரிய பரிந்துரைகள் பலவற்றையும வழங்கியுள்ள எதிர் தரப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் பலருக்கும் என்னுடைய மகிழ்ச்சிகரமான பாராட்டுதல்களையும் நான் இந்த வாய்ப்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை முழு மனத்தோடு வரவேற்க முன் வராவிட்டாலும் நிதிநிலை அறிக்கையின் அடிப்படையில் களையப்படவேண்டிய குறைபாடுகள் பற்றியும் செய்து முடிக்கப் படவேண்டிய நிலைப்பாடுகள் பற்றியும் காட்டிக்காட்டிய உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு உரிய முறையில் மதிப் பளிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமே இல்லே, இது ஏமாற்றத்தைத் தருகிறது என்று சொல்லிவிட்டு ஏதேதோ சொல்லியவர்களுக்கு நான் எதுவும் கூறுவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

இந்த ஆட்சியின் மீது காழ்ப்புணர்ச்சியின்றி நடுநிலையில் நின்று ஆராய்ந்து நிதிநிலை அறிக்கையின் பெரும்பாலான கருத்துக்களை வரவேற்று ஆதரவு தந்துள்ள பல ஏடு களுக்கும் கூட என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் புதிய வரி விதிப்புக்கள் அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அவை ஏழை எளிய மக்களை அதிகம் பாதிக்காத வகையில் அமைந்திருப்பது நிம்மதியை அளிக்கிறது என்றும் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு எல்லோராலும் நேசிக்கப்படும் திரு. எம். ஜி. ஆர் அவர்களின் மூன்றாவது தொடர் ஆட்சியில் முதல் பட்ஜெட் நல்ல அடிப் படையில் கண்ணீருக்கு இடம் இன்றி வந்திருப்பதை எல் லோருமே பாராட்டுகிறார்கள் என்றும் தமிழகத்தின் இந்த ஆண்டு பட்ஜெட்டில் உடனடியாக மக்கள் நலத் திட்டங்கள் மேலும் வளயாகப் பண ஒதுக்கீடு என்ற அடிப்படையில் செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளதை அறிவார்ந்த தன்னலத்தோடு ஏழை எளிய மக்கள் நிச்சயமாக வரவேற்பு செய்வார்கள் என்றும், இந்த பட்ஜெட்டின் மக்கள் நல விஸ்தரிப்புத் திட்டங்கள் அனைத்துமே குறை கூற முடியா தவை' குறிப்பிட்டுச் சொல்லி, இது வீண் செலவு என்று எந்த அரசியல் கட்சியும் எந்த ஒரு திட்டத்தை எதிர்க்க இயலாது இப்படி யாருமே எதிர்க்க முடியாமல் வரவேற்றுத் தீரவேண்டிய திட்டங்களை உருவாக்குவது அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்படுகின்ற உயர்ந்த நல்ல காரியம் என்றும் தமிழக



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பட்ஜெட் மக்களின் துயர் துடைக்க நினைக்கும் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் திட்டங்களை உருவாக்கும் வகையில் அமைந்திருக் கிறது என்றும் இது ஏழைகளை வாழவைக்கும் பட்ஜெட் என்றும் திரு. எம். ஜி. ஆர். அரசின் இந்த பட்ஜெட் நல்ல பண்பு நலன் களை நேரடியாக நடைமுறைப்படுத்தும் தன்மையின் கீழ் திட்டங்களை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது என்றும் ஏடுகள் பாராட்டியிருக்கின்றன.

(பிற்பகல் 12-40)

எம். ஜி. ஆர். அரசு முன்னேற்ற வழியில் சிறந்த முறையில் ஏறு நடை போடுகிறது என்பதை பட்ஜெட் தெரிவிக்கிறது என்றும் தமிழ்நாடு அரசு கல்வி, கிராமப்புறங்களில் குடிநீர் வசதி செய்தல், பால்வளத் திட்டங்களைப் பெருக்குதல், கிராமங் களை எல்லாம் மின்சார மயமாக்குதல், விசை பம்ப் செட்களை விரிவாக்குதல் போன்ற மிகச் சிறந்த சாதனைகளைப் புரிந்திருக் கின்றன என்றும் பல ஏடுகள் எடுத்துத் தெரிவிப்பது எனக்கு ஓரளவுக்கு மன ஆறுதல் தருவதாகவே அமைந்திருக்கிறது. ஆனா லுங்கூட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும் குறை சொல்ல வேண்டாம் என்றோ, குற்றங்களைச் சுட்டிக் காட்ட வேண்டாம் என்றோ நான் சொல்லவில்லை. அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்லத்தான் வேண்டும், குற்றங்களைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும், குறைகளை எடுத்துச் சொன் னால்தான் எங்கெங்கே என்னென்ன நியாயமான, நேர்மையான குறைகள் இருக்கின்றன என்று கண்டு அவற்றைத் துறைகளின் மூலமாகவும் அதிகாரிகளின் வாயிலாகவும் அலுவலர்களின் மூலமாகவும் அகற்றுவதற்கான முயற்சியை அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர்கள் மேற்கொள்ளவும் முடியும். எங்களை அறியாமல் துறைத் தலைவர்களையும் அறியாமல், துறையினு டைய மேல்நிலையிலுள்ள உறுப்பினர்களையும் அறியாமல் சில பல குற்றங்கள் துறையினுடைய பல்வேறு இடங்களிலும் நிகழவும் கூடும். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்துச் சொல்கின்றபொழுது அதுபற்றிய குறிப்பு களை, அந்த அந்தத் துறையினர் குறிப்பு எடுத்து வைத்துக் கொண்டு அதற்கான சமாதானம் சொல்லித் தீரவேண்டும். குற்றங்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல் கின்றபொழுது, எந்த குற்றம் எந்தச் சூழ்நிலையில் நடந்தது, யாரால் நடந்தது எப்படி நடந்தது என்று எங்களைப் போன்ற அமைச்சர்கள் விளக்கங்கள் கேட்கும்போது அதற்கு உருவான பதிலை அவர்கள் தர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த 'வகைக்குக் குற்றங்கள் கூற வேண்டாம் அல்லது குறைகள் சொல்ல வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை அதைச் சொல்லத்தான் வேண்டும்.

அதிலே உண்மை இருக்கவேண்டும், அதிலே நியாயம் இருக்க வேண்டும், இந்த அரசின்மீது களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற முழு நோக்கத்தோடு சொல்லப்படுமேயானால் தெளிவுதான்

வெற்றி பெறும், உண்மைதான் பின்னால் வெற்றி பெறுமே தவிர புனைந்து கூறப்பட்ட நிலைமைகள் எடுபடாது என்பதை நாம் நடைமுறை வாழ்க்கையிலே தெளிவாக கண்டு கொண்டு வந்திருக்கிறோம்.

எங்களைப் பாராட்ட வேண்டுமென்றுகூட நாங்கள் எதிர் பார்க்க வில்லை, பாராட்டுவதும் பாராட்டாததும் அவரவர்களு டைய பண்பு, நலன்களைப் பொறுத்தது. ஆகவே, பாராட்ட வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. லாலி பாட வேண்டுமென்றும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் பாராட்டுவோம், அல்லது லாலி பாடுவோம் என்று எதிர்பார்க்க வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த ஒரு உறுப்பினர் கூட இங்கே 'சுட்டிக்காட்டினார். உள்ளபடியே, நீங்கள் பாராட்ட வேண்டுமேன்று நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை, எதிர்பார்க்கவும் மாட்டோம், எதிர் பார்க்கவும் முடியாது. எதிர்பார்க்கவும் கூடாது. ஆனாலுங்கூட இந்த நிதிநிலை அறிக்கையைக் கேலி செய்தும் கிண்டல் செய்தும் பல்வேறு பெயரிட்டு இந்த பட்ஜெட்டை அழைத்திருக்கிறார்கள். அதையும் நகைச்சுவை யாகத்தான் நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதையும் பல் வேறு வகையிலே எடுத்துச் சொல்கின்றபொழுது பலரும் பேசியதை நான் கவனித்த போழுது இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எடுத்துச் சொல்கின்றபொழுது இந்த அறிக்கையை ஏமாற்றும் பட்ஜெட் என்றும் மக்களை ஏமாற்றுவதற்காகவே முழுமுதல் நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டு இந்த படஜெட்டைத் தீட்டி உங்கள் முன்னால் கொண்டு வந்து வைத்திருக்கிறோம் என்றும் எதுவுமே இல்லாத பட்ஜெட் என்றும், திட்டம் இல்லாத பட்ஜெட் என்றும் தண்டனை தரும் பட்ஜெட் என்றும் வார்த்தைஜால பட்ஜெட் என்றும் கையாலாகாத்தனத்தைக் காட்டும் பட்ஜெட் என்றும் பரிதாபகரமான புலம்பல் பட்ஜெட் என்றும் தங்கள், தங்கள் இயல்புக்கு ஏற்ப, இங்கே பலரும் பெயரிட்டு அழைத்திருக்கிறார் கள். எனக்கு அதெல்லாம் நகைச்சுவைதான். மல்லிகை மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் மணக்குமே தவிர, வேறு பெயரிட்டார்கள் என்பதற்காக அதன் மணம் போய் விடாது. அதைப் போல இந்த நிதிநிலை அறிக்கையில் யார் எதைச் சொன்னாலும், எப்படிக் சொன்னாலும், இந்த நிதிநிலை அறிக்கையின் செயலாக்கம் எவ்வகையிலும் கெட்டுப்போகாது சிறப்பாக அமையும், செம்மையாக நடைபெறும். மக்களின் அன்பையும் தயவையும் தொடர்ந்து பெறும் என்ற நம்பிக்கை யினுடைய அடிப்படையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கையை எடுத்து வைத்திருக்கிறோம்.

அவையின் முன், நாட்டு மக்களுக்குத் தெளிவு பயக்க வேண்டு மென்பதற்காகவே, பல்வேறு விளக்கங்களை நாம் எடுத்துத் தந்திருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும்





பொதுவாக நாட்டினுடைய நிலைமையை எடுத்துச் சொன்ன தோடு மட்டுமல்லாமல், மத்திய அரசினுடைய நிலைமையை, மாநில அரசினுடைய நிலைமையை, இந்த மன்றத்திலே இருப் பவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் தெரிந்து கொள்ள வேண்டு மென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையிலும் பலரும் கருத்துக்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மத்திய அரசு அதிகாரமும் ஆதிக்கமும் அவர்களுடைய நிதி நிலை அறிக்கையின்மூலம் ஏற்பட்ட விளைவும் எந்த அளவு மாநிலங்களைப் பாதிக்கின்றன என்றும் எப்படிப்பட்ட சீர்திருத்த நிலைமைகள் மத்திய அரசுபெற வேண்டுமென்ற அடிப்படையிலும் பல உறுப்பினர்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கருத்துக்களை நாம் வரவேற்க கடமைப்பட்டி ருக்கிறோம். பொதுவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நாட்டிலே என்னென்ன பொது நிலைமைகள், வளம் பெறவும், வசதி பெறவும், வாய்ப்புகள் பெறவும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்கான காரணகாரிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அதற்கு பிறகு தங்கள் தங்கள் தொகுதியிலே இன்னின்னவை நடைபெற வேண்டும், நீண்டகாலமாக இந்தக் குறைபாடுகள் இருந்து கொண்டு வருகின்றன. சேர, சோழ, பாண்டியர் காலத்திலிருந்து, முகலாயர் காலத்திலிருந்து, நாயக்கர் கள் காலத்திலிருந்து, மகாராஷ்டிரர் காலத்திலிருந்து இந்தக் குறைபாடுகள் எல்லாம் இருந்து கொண்டு வருகின்றன. அவை களை எல்லாம் தீர்க்க வேண்டுமென்ற வகையில் பெரும்பாலான தொகுதிகளில் வாழ்கின்றவர்கள் அத்தனைபேரும், எங்கள் தொகுதிக்கு வேளாண்மை கல்லூரி ஒன்று கட்டாயம் வேண்டும், ஒரு பொறியியல் கல்லூரி வேண்டும், கால்நடைக் கல்லூரி வேண்டும், பெரிய மருத்துவமனை வேண்டும், மருந்தகங்கள் மருத்துவமனையாக மாற்றப்பட வேண்டுமென்ற வகையில் கேட்டி ருக்கிறார்கள். கேட்க வேண்டியது தான்.

ஆனால் கேட்க வேண்டியதை கேட்கக் கூடாது என்று எடுத்துக் சொல்வதற்கில்லை கேட்பதற்கும், எவவளவு முடியும் இந்த ஆண்டு பட்ஜெட்டிலே என்பதற்கும் வேறுபாடு உண்டு. அதன் அடிப்படை யில் எவ்வளவு இயலும் என்பதையும் நாம் பார்க்கவேண்டும். ஆகவே கேட்கக்கூடாது என்பதில்லை. கேட்க வேண்டியதை எல்லாம் கேட்டு வைத்தால் தான் என்றைக்காவது ஒருநாளைக்கு அவற்றை நிறை வேற்றுவதற்கான வழிவகை அரசுக்கு ஏற்படும். அந்தவகையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் கள் 73 பேர்கள் பேசியதிலே வைத்து பார்த்தால், இவர்கள் எல்லாம் எடுத்துச்சொன்னப் பணிகளை நிறைவேற்ற வேண்டு மானால் நான் இன்னொரு 2,500 சில்லறை கோடி ஒதுக்கி பற்றாக்குறை பட்ஜெட்டாகத்தான் சொல்லி இருக்கவேண்டும். நல்லவேளையாக 234 உறுப்பினர்களும் பேசாமல் இருந்தார்கள் என்பதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சி. 234 உறுப்பினர்களும் பேசத் தொடங்கி, தங்கள் தங்கள் தொகுதிகளின் நலன்களைப் பற்றி

பேசியிருப்பார்களானால் கிட்டத்தட்ட 6,000 கோடிக்காவது இவர்களுடைய எண்ணங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பதற்கு பற்றாக் குறை நிதிநிலை அறிக்கை வைக்க வேண்டியிருந்திருக்கும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

" செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு "

என்று கூட ஒரு உறுப்பினர் சுட்டிக்காட்டினார். நீங்கள் எல்லாம் எவ்வளவு தான் செவிகைப்ப எடுத்துச் சொன்னாலும், அதைச் சொற்பொறுக்கிற அளவிற்கு தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் அதைத் தாங்கிக் கொண்டு வந்ததின் காரணமாகத் தான் இந்த அரசு மூன்றாவது முறையாக தங்கியுள்ளது கவிகையின் கீழ், கவிகையின் கீழ் என்பதை தெளிவுபடுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் பேசுகிற போது குறிப்பிட்டார்கள். நான் இந்த நிதிநிலை அறிக்கையில் வார்த்தை ஜாலம் 'செய்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே வார்த்தை ஜாலம் செய்வதில் என்னைவிட வல்லவர் நாஞ்சிலார்தான் என்பதை நாடே நன்கு அறியும். ஆகவே சொற்களை எப்படி எப்படியெல்லாம் பேசவேண்டுமென்பதில் திறமைமிக்கவர் அவர் என்பதை நானே ஒப்புக்கொள்கிறேன். எனக்கு ஜாலம் செய்கிற வித்தை வராது. என்ன தோன்றுகிறதோ அதைத்தான் நான் சொல்வேன். அதிலே பெயர் பெற்றவர் அவரே தவிர நான் அல்ல. இன்றைய பேச்சிலே கூட எவ்வளவு வார்த்தை ஜாலங்களை ஆரம்பத்திலிருந்து, கடைசிவரையில் செய்தார் என்பதை நான் நன்றாக எடுத்துச் சொல்லலாம். நானும் அவரும் ஒரே சாலையில் மாணவர்கள். அவர்கள் எடுத்துச் சொன்ன பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் வழியிலும், பேரறிஞர் அண்ணாவின் வழியிலும்தான் என்னைப் போன்றவர்களும், இந்த அவையிலே இருக்கிற பெரும்பாலானவர்களும் வந்திருக்கிறார்கள். ஆகவே அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியை பின்பற்றிதான நாம் நடக்கிறோம். அண்ணா அவர்கள் சொன்னார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வேண்டுமென்று எடுத்துச் சொல்லி, கனிவு வேண்டும், துணிவு வேண்டும், பணிவும் வேண்டுமென்றுதான் சொன்னார்கள். அந்தக் கனிவு, துணிவு, பணிவு ஆகிய பண்புகளை கடைப்பிடித்துதான் எங்களைப் போன்றவர்கள் பணியாற்றி வருகிறோம் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரண பட்ஜெட்டை எடுத்துச் சொல்கிறபோது நடந்து முடிந்தவைகளை, சென்ற ஆண்டு நாம் திட்டம் போட்டோம், திட்டம் போட்டவைகளை இன்னென்னவற்றை செய்து முடித்தோம்; இன்னென்ன நிறைவேற்றப்பட்டன; இவை இவை



நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன; இவை இவை இன்னென்ன காலக் கட்டத்தில் நிறைவேற்றப்படும். இதற்காக இவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்று இவைகளையெல்லாம் திட்டவட்டமாக, தெளிவாக நாம் நிதிநிலை அறிக்கைப் பார்த்து எடுத்துச் சொல்கிற கருத்துக்கள் என்ற அடிப்படையில் நாம் எடுத்துத் தெரிவிக்கிறோம். சாதாரணமாக எதிர்காலத்தின் திட்டங்கள் என்று வருகிறபோது நாம் இந்த ஆண்டு திட்டத்திலே இதை இதை செய்திருக்கிறோம். இவை இவைக்கு திட்டமிட்டுள்ளோம்; அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்றெல்லாம் எடுத்துத் தெரிவிக்கிறோம். அப்படி நிதிநிலை ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைதான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். பல ஒதுக்கீடுகளை திரும்பச் செலுத்துகிற நிலைமை ஏற்பட்டிருக்கின்றன என்ற நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். எந்த ஆண்டு பட்ஜெட்டைப் பார்த்தாலும் இது இருக்கும். அதற்காகத்தான் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியே இருக்கிறது.

(பிற்பகல் 12-50)

ஆக, நிதியைத் திருப்பிச் செலுத்துவோம் என்ற கணக்கைவிட எந்த எந்த செலவுக்கு எவ்வளவு ஒதுக்கினோம்; ஒதுக்கியதைவிட எவ்வளவு கூடுதலாகச் செலவழித்திருக்கிறோம் என்பதை எல்லாம் வைத்துதான் ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்திலே சொல்கிறோம். 'ஆக்சுவல்ஸ்' என்று பார்க்கும்போது, சென்ற ஆண்டு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதைவிட பல மடங்கு அதிகமாகச் செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். நாம் ஒதுக்கீடு செய்ததைவிட கூடுதலாகச் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டதால்தான் முதல் துணை மானியக் கோரிக்கை, இரண்டாவது துணை மானியக் கோரிக்கை, மூன்றாவது துணை மானியக் கோரிக்கை என்று ஆண்டு முடிவதற்குள்ளாக பல துணை மானியக் கோரிக்கைகளை அவை முன் வைக்க வேண்டியிருக்கிறது.

சில இனங்களிலே திருப்பிச் செலுத்தக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்றால் அது இந்த ஆட்சியில் மட்டுமல்ல; வெள்ளைக்காரன் காலத்திலிருந்தே இருக்கிறது; காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, பொதுக்கணக்குக் குழுத் தலைவர் என்ற முறையில் இதைக் கேட்டேன். அதைத்தான் இப்போது நீங்கள் கேட்கிறீர்கள். இப்படி நீங்கள் கேட்பதற்கும் நாங்கள் கேட்பதற்கும் ஆடிட் ரிப்போர்ட்தான் காரணம். அது அல்லாமல் நாங்களும் கண்டுபிடிக்கவில்லை; நீங்களும் கண்டுபிடிக்கவில்லை. ஆடிட்டில் கண்டுபிடித்துச் சொல்கிறார்கள். அதைக் கேட்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 8

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவர்கள் கண்டுபிடித்துச் சொன்ன பின்னால் ஏன் திருப்பிச் செலுத்தப்பட்டது என்று அக்கவுண்டன்ட் ஜெனரல் முன்னால் பொதுக் கணக்குக் குழுவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விசாரிக்கிறார்கள். அங்கே அவர்கள் அதற்கான காரணத்தைச் சொல்லித்தான் தீரவேண்டும். அவர்கள் சொல்லுகின்ற காரணத்தைக் கணக்குக் குழு ஏற்றுக்கொள்ள வேண்டும். தவறு இருந்தால் சுட்டிக்காட்டும். இன்ன இடத்தில் இன்ன தவறு என்று கண்டிக்கும். அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். யார் மீது தவறு என்று சுட்டிக்காட்டப்படுகிறதோ அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; அதைச் சொன்னால் செய்யலாம். ஆக இந்த நிலை இப்போது புதிதாக ஏற்பட்டதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கேச் சொன்னார்கள். நடைபெற்றுள்ளதைச் சொல்கிறோம், சிலவற்றை நாம் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. நம்பவேண்டியிருக்கிறது, எதிர்பார்க்கிறோம், நம்புகிறோம் என்ற சொற்கள் ஒரு நிதிநிலை அறிக்கையில் இடம் பெறுவது இயல்பான ஒன்று. அது எங்களுக்கு என்று தனியாக வந்தது அல்ல. யார் இந்த இடத்தில் உட்கார்ந்தாலும் அதைத்தான் சொல்வார்கள், எந்தக்காலத்தில் உட்கார்ந்து இருந்தாலும் அதைத்தான் சொல்வார்கள்.

நான் நிதிநிலை அறிக்கையைப் படித்து முடிக்கும்போது, 'மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஆழ்ந்த அறிவோடும், தெளிந்த சிந்தனையோடும், தூய நோக்கத்தோடும், பண்பட்ட மாண்போடும் எடுத்துரைக்கும் கருத்துக்கள் நாட்டை வளப்படுத்தவும் மக்களுக்கு நலம் பயக்கவும் பேருதவி புரியும் என்று கருதுகிறேன்' என்றுதான் சொல்ல முடியுமே தவிர எல்லோரும் திட்டவட்டமாக இப்படித்தான் இருப்பார்கள் என்று நம்பி, நான் எப்படி எடுத்துச்சொல்ல முடியும்?

அது மட்டுமல்ல, 'மாண்புமிகு உறுப்பினர்களின் அன்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் அவையின் புகழை நிலைநாட்டவும் விவாதம் பயன்பட அமையவும் பெரிதும் உதவி புரியும் என்று எதிர்பார்க்கின்றேன்' என்று சொல்வதைத் தவிர இப்படித்தான் இருக்க வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லமுடியாது.

அடுத்து சொல்ல வேண்டுமென்றால், 7–வது நிதிக் குழுவில் நாம் கொஞ்சம் வஞ்சிக்கப்பட்டோம். 8–வது நிதிக் குழு வகுத்திருக்கிற 'ஃபார்முலா'வினால் மேலும் நமக்கு கேடு ஏற்படும். ஆக, மத்திய அரசு இப்படி வகுத்துத் தருவது விரும்பத்தக்கதாக இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அதிகார வரம்பை நாம் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அரசுக்கு என்று ஒரு மாநிலம் கிடையாது, மக்கள் கிடையாது. 22 மாநிலங்களிலும்தான் மக்கள். இந்த 22 மாநிலங்களும் சேர்ந்தது மத்திய அரசு. ஆக, நடைமுறையில் எப்படி இருந்தால் நல்லது என்று உலக அளவில் காண்கிறோம். விரைவாக மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, மக்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய வாய்ப்பு வசதிகள் மாநில அரசிடம் இருப்பதால், அது அமெரிக்காவாகட்டும் அல்லது ரஷியாவாகட்டும் அல்லது கானடா ஆகட்டும் அல்லது சுவிச்சர்லாந்து ஆகட்டும் அல்லது வேறு பல நாடுகள் ஆகட்டும், அந்த நிலைமை மாநிலங்களுக்கு இருப்பதால், அதற்கு ஏற்ற வகையில் அதிகாரங்கள் வந்தால் இந்தியா மேலும் பொலிவு பெறும், வலிவு பெறும், வளம் பெறும் என்று எடுத்துச் சொல்கிறோமே தவிர தேவையில்லாமல் நம்மிடம் அதிகாரத்தை வைத்துக்கொள்வதற்காக அல்ல.

ஆக, மாநில அரசு இப்படி அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்கும்போது அதைப்போன்று உள்ளாட்சி மன்றங்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி கொடுப்பதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அது பற்றி எல்லோரும் உட்கார்ந்து பேசுவோம். இன்னின்ன அதிகாரங்களை உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுத்தால் அவை வளம் பெறும், வசதி பெறும் என்று சொன்னால் அதைச் செய்யலாம். அங்கேயும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் வருகிறார்கள். இந்த அளவுக்கு அங்கேயும் சிக்கல் இருக்கும் என்று சொல்வதில் தவறு இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட 'முதலிலே இதை நீங்கள் கொடுத்தால் பிறகு நாங்கள் அதைக் கொடுக்க ஏற்பாடு செய்வோம்' என்றுதான் சொன்னார்கள். அந்த அடிப்படையில் ஏன் சொல்கிறேன் என்றால், நாம் எதிர்பார்க்கிறோம் என்று சொன்னால், இந்த 8-வது நிதிக் குழு சொல்லியிருப்பதை நாம் மாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். திரும்பத் திரும்ப எழுதுகிறோம், வற்புறுத்துகிறோம். இதிலே முக்கியமான மாநிலங்கள் பெறவேண்டிய நன்மைகளைப் பெற முடியாமல் இருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 25 சதவீதம் மக்களுடைய அடிப்படையில் ஒதுக்கிவிட்டு, 75 சதவீதம் பிற்பட்ட நிலைமை என்பதற்காக ஒதுக்கிவிடுகிறார்கள். இந்த வாய்ப்பாடு சரியாக இல்லை, நன்றாக பணியாற்றுகிற மாநிலங்களுக்கு நீதி வழங்கியதாக ஆகாது, ஆகவே குடும்ப நல திட்டத்தைப் பேணி, தங்களுடைய வசதி வாய்ப்புகளை இழந்து கொண்டு இருக்கிற மாநிலங்களுக்கு, அது பரிசாக ஆகாது என்ற காரணத்தை எடுத்துச் சொல்லுகின்ற போதுதான் நாம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருவது இந்த நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு செய்கிறபோது, 1951–ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கைக் கணக்கை அடிப்படையாக வைத்துதான் நீங்கள் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமே தவிர, அதற்கு முன்னால் மக்கள் எண்ணிக்கையை குறைப்பதும், குறைக்காமல் இருப்பதும், அந்தந்த

மாநிலத்தினுடைய பொறுப்புக்கு விடும்போது மக்கள் எண்ணிக்கையைக் குறைத்து, 1951 ஆம் ஆண்டு, முதல் அரசியல் அமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த காலத்திலேயே இருக்குமானால் நம்முடைய மாநிலம் மக்கள் எண்ணிக்கையை குறைப்போம், நமக்குக் கிடைக்கின்ற ஈவையும் பெறுவோம், அந்தத் தெரிவினுடைய அடிப்படையிலே நாம் மக்கள் எண்ணிக்கையைக் குறைத்ததன் காரணமாக நமக்கு ஏற்பட்ட நன்மை என்று நாம் வாதாடுவதற்கு உண்டு என்ற காரணத்தால், அவ்வப்போது இருக்கிற, மக்கள் எண்ணிக்கையை வைத்துக்கொள்ளக் கூடாது, 1951 ஆம் ஆண்டு எண்ணிக்கையை அடிப்படையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோதும் இந்தக்கொள்கையை வற்புறுத்தி வந்தது. இப்போதும் அது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. என்றாலும் கடைசியில் அவர்கள் ஏற்றுக்கொண்டது, 81-ஐ எடுத்துக்கொள்ளாமல் 71-ஐ ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அதிலே ஒன்றிரண்டு வகைகளில்தான் எடுத்துக்கொள்கிறார்கள், பல வகைகளில் எடுக்க மறுக்கிறார்கள். இந்த குடும்ப நலத் திட்டத்தை நாம் நிறைவேற்றி வந்ததன் காரணமாக நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், 41 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலை இருந்தது. மக்களுடைய எண்ணிக்கையை குறைத்ததன் விளைவாக அகில இந்திய அளவிலே மறுபடியும் கணக்கிடுகின்றபோது, 2 உறுப்பினர்கள் போய்விட்டார்கள். 39 ஆக வந்து நின்றார்கள். மறுபடியும் ஒரு கணக்கை மத்திய அரசு செய்தால், மேற்கொண்டு, 1, 2 குறைவதற்குத்தான் வழி ஏற்படுமே தவிர, ஆகவேதான் கொடுத்த அந்த அளவு அப்படியே இருக்க வேண்டும். அவரவர்களுடைய சாமர்த்தியத்திற்கு மதிப்பு அளிக்கவேண்டும் என்பதைத்தான் திரும்பத் திரும்ப நாம் வாதாடி வருகிறோம். ஆகவேதான் எதிர்பார்க்கிறோம் என்று சொன்னோம்.

இந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே கூட்டம் நடக்கிறபோது இந்தக் கொள்கைக்கு ஆதரவு தரவேண்டும் என்று நாம் அல்ல, கர்நாடகம், மகாராஷ்டிரம், பஞ்சாப், ஹரியானா போன்ற முக்கியமான மாநிலங்கள் எல்லாம் இந்தப் புதிய வாய்ப்பாட்டின் மூலமாக, பார்முலா மூலமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. நாம் சொல்வது, 25 சதவீதம் மக்களுக்கு ஒதுக்குங்கள், 12½ சதவீதம் ஏழ்மைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைக் கணக்கு எடுத்து ஒதுக்குங்கள், 12½ சதவீதம் அந்தந்த மாநிலங்களில் இருக்கின்ற மக்களுடைய பணிகள் ஆற்றுவதிலே, ரிசோர்சஸ் அன்ட் ஆக்மென்டேஷன் என்று சொல்கிற அளவிற்கு அந்த நிதி ஆதாயங்களைத் தேடுவதிலே முயற்சி செய்கிற அந்தத் தன்மைக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்றும் 25 சதவீதம் எல்லாவற்றிலும் சேர்த்து இருக்கிற சூழ்நிலைகளை வைத்துக் கொடுங்கள் என்றும் அப்படிப் பிரித்துக் கொடுப்பதன் மூலமாக, அப்படிப் பிரித்துக் கொடுத்தால் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நமக்கு





350 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழி இருக்கிறது என்ற காரணத்தால்தான் எதிர்பார்க்கிறோம் என்றும், நம்புகிறோம் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். யார் இருந்தாலும் செய்யவேண்டியதுதான்.

மாண்புமிகு தி. மு. கழகத்தைச் சேர்ந்த துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் கூட இங்கே எடுத்துச் சொன்னார்கள், இந்த அறிக்கையிலே பெரும்பகுதி எதிர்பார்க்கப்பட்டது, எதிர்பார்த்தோம், எதிர்பார்க்கிறோம், நம்புகிறோம், உத்தேசித்து இருக்கிறோம், உத்தேசிக்கப்பட்டது என்று. ஆனால் எதிர்பார்க்கப்பட்டது, எதிர்பார்த்தோம், எதிர்பார்க்கப்படுகிறது, எதிர்பார்க்கலாம், உத்தேசிக்கப்பட்டது, உத்தேசிக்கப்படுகிறது, உத்தேசித்துள்ளோம், நம்பினோம், நம்புகிறோம், நம்பலாம், நம்பப்படுகிறது எண்ணப்பட்டது, அரசு எண்ணியுள்ளது, கருதியுள்ளோம், கருதப்பட்டது, கருதப்படுகிறது, பரிசீலிக்க இருக்கிறோம், செயல்படலாம் என்று இருக்கிறோம், முயற்சிகள் மேற்கொள்ளப்படும், கவனம் செலுத்தி இருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்கள் நிதியமைச்சராக இருக்கும்போதே, அவர்கள் முதல் 5 ஆண்டுகளிலே, 1977–78-லே 38 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். 1978–79-லே 36 இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்கள். 79–80-ல் 33 இடங்களிலே பயன்படுத்தி இருக்கிறார்கள். எனவே வந்து யார் உட்கார்ந்தாலும் இதைத்தான் செய்ய வேண்டுமே தவிர, ஆகவே வேறு வழியில்லை என்பதற்காகத்தான் (கரவொலி) இதைக் சுட்டிக்காட்டுகிறோமே தவிர, நாமாக ஒரு உத்தேசமாக எடுத்துச் சொல்லவில்லை. அப்படித்தான் சொல்ல முடியும், அதற்கு முன்னாலேயும் அப்படித்தான். சிலவற்றை நாம் எதிர்பார்க்கத்தான் முடியும், சிலவற்றை நாம் கருதத்தான் முடியும். அவர்கள் எடுத்துச் சொல்லியது மாதிரி எல்லோருடைய ஒத்துழைப்பு இருந்தால், நாம் அதிக அதிகாரங்களைப் பெறவும், நியாயமான தன்மைகளைப் பெறவும், நாம் கருதுகிறோம். இந்த மாநிலம் வளர்ச்சி அடையவில்லை, தொழில் முயற்சியிலே உயரவில்லை, வாழ்க்கைத் தரத்திலே உயரவில்லை, இந்த மாநிலத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் குற்றம் சாட்டுகின்ற அளவில் இந்த அரசுக்கு குற்றம் சாட்டவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

ஆனால் திட்டக்குழுவும் மத்திய அரசும் என்ன கருதுகிறது. இந்த மாநிலம் வளர்ந்த மாநிலங்களில் ஒன்று. இந்த மாநிலம் செம்மைப்படுத்தப்பட்ட வளர்கிற மாநிலங்களில் ஒன்று. தனி நபர் வருமானத்தை பெருக்கிஇருக்கிற மாநிலங்களில் ஒன்று. ஆகவே உங்களுக்கு உதவி அதிகமாகக் கிடையாது என்று சொல்கிறபோது, இந்த மாநிலம் குறைந்த இயற்கை வசதிகளை வைத்துக்கொண்டு, குறைந்த இயற்கை வளங்களை வைத்துக் கொண்டு, குறைந்த கனிமங்களை வைத்துக்கொண்டு தொடர்ந்து

செய்து வருகிற முயற்சிகளின் காரணமாக ஓரளவிற்கு நாம் ஈடு கட்டுகிற அளவுக்கு, மேற்கு வங்காளத்தோடு, குஜராத்தோடு, மகாராஷ்டிரத்தோடு, பஞ்சாப் மற்றும் அரியானா போன்ற மாநிலங்களோடும், நம்முடைய பக்கத்திலே இருக்கிற ஆந்திரம், கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு சமமாக ஈடுகட்டுகிற அளவுக்கு நாம் வளர்ந்துக் கொண்டிருக்கிறோம், என்பதை திட்டக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆனால் இங்கே வளரவில்லை வளரவில்லை என்று பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பற்றாக்குறை பட்ஜெட்டைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்தியாவிலே இருக்கிற ஏழக்குறைய எல்லா மாநிலங்களிலும் கிட்டத்தட்ட இந்த ஆண்டு பற்றாக்குறை வரவு-செலவு திட்டத்தைத்தான் வைத்திருக்கிறது. மைய அரசு 3439 கோடிக்கு வைத்த வரலாற்றை நமது மாண்பு மிகு உறுப்பினர் நாஞ்சிலார் அவர்களும், இன்னும் மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதை ஈடு கட்ட வேண்டிய பெரும் பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் எப்படி இருந்தாலும், அவைகளை சுலபமாக ஈடுகட்டுவதற்கான வழிவகைகளும் மத்திய அரசுக்கு அமைந்திருக்கிறது.

ஆனால் இவ்வளவு ரூபாய் புழங்குகிறபோது இவ்வளவு நோட்டு அடிக்கலாம் என்று ஒரு கணக்கு இருந்தது. அந்தக் கணக்கு இரண்டு மடங்காகி, மூன்று மடங்காகி, நான்கு மடங்காகி, ஐந்து மடங்காகி, ஆறு மடங்கானாலும் அடிக்கலாம் என்கிற நிலை வருகிறபோதுதான், இன்ஃபிளேஷன் வருகிறது. அவர்களே சுட்டிக் காட்டியது மாதிரி 1960 வருஷம் ஒரு ரூபாய்க்கு இருந்த மதிப்பு இப்போது 19 காசுக்கு வந்துவிட்டது என்று சொன்னால் அந்த அளவிற்கு, ரூபாயினுடைய மதிப்பு குறைகிற அளவிற்கு, கீழே வருகிறபோது, டாலருடைய மதிப்பு முன்பு ஒரு டாலருக்கு 6 ரூபாய் என்று இருந்தது, இப்போது கிட்டத்தட்ட 13, 14 ரூபாய் என்ற அளவுக்கு வந்துவிட்டது. டாலருடைய மதிப்பு உயர்ந்துவிட்டது. நம்முடைய ரூபாயின் மதிப்பு குறைந்து வருவதற்கு காரணம் பற்றாக்குறை பட்ஜெட். சென்ற ஆண்டு இரண்டாயிரத்துச் சில்லரை கோடியாக இருந்தது, இந்த ஆண்டு மூன்றாயிரத்துச் சில்லரையாக பற்றாக்குறை வந்துவிட்டது. இப்படி இந்த ஆண்டு மூன்றாயிரத்துச் சில்லரை கோடி என்று பற்றாக்குறை வருகிறபோது, வேறு வழியே இல்லாவிட்டால், இப்படிப்பட்ட பற்றாக்குறையை ஈடுசெய்ய பல நடவடிக்கைகள் எடுப்பதோடு கூட, நாசிக்கிலும் கொஞ்சம் அடித்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட பணம் வருகிறபோதுதான் இன்பிளேஷன் வருகிறது அதைத்தான் அவர்களும் சுட்டிக் காட்டினார்கள்.

அந்த வகையிலே பார்க்கிறபோது கர்நாடகம் 341 கோடியே 60 லட்சம் ரூபாய் இந்த ஆண்டு பற்றாக்குறை. ஆந்திரம் 257 கோடியே 74 லட்சம், பக்கத்திலே இருக்கிற கேரளம் 178 கோடியே 94 லட்சம் நம்முடைய தமிழ்நாடு 179 கோடியே 33 லட்சம்



மொத்தமாக சென்ற ஆண்டினுடைய கடைசி, இந்த ஆண்டினுடைய ஆரம்ப நிலையோடு கணக்கிட்டு, இந்த ஆண்டினுடைய இறுதியில் எப்படி இருப்போம் என்று பார்க்கிறபோது கர்நாடகத்தைப் பொறுத்த வரையில் 623 சோடியே 81 லட்சம் பற்றாக்குறையாகும். ஆந்திரா 456 கோடியே 74 லட்சமும், கேரளா 426 கோடியே 30 லட்சமும் பற்றாக்குறை ஏற்படும் என்பதைப் பார்க்கிறபோது, தெற்கு மாநிலங்களான இந்த 4ம் எடுத்துக் கொள்வோமேயானால் கூட, தமிழகத்தினுடைய நிதி நிலை-வரவு-செலவு 264 கோடியே 20 லட்சம் பற்றாக்குறை இருக்கும் என்று கூறத்தக்க அளவுக்குத்தான் நாம் நம்முடைய நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருக்கிறோம்.

மேலும் தமிழகத்தினுடைய திட்ட அளவை எடுத்துக்கொண்டாலும்கூட, நம்முடைய சக்திக்கு மேலாக, கூடுதலாகத்தான் செலவழித்து வந்திருக்கிறோம். நம்முடைய கடுமையான, கொடுமையான வறட்சி நிலைமை இரண்டாண்டுகளாக, 1982-83, 1983-84 ஆகிய இரண்டாண்டுகளில் இருந்தது. அதற்காக நாம் நாடெங்கிலும் பல பணிகளைக் செய்ய வேண்டிய நிலை இருந்தது. இப்படிப்பட்ட கடுமையான காலத்திலும்கூட நம்முடைய மாநிலத்திலே திட்டச் செலவை எந்த வகையிலும் குறைக்கவில்லை, குறையவில்லை என்பது மட்டுமல்லாமல், திட்ட வளர்ச்சிக்காக செலவழிக்கையில் அதிகமாகவே செலவழித்திருக்கிறோமே தவிர, குறைந்த அளவு நாம் செலவழிக்கவில்லை. 3150 கோடி ரூபாய் 6-வது ஐந்தாண்டு திட்டக் காலத்திற்கு நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை என்று சொன்னால், மூன்றாயிரத்து அறுநூற்று சொச்சம் ரூபாயை செலவழித்து, கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாகவே செலவழித்து, சாதனையை கூடுதலாக்கி காட்டியிருக்கிறோமே தவிர, வளர்ச்சி திட்டங்களில் முயற்சிகளை எந்தக் காலத்திலும், கடுமையான வறட்சி காலத்திலும்கூட குறைக்கவில்லை, அந்த முயற்சியிலிருந்து பின்வாங்கவில்லை.

ஆனால் சில பல மாநிலங்களில் ஒதுக்கப்பட்ட தொகையிலே பாதியளவு கூட, முக்கால்வாசி அளவு கூட, அரையே அரைக்கால்வாசி அளவு கூட ஏன் கால்வாசி அளவுகூட செலவழித்து திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற பாங்குகளை எல்லாம் மற்ற இடங்களில் நாம் காண்கிறோம். இந்த திட்டங்களைப் பொறுத்தவரையில் கூட, கேரளம் இந்த ஆண்டுக்கு அதாவது 1985-86 ஆம் ஆண்டுக்கு, ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தினுடைய முதல் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை 355 கோடி. கர்நாடகம் 859 கோடி. ஆந்திரா 1044 கோடி. நாம் 1102 கோடி. நமக்கு அவர்கள் ஒதுக்கியது 1002 கோடி. என்றாலும் 100 கோடியை கூடுதலாக ஒதுக்கினால்தான், திட்ட வளர்ச்சியின் நன்மைகள் தமிழகத்திற்கு முழுமையாக வரும் என்று 1102 கோடியை நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறோம்.

உறுப்பினர்கள் சொல்வது மாதிரி இதிலே 100 கோடியை குறைத்திருப்போமேயானால், நம்முடைய பற்றாக்குறை 264 கோடி என்று இருப்பது 164 கோடி வந்திருக்கும். ஆனால் எப்படியும் சமாளித்து விடலாம் என்ற கருத்திலேதான், திட்டச் செலவு, வளர்ச்சி செலவு ஆகியவைகளைக் கண்டு, அவர்கள் ஒதுக்கியது 1002 கோடி ரூபாய்தான் என்றாலும், நாம் 1102 கோடி ரூபாய்க்கு போட்டோம்.

இதோடு செலவீட்டை ஒப்பிடும்போது, 1985–1986–ம் ஆண்டு பற்றாக்குறையினுடைய சதவிகித அளவை நாம் கணக்கிடும்போது பார்த்தாலும் கூட தமிழகம்தான் மிகவும் குறைந்த அளவில் இருக்கிறது. நான்கு மாநிலங்களுடைய சதவிகித அளவை பார்த்தாலும் கூட கர்நாடகம் 39.7 சதவிகிதம், கேரளம் 36 சதவிகிதம், ஆந்திரம் 24.7 சதவிகிதம். தமிழ் நாடுதான் மிகவும் குறைந்த 16.2 சதவிகிதம். இந்த குறைந்த அளவுக்குத்தான் நம்முடைய பற்றாக் குறையும், இன்று ஒதுக்கீட்டினுடைய அளவோடு கணக்கிடும் போது இருக்கின்ற பாங்கை நாம் காண்கிறோம். மைய அரசினுடைய திட்ட உதவி நமக்கு கூடுதலாகக் கிடைக்கும், கிடைக்க வேண்டும். அதற்கான தன்மைகளை நாம் பெற வேண்டும் என்று கருதுகிறோம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் சொல்லியதுபோலவும், மற்ற உறுப்பினர்களும், சுட்டிக்காட்டியதைப் போலவும் விற்பனை வரியை பொறுத்த வரையில், அதுதான் மாநில அரசுக்கு, கூடுதலான வருமானத்தை தந்து மாநில அரசினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுகின்றது என்று இதை கொண்டுவந்தபோதே சொன்னார்கள். அப்போது நிதி அமைச்சராக இருந்த கோபால் ரெட்டி அவர்கள் இதனை காமதேனு என்று சொன்னார்கள்.

ஆகவேதான் கேட்டதையெல்லாம் கொடுக்கின்ற அளவுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு வரி இதுதான் என்று அவரே சொல்லுகிற அளவிற்கு முதன் முதலில் இராஜாஜி காலத்தில் இந்த வரியைக் கொண்டுவந்தபோது சொன்னார்கள். இப்போதும் அதிகமான வருமானம் கிடைக்கின்ற வரியாக இருக்கிறது. அதை வைத்துக் கொண்டுதான் ஓரளவிற்கு, மத்திய அரசு நமக்கு குறைத்துக் கொடுத்தாலும்கூட நாம் நம்முடைய பணிகளை நிறைவேற்றத்தக்க அளவில் இருக்கிறோம். ஏற்கனவே அவர்கள் சொன்ன மாதிரி மூன்று பொருள்களை மத்திய அரசு எடுத்து கொண்டதால், சென்ற ஆண்டே நான் குறிப்பிட்டுக் காட்டினேன். நமக்கு கூடுதலாக ரூ. 125 கோடி அல்லது ரூ. 130 கோடி ஒரு ஆண்டிற்கு இழப்பு ஏற்படுகிறது, மூன்று முக்கிய வரிகளை மத்திய அரசு எடுத்துக் கொண்டதால் அந்த விற்பனை வரி நம்மிடத்திலே இருக்குமானால் நமக்கு ரூ. 125 கோடி கிடைத்திருக்கும். கிடைத்திருந்தால் இன்னும் பல திட்டங்களை பல தொகுதிகளுக்கு நிறைவேற்றுவதற்கு நமக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். மேற்கொண்டு நான்கு பொருள்களை எடுக்கலாமா அல்லது எல்லா பொருள்களையும் எடுக்கலாமா என்று வருகின்றபோது அவர்கள் சொல்லுகிறமாதிரி 'ஏந்திச் செல்கின்ற பாத்திரம் சின்னதாக இருந்தால் போதாது





அண்டா, குண்டான் எடுத்து போகிற மாதிரி வருமே தவிர, பாத்திரமாக எடுத்து போக வேண்டிய நிலைமை ஏற்படாது. ஆகவே தான் கொடுத்துவிட்டு வாங்க வேண்டிய அத்தகைய தன்மைகள் இல்லாமல், மாநில அரசுடைய பொறுப்பு ஏற்பட்டதன் காரணமாக இப்படி நியாயத்தின் அடிப்படையில், கொடுக்கப்பட வேண்டியவைகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் அடிக்கடி வற்புறுத்தி சொல்லி வருகிறோம்.

அது மட்டுமல்லாமல், நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சியை நோக்கி நாம் செல்லவில்லை என்றும், நாம் நாளுக்குநாள் மாநிலத்தை கீழ் நிலைக்கு கொண்டு செல்கின்றோம் என்ற அளவிற்கு கருத்துக்களை பரவலாக பல உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்தார்கள். ஆனால் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த நிலையிலிருந்து இந்த ஏழு, எட்டு ஆண்டு காலத்திலே நாம் ஆண்டுக்கு ஆண்டு இக்கட்டான நெருக்கடியில், வளர்ச்சியினுடைய தன்மையின் அடிப்படையில் வளர்ச்சியைக் காட்டிக்கொண்டு வருகிறோமே தவிர எதிலும் குறைப்பாட்டை வைக்கின்ற நிலைமையில் இல்லை, எல்லாத் துறைகளையும் கவனிக்க வேண்டும், சமமாக கவனிக்க வேண்டும், சமூக நீதி எல்லாத் துறைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்து பல்வேறு துறைகளுக்கும் செலவிடுகின்ற வகையில் எல்லாத் துறைகளுக்கும், எப்போதும் போல், எல்லா ஆட்சிக் காலத்திலும் இருந்ததைப் போல், அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம்.

1976–77–லே ரு. 141 கோடி கல்விக்காக செலவழிக்கப்பட்ட இடத்தில் இன்றைக்கு ரு. 468 கோடி செலவிடுகின்ற அளவிற்கு ஏழாண்டு காலத்தில் கல்வித்துறையை நகர்த்திக்கொண்டு வந்திருக்கிறோமே தவிர விழுந்துபடவில்லை. மருத்துவத்திற்கு ரூ. 47 கோடியாக இருந்தது ரு. 123 கோடி அளவுக்கு வளர்ச்சியை நோக்கி வந்திருக்கிறது. பொது சுகாதாரம் ரூ. 18 கோடியாக இருந்தது இன்றைக்கு ரு. 146 கோடி அளவிற்கு வருகை தந்திருக்கிறது. இப்படி ஒவ்வொன்றையும் சொல்வோமானால் நீங்கள் இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாகத் தெரிந்துக்கொள்ள முடியும். வேளாண்மைக்காக ரு. 22 கோடி செலவழித்த இடத்தில் இன்றைக்கு ரு. 98 கோடி செலவழிக்கின்ற அளவிற்கு இருக்கிறோம். கால் நடைக்கு $8\frac{1}{2}$ கோடி செலவழித்தோம். இன்றைக்கு ரூ. 27 கோடி செலவழிக்கிறோம். இன்டஸ்ட்ரீஸ் என்று எடுத்துச் சொல்லுகின்ற வகையில்கூட ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டையும் பார்த்தோமானால் ஆரம்ப காலத்தில் ரு. 1 கோடி, $1\frac{1}{2}$ கோடி, 2 கோடி, 3 கோடி, 4 கோடி, 5 கோடி என்றுதான் தொழில் வளர்ச்சி, பொதுத்துறை, தனியார்துறை, கூட்டுறவுத்துறை, கூட்டு துறை, பெரும் தொழில், நடுத்தரத் தொழில், சிறுதொழில் வங்கிகள் கொடுக்கின்ற கடன், நிதி நிறுவனங்கள் தருகின்ற கடன், சிப்காட், சிட்கோ போன்றவைகள் தருகின்ற உதவி அத்தனையும் வைத்துக் கொண்டுதான் ஒரு மாநிலம் தன்னுடைய தொழில் வளர்ச்சியைக் காண வேண்டுமே தவிர பட்ஜெட்டைப் பொறுத்த வரையில்

[டாக்டர் இரா .நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 8

பார்ப்போமானால் தொழில் இலாக்காவை நகர்த்துவதற்கு, ஓரள விற்கு பங்கீட்டு மூலதனம் எடுக்கின்ற அளவிற்குத்தான் நிதி ஒதுக் கீடு இருக்கிறதே தவிர வேறு அல்ல. எந்த ஒரு காலத்திலே இண்டஸ்டரீஸ் தலைப்பின் கீழே ரு. 200 கோடி ஒதுக்கினார்கள். நாங்களே அதனைக் குறைத்துவிட்டு 7 கோடி 8 கோடிக்கு நிறுத் தியிருக்கிறோம்? எந்தக் காலத்திலும், எல்லோருடைய முயற்சியும் ஒன்று சேர்ந்தால்தான் தொழிலை உயர்ந்த நிலைக்கு கொண்டுவர முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மற்றொன்றை குறிப்பிட விரும்புகிறேன். இப்போது மத்திய அரசினுடைய தன்மைகளை நாம் எடுத்துச் சொல்லுகின்றபோது பேதம், காண்பிக்கின்றது என்று அல்ல, சரியாகவோ, தவறா கவோ ஒரு தடவை காங்கிரஸ் கட்சி டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரே தெளிவாக சொல்லியிருக்கிறார். அதை நான் உணர்த்த ஆசைப் படுகிறேன். India—i.e. Bharath—i.e. Uttar Pradesh என்று சொன்னார். இந்தியா, அதாவது பாரதம், அதாவது உ. பி. என்ற நிலைமையிலே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்று காங்கிரஸ் உறுப்பினர் திரு. டி.டி.கே. அவர்களே சொல்லவேண்டிய ஒரு கட்டம் இருந்தது. அவரே சொல்லுகிறபோது நாங்கள் சொல்லாமல் இருப்போமா? என்பதை காங்கிரஸ் உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 1-10)

அதற்கான காரணத்தை நான் சொல்கிறேன். இப்போது இருக்கிற சூழ்நிலைகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால், 5. 6 நாட்களுக்கு முன்னால் மத்திய அரசாங்கத்தினுடைய மக்களவை யிலே நிதித் துறை இணையமைச்சர் 1985—86க்கான பங்கீட்டு முறைப் பற்றி சொல்லுகிறபோது 7806 கோடியே 86 லட்சம் ஒதுக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே உத்திரபிரதேசத் திற்கு 1176 கோடியே 92 லட்ச ரூபாய் கிடைக்கிறது, பீகார் மாநிலத்திற்கு 820 கோடியே 68 லட்ச ரூபாய் கிடைக்கிறது. மேற்கு வங்கத்திற்கு 784 கோடி ரூபாயும், மத்திய பிரதேசத்திற்கு 574 கோடி ரூபாயும், ஆந்திர பிரதேசத்திற்கு 552 கோடி ரூபாயும் மராட்டியத்திற்கு 474 கோடியும் தமிழ்நாட்டிற்கு 465 கோடி ரூபாயும் என்ற அளவுக்கு கிட்டதட்ட மக்கள் அமைப்புகள், மக்களுடைய அளவுகள் இவைகளை வைத்துக் கணக்கிடுகிறபோது பீகார், குஜராத், மராட்டியம், தமிழ்நாடு முதலிய மாநிலங்கள் இருக்கின்றன. கொஞ்சம் குறைந்த அளவுக்கு கர்நாடகம் மக்கள் எண்ணிக்கையையும் மற்றவற்றையும் சமமாக எண்ணப்படவேண்டிய ஒன்று. உத்திரப் பிரதேசம் மக்கள் தொகையைப் பொறுத்தவரையிலே இரண்டு மடங்கு அதிகமான மக்கள் தொகையைக் கொண்டது. ஆகவே நமக்கு ஐந்து கோடி என்றால் அவர்களுக்கு பத்து கோடி என்ற அளவிலே வரும். ஆனால் உத்திரப் பிரதேசத்திற்குக் கொடுத்திருப்பது 1176 கோடி ரூபாய் என்றால் தமிழகத்திற்கு 465 கோடி ரூபாய்தான். ஆகவே



1985 ஏப்ரல் 8] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிடைக்கவேண்டிய அளவுக்குக்கூட கிடைக்காமல் இருக்கிறநிலைமை தான் இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும் என்பதுதான் நாம் சொல்கிற நிலைமை. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு என்ன முறை கடைப்பிடிக்கப்பட்டதோ அதே முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதே முறை கடைப்பிடிக்கப்படுமானால் குறைந்தது இன்னும் 350 கோடியாவது நமக்கு கூடுதலாக வந்திருக்கும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையை அப்படியே மாற்றமே இல்லாமல் வைத்துக் கொண்டால், அதையே வைத்துக் கொண்டால் நமக்கு 350 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும். ஆனால் எட்டாவது நிதிக்கமிஷன் அதைக் கடைப்பிடிக்காததன் காரணமாக நமக்கு அவ்வளவு கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் விட்டது. உள்ளபடியே திறமையற்றோர்களுக்கு சோம்பேறியாக இருப்பவர்களுக்கு திட்டமிடாதவர்களுக்கு பிற்பட்டவர்கள் என்ற தன்மையிலே தருகிறபோதுதான் இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் வருகின்றன. இந்தியா ஒன்று என்று வருகிறபோது பிற் பட்ட மாநிலங்களை வாழவைக்க வளரவைக்க வேண்டும், வேண் டாமென்று நான் சொல்லவில்லை. நியாயத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் பங்கீடு செய்து விட்டு பிற்பட்ட மாநிலங் களுக்கு என்று தனியாக 1000 கோடி அல்லது 1500 கோடி ரூபாயை ஒதுக்குங்கள். மிகுதியை நியாயத்தின் அடிப்படையிலே எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கித் தாருங்கள். பிற்பட்ட மாநிலங்களுக்குத் தனியாக ஒதுக்குவதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லிவிட்டோம். அப்போதுதான் பிற்பட்ட மாநிலங்கள் மற்ற மாநிலங்களோடு ஈடு கொடுத்து வளர்ந்து இந்தியா ஒன்று என்ற அளவுக்கு இருக்கும் என்பதிலே நமக்கு எந்தவிதமான ஆட் சேபணையும் இல்லை. நான் புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினாலும் நேரம் இடம் தராத காரணத்தி னாலே அவற்றையெல்லாம் விட்டு விடுகிறேன்.

அடுத்து, திட்டப் பணிகளை நிறைவேற்றுகிற முறைகளைப் பார்க்கிறபோது நான் உதாரணத்திற்கு ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1—வது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து 6—வது திட்டம் வரையில் தனிநபர் திட்ட முதலீடு பெர் கேப்பிட்டா — தனி நபருக்கு இந்தத் திட்டத்தில் எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்ற கணக்கை எடுத்துப்பார்த்தால்—1—வது ஐந்தாண்டு திட்டத்திலிருந்து 6—வது ஐந்தாண்டு திட்டம் வரை தனி நபர் திட்ட முதலீடு தமிழ்நாட்டில் 27 மடங்கு உயர்ந்து இருக்கிறது. 1—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1 மடங்கு என்று இருந்தது இப்போது 27 மடங்காக உயர்ந்து இருக்கிறது. ஆனால் மத்திய அரசின் தனி நபர் திட்ட உதவி தொகை எப்படி வந்திருக் கிறது என்றால் 12 மடங்குதான் உயர்ந்து இருக்கிறது. ஆக நம்முடைய திட்ட தொகை 27 மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஆனால் மத்திய அரசின் உதவி 12 மடங்கு தான் உயர்ந்து இருக்கிறது. நம்முடைய மாநிலம் எந்த அளவுக்கு பாதித்து இருக்கிறது? எவவளவு நிதி ஆதாரம் நமக்கு கிடைக்க வேண் டும் என்பதை பார்க்க வேண்டும்,

அது மட்டும் அல்ல, ஆண்டுக்கு ஆண்டு நாம் வஞ்சிக்கப் பட்டு வருகிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். சாதாரணமாக நீங்கள் பார்ப்பீர்களானால் 1—வது ஐந்தாண்டு திட்டத்தில் நாம் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியது 50 சதவீதம், மத்திய அரசு ஒதுக்கியது 50 சதவீதம். பிறகு 3—வது ஐந்தாண்டு திட்டத்தில் மத்திய அரசு 50 சதவீதம், நாம் 50 சதவீதம். 4—வது ஐந்தாண்டுத் திட்டத்திலே—ஆண்டு திட்டம் என்று இடையில் வந்த காரணத்தால் 1966லிருந்து 1969 வரை மத்திய அரசு 40 சதவீதமும் நம்முடைய பங்கு 60 சதவீதமாக இருக்கிறது. அதற்கு பிறகு 4—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 26 சதவீதம் மத்திய அரசின் பங்கு, நம்முடைய பங்கு கிட்டத் தட்ட 74 சதவீதம். 5—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 26½ சதவீதம் தான் மத்திய அரசின் பங்கு. 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் தந்து இருப்பது 2! சதவீதம் தான். நம்முடைய பங்கு 79 சதவீதம் என்று பார்க்கிறபோது, இந்த ரேஷியோ மாறிக்கொண்டு வருவதன் காரணமாக அதுவும் பணம் அதிகமாக ஏறிக்கொண்டு இருக்கிற அளவுக்கு இது ஏற வில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 3 ஆயிரத்துச் சில்லறை கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 93 ஆயிரம் கோடிக்கு போட்டார்கள். 7—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1 லட்சத்து 80 ஆயிரம் கோடிக்கு திட்டங்கள் திட்டமிடப்பட்டிருக்கிறது. அது இன்னும் முடி வுக்கு வரவில்லை. இன்றைக்கு அதிகமான பணம் ஒதுக்குகின்ற நேரத்தில் நமக்கு 21 சதவீதம் தான் வருகிறது என்று சொன் னால், குறைந்த அளவில் பணம் இருந்து திட்டம் போட்ட போது 50 சதவீதம் மாநிலத்திற்குத் தந்தார்கள். அதே கணக் கில் இப்போது வந்திருக்குமானால் நமக்கு அதிகமாக வந்தி ருக்கும்.

மற்றும் இன்று பொதுக் கடன்கள் வாங்குகிறார்கள். பொதுக்கடன் எழுப்புகிற உரிமை மத்திய அரசுக்கு உண்டு. அதற்கு அனுமதி தருகிற உரிமை மத்திய அரசுக்கு உண்டு. எல்லா வங்கிகள் மூலம் பொதுக்கடன்கள் எழுப்புகிறார்கள், அப்படி எழுப்புகிற கடன்களில் கூட 1—வது ஐந்தாண்டு திட்டத் தில் எழுப்பிய கடனில் மாநிலங்களுக்கு எல்லாவற்றிற்கும் சேர்த்துக் கொடுத்தது 76 சதவீதம், மொத்தமாக மத்திய அரசு எழுப்பி அவர்கள் ஒரளவுக்கு வைத்துக்கொண்டு மீதியை எல்லா மாநிலங்களுக்கும் பகிர்ந்து தருகிறார்கள். 1-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மாநிலங்களுக்கு எல்லாம் சேர்த்து 76 சதவீதம் தந்து, மீதி 24 சதவீதத்தை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. ஒவ்வொரு ஐந்தாண்டு பற்றி நான் சொல்லவில்லை. 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன நிலை என்றால் மாநிலங் களுக்கு எல்லாம் சேர்த்துக் கொடுத்தது மொத்தத்தில் வாங்கிய பொதுக்கடனில் 23 சதவீதம் தான். மத்திய அரசு 77 சத வீதத்தை வைத்துக்கொண்டது. இவ்வாறு அவர்கள் வைத்துக் கொண்டு செலவழிப்பதால் நாம் எண்ணுகின்ற காரியங்களை





முறையோடு நிறைவேற்ற முடியவில்லை, என்பதை திரும்ப திரும்ப நாம் வற்புறுத்தி கூறிக்கொண்டு வருகிறோம். அது மட்டும் அல்ல, நமக்கு 9 சதவீதம் கிடைத்தது 1971—72ல், 7½ சதவீதம் 1980-81லே, ஐந்தே முக்கால் சதவீதம் 1982-83லே. இந்த நிலைமைகளை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மற்றும் புதிய திட்டங்கள் என்று சொல்லுகிறபோது ஒரு புதிய திட்டமும் இல்லை என்று சொல்லுகிறபோது நீங்கள் எல்லாம் தெளிவுபெற வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே அடுக்காக வைக்கப்பட்டு இருக்கக்கூடிய புத்தகங்களில் இவ் வளவு பெரிய புத்தகத்தை போட்டு கொடுத்து இருக்கிறோம். அதிலே புதிய திட்டங்கள் என்ன என்ற பட்டியலை கொடுத்து இருக்கிறோம். இந்த ஆண்டு மட்டும் என்ன என்ன புதிய திட்டங்கள் என்றும் ஏற்கனவே இருக்கிற நடைமுறையில் இருந்து வருகிற திட்டங்களை விரிவாக்கம் செய்கின்ற திட்டங் கள் மட்டும் அல்லாமல் புதியதாக எடுத்துக்கொள்ளப்படுகிற, நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்ற திட்டங்கள் என்று இதிலே 54 கோடி ரூபாய்க்கு போட்டு இருக்கிறோம் என் பதை தெளிவுபடுத்திக் காட்டியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-20)

ஆனால் இந்தப் புத்தகத்தையும் வாங்கி வைத்துக்கொண்டு, ஒரு திட்டமும் இல்லை, ஒரு திட்டமும் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுதான் வியப்புக்குரிய ஒன்றாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, மின்துறைக்குத்தான் அதிகமாக நிதி ஒதுக்கு கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன் னார்கள். மின்துறைக்குத்தான் அதிக சலுகை தரவேண்டும். ஏனென்றால், மின்துறை வளர்கின்ற ஒரு சூழ்நிலையையொட்டித் தான்....

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, புதிய திட்டங் கள் பற்றிய புத்தகம் இருக்கிறது. இதை உறுப்பினர்கள் ஒரு வேளை படித்தார்களோ, படிக்கவில்லையோ என்ற சந்தேகத்தைக் கூட எழுப்பினார்கள். புதிய திட்டம் என்று சொன்னால், ஹெவி இன்டஸ்ட்ரீஸ்: இந்து பத்திரிகை கூட சுட்டிக் காட்டியது ஹெவி இன்டஸ்ட்ரீஸ் மூலமாக எட்டு சர்க்கரை ஆலைகள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இருக்கிறதே தவிர, அதுபற்றிய திட்டங்கள் உண்டா? கனரகத் தொழிற்சாலை பற்றிய திட்டங் களுக்கு நீங்கள் ஒதுக்கியிருக்கிற தொகை இந்தப் புத்தகத்தில் இருக்கிறதா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பத்து சர்க்கரை ஆலைகள், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாட்டில் வரவேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. அது, எதிர்பார்க்கப்படுவதற்குக் காரணம், ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் முடிவாகவில்லை. ஆனால் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏழாயிரம் கோடி அளவிற்கு

நாம் கேட்கலாம் என்ற அளவிற்கு நாம் எல்லாத் துறைகளையும் வைத்துக் கணக்கிட்டு, சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையிலும் பத்து வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். பத்து வர வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்; வரும் என்று இன்றைக்கு நான் சொல்லமுடியாது. முப்பதாம் தேதி தான் நாங்களெல்லாம் போகிறோம்; திட்டக்குழு அமைச்சரோடு பேச; அதற்குப்பிறகு தேசீய வளர்ச்சிக் கூட்டத்தைப் பிரதமர் கூட்டியதற்குப் பிறகு திட்டவட்டமாக, தெளிவாக, இவ்வளவு என்று சொன்னதற்குப் பிறகு தான் வரும். வருகின்ற பொழுது அப்பொழுது சொல்லுகின்றபொழுது இது வரும் என்று நான் சொல்வேன். ஆகவே,. ஏழாவது ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளே இந்த பத்து சர்க்கரை ஆலைகளும் அந்தத் துறைகளிலே வரவேண்டுமென்ற அளவிற்கு நாம் ஓரளவிற்கு டென்டேட்டிவாகத் திட்டம் வகுத்து வைத்திருக்கிறோம். இந்தத் திட்டம் இன்னும் முடிவு பெறவில்லை. முடிவு பெறாததன் காரணத்தினாலேதான், எதிர்பார்க்கப்படுகிறது, கருதப்படுகிறது என்ந சொற்களை நாங்கள் பிரயோகப்படுத்தியிருக்கிறோம்.

மின் துறையைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு மின்துறை அமைச்சரவர்களும் குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டினுடைய, வளர்ச்சியினுடைய தன்மைக்கு குந்தகமாக இருப்பதே போதுமான அளவிற்கு நமக்கு மின் சக்தி கிடைக்காததுதான். நம்முடைய மாநிலம் எவ்வளவு மின் சக்தி உண்டோ அவ்வளவையும் பயன்படுத்தி வருகிறது. இன்னும் எவ்வளவு இங்கிருந்து வருமோ அதையெல்லாம் பயன்படுத்திக்கொள்ள கூறுபாடு உண்டு. நாம் கேரளாவிலிருந்து — அங்கே உபரி வருகிறது— வாங்குகிறோம்; கர்நாடகத்திலே உபரி கிடைக்கிறது, வாங்குறோம். ஆந்திராவிலே உபரி கிடைக்கிறது; வாங்குகிறோம். நாம் வாங்குகிற நிலமைகளில் — பற்றாக்குறையில் இருக்கிறோமே தவிர நாம் அதிகம் உற்பத்தியாக்கி பிறருக்குத் தருகின்ற அளவிற்கு உபரி ஆகின்ற நிலைமை இல்லை. நம்முடைய தேவை இன்னும் அதிகமாக இருக்கிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலே கூட போதுமான அளவிற்கு நமக்குக் கிடைக்குமா என்கின்ற அளவிற்கு ஐயப்பாடும் இருக்கிறது. ஆகவேதான், தனியார் துறையிலே தனியாக வந்து மின் உற்பத்தி நிலையம் அனல் மின் நிலையம் வைக்க முன் வந்தாலும் கூட அவர்களுக்கு நாங்கள் அனுமதி அளிக்கிறோம் என்று மாநில அரசு அளவிலே நாம் ஒப்புக்கொண்டு இருக்கிறோம். மத்திய அரசு இன்னும் அதற்கு ஒப்புதல் தரவில்லை. ஒப்புதல் தந்துவிட்டால் கோயம்புத்தூரைப் பொறுத்து, ஆவடியைப் பொறுத்து, அம்பத்தூரைப் பொறுத்து, மதுரையைப் பொறுத்து அல்லது இராணிப்பேட்டையைப் பொறுத்து ஒசூரைப் பொறுத்து, தனி மின் நிலையம் வைத்து உங்களுக்கு நீங்கள் பயன் படுத்திக் கொள்ளுங்கள். உற்பத்தியாகிற மின்சாரத்தை நாங்கள் மற்றைய சிறு தொழில்களுக்கும். கடைகளுக்கும், வியாபாரத்திற்கும்,





காமர்ஸ் அண்ட் இன்டஸ்ட்ரீஸ், ட்ரேடு ஆகியவைகளுக்குத் தருவதற்கும், வீட்டுவசதிகளுக்கும், மற்றவைகளுக்கும் பயன்படுத்துவோம் என்று கூட நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டுகூட — நூறு கோடி ரூபாய் சென்ற ஆண்டைவிட மின் உற்பத்திக்காக -- 326 கோடியை நாம் ஒதுக்கியிருக்கிறோம். தூத்துக்குடியில் புதிய தொழில் மையம் வருகிறது என்ற அளவிற்கு இந்த ஆண்டு கொண்டு வருவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்.

ஏற்கனவே பல்வேறு திட்டங்கள், 108 கோடி ரூபாய்த் திட்டச் செலவில் லைனியர் ஆல்கையல் பென்ஜின் தயாரிக்கும் திட்டம் என்று சொன்னால், அதிலே 300 பேருக்குத்தானே வேலை கிடைக்கிறது என்றார்கள். இது அரசாங்கமே செலவழிக்கிற பணம் அல்ல, இது கூட்டுத் திட்டம். ஆனால், மூலப்பொருட்கள் எதையும் உருவாக்குவதாக இருந்தாலும் அதிலே எடுத்துக்கொள்ளப்படுகின்ற ஆட்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். இப்பொழுது அணு மின் நிலையம் என்றால், 600 கோடி, 700 கோடி என்று செலவழித்தாலும் அதிலே வேலை செய்கின்ற ஆட்களின் எண்ணிக்கையை பார்த்தோமேயானால் குறைவாகத்தான் இருப்பார்கள். ஆனால், ஏராளமான தொழில்களை வளர்க்கக்கூடிய மூலப்பொருட்களை உருவாக்கக்கூடிய ஒரு பெரும் தொழிற்சாலையிலே முதலீடு அதிகமாகவும், அதிலே வேலை செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் தான் இருப்பார்கள். ஆனால் இதனுடைய ப்ராடக்ட் வெளியே வந்ததற்குப் பிறகு, இதைப் பயன்படுத்தித் துவங்குகின்ற தொழிற்சாலைகள், சிறு சிறு தொழிற்சாலைகள் பல்லாயிரக் கணக்கிலே வரக்கூடும். அந்தப் பல்லாயிரக் கணக்கிலே வரக்கூடிய தொழிற்சாலைகளிலே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கின்ற வாய்ப்பு ஏற்படக்கூடும்.

இத்தகைய சூழ்நிலைகளின் அடிப்படையிலே பெரும் தொழில்கள் என்று நீங்கள் எதை எடுத்துக்கொண்டாலும் கூட, இப்பொழுது எழுநூற்றுச் சில்லரை கோடி, ஆயிரத்துச் சில்லரை கோடி போட்டிருக்கின்ற பிலாய் கம்பெனி, துர்காபூர் கம்பெனியையெல்லாம் பார்த்தீர்களேயானாலும் அதிலே வேலை செய்யக் கூடியவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டு, அதற்குச் செலவழித்த பணத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், சாதாரணமாகக் குடிசைத் தொழில்களிலே வேலை செய்கின்றவர்களின் எண்ணிக்கையையும் வைப்பேரமேயானால் இது அதிகமாக இருக்கும். இங்கே கூட இருக்கின்ற மின்சார விசிறிகளை எல்லாம் எடுத்துவிட்டு ஆளுக்கொரு விசிறி மட்டையைக் கொடுத்து ஒவ்வொருவருக்கும் நின்று ஒவ்வொருவர் வீசிக்கொண்டிருக்கவேண்டும் என்று விட்டால் ரொம்ப அதிகமான அளவுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கத்தான் செய்யும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் மூலப்பொருள் உற்பத்தி ஆகின்ற எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் ஆட்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். சிறு

தொழில்கள் விரிவடையும்போது அதனுடைய எண்ணிக்கை அதிகமாகும். அந்த அடிப்படையில்தான் பல்வேறு பணிகளை ஆற்றிக்கொண்டு வருகிறோம் என்பதையும் இந்த வாய்ப்பிலே குறிப்பிட்டு கூறிக்சொள்ள விரும்புகிறேன்.

நமக்குக் கனிவளங்கள் குறைவு. பீகார், ஒரிஸ்ஸா, ராஜஸ்தான் மத்திய பிரதேசம் உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களில் இருக்கின்ற அளவுக்கு கனிவளங்கள் நம்முடைய நாட்டிலே இல்லை. சற்றுக்குறைவுதான். நம்முடைய நாட்டிலே லிக்னைட் இருக்கிறது. பழுப்பு நிலக்கரி இருக்கிறது. மங்கனீசு இருக்கிறது. மாங்னஸைட் இருக்கிறது: யுரேனியம் குளோரியம் கொஞ்சம் தூத்துத்குடி கடற்கரைப்பகுதியில் மணவாளக்குறிச்சி பக்கத்தில் இருக்கிறது. இவ்வாறு ஓரளவுக்கு இருக்கின்றதே தவிர பெரும் தொழில் வளங்கள் என்று சொல்கிற அளவுக்கு பெருமளவில் கனிவளங்கள் நம்முடைய நாட்டிலே இல்லை. இருந்தாலும் கூட அந்த நிலமைகளை எல்லாம் குறிப்பிட்டுப் பார்க்கின்ற போது அகில இந்திய தொழில் வளர்ச்சியினை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் வளர்ச்சியின் சதவீதம் 1977—லே 6.8 சதவீதம் அகில இந்தியாவில் இருந்தபோது நம்முடைய தமிழகத்தின் வளர்ச்சி சதவீதம் 14.72 ஆக இருந்திருக்கிறது. 1979—ல் 1.2 ஆக இந்தியாவின் தொழில் வளர்ச்சி இருந்தபோது தமிழகத்தின் வளர்ச்சி 5.7 சதவீதமாக இருந்தது. அப்படி உயர்ந்துதான் இருந்திருக்கின்றது. 1980—லே .7 சதவீதம் என்ற அளவுக்குத்தான் அகில இந்தியாவின் சதவீதம் வளர்ச்சி இருந்தபோது தமிழகத்தில் மட்டும் 5.7 சதவீதம் வளர்ச்சி இருந்தது. 1981—லே அகில இந்திய வளர்ச்சி 4.2 சதவீதம் என்றிருந்தபோது தமிழகத்தில் 5.8 சதவீதம் இருந்தது.

இப்படி அகில இந்திய சதவீதத்தை விட நாம் ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்துதான் வந்திருக்கிறோமே தவிர பின்வாங்கிவிட்டோம் என்று கருதுவதற்கான நிலமைகள் இல்லை. பெருந்தொழில், நடுத்தரத் தொழில்கள் என்பதைப் பொறுத்த வரையில் 1977—ல் 2570 என்ற இடத்தில் இருந்தது. 7 ஆண்டுக் காலத்தில் அந்த லார்ஜ் ஸ்கேல், மீடியம் ஸ்கேல் என்று சொல்லப் படுகின்றவைகளைப் பொறுத்தவரையில் 11920 என்ற அளவுக்கு வளர்ந்து கொண்டுதான் வந்திருக்கின்றது. எந்த ஒரு மாநிலத்திலும் அத்தனை தொழில்களிலும் அரசே மூலதனம் இடுவதில்லை. பம்பாய் வளர்ந்திருக்கின்றது என்றால் டாட்டா, பிர்லா அங்கே இருக்கிறார்கள். அண்மையில் கணக்கு வந்தது டாட்டாவுக்கு சொத்து மட்டும் ஆயிரத்து இருநூற்றுச் சில்லரைக்கோடி. பிர்லாவும் கிட்டத்தட்ட அந்த ஆயிரத்து இருநூற்றுச் சில்லரைக்கோடியை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிற நிலைதான் இருக்கின்றது. அவர்கள் தொழிற்சாலை முழுவதையும் அந்தப்பகுதியிலே வைக்கிறார்கள். தனியார்களுடைய முதலீடு, வங்கிகள் தருகின்ற முதலீடு' கூட்டுறவுத் துறை, கூட்டுத்துறை எல்லாம் சேர்ந்துதான் ஒவ்வொரு





மாநிலத்தினுடைய நிலைமைகள் வருகின்றது. அப்படி பார்க்இன்றபோது 11920 பெருந்தொழிற்சாலைகள் நமக்கு வந்திருக்கின்றன. என்று சொன்னால் நாம் தொழலில் பின் தங்கிவிட்டோம் என்ற பொருள் இல்லை. சிறு தொழில்களை செய்ய ஊக்குவிப்பதில் இந்த அரசு, புரட்சித் தலைவரின் தலைமையின் கீழ் வந்ததற்குப்பிறகு எந்த வகையிலும் சோடைபோக வில்லை என்பதை இந்த மன்றமும் உணர வேண்டும். இந்த மன்றத்திற்கு நான் அறிவிப்பதன் மூலமாக நாட்டுக்கு நான் உணர்த்த விரும்புகிறேன்.

31—3—1978 நிலவரப்படி அதாவது 1978—ஆம் ஆண்டு மார்ச் 31—ஆம் தேதி நிலவரப்படி சிறு தொழில்கள் 18,789 என்ற இடத்தில் இருந்த நாம் இந்த ஆண்டு பிப்ரவரித் திங்கள் நிலவரப்படி அதாவது 28—2—1985 நிலவரப்படி 58,131 என்ற இடத்திற்கு நாம் வளர்ந்திருக்கிறோம். இப்படி பதிவு செய்யப் பட்ட நிலையில் உள்ள சிறு தொழில்களைப் பொறுத்தவரை யில் 18 ஆயிரத்துத் சில்லரை என்று நிலையிலிருந்து 58,131 என்ற அளவுக்கு வந்திருக்கிறோம் என்றால் அடுத்த ஆண்டு இன்னும் இதை அதிகப்படுத்துவதற்கான ஊக்கமும், ஆக்கமும் தருகிற அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகளின் விளை வால் ஏற்படும் வங்கிகள் கடன் என்ற தன்மையையும் வைத்து சுய வேலை வாய்ப்புத் திட்டங்களையும் பயன் படுத்தி எல்லா வங்கிகளையும் பயன்படுத்தி அதன்மூலமாக மேலும் ஊக்கப் படுத்துகிற நிலையில் நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் கூட 1977—78—ல் 7 கோடியே 69 இலட்சமாக இருந்தது. 1981—84—ல் 134.62 கோடிக்குக் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொன்னால் தமிழகம் எந்த அளவுக்கு ஊக்கம் தந்து வளர்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறியலாம். மற்றொன்றையும் நான் கூறுகிறேன். இங்கே பலபேர் சொல்கிறார்கள். நாம் பதினான்காவது இடத்துக்குப் போய்விட்டோம், 19-வது இடத்திற்கு போய்விட்டோம், 16-வது இடத்திற்குப் போய்விட்டோம் என்றெல்லாம் எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு தன்மையில் நாம் 19-வது இடத்திற்குப் போய்இருக்கிறோம். அதாவது அல்ஃபபெட்டிக் ஆர்டர் என்ற அடிப்படையில் நாம் 19-வது இடத்தில் இருக்கிறோம். அதற்குப்பிறகு திரிபுரா, உத்திரபிரதேசம், வெஸ்ட் பெங்கால் எல்லாம் வருகிறது. எனவே இந்த ஒன்றில்தான் நாம் 19-வது இடத்திலே இருக்கிறோமே தவிர மற்ற வகைகளைப் பார்த்தால்......

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கருத்துக்களை மட்டும் எதற்காக நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், நமக்கு இயற்கை வளங்கள் இல்லாத நிலையில், நமக்குப் பல்வேறு இடர்ப்பாடுகள் இருந்தாலும், மனித சக்தியை Man power அறிவுத் திறனை, ஆற்றல் திறனை (intelligence and talent) பயன் படுத்தி நாம் ஈடுபடுகிற அளவுக்குத் தமிழகம் வளர்ந்து கொண்டு வருகிறது என்பதற்காகத்தான் இவ்வளவும் நான் சொல்கிறேன். அகில இந்தியாவிலும் டெக்னிஷியன்ஸ் உருவாக்கித் தருவதிலும் நாம் தான் முன்னனியிலே இருக்கிறோம் என்பதையும் நம் முடைய மாநிலத்திலேயிருந்து உருவாகிச் செல்கின்ற டெக்னிஷியன்ஸ், தொழில்நுட்ப வினைஞர்கள், இன்றைக்கு போபாலிலும் சரி, ரூர்க்கேலாவிலும் சரி, துர்காபூரிலும் சரி, எந்த இடத்திலே நீங்கள் போய் பார்த்தாலும்கூட, அங்கே யிருக்கிற தொழில்நுட்ப வினைஞர்கள், திறமையாளர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்திலேயிருந்து சென்றவர்களாகத்தானிருப் பார்கள். நம்மிடத்திலே அறிவுத்திறன், ஆற்றல் இருக்கிறது. நமக்கு முதலீடு செய்கிற திறன் மட்டும் வளர்ந்தால், அதற்கு உதவி மத்திய அரசு செய்யுமேயானால் மற்ற வகைகளிலும் கிடைக்குமேயானால், இதைவிட அதிகமாகக் கூடும் என்பதற் காகத்தான் சொல்கிறேன்.

அமைப்பு ரீதியில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய எண்ணிக்கையிலே இந்தியாவில் இருப்பதிலே நாம் மூன்றாவது இடத்திலே இருக்கிறோம். முதல் இடத்திலே மகாராஷ்டிரம். அங்கே 9,88,000 பேர்கள்—ஆர்கனைஸ்ட் லேபர். மேற்கு வங்காளம் இரண்டாவது இடத்திலே வருகிறது, 7,56,000 பேர்கள், தமிழ்நாடு மூன்றாவது இடத்திலே வருகிறது, 6,39,000 பேர்கள், மற்ற ஊர்கள் எல்லாம் இதற்குப் பின்னால்தான் வருகின்றனவே தவிர, நாம் அமைப்பு ரீதியிலே பணியாற்றுகிற தொழிலாளர் களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தவரை மூன்றாவது இடத் திலே இருக்கின்ற நிலைமையைக் காண்கிறோம்.

அது மட்டுமல்லாமல், மாநில வருமானம் (ஸ்டேட் இன்கம்) என்று எடுத்துக் கொள்வோமானால், 1977–78-ல் ரூ. 4,710 கோடி இதிலே நான் சொல்கிற அவ்வளவு கணக்கும் ரிசர்வ் வங்கி கொடுத்திருக்கிற லிஸ்ட்படி வந்திருக்கிறது. ரிசர்வ் வங்கி தந்த கணக்குப்படி மாநிலத்தினுடைய மொத்த வருமானம் 1977–78–ல் ரூ. 4,710 கோடி. 1983–84-ல் ரூ. 6802 கோடி, 1984–85-ல் கணக்கு இன்னும் வரவில்லை. 1983–84-ல் ரூ. 6,802 கோடி என்பது வளர்ச்சியைக் காட்டுகிற அறிகுறியா, வீழ்ச்சியைக் காட்டுகிற அறிகுறியா ?





தனி நபர் வருமானம், பெர் காப்பிட்டா இன்கம், 1977–78-ல் ரூ. 1,017 ஆக இருந்தது தமிழகத்தில். ஒவ்வொருவருக்கும் தனி நபர் வருமானம் ரூ. 1,017. 1983–84ல் ரூ. 1,376 தனி நபர் வருமானம்.

தொழில் உற்பத்திக் குறியீட்டுப் புள்ளி,

Indez on Industrial Production

என்ற கணக்கை எடுத்துப் பார்த்தால், 1977–78–ல் 143.1 ஆக இருந்த தமிழ்நாடு, 1983–84–ல் 239.9 ஆக உயர்ந்திருக்கிறதே தவிர குறையவில்லை. மின்சார உற்பத்தியை எடுத்துக்கொண் டால், 1977–78–ல் 493 கோடி நாம் உற்பத்தியாக்கினோம். 1983–84ல் 693 கோடி யூனிட் உற்பத்திக்குப் பயன்படுகிற அளவுக்கு, தமிழகம் 493 கோடியிலிருந்து 200 கோடி யூனிட் உயர்ந்திருக்கிறது என்றால், 7 ஆண்டுக்காலத்திலே அதிகமாக்கித் தருகின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறோமே தவிர வீழ்ந்துவிட வில்லை.

எல்லா துறைகளிலும் மொத்த தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் ஆன்னார்கனைஸ்ட் லேபர் என்று வருகிறபொழுது 1977–78–ல் 1 கோடியே 76 இலட்சம் பேர்கள். இன்றைய நிலை யில் 2 கோடியே 9 இலட்சம் பேர்கள் இந்தத் துறையிலே வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் வங்கிகளுடைய கிளைகளை எடுத்துக் கொண் டாலும் கடன் கொடுத்து, ஊக்குவித்து, குறைந்த அளவுக்கு, வட்டி கொடுத்து, ஊக்குவித்து வருகின்ற அளவுக்குப் பல்வேறு துறைகளிலே செய்கின்ற அளவுக்கு, 1977–78–ல் 2,382 வங்கிகள் கிளைகள் இருந்த இடத்தில் இப்பொழுது 3,624 வங்கிக் கிளைகள் சிற்றூர், பேரூர்கள்தோறும் தோன்றியிருக்கின்றன என்றால் அந்த அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று பொருள்.

அது மட்டுமல்லாமல் மோட்டார் வாகனங்களை எடுத்துக் கொண்டாலும், போக்குவரத்து, டிரான்ஸ்போர்ட்டேஷன், சரக்குகள் அனுப்புவது, மற்றவைகளை அனுப்புவது என்ற கணக்கை எடுத்துக்கொண்டாலும் 31-3-1978 கணக்குப்படி 2,21,195 மோட்டார் வாகனங்கள் இருந்த இடத்தில் 31–3–1983ல் 4,27,030 வாகனங்களாக வளர்ந்திருக்கின்றன என்றால் எந்த அளவுக்குச் சரக்குகள் நகர்கின்றன, என்பது தெரியும். சரக்குகள் நகர்கின்றன என்றால் தொழில் உற்பத்திப் பெருகுகிறது என்று பொருள்.

கிட்டத்தட்ட ரூ. 200 கோடிக்கு மேலாக இருந்த விற்பனை வரி இப்பொழுது கிட்டத்தட்ட ரூ. 900 கோடியை எட்டுகிறது என்று சொன்னால், விற்பனை வரியினுடைய அளவைக்கூட நாம் ஆண்டுக்காண்டு வளர்த்தவில்லை, கொஞ்சம்தான் அதிகரித் தோம். இருந்தாலும் அவ்வளவு தொழில்கள் உற்பத்தியினால்,

வியாபாரம் நடப்பதனால். வரி செலுத்துவதனால்—அவர்கள் கொடுத்த கணக்கை மட்டும்தான் நான் சொல்கிறேனே தவிர, நாம் வாங்கின கணக்கை மட்டும்தான் நான் சொல்கிறேனே தவிர; வர வேண்டிய கணக்கையெல்லாம் கூட நான் சொல்லவில்லை அந்தக் கணக்கின் அடிப் படையில் வைத்து பார்த்தால் மிகச் சிறப்பாக நாம் அறியலாம். இப்படி கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் கூட நாம் வளர்ச்சியுற்றிருக்கிறோம். 1977–78ல் 15 கோடி உற்பத்தி செய்து, 17 கோடி விற்பனை செய்த இடத்தில், 1984–85ல் 90 கோடி உற்பத்தி செய்து 96 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு விற்பனை செய்கிற அளவிற்கு அந்தத் துறையில் நாம் வளர்ந்திருக்கிறோம். மறுபடியும் மத்திய அரசின் தன்மைக்கு வருவதற்கு காரணம், தொழில் சாலைகளை ஏற்படுத்த வேண்டும்; நாம் முதலீடு செய்யவில்லை, அதிகம் ஒதுக்கினால் என்ன என்றெல்லாம் கேட்டார்கள். ஆனால் 1977–78-ல் பீகாரில் மட்டும் மத்திய அரசு இன்வெஸ்ட்மெண்ட் செய்தது 2,825 கோடி. மத்திய பிரதேசத்தில் 1,793 கோடி. மேற்கு வங்கத்தில் 1,058 கோடி. மகாராஷ்டிரத்தில் 909 கோடி. ஒரிசாவில் 654 கோடி. குஜ்ராத்தில் 627 கோடி. தமிழ் நாட்டிலே ஏழாவது இடத்தில் 563 கோடியில் நாம் நிற்கிறபோது நம்மை ஒத்த மக்கள் தொகையைக் கொண்டிருக்கிற பீகாரில் 2,815 கோடி ஒதுக்குகிற போது தான் இங்கே கொஞ்சம் அதிகமாக ஒதுக்கினால் என்ன? அதிலே நியாயம் வேண்டுமென்று கேட்கிறோம்.

இப்படி 1982–83-ல் நாம் ஒன்பதாவது இடத்திற்கே போய் விட்டோம். இப்போது என்னவென்றால் பீகாரில் 4,692 கோடி இன்வெஸ்ட்மெண்ட செய்திருக்கிறார்கள். அதிலே பாதியாவது நமக்கு இங்கே கொடுத்தால் அதிலே எவ்வளவு தொழிற்சாலை களை வைக்கலாம்? எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுக்கலாம்? வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதையும் பார்க்க வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். கேரளத்திலும், தமிழகத்திலும், மகாராஷ்டிரத்திலும் அதிகமாகத் தான் இருக்கும். மேற்கு வங்கத்திலும் அதிகமாகத் தான் இருக்கும். காரணம் என்னவென்றால் இங்கேயெல்லாம் படிக் கிறவர்கள் அதிகம். எஜுகேஷன் அதிகம். இங்கேயெல்லாம் கிராஜுவேட்.ஸ் அதிகம். எஸ். எஸ். எல். சி. தாண்டுகிறவர்கள் அதிகம். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருப்பவர் களின் பட்டியல் கணக்கு அதிகமாக இருக்கிறது என்று சொல் கிறார்கள். இந்தப் போக்கு படிக்கிறவர்கள் பகுதியில் தான் அதிகமாக காணக்கூடும். எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேன்சில் பதிவு செய்கிற போது கேரளா அதிகமாக வருகிறது. தமிழ் நாட்டில் அதிகமாக வருகிறது. மேற்கு வங்காளத்தில் அதிகமாக வருகிறது என்றால் அதற்கெல்லாம் காரணம் படித்தவர்களுடைய எண்ணிக்கை ஆண்டிற்காண்டு வளர்வதுதான். அதனால்தான் அந்த நிலை ஏற்படுகிறது.





4,692 கோடி ரூபாய் பீகாருக்கு ஒதுக்குகிற நிலையில் 1982-83-ம் ஆண்டின் கணக்குப்படி பார்த்தால் நம்முடைய மாநிலத்தில் 1,332 கோடி தான். இப்போது நெய்வேலியில் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். அது வந்தால் நல்லதுதான். ஒரு திட்டம் நாலாயிரத்துச் சில்லறை கோடி ரூபாய்க்கு போட்டி ருப்பதாக நாம் அண்மையில் பத்திரிகையில் பார்த்தோம். இங்கேயிருந்து போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்றும், இந்த நாலாயிரத்துச் சில்லறை கோடி ரூபாய்த் திட்டத்தை ஏற்று இங்கே கொண்டு வந்தால் மூலத்தொழில்களைச் செய்யவும், துணைத் தொழில்களைச் செய்யவும், நெய்வேலியிலிருந்து கடலூர் வரையிலும், நெய்வேலியிலிருந்து விருத்தாசலம் வரையிலும் கூட ஏராளமான தொழில்களை வைக்க வசதி ஏற்படும். நெய்வேலி புராஜெக்ட் அனுப்பியிருக்கிற திட்டம் நமக்கு வருமேயானால் அதிக நன்மை ஏற்படும் என்பதையும் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே தொழிற்சாலையில் மூலதனம் செய்வதிலே கூட நாம் ஓரளவிற்கு பற்றாக்குறை மாநிலமாக இருந்தாலும் ஆறாவது இடத்திலே இருக்கிறோம். கொடுக்கபபட்ட மொத்த சம்பளம், வேஜஸ் கணக்கை எடுத்தாலும் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. நேரமில்லாத காரணத்தால் நான் புள்ளி விவரத்திற்கு போக விரும்பவில்லை. மகாராஷ்டிரம் முதல் இடம். மேற்கு வங்கம் இரண்டாவது இடம். தமிழ் நாடு மூன்றாவது இடம். ஆகவே எமாலுமெண்ட்ஸ் கணக்கை எடுத்து பார்த்தாலும் மகாராஷ்டிரா முதல் இடம், மேற்கு வங்கம் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம். வெளிப்படுத்திய உற்பத்தியின் மதிப்பளவு, வேல்யு ஆப் அவுட்புட்ஸ் கணக்கை எடுத்துப்பார்த்தால் மகாராஷ்டிரா முதல் இடம், குஜராத் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம்.

மூலப்பொருள்களுக்கும் உற்பத்திப் பொருள்களுக்கும் இடை யில் ஏற்பட்ட கூடுதல் மதிப்பு—வேல்யூ ஆர்டர்—கணக்கை எடுத்துப் பார்த்தால் மகாராஷ்டிரா முதல் இடம், மேற்கு வங்காளம் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம், குஜராத் நான்காவது இடம், உத்திரபிரதேசம் ஐந்தாவது இடம். கூடுதல் மதிப்பளவிலே பெர்கேபிட்டா வேல்யூ என்று எடுத்துக் கொண்டால் மகாராஷ்டிரா முதல் இடம், குஜராத் இரண்டாவது இடம், ஹரியானா மூன்றாவது இடம், தமிழ் நாடு நான்காவது இடம், மேற்கு வங்காளம் ஐந்தாவது இடம். ஆகவே மொத்த உற்பத்தியின் மதிப்பை எடுத்துக்கொண்டாலும், 'இண்டஸ்ட்ரியல் புரடக்ஷன்' கணக்கை எடுத்துக்கொண்டாலும் மகாராஷ்டிரா முதல் இடம், உத்தர பிரதேசம் இரண்டாவது இடம், தமிழ் நாடு மூன்றாவது இடம், மேற்கு வங்காளம் நான்காவது இடம், குஜராத் ஐந்தாவது இடம்.

வங்கிக் கடன் அளிக்கப்பட்ட பழுதுபட்ட சிக்மில்ஸ்ஸை எடுத்துக்கொண்டாலும் அதிகமான அளவு சிக்மில்ஸ் இருப்பது மேற்கு வங்காளம்தான். அங்கே 108 இண்டஸ்ட்ரிஸ் இருக் கின்றன. இரண்டாவது மகாராஷ்டிரம் 92; உத்தரபிரதேசம் 54, மூன்றாவது இடம்; குஜராத் 42, நான்காவது இடம். தமிழ் நாடு 40, நம் மாநிலத்தில் 40 சிக்மில்கள் இருக்கின்றன. இன்றைக்கு நிலுவையில் உள்ள கொடுக்கப்பட்ட கடன், அவற்றை பிழைக்க வைக்க கொடுத்து திரும்ப வரவேண்டியது தமிழகத்தைப் பொறுத்தவரையில் 228 கோடி, மேற்கு வங்கத் தைப் பொறுத்தவரையில் 424 கோடி, மகாராஷ்டிரம் 405 கோடி, உத்திரப்பிரதேசத்தில் 227 கோடி, குஜராத்தில் 152 கோடி என்ற அளவுக்கு இருக்கிறது. அதைப்போன்று வழங்கப் பட்ட தொழில் உரிமம்பெற்றதில் மகாராஷ்டிரம் 334லைசென்ஸ் பெற்றிருக்கிறது. அடுத்து உத்திரப்பிரதேசம் 218, குஜராத் 187, நாம் 4-வது இடத்தில் இருக்கிறோம்; 175 லைசென்ஸ் பெற்றிருக்கிறோம். இப்படி பல்வேறு நிலைமைகளைத் தொடர்ந்து அடுக்கிக்கொண்டே போக முடியும்.

(பிற்பகல் 1-40)

தொழில் துறையில் 'இன்செண்டிவ்' வழங்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு 'நோ இன்டஸ்ட்ரி டிஸ்டிரிக்ட்' அதாவது தொழிற்சாலையே இல்லாத மாவட்டமாக இருந்தால், அந்த மாவட்டத்தில் தொழில் தொடங்கினால், 25 சதவீதம் சலுகை தரும். அது தவிர, குறிப்பிட்ட வேறுசில இடங்களுக்கு 15 சதவீதம் தரும். 25 சதவீதம் சலுகை என்பது 'ஏ' பிரிவு, 15 சதவீதம் சலுகை என்பது 'பி' பிரிவு. அவை தவிர 'சி' பிரிவு இடங்களுக்கு 10 சதவீதம் உதவி தரும். நம்முடைய மாநிலத்தில் 'ஏ' பிரிவே இல்லை, மத்திய அரசு 'ஏ' பிரிவு இருப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை. நோ இன்டஸ்ட்ரி டிஸ்ட்ரிக்ட் என்று மொத்தம் 87 மாவட்டங்களை எடுத்துக்கொண்டார்கள். தமிழ்நாட்டில் எந்த ஒரு மாவட்டமும் நோ இன்டஸ்ட்ரி டிஸ்டிரிக்டாக இல்லை. எல்லா மாவட்டங்களிலும் ஏதாவது ஒரு தொழிற்சாலை இருக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டில் 'ஏ' பிரிவு இல்லை. ஆக அவர்கள் தேர்வு செய்யப்பட்ட 87 மாவட்டங்களும் பிற மாநிலங்களில் உள்ளவை. நம்முடைய மாநிலத்தில் இருப்பது 'பி' பிரிவு, 'சி' பிரிவு தான். இந்தப் பிரிவுகளுக்கு மட்டும் தொழிற்சாலைகளை உருவாக்குவதில் இன்செண்டிவ் கிடைக்கிறது. இந்த இன்செண்டிவைப் பெறுவதில் அகில இந்தியாவில் முக்கியமாக 8 மாநிலங்கள் இடம் பெறுகின்றன. அவற்றில் முதலிடம் வகிப்பது தமிழ்நாடுதான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள் கிறேன். 13,7 சதவீதம் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. குஜராத் 9.8 சதவீதம்; ஆந்திரா 9.4 சதவீதம்; மகாராஷ்டிரா 7.6 சதவீதம்; கர்நாடகம் 7.5 சதவீதம்; பஞ்சாப் 4.4 சதவீதம்;



அரியானா 3.1 சதவீதம்; மேற்குவங்கம் 1.8 சதவீதம் என்ற அளவில் பெற்றிருக்கின்றன. தமிழ்நாடு 13.7 சதவீதம் பெற்று முன்னணியில் இருக்கிறது. மத்திய அரசு கொடுப்பதைப் பயன் படுத்தத் தவறிவிட்டோம் என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு. சித்தன் உட்பட பலர் சொன்னார்கள். அவர்கள் கொடுப்பதைப் பயன்படுத்துவதில் நாம் தவறவில்லை, எதை எதை எந்த அளவுக்குப் பயன்படுத்தியிருக்கிறோம் என்பதை எடுந்துக்காட்டுவதற்காகத்தான் நான் இந்த புள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

நம்முடைய மாநிலம் இன்னும் எது எதில் முன்னணியில் நிற்கிறது, முதலிடம் பெற்றிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். பம்புசெட் உற்பத்தியில் அகில இந்தியாவில் 46 சதவீதத்தை தமிழ்நாடு பெற்று, முதலிடம் வகிக்கிறது. மற்ற எல்லா மாநிலங்களும் சேர்ந்து 54 சதவீதம் பெற்றிருக்கின்றன. அதைப்போல டீசல் எஞ்சின் உற்பத்தியில் 35 சதவீதம் பெற்றிருக்கிறோம். தட்டச்சுப் பொறி (டைப் ரைட்டர்ஸ்) உற்பத்தியில் 42 சதவீதம் பெற்றிருக்கிறோம், சைக்கிள் உற்பத்தியில் 16.2 சதவீதம் நம்முடைய மாநிலம் பெற்றிருக் கிறது. ட்ராக்டர் உற்பத்தியில் 12·2 சதவீதம்; சிமின்ட் உற்பத்தியில் 15.8 சதவீதம் நம்முடைய மாநிலம் பெற்றிருக் கிறது. அதைப்போன்று சர்க்கரை உற்பத்தியில் 9 சதவீதம், தேயிலை உற்பத்தியில் 12.9 சதவீதம் பெற்றிருக்கிறோம். பருத்தி நூல் உற்பத்தியில் அகில இந்தியாவில் இருக்கிற 22 மாநிலங்களில் 25.4 சதவீதத்தைப் பெற்று மற்ற மாநிலங்களைவிட முன்னணியில் நாம் இருக்கிறோம். ஆக, எந்த அளவுக்கு நாம் அக்கரை காட்டு கிறோம் என்பதற்காக இந்த புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டுகிறேன். (குறுக்கீடு) வறுமைக்கோடு என்கிறபோது "Line of poverty; line of destitution; line of severe destitution" என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்த லைன் ஆஃப் பாவர்ட்டி என்பதைத்தான் வறுமைக்கோடு, வறுமைக் கோடு என்று தவறாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் அதை ஏழ்மைக்கோடு என்று இப்போது மாற்றி யிருக்கிறோம். லைன் ஆஃப் பாவர்ட்டியைப் பொறுத்த மட்டில் தமிழ்நாட்டில் 52 சதவீதம் இருக்கிறது. ஆல் இந்தியா ஆவரேஜ் 49. அதை விட நாம் கூடுதலாக இருக்கிறோம். இன்னும் நமக்குக் கீழே ஏழு மாநிலங்கள் இருக்கின்றன. நமக்கு மேலே சில மாநிலங்கள் இருக்கின்றன. நம்மைவிட மிகவும் மோசமாக ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே 7 மாநிலங்கள் இருக்கின்றன. மிக மிகக் குறைந்த அளவு வருவது 14 சதவீதம். அது அரியானா. அரியானாவில் 14 சதவீதம் இருக்கிறது, நம்முடைய மாநிலத்தில் 52 சதவீதம் இருக்கிறது. ஆகையால் இந்த ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் கணக்கில் ஒரு குழப்பம் வேண்டாம்.

வறுமையைப் (டெஸ்டிடியூஷன்) பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 18 சதவீதம் இருக்கிறது. சிவியர் டெஸ்டிடியூஷன் —கடுமையான வறுமைக் கோட்டிற்குக்—கீழே இருப்பவர்கள் 11 சதவீதம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஒரு விளக்கம். பாவர்ட்டி லைன் என்று சொல்லும்போது, ஒரு பொருளாதார நிபுணர் கட்டுரையை அண்மையில் நான் படித்தேன், கிராமப் புறங்களில் இருக்கிறார்கள் மாத வருமானம் 60 ரூபாய்க்குக் கீழும், சென்னை போன்ற நகரப் புறங்களில் இருக்கிறவர்கள் மாத வருமானம் 75 ரூபாய்க்குக் கீழும் இருப்பதுதான் பாவர்ட்டி லைன் என்று அந்தக் கட்டுரையில் சொல்லியிருக்கிறார். இங்கே நம்முடைய நாவலர் அவர்கள் மூன்று பிரிவுகளைச் சொல்கிறார்கள். அதைப்பற்றி விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் சொல்லியது ஏழ்மைக் கோட்டைப் பற்றி மட்டும் தான், அதற்கு 60, 69 ரூபாய் என்று ஒரு கணக்கை வைத்திருக்கிறார்கள். அந்த ஏழ்மைக் கோட்டுக்கு கீழ் இருக்கிற கணக்கிலே எல்லாம் கூட, ரிசர்வ் பேங்க் கணக்கு ஒன்று. பிளானிங் கமிஷன் கணக்கு ஒன்று, மற்ற எக்சானாமிஸ்ட்கள், பொருளாதார வல்லுநர்கள் கொடுக்கின்ற கணக்கு கொஞ்சம் கொஞ்சம் மாறுபடுகிறது. ஒவ்வொருவரும் ஒரு கணக்கை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது மாதிரி 60 ரூபாய், 69 ருபாய் என்று ஏதோ ஒரு கணக்கை வைத்திருக்கிறார்கள். ஏழ்மைக் கோடு கணக்குதான் அது, வறுமைக்கோட்டில் கணக்கைத்தான் பர்சன்டேஜ்ஜைத்தான் நான் சொன்னேன., ஆனால் வறுமைக்கோடு, கடுமையான வறுமைக்கோடு என்ற கணக்கை புள்ளி விவரங்கள் வைத்துப் பார்த்தால்தான் அது தெரியும். ஆனால் நம்முடைய வேளாண்மைத் துறையில் நாம் வளர்ச்சியிலே தான் வந்திருக்கிறோம். 1976-77-லே இடையிலே வறட்சி வெள்ளம் ஏற்பட்ட போது கொஞ்சம் சரிவு ஏற்பட்டாலும், நன்றாக சூழ்நிலை இருக்கிற நிலையில் 1976-77-ல் 42.42 லட்சம் டன் அரிசி உற்பத்தியாகிறது. 1983-84-ல் 44.48 லட்சம் டன். இந்த ஆண்டு 1984-85-ல் 50.50 லட்சம் டன் உற்பத்தியாகிற அளவிற்கு வந்திருக்கிறது. அதைத்தான் உணவு அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட 7 லட்சம் டன் கையிருப்பிலே வைத்திருக்கிற அளவிற்கு நிலைமையிருக்கிறது என்பதால்தான் எத்தத் தகராறும் ஏற்படவில்லை என்று நாம் சொல்லி இருக்கிறோம். வறட்சிக்கு என்று ஏன் ஒரு பக்கம் ஒதுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கேட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை வராமல் இருந்ததன் காரணமாகத்தான் (குறுக்கீடு), குடிநீரைப் பொறுத்தவரையிலும் வந்திருக்கிறதே தவிர, கடுமையான வறட்சி நிலை என்று வரவில்லை. குறைந்து கொண்டு வருகிறது. தட்டுப்பாடு ஏறபட்டு இருக்கிறதே தவிர, வறட்சி என்பது வேறு, தட்டுப்பாடு என்பது வேறு, அதற்கு ஒரு கட்டுப்பாடு செய்யவேண்டும் என்பது வேறு, ஆகவே இப்போது கூட சேலம் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் போன்ற பகுதிகளில் மழை பெய்து இருப்பதாக கணக்கு வருகிறது. வறட்சி





என்று வந்தாலும்—அதற்குத் தகுந்தாற்போல் நாம் சாதாரணமாக இல்லை—இந்த நிலை நீடித்து, மே-ஜுன் மாதங்களில் கடுமையாக நிலை ஏற்பட்டாலும், என்ன என்ன செய்யவேண்டும், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கவேண்டும் என்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும் கேட்டு இருக்கிறோம். இருக்கின்ற ஆழ்துளைக் கிணறுகளை எல்லாம் செம்மைப் படுத்த வேண்டியது, புதிய ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டால் தண்ணீர் வரும் என்றால், அதற்கு ஏற்பாடு செய்வது, அல்லது ஆழ்துளைக் கிணறுகளைப் போட்டாலும் கூட தண்ணீர் வராது என்றால், தண்ணீர் இருக்கிற இடத்திலிருந்து லாரிகள் மூலமாக கொண்டு வந்து மக்களுக்கு வினியோகிக்க ஒரு திட்டம் போட்டு, அதற்கு எல்லாம் எவ்வளவு செலவாகும் என்பதை எல்லாம் வைத்து, ஓரளவு பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். அதிலே எச்சரிக்கையாக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தத் தன்மைகள் ஏற்படவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காலம் அதிகமாகிவிட்டது, எடுத்துச்சொல்ல வேண்டிய கருத்துக்கள் ஏராளமாக இருந்தாலும். ஏராளமான வாய்ப்புகள் அவர்களுக்கு வருகின்றன. அப்போது சொல்லலாம் என்று கருதுகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் அப்போது எழுப்பியதற்கு எல்லாம் நான் விடை அளிக்கிறேன் என்று சொல்கிறேன். அதற்கு பல விடைகளை நான் எழுதி வைத்திருந்தாலும் கூட, காலம் இடம் தரவில்லை, ஆனால் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியவர்களை எல்லாம் விசாரித்து அறிந்து அவர்கள் மீது சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகளை விசாரித்து அறிந்து அதைப்பற்றி விசாரணை செய்வதற்காக ஒரு உட்குழு அமைச்சரவையிலே அமைக்கப்பட்டது. அது சரியாக வருமா, அது பொருந்துமா ? என்றெல்லாம் கூட மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்திலே அதுபற்றி முடிவு எடுத்தார்கள். பொதுவாழ்விலே ஈடுபட்டவர்களாகிய சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அமைச்சர்கள், பொது ஊழியர்களாக உள்ள அமைச்சர்கள், ஆகியோர்கள் மீது எவரேனும் புகார் கூற விரும்பினால், அவர்கள் அந்தப் புகாரை. தயக்கம் இன்றி, தைரியமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வகை செய்யவேண்டும், அதற்கு ஒரு அமைப்பு வேண்டும் என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்

படையில் தான் அமைச்சரவையினுடைய துணைக் குழு அமைக்கப்பட்டது. அதுவே விசாரித்து அறியும் என்றல்ல. அது விசாரித்து அறிந்ததற்குப் பிறகு முறைப்படி, அது லஞ்ச ஒழிப்பு துறை, காவல்துறை, புலன் ஆய்வுத் துறை அரசால் நியமிக்கப்படும் விசாரணை அமைப்பு ஆகியவைகளுக்கு அனுப்பி வைத்துத்தான் செய்யவேண்டும் என்று ஒரு முடிவு எடுத்தது. அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் கொண்டுவரப்பட்டதே தவிர, யாரையும் தனிப்பட்ட முறையிலே பழிவாங்கவேண்டும் என்பதில்லை. எல்லோருக்கும் சேர்த்துத்தான், அப்படிப்பட்ட ஒரு குறைபாடு இருக்கவேண்டாம் என்பதற்காகத்தான் அந்த உட்குழு அமைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-50)

அதற்கு ஒரு எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது. அது பற்றிய பிரச்னைகளை பலரும் கிளப்பினார்கள். எல்லோரும் கிளப்பினார்கள். அப்படி ஒரு உட்குழு அமைக்கப்பட்டதே தவிர, அதற்குப் பிறகு அது எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. ஆக அதற்கு எதிர்ப்பும் தெரிவித்து பலபேர் அதில் பிரச்னைகளையும், சிக்கல்களையும் ஏற்படுத்திவிட்டதன் காரணமாக, நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே அதைக்கொண்டு வந்திருந்தாலும், இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்ட பிறகு ஏற்கெனவே இருக்கிற வாய்ப்புகளே போதும் என்ற கருத்து பலபேரிடம் நிலவுகிற காரணத்தாலும், இந்த உட்குழுவை கைவிட்டுவிடுவது என்ற முடிவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். ஆகவே அந்த திட்டக் குழு இலிமேல் செயல்படாது. அதற்கான அறிவிப்பு முறையாக சட்டரீதியாக வெளிவரும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் கொண்டு வந்ததன் நோக்கம், நல்ல எண்ணத்துற்காகத்தான் கொண்டு வரப்பட்டதே தவிர, யாரையும் தனிப்பட்ட முறையில் பாதிக்கவேண்டும் என்பதற்காக அல்ல. அதில் சிக்கல்களும், பிரச்னைகளும் கொண்டு வந்ததன் காரணமாக, இந்தச் சிக்கல்களும் வேண்டாம், பிரச்னைகளும் வேண்டாம், எதர்ப்புக்கு இடம் கொடுக்கவேண்டாம் என்ற முறையில், அதைக் கைவிடுவது என்ற முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளவிரும்புகிறேன். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : அடிக்கடி குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். விளக்கம் பெறுவதற்காகத்தான் கேட்கிறேன். நம்முடைய நாராயணசாமி அவர்கள் சட்ட அமைச்சராக இருந்தபோது ஏற்கெனவே பப்ளிக்மென் கிரிமினல் மிஸ்காண்டக்ட் ஆக்ட் கொண்டுவந்தபோது, வெங்கடாத்திரி கமிஷன், இந்தச் சட்டத்தின் அடிப்படையில் இருப்பதையெல்லாம் கலைத்துவிட்டு, கான்பிரஹன்சிவ் ஆக்ட் மே பி பிராட் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த கேபினேட்



சப்-கமிட்டியை நீங்கள் கலைத்து விட்டதற்காக மகிழ்ச்சி. ஆனாலும், அந்த புரோபோஸ்ட் ஆக்ட் என்ற முறையில், பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் தவறு செய்தால், அவர்கள் மந்திரியாகவே இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும். யாராக இருந்தாலும் அவர்கள் மீது புகார் கொடுக்கலாம். அப்படி கொடுக்கிற புகார்களை அந்தக் கமிஷன் விசாரிக்கலாம். தவறுகள் செய்திருந்தால் தண்டிக்கப்படுவார்கள். புகார் கொடுத்தவர் பொய் புகார் கொடுத்திருந்தால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று சட்டம் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அந்த சப்-கமிட்டியை கலைக்கிற அதே நேரத்தில் நீங்கள் கொடுத்த வாக்குறுதியின்படி இந்தச் சட்டம் மீண்டும் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இதை என்னுடைய கவனத்திற்கு இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஆராய்ந்து வேறு ஒரு வாய்ப்பு ஏற்படும்போது, அதனுடைய நிலைமையை நான் விளக்குவேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும், மானியக்கோரிக்கைகள் வரும்போது அந்தந்த அமைச்சர்கள் அந்தந்த துறையைப் பற்றி, விளக்கமாக எடுத்துச் சொல்வதற்கு ஒவ்வொரு அமைச்சருக்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையிலேதான் அவர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கும் பதிலை எடுத்துச் சொல்வார்கள். கூடுமான வரையில் பொதுவாக இருக்கிற பிரச்னைகளைப் பற்றியெல்லாம் நான் சொல்லியிருக்கிறேன். அதிலும் குறிப்பாக கூட்டுறவுத் தன்மைகள் மற்றும் மற்றவைகளைப் பற்றி எடுத்து பேசவேண்டும் என்று நான் கருதினாலும், நேரம் இல்லை. ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். கூட்டுறவுத் துறையில் ஒரு காலத்தில் நம்முடைய மாநிலம் இரண்டாவது இடத்தில் இருந்தது. மிகச் சிறந்த இடத்தில் இருந்தது, மகாராஷ்டிரமும், தமிழகமும் மிக முன்னணியில் இருந்தன. அப்போது நாட்டிலே எவ்வளவோ வேலைகளை மிகச் சிறப்பாக செய்து வந்தோம். நில வல வங்கிகள் மூலமாகவும் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் எவ்வளவோ பணிகளை நாம் சிறப்பாக ஆற்றி வந்தோம். ஆனால் வேறுபல மாநிலங்கள் தற்போது அதற்கான முயற்சிகளை எடுத்து வெற்றியும் பெற்று, இப்போது மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

கூட்டுறவு கடன்களையும், நில வள வங்கிக் கடன்களையும் வசூலிப்பதில் இன்றைக்கு கேரளம் முன்னணியில் இருக்கிறது. மகாராஷ்டிரம் முன் அணிக்கு வந்திருக்கிறது. மேற்கு வங்காளத்திலும் நடவடிக்கைகள் எடுத்து நல்லதொரு நிலைமைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் 98 சதவீதம் வரையில்—1959ஆம் வருஷத்தில் 98 சதவீதம் அளவுக்கு வசூலில் திறமை பெற்றிருந்த தமிழகத்தின் கூட்டுறவுத்துறை இப்போது 26 சதவீதம் வசூல் செய்துக்கொண்டிருக்கிறது. இப்படி 75 சதவீதத்

திற்கு மேல் வசூல் ஆகாமல் இருக்கிற நிலமைகளை பார்க்கிற போது, அதனால் நம்முடைய மாநிலம் எவ்வளவு கேடுறும் என்பதையும், வாங்கிய கடனை திருப்பி அளிக்க வேண்டும் என்ற உணர்வை நாட்டு மக்களுக்கு, நாடெங்கிலும் பரப்புகிற ஒரு இயக்கத்தில் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், எங்களோடு சேர்ந்து பணியாற்றினால்தான், இந்த நாட்டிலே ஏழை எளியவர்களாக இருக்கிற விவசாயிகள் ஓரளவிற்கு வளர்ச்சி அடைவதற்கான வழிவகைகள் ஏற்படும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய பணங்கள் எல்லாம் வராவிட்டால்—இன்றைக்கு வர வேண்டிய பணங்களை ரிசர்வ் வங்கி தருகிறது. பொதுமக்கள் கொடுக்கிற டெப்பாசிட் பணம், கூட்டுறவு வங்கிகள் சரியாக இயங்கவில்லை என்று டெப்பாசிட் போடுவதை மக்கள் நிறுத்திவிடுவார்களே யானால் கூட்டுறவு இயக்கமே நின்றுவிடும்.

மத்திய ரிசர்வ் வங்கி நாம் எவ்வளவு கடன் தொகை திருப்பி வசூலித்தோமோ, அந்த வசூல் கணக்கின் அடிப்படையில்தான் தருகிறார்கள். அப்படி பார்க்கிறபோது ஆண்டுக்கு ஆண்டு அவர்கள் கொடுக்கிற தொகை குறைந்துக்கொண்டே வருகிறது. ஒரு காலத்திலே கிட்டத்தட்ட 123 கோடி அளவிற்கு கடன் கொடுத்த தமிழகம், இப்போது இந்த ஆண்டு 21 கோடிதான் கடன் கொடுக்க முடிகிறது. அவ்வளவுதான் ரிசர்வ் வங்கி அனுமதித்து இருக்கிறது. இதற்கும் கீழே போகுமானால், ஏழைகளுக்குத்தான் கஷ்டம். இதில் விரிவாக பேச நேரம் இல்லை என்றாலும், இவைகளையெல்லாம் நீங்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான் திரும்ப திரும்ப எடுத்துச்சொல்கிறேன்.

ரிசர்வ் வங்கி 7 சதவீதம் வட்டியில் கொடுத்தால், $\frac{1}{3}$ சதவீதத்திலே மாநில வங்கிகள், மாவட்ட மத்திய வங்கிக்கு தருகிறது. மத்திய வங்கி $8\frac{3}{4}$ சதவீதத்திலே கிரெடிட் சொசைட்டிக்கு தருகிறது. கிரெடிட் சொசைட்டி $11\frac{1}{2}$ சதவீதத்திற்கு சிறு விவசாயிகளுக்கும், $12\frac{1}{3}$ சதவீதத்திற்கு பெரிய விவசாயிகளுக்கும் தருகிறது. விவசாயிகள் வாழ வேண்டும் என்பதற்காக நாம் இவ்வளவு கஷ்டப்பட்டு ரிசர்வ் வங்கியிடம் கடன் வாங்கி, நாமும் கையை விட்டுக் கொடுத்து வருகிறோம். மற்ற வெளி வங்கிகளில் எல்லாம் 18 சதவீதம் 19 சதவீதம் தொழிற்சாலைகளுக்கும், மற்றவர்களுக்கும் தருகிறார்கள். விவசாயிகளுக்கு தருவது $11\frac{1}{3}$ சதவீதத்தில்தான். ஆக கூட்டுறவு சங்கம் கடன் கொடுக்கிற வாய்ப்பை இழக்கச் செய்து விட்டால், சம்பளம் கொடுக்கிற நிலையே இல்லாமல் செய்துவிட்டால், அது வேலை செய்யும் நிலையையே இல்லால் செய்துவிட்டால், மக்களிடத்திலே ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டு, பிக்சட் டெப்பாசிட்டை போடுவதைக் கூட விட்டுவிட்டால் பிறகு எங்கே போக வேண்டுமென்றால், தேசிய வங்கிக்குத்தான் போகவேண்டும். தேசிய வங்கிக்கு போனால் விவசாயிகள் 14 சதவீதத்திற்குதான் கடன் வாங்க வேண்டும். கடன் வாங்கினாலும் தள்ளுபடி கிடையாது. கொடுத்துத்தான் தீர வேண்டும். அல்லது தனி லேவாதேவிக்காரர்களிடம் தான் போக



வேண்டும். அப்படி போனால் 36 சதவீதம் வட்டிக் கொடுத்து கடன் வாங்க வேண்டும். இன்றைக்கு என்ன வேடிக்கை என்று கேட்டால், தஞ்சாவூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கும்பகோணம் மத்திய வங்கி, புதுக்கோட்டை மத்திய வங்கி இரண்டிலும் 90 சதவீதம் வரைக்கும் வசூல் ஆகவில்லை. அங்கே வசதி உடையவர்கள்தான் பாக்கி வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

**திரு. ந. சிவஞானம் :** தலைவர் அவர்களே, இயற்கை சீற்றத்தால் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. எப்படி நிலவள வங்கியிலே வட்டியை தள்ளுபடி செய்தார்களோ, அதைப்போல மீண்டும் அரசு பரிசீலனை செய்து இந்த வட்டியை தள்ளுபடி செய்வதற்கு கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கி இருக்கின்ற விவசாயிகளுக்கு மறு பரிசீலனை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே பஞ்சம் வருவதும், வெள்ளம் வருவதும், வறட்சி வருவதும் உலகம் தோன்றிய காலத்திலிருந்து இருக்கிறது. 12 ஆண்டுகாலம் பஞ்சம் என்று சொல்வார்கள். கார்காலத்து பஞ்சம் என்று சொல்வார்கள். நம்மைவிட கடுமையான பஞ்சம் மேற்கு வங்காளத்தில். நம்மைவிட கடுமையான பஞ்சம் பீகாரில், நம்மைவிட கடுமையான பஞ்சம் உத்திரப்பிரதேசத்தில் நம்மைவிட கடுமையான பஞ்சம் பிற மாநிலங்களில் அங்கெல்லாம் இருக்கும்போது தள்ளுபடி செய்வது எளிது. நான் முதலிலேயே சொன்னேன். ரிசர்வ் வங்கிப் பணம். மக்கள் கட்டுகின்ற டெபாசிட் பணம் யார் பணத்தை யார் தள்ளறது? அரசாங்கத்தின் பணத்தை எடுத்துக் கொடுத்து அவர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்து விட்டு நாம் தள்ளினோமானால் நீங்கள் வளர்ச்சித் திட்டங்கள் வேண்டும், தொழிற்சாலை தாருங்கள் என்று கேட்கிறீர்கள். நான் எந்த இடத்தில் இருந்தது என்று சொன்னேன் ? தமிழக வங்கி முதல் இடத்தில் இருந்தது, 95% 96% வறட்சி பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கொடுத்தது. வாங்கிய கடனை திருப்பித் தருவதில்லை என்று நிலை வரும்போது நிலவள வங்கியிடமிருந்து டிராக்டர் வாங்கி வட்டியையும், அசலையும் திருப்பிச் செலுத்தாமல் வாடகைக்கு விட்டு பணத்தை சம்பாதித்துக்கொண்டு இருக்கின்ற புள்ளிவிவரங்களை வைத்திருக்கிறேன். நேரம் இல்லை. நீங்கள் தாங்க மாட்டீர்கள் என்பதற்காக அவற்றையெல்லாம் சொல்லாமல் விடுகிறேன். நான் கேட்டுக்கொள்வது (குறுக்கீடு) வெள்ளம் வரும்போது வெள்ளம் என்கிறீர்கள். இந்த வருடம் சொல்லியிருக்கிறேன். ஏராளமாக விளைந்திருக்கிறது என்று. இப்பவும் முடியாதுதான்என்றைக்கும் முடியாது. உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்களவும் மிஞ்சாது என்பது ஆயிரம் வருடத்து பழமொழி. எப்போது மிஞ்சும் என்று சொன்னோம் ? ஆயிரம் வருடமாகவே மிஞ்சாது, இப்பவும் மிஞ்சாது. அந்த வங்கியெல்லாம் இருக்கணுமா ? வேண்டாமா ? என்று முடிவுசெய்து எல்லாவற்றையும் மூடிவிடலாம் என்று முடிவுசெய்தால் அவரவர்கள் இஷ்டப்படி எங்கேயாவது கடன் வாங்கட்டும் எப்படியாவது பிழைத்துக் கொள்ளட்டும் என்று விடலாம். வாங்கின கடனை திருப்பி

அளிக்கவேண்டும் என்ற உணர்வு வேண்டும். எதற்காகச் சொல்கிறேன் என்றால் போலீசை வைத்து இன்றைக்கு வசூல் செய்கின்ற ஒரு சூழ்நிலை கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையை வைத்து வசூலிக்கலாம், எந்த நடவடிக்கையும் எடுத்து வசூலிக்கலாம் என்று மேற்கு வங்காளம் உத்திரவு இட்டிருக்கிறது. ஏனென்றால் இந்தப் பணத்தை எக்காரணம் கொண்டும் விட்டுவிடக் கூடாது என்று. கேரளத்தில் எல்லா அரசியல் கட்சியும் உடன்பாட்டிற்கு வந்து, கம்யூனிஸ்ட் அரசு இருந்தபோது தொடர்ந்து இதை எக்காரணங்கொண்டும் விட்டுவிடக்கூடாதுஎன்று சொல்லி எல்லோரும் ஒத்துழைப்புத்தருவதன் காரணமாக கடுமையான நடவடிக்கை எடுக்கிறார்கள். நாங்கள் அந்த கடுமையான நடவடிக்கைக்கு போகவேண்டாம், போகவேண்டாம் விட்டுவிடுங்கள் என்று சொல்லி ஆளுங்கட்சி உறுப்பினர்களும், மற்ற உறுப்பினர்களும், வட்டியைத் தள்ளு, தண்ட வட்டியைத் தள்ளு என்று கேட்கிறார்கள், தள்ளிவிடுவது சுலபம். ஆனால் இன்னும் 10 ஆண்டுக்காலம் கழித்து எந்த நிலைக்கு போகும் என்று அச்சம் இருப்பதால் பல கூட்டுறவு வங்கியிலே, சம்பளமே போடமுடியாமல், வேய்ஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ் நாங்கள் தந்து கொண்டிருக்கிறோம். ரு. 10 கோடி, 11 கோடி, 8 கோடி, 7 கோடி என்று அரசாங்கம் தந்துக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் செய்தால் மக்களுடைய வரிப் பணம் தான் போகிறது. இதையெல்லாம் சிந்திக்க வேண்டுமென்றுதானே தவிர, தனிப்பட்ட, ஏழை எளிய பாட்டாளிகள் வசதியற்றவர்கள் போன்றவர்களுக்கு சலுகைகள் காட்டுவதில் தவறு இல்லை. நான் மாண்புமிகு உறுப்பினர் சிவஞானத்திற்கு தனியாக கூப்பிட்டு வைத்து கணக்குத் தருகிறேன். தஞ்சை மாவட்டம் அவருக்கும் தெரியும் எனக்கும் தெரியும். கொடுக்கக்கூடியவர்கள் கொடுக்காமல் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு பட்டியல் தருகிறேன். அந்த வங்கிகளிடம் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி, இதற்குமேலும் பல பொதுப் பிரச்சினைகள் இருந்தாலும்கூட மானியக் கோரிக்கைகள் வரும் போது பலரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவிப்பார்கள் என்று சொல்லி, எது வேண்டுமானாலும் சொல்லுங்கள் அரசாங்கத்தினுடைய குறைகளைச் சொல்லுங்கள், குற்றங்களைச் சொல்லுங்கள், இந்த மாநிலம் வளர வேண்டும் மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும் என்பதற்கு உறுதுணையான நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்வார்களேயனால் எங்களுக்கும் பயன்படும் என்று கூறி இதிலே கலந்துகொண்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (19-4-85) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

எதுவுமில்லை.

## உள்ளடக்கம்

**9-4-1985.**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்: | 371—396 |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | |
| 2. | தகவல் கோரல்: | |
| | (அ) அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையை பேரவையில் வைப்பது குறித்து | 396—398 |
| | (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை | 398 |
| | (இ) வினாக்கள்—விடைகள் நேரத்தில் அதிகப்படியான வினாக்களை எடுத்துக்கொள்வது குறித்து | 398—399 |
| 3. | அறிவிப்புகள்: | |
| | (அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 399—400 |
| | (ஆ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 400—401 |
| | (இ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 401—402 |
| | (ஈ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 402—403 |
| | (உ) அவைக் குழு—உறுப்பினர்கள் நியமனம் | 403 |
| | (ஊ) மானியக் கோரிக்கைகள் (1985-86), மொழிதல் (ஆ.இ.) | 411—412 |
| 4. | கவன ஈர்ப்புகள்: | |
| | (அ) குடும்பநலத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு அளிக்காத பணியாளர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பெற்றுள்ளது. | 403—408 |
| | (ஆ) நிலவள வங்கிகள் கடன் வழங்க இரு கிணறுகளுக்கிடையேயான தூரத்தை நிர்ணயம் செய்துள்ளதால் சேலம் மாவட்ட விவசாயிகள் படும் சங்கடங்கள் குறித்து. | 408—411 |

பக்கங்கள்

5. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு:

கோரிக்கை எண். 17 — சல்வி. 412—492

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் 412

திரு. ந. சிவஞானம் 412—422

திரு. மா. சின்னராசு 423—432

திரு. குமரி அனந்தன் 432—443

திரு. எஸ். ரெத்தினராஜ் 443—449

திரு. தி. அன்பழகன் 449—453

திரு. எஸ். சிவராமன் 453—459

திரு. வி. பாலகிருஷ்ணன் 459—465

டாக்டர் ந. மாசிலாமணி 465—469

திரு. எம். எம். இராசரத்தினம் 469—473

திரு. கே. டி. கே. சேகர் 475

திரு. வை. பாலச்சந்திரன் 475

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 491—492

2835



1985 ஏப்ரல் 9 செவ்வாய்க் கிழமை

பங்குனிர க்தராட்சி திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வி தவிர மற்ற பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம்.

54—(*வினா எண். 193) திரு. மா. சின்னராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறதா?

(ஆ) மேட்டுப்பாளையம் நகராட்சி எப்பொழுது தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்;

(ஆ) 1985-86 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டத்தில் இந்நகராட்சியைச் சேர்ப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்துள்ள நகராட்சிகள் ஒவ்வொன்றும் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுகின்றன. மேட்டுப்பாளையம் நகராட்சி தன்னுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்கிற அளவிற்குப் போதிய வருமானம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே இந்த நகராட்சியைத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக் கொண்டு, நீலகிரி மலையின் வாசலிலே இருக்கிற இந்த நகராட்சியைத் தொடர்ந்து அழகுமிக்கதாகவும் சுகாதாரக் கேடுகள் இல்லாமலும் இருக்கிற வகையில் இந்த ஆண்டு அதைக் கூடுதலாக எடுத்துக்கொள்ள அமைச்சர் வழிவகை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதைத் தான் நான் தெரிவித்தேன். இந்த ஆண்டு அதை எடுத்துக் கொள்வதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப் படுகிற நகராட்சிக்கு அரசு அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கம் செய்து இருக்கிறது? இதுவரை சென்ற ஆண்டு எவ்வளவு நிதி செலவிடப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, முதல் கட்டமாகச் செலவு செய்யும்போது 20 நகராட்சிகளை எடுத்துக் கொண்டபொழுது ரூ. 5 கோடியும் இரண்டாவது கட்டமாக 30 நகராட்சிகளை எடுத்துக்கொண்டபொழுது ரூ. 5 கோடியும் மூன்றாவது கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுதும் இப்பொழுதும், ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுபற்றி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பொது நிறுவனங்கள், வெளிநாடுகள் ஏதும் உதவி செய்திருக்கின்றனவா? பஞ்சாயத்து யூனியன்களுக்கு எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நகராட்சியைப்பற்றியது. பஞ்சாயத்து யூனியன்கள் பற்றி தனிக் கேள்வி போடவேண்டும். இதற்கு ஒதுக்குவது முழுக்க, முழுக்க மாநில அரசு பணமாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கான தன்னிறைவுத் திட்டம் இந்த ஆண்டோடு நிறைவு பெறுகின்றது என்று நான் கருதுகிறேன். இது ஒரு நல்லதொரு திட்டம். ஆனால் தன்னிறைவுத் திட்டத்திலே எல்லா வேலைகளும் முடிவடைவ தில்லை என்பதை நாம் அறிவோம். தன்னிறைவுத் திட்டத்திலே எடுத்துக் கொள்ளப்படாத முக்கிய வேலைகள் இருந்தால், அரசு அதற்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக் கொள்ளுமா? அதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் அடிப்படை திட்டங்கள் எல்லாம் செய்து முடித்த பிறகு மற்றவை பற்றி கவனிக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் இரண்டாவது திட்டமாக எடுக்கப்பட்ட நகராட்சிகளில் எல்லாம் தன்னிறைவுத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதை



அரசு அறியுமா? அதை முழுமையாக்க அரசு நடவடிக்கை எடுத்து உடனடியாக எந்த, எந்த நகராட்சிகளில் இதுபோன்ற வேலைகள் முடிவுறாமல் இருக்கின்றன என்பதையறிய குழு அமைக்கப்படுமா? இராசிபுரம் நகராட்சியில் அந்தப் பணிகள் எல்லாம் முழுமை பெறவில்லை. அவை முழுமையாக்கப்பெற கூடுதலாக அரசு நிதி ஒதுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இராசிபுரம் நகராட்சி யைப் பற்றி அங்கத்தினர் கேட்கிறார்கள். அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஏதேனும் குறை இருக்குமானால் எழுதித் தருவாரானால் அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு நடைபெறுகிற தன்னிறைவுத் திட்டத்தில் நகராட்சிகளே நடத்தி வைக்கக்கூடிய பல வேலைகள் சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் என்ன, என்ன வேலைகள் நகராட்சிகளின் கீழ் செய்யப்படும்? அடிப்படை திட்டங்கள் என்று சொன்னார்கள். அடிப்படை திட்டங்களை நகராட்சிகளும் செயல்படுத்தியிருக்கின்றன. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் விசேஷமாக என்ன, என்ன வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நகராட்சிகள் அடிப்படை தேவை திட்டங்களாக இருக்கிற சாலை வசதி. குடிநீர் வசதி, வடிகால் வசதி, தெரு விளக்குகள் போன்ற வற்றைக்கூட சரிவர நிறைவேற்றமுடியாமல் நிதி வசதியில்லாமல் இருக்கின்றன. இவற்றை எல்லாம் சரி செய்ய இந்த அரசு முடிவு செய்து தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இவைகளுக்காகப் பணம் ஒதுக்கப்படுகிறது.

திரு. எப். எம். இராசரத்தினம் : தலைவர் அவர்களே, குளச்சல் நகராட்சியில் தன்னிறைவுத் திட்டப் பணிகளாக குடி நீர் வடிகால் வாரியத்திடம், மார்க்கெட் பகுதியிலும், கடற்கரை துறைமுகப் பகுதியிலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி குடிதண்ணீர் கொடுப்பதற்காக 6 லட்சம் ரூபாய் வழங்கியும் அந்தப் பணிகள் முடிக்கப்படவில்லை. ஒரு பகுதியில் பணி மந்தமாக நடக்கிறது. மறுபகுதியில் அதாவது துறைமுகப் பகுதியில் டெண்டர் கொடுத்த ஒப்பந்தக்காரர் இறந்துவிட்டதால் வேலை நடக்கவில்லை. மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள், உடனடியாக அந்தப் பகுதியில் இந்தப் பணிகளை முடிக்க மாற்று ஏற்பாடு அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, குளச்சல் நகராட்சி பற்றி தெரிவித்திருக்கிறார்கள். அங்கத்தினர் தெரிவித்த யோசனைகளை அரசு பரிசீலித்து அதற்கான நட வடிக்கையை எடுக்கும்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை முனிசிபாலிட்டி தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டதாக முனிசிபல் கமிஷனர் சொன்னார்கள். ஆனால் எந்தப் பணிகளும் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே பணிகளைத் துவக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1984–85 ஆம் ஆண்டில் குழித்துறை நகராட்சி திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏன் வேலைகள் துவக்கப்படவில்லை என்பதற்கான காரணம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தர இயலும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, மூன்றாவது கட்டமாக நகராட்சிகள் அனைத்தும்முடிக்கப்பெறுகிற தருவாயில் ஏ–கிரேடு முனிசிபாலிட்டியில் அந்தப் பணிகள் எப்போது துவங்கவிருக்கின்றன. அதற்காக ஒரு நகராட்சிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நகராட்சி ஒன்றுக்கு 20 லட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கி இருக்கிறோம். ஏ-கிரேடு நகராட்சிக்கு ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். எந்த நகராட்சி என்று குறிப்பிட்டு தனியாகக் கேள்வி போட்டால் நிதி ஒதுக்கீட்டைப் பற்றிய விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நிதிவசதிகள் போதாது என்ற காரணத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் முடிக்கப்பெறாமல் இருக்கின்றன. மேலும் நிதியை ஒதுக்க அரசு முன் வருமா. அதேபோல தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் நகராட்சி, பேரூராட்சிகளுக்கு கொடுக்கிற தொகையில் 10 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவிட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால் அதுபோல் நிதிகள் இன்னும் ஒதுக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். அரசு அதனை ஒதுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் விவரங்கள் அறிய தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு நகராட்சிக்கும் எத்தனை லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அது நகராட்சிக்கு நகராட்சிவித்தியாசப்



படுகிறதா அல்லது சராசரியாக ஒதுக்கப்படுகிறதா அல்லது நகராட்சியின் விஸ்தீர்ணத்தை வைத்து கூடுதலாக ஒரு நகராட்சிக்கும், குறைவாக இன்னொரு நகராட்சிக்கும் நிதி ஒதுக்கப்படுகிறதா, மேலும் ஏற்கனவே நகராட்சியில் தன்னிறைவுத் திட்டம் எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு பல வேலைகள் முடியாமல் இருக்கின்றனவே, அவற்றை முடிப்பதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, முதல் கட்டமாக எடுத்துக்கொண்ட போது நகராட்சி ஒன்றுக்கு 25 லட்சம் வீதம் தரப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் எடுக்கப்பட்டபோது நகராட்சிக்கு 16 லட்சம் ரூபாய் வீதம் தரப் பட்டது. ஏதேனும் வேலைகள் அப்படி தடைப்பட்டிருந்தால், அதுபற்றி அங்கத்தினர் குறிப்பிட்டு எழுதிக் கொடுப்பார்களானால் அரசு பரிசீலித்து அவற்றை முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்.

திரு. துரை அன்பரசன்: தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டு நெல்லிக்குப்பம் பேரூராட்சியாக இருந்து நகராட்சியாக மாறியது. ஏறத்தாழ 19 ஆண்டுகள் ஆகியும் அந்த நகராட்சி இன்னும் சீராக இல்லை. சாலை வசதிகளும், குடிதண்ணீர் வசதிகளும், மின் விளக்குகள் வசதிகளும் அங்கே மக்களுக்கு தரப் படவில்லை. இந்த நிலையில் அந்த நகராட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு அதன் வளர்ச்சிக்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகராட்சியும் தன்னிறைவுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, என்னென்ன வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. க. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது முதல் கட்டமாக 20 நகராட்சிகளும், இரண்டாவது கட்டமாக 30 நகராட்சிகளும், மீதியுள்ள நகராட்சிகள் மூன்றாவது கட்டமாக எடுத்துக் கொள்ளப்படும் என்றும் ஒவ்வொரு கட்டத்திற்கும் 5 கோடி ரூபாய் ஒதுக்கவிருப்பதாகவும் சொன்னார்கள். அந்தத் தொகை மக்கள் தொகை அடிப்படையிலா அல்லது நகராட்சியினுடைய பரப்பளவு அடிப்படையிலா அல்லது செய்யப்படுகின்ற வேலைகளின் அடிப்படையிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நிதி நிலையை ஒட்டி அது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

திரு. எஸ். இராசாராமன் : தலைவரவர்களே, தஞ்சை நகராட்சியில் பல ஆண்டுகளாக குடிநீர்த் திட்டம் ஒன்று திட்டப் பட்டு, அது கிடப்பிலே கிடக்கிறது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மு. இராமநாதன்: தலைவரவர்களே, நகராட்சிகள் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பயன்பெற வாய்ப்பு இருப்பதைப் போல கோவை மாநகராட்சி புதிதாக உருவாகியிருப்பதால் சிங்காநல்லூர் நகராட்சியும் பல பஞ்சாயத்துப் பகுதிகளும் அந்த மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன; அப்படி இணைக்கப்பட்ட பகுதிகளும் பயன்பெறக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கம் செய்து, இந்தத் திட்டத்தை விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நகராட்சிகளுக்கு மட்டும்தான் தன்னிறைவுத் திட்டம் விரிவாக்கப் பட்டிருக்கிறது; மாநகராட்சிகளுக்கு விரிவாக்கப்படவில்லை.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, நகராட்சி தன்னிறைவுத் திட்டத்தில் குடிநீர்த் திட்டம் சேர்க்கப்பட்டிருக் கிறதா? ஆம் எனில் அந்தத் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்படுமா அல்லது நகரசபையால் நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் குடிநீர் வசதி சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் யார் மூலமாக எந்த எந்த நகராட்சியில் நிறைவேற்றப் படுகிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சியைப் பொறுத்த மட்டில் சென்ற நிதியாண்டில் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் சென்ற மார்ச் 20 வரையில் 50 சதவீதம் கூட செலவிடப் படவில்லை; வேலை நடைபெறவில்லை. அதிகாரிகளிடம் கேட்டால் மார்ச் 31-க்குள் வேலை முடிக்கப்படும் என்று சொல் கிறார்கள். இப்படி அவசர கோலத்தில் வேலை முடிக்கப்படு மானால் அந்த வேலை செம்மையாக நடக்குமா என்பது சந்தேக மாக இருக்கிறது. ஆகையால் அவசர கோலத்தில் வேலைகள் முடிக்கப்படுவதைத் தடுக்க மாற்று ஏற்பாடு செய்யப்படுமா?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அவசரம் அவசரமாக இந்த வேலைகளை முடிக்க வேண்டு மென்பது இல்லை. இந்த ஆண்டுக்குள் வேலை முடிக்கப்படும் என்று அதிகாரிகள் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அவசர கோலத்தில் வேலைகள் முடிக்கப்பட்டு, அந்த வேலைகள் சீராக முடிக்கப்படவில்லை என்றால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. கு. சுப்பராயன்: தலைவரவர்களே, திருப்பூர் நகராட்சி தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் எப்போது சேர்த்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, திருப் பூர் நகராட்சி இப்போது கடைசி கட்டமாக, அதாவது நான்காவது கட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

### உள்ளாட்சி மன்றங்களில் குறைகள் கேட்கும் தினம்.

55— (*வினா எண். 613)—திரு. க. சோலைராசு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை மாநகராட்சிப் பகுதி மக்களிடையே குறைகள் கேட்டறிந்து நிவாரணம் அளிக்கும் திட்டத்தை நகராட்சி ஒன்றிய மையங்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நகராட்சிகளில் மக்களி டையே குறைகள் கேட்டறிந்து நிவாரணம் அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் குறைகளை நேரில் கேட்டு நிவாரணம் அளிக்கும் திட்டம் இல்லை என்றாலும் வருவாய்த் துறையினரால் நடத்தப்படும் மனுநீதி நாளன்று ஒன்றியத்தின் சார்பிலும் அலுவலர்கள் கலந்து கொண்டு பொது மக்கள் குறைதீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. க. சோலைராசு: தலைவரவர்களே, ஒன்றியங்களில் இருக்கிற ஒருசில குறைகளைச் சொல்வதற்காக இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் கிராமங்களுக்குப் போகும்போது பொதுமக்கள் அனை வரும் குடிநீர் குழாய் சரியில்லை என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் அரசு 'லோயஸ்ட் கொட்டேஷன்' மூலம் உதிரிப் பாகங்களை வாங்குவதால் அவை விரைவில் பழுதுபட்டு விடுகின்றன. எனவே அரசு தனியார் அல்லது மற்ற நிறுவனங் களிலிருந்து 'காரண்டி' முறையில் உதிரிப் பாகங்களை வாங்கினால் குழாய்கள் சிறப்பாக அமையும் என்பதால் அரசு இதை பரிசீலிக்குமா? இப்போது இருக்கிற குறைகள் களையப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திடம் இந்தக் கேள்வியைக் கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திடம் இதைச் சொல்ல வேண்டும் என்று சொன்னாலும் கூட, இந்தக் குழாய்களை மெயின்டெனன்ஸ் செய்கிற பணி ஒன்றியத்திலே இருக்கிற காரணத்தால், இந்தக் கேள்வியை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டேன். அதே சமயத்தில் அந்தக் குறைகளைக் கேட்க ஆணையர்களுடன் உறுப்பினர்கள் செல்லும்போது, ஆணையாளர்கள் அந்தக் குறைகளைக் கேட்டு அறிந்து மேல் நடவடிக்கையை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் அனுப்பி வைக்க அவர்களை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்வார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியத்திலே பழுது பார்க்கின்ற அதிகாரிகள் ஒருவராக இருக்கின்ற காரணத்தாலும் நிறைய பழுது பார்க்கும் வேலைகள் அதிகமாக நடக்கவேண்டி உள்ளதாலும் விரைவாக நடக்கவில்லை என்பது உண்மைதான். இதை எப்படிச் செம்மைப் படுத்தவேண்டும், விரைவாக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. பலபேருக்கு விரைவிலே பயிற்சி கொடுத்து, அவர்கள் பழுது பார்ப்பதற்கு தனியாகப் பணம் கொடுக்கலாமா, என்பதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

திரு. ஆர். ஈஸ்வரன்: தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் புளியங்குடி முனிசிபாலிட்டியைச் சேர்ந்த 3 டவுன் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கு போதிய நிதி நிலை இல்லாத காரணத்தால் அங்கே வேலை செய்கிற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குக்கூட வசதியில்லை. எனவே அரசு நிதியிலிருந்து புளியங்குடி முனிசிபாலிட்டியைச் சேர்ந்த அந்த 3 டவுன் பஞ்சாயத்துக்களுக்கும் நிதி உதவி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 ரூபாய்க்கு மேலே உள்ள எந்தப் பணியைச் செய்யவேண்டும் என்றாலும் ஒன்றிய ஆணையாளர் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும் என்று சொல்கிறார்கள். குடிநீர் செல்லும் அந்த பைப்புகள் பழுது அடைந்துவிட்டால், அதைச்செம்மைப்படுத்த, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அனுமதி வாங்கிச் செய்ய நீண்டகாலம் தாமதம் ஆகிறது. எனவே அந்தப் பகுதிகளில், ஒன்றிய ஆணையாளரே, குடிநீர் போன்ற அத்தியாவசியமான பணிகளைச் செய்வதற்கு அவருக்குத் தகுந்த அதிகாரத்தை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைச்சர் அவர்கள், மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றபோது, ஒன்றியங்களில் மக்கள் குறைகளைக் கேட்டு நிவாரணம் அளிக்க நேரம் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நல்ல யோசனை, நிச்சயமாக செய்ய முயற்சிக்கலாம்.

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரில், காவேரி ஓடை, மன்னார்புரம், சாஜா மலை போன்ற இந்த இடங்களில், கோடைகாலங்களில் குடிநீர் தட்டுப்பாடு மிகவும் அதிகமாக இருக்கிறது. எனவே அதைப் போக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகக் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

திரு. சா. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய பணிகளைச் சரிவர கவனிக்க மக்கள் குழு ஒன்று அமைக்கப்படுமா? முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு அவர்கள், 5 வட்டங்களைக் கொண்ட ஒரு டிவிசனுக்கு (ஒரு யூனிட்), மாநகராட்சியினுடைய அந்தப் பகுதிகளுக்குச் சென்று பொது மக்கள் குறைகளை நேரடியாகச் சென்று கேட்டு, அங்கேயே அதிகாரிகளுக்கு உத்திரவிட்டு பணிகளைச் செய்தார்கள். அதுபோன்ற ஒரு, நடவடிக்கையை இப்போதுள்ள அமைச்சர் அவர்கள் செய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே மக்கள் குழு சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே அமைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும், ஒரு சிட்டிசன் குழு என்று சென்னை நகரில் இருக்கின்ற கட்சி சார்பற்ற ஓய்வு பெற்ற அதிகாரிகளை வைத்து, நகர வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களை வைத்து அமைக்க முடியுமா என்பதைப் பற்றி அரசு யோசித்து வருகிறது. இதற்கு முன்னாள் அமைச்சர் மாண்புமிகு குழந்தைவேலு, அவர்கள் கையாண்ட முறையைப் பற்றிச் சொன்னார்கள். அது நல்ல முறை. அந்த முறையைக் கையாளுவதற்கு முயற்சிக்கலாம்.

திருமதி பா. வளர்மதி: தலைவர் அவர்களே, நிவாரணம் கோரி, குறை சொல்லுகின்ற அந்த மக்களுக்கு, அவர்கள் குறை தீர்த்து வைக்கப்பட்டது என்று அவ்வப்போது அவர்களுக்கு அதிகாரிகள் தாக்கீது ஒன்றை அனுப்புகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் அனுப்ப முடியாது. எல்லோருக்கும் அனுப்புவது என்பது சாத்தியமானது அல்ல. அவர்கள் குறையை நிவர்த்தி செய்தாலே போதுமானது.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இந்த இலாக்காவிற்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் அவர்கள் மக்களுடைய ஆலோசனைகளை, குறைகளை நேரடியாக கேட்டு அறிந்து இருக்கிறார்கள். அப்போது சொல்லப்பட்ட கருத்து: குப்பைகள் ஏராளமாக தேங்கிக் கிடக்கின்றன என்பது. மற்றொன்று, சென்னையில் 75 சதவீதம் விளக்குகள் எரியவில்லை, அவைகளை எல்லாம் போக்கி, நல்லமுறையில் எரிய வைக்க வேண்டும் என்று மாநகராட்சி அதிகாரிகளைக் கேட்டால், பணம் போதவில்லை என்று சொல்கிறார்கள். எனவே இந்தக் குறை போக்குவதற்கு, ஏராளமான பணத்தை ஒதுக்கி. இதை நிவர்த்தி செய்ய முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எனக்கு முன்பிருந்த மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு, மற்றும் மாண்புமிகு அமைச்சர் சௌந்திரராஜன ஆகியவர்களுடைய சேவைகளை பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் அதிகாரிகளோடு கூடிப் பேசி நிச்சயமாக குப்பை கூளங்கள் வீதிகளில் இருக்கக் கூடாது என்று உத்திரவு இடப்பட்டிருக்கிறது. அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அதை அமல் நடத்த கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் உத்திரவு இடப்பட்டிருக்கிறது. இப்பொழுது சுத்தமாக இருக்கிறது என்றுதான் நினைக்கிறேன். உறுப்பினர்கள் அப்படி எங்காவது குப்பை கூளங்கள் அகற்றப்படாமல் இருக்கிறது என்று தெரிவித்தால், கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயங்காது என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் குடிதண்ணீர் வழங்குகிற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளாக இருந்தாலும், கை பம்புகளாக இருந்தாலும் அவைகளை பழுது பார்க்கிற அதிகாரிகள் போதுமான அளவு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகையில் ஒன்றிய பகுதிகளில் ஒருவர் மட்டுமே அப்படிப்பட்ட குடிநீர் வழங்கு தொட்டிகளையும் கைப்பம்புகளையும் பழுது பார்ப்பதற்கு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். தஞ்சாவூர், ஒரத்தநாடு போன்றவைகள் 60 பஞ்சாயத்துக்களைக கூட உள்ளடக்கிய ஒன்றியங்களாக இருக்கின்றன. ஆகவே ஒரு அதிகாரியை வைத்துக் கொண்டு, இப்படிப்பட்ட தண்ணீர் வறட்சி ஏற்படுகிற காலத்தில் அந்த தொட்டி





களோ, பம்புகளோ சீர்கெட்டு போய்விட்டால் எல்லாவற்றையும் ஒழுங்காக அவர்களால் பழுது பார்க்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே பழுது பார்க்கிற அதிகாரிகளை ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அதிகப்படியாக நியமித்து உடனடியாக குடிநீர் பிரச்சனைகளைத் தீர்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் அதைத்தான் தெரிவித்தேன். அதிகப்படியான ஆட்களை நியமிப்பதைவிட, அதிகப்படியான ஆட்களுக்கு பயிற்சி அளித்து தனியார் துறை மூலமாக அவர்களை வைத்துக் கொண்டு பழுது பார்த்துக் கொண்டு, அவர்களுக்கு பணம் கொடுத்துவிடலாம் என்பதான ஒரு யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, அதிக ஆட்களை நியமிப்பதைவிட, ஒவ்வொரு ஒன்றியத்திலும் பயிற்சி பெற்றவர்கள் ஆங்காங்கே இருப்பது நல்லது என்று அரசு கருதுகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, மாநகராட்சியில் உள்ள குறைகளைக் கேட்க அமைச்சர்கள் வருகிற நேரத்தில் இதற்கு முன்பு இருந்த இரண்டு அமைச்சர்களும் சென்னை மாநகராட்சி தொகுதியிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை பக்கத்தில் வைத்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு அழைப்புக்கூட விடுவதில்லை. ஆகவேதான் என்னென்ன குறைகள் தீர்ந்தன, என்னென்ன குறைகளை மக்கள் கேட்டார்கள் என்று தெரிந்துக் கொள்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழியே இல்லை. ஆகவே இப்போது புதிதாக வந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களாவது. அவர்கள் அப்படி குறை கேட்கச் செல்லுகிற நேரத்தில் சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு, மக்களுடைய குறைகளைக் கேட்க முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: முன்பு இருந்த அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பியிருப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன். ஒரு வேளை தவறியிருந்தால் இருக்கலாம். நிச்சயமாக அப்படிக் குறைகளைக் கேட்கும் போது இனிமேல் அந்தந்த தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் விளக்குகள் எரிவதே இல்லை. பெரும்பான்மையான விளக்குகள் அணைந்துதான் கிடக்கின்றன. அதிகாரிகளைச் கேட்டால் மின் வாரியம் எங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். மின் வாரியத்தின் தலைவரை நான் சந்தித்து பேசிய போது நகரசபை கட்ட வேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்

(திரு. வி. பி. சிந்தன்) [1985 ஏப்ரல் 9

பாக்கியிருக்கிற காரணத்தாலேதான் விளக்குகளை பூராவும் எரிக்க முடிவதில்லை என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் இதிலே தலையிட்டு அரசினுடைய உறுப்புகளாக இருக்கும் இந்த இரண்டு அமைப்புகளுக்கும் இடையே உள்ள தகராறுகளை வைத்துக் கொண்டு பொது மக்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் தடுப்பதற்கு முயற்சி எடுத்து விளக்குகளை எல்லாம் எரியச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், பணம் கொடுக்காததால்தான் விளக்கு எரியவில்லை என்று சொல்வது சரியல்ல. எங்காவது விளக்குகள் எரியவில்லை என்று சொன்னால் உடனே அவைகளை பழுது பார்க்கும்படி நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னை மாநகராட்சியில் அப்படி ஏதாவது இடத்தில் விளக்குகள் பழுது பார்க்கப்படாமல் இருக்குமானால் அரசின் கவனத்திற்கு கொண்டு வருவார்களேயானால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் சமீபத்திலே அதிகாரிகள், அமைச்சர்கள் கலந்து பேசிய கட்டத்தில் 570 கைபம்புகள் இருப்பதாகவும் அதிலே 50 தான் பழுது அடைந்திருப்பதாகவும், செய்தி குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. ஆனால் யதார்த்த நிலையில் பாதிக்கு மேல் பழுதடைந்திருக்கின்றன. இப்படி உண்மையான யதார்த்த நிலைமைகளை அறிவதற்காவது அமைச்சர்கள் வருகிற அப்படிப் பட்ட கூட்டங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைப் பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அப்படி கூட்டம் நடைபெறுவது பற்றி எனக்குத் தெரியாது. குடிநீர் வடிகால் வாரிய பொறுப்பை ஏற்று இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு கூட்டத்தை நடத்தியிருக் கிறார்கள். அதிகாரிகள் மட்டத்தில் என்ன செய்யலாம் என்பதை அவர்கள் பரிசீலித்து இருப்பார்கள். தேவைப்படும் போது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை அழைத்து பேசு வதற்குத் தயங்க மாட்டார்கள்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: தலைவர் அவர்களே, குடிநீர் கிணற்றில் இருக்கின்ற மோட்டார்கள் பழுதாக இருப்பதால், பழுது பார்ப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. பழுதடைந்த மோட்டாரை எடுத்துச் செல்கின்றபோது, ஸ்பேர் மோட்டாரை பொருத்தி அவர்களுக்கு நிரந்தரமாகத் தண்ணீர் வழங்கு வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு.ப.உ.சண்முகம்: தலைவர் அவர்களே, நல்ல யோசனை. இப்படி ஸ்பேர் மோட்டார் வைக்கலாமா என்பது அரசு பரிசீலனையில் இருந்து வருகிறது.



1985 ஏப்ரல் 9]

திருவில்லிபுத்தூர் குடிநீர்த் திட்டம்

56—(*வினா எண். 124) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் திட்டத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) வேலை எப்பொழுது தொடங்கும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 214 லட்சம்.

(இ) இத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப் படுகின்றன. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட பின்பு இத் திட்டப்பணிகள் தொடங்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, 31-3-84 முடிய ஓராண்டு வேலைக்கு சுமார் ரூ. 72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஒரு வேலையும் நடை பெறவில்லை. மேல்நிலை தொட்டி கட்டப்பட்டுள்ளது. ஆனால், அருகே செண்பகத்தோப்பு டேம் கட்டுவது பற்றி திட்டம் அனுமதிக்கப்பட்டும் மதிப்பீடு செய்யாத நிலையில் தலைமை எஞ்ஜினியரிடம் ஃபைல் பெண்டிங்காக இருக்கிறது. வெகு வேக மாக வேலையை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு தண்ணீர் அங்கே இருக்கிறதா என்பதைக் கண்டறியும் வகையிலேதான் இந்த மதிப்பீடு தயாரிப்பதிலே அவர்கள் கொஞ்சம் காலத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவசரப்பட்டு ஒரு மிகப் பெரிய திட்டத்தை நடத்தி, அந்தத் திட்டம் தோல்வி அடைவதைவிட சற்று காலதாமதம் ஏற்பட்டாலும், அந்தத் திட்டம் நிரந்தரமாக இருப்பதற்கு முயற்சி எடுப்பது நல்லது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லி புத்தூர் நகர குடிநீர்த் திட்டம் சுமார் 30 வருடத்திற்கு முன்னால் தீட்டப்பட்டுள்ளது. குடிநீர் வழங்குவதற்கு குழாய்கள் பதிக்கும் போது பழைய குழாய்களை தோண்டி எடுத்து திரும்ப அவை களையே பதிப்பதாக அறிகிறேன். பழைய குழாய்கள் விரைவில் கெட்டுபோகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பொதுக் குழாய்கள் சுமார் 100 வேலை செய்யாமல் இருக்கின்றன. இத் திட்டத்தில் அதிக அளவில் பொதுக் குழாய்கள் வேலை செய் வதற்கும், புதியதாக பொதுக் குழாய்கள் வைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இத்திட்டம் செயல்படும் சூழ்நிலையில் இவைகள் எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்

திரு. அ. மலர்மன்னன் : தலைவர் அவர்களே, இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் எடுத்துச் சொல்வதுபோல் திருச்சி நகரத்தைப் போன்ற பெரிய நகரங்களில் அண்ணாவினுடைய காலத்திலே, குடிநீர் வழங்குகின்றத் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எடுக்கப்பட்டு 1974லே முடிவு அடைய வேண்டிய திட்டம் இதுவரையில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. உள்ளாட்சித்துறையைக் கேட்டால், குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருக்கிறது என்றும், குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டால், உள்ளாட்சித்துறையிடம் இருக்கிறது என்கிறார்கள்; ஆகவே, இந்தத் திட்டம் எப்போது செயல்படும்? இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா; காளிமுத்து; தலைவர் அவர்களே, குடிநீர் திட்டங்களைப் பொறுத்த அளவில், அந்தத் திட்டத்தை செயல்படுத்துவது குடிநீர் வடிகால் வாரியம்தான். அந்த திட்டம் முடிவுற்றதற்கு பிறகு அதை பராமரிப்பது உள்ளாட்சித் துறையிடம் இருக்கிறது. இது தான் நடைமுறை. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், அந்த நிலைமைகளை கருத்திலே கொண்டு குடிநீர் வடிகால் வாரியம் உரிய நடவடிக்கையை எடுக்கும்.

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சியைப் போல் எந்தெந்த நகராட்சிகளில் இந்தக் குடிநீர் திட்டம் துவக்கப்படாமல் இருக்கிறது? நாகை நகராட்சியினுடைய குடிநீர்த் திட்டம் சீக்கிரம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மானிய கோரிக்கை வருகின்றபோது இவைகளை விரிவாக பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும். நாகையைப் பற்றி அவர்கள் தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம்: தலைவர் அவர்களே, மேலப்பாளையம் நகராட்சியில் நடந்து வரும் குடிநீர்த் திட்டம், திட்டமிட்ட காலத்தை கடந்து விட்டதால், கோடைக்காலமாக இருப்பதால், அந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக நடத்தி முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒரு பெரிய திட்டத்தை கோடைக்காலம் இருக்கிறது என்பதற்காக விரைவுபடுத்தி நிறைவேற்ற முடியாது. இருந்தாலும் ஏற்படக்கூடிய குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு விரைவாக நாம் நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.



திரு. ஆர். ஈஸ்வரன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கரும்பு சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். கரும்பை பச்சாளம் என்ற நோய் தாக்குகிறது. இந்த நோயை நிவர்த்தி செய்வதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன மருந்து அடிக்க வேண்டும் என்று தெரிவிப்பார்களா? ஏனெனில் பல மருந்துகள் அடித்தும் அந்த நோயை நிவர்த்தி பண்ண முடியவில்லை. அதனை நிவர்த்தி செய்வதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கேள்வி தண்ணீரைப் பற்றியது, நோயைப் பற்றியதல்ல.

திரு. க. சோலைராசு ; தலைவர் அவர்களே, மணப்பாறை போன்ற ஒன்றியப் பகுதிகளில் காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற திட்டங்கள் போன்றவை எல்லாம் சொல்லப்படுகின்றன. அவற்றிற்கு கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் எனவே மணப்பாறை ஒன்றியப் பகுதியில் மிக அதிகமான அளவிற்கு தண்ணீர் வளம் இருக்கிறது என்று அதிகாரிகளால் கருதப்படுவதால் அந்தப் பகுதியில் மிகப் பெரிய கிணறு ஒன்றை வெட்டி மணப்பாறைத் தொகுதி மக்களுக்கு தண்ணீர் கொடுக்கக் கூடிய அளவிற்கு ஆய்வு ஒன்றை அரசு பரிசீலனைக்கு எடுத்து கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அரசாங்கம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு கி. வெங்கடாசலம்; தலைவர் அவர்களே, என்னுடைய லால்குடி தொகுதியில் தட்டங்குறிச்சி, குமலூர், கரடமங்கலம் சரளமங்கலம், எம். கண்ணனூர், ஒரப்பூர், புள்ளம்பாடி, மேலரசூர் கள்ளக்குடி போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் பற்றாக்குறை மிக மோசமான அளவில் இருக்கிறது. அந்த தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு போர்க்கால அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் கோடைக்காலத்தில் தண்ணீர் தேவையை ஈடுசெய்யவேண்டும் என்ற அளவில் நாம் 26 கோடி ரூபாய் அளவில் திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம், அதை விரைவாக செயல்படுத்தயிருக்கிறோம்.

## பயிர்களுக்கு எலிகளால் சேதம்

57—(*வினா எண். 733)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டில் விவசாயப் பயிர்களை எலிகள் நாசப்படுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை தடுக்க அரசு மேற்கொண்டுள்ள தீவிர திட்டம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) எலிகளினால் பாதிப்பு உள்ளது. ஆனால் சேதம் பெருமளவில் இல்லை.

(ஆ) தமிழ்நாட்டில் 1984-85ம் ஆண்டு 4.40 லட்சம் ஹெக்டேரில் எலி ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்க திட்டமிடப்பட்டு இதுவரை 5.00 லட்சம் எக்டேரில் எலி ஒழிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. எலி மருந்துகள் எல்லா விவசாய கிடங்குகளிலும் இருப்பில் வைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 60,000 ஹெக்டேரில் தீவிர எலி ஒழப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் எலி ஒழிப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 56,800 செலவிடப்பட்டுள்ளது. மத்திய அரசு நிதி உதவியுடன் இத்தீவிர திட்டத்தை மற்ற மாவட்டங்களிலும் செயல்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, எலி ஒழிப்பு மருந்துகள் 50 சதவீத மானியத்தில் தருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி பாதி இனாமாகத் தருவதை முழுமையாக ஜிங்க் பாஸ்பேட் போன்ற எலி ஒழிப்பு மருந்துகளை விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஒன்றை இலவசமாக, முழுமையாகக் கொடுக்கும்போது அதில் தவறுகள் நடக்க ஏதுவாகிறது, ஆகவே இந்த முறைதான் சிறந்தது என அரசாங்கம் கருதுகிறது.

திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எலிகள் அதிக அளவிற்கு பயிர்களுக்கு சேதம் உண்டாக்குகிறது. மேலும் சேமித்து வைக்கப்படுகிற தானியங்களைச் சேதப்படுத்துகிறது. வயல்வெளிகளில், வீடுகளில் எளிமையாக எலிகளைச் சாகடிப்பதற்கு ரத்த உறவைத் தடுக்கும் வகையில் 'வார்பெரின், பூபரின்' போன்ற மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை விவசாயிகளுக்கு இங்கே கிடைப்பதில்லை. இந்த மருந்துகளை ஆந்திராவில் தனியார் நிறுவனங்கள் இறக்குமதி செய்து விற்கிறார்கள். அதேபோன்று தமிழக அரசும் இறக்குமதி செய்து அதை விவசாயிகளுக்கு மானியமாக வழங்குமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்தை நிச்சயமாக அரசு ஆராயும். ஆனால் அதை இலவசமாக வழங்குவது என்பது இயலாது.

திரு உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, எலிகளுடைய பெருக்கத்திற்குக் காரணம் பாம்புகள் குறைந்தது என்று ஒரு காரணம் சொல்கிறார்கள். பாம்புத் தோல் விலை உயர்வினால் அதைப் பிடிப்பதற்கு பலர் முயற்சி செய்வதன் காரணமாக பாம்புகள் அழிந்த நிலையில் எலிகள் பெருக்கம் அதிகமாக இருக்கிற காரணத்தினால் பாம்புகள் பிடிப்பதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிற புள்ளி விவரத்தை அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லை. ஆனால் அந்தக்கருத்தின் அடிப்படையில் நாம் எலிகளை அழிப்பதற்கு பாம்புகளை ஆங்காங்கே பயன்படுத்தலாம் என்று அவர்கள் யோசனை சொல்லக்கூடும். அது கொஞ்சம் ஆபத்தான யோசனையாக எனக்குத் தெரிகிறது.

திரு மு. பாண்டுரங்கன்: தலைவர் அவர்களே, வயல்களைச் சுற்றி எலக்ட்ரிக் வயர் பொருத்தி எலிகள் அதில் சிக்கிச் சாகும் என்று கருதி சிலர் லைவ் வயர்களைப் பொருத்துகிறார்கள். சில ஆட்கள் அதில் சிக்கி செத்து விடுகிறார்கள். ஆகவே அதில் குறைந்த அளவு மின்சாரம் செலுத்தி ஆட்கள் சாகா வண்ணமும் எலிகள் சாகும்வண்ணமும் ஏதாவது மாற்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எலியைக் கொல்வதற்காக வீட்டையே எரிக்கக் கூடாது என்பது பழமொழி. எலிகளை ஒழிப்பதற்கு வேறு முறைகளை ந்தத் துறையின் மூலம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த முறைகளை விவசாயிகளுக்கு தெரிவிக்கிறோம். அந்த முறைகளை விவசாயிகள் பின்பற்றுவது நல்லது.

திரு குமரி அனந்தன்; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, விஞ்ஞானிகள் மனித காதுகளுக்கு கேட்காத, ஆனால் எலிகளின் காதுகளுக்கு மட்டும் கேட்கக்கூடிய மிக உச்ச அதிர்வுடைய அல்ட்ரா-சானிக் என்ற எக்குப்மெண்டை கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன்மூலம் எலிகள் சாவதாக விஞ்ஞானிகள் எழுதுகிறார்கள். அப்படிப்பட்ட அல்ட்ரா-சானிக் எக்குப்மென்டை வாங்குவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, சுண்டைக்காய் கால் பணம், சுமைகூலி முக்கால் பணம் என்பது போல் ஆகிவிடக்கூடாது. எலிகளினால் ஏற்படக்கூடிய சேதத்

தைவிட, அதிலே அதிகமான அளவுக்கு பொருள் செலவழிக்கக் கூடிய நிலைமை இருந்தால், அந்தக் கருத்தை அரசு பரிசீலிக்க இயலாது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலி மருந்துகளுக்கு எப்படி பாதியளவு மானியமாக கொடுக்கப்படுகிறதோ, அந்த முறையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் பாம்புகளை அடிப்பதற்கு தடைச் சட்டத்தை கொண்டு வருவதற்குப் பதிலாக, விஷமற்ற சாரைப் பாம்புகளை வளர்ப்பதற்கு மானியம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வயலில் அதை செயல படுத்தி, அதன் நிலைமைகளை அரசுக்குத் தெரிவிக்கிறபோது, அதைப்பற்றி அரசு ஆராயும்.

திரு பொ. முத்துராமலிங்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளைவிட மோசமான சேதத்தை உருவாக்கக் கூடிய அளவில், மதுரை மாவட்டத்தில் கடந்த ஆண்டு வைரஸ் நோய் தாக்கப்பட்டும், இந்த ஆண்டு துங்ரோ வைரஸ் நோயினால் தாக்கப்பட்டும் நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு, விவசாயிகள் கடுமையான சேதத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நட்ட ஈடு வழங்கவும், விவசாயம் செய்வதற்கு விதை பொருள்கள் இலவசமாக அளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன் அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற நோய்களைப் போல, இந்த எலிகளும் விவசாயத்தை பாழ்படுத்துகிறது. இப்போது தஞ்சை மாவட்டத்தில் உளுந்து பயிர் போடப்பட்டு, தட்டை எடுக்கின்ற நேரம். அதை இந்த எலிகள் வெட்டி வெட்டி எடுத்துக் கொண்டு போய்விடுகின்றன. இதனால் விவசாயிகள் பல்வேறு பாதிப்புக்கு ஆளாகிறார்கள். இப்போது சர்க்கார் எலி ஒழிப்பு சம்பந்தமாக ஒரு விழா நடத்தி, அன்றைக்கு விவசாயிகளுக்கு ஒரு பொட்டலம் கொடுக்கிறார்களே தவிர, தொடர்ச்சியாக கண்காணிப்பதிலே கவனக்குறைவு ஏற்பட்டிருக்கிறது. இப்போது அதிகமான தொகை செலவிட்டு, ஒவ்வொரு யூனியனிலும் பாம்பு பிடிக்க ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதுபோல், எலியைப் பிடித்துக் கொடுக்கக் கூடியவர்களுக்கு ஒரு எலிக்கு 50 காசு கொடுப்பதாக அரசு அறிவித்தால், நிச்சயமாக இந்த எலியைப் பிடிக்கக்கூடியவர்கள் அதிகமாக எலியைப் பிடித்து கொடுப்



பார்கள். அதன் மூலம் அவர்களுக்கும் வருமானம் கிடைக்கும், எலியின் தொல்லையையும் ஒழிக்க முடியும். இதை நடைமுறைப் படுத்த அமைச்சர் அவர்கள், அதிகாரிகளோடு கலந்து நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே. வயலில் பயிர்களை சேதப்படுத்துகின்ற எலிகளை ஒழிக்க வேண்டுமென்பது கொள்கை. ஆனால், இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு' ஒட்டுமொத்தமாக வேறு எங்காவது எலிகளைப் பிடித்துக் கொண்டு வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நிலைமை உருவாகக்கூடாது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெற்பயிர் அமோகமாக விளைகின்றது. ஆனால் அறுவடை சமயத்தில் எலிகளினால் உரிய பலன் அடைய முடிய வில்லை. எனவே, உழவடை ஆரம்ப காலத்திலே நாம் உரத்தை இடுகின்றபோதே, இந்த எலி மருந்தையும் சேர்த்து தெளிப்பதன் மூலம் எலிகளை ஒழிக்க முடியும். எனவே அப்படி சேர்த்து தெளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அரசு ஆராயும்,

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நரிக் குறவர்கள் எலிகளைப் பிடித்தால் அவர்களுக்கு ஒரு ரூபாய் ஊக்கத் தொகையாக கொடுக்கப்படுகிறது. அதேபோல், வயல்களில் எலிகளை ஒழிப்பதற்கு பூனைகளை வளர்த்தால், அதற்கு ஊக்கத் தொகை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நடைமுறைக்கு உகந்ததாக இருந்தால், அந்தத் திட்டத்தை செயல் படுத்துவதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், பூனைகளை வீட்டிலே வளர்த்தால், பல நேரங்களில் எலிகள் அதிமாகி விடுகிறது. ஆகவே, இது சரியாக வருமா என்பதை நாம் ஆராயலாம்.

திரு ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் தாளவாடி மலைப்பகுதியில் அங்குள்ள மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். அதிகமான அளவிலே ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்களில் அடிக்கடி எலிகள் மற்றும் காட்டுப்பன்றிகள், யானைகள் புகுந்து அவர்களுடைய பயிர்களுக்கு மெத்த சேதத்தை விளைவிக்கின்றன.

இதைத் தடுப்பதற்காக கர்நாடக அரசாங்கம் அவர்களுடைய பகுதியிலே இருக்கிற விளைநிலங்களுக்கும் ஊர்களுக்கும் டிரஞ்ச் எனப்படும் அகழிகள் வெட்டியிருக்கிறார்கள். அதுபோன்று தாளவாடி பகுதியில் தமிழக அரசு செய்வதற்கு ஏதேனும் உத்தேசம் உண்டா?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, விதைகள் சேதப்படாமல் இருப்பதற்காக எலிகளால் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவேண்டுமென்பதற்காக சில அமைப்புகளை நாம் ஏற்படுத்த திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறோம். அதுவே இதற்குப் போதுமானது என்று கருதுகிறேன்.

**திரு. கி. ராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்புத் தோல்களை ஏற்றுமதி செய்வதற்கு ஒரு நிரந்தரமான தடை இருக்கிறது. அந்தத் தடையையும் மீறி சில வியாபாரிகள் பாம்புத் தோல்களை வெளிநாடுகளுக்கு திருட்டுத்தனமாக அனுப்பி பெரும் லாபம் சம்பாதித்து வருகிறார்கள், என்பது அரசுக்குத் தெரியும். சமீப காலத்திலே பல விமானக்கூடங்களிலே திருட்டுத்தனமாக கொண்டுப்போகப்படுகிற லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பாம்புத் தோல்களை சுங்க அதிகாரிகள் பிடித்து நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியும். இப்படித் திருட்டுத்தனமாக பாம்புகளை அடித்து தோல்களை ஏற்றுமதி செய்வதைத் தடுக்கவேண்டும். அப்படி பாம்புகளை அடிப்பவர்களுக்கு தண்டனை கொடுக்க ஏற்பாடு செய்தால் அந்தப் பாம்புகள் பாதுகாக்கப்பட்டு எலிகளை அழிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே பாம்புகளை அதிகாரம் இல்லாமல் அடித்துக் கொன்று பாம்புத் தோல்களை வெளிநாடுகளுக்கு அந்தத் தோல்களை ஏற்றுமதி செய்கிறவர்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, பாம்புகளை அடிப்பதை நாம் தடைசெய்தால் அதனாலே பல பாதிப்புகள் ஏற்படும். அந்த ஏற்றுமதியைத் தடுப்பதற்கு உரிய இடத்திலே சொன்னால் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. துரை கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களான நெல், கடலை இவைகளையெல்லாம் எலிகள் வெகு வேகமாக அழித்துவிடுகின்றன. ஆனால் மற்ற மாநிலங்களிலே உணவைப் பொறுத்தமட்டில் கால் நடைகளை இங்கேயிருந்து நிரம்பக்கொண்டு சென்று சத்துணவாகப் பயன்படுத்துகிறார்கள். அதைப்போல எலிக்கறியைச் சாப்பிட்டால் நல்ல சத்துணவாக இருக்கும் என்று பல பேர்கள் சொல்கிறார்கள். அதைப்போலவே அமைச்சர் அவர்கள் மீன் முதலியவற்றை எப்படி சத்துணவு என்று அறிவிக்கிறார்களோ அதைப்போல் எலிக்கறியை சத்துணவு என்று பல இடங்களிலே அறிமுகப்படுத்தினால் எலியைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதை அரசு அறியுமா?



**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. துரை கோவிந்தராசன் அவர்களுடைய அனுபவத்திலே அதைச் செயல்படுத்திக் காட்டி அவர்கள் நமக்கு சொன்னால் நல்லது.

**திரு. ஆ. கா.அ. அப்துல் சமத்:** தலைவர் அவர்களே, கடந்த கால் மணி நேரமாக சட்டசபையிலே எலிகளும் பாம்புகளும் விளையாடிக் கொண்டிருப்பது தவிர்க்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, பிரச்சினைக்குரியவை எப்போதுமே எங்குமே உள்ளே நுழையும். அதைத் தடுக்கமுடியாது.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நகரத்திலே வீடுகளைப் பாழடிக்கும் பெருச்சாளிகளை ஒழிக்கும் திட்டம் அரசுக்கு உண்டா? திரு. துரை கோவிந்தராசன் அனுபவப் பூர்வமாக தெரிவித்ததைப்போல் எலிக் கறியை சத்துணவாக சாப்பிடலாம் என்று தெரிவித்தார்கள், அந்த சத்துணவு குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, திரு. துரை கோவிந்தராசனை திரு. பரிதி இளம்வழுதி ஆதரிப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. நகரத்திலே இருக்கிற பெருச்சாளிகள் ஒழிக்கப்படுமா என்று கேட்டார்கள். சுரண்டுகிற பெருச்சாளிகள் எங்கே இருந்தாலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே நம் கருத்து.

**திரு. மா. மணிமாறன்:** தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் தொடர்பான இன்னொரு கேள்வியை கேட்டு விடுகிறேன். அவர் அறிந்த கேள்விதான் முதலிலே நான் கேட்க வந்தேன். தாங்கள் மறுத்துவிட்டீர்கள். குடிநீர்ப் பிரச்சினைக்கு பதில் சொல்கிற நேரத்திலே இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்கவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பதில் அளிக்கும் போது எலிகளை ஒழிக்க தனி திட்டம் கொண்டு வரப்படும் என்றார்கள். ஏற்கனவே கொசுக்களை ஒழிப்பதற்கு பெண் கொசுக்களைப் பிடித்து கருத்தடைச் செய்யும் ஒரு அமெரிக்கத் திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. அதைப் போல பெண் எலிகளை பிடித்து கருத்தடைச் செய்யும் அமெரிக்கத் திட்டம் இதற்கும் கொண்டுவரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு கொண்டு வருவதை விட நாமே அதை செயல்படுத்துவது தான் நல்லது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயல் வெளிகளில் விளைப் பொருட்களை நாசம் செய்யும் எலிகளை ஒழிப்பதற்கு கிராமப்புறத்தில் உள்ள வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களை மாத ஊதியத்தின் அடிப் படையில் நியமிக்க அரசு முன்வருமா? அப்படி செய்தால் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது போல் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதோடு, எலிகளையும் ஒழித்தது போல் இருக்கும். ஆகவே, இந்தத் திட்டத்தை அமல் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றல் மிக்க இளைஞர்களின் மிகச் சிறந்த தன்மைகளை நாம் எலி ஒழிக்கும் திட்டத்துற்கு பயன்படுத்துவது நல்லது அல்ல. அதற்கு வேறு வகையில் அவர்களுக்கு உரிய வேலைவாய்ப்பு கொடுப்பதைப் பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நிமிடங்களாக இந்த சபையை அச்சுறுத்திக் கொண்டு இருக்கிற எலித் தொல்லையை சமாளிக்க அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விரிவாக பதில் சொல்லியிருக் கிறேன். இன்னும் அதை தெரிந்து கொள்ளாதது தான் எனக்கு விசித்திரமாக உள்ளது.

திரு. ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த எலியைப் பற்றி பெரும் விளக்கம் கொடுத்து இருக்கிறார்கள். மனிதன் சாப்பிடக்கூடிய அத்தனை உணவு களையும் எலி சாப்பிடுகிறது. அதனால் ஏற்படும் நஷ்டம் பல கோடிக்கணக்கான ரூபாயாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் மின்சாரத்தை வைத்து எலிகளைப் பிடிப்பதற்கு விவசாயிகள் ஈடுபடும்போது திருடப் போகிறவர்கள் தான் அதில் மாட்டுகிறார்கள், சாதாரண மானவர்கள் மாட்டுவதில்லை. ஆகவே, எலியைப் பிடிப்பதற்கு மின்சாரத்தை வைத்து ஒரு வாரத்திற்கு ஒரு ஏரியா என்று போட்டு அங்கே அபாயம் என்ற நிலையில் போர்டு எல்லாம் போட்டு ஏரியா வாரியாக அந்த மின்சாரத்தை வைத்து அதனால் அதிகச் செலவு ஆகாது. மின்சாரத்தை வைக்கும்போது அந்த வழியாகப் போகிறவர்கள் அதில் மாட்டினால் அந்த ஓனர் அரஸ்டு ஆகி கொலையாளி ஆகிவிடுகிறார். ஆகவே அப்படி மின்சாரத்தைப் போடுவதற்கு பயந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே எலியைப் பிடிப்பதற்கு மின்சாரத்தை வைப்பதற்கு அந்த இடங்களில் அபாயம் என்று போர்டு போட்டு அரசே அனுமதி வழங்குமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கே மின்சாரம் பற்றாக்குறை என்ற அளவிலே நாம் இருக்கிறோம். ஆகவே எலியை ஒழிப்பதற்கு இதை பயன்படுத்துவது சரியாக இருக்காது.

திரு க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பூச்சிகளாலும் எலிகளாலும் தொல்லை அதிகமாக இருப்பதால் பயிர் காப்புறு திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு உதவியை அல்லது வரிச் சலுகையை பாதிக்கப் பட்டவர்களுக்கு தர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நரசிம்மபல்லவன் அவர்களே எலியைப் பார்த்து இவ்வளவு பயப்படுகிறபோது நிச்சயமாக உரிய நடவடிக்கை அரசு எடுக்கும்.

## ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்திற்குத் தேவைப்படும் கருவிகள்.

58— (*வினா எண்.612) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள விண்வெளி நிலையத்திற்குத் தேவையான முக்கிய கருவிகளை 'டான்சி நிறுவனம்' தயாரித்துக் கொடுக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகைக்கு தயாரித்து கொடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (அ) ஆம்,

(ஆ) ரூ. 21 இலட்சம் மதிப்பிற்கு பத்து மீட்டர் உயர ஈர்ப்பு அமைப்புகள் மற்றும் நுண்கருவிகள் இருப்புத்தட்டு மாடங் கள் ஆகியவற்றிற்கான பணி ஆணைகளை டான்சி பெற்றுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத் திலிருந்து பெரிய ராக்கெட்டுகள் அனுப்பப்படாமல் அமெரிக்கா விலிருந்தும், ரஷியாவிலிருந்தும், பிரன்ச் கயானாவிலிருந்தும் தான் விடப்படுகின்றன. அப்படி விடப்பட்ட பாஸ்கராவும் தொப் என்று கீழே விழுந்து விட்டது. எனவே, டான்சி கருவிகளைத் தயாரித்துக் கொடுத்து வேறு இடத்திலிருந்து ராக்கெட் அனுப்பு வதற்கு பதிலாக தமிழ்நாட்டிலிருந்து விண்வெளிக்கு ஏவும் நட வடிக்கையை நமது மத்திய அரசை வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்மந்தம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்வெளிக் கூடத்திற்குத் தேவைப்படும் பரந்த வெளியும், கடல் வெளியும் நம்மிடம் உண்டு. உலக முழுவதும் வான வெளியில் பறக்க விடப்படும் வானவெடிகள் சிவகாசியில் தயாரிக்கப்படுகின்றன. எனவே சிவகாசியிலிருந்து ராக்கெட் விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நமக்கு ஸ்ரீஹரி கோட்டாவிலிருந்து என்னென்ன பொருட்கள் வாங்குவதற்கான ஆர்டர்கள் வந்திருக்கின்றன என்பதைப்பற்றி கேள்வி. ஆகவே, கொஞ்சம் கூட சம்மந்தம் இல்லாத கேள்வியாக இருப்பதால் தனிக் கேள்வி போட்டால் சம்மந்தப்பட்ட அமைச்சர்கள் பதில் சொல்லுவார்கள்.

(முற்பகல் 9-50)

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மொத்த டான்சி நிறுவனங்கள் எவ்வளவு? இதில் எத்தனை தொழிலாளர்கள் பணியாற்றுகின்றார்கள் இந்த டான்சி யூனிட்டுகள் எல்லாம் இலாபத்தில் இயங்குகிறதா? அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா? இந்த நஷ்டத்திற்குக் காரணம், அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கெல்லாம் போதிய சம்பள உயர்வு கிடைக்கவில்லை என்ற கருத்து இருக்கிறதே, அது அரசுக்குத் தெரியுமா ஆகவே அவர்களுடைய சம்பளத்தை அதிகமாக உயர்த்தி அளிப்பதற்கு அரசு, முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டான்சியைப் பொறுத்தவரையில் 3,530 தொழிலாளர்களும், தொழில் நுட்பப் பணியாளர்கள் 590 பேர்களும், அலுவலர்கள் விற்பனையாளர்கள் 1,410 பேர்களும் ஆக 5.530 பேர்கள் பணியாற்றுகிறார்கள். இப்பொழுது அந்த நிறுவனம் ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு 245 இலட்சம் ரூபாய் இழப்பில் நடக்கிறது. இழப்பிற்கான காரணம். போதிய வழங்கல் ஆணை, அதாவது ஆர்டர் கிடைக்கவில்லை, பொருளாதார ரீதியில் சாத்தியமற்ற தொழில் பிரிவுகள், தேவைக்கு மிக அதிகமான தொழிலாளர்கள். ஆகவே, இவற்றையெல்லாம் ஈடு கட்டுவதற்கான நடைமுறை சாத்தியக் கூறுகளை அரசு பரிசீலித்து வருகிறது. அதனுடைய உற்பத்திப் பிரிவுகள் மொத்தம் 56

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. டான்சி நிறுவனத்தினுடைய தயாரிப்புகள் எவையேனும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற நிலையில் இருக்கிறதா? அப்படி இல்லையென்றால், அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படக்கூடிய பொருட்களைத் தயாரிப்பதற்கு டான்சி நிறுவனம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு கிண்டியிலுள்ள டான்சி கருவிகள் தொழில் கூடத்திலிருந்து 18.40 இலட்சத்திற்கு ஆண்டெனா செய்து அனுப்புகின்ற ஒரு ஆர்டரையும், அதேபோல ஏறக்குறைய 2.55 இலட்சம் ரூபாயில் டான்சி கட்டுமானத் தொழில் கூடத்தின் மூலமாக ரேக்குகள் செய்து அனுப்புகின்ற ஒரு ஆர்டரையும் இன்றைக்கு பெற்று நடத்திக் கொண்டிருக்கிறோம். அதேபோல திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி நிலயத்திற்கு விண்கலத்தைச் செலுத்துவதற்கு தேவையான உந்து சாதனத்தை மூடும் சிறப்பு வகை இரும்புப் பகுதிகளாக அளிக்கின்ற 9.6 இலட்சம் ரூபாய்க்கான ஆர்டரையும் இன்றைக்கு டான்சி பெற்றிருக்கிறது.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலில். டான்சி நிறுவனத்தில் அளவுக்கு அதிகமான தொழிலாளர்கள் இருப்பதால் நஷ்டத்தில் இயங்குவதாகக் குறிப்பிட்டார்கள். அரசு அலுவலகங்கள் அனைத்திற்கும் தேவையான மேசை, நாற்காலி போன்றவைகள் டான்சி நிறுவனத்தின் மூலமாக சப்ளை செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேவையான பொருட்கள் அங்கிருந்து தான் பெறப்படுகின்றன.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஸ்ரீஹரி கோட்டாவைப் போலவே வேறு எந்த விண்வெளி நிலையத்திற்காவது டான்சி நிறுவனம் கருவிகளைத் தயாரித்துக் கொடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு.கோ.ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பே பதில் சொன்னேன்; திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி நிலையத்திற்கும் சில ஆர்டர்களை இன்றைக்குப் பெற்றிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி கம்பெனியில் தயாரிக்கப்படுகின்ற பொருள்கள் அத்தனையும் இன்றைக்கு அரசாங்கம் மூலமாக வாங்கப்படுகிறது. அதே நேரத்தில், அரசாங்கம் விடுகின்ற டெண்டர்கள் அதிலே தனியார்களும் அந்த டெண்டர்களைப் போடுகிறார்கள்; அதிலே டான்சி நிறுவனமும் அதைக் குறைத்துப் போடுகிறது; அது தவிர்க்கப்படுமா? அதுஅரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்தை அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டான்சி நிறுவனங்களில் ஒரு சிலவற்றை நிரந்தரமாக மூடிவிடுவதற்கான இரகசியக் குறிப்பு அரசினிடத்தில் இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? அப்படி மூடுகின்ற உத்தேசம் இருக்குமேயானால், அதனால் வேலையிழப்பு ஏற்படுகின்ற தொழிலாளர்களுக்கு அவ்வாறு ஏற்படாமல் தடுப்பதற்கு அரசின் திட்டம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இரகசியம் எதுவும் இல்லை. ஏறக்குறைய எட்டு தொழில் பிரிவுகள் நீண்ட காலமாக ஆரம்பத்திலிருந்தே நஷ்டத்தில் இயங்கி வருவதால் அவைகளையெல்லாம் தனியாருக்கு சில நிபந்தனைகளுடன் விற்று விடலாமா என்று அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. வே. இராஜேயரராமன்: மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, சில டான்சி நிறுவனங்கள் இலாபம் ஈட்டுவதற்குப் பதிலாகத் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. அந்த நிறுவனங்களை மூடுவிடுவதன் காரணத்தால் அரசுக்கு இலாபம் ஏற்படும் என்ற காரணத்தால் அவற்றை மூடுவிடுகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்துச் கொண்டிருக்கிறது.

திரு. எ. வச்சிரவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, டான்சியில் தயாரிக்கப்படும் நாற்காலி, சோபா போன்றவற்றை சட்டப்பேரவை உறுப்பினர்களுக்குச் சலுகை விலையில் கொடுக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, உரிய விலைக்குக் கொடுக்கின்றபோதே நஷ்டத்தில் இயங்குவதால் இதுபற்றிப் பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையை பேரவையில் வைப்பது குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலம் ஒரு முக்கியப் பிரச்சினையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பிற்பட்டோர் நலன்



பற்றி ஆராய்வதற்காகப் போடப்பட்ட அம்பாசங்கர் கமிஷன் ரிப்போர்ட்டை அரசாங்கத்திற்குக் கொடுத்தாகிவிட்டது. அந்த அறிக்கையை இந்தச் சபையிலே விவாதிப்பதற்காக....,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினை பற்றி அவையில் எழுப்ப விரும்பினால் உரிய வகையில் முன்னறிவிப்பு கொடுங்கள். இப்போது எழுப்ப வேண்டியதில்லை.. (குறுக்கீடு) ....இப்போது கேட்டால் பதில் அரசாங்கத்திலேயிருந்து உடனடியாகக் கிடைக்காது, முறைப்படி கொண்டு வந்தால்தான் உரிய பதிலைப் பெற முடியும்.

(முற்பகல் 10–00).

திரு அ. ரகுமான்கான் பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குப்பிரச்னையின்கீழ் வராது என்று நீங்கள் தீர்ப்புக்கூறியதற்கு பிறகு அதிலே குறுக்கிட நான் விரும்பவில்லை. நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் சபையில் இருக்கக்கூடிய உறுப்பினர்களின் உரிமையையும், இந்த சபையின் உரிமையையும் காப்பாற்றுகின்ற உரிமை தங்களுக்கு உண்டு, தாங்கள் தலைவர் என்ற முறையில். ஆகையினாலே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் அம்பாசங்கர் கமிஷனுடைய ரிப்போர்ட் சபையிலே வைக்கப்பட்டு விவாதிக்கப்படுவதற்கு பதிலாக அதனுடைய முக்கியமான கன்டென்ட்ஸ் இன்றைக்கு எல்லா பத்திரிகைகளிலும் வெளி வந்துவிட்டன. கமிஷன் ரிப்போர்ட், சீக்ரட் டாக்குமென்ட் என்று சொல்லப்பட்டு, அது வெளியானால் கூட அதற்காக வழக்குகள் போடப்படுகிற நிலையில் பத்திரிகைகளில் அவை வெளியாகி இருக்கின்றன. இங்கே சபையிலே வைத்து விவாதிக்கப்பட அனுமதி வழங்கப்படாமல் இன்றைக்கு வெளியிலே, தெருக்களிலே அறிக்கையினுடைய முக்கியமான விஷயங்கள் வெளிப்படுத்தப்படுவது சபையை அவமதிப்பதாகும். ஆகையினாலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு என்ன செய்ய முடியும் இப்போது? அரசின் கவனத்தை ஈர்த்து விட்டீர்கள், அமருங்கள். இதெல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல, இட் இஸ் தி பிரிவிலெஜ் ஆப் தி ஹவுஸ். எங்களுடைய உரிமையைப் பாதுகாக்க சபாநாயகருக்கு எல்லா உரிமைகளும் உண்டு. பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையினுடைய உரிமையைப் பாதுகாப்பது தங்களுடைய கடமை. உறுப்பினர்களுடைய உரிமையையும் பாதுகாப்பது தங்களுடைய கடமை. அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்ட ஒரு கமிஷன் ரிப்போர்ட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறையாக எழுதிக் கொடுத்து எந்தப் பிரச்னையை வேண்டுமானாலும் கொண்டு வரலாம். உரிமை மீறல் இருந்தாலும் கொண்டு வரலாம்.

திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய கவனத்திற்கு ஒரு முக்கியமான பிரச்னை வந்து விடுமானால் அந்தப் பிரச்னையையொட்டி அவையினுடைய உரிமையை பாதுகாக்க வேண்டிய ஒரு கடமை தலைவருக்கு இருக்குமானால் அந்தப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியும். உடனடியாக ஆளுங் கட்சிக்குத் தெரிவித்து, அதை இந்தச் சபையில் வைக்கும்படியாக ஏற்பாடு செய்வதன் மூலமாக இங்கே முடிக்க முடியும். தாங்கள்தான் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் வரட்டும். கேட்கலாம்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, 4–4–85 அன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சட்டசபையில் பேசியது பற்றி அவர் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினையை நான் நேற்று காலையில் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அதுபற்றி எல்லாம் நேற்றே நான் தீர்ப்புச் சொல்லிவிட்டேன். இப்போது அது குறித்து மீண்டும் சொல்லத் தேவையில்லை.

(இ) வினாக்கள்—விடைகள் நேரத்தில் அதிகப்படியான வினாக்களை எடுத்துக்கொள்வது குறித்து.

டாக்டர் கே. சௌரிராஜன்; பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்திய சட்டமன்றக் கூட்டத்தொடர்களில் எல்லாம் காலை 9 மணி முதல 10 மணி வரையில் உள்ள கேள்வி நேரத்தில் 20 கேள்விகள், 25 கேள்விகள் என்று எடுத்துக்கொள்வது வழக்கம். ஆனால் இப்போது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பதில் வந்த கேள்விகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். கேள்விகளைப் பொறுத்த வரையில் நேற்று மாலைகூட உறுப்பினர்கள் எல்லாம் சந்தித்துப் பேசினோம்.

டாக்டர் கே. சௌரிராஜன்; 5 கேள்விகளுக்காக இப்போது ஒரு மணி நேரம் செலவழிப்பது என்பது it is waste of time அல்லவா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிச் சொல்லாதீர்கள் சப்ளிமெண்டரி கேள்விகள் போடுவதற்கு பல உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது, இன்னும்கூட 20, 22 கேள்விகள் இருக்கின்றன. அவற்றிற்கு சில அமைச்சர்களிடமிருந்து பதில் வரவில்லை. இருந்தாலும் அந்தக் கேள்விகளையும் நான் லிஸ்டிலே போடுகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் சௌரிராஜன் அவர்கள் கேட்ட கேள்வியை ஒட்டி நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் சட்டமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப் பட்டு பின்னர் ஜூன் 24 ஆம் தேதிதான் மீண்டும் கூட இருக்கின்றது. எனவே ஜூன் 24 ஆம் தேதியிலிருந்தாவது 20 கேள்விகள் வரக்கூடிய அளவுக்கு அமைச்சர்களிடத்தில் இருந்து பதிலைப் பெற்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முழுமையாக 20 கேள்விகள் வரும். அமைச்சர்களிடமிருந்து பதிலைப் பெற்று நாளைக் கழித்து லிஸ்டிலே அவற்றைப் போட்டுவிடுறோம். பதில் வந்தாலும், வராவிட்டாலும் அவற்றைப் போட்டுவிடுகிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது சென்னையைப் பொறுத்த விவகாரம். நான் கடந்த சனிக்கிழமை ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்; என் அறையிலே வந்து கேட்கக் கூடிய விஷயங்களை இங்கே கேட்க வேண்டாம் அறைக்கு வாருங்கள். அங்கே பேசுவோம்.....(குறுக்கீடு)... நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். இப்போது நீங்கள் மீண்டும் மீண்டும் கேட்டதால் நான் சொல்கிறேன். அதற்கு நான் அனுமதி மறுத்துவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)....அதற்கு அனுமதி மறுப்பதும், எடுத்துக்கொள்வதும் அவைத் தலைவரின் டிஸ்கிரிஷ...

### 3. அறிவிப்புகள்.

#### (ஆ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1985–86 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. டாக்டர் தே. குமரதாஸ்
2. திரு. எஸ்.என். இராமசாமி
3. திரு. அ. இரகுமான்கான்
4. திரு. மா. மணிமாறன்

5. திரு. கே.எஸ்.எம். இராமச்சந்திரன்
6. திரு. டி. ஆர். வேங்கடரமணன்
7. திரு. ஆர். தியாகராசன்
8. திருமதி. தா. இராசாம்பாள்
9. திரு. தி. அன்பழகன்
10. திரு. எம். சிவக்குமார்
11. திரு. சா. ஞானசுந்தரம்
12. திரு. க.இரா. சின்னராசு
13. திரு. இரா. முத்தையா
14. திரு. இரா. தாமரைக்கனி
15. திரு. துரை இராமசாமி
16. திரு. மு. பாண்டுரங்கன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1985-86 ஆம் ண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் பொதுக் கணக்குக் குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழு தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 222-வது விதியின்கீழ் திரு. இரா. முத்தையா அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக்குழு— உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்மிகு பேரவைத் தலைவர்; 1985–86 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. ஆ.கா.அ. அப்துல் சமத்
2. திரு. எஸ். ரெத்தினராஜ்
3. திரு. அ. செல்வராசன்
4. திரு. என்.எஸ்.வி. சித்தன்
5. திரு. எஸ் வேணுகோபால்
6. திரு. கி. இராமன்
7. திரு. கி. கிருஷ்ணமூர்த்தி
8. திரு. துரை கோவிந்தராசன்



9. திரு. பொ. அன்பழகன்
10. திரு. க. சோலைராசு
11. திரு. நிலக்கோட்டை அ. பாலுச்சாமி
12. திரு. எஸ். பரளை நாராயணன்
13. திரு. அ. வெங்கடாசலம்
14. திருமதி பா. வளர்மதி
15. திரு. செ. செம்மலை
16. திரு. சைதை சா. துரைசாமி

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால். 1985–86 - ம் ஆண்டு பொதுக்கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 230-வது விதியின் கீழ் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(இ) பொதுநிறுவனங்கள் குழு— உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; 1985-86 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம செய்யப்பெற்றுள்ளனர், என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. கு. சுப்பராயன்
2. திரு. ஆ. நடராசன்
3. திரு. மா. மீனாட்சிசுந்தரம்
4. திரு. ஆர். ரெங்கசாமி
5. திரு. கே. கல்லன்.
6. திரு. ஆர். கோவிந்தசாமி
7. திரு. ஓமலூர் கே. அன்பழகன்
8. திரு. எல்ல இராசாமாணிக்கம்
9. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
10. திரு. கு.அ. செங்கோட்டையன்
11. திரு. பி. முசிறிபுத்தன்
12. திரு. பாப்பா சுப்பிரமணியன்

13. திரு. கோ. இரகுபதி
14. திரு. டி.எம். வெங்கடாசலம்
15. திரு. வே.இரா. ஜெயராமன்
16. திரு. எம். இராஜரத்தினம் என்கிற மணி

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1985–86 ஆம் ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினராவர்.

இப்பேரவையின் விதி 239-ன் கீழ் திரு. பி. முசிறிபுத்தன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஈ) உரிமைக்குழு— உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1985-86 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

1. திரு. வி.பி. சிந்தன்
2. திரு. ப. பொன்னுரங்கம்
3. திரு. க. அன்பழகன்
4. திரு. கி. வெங்கடாசலம்
5. திரு. ஜெ. முகம்மது கனி
6. திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா
7. திரு. எப்.எம். இராசரத்தினம்
8. திரு. அ. தங்கராசு
9. திரு. கே. பாலாஜி
10. திரு. மு. மாரிமுத்து
11. திரு. மு. ஆனந்தன்
12. திரு. எம். சண்முகய்யா பாண்டியன்
13. திரு. சி. சிவப்பிரகாசம்
14. திரு. ஆ. பிரேம்குமார்

முறையாக நியமனம் செய்யப் பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1985-86 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.



மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவையின் 253 (3)-வது உரிவின்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(உ) அவைக்குழு உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 279 (1) விதியின் கீழ் பின்வரும் உறுப்பினர்களை 1985-86 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு (ஹவுஸ் கமிட்டி) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1 திரு. மு. ஆறுமுகம்
2 திரு. கா.வே. கந்தசாமி
3 டாக்டர் கா. முகம்மது சலீம்
4 திரு. எம். அண்ணாதாசன்
5 திரு. மு. தங்கமணி
6 திரு. மு. பிச்சை
7 திரு. ச. சங்கரலிங்கம்
8 திரு. த. பழனி
9 திரு. கி. எத்திராசன்
10 திரு. மா. சின்னராசு
11 திரு. கி. வெங்கடாசலம்
12 திரு. எஸ். டேனியல்ராஜ்
13 திரு. க.வெ. வீரானம்பலம்
14 திரு. ச. குமரகுருபர ராமநாதன்
15 திரு. அ. பிரணவநாதன்
16 திரு. மு. இராசாங்கம்
17 திரு. மு. செல்லமுத்து
18 திரு. பி.கே.எம். முத்துராமலிங்கம்

பேரவையின் 279 (1) விதியின் கீழ் திரு. மா. சின்னராசு அவர்களை இந்தக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

4. கவன ஈர்ப்புகள்.

(அ) குடும்ப நலத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு அளிக்காத பணியாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்பராயன் மற்றும் பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. சுப்பராயன்: தலைவர் அவர்களே, ''குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சைக்கு ஆட்களை ஏற்பாடு செய்யவில்லை என்ற காரணம் காட்டி, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் அரசுப் பணியாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

குடும்ப நலத் திட்டம் ஒரு தலையாய தேசிய திட்டமாகும். நாட்டில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்ற பல பிரச்சினைகளை நீக்கி, மக்களுக்குக் கல்வி, நல்வாழ்வு, குழந்தைகளுக்கு சத்துணவு அளித்தல் போன்ற பல முற்போக்குத் திட்டங்களை நடைமுறைப்படுத்த, மக்கள் தொகைக் கட்டுப்பாடு மிகவும் இன்றியமையாதது என்பதால் குடும்ப நலத் திட்டத்தை மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து தீவிரமாக செயல்படுத்தி வருகின்றன. இத் திட்டத்திற்கான முழுச் செலவையும் மத்திய அரசே ஏற்கிறது. ஆண்டு தோறும், மாநிலங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கிறது. இவ்விலக்கினை எய்துவதற்கு ஏதுவாக மாவட்டங்களுக்கு, அவற்றின் பரப்பளவு, மக்கள் தொகை ஆகியவற்றிற்கேற்ப பிரித்தளித்து, அவற்றை நிறைவேற்றும் பொறுப்பினை மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது.

1984–85–ம் ஆண்டிற்கு இம்மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப நல அறுவை சிகிச்சைக்கான இலக்கு 4,75,000 ஆகும். மாவட்டங்களிலுள்ள அரசின் பல்வேறு துறைகளான வளர்ச்சித் துறை, வருவாய், மருத்துவப் பணி பொதுச் சுகாதாரம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்பநலத் துறை போன்ற துறைகளிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் இதில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் அளிக்கப்படுவதுடன், இத்தேசிய திட்டத்தில் தங்களை முழுமையாக ஊக்கத்துடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக, சிறப்பாகப் பணியாற்றுவோருக்கு ஊக்கப் பரிசுத் திட்டமும் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு களப்பணியாளருக்கும் குறைந்தது மாதத்திற்கு சராசரியாக ஐந்து அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனை, இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பணியாளர்களும் முனைப்பாக நடத்தினால்தான் அரசு நிர்ணயித்துள்ள இலக்கை எட்ட முடியும். பல பணியாளர்கள் இத் திட்டத்தை



ஊக்கத்துடன் செய்து வருகிறார்கள் என்றாலும் சிலர் இதில் ஆர்வம் காட்டாமல், மிகவும் குறைவாகவே செய்கின்றனர். அவ்வப்போது அவர்களுக்கு உரிய மட்டங்களிலிருந்து அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிலர் ஒரு மாதத்தில் ஒன்றுகூட செய்யாமல் இருக்கின்றனர். இவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று முறை எச்சரிக்கை வழங்கப்படுகிறது. இருந்தும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆர்வம் காட்டாமல் உள்ளவர்களை, இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணரும் வகையிலும் இவர்கள் மீது ஏதும் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டால், ஆர்வத்துடன் ஈடுபட்டுச் செயலாற்றும் மற்ற பணியாளர்களிடையே ஆர்வம் குறைந்துவிடும் என்பதாலும் சிலரை தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இவ்வாறு தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர்களும் அடுத்த மாதங்களில் ஒன்றிரண்டு குடும்பநலத் திட்ட ஏற்பாடுகளைக் கொண்டு வந்தால்கூட. உடனே அவ்வுத்தரவு நீக்கப்பட்டு அவர்களுக்கு மீண்டும் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, இப்பணியாளர்களின்மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோ தண்டனை வழங்க வேண்டும் என்பதோ அரசின் நோக்கம் அல்ல என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், இப்பணியாளர்களின் மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோ தண்டனை வழங்க வேண்டும் என்பதோ அரசின் நோக்கம் அல்ல என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதே அறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட குறியளவை நிறைவேற்றாத பணியாளர்கள் இரண்டு அல்லது மூன்று முறை எச்சரிக்கப்படுகிறார்கள்; சிலர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே நடவடிக்கை எடுப்பதோ அல்லது பணி நீக்கம் செய்வதோ நோக்கமல்ல என்று சொல்லப்பட்டிருக்கிற அதே அறிக்கையில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதென்றால், தற்காலிக பணி நீக்கம் என்பது தண்டனையில்லை என்று அரசாங்கம் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எந்தக் காரணத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் இங்கே விளக்கிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அவர்கள் தங்களுக்குரிய இடங்களுக்குச் செல்லவில்லை. அதுமட்டுமல்லாமல் மோட்டிவேஷன் என்று சொல்லக்கூடிய அந்தப் பணியை எடுத்துக்கொள்ளவில்லை. ஈ.சி. ரெஜிஸ்டர் அதாவது 'எலிஜிபிள் கப்பிள்ஸ் ரெஜிஸ்ட்டர்' என்று அவர்கள் மெயின்டெய்ன் செய்து கொள்ள வேண்டும். அதையும் செய்யவில்லை. ஆகவே கொடுக்கப்

பட்டிருக்கிற அந்தப் பணியைச் செய்யாமல், பலர் அந்த வேலையை செய்து கொண்டிருக்கிற நேரத்தில், தங்கள் பணியில் ஈடுபடாமல் இருந்திருக்கிறார்கள். இரண்டாவது கேள்வியாக கொடுக்கப்பட்டிருக்கிற இலக்கைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். இந்தப் பணியில் நம்முடைய நாட்டின் இலக்கு மிகவும் குறைவாகவே இருக்கிறது. மற்ற சைனா போன்ற நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கிற போது நம்முடைய நாட்டின் இலக்கு மிகவும் குறைவாகவே இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–10)

அது மட்டுமல்ல. நாம் இங்கே பேசுகின்ற பேச்சோ, எழுப்புகின்ற கேள்வியோ நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற முக்கியமான தேசியத் திட்டமாக இருக்கக்கூடிய குடும்ப நலத் திட்டத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கக்கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பணியே செய்யவில்லை; அதனால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரமாக வைத்திருக்கிற அறிக்கையில் நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை போன்ற காரியங்களை நீக்குவதற்கு இது ஒரு தேசியத் திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள், அதுதான் முழுக்க முழுக்க காரணம் இல்லை என்று சொன்னாலும் இந்தத் தேசியத் திட்டத்தை ஓரளவு ஒத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு ரெவின்யூ டிபார்ட்மென்ட் ஆனாலும் சரி, ஆசிரியர்கள் என்றாலும் சரி, குறிப்பாக பாலசேவிகாக்கள் ஆனாலும் சரி அவர்கள் எல்லாம் இந்த வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. பாலசேவிகா சின்ன குழந்தைகளைப் பராமரிக்கும் பணியைச் செய்கின்றவர். என்னுடைய தொகுதியிலே கூட பலருக்கு நோட்டீஸ் கொடுத்து, குடும்பக் கட்டுப்பாட்டுக்கு அவர்கள் கோட்டா அடிப்படையில் பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, குறிப்பிட்ட இடத்தில் முகாம் அமைப்பதால் மற்ற எல்லா வேலைகளும் செயலற்று நின்று போகும் சூழ்நிலை இருக்கிறது. இத்தகைய நிலையைப் போக்கவும் இப்படிப்பட்ட ஒரு கடுமையான தண்டனை கொடுப்பதைத் தடுக்கின்ற வகையிலும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாக நேற்றையதினம் நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தினால் மக்கள் தொகை எண்ணிக்கை மிகக் குறைந்து, அதனால் தமிழ்நாட்டில் இருந்த 41 பாராளுமன்ற தொகுதி 39 ஆக குறைந்திருக்கிறது; இது எதிர்காலத்தில் இன்னும் குறையக்கூடிய அபாயம் கூட வரும் என்று சொன்னார்கள். ஆகையால் இப்படிப்பட்ட சூழ்



நிலைகளையும் கருத்தில் கொண்டு, குடும்ப நலத் திட்டத்திற்கு ஆள் கொண்டுவரும் பணியை அரசு ஊழியர்கள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தாமல் இருக்க அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

குடும்ப நலக் கட்டுப்பாடு செய்துகொள்கின்ற கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கு 60 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களை அழைத்துக்கொண்டு வருகிறவர்கள் 150 ரூபாய் ஒருவருக்கு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதை அவர்களுடைய சம்பளத்திலிருந்துதான் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்தக் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்ய வேண்டும். 60 ரூபாய் கொடுப்பது என்பதை 150 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பதற்கும், அரசு ஊழியர்களைக் கட்டாயப் படுத்தாமல் பிரச்சாரம் மூலமாகவே இந்தத் திட்டத்தை அமுல் படுத்தவும் அரசாங்கம் பரிசீலனை செய்து எதிர்காலத்தில் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நீண்ட சொற்பொழிவாற்றியிருக்கிறார்கள். அதற்கு நான் விரிவான பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. முதலிலே ஓரளவு ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லாமல் ஓரளவு ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்வது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. இதை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். நம்முடைய நாடு வளர்ந்துகொண்டிருக்கிற ஒரு நாடு. கண்டிப்பாக இந்தத் திட்டத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தும் நிலை இல்லாததால் ஜனத்தொகையைக் கட்டுப்படுத்துவதில் இன்னும் நாம் முழுமையாக வெற்றி பெறவில்லை. நமக்குப் பின்னால், பல ஆண்டுகளுக்குப் பிறகு சைனா கடுமையான நடவடிக்கை எடுத்ததால் இந்தத் திட்டத்தில் நல்லமுறையில் வெற்றி பெற்றிருக்கிறது. இங்கே நாம் எதைச் சொன்னாலும் மறுத்துப் பேச வாய்ப்பு இருப்பதால் இப்படிப்பட்ட கேள்வி வந்து, பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால், மெள்ள மெள்ள போய்க்கொண்டிருக்கிறோம். நாம் முழு வெற்றிபெற குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அனைவரும் முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஏதோ ஆள் பிடித்துக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அல்ல, அவர்களுடைய பணிகளைச் செய்யவில்லை என்பதற்காகத்தான் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஹைலி இன்டிசிப்பிளின் இது. இ-சி. ரெஜிஸ்டர் கூட வைத்துக்கொள்ளவில்லை. We are not here to allow the tax-payer's money to go waste. எந்தக் காரணத்தைக் கொண்டும் மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்கக் கூடாது.

அரசாங்கம் அதற்கு ஒருபோதும் இடமளிக்காது. வரிப் பணத்தை வாங்கி, அதிலிருந்துதான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறோம். மக்களுடைய வரிப்பணத்திலிருந்து சம்பளத்தை வாங்கிக்கொண்டு, அதற்கு பணியாற்றவில்லை என்றால் எப்படி சும்மா இருக்க முடியும்? அதனால்தான் அவர்களுக்கு வழங்கப்படும் ஒரு தண்டனையாக சஸ்பென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சஸ்பென்ஷன் என்று சொல்லும்போது எதிர்காலத்தில் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்காமல் செய்திருக்கிறோம். சஸ்பென்ஷன் செய்யப்பட்டவர்களில் 80 சதவீதம் பேர்களை ''ரீ இன்ஸ்டேட்' பண்ணியிருக்கிறோம். இந்தத் தண்டனைக்குப் பின்னால் அவர்களுடைய எதிர்கால சம்பளத்தில் பாதிப்பு இல்லை. இன்கிரிமென்ட் கட் செய்தால் சம்பளம் பாதிப்பு, பென்ஷன் பாதிப்பு ஏற்படும். அப்படிப்பட்ட தண்டனை வழங்கப்படவில்லை. இந்த சஸ்பென்ஷனுக்குப் பின்னால் பலர் நல்ல முறையில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் நல்லமுறையில் இந்தத் திட்டத்திற்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்களுடைய வரிப்பணம் எந்தக் காரணத்தைக் கொண்டும் விரையம் ஆக்கக்கூடிய அளவுக்கு இந்த மன்றம் விடக்கூடாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) நிலவள வங்கிகள் கடன் வழங்க இரு கிணறுகளுக்கிடையேயான தூரத்தை நிர்ணயம் செய்துள்ளதால் சேலம் மாவட்ட விவசாயிகள் படும் சங்கடங்கள் குறித்து.**

**திரு. செ. செம்மலை;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்த கடன் உதவி வழங்க தற்போது நிலவள வங்கிகள் கையாண்டு வரும் கிணறுகளுக்கு இடையேயுள்ள தூரத்திற்கான நிபந்தனையால் கடனுதவி பெற முடியாத நிலையில் உள்ள சேலம் மாவட்ட விவசாயிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள சங்கடங்கள்'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழகத்தில் சிறு பாசனக் காரியங்களுக்கு பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் கடனுதவி செய்வது குறித்து சர்வ தேச வளர்ச்சி நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி **2-11-1971** ஆம் தேதி முதல் தமிழகத்தில் நிலத்தடி நீர் கட்டுப்



பாடு விதிகளுக்குட்பட்டே கடன்கள் வழங்கப்பட வேண்டும். இவ்வகையில் கூட்டுறவு பிரதம நிலவள வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் சிறு பாசனக் காரியங்களுக்கு கடன்கள் வழங்குவதை நெறிப்படுத்துவது சம்பந்தமாக அனுசரிக்கப்பட வேண்டிய விதி முறைகளை நிர்ணயம் செய்ய தலைமைப் பொறியாளர் (நிலநீர்) தகுதி வாய்ந்த அலுவலராக நியமிக்கப் பட்டுள்ளார், அவர் வேளாண்மை, மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசீய வங்கியுடன் (நபார்டு) கலந்து, புதியதாக வெட்டப்பட உத்தேசித்துள்ள பாசனக் கிணறு அமைய உள்ள இடத்திற்கும், அதற்கு அடுத்தாற்போல உள்ள ஏற்கனவே வெட்டப்பட்டு பாசன உபயோகத்தில் இருக்கும் கிணற்றிற்கும், இடையே இருக்க வேண்டிய குறைந்த அளவு இடைவெளி தூரத்தை நிர்ணயம் செய்து உத்திரவு பிறப்பித்துள்ளார். தலைமைப் பொறியாளரால் (நிலநீர்) மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொழில் நுட்ப ஆய்வு களின் அடிப்படையில் இவ்வித இடைவெளி தூரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட இடை வெளி தூரம் கடைபிடிக்கப்படாவிடில், கடனுதவி பெற்று வெட்டப்பட்ட கிணறுகள் போதிய நீர் வசதியில்லாததால் தோல்வியடையக்கூடிய சாத்யக்கூறுகள் தோன்றியுள்ளன, இம் மாநிலத்தில் உள்ள அனைத்து வட்டங்களுக்கும் புதிய கிணறு வெட்டுதல் அல்லது ஏற்கனவே உபயோகத்தில் உள்ள கிணறு களை ஆழப்படுத்துதல் போன்ற சிறு பாசனக் காரியங்களுக்கு கடன்கள் வழங்கும்போது அனுசரிக்கப்பட வேண்டிய இடை வெளி தூரம் நிர்ணயம் செய்யப்படுவது அந்தந்த பகுதிகளில் இருந்து வரும் நிலத்தடி நீர் உபயோகம், இருப்பு மற்றும் மண் வளம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட தொழில் நுட்ப ஆய்வுகளின் அடிப்படையில் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபட்டுள்ளதாக உள்ளது. இவ்வகையில் சேலம் மாவட்டத்திற்கு இரு கிணறுகளுக்கிடையே இருக்க வேண்டிய இடைவெளி தூரம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட் டுள்ளது :

(1) புதிய கிணறு மட்டும் வெட்டுவதனால் —150 மீட்டர்

(2) புதிய கிணறு வெட்டவும் நீரேற்றுப் பொறியும் அமைப்பதனால் —200 மீட்டர்

மேற்கண்ட இடைவெளி தூர நிபந்தனையின் அடிப்படையில், சேலம் மாவட்டத்தில் நீரேற்றுப் பொறிகளுடன் கூடிய கிணறை ஆழப்படுத்துவதனால் இரு கிணறுகளுக்கிடையே 200 மீட்டர் இடைவெளி தூரம் இருக்க வேண்டும். இவ்விதம் ஆழப்படுத்த உத்தேசித்துள்ள கிணறு வெட்ட, ஏற்கனவே நாபார்டு உதவி யுடன் செயல்படுத்திய திட்டங்களின் அடிப்படையில் கடனுதவி செய்யப்பட்டிருந்தால் தற்போது அவ்வாறான கிணறை ஆழப் படுத்த மீண்டும் கடனுதவி கோரும் போது, இடைவெளி தூர நிபந்தனையைப் பின்பற்றத் தேவையில்லை என நாபார்டு தனது **14-12-1982** ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது. மேற்கண்ட விதிவிலக்குத் தவிர, மற்ற கிணறுகள் ஆழப்படுத்த கடனுதவி கோரினால்' இடைவெளி தூர நிபந்தனை கட்டாயம்

பின்பற்றியே ஆக வேண்டும். எனினும் நிதி நிறுவனங்களில் கடனுதவி பெற உள்ள கடன்தாரர்களின் சார்பாக, இவ்வித இடைவெளி தூர நிபந்தனையில் சலுகை அளிக்கக் கோரிவரும் தனிப்பட்ட பிரேரணைகளை ஆராய்ந்து அப்பகுதிகளில் கடைப் பிடிக்கப்பட வேண்டிய இடைவெளி தூரத்தில் 20 சதவீதம்வரை தள்ளுபடி செய்து தலைமைப் பொறியாளரால் (நிலநீர்) அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நில வள வங்கிகள் மூலமாக கடன் பெற்று கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு இரு கிணறுகளுக்கு இடையில் 200 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டு இருக்கிறது. நிலத்தடி நீர் மட்டம் குறைந் திருக்கிற இந்த நிலையில், பழைய கிணறுகளை ஆழப்படுத்து வதற்கு, சிறு விவசாயிகள் முயற்சி செய்கிறபோது இப்படிப்பட்ட நிபந்தனைகளால், அவர்களால் அந்தக் கடனைப் பெற்று, தங்களுடைய கிணறுகளை வெட்ட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது; ஆனால் அதே சமயத்தில் வசதியுள்ள விவசாயிகள் தங்களுடைய சொந்தப் பணத்தைப் போட்டு இப்படிப்பட்ட நிபந்தனைக்கு உட்படாமல் அவர்கள் வெட்டிக் கொள்கிறார்கள். எனவே நான் அமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்புவது, அந்த நிபந்தனையை ரிசர்வ் பேங்க் விதித்து இருந் தாலும் சரி, அல்லது உலக வங்கி விதித்து இருந்தாலும் சரி, விவசாயிகளுடைய நன்மையைக் கருதி, அந்த நிபந்தனைகளை தளர்த்துகிற வகையில், ஜியாலஜிஸ்ட்கள். அதாவது நம்முடைய ஸ்டேட் கிரவுன்ட் வாட்டர் டைரக்டரேட்டுக்குச் சம்பந்தப்பட்ட ஜியாலஜீஸ்ட்டுகள் அந்தக் கிணறுகளைப் பார்த்து, அங்கே வெட்டினால், நீர் கிடைக்கும் என்ற அவருடைய சர்ட்டிபி கேட்டைப் பெற்று, கிணறுகளை வெட்டுவதற்குண்டான ஏற்பாடு களைச் செய்து இந்தச் சிறு விவசாயிகளுக்கு மீண்டும் நிலவள வங்கிகள் மூலமாக கடன் வழங்குவதற்கு அந்த நிபந்தனையைத் தளர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல அங்கே செய்வதற்கு பல தடைகள் இருக்கின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், தனியார்கள் கிணறு தோண்டுகிறபோது, அந்த விதி யின் கீழ் வரவில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு நாம் நிலவள வங்கிகளின் மூலமாக அந்தக் கிணறுகளைத் தோண்டுகிற நேரத்தில், அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் ஆக வேண்டும். காரணம் இன்றைக்கு நெபாட் அந்தப் பணத்தை வழங்குகிறது. 1971-ஆம் ஆண்டு நம்முடைய அரசாங்கமும், உலக வங்கியும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு இருக்கிறது. புதிதாக கிணறுகளைத் தோண்டுகிற நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது, அதாவது இந்த இடைவெளியை வைத்திருக்கிறார்கள். இதிலே சேலம்





மாவட்டத்திற்கு 200 மீட்டர் தூரம் என்று வைத்திருக்கிறார்கள். அதற்கு உட்பட்டுத்தான் அந்தக் கடன்களை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். தனியார்கள் தங்களுடைய பணத்தில் இருந்து தோண்டுகிறபோது, அந்தக் கிணறு பொய்த்து விட்டால், அரசாங்கத்திற்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. ஆனால் இன்றைக்கு அரசிடம் இருந்து கடன் வாங்கி கிணறுகளைத் தோண்டுகிற நேரத்தில் அது பொய்த்துவிட்டால், அரசாங்கத் திற்கு இழப்பு ஆகும் என்று கருதித்தான் அதை நடைமுறைப் படுத்திக்கொண்டு வருகிறோம்; எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை கவனத்தில் கொண்டு, ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து, எந்தப் பகுதியில் அப்படிச் சலுகை தர வேண்டும் என்று சொன்னால், அதுபற்றி தனியாக ஆய்வு செய்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் தாரமங்கலம் ஒன்றியம் தற்போது டார்க் பிளாக் லிஸ்டிலே இருந்து வருகிறது நீண்ட காலமாக. என்னைப் பொறுத்தவரையில் முழு ஒன்றியத்தையும் டார்க் பிளாக் என்று அறிவிப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது என்று கருதுகிறேன். காரணம் ஒரு கிராமத்தில் நீர் மட்டம் குறைந்திருந்தாலும், இன்னொரு கிராமத்தில் நீர்மட்டம் கூடுதலாக இருக்கும். எனவே முழு ஒன்றியத்தையும் டார்க் பிளாக் என்று அறிவிக் காமல், மறு ஆய்வு செய்து, அந்த ஒன்றியத்தில் எந்தெந்த கிராமங்களில் நீர் வாய்ப்பு இருக்கிறதோ, அந்தப் பகுதிகளாவது இந்தக் கடன் பெறுகிற அந்த வசதியை ஏற்பாடு செய்கிற வகை யில் ஏற்பாடு செய்வதற்கு அமைச்சர் முன் வந்து, தாரமங்கலம் ஒன்றியத்தை அந்த பிளாக் லிஸ்டிலிருந்து நீக்குவதற்கு நட வடிக்கை எடுப்பார்களா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தாரமங்கலம் பஞ்சாயத்து யூனியனில், ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு மாதிரி யாக நீர் நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கருத்தை கவனத்திலே கொண்டு, அரசு அந்த பிளாக் கிலே இருக்கிற தனிப்பட்ட ஊர்களில் எந்த ஊர்களில் தண்ணீர் இருக்கும் என்பதை சரி பார்த்து, அப்படி தண்ணீர் இருக்கும் என்று சொல்கிற பகுதிகள் கடன் வழங்குவதில் இருக்கின்ற அந்தச் சலுகையைப் பெற முடியுமா என்பதைப்பற்றி, அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கவனத்திற்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

### 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

#### (ஊ) மானியக் கோரிக்கைகள் 1985-86 மொழிதல் (ஆ.இ)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985-86 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை களை பேரவையில் மொழிவது குறித்து, ஆளுநர் அவர்களிட மிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

" In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1985–86. "

### 5. வரவு–செலவுத் திட்டம், 1985–86—வாக்கெடுப்பு. கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களுக்கு வேறு வேலை இருப்பதன் காரணமாக அவருக்குப் பதில் நான் இந்த மானியக் கோரிக்கைக்காக கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,67,99,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

(முற்பகல் 10-20)

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் சட்டிடங்கள் கட்டவும், விளையாட்டு மைதானம் அமைத்தல் குறித்தும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,67,99,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் படிக்கும் ஏராளமான மாணவர்களுக்கு படிப்பதற்கு ஏற்ற வகையில் பெஞ்ச் மற்றும் ஆசிரியர்கள் பெரும்பாலோருக்கு மேசை, நாற்காலி போன்ற வசதிகள் செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 17–கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,67,99,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரிகளை தனியார் துறையில் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டு வருவதால் அக்கல்லூரி நிர்வாகிகள் மாணவர்களிடம் பல ஆயிரக் கணக்கில் நன்கொடை பணம் கேட்பதால் ஏழை, நடுத்தர மாணவர்கள் சேர்ந்து படிக்க முடியாமலிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,67,99,53,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.''



திரு. கு. சுப்பராயன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் முழுவதையும் அரசே மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,67,99,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

திரு. வை. பாலசந்திரன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் தொடக்கப்பள்ளி ஆரம்பிப்பதில் இந்துக்கள் ஆரம்பித்தால் காப்புத் தொகை வசூல் செய்வதை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,67,99,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு கல்வி மானியத்தைப் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றாலும் அவையின் முன் வைக்கப்பெற்றுள்ள அந்த கொள்கை விளக்கக் குறிப்புகளை * நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கல்வி மானியக் கோரிக்கையின் மீது விவாதம் இன்றும், நாளையும் நடைபெறும். திரு. ந. சிவஞானம்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையின் மீது சில கருத்துக்களை விளக்கலாம் என்று கருதுகிறேன். இந்தக் கல்வி மானியக் கோரிக்கையின் மூலம் ஏறத்தாழ 408 கோடி ரூபாய்க்கு இந்த மன்றம் அனுமதி தரவேண்டும் என்ற தீர்மானத்தை மாண்புமிகு நம்முடைய உள்ஆட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். சாதாரணமாக கல்வித்துறை என்பது நீண்ட பெரிய ஒரு நல்ல துறையும் கூட. அது மட்டுமல்ல நம்முடைய நிதியமைச்சர் அவர்களாலே ஏறத்தாழ 21 விழுக்காடுக்கு அதிக

*121—216ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

மாகவே செலவு செய்வதற்கு என்று நிதி ஒதுக்கப்பட்ட ஒரு இலாகா உண்டு என்றால் அது கல்வி இலாகாதான். அப்படிப் பட்ட கல்வி இலாக்கா மிக நல்ல முறையில் முன்னேறி வருவதற்காகவும், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காகவும், அந்த இலாகா கடந்த காலங்களில் பெரும் தொண்டு செய்து வந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

சுதந்திரத்திற்குப் பிறகு இந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்கள், பின்தங்கிய சமுதாய மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் முன்னேற வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் மகாத்மா காந்தியடிகள் இந்த நாட்டில் உள்ள எல்லா கிராமங்களுக்கு கல்வி அறிவு பரவச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைச் சொன்னார்கள், அவருடைய கனவை நினைவாக்கும் வகையில்தான் இங்கே முதலமைச்சராக பொறுப் பேற்றுக் கொண்டிருந்த பெரும் தலைவர் காமராசர் அவர்கள், இந்தக் கல்வித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து, புரட்சிகரமான பல திட்டங்களை கொண்டு வந்து அவைகளை அமல் நடத்தச் செய்தார்கள் என்றால் அது மிகையாகாது. மேட்டுக்குடி மக்களுக்கு மட்டுமே சொந்தமாக இருந்த அந்தக் கல்வி வாய்ப்புகளை குப்பை மேட்டிற்கும் கொண்டு வந்த பெருமை பெரும் தலைவர் காமராசருக்கே உரியது. அப்படி ஒரு நல்ல முறையில், கல்வி வாய்ப்புகள் எல்லா மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்று, குறிப்பாக க்கிராமத்தில் உள்ள மக்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்றுதான் பெரும் தலைவர் காமராசர் பல புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்து கல்வித் துறையின் பொற்காலம் என்று சொல்லும் வகையில் அவர்கள் காலத்தில் கல்வித் துறையிலே ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கினார்கள்.

அப்படிப்பட்ட பெரும் மாற்றத்தின் காரணமாகத்தான் தமிழகம் இந்தியாவிலேயே கல்வித் துறையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிவோம். அப்படிப் பட்ட சூழ்நிலையிலும், இன்றைக்கு நாம் வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த அந்தப் பழைய வழக்கப்படிதான் கல்வித் துறையினுடைய நிர்வாகங்களை இயக்கிக் கொண்டு வருகிறோம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கல்வி இலாக்கா இயக்குநர் என்று இருக்கிற அதே முறையை வைத்து மாவட்டத்தில் உள்ள நிர்வாகங்களை பரவலாக ஆக்கி, சீரமைக்கப்பட வேண்டிய ஒரு பெரும் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது.

குறிப்பாக மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் தொடக்கப் பள்ளிகள் ஆயிரம், 2,000 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என்று இருப்பதால் மாவட்டத்தில் உள்ள எல்லா கல்வியகங்களும் ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது மிகக் கடுமையாக இருக்கிறது. சி.ஈ.ஓ. தான் இதற்கு பொறுப்பாக இருக்கிறார். எனவே இதில் சீர்திருத்தம் செய்து சுயாட்சி என்று சொல்கின்ற அளவுக்கு, கல்வி துறையிலே பல நிர்வாக மாற்றங்



களைச் செய்து, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இந்தக் கல்வித்துறையை சீர் செய்து வெள்ளைக்காரன் காலத்திலிருந்த பழக்க வழக்கங்களை மாற்றி கல்வித்துறையை தன்னிறைவுபெறச் செய்ய வேண்டும். இப்போதுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையில் கல்வித்துறையை மாற்றிட வேண்டும்.

இன்றையதினம் இந்தியாவினுடைய பொறுப்பை ஏற்று இருக்கும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி, கல்வியிலே ஒரு புரட்சிகரமான மாற்றம் வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு செயல்படத் தொடங்கியிருக்கிறார். அதே முறையிலே நாமும் கல்வியிலே ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உண்டாக்குவதற்கு செயல்பட வேண்டும். இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே தொடக்கப் பள்ளிகளுக்காக அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. கல்விக் கொள்கை குறிப்பிலே 1985-ம் ஆண்டு இறுதியில் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் விழுக்காடு, 6-லிருந்து 11 வயதுடையவர்கள் 98.66 சதவிகிதம் என்றும் 11லிருந்து 14 வயதுள்ள மாணவர்கள் 72 சதவிகிதம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. கூடுதலாக 2.98 இலட்சம் மாணவர்கள் சேர்க்கப் பட்டு பலன் அடைந்து இருக்கிறார்கள் என்ற விவரத்தை சொல்லியிருக்யிருக்கிறார்கள்.

தொடக்கப் பள்ளியைப் பொறுத்தவரையில், கிராமப் பகுதிகளில், தொடக்கப்பள்ளிகளில் கல்வியின் தரம் தொய்வு அடைந்துள்ளது. குறிப்பாக அரசாங்கத்தில் ஆசிரியர்கள் நியமிப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் தொடக்கப்பள்ளி நிர்வாகத்தில் உள்ள சில குறைகளைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து அந்தக் கல்வியை பிரித்து இருக்கவே கூடாது. ஏனென்றால், அந்தப் பள்ளிகளுக்கு உயர் கல்வி அதிகாரிகள் சென்றால், ஆசிரியர்கள் அந்த அதிகாரிகளுக்கு சட்டப்பூர்வமாக பயப்படுவதில்லை. மாறாக ஆசிரியர்களைக் கண்டு அந்த அதிகாரிகள் பயப்படுகின்றார்கள். தொடக்கப் பள்ளிகளும், ஆரம்பப் பள்ளிகளும் நிர்வாகச் சீர்கேடுகளினால் சரிவர நடப்பதில்லை என்பதை வேதனையோடு கூறிக் கொள்கிறேன். இது மாண்புமிகு அவை உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும்.

கிராமப்புற பள்ளிக்கூடங்களில் நிர்வாகப் சீர்குலைந்து இருக்கிறது. 5 ஆசிரியர்கள் இருக்க வேண்டும். இரண்டு ஆசிரியர்கள் கூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? ஒரு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அரசாங்கம் அனுமதித்த ஆசிரியர்கள் இல்லை. ஏறத்தாழ ஆயிரம், 1,500 ஆசிரியர்கள் இடங்கள் காலியாக இருக்கின்றன. ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் இடங்களும் பூர்த்தி செய்யப்படவில்லை. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒருவழி நியமனமும் செய்யப்படவில்லை. இவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் செய்ய வேண்டும். இவற்றிற்கு காரணம் செகண்டரி கிரேட், ஹையர் கிரேட் ஆசிரியர்கள்

இல்லாதது. எனவே அரசாங்கம், வேலையில்லாத் திண்டாட்டம் உள்ள இந்த நிலையில், தொடக்கப் பள்ளிகளை உத்தேசித்து, பள்ளி மாணவ மாணவியர்களுக்கு உதவும் வகையில் விரைவாக ஆசிரியர் பயிற்சி பள்ளிகளைத் தொடங்க வேண்டும். கிராமத்தில் உள்ள பள்ளிகள் மிகவும் சீர்குலைந்து உள்ளதால் அவற்றின் தரம் உயர்வதற்கு மீண்டும் அரசாங்கம் இதனை பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தால், அங்கே தொய்வு இல்லாமல் அந்தக் கல்விமுறையானது அங்கே நல்ல முறையிலே வளர்ந்து மக்களுக்கு சேவை செய்ய முடியும். ஆகவே, இந்த நிலையில், சாதாரணமாக எல்லா உயர்கல்விக்கும் அஸ்திவாரமாக இருக்கின்ற இந்தத் தொடக்கப்பள்ளி கல்வி சீர்குலைந்து இருப்பதை மாண்புமிகு உயர்கல்வி அமைச்சர் தலையிட்டு உடனடியாக கவனிக்க வேண்டும். கிராமப் பகுதியிலே இன்றைக்கு ஆசிரியர்கள் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கம் அனுமதித்த ஆசிரியர்களை போடுவது கிடையாது. 1:30 உத்திரவு கூட போடுவது இல்லை. இருக்கின்ற ஆசிரியர்கள் ஒரு வழி மாற்றுவதன் மூலம், அந்த இடங்கள் நிரப்பப்படாததால், ஏறத்தாழ 10,000-க்கு மேற்பட்ட ஆசிரியர்களின் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்றால், பி.ஏ.பி.எட். பட்டதாரிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் உத்தரவிட்டு இருப்பதால் அதனைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,

குறிப்பாக பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் குக்கிராமம் அனைத்திற்கும் கல்வி சேர வேண்டும் என்பதில் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு இருந்தார்கள். அதற்கு இடையூறு இருந்தாலும், ஏழைஎளிய மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தவர் தலைவர் காமராஜர் அவர்கள்.

(முற்பகல் 10-30)

அது மட்டுமல்ல, இந்த நாட்டிலே எல்லாப் பள்ளிகளும் தரமானவையாக இருக்கவேண்டும் என்ற முறையிலே பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளையெல்லாம் நடத்தி பள்ளிகளுக்கு தளவாடங்கள் முதலியவைகளை எல்லாம் கொடுக்கச் செய்தவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் சீருடை வழங்க இருப்பதாக அரசு அறிவித்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சமதர்ம கொள்கை வளர்ந்து வருகின்ற



இந்தக் காலகட்டத்திலே ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தோடு மாணவர்கள் பழக்கூடாது என்ற முறையிலே அவர்கள் சமமாகப் பழகும் வகையிலே எல்லாக் குழந்தைகளுக்கும் அரசாங்கமே சீருடை வழங்குகிற இந்தத் திட்டத்தை நாம் பாராட்டியாக வேண்டும். 5 வயது முதல் 14 வயது வரை உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் அரசே சத்துணவுத் திட்டத்தை நிறைவேற்றுகிற இந்தக் காலகட்டத்திலே அவர்களுக்கு இருப்பிடத்தையும் அளித்து கல்வியைப் போதிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக நான் உணர்கிறேன். இந்தக் கல்விக் குறிப்பிலே சத்துணவுத் திட்டத்திற்காக 25 கோடி ரூபாய் செலவழிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கல்வித் துறையிலே நிறைவேற்றப்படுகிற சத்துணவுத் திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தாலும் இந்தத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்குப் போய்ச் சேருகின்ற முறையிலே, அதிலே இருக்கிற சங்கடங்கள் நமக்குத் தெரியும் என்றாலும் நான் சிலவற்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளிலே சத்துணவு அமைப்பாளர்கள் தலைமையாசிரியரின் கண்காணிப்பின்கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் போன்று ஆரம்பப் பள்ளிகளிலேயும் இருக்கின்ற சத்துணவு அமைப்பாளர்கள் பால்வாடிகளிலே இருக்கின்ற சத்துணவு அமைப்பாளர்கள் எல்லாம் அந்தந்த தலைமையாசிரியர்களே கண்காணிக்கின்ற முறையிலே இருந்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால் சத்துணவும் தரமானதாக இருக்கும்.

சத்துணவுத் திட்டத்திலே கொடுக்கப்படுகிற உணவைப்பற்றி மருத்துவத்துறை பரிசோதித்துக் கொண்டிருந்தாலும் அதிலே முட்டையும் கொடுப்பது அவசியம். முட்டையின் விலை சரிவுள்ள காலம் இது. வேளாண்மைத் துறையிலே உள்ள மக்களைக் காப்பாற்றுவதற்காக முட்டையையும் சத்துணவோடு சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நர்சரி பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் சில இடங்களிலே நகரத்திலே மாநகராட்சியிலே இருக்கின்ற இடங்களிலே குறிப்பாக கான்வென்ட்கள் இருக்கின்ற இடங்களிலே மாணவர்களிடம் ஆயிரம் 2 ஆயிரம் என்று வாங்கிக்கொண்டு சேர்க்கிறார்கள், இப்போதே அதனால் இடம் இல்லை என்று சில பேர்கள் சொல்கிறார்களாம். இதையெல்லாம் கண்காணிக்க வேண்டுமென்று நான் அரசை கேட்டுக்கொள்கிறேன். அடுத்த ஆண்டுக்கான பள்ளி திறப்பு இன்னும் நடக்கவில்லை, இப்போதே சில இடங்களில் எல்லாம் உள்ள நர்சரிப் பள்ளிகளிலே ஆங்கில போதனை இருக்கின்ற இடங்களிலே இடம் இல்லை என்று சொல்கிறார்கள். ஆயிரம், இரண்டு ஆயிரம் லஞ்ச லாவண்யம் பெற்றுக் கொண்டு கொடுக்கிற நிலைமை இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு அவர்களும் ஆங்கிலம் பயில வேண்டுமென்பதற்காக கிராமப்புறங்களிலே உள்ள மக்களும் ஆங்கிலம் படிக்க வேண்டும் என்பதற்காக நர்சரிப் பள்ளிகளை கிராமப்புறங்களிலே ஆரம்பிக்க வேண்டும். பின்தங்கிய மக்கள், சமுதாயத்திலே உள்ள வறுமைக்

கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். இனி வரும் காலத்திலே 15,20 ஆண்டுக்காலத்திற்குப் பின்பு பார்த்தால் பல்வேறு வசதிகள் கிடைக்குமா என்ற ஐயப்பாடு எழுகிறது. ஆகவே இந்த சூழ்நிலை ஏற்பட்ட அளவுக்கு எல்லா இடங்களிலும் அவைகளை ஆரம்பிக்காவிட்டாலும் படிப்படியாக கட்டம் கட்டமாக அவைகளை ஆரம்பித்து கல்வியின் தரத்தை ஆங்கிலத்தின் தரத்தை ஏழை எளிய மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பெறக்கூடிய முறையிலே வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை பலயிடங்களில் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இன்றைக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பல தொடக்கப் பள்ளிகளில் கட்டிடங்கள் இருக்கின்றன. ஆனால் உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் உள்ள வகுப்புகள் பல இடங்களில் ஆல மரத்தடியிலும், அரச மரத்தடியிலும் நடக்கின்ற ஒரு துர்பாக்கியமான சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவைகளுக்கு அதிக கட்டிடங்களை கட்டித் தந்தால் நன்றாக இருக்கும். 1985—86 ல் ரூ. 324 லட்சம் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக இந்தக் கொள்கை குறிப்பு விளக்கம் இருக்கிறது. ஆனால் அதை தனியார் துறைக்கும் அரசுத் துறைக்கும் சேர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் அரசுத் துறைக்கு 144 லட்சம் ஒதுக்கப்பட்டு இருப்பதாக உள்ளது. கிராமப் பகுதிகளில் பள்ளிக் கூடங்கள் அதிகம் கிடையாது. அவர்களுக்கு அதிகமான அளவில் பள்ளிக்கூடங்கள் வேண்டும் என்ற கோரிக்கை கூட இருக்கின்றது. ஆகவே, உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களையும் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்களையும் கட்டுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஒதுக்கிய பணம் போதாது. ஆகவே கல்விக்கு நிதிப் பற்றாக்குறை இந்த நிதி ஆண்டில் இருக்கிற காரணத்தால் அதற்காக பிரத்தியேகமாக ஒரு நிதிக் குழுவைப் போட்டு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்தும், எல்.ஐ.சி. போன்ற தேசிய கடன் வழங்குகின்ற நிறுவனங்களிலிருந்தும், மற்ற நிறுவனங்களிலிருந்தும் எல்லா நிதிகளையும் பெற்று இந்த ஊர்களில் மேல்நிலைப் பள்ளிக் கூடங்களுக்கு உயர்நிலை பள்ளிக்கூடங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதற்கு தனி கார்ப்பரேஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் எல்லாம் இப்போது வெவ்வேறு இடங்களில் செயல்பட்டு வருகிறது. பிரத்தியேகமாக இந்த கிராமத்தில் இருக்கின்ற பல்வேறு வசதிகளில் இன்றைக்கு என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.பி. என்ற இந்த திட்டங்களை எல்லாம் சரியாக மந்து அரசு அவைகளைப் பயன்படுத்தி, மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் போன்றவைகளுக்கு பிரத்தியேகமாக செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



வாழ்க்கையோடு இணைந்த தொழில் கல்வி அவசியம் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். சமீபத்தில் நம்முடைய பிரதமர் அவர்களும் நம்முடைய தமிழக அரசும் அதற்கு என்று தனியாக ஒரு கொள்கையை வகுத்து இந்த தொழில் கல்வியை செம்மைப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நேற்றையதினம் தமிழ்நாடு முதுநிலை பட்டதாரிகள் ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தியிருக்கிறார்கள். அது சாதாரண கோரிக்கைகள் தான். பெரிய மானிடரி பெனிபிட் என்ற அளவுக்கு இல்லை. அவர்கள் கேடபது எல்லாம் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களின் பணியினை நிரந்தரம் ஆக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் 1981 ஆம் ஆண்டில் நியமித்த ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். அதேபோல் ஊக்க ஊதியம் தரவேண்டும். எல்லா ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் சலுகைகள் இந்த மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வைத்து இருக்கிறார்கள். இது ஒன்றும் பெரிய விவகாரம் அல்ல. ஆகவே இன்றைய நிலையில் இவைகளை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதை நான் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். கடந்த 3,4 ஆண்டுகளில் 1,474 மேல்நிலைப் பள்ளிகள் தனியார், அரசு ஆகியவை சேர்ந்து இன்றைக்கு ஏற்படுத்தியிருப்பதை நான் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேன். இது இந்த விளக்கக் குறிப்பில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் கல்வியின் தரத்தை வளர்ப்பதற்கு பெரு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இலங்கை அகதிகள் இப்போது இங்கே அதிகமாக வந்து கொண்டு இருக்கிறார்கள். அந்த மாணவர்களுக்கு அதிகமாக இட ஒதுக்கீடு செய்யவேண்டும். அந்த மாணவர்களுக்கு சாதாரண ஆரம்ப பள்ளியாக இருந்தாலும் உயர்தரப் பள்ளியாக இருந்தாலும், கல்லூரியாக இருந்தாலும் தொழில் கல்வியாக இருந்தாலும் அவர்களுக்கு பல்வேறு வசதிகளையும் வாய்ப்புகளையும் நிச்சயமாக செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். துன்பப்பட்டு அகதிகளாக வந்த அந்த மக்களுக்கு பல்வேறு வசதிகளையும் வாய்ப்புகளையும் நிச்சயமாக செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது சுமூகமான ஒரு நல்ல சூழ்நிலை சமீபத்தில் சர்வகட்சி தலைவர்கள் கூடி டெல்லி சென்று ஒரு சுமுகமான சூழ்நிலையை இலங்கைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு காண இருக்கிறார்கள். ஆகவே அந்த சூழ்நிலையின் காரணமாக அந்த அகதிகளுக்கு கல்வித் துறையில் அதிகமான இடம் கொடுப்பதோடு மட்டும் அல்லாமல் அவர்களுக்கு உத்தியோகம் எல்லாம் கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

தஞ்சையிலே தமிழ் பல்கலைக் கழகம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டு அது நல்ல முறையில் இயங்கி வருகிறது. அதற்குத் துணைவேந்தராக சுப்பிரமணிய என்ற காந்தீயவாதியை நியமித்திருக்கிறார்கள். அவர் நல்லமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஆனால் அங்கே அடிக்கடி சர்ச்சைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த 108 பேராசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட காரணத்தினால் அங்கே ஏதோ பல பிரச்னைகளைக் கிளப்பிக் கொண்டு இருக்கிறார்கள். எது எப்படியிருந்தாலும் சுமுகமான முறையிலே அந்தத் துணைவேந்தர் நல்லமுறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அவர் நல்லமுறையில், நாணயமான முறையில் பணியாற்றிக்கொண்டு யோக்கியமானவராக இருக்கின்ற காரணத்தினால், ஏதோ ஒருசில பிரச்னைகள் இருந்தாலும், அரசாங்கம் உடனடியாக இதில் ஈடுபட்டு, சட்டத்திலே இடம் கொடுத்தால் வேலையிழந்திருக்கின்ற அந்த 108 பேராசிரியர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்று நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளிலே பணம் வாங்குகின்ற பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. சில ஸ்பெஷல் சப்ஜெட்டுகளுக்கு, கம்யூட்டர் சயன்ஸ் போன்ற பிரத்யேகமான சப்ஜெட்டுகளுக்கு அரசாங்க கல்லூரிகளாக இருந்தால் அதிகமான மார்க் வாங்கியிருக்க வேண்டும் என்று இருப்பதை ஒத்துக்கொள்கிறேன், ஆனால் தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பணம் வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. கம்யூட்டர் சயன்ஸ், இன்னும் தொழில் துறையிலே தொடர்பு கொண்ட பல்வேறு வகுப்புகளைத் தனியார் கல்லூரிகள் ஆரம்பிக்கின்ற நிலையை அரசு கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற பூண்டி புஷ்பம் கல்லூரியைப் பொறுத்தவரையில் அதை நடத்துகின்றவர் ஏற்கனவே பெரிய பணக்காரர். பணம், காசு வாங்காத நிலையில் கல்லூரி ஒன்று இந்த மாநிலத்திலே இருக்கிறது என்றால் அது பூண்டி புஷ்பம் கல்லூரிதான். அங்கே பிரத்யேகமான வகுப்புகள் சிலவற்றை ஆரம்பிப்பதற்கான அனுமதியைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் என்னென்ன வழிவகைகளைக் கொடுக்க முடியுமோ அதையெல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் என்று கொடைக்கானலில் ஆரம்பிக்கப்பட்டு, நல்ல முறையில் செயல்படாமல் இருக்கிறது என்று அறிகிறேன். ஏனென்றால், அந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாது. எனவே, அந்த மகளிர் பல்கலைக் கழகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அது இன்னும் நல்லமுறையில் இயங்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





விளையாட்டுத் துறைக்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் தொகை போதாது. விளையாட்டு என்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியம் தரக்கூடிய ஒன்று, இந்தக் காலக் கட்டத்தில் விளையாட்டுத் துறைக்கு என்று தனியாக அதிகாரி இருக்கிறார். அதேபோன்று, கல்வித் துறையிலிருந்து விளையாட்டுத் துறையைப் பிரித்து இளைஞர் ஒருவரை அந்த விளையாட்டுத் துறைக்கு அமைச்சராக நியமித்தால் நல்லது. விளையாட்டிற்காக என்று மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவிலும் விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்தி விளையாட்டை ஊக்குவிக்க வேண்டும். பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை ஏற்படுத்தி தமிழகத்திலே சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும். நான் முன்பே சொன்னதைப் போல, உள்ளத்திற்கும், உடலுக்கும் ஆரோக்கியத்தை அளிக்கின்ற இந்த விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையிலே, இதைக் கல்வித் துறையிலேயிருந்து பிரித்து, விளையாட்டுத் துறைக்கு என்று இளைஞர் ஒருவரை அமைச்சராக நியமிக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகால் நூல் நிலையம் பழம் பெருமை வாய்ந்த நூல் நிலையமாகும். அந்த நூல் நிலையத்திலே உள்ள சுவடிகள் பல்வேறு மொழிகளில் இருக்கின்றன. அவைகளை மொழி பெயர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விஞ்ஞான நுட்பம், மருத்துவ நுட்பம், பொறியியல் நுட்பம் சம்பந்தமாக நூல்கள் இருக்கின்றன. இவ்வளவும் ஒரேயிடத்தில் இருக்கின்ற இந்தப் பொக்கிஷத்தைத் தஞ்சைப் பல்கலைக் கழகத்தோடு இணைத்து அதைப் பல்கலைக் கழகமாக அனுப்புவதற்குத் தமிழக அரசு முயலவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் மிகப் பழமை வாய்ந்த நூல் நிலையம். அங்கேயிருந்த நூல்களைப் படித்த வெளிநாட்டுக்காரர்கள் விமானத்தைக் கண்டுபிடித்தார்கள் என்று கூடச் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட நூல் நிலையம் நல்ல முறையில் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுய நிதியிலிருந்து பொறியியல், பாலிடெக்னிக்குகள் போன்றவைகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து பணம் கொடுக்கவில்லை என்பதாலோ அல்லது யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷன் பணம் கொடுக்கவில்லை என்பதாலோ இவ்வாறு ஆரம்பித்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அவற்றில் அரசாங்கம் சொல்லுகின்ற 50 சதவீதம் மாணவர்களை சேர்க்க வேண்டுமென்று இருக்கிறது, ஆனால் அவ்வாறு அதிலே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா என்று ஐயம் தான் ஏற்படுகிறது. நான் பார்த்த சிலயிடங்களில் இதுபோன்று 50 சதவீதம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகின்ற நேரத்தில், அங்கேயும் அந்த மாணவர்களிடத்திலேயிருந்து பணம் வாங்கப்படுவதாகப் புகார்களை எழுப்பி

யிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அங்கெல்லாம் அரசாங்கம் சொல்லுகின்ற தகுதி வாய்ந்த 50 சதவீதம் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்ற முறையில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, உலகப் பொதுமறை தந்த வள்ளுவனார்

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்று சொன்னார். செல்வர்கள் முன்னாலே உதவி கேட்கும் எளியவர்கள் பணிவோடு நிற்பதுபோல் ஆசிரியரிடம் பணிந்து நின்று கல்வி கற்றவரே உயர்ந்தவர் என்றும் கல்லாதவர் கடையர் என்றும் சொன்னார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் செல்வர் முன்னாலே உதவி கேட்கும் எளியவர்களாகத் தொடர்ந்து கற்றவர்கள் இருக்கக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு தொழில் கல்வியைப் பள்ளியிலேயே பள்ளிப் படிப்போடே இணைத்துத் தந்திருக்கின்ற அந்தப் போற்றுவதற்குரிய கொள்கையை வரவேற்பதோடு இதுபோன்ற மக்கள் சமுதாயத்தினுடைய பிரச்சினையைத் தெரிந்து அதற்கான திட்டங்களைக் கல்வியானாலும், மற்ற துறைகளானாலும் புகுத்த வேண்டும் என்ற புரட்சிகரமான எழுச்சிகரமான திட்டங்களை வகுத்துத் தந்திருக்கின்றது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு இந்த அரசு செய்து முடித்திருக்கின்ற பல்வேறுபட்ட வளர்ச்சித் திட்டங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வாழ்கைக் கல்வி முறையைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது நம்முடைய 7-வது ஐந்தாண்டுத் திட்டம் இதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது என்பதை மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்பு அதைப் பற்றிய ஆய்வு செய்வதற்காகக் கூட்டப்பட்ட ஆல் இன்டியா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மறைந்த பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்கள் தலைமையேற்று நடத்திய அந்தக் கூட்டத்தில் மூன்று முக்கிய குறிக்கோள்கள் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். அதை 7-வது ஐந்தாண்டுத் திட்டம் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் நினைவு கூற விரும்புகிறேன். அதிலே ஒன்று உணவு உற்பத்தி, இரண்டு வேலைவாய்ப்பு; மூன்று. உற்பத்தித் திறனைப் பெருக்குதல். உணவு உற்பத்தி தவிர, வேலைவாய்ப்பு, உற்பத்தித் திறனைப் பெருக்குவது என்பனவற்றைப் பொறுத்தவரையில் நாம் கல்வியின் மூலம் ஏற்படுத்த வேண்டிய அவசியமான மாறுதல்கள் மூலம்தான் அது நிறைவேறும் என்று அன்றே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதைப்பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் The imperatives of technical change, reconstruction of the economy ending of mass poverty, synthesis of our ancient history and modern sceince, and the cultivation of values that will foster all-round



development--all requires tremendous creative effort to re-fashion our education. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக நாட்டினுடைய வளர்ச்சியும் தொழில் மேம்பாடும் நம்முடைய பழைய சரித்திர கால மரபும், இன்றைய நவீன விஞ்ஞானமும் அளிக்கப்படுகிற தன்மையும், நம்முடைய பண்பைக் காப்பாற்றுகிற தன்மையும் கொண்டு எல்லாவிதமான திட்டங்களையும் கல்வியில் ஏற்படுத்த வேண்டிய மிகப்பெரிய மாறுதல்களின் அடிப்படையில் தான் அமையும், அமைய வேண்டும் என்ற கருத்தை அன்று வலியுறுத்தி காங்கிரஸ் கமிட்டி 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இதை ஒரு பொருளாதாரக் கொள்கையாகக் கொண்டிருக்கிற நேரத்தில் இதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதனுடைய முக்கிய குறிக்கோள் தொழில் நுட்பத்தைக் கல்வியோடு இணைத்து கல்வியைப் பயனுடைய கல்வியாக ஆக்கவேண்டும் என்பதுதான். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது' என்று சொல்வார்கள். அதைப்போல தொடர்ந்து கல்வியைக் கற்கிற மாணவர்கள் வெறுமனே பாஸ் செய்துவிட்டு வருவதற்கு என்பதற்காக மட்டும் பயன்படாமல் அவர்களுடைய வாழ்க்கைக்கு அது உதவவேண்டும் என்ற அந்த உன்னத லட்சியத்தைத் தன்னகத்தே கொண்டுதான் இந்த வாழ்க்கைக் கல்வி முறையை நம்முடைய அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். இந்தத் திட்டம் துவக்கப்பட்ட நேரத்தில் ஆரம்ப காலத்தில் ஒருசில பள்ளிகளில் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது என்று அதைக்கூட சிலர் ஒரு குறையாகச் சொன்னார்கள். ஒரு பக்கத்தில் அதற்கான பாடத் திட்டங்கள் தயாரித்து வரப்படுகின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது; மறுபுறத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மைதான். பரீட்சார்த்தமாகச் சில பள்ளிகளில் அது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து சிறப்பான முறையில் அமைக்க பாடத்திட்டங்களை ஒரு பக்கத்தில் வளர்த்துக் கொண்டுதான் வருகிறார்கள். வருகிற காலகட்டங்களில் எல்லா பள்ளிகளும் வாழ்க்கைக் கல்வியைப் போதிக்கின்ற கல்வியாக உருப்பெறும் என்கின்ற திட்டத்தை, முன்னோடியான திட்டத்தைச் செயல்படுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். இதன்மூலம் பள்ளிக்கல்வி பயனுடைய கல்வியாக பிள்ளைக்கு உதவக்கூடிய கல்வியாக அமையும் என்ற திடமான எண்ணமும், நம்பிக்கையும் பொது மக்கள் மத்தியில் இருக்கின்றது என்பதை நான் வரவேற்கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்ற இருக்கின்ற திட்டங்களுக்கு வேண்டிய டெக்னிக்கல் ஃஹான்ட்ஸ் அதாவது பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள், தொழில் நுட்பக் கல்வி பெற்றவர்களை உருவாக்குவதில் நாம் தவறி விடக்கூடாது என்கிற பெருநோக்கத்தோடு தமிழகத்தில் அரசாங்கம் தனியார் கல்லூரிகளை நடத்துவதற்கு, தொழில் நுட்பக் கல்லூரிகளைத் துவக்குவதற்கு போதிய நிதி வசதி பெறாத நிலையிலும் தனியார்கள் கல்லூரிகளை, தொழில் நுட்பக் கல்விக் கூடங்களை பாலிடெக்னிக்குகளை நிறுவுவதற்கு அரசு அங்கீகாரம் தந்திருக்கிறது.

[திரு. மா. சின்னராசு] [1985 ஏப்ரல் 9

(முற்பகல் 10-50)

அதன் மூலம் இன்று பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தொழில் கல்வி வசதியைப் பெறுவதற்கும் அதைத் தொடர்ந்து தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவில் எந்தப் பாகத்திலும் வேலை வாய்ப்பை பெறுவதற்கும் இந்தியாவில் மட்டும் அல்லாமல் வெளிநாடுகளிலும், வளைகுடா நாடுகளிலும் அவர்கள் இன்ஜினீயரிங் பட்டதாரிகளாக, டிப்ளமோ ஹோல்டர்களாக இருக்கிற காரணத்தால், வேலை பெறும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்திருப்பதைச் சிலர் கொச்சைப்படுத்துகிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக் கொள்வேன், அருள்கூர்ந்து அவர்கள் மனதில் கொள்ளவேண்டும். இன்று அவர்கள் குறைபட்டுக் கொள்கிற மாதிரி, காப்பிட்டேஷன் ஃபீ என்று யாராவது எங்காவது வாங்கினால்கூட, அது நிரந்தரமாக இருக்க முடியாது. இங்கே தொழில் நுட்பக் கல்லூரிகள் அதிக அளவில் இருக்கிற காரணத்தினால், ஓரிரு ஆண்டுகளில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகும் காரணத்தால், நிச்சயமாக, அதற்கு வாய்ப்பு இருக்காது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, வருங்காலத்தில், 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மட்டுமல்லாமல், தொடர்ந்து, இந்திய நாட்டினுடைய தமிழகத்தினுடைய தேவையைக் கருதி, நாம் தொழில் நுட்பப் பட்டதாரிகளின் எண்ணிக்கையைக் கணிசமாக உயர்த்த வேண்டும்

சுதந்திரம் அடைந்ததிலேயிருந்து நாலே நான்கு தொழில் நுட்பக் கல்லூரிகளை வைத்து, நம்முடைய ஹைவேசிலும், மற்ற பொதுப் பணித் துறையிலும் பல இன்ஜினீயரிங் பதவிகள் நிரப்பப் படாமல் இருப்பதை நாம் அறிவோம்.

அது மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களில் அழைக்கப்படும் போது, மற்ற மாநிலத்தினர் எளிதாக நிறைந்த மதிப்பெண்களைப் பெற்று, பர்ஸ்ட் கிளாஸ் கிராஜுவேட்டாக, ஆல் இந்தியா சர்வீஸ் கமிஷனுக்கும், மற்ற அரசுத் தேர்வுகளுக்கும் வருகிறார்கள் ஆனால், நம்மிடையே இருந்து வருகிறவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். அப்படி வந்தாலும் மதிப்பெண்கள் காரணமாக அவர்களுக்கு வேலை வாய்ப்புக்குரிய தகுதியைப் பெறவில்லை என்கிற நிலைமையிருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கிறபொழுது, தனியார் மூலம் நடத்தப் படுகிற தொழில் நுட்பக் கல்லூரிகளை அமைப்பதில் நமக்குக் கிடைத்திருக்கிற பலன்கள் தான் அதிகமே தவிர, அதில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற குறைபாடுகள் நீக்கப்படக் கூடியவைகள். நீக்கக்கூடிய வாய்ப்பு நமக்கு இருக்கிறது. அது போக்கக்கூடியது தான். அதையும் கருத்திலே கொண்டு, அந்தத் தொழில் நுட்பக் கல்லூரிகளைத் துவங்கி இருக்கிறார்கள்; அதில் பலர் இருக்கிறார்கள். அதில் பெரும்பாலானவர்கள் கொடை வள்ளல் தன்மை உடையவர்களாகத்தானிருக்கிறார்கள். பெரும் நிதி ஆதாரத்தைத் தனக்குச் சொந்தமாகக் கொண்டிருக்கிறவர்கள் அதைத் துவங்க முன் வந்திருக்கிறார்கள். அதிலே நாம் குறை காண்பது என்பதும், ஒட்டுமொத்தமாக எல்லோருமே லாபத்தைப் பெறுவதற்காக அதை நடத்திவருகிறார்கள் என்று சேற்றை வாரி இறைப்பதின் மூலம், கல்வித் தொண்டு ஆற்ற வருகிறவர்களை நாம் குறை கூறுவதாகத்தான் அமையும் என்பதை இங்கே நான் நினைவு கூற விரும்பிகிறேன்,



1985 ஏப்ரல் 9] [திரு. மா. சின்னராசு]

இந்தியப் பேரரசு இன்றுகூட பல சலுகைகளை வருமான வரி கட்டுபவர்களுக்குத் தருகிறது. பல நேரங்களில் அவர்களுடைய வருமானத்தை அவர்களாகவே வெளிப்படுத்தினால் அவர்களுக்குத் தண்டம் (பெனால்டி) இருக்காது, அது கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படும் என்று கன்செஷன்கூடத் தருகிறார்கள். அதையெல்லாம் தருவதற்கு காரணம், கறுப்புப் பணம் வைத்து, வரி ஏய்ப்பவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்பதற்காக அல்ல. அவை ஒரு நல்ல காரியத்திற்குப் பயன்படும், இந்த நாட்டினுடைய நன்மைக்காக, சமுதாயத்தினுடைய நன்மைக்காக பயன்பட வேண்டுமென்ற உயரிய நோக்கம்தான். அந்த வகையில் அப்படிப்பட்ட பெரும் தனவந்தர்கள் இது போன்ற தொழில் கல்விக் கூடங்களை ஆரம்பிக்க முன்வந்தால் அதை நாம் ஊக்குவிக்க வேண்டுமே தவிர அதை நாம் குறைத்து விடக்கூடாது. அவர்களுடைய முயற்சியை நாம் குறைத்து விடக்கூடாது. இன்று தமிழகத்திலே இருக்கிற தனியார் கல்வி நிலையங்கள், கல்விக் கூடங்களை நாம் எடுத்துக் கொண்டோமானால் அண்ணாமலை பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்கள், பச்சையப்பா அறக்கட்டளை போன்றவைகள், காரைக்குடி அழகப்பா செட்டியார் கல்வி நிறுவனங்கள் போன்றவைகள் எல்லாம் பழங்காலங்களில் தனியார்கள், கொடைவள்ளல்கள், சமுதாயத்திலே பற்று மிக்கவர்கள், ஏழை எளிய மக்களிடத்திலே அன்பு கொண்டவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிற கல்வி வரலாற்று சிறப்பை நினைவுகூறத் தக்கவையாக இருக்கின்றன என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அந்த வகையிலே இந்த நல்ல கொள்கை தொடர்ந்து தமிழகத்திலே கடைபிடிக்கப் படவேண்டும். இருக்கிற குறைபாடுகளை நிவர்த்தி செய்கிற அதே நேரத்தில், அதனுடைய பலன்கள் முழு அளவு இன்று மக்கள் பெற்றிருக்கிறார்கள். 50 சதவீதம் அரசு ஒதுக்கீடு இன்றைக்கு ஏழைகளுக்குப் பயன்படுகிற வகையில் இருக்கிறது என்பதையும் ஆக, இந்தத் தொழில் நுட்பக் கல்வியின் மூலமாக நாம், நம்முடைய இளைஞர்கள் கையேந்தி யாரிடமும் நிற்காமல் முடிந்தால் வேறு இடங்களில் வேலை தேடுவார்கள்; முடிய வில்லையென்றால் தாங்களாகவே ஒரு சிறிய பட்டறை வைத்து சிறு தொழில்கூடங்களை அமைத்து. தங்களுடைய வாழ்க்கைத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் அளவு, தகுதியைப் பெறுகிற வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தமைக்கு நான் எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தமிழக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்த முறையில் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து தேறி வருகிற மாணவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. படித்து வெளியே வருகிறபோது எந்த வேலைக்கும் தகுதியில்லாதவர்கள் தான். எஸ். எஸ் எல் சி. படித்திருக்கிற சர்டிபிகேட்டை வைத்திருப்பதை தான் சொல்கிறார்கள். ஆகவே ஏதோ டிரைவர் வேலையோ, மெக்கானிக் வேலையோ, பிட்டர் வேலையோ பார்க்கிற தகுதி தனக்கு இருக்கிறது என்று சொல்கிற அளவிற்கு ஒரு தன்மான உணர்வோடு, ஒரு கம்பீர உணர்வோடு அவர்கள் வெளியே வந்து எதிர்காலத்தில் நேர்மையாக ஒரு தொழிலை செய்ய தகுதியோடு அனுப்பப்பட வேண்டும். அந்த வகையில் தொழில் கல்வி வாழ்க்கைக்குரிய கல்வியாக பயன்படும் ன்பதை பார்க்கிறோம்.

அதேபோல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் தான் ஆரம்பப் பள்ளிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக கட்டிடங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். வெறும் கட்டிடங்களைச் கட்டியதோடுமட்டுமல்லாமல் கடந்த ஏழு ஆண்டு காலத்தில் பல நூறு ஆசிரியர்கள் பதவியிடங்கள் அந்த ஆரம்பப் பள்ளிகளுக்கு அளித்து, ஒரு வகையில் செகண்டரி கிரேடு முடித்த ஆசிரியர்களுக்கு வேலையில்லாப் பிரச்னையை ஒழித்திருக்கிறது நம்முடைய அரசு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்லாயிரக்கணக்கான இடைநிலை ஆசிரியர்கள் பதவிகள் கடந்த ஏழு ஆண்டுகளில் நிரப்பப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக இன்றைக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பவர்கள் மிகவும் குறைவு.

அதேபோல தமிழ் ஆசிரியர்களும் பெருமளவில் பணியிடங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு தலைமையாசிரியர் ஆகிற தகுதியையும் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தந்திருக்கிறது. அதைப்போல ஆசிரியர்களுக்கு தந்திருக்கிற பல சலுகைகளை நாம் இங்கே வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். அப்படி கல்வித்துறையில் திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றுகிற அதே நேரத்தில் கல்விக் கூடங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் மற்ற பணியாளர்கள் நலனில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, நம்முடைய மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்களின் தலைமையில் ஆற்றியிருக்கிற பணிகள் கணக்கில் அடங்காவண்ணம் இருக்கின்றன. அந்த வகையில் அவை நீண்டுகொண்டே இருக்கும். அந்த அளவிற்கு ஆசிரியர்கள்பாலும், மற்ற கல்வித்துறை பணியாளர்கள்பாலும் அக்கறைக் கொண்டு நாம் அவர்களுக்கு செய்திருக்கிற சலுகைகளை நினைத்துப் பார்க்க வேண்டும். அந்தச் சலுகைகளைப் பெற்றிருக்கிற ஆசிரியர்கள் இன்றைக்கு ஒரு முக்கியமான பிரச்னை குறித்து போராடுகிறார்கள்.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன், தமிழ்நாடு தேர்வாணைக்குழு அண்மையில் மூன்று மாதங்களுக்கு முன்னால் பட்டதாரி ஆசிரியர்களை, பி.டி. ஆசிரியர்களை தேர்ந்தெடுத்தது பல ஆசிரியர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் கூட அதில் தேர்ந்தெடுக்கப்படாத நிலை இருக்கிறது. ஆனால் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்னால் படித்து, பட்டம் முடித்தவர்கள் அதில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது முழு அளவிற்கு தகுதிபெற்ற அட்டானமஸ் பாடியான, தேர்வாணைக்குழுவை நாம் எந்தவிதத்திலும் குறை சொல்ல முடியாது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற ஆசிரியர்கள் ஒரே நாளில் 200, 300 பேர்கள் கூட இன்டர்வியூவிற்கு, நேர்முகத் தேர்விற்கு வந்திருக்கிறார்கள். அந்தக் குறுகிய காலத்தில் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள் தகுதியற்றவர்கள் என்று எப்படி தேர்வாணைக்குழு முடிவுசெய்தது என்பதை நாம் கேட்காமல் இருக்க முடியாது



அதற்கு தேர்வாணைக் குழுவின் விதி 4(2)-ல் தொழில் நுட்பத் தலைவர் ஒருவர் அந்தத் தேர்வாணைக் குழுவிற்குப் போகலாம் என்று இருக்கிறது. துறையைச் சார்ந்த ஒரு எக்ஸ்பர்ட் அங்கே போகலாம். பொதுவாக இந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது நம்முடைய டைரக்டரேட்டிலிருந்து, இயக்குநர் அல்லது அவரால் நியமிக்கப்படுகிற ஒருவர் அந்தத் தேர்வுக்குப் போகலாம். அவர் கேள்வியைத்தான் கேட்கலாமே தவிர மதிப்பெண் போட முடியாது என்ற நிலைமை இருக்கிறது. இதனைப் போக்க வேண்டும். ஆகவே தேர்வாணைக்குழு, படித்து பட்டம் பெற்றிருக்கிற ஆசிரியர்களை, அல்லது மருத்துவர்களை தேர்ந்தெடுக்கிறபோது அவர்களுடைய தகுதியை எந்த அளவிற்கு நிர்ணயிப்பதற்கு குழு தகுதி பெற்றிருக்கிறது என்பதையும் நாம் கண்டிப்பாக ஆய்ந்தாக வேண்டும். ஆகவே அந்த வகையில் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் ஏற்கனவே பி.டி. முடித்த ஆசிரியர்கள் முறையாகப் பயிற்சி பெற்று பள்ளிக்கூடங்களில் பணியாற்றி இருக்கிறார்கள். அவர்கள் அப்படி தகுதியற்றவர்கள் என்று இன்றைக்கு நாம் சொன்னால் 10, 15 ஆண்டுகள் அரசுத் துறையில் அரசுப் பள்ளிக்கூடங்களில் பணியாற்றியபோது அவர்கள் தகுதியில்லாமலே பணியாற்றினார்களா என்ற கேள்வி கூட எழும். ஆகவே அந்த வகையில் இந்தப் பிரச்னை அரசின் மறு பரிசீலனைக்குரியது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 11–00)

தமிழ்நாடு தேர்வாணைக் குழு மூலம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் பி.டி. முடித்தவுடனே, அந்த நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் அவர்கள் தேர்வாணைக் குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும். அப்போது அவர்கள் தகுதியற்றவர்கள் என்று பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முடிவு செய்யுமானால் அவர்களை வேறு வேலைக்குப் போகச் சொல்லலாம். இந்த வேலையே கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு, அவர்களுடைய வயது வரம்பு கடக்கும் வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை; அவர்களுடைய வாழ்க்கை வீணாக வேண்டியதில்லை. உரிய வயது இருக்கும்போதே அவர்கள் வேறு பணிக்குச் சென்றுவிடலாம். இதைக் கருத்திற் கொண்டு, இப்போது இருக்கிற இந்தக் குறைபாட்டை அரசு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; மனிதாபிமான அடிப்படையில் மட்டுமல்ல; வேலைக்குத் தகுதியில்லாமல் போய்விடுகிறார்கள் என்ற உண்மையின் அடிப்படையில் நான் இதைத் தெரிவிக்கிறேன்.

ஆசிரியர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிப்பதற்காக ஒரு பயிற்சி நிலையம் தமிழ்நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனுடைய பணியை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். வளர்ந்து வருகிற விஞ்ஞானம், தொழில் நுட்ப வளர்ச்சியை ஆசிரியர்கள்

நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதனால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் முதல் முதுநிலைப் பட்டப் படிப்பு ஆசிரியர்கள் வரையில் எல்லோருக்கும் அந்தப் பயிற்சி கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஏற்படுகிற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, தொடர்ந்து ஆசிரியர்களை நியமிப்பதற்கு 'எஜுகேஷன் ரெக்ரூட்மென்ட் போர்டு' என்று கூட ஒரு அமைப்பை வைத்துக் கொள்ளலாம். அந்த அமைப்பிலே இருக்கிறவர்கள் அவ்வப்போது கூடி, அவ்வப்போது தேவைப்படுகிற ஆசிரியர்கள், பேராசிரியர்கள், இதர பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியைச் செய்யலாம் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திலே நம்முடைய அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கோவைக்கு ஒரு இசைக் கல்லூரியைத் தந்திருக்கிறார்கள். அதற்காக கோவை மவட்ட மக்கள் சார்பிலும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் சார்பிலும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, தொடர்ந்து பாரதியார் பல்கலைக் கழகம், அதற்குப் பின்னால் கல்வியிலே பல சலுகைகளை கோவை மாவட்டம் பெற்று வந்திருக்கிறது. அந்த மாவட்ட கல்வி வளர்ச்சியிலே நம்முடைய அரசுகாட்டி வருகின்ற நல்ல அக்கறையை இது காட்டுகிறது என்பதை இங்கே நினைவு கூர்ந்து பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பல ஆரம்பப் பள்ளிகள் இட நெருக்கடி காரணமாகவும் மற்ற அடிப்படை வசதி இல்லாமலும் மாணவர்கள் உரிய கல்வி பெற முடியாத நிலை இருக்கிறது. கணபதி ஆரம்பப் பள்ளியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 2,200 மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிற ஒரு பள்ளி அது. ஆனால் அங்கே 500 பேர்கள் உட்காரக்கூட இடவசதி இல்லை. அதற்கு வேண்டிய இடவசதியைப் பெருக்க மாநகராட்சி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் சாதாரண தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு உரிய கல்வி கிடைக்காமல், கல்வியில் அவர்கள் மிகவும் மோசமாக இருக்கிறார்கள்.

அதைப்போன்று கோவை மாநகராட்சியில் இரத்தினபுரி ஆரம்பப்பள்ளி இருக்கிறது. அது 2,000 மாணவர்களைக் கொண்டிருக்கிறது. 350 பேர்கள் உட்காரத்தான் இடவசதி இருக்கிறது. அதைப்போன்று குப்பக்கோணம்புதூர் பள்ளியும் இருக்கிறது. இந்த இரண்டு பள்ளிகளையும் உயர்நிலைப்பள்ளி அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டுமென்று நீண்டநாளாக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சி அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள கல்வித்துறை உதவியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ம நகராட்சியுடன் இணைக்கப்பட்டிருக்கிற மற்ற பள்ளிகள் வளர்ச்சியிலும் கல்வித்துறை அதனுடைய பங்கைச் செலுத்த வேண்டும். மாநகராட்சி வளர்ந்துகொண்டிருக்கிறது, ஆனால் பள்ளிக்கூடங்கள் வளரவில்லை. பள்ளிக் கட்டிடங்கள் வளரவில்லை. பிற வசதிகள் வளரவில்லை.

இரத்தினபுரி பள்ளிக்கு இடவசதியை ஏற்படுத்துவதற்காக ஒரு இடத்தைப் பார்த்து ஆர்ஜிதம் செய்ய 4 ஆண்டுகளாக அரசின் பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. அதற்கான பணத்தை மாநகராட்சி கட்டிவிட்டது. ரெவின்யூ இலாகாவினர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது சில தனியார்களுக்கு உதவி செய்கின்ற வகையில் அந்தக் கோப்புகளை நகர்த்தாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து, விரைவான நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுடைய தாமதமான நடவடிக்கையினால் இரத்தினபுரி பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுவது தடைபட்டிருக்கிறது. மாநகராட்சி பணம் செலுத்திய பின்னாலும் ரெவின்யூ இலாகாவின் தாமதமான நடவடிக்கைகளினால் இப்படிப்பட்ட இடையூறு ஏற்பட்டிருப்பதால், அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க தக்க அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மேட்டுப்பாளையம் நகராட்சியில் 9 ஆரம்பப்பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் 6 நகராட்சிப் பள்ளிகள் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன. அந்தப் பள்ளிகளுக்கு போதுமான இடவசதியும் இல்லை, கட்டிட வசதியும் இல்லை. அந்தக் கட்டிடங்களின் சொந்தக்காரர்கள் நாளையே அந்தப் பள்ளிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொன்னால், பள்ளிகளை காலி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு கல்வி பெறும் வசதி இல்லாமல் போய்விடும் என்கிற ஒரு பெரிய அபாயம் இருக்கிறது. இந்த அபாயத்தைப் போக்க அந்த நகராட்சிப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்த வேண்டும். தேவையான இடங்களை ஆர்ஜிதம் செய்து, அந்தப் பள்ளிகளுக்கு சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுத்து, அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மேட்டுப்பாளையம் ஒரு பெரிய நகரம், அதைச் சுற்றியிருக்கிற பல கிராமங்களுக்கும், நீலகிரி என்ற அந்தப் பகுதிக்கும், மையமாக இந்த மேட்டுப்பாளையம் இருக்கின்றது. ஆனால் அங்கே ஒரு கலைக் கல்லூரி இல்லை. எனவே அரசு ஒரு கலைக் கல்லூரியை நிறு வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. கல்வியிலே, சமுதாயத்திலே தாழ்ந்து இருப்பவர்களுக்கு புரட்சித்தலைவருடைய அரசு பல சலுகைகளைத் தந்து வருகிறது, அவர்களுக்கு இட ஒதுக்கீடுகளைத் தந்து, அந்த ஒதுக்கீடுகள் சமுதாயத்திலே நலிந்தவர்களுக்குக்

கிடைக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே கடந்த காலத்தில் பொருளாதார நிலையை அடிப்படையாக வைத்துக்கொண்டு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உள்ளே இருக்கிற நலிந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்த திட்டத்தை பலர் தங்களுடைய அரசியல் லாபத்திற்காக எதிர்த்தபோது, பல சூழ்நிலைகளில், அன்றிருந்த சூழ்நிலையில் அது கைவிடப்பட்டது. அம்பாசங்கர் அறிக்கையை இன்று நாம் எதிர்பார்த்து இருக்கிறோம். அந்த அறிக்கை வருவதற்கு முன்னாலேயே, அதிலே இருக்கிற பல தன்மைகளை அறிந்தவர்கள் போல சிலர் தங்களுடைய அரசியல் லாபத்தை தேடுவதற்காக இன்றைக்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். நான் இன்றைக்கு மனப்பூர்வமாக, உள்ளசுத்தியோடு தெரிவித்துக்கொள்கிறேன். நானும் ஒரு பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவன்தான். மிகச் சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்தவன்தான். அந்த அளவிலே கல்வியிலே ஒரு தகுதியைப் பெறுகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என்றால், இந்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான். அந்தப் பயனை நான் பெற்று இருக்கிறேன். அந்த உணர்வோடு சொல்கிறேன். இன்றைய சூழ்நிலையில் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற ஒதுக்கீடுகளில் நிச்சயமாக வறுமைக் கோட்டுக்கு கீழ் இருப்பவர்களுக்கும் பிற்பட்ட இனத்திலே தாழ்ந்தவர்கள், நலிந்தவர்களுக்கு கொடுத்தால்தான் அதிலே ஒரு நியாயம் கிடைக்கும். ஆகவே எல்லோருமே பிற்படுத்தப்பட்டவர்கள்தான். அதிலே யாருக்கு ஒதுக்கீடு கிடைக்கிறது என்றால், உண்மையிலே வசதி படைத்தவர்களுக்குத்தான் கிடைக்கிறது. யார் தங்களுடைய குழந்தைகளை, தாங்கள் பெற்று இருக்கிற வசதியின் காரணமாக நல்ல பள்ளியில் சேர்த்து டியூசன் எல்லாம் வைத்து, நல்ல சூழ்நிலையில் வளர்க்கிறார்களோ அவர்களுடைய குழந்தைகள்தான் இன்று மெடிக்கல் காலேஜாக இருந்தாலும் சரி, எஞ்சினியரிங் காலேஜாக இருந்தாலும் சரி, வேலை வாய்ப்பானாலும் சரி, அந்தப் பயனைப் பெறுகிறார்கள். பிற்பட்ட இனத்திலே இருக்கிற மிகத் தாழ்ந்தவர்கள், நலிந்தவர்கள் அந்தப் பயனைபெற முடியவில்லை. ஆகவே காலம் மாறுகிறது. நாம் அந்த அடிப்படையில் இந்தக் கொள்கையை எடுத்துக்கொண்டோம். அன்று இருந்த சூழ்நிலை வேறு. இன்று இருக்கிற சூழ்நிலை வேறு. இன்னும் கூட சொல்லப்போனால், பிற்பட்ட இனத்திலே பல இனம் இன்று ஓரளவுக்கு வளர்ந்து இருக்கிறது, சில இனம் இருந்த நிலையிலிருந்து தாழ்ந்து இருக்கிறது. சில இனத்தவர்கள் அன்று பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களாக இருந்தவர்கள், இன்று தாழ்ந்துஇருக்கிறார்கள். அதையெல்லாம் கருத்திலே கொண்டு, நிச்சயமாக இதிலே ஒரு மாற்றம் வேண்டும். அப்படி ஒரு மாற்றம் செய்கிறபோது ஒரு இனத்தை பிற்படுத்தப்பட்ட பட்டியலிலிருந்து எடுத்தாலும் பிரச்சனை. ஒரு இனத்தை சேர்த்தாலும் பிரச்னை. அதை விடுத்து, பொருளாதார நிலைதான் ஒரு கோட்பாடு என்று ஒரு கொள்கையை வகுத்துவிட்டால், நிச்சயமாக சுதந்திர நாட்டிலே,



இன்று இருக்கிற சூழ்நிலைகளில் நம்முடைய ஏற்றத்தாழ்வுகள் ஜாதி அடிப்படையில் தொடர்ந்து இருக்கும், அல்லது இருக்கவேண்டும் என்கிற நம்பிக்கையோ அல்லது விருப்பமோ நமக்கு இருக்க முடியாது, இருக்கக் கூடாது என்ற அந்த அடிப்படையில் நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே மீண்டும் மறுபரிசீலனை செய்து, இட ஒதுக்கீடுகள் கல்விக் கூடங்களில் பொருளாதார நலிவு அடிப்படையில் இருக்கவேண்டும் என்கிற விருப்பத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து இன்னும் ஒரு பெரிய ஆபத்து நம்மை எதிர் நோக்கிக் கொண்டு இருக்கிறது. அண்மையிலே, 2-4-85 இந்துவிலே சுப்ரீம் கோர்ட்டினுடைய ஒரு ஜட்ஜ்மென்ட் வந்திருக்கிறது. இன்று நாம் இந்த நுழைவுத் தேர்வை வைத்து தேர்வு நடத்துகிறோம், குறைகளைத் தவிர்ப்பதற்காக 30percent seats in Medical collages must be reserved to other state candidate என்று ஒரு ஜட்ஜ்மென்ட்டை மேதகு பகவதி அவர்களும் ஏ.என். சென் அவர்களும் தங்களுடைய தீர்ப்பிலே தந்திருக்கிறார்கள். ஆகவே 30 சதவீதம் என்று நாம் ஓப்பன் காம்பெடிசனுக்கு, அவர்களுக்கு மற்ற மாநிலத்தவர்களுக்கு வைத்து, இன்னும் சொல்லப் போனால் போஸ்ட கிராஜுவேட் டிகிரிக்கு எல்லாம் முழு அளவு, எல்லா மாநிலத்தில் இருப்பவர்களும் கலந்து கொள்ள நாம் இங்கே அனுமதிக்கவேண்டும் என்ற தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். எனவே இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே தமிழகம் மிக அதிக அளவு பாதிக்கப்படும். எனவே முடிந்தால் இதை ஒரு ஃபுல் பெஞ்சுக்கு கொண்டு போய், இதற்கு அரசியல் சட்டப்படி ஒரு தீர்வு காண வேண்டும். ஜூன் மாதம் நாம் தேர்வுகளை நடத்தவேண்டும். அப்படி நடத்தும்போது, இந்த 30 சதவீதம் மற்ற மாநிலத்திற்கு சென்றால், நம் மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்குச் செல்பவர்கள் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும், ஆகவே மற்ற மாநிலத்தினரின் தேவைக்கு அதிகமாக ஒரு ரிசர்வேசனை நாம் ஏற்படுத்த வேண்டிய அபாயம் இருக்கிறது. எனவே அரசு இதை கவனத்தில் கொண்டு, அதற்கு ஒரு தீர்வு காணவேண்டும். என்று சொல்லி மத்திய அரசாங்கம் நம்முடைய கல்வியிலே, கலாசாரத்திலே கொள்கையிலே, அடிப்படையாக இருக்கிற கல்வி சுதந்திரத்திலே தலையிடுகிற முயற்சி இருந்தாலும் அதை தவிர்க்கவேண்டும். அதுபோல சில முடிவுகள் அண்மைக் காலத்திலே எடுக்கப்பட்டிருக்கின்றன. கல்வியைப் பொறுத்த மட்டில் அது ஸ்டேட் லிஸ்டிலேதான் இருக்கிறது, மத்திய அரசாங்கத்திலே இருக்கிற கன்கரண்ட் லிஸ்டிலே அதைக்கொண்டு போகவேண்டுமென்றும் முயற்சிகளும், இன்னும் சில நேரங்களில் மத்திய அரசாங்கத்திலே இருக்கிற பட்டியலிலே கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற பேச்சும் அப்போதைக்கப்போது நிலவி வருகிறது. அதன் காரணமாகத்தான் தமிழக கல்வி அமைச்சர்

அவர்கள் பலமுறை ஸ்டேட் லிஸ்டிலேதான் அது இருக்க வேண்டும், மாநில அதிகாரத்தின் கீழ் தான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பைப் பயன் படுத்தி, மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட முயற்சிகளை அறவே நிறுத்த வேண்டும் என்றும், கல்வித் துறையைத் தன்னகத்தே எடுத்துக் கொள்கிற முயற்சியினால், மாநிலங்களின் கலாச்சாரம் மற்றும் மொழி உணர்வும் பாதிக்கப்படுவதாக ஆகும் என்ற வகையில் அந்த எண்ணத்தை கைவிட வேண்டும் என்றும் இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசாங்கத்தின் பள்ளிகள், சென்டிரல் சிலபஸ்சிலே இருந்தாலும், அவைகள் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அது மட்டும் அல்ல து இம்மாதிரியான பள்ளிகளை புதியதாக ஆரம்பிப்பது கூட தேவையில்லாதது. வீண் செலவை ஏற்படுத்தும், என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும், கல்வியின் தரம் ஒரே மாதிரியாக இருக்க ஒரே மாதிரியான பாடதிட்டத்தை எல்லா இடங்களிலும் வைத்து, எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியான வகையில் கல்வி அறிவு பெறச் செய்ய வேண்டும். அந்த வகையில் தமிழகத்திலே இருக்கிற அனைத்துப் பள்ளிக் கூடங்களும் ஒரே துறையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அது சென்டிரல் ஸ்கூல் ஆனாலும், மெட்ரிக்குலேஷன் ஸ்கூல் ஆனாலும் மாநிலக் கல்வித் துறையின் கட்டுப் பாட்டின் கீழ் ஒரே சிலபஸ்சின் கீழ் கொண்டு சேர்க்கப்பட்டால் தான், அனைத்து மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான கல்வி முறையை நம்மால் வழங்க முடியும்.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளையும், பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளிகளையும்கூட கல்வித் துறையின்கீழ் கொண்டு வந்தால் தான் அந்த சமூகத்து மாணவர்கள் சலுகைகளோடு, தரமான கல்வியையும் பெறமுடியும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். அந்த ஆதிதிராவிடர் நலப் பள்ளியும், பிற்பட்டோர் நலப் பள்ளியும் ஏதோ இரண்டு ஹாஸ்டல்களை வைத்து நடத்து வதற்காகத்தான் நடக்கிறதே தவிர, தரமான கல்வியை போதிப்ப தற்கு வேண்டிய வசதி இல்லை. ஆகவே அந்த வகையில் எல்லா பள்ளிகளையும் மாநில அரசின் கல்வித் துறையின் கீழ் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாலர் பள்ளி. நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள சத்துணவுத் திட்டத்தின் விளை வாக பாலர் பள்ளிகள் என்று சொல்லப்படும் நர்சரி ஸ்கூல்கள் எல்லாம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவைகள் முறைப்படி பள்ளிகளாக மாறி இயங்குகிற நேரத்தில் அவை களையும் கல்வித் துறையின் கீழ் கொண்டு வரவேண்டுமேயல் லாது சமூக நலத்துறை மூலமாகவோ அல்லது மற்ற துறையின் மூலமாகவோ நடத்தச் செய்தால், கல்வியை நல்ல முறையில் சொல்லிக் கொடுக்கும் பணிகளை அந்தத் துறைகளினால் சரி வர மேற்கொள்ள இயலாது போய் விடலாம். ஆகவே அந்த வகையிலும் அந்தப் பள்ளிகளையும், பாலர் பள்ளிகளாக மாற்றுகிறபோது மாநில அளவில் கல்வித் துறையின் கீழ் கொண்டு வந்தால்தான், சத்துணவையும் சிறப்பாகப் போட முடியும், கல்வியையும் எதிர்பார்ந்த அளவிற்கு அவர்களுக்குச் சிறப்பாக ஊட்டமுடியும் என்பதை வற்புறுத்திக்கூற விரும்பு கிறேன். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கல்வித் துறையின் மூலம் சத்துணவு கொடுப்பது மட்டுமல்லாது சீருடைகள் வழங்குவது மட்டுமல்லாது, பாட புத்தகங்கள் வழங்குவது மட்டுமல்லாது, பல புதிய பல்கலைக் கழகங் களையும் உருவாக்கியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் பல திட்டங்களை உருவாக்கி அவைகளைச் சிறப்போடும் செம்மை யோடும் நிறைவேற்றி வருகிறது. முதியோர் கல்வியோடு முறைசாரா கல்வி மற்றும் தொழிலாளர்களுக்கான, தொழி லாளர் நலக் கல்வி போன்று பல கல்வித் திட்டங்களை ஆரம்பித்து, அதன்மூலம் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு உரிய வேலை வாய்ப்பை இந்த 7 ஆண்டுக் காலத்திலே உருவாக்கி யிருக்கிறது என்பதையும் நினைவு கூற விரும்புகிறேன்.



இந்த வகையிலே கல்வி மேம்பாட்டிற்காகவும், கல்விப் பணியாளர்களின் நலத்திற்காகவும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும், வேலை வாய்ப்பைப் பெறுகிற தகுதி பெற்ற மாணவர்களை உருவாக்குவதற்காகவும் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் கல்விச் செயகை நமக்கு உதவி செய்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என் வார்த்தைகளை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, கல்விக்காக இந்தளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிற தமிழ்நாடு அரசாங்கத்தையும் அதனுடைய முதல் அமைச்சர் மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையும், அவர்களுக்குத் துணையாக நின்று செம்மையாக இத்துறையை இயக்கிக் கொண்டிருக்கிற கல்வியமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்களையும் நான் முதலிலே பாராட்ட விரும்புகிறேன். முதற் காரணம், தாய்மொழிக் கல்வியை படிப்படியாகக் கொண்டு வரவேண்டும் என்கிற விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

தாய் மொழியில் படிப்பதன் மூலம் நல்ல அறிவு பெற முடியாது என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் இப்போது நீக்கப் பட்டு வருகிறது. விஞ்ஞானத்திலே மிகச் சிறந்திருக்கிற சோவியத் யூனியன் போன்ற நாடுகளுக்குப் படிக்கச் செல்கிற மாணவர்கள்கூட அங்கேசென்று 6 மாதங்கள் அவர்களுடையதாய் மொழியான ரஷிய மொழியில் படித்து தேர்ச்சி பெற்றதற்குப்

பிறகுதான், அவர்கள் தேவையான விஞ்ஞான அறிவை அங்கே பெறுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, ஆரம்பக் கால முதல் தமிழையே பேசிக் கொண்டிருக்கிற நாம், தாய்ப்பாலோடு தமிழ் பாலையும் சேர்த்துக் குடித்து வளர்ந்து வந்திருக்கிற நம், அனைத்துப் பாடங்களையும் தமிழிலேயே படிக்க வேண்டும் என்கிற திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்கிற அரசாங்கத்தை ஆரம்பத்திலேயே பாராட்டி, அதை விரைவுபடுத்த வேண்டும், எல்லா மட்டங்களிலேயும் விரைவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு உலக அளவில் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிற ஜப்பான் போன்ற நாடுகளெல்லாம் நமக்கு இதில் வழிகாட்டி யிருக்கிறது. சுய சிந்தனை என்பது தாய் மொழியில் படிக்கின்ற நேரத்திலே தான் வரும். ஆனால் அதேநேரத்திலே ஆங்கிலத் தினுடைய முக்கியத்துவத்தைக் குறைத்து விடாத அளவுக்கு, அதை ஒரு மொழியாக படிக்கின்ற வகையில் முயற்சிகளை ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் இருக்கிற ஆசிரியர்கள் அதிக ஆர்வத்தோடு, அதிக உழைப்போடு, மாணவர்களுக்குச் செல்லிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் சொள் கிறேன்.

சின்னக் குழந்தையிலேயிருந்து பள்ளிகளிலே படிக்கின்றவர்களுக்கு யோகாசனம் போன்றவைகள் சொல்லிக் கொடுத்து விட்டால் நோய் நொடி வராது நல்ல முறையில் அவர்கள் வாழ வழி செய்ய முடியும். விண்வெளி சென்ற சர்மா என்பவர் சொன்னார். விண்வெளியில் எனக்கு எழுந்த எடையற்ற பிரச்னைகளையெல்லாம் யோகாசனம் கற்ற காரணத்தாலே நான் எளிதிலே சமாளித்து விட்டேன் என்று சொன்னார். விண்வெளியில் வாழ்வதற்கே துணையாக இருக்குமானால், இந்த மண்ணிலே நல்வாழ்வு வாழ்வதற்கு எவ்வளவு துணையாக இருக்கும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வியமைச்சர் அவர்களும் எண்ணிப் பார்த்து, இந்த யோகாசன முறையை சிறுவயதிலிருந்தே பள்ளிகளில் புகுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் சொள்கிறேன்.

பழங்காலத்திலே கல்விக்கூடங்கள் எல்லாம் மரங்கள் அடர்ந்த பகுதியில், இளம் தென்றல் வீசுகின்ற சூழ்நிலையில் குளிர்ந்த நிலையில் அவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள் என்று நமக்குத் தெரிகிறது. பொதிகையிலே தமிழ் வளர்ந்தது என்று சொல்வதும், ஆற்று ஓரத்திலே பெரிய பெரிய பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டன என்பதும் இதனால் கூட இருக்கலாம். அப்படி இருக்கும் போது நாம் நம குழந்தைகளை 9½ மணிக்கு பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது என்ற பழக்கத்தை நல்ல வெயில் நேரத்திலே பாடம் படிக்கின்ற பழக்கத்தை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காலை 7½ மணிக்கே பள்ளிக்கூடத்தை துவங்கி, 1 மணி 1½ மணிக்குள் அதனை



முடிக்கின்ற வகையில் வைப்போமானால்—2 செஷன்ஸ் என்று சொல்கிறார்களே அப்படிக்கூட வைக்கலாம், காலையிலிருந்து நண்பகல் வரை ஒரு பிரிவிருக்கும் நண்பகலுக்கு மேலே மாலை வரை ஒரு பிரிவிருக்கும் என்று வைக்கின்றபொழுது பல இடங்களிலே கட்டிடப் பிரச்சனைகளைக்கூட சமாளிக் கலாம். கட்டிடப் பிரச்சனைகளைச் சமாளிக்கின்றபொழுது பெரும் பொருள் மிச்சப்படும் என்பதை சொல்ல விரும்புகிறேன். கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டாம் என்ற நோக்கம் எனக்கு இல்லை. பல இடங்களில் கட்டிடங்கள் இல்லாத காரணத்தினால், மாணவ மாணவிகள் வெளியேயிருந்து படிப்பது மரத்தடியிலிருந்து படிப்பதெல்லாம் நமது கவனத்திற்கு வரத் தான் செய்கிறது. எனக்குத் தெரிந்த சில பெண்கள் பள்ளிக் கூடங்களில் கூட சுற்றுச்சுவர் இல்லாமல், கழிப்பிடங்கள் இல்லாமல் மாணவிகள் படித்துக்கொண்டு இருப்பதும், அதிலே அரசாங்கம் அக்கறை எடுத்து விரைவிலே கட்ட முயற்சி செய்வது, அந்த முயற்சி ஏனோ பலன் அளிக்காமல் பல ஆண்டுக் காலம் பழைய நிலையிலேயே தொடர்வது என்ற நிலையெல்லாம் இருந்துகொண்டிருக்கிறது.

இவைகள் எல்லாம் ஏற்படக் காரணம் புதிய பள்ளிக்கூடங் களை ஆரம்பிக்கின்ற நேரத்திலே அரசாங்கம் வருகின்ற கோரிக்கை மனுக்களை ஏற்று பள்ளிகளைத் துவங்குங்கள் என்று ஆணை கொடுத்துவிடுகிறது, நல்ல நோக்கத்தோடு, பள்ளிகளைத் துவக்குவதற்கு ஆணையிடுகின்ற அதே நேரத்திலே, அதற்கான ஆசிரியர் ஒதுக்கீட்டை உடனே செய்ய முடியாமல் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. பல இடங்களில் ஆசிரியர் ஒதுக்கீடு உடனே நடைபெறவில்லை. நடைபெறாத காரணத்தினாலே, ஏற்கனவே பக்கத்துப் பள்ளிக்கூடங்களிலே பணிபுரிந்து கொண்டிருக்கின்ற ஆசிரியர்களை அங்கே பணிக்கு அனுப்புவதன் மூலம் இரண்டு பள்ளிகளிலும் சரியான பாடம் நடைபெறாமல் இருப்பதைப் பல பொது மக்கள் நமது கருத்துக்குக் கொண்டு வருகிறார்கள்.

நடுநிலையிலிருந்து, அதற்கும் மேல் நிலைக்குக் கல்விக்கூடத் திற்கு அங்கீகாரம் கொடுத்தால் இத்தனை ரூபாய் கட்டினால் தான் அங்கே கட்டிடம் கட்டுவதற்கு தனியார்கள் வசதி என்றெல்லாம் சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது, அது நியாயமாக இருந்தாலும்கூட சில நேரங்களில் அதற்கு விதிவிலக்கு கொடுக்க முடியுமா என்று ஆலோசிக்கவேண்டும்.

அண்மையில் நான் கூடலூர் தாலுக்காவில், நீலகிரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த போது குளப்பலூர் என்ற இடத்தில் இலங்கைத் தமிழர்கள் நிறைய பேர்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தேன். உடனடியாக ரூ. 15,000 கட்டினால் தான் பள்ளிக் கட்டிடம் வரும் என்ற நிலை வரும்போது அவர்கள் திக்கித் திணறிக்கொண்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் மரியாதைக் குரிய அமைச்சர் அவர்கள் அதற்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வினாத் தாள் தயாரிக்கின்ற ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களாக இல்லாத காரணத்தினால் சில நேரத்திலே வினா என்ன கேட்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரியாமல் மாணவர்கள் திகைத்துக்கொண்டிருக்கிறார்கள். பாடத்தை நடத்துகின்ற ஆசிரியர்கள் மட்டுமே, அந்தப் பாடத்திலே பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மட்டுமே வினாத் தாள்களைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆணையினை நமது அரசாங்கம் உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆரம்ப பள்ளிக்கூடத்திலே கூட இனிமேல் தொழில் கல்வி கொண்டுவருகின்ற முயற்சி மிகச் சிறந்த முயற்சி. முதலமைச்சர் அவர்களுடைய இந்த ஆர்வத்தை நான் காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் சார்பிலே வரவேற்கிறேன். ஆனால் அதற்கு தொழில் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கின்ற போது சில ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-20)

சத்துணவு அமைப்பாளர் என்று ஒருவர் போடப்படுவார். அவருக்குச் சம்பளம் தரப்படுகிறது. 150 ரூபாயோ என்னவோ. அவர் பாதி நேரம் வேலை செய்வார், மீதி நேரம் சும்மா இருக்கிறார். 150 ரூபாயை வைத்து அவருடைய வாழ்க்கையை நடத்த முடியவில்லை. அப்படிப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். தொழில் பயிற்சி ஆசிரியர்கள், முழு நேர ஆசிரியர்களும் உண்டு, பகுதி நேர ஆசிரியர்களும் உண்டு. பகுதி நேர ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் தான் கொடுக்கப் படுகிறது. அப்படியும் சில ஆசிரியர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். பகுதிநேர தொழில் பயிற்சி ஆசிரியர்கள், பகுதிநேர சத்துணவுத் திட்ட அமைப்பாளர்கள் இவர்களையெல்லாம் சேர்த்து அவர்களுக்குத் தொழிற் பயிற்சியைக் கொடுத்து அவர்களையும் தொழிற் பயிற்சி ஆசிரியர்களாக நியமிப்பீர்களே யானால் நல்ல முறையிலே தொழிற் கல்வி பரவும் என்பது மட்டுமல்ல, நல்லமுறையிலே மாணவர்களுக்கும் அது பயன்படும். எனவே இந்த ஆலோசனையை அரசு பரிசீலிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தொழிற் கல்வியைக் கொடுக்கிறபோது அந்தப் பள்ளியைச் சுற்றி என்ன நிலைமை இருக்கிறது, அதைச் சுற்றி என்ன மூலப்பொருட்கள் கிடைக்கின்றன என்பதைப் பார்த்து, அங்கே இருக்கிற மக்களுடைய தொழில் எதுவாக இருக்கிறது என்பதைப் பார்த்து அதையொட்டி அங்கே கற்கின்ற மாணவர்கள் எந்தத் தொழிலிலே ஈடுபடக்கூடும் என்பதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு தொழில் பயிற்சிகளைத் தொடங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



ஒவ்வொரு இடத்திலும் தனியார் பள்ளிகளும் அரசுப் பள்ளிகளும் என்று இருக்கின்ற நிலைமையில் இருக்கிற பேதத்தை அரசாங்கம் ஏற்கெனவே அறிந்திருக்கும். சில ஊர்களிலே—என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஒரு ஊரிலேகூட—இருக்கிற பெருமக்கள் தங்களுடைய குழந்தைகளை—அந்த ஊரிலே அரசாங்கப் பள்ளி இருந்தாலும்கூட—அடுத்த ஊருக்கு அனுப்புகிற நிலைமை இருக்கிறது. அந்த ஊரிலே அரசாங்கப் பள்ளியிலே சரியானபடி போதனை இல்லை, அங்கே ஆசிரியர்கள் சரியான நேரத்திற்கு வருவதில்லை என்ற இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் தங்கள் பிள்ளைகளை—அவர்களுடைய வருங்காலத்தை மனதிலே வைத்து—அடுத்த ஊருக்குப் பேருந்திலே வைத்து அனுப்புகிற நிலைமையும், அடுத்த ஊரிலே உள்ள உறவினர் வீட்டிலே வைத்து அங்கே இருக்கின்ற பள்ளிக்கு அனுப்புகின்ற நிலைமையும் இருக்கிறது. இது ஒரு எக்ஸோடஸ். ஆகவே மாணவர்கள் ஏன் அடுத்த ஊர்களுக்குப் படிக்கச் செல்கிறார்கள் என்பதற்கான காரணங்களை அரசு ஆராய்ந்து அரசுப் பள்ளிகளை நல்ல முறையிலே இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளிலே இலாகாவினர் ஈடுபடவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களைத் தனியார் பள்ளிகள் என்றும், அரசுப் பள்ளிகள் என்றும் தொடங்கிவிட்ட காரணத்தினால் அது தொடர்பாக சில கருத்துக்களை நான் சொல்லவிரும்புகிறேன். மைனாரிட்டி நிர்வாகத்தினர் நிர்வகித்து வருகின்ற ஒரு பள்ளியில் அந்தப் பள்ளியை நடத்திக்கொண்டிருக்கிற ஒருவர் தன்னுடைய உறவினர்களில் ஒருவருக்கு வேலைபோட்டுக் கொடுக்கவேண்டுமானால் வேலைபோட்டுக் கொடுத்துவிடலாம். ஆனால் மெஜாரிட்டியினர் நடத்துகின்ற பள்ளியிலே இருக்கின்ற நிர்வாகத்தினர் அப்படி ஒருவருக்கு வேலை போட்டுக் கொடுக்க வேண்டுமென்றால் வேலைபோட்டுக் கொடுக்க முடியாது என்ற நிலை இருக்கிறது. இரண்டு பேருமே உயர் நோக்கோடு தங்களுடைய பொருளைச் செலவிட்டு கல்விப் பணியை ஆற்றிக் கொண்டிருக்கின்றவர்கள்தான். ஆனால் அவர்களுக்கும் இவர்களுக்கும் வேறுபாடு இருப்பது சரியல்ல. அரசு இதை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேனேஜ்மெண்ட் கிராண்ட், நிர்வாகத்திற்காக கொடுக்கப்படுகிற மானியம் ஏற்கெனவே 12% என்று இருந்தது. ஆனால் இப்போது ஆசிரியர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கிற காரணத்தினால் அது ஒரு பெரிய தொகையாக வரும் என்ற காரணத்தினால் 4% என்று அதை ஆக்கியிருப்பதாகவும் சொல்கிறார்கள். அதை 6% ஆக ஆக்கிக் கொடுத்தால் அந்த நிர்வாகம் செம்மையாகப் பணிபுரிய முடியும் என்பதை நான் தெரிவித்து அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1985 ஏப்ரல் 9

சில தனியார் பள்ளிகள் சிறப்பாக நடைபெறுகின்றன, அது உண்மைதான் ஆனால் அங்கே அரசாங்கத்தின் எண்ணத்திற்கேற்ப மாணவர்களைச் சேர்க்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். 30, 35 மாணவர்கள் இருந்தால் சரி, ஆனால் ஒரு வகுப்புக்கு 100 மாணவர்கள் என்ற முறையிலே அவர்களை ஒரு அறையிலே போட்டு பாடம் சொல்லிக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. நான் கூட ஒரு ஏட்டிலே படித்தேன். உயர்கல்வி நிலையிலே சோவியத் யூனியனிலே 6 மாணவர்கள ஒரு வகுப்பிலே வைத்திருக்கிறார்கள் என்று அதிலே குறிப்பிடப் பட்டிருந்ததை நான் பார்த்தேன். ஆனால் நம்முடைய கல்விக் கூடங்களிலே ஈ செக்ஷன் என்று சொல்லப்படுகிற ஆங்கிலம் போதனாமொழியாக இருக்கிற வகுப்பிலே 108 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்றால் ங்கில போதனாமொழி தேவை தேவை என்ற அடிப்படையிலே 30 ஆக இருந்தது 60 ஆக ஆகி, 100 வரை போய்க்கொண்டிருக்கிறது. ஆனால் போதனாமொழி ஒன்று தான், தமிழ்தான் என்று அறிவிக்காத காரணத்தினாலே 4 தமிழ் வகுப்புகள் இருந்தாலும் ஒரு வகுப்பு ஆங்கிலத்திற்கு என்று கொடுக்கிறபோது அதிலே 100 மாணவர்கள் சேர்க்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இது ஏன் என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தனியார் பள்ளிகளிலே மாணவர்கள் நல்லமுறையிலே வெற்றிபெறுகிறார்கள், 100-க்கு 100 மாணவர்கள் என்று சொல்லப்படுகிற நிலையில் சில பள்ளிகளும் இருக்கின்றன.

இன்று காலையிலேகூட என்னிடத்திலே ஒருவர் வந்து சொன்னார், கடந்த 4 ஆண்டுகளாக அவர்களுடைய பள்ளியிலே 100-க்கு 100 மாணவர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்று சொன்னார். மகிழ்ச்சியான செய்தி. ஆனால் சில தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்குச் சம்பளமும் போதுமானதாகக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அது மட்டுமல்ல, ஆசிரியர்களை அவர்கள் கொத்தடிமைகள் போல் நடத்துகிறார்கள், அவர்களை கொத்தடிமைகள் போல் நடத்துவது மட்டுமல்ல, எனக்குத் தெரிந்த ஒன்றையே நான் சொல்கிறேன், மீண்டும் கூடலூர் பகுதிலே நடந்த நிகழ்ச்சியைச் சொல்கிறேன், காரணம் நான் பார்த்த பசிய நினைவுகள் எனக்கு அப்படியே இருக்கின்றன, பந்தலூரிலே உள்ள தனியார் பள்ளியிலே நிர்வாகத்திற்கு வேண்டிய ஆசிரியர்கள் என்றும் நிர்வாகத்திற்கு உடன்படாத ஆசிரியர்கள் என்றும் சொல்கிறார்கள், என்ன காரணம் என்று தெரியவில்லை. அவர்கள் சொல்வதைக் கேட்டால் தான் உடன்பாடு என்று கருதுகிறார்கள் போலும். இப்படிப் பேதம் வளர்ந்து நிர்வாகத்திற்கு வேண்டாத ஒரு ஆசிரியை நிர்வாகத்திலிருந்து சற்று எட்டி ஆனால் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதிலே நல்ல கெட்டி என்ற பெயர் வாங்கிய ஒரு பெண்மணியை நடுத்தெருவில் இழுத்துப் போட்டு நிர்வாகத்திற்கு வேண்டிய நபர் அடித்தச் செய்தியும் அதன் பிறகு அடிபட்ட அந்த பெண்மணி மீது நிர்வாகத்தினர் கொண்டு இருந்த கோபம் காரணமாக எந்த வகுப்பில் பாடம் எடுகப் போனாலும் அவருக்கு மட்டும் மேஜை, நாற்காலி



1985 ஏப்ரல் 9] [திரு. குமரி அனந்தன்]

அப்புறப்படுத்திவிட்டு நின்று கொண்டே தான் பாடம் எடுக்க வேண்டும் என்ற கொடுமையை எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். அந்த ஆசிரியர், ஆசிரியையை பார்க்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் வருவதற்கு அச்சப்படுகிறார்கள். எனவே ஊர் பொதுமக்கள் சொல்லுகிற அந்தச் செய்தியை வைத்து தான் நாங்கள் இந்த மன்றத்தில் கூறவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிர்வாகத்தை வைத்துக் கொண்டு இருப்பவர்களை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும். இன்னும் சொல்லப்போனால் அங்கீகாரத்தையே ரத்து செய்யவேண்டும். ரத்து செய்வதற்கு அதிகாரம் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. இலாக்காவிற்கு இருக்கிறது. அப்படிப் பட்ட நிர்வாகத்தை எல்லாம் வழிக்கு கொண்டு வரமுடியவில்லை என்றால் உடனடியாக மற்றவர்களிடம் அல்லது பஞ்சாயத்து யூனியனிடம் பொறுப்பை கொடுத்து இந்த பள்ளிக்கூடத்தை நடத்துங்கள் என்று சொல்லவேண்டுமே தவிர வேறு வழி இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள், தனியார் பள்ளிக்கூடங்களில் இருக்கின்ற அந்த பேதத்தை சொல்லுகின்றபோது அங்கே இருக்கின்ற ஆசிரியர்களின் துயரத்தையும் நான் செல்ல விரும்புகிறேன். அரசாங்க பள்ளி ஆசிரியர்கள் மருத்துவ செலவு செய்து அதை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சர்க்கார் மருத்துவ விடுதியில் இனாமாக சிகிச்சை பெறலாம் என்று இருக்கிறதே தவிர அவர்கள் கொடுக்கின்ற மருந்து சீட்டுகளுக்கு எல்லாம் பணம் பெறலாம் என்ற நிலை இல்லை. அதைப்போல விடுமுறை பயணச் சலுகை அரசு ஆசிரியர்களுக்கு இருப்பது போல் தனியார் ஆசிரியர்களுக்கு இல்லை. பணிக் காலத்தில் இறந்தால் 20 ஆயிரம் குடும்ப உதவிப் பணம் தர தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது அரசு ஆசிரியர்களுக்கு. ஆனால் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அந்த சலுகை இல்லை, அதை கொடுக்கவேண்டும். வீடு கட்டுவதற்கு கடன் வசதி கொடுக்கப்படுகிறது அரசு பள்ளியில் இருக்கிறவர்களுக்கு இந்த கடன் வசதி தனியார் பள்ளியில் இல்லை. அவர்களுக்கு இதை கொடுக்க வேண்டும். எனவே இப்படிப்பட்ட சலுகைகளை பேதம் இல்லாமல் 2 பேருக்கும் ஒன்று தான் என்று சொல்லுகிற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் எழுந்து இருக்கின்ற பிரச்சினை ஐ.டி.ஐ. பிரச்சினை. ஐ.டி.ஐ. மத்திய அரசாங்க சிலபஸ் பிரகாரம் நடத்தப்படுவதாக இருந்தலும் கேள்வித் தாட்கள் அவர்களே தயாரிப்பதாக இருந்தாலும் அந்த கேள்வித் தாட்களை வைத்து அந்த தேர்வுகளை நடத்துவது நமது மாநில அரசாங்கம் தான். அந்த மத்திய அரசு தயாரிக்கின்ற கேள்வித்தாட்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. பாடம் சொல்லிக் கொடுப்பது தமிழில். ஆனால் கேள்வித் தாட்கள் இருப்பது ஆங்கிலத்தில். இந்த ஆங்கில மொழி பெயர்ப்பு சரியாக செய்ய முடியாமல் அந்த ஐ.டி.ஐ. மாணவர்கள் சில நேரங்களில் தவறாக புரிந்துகொண்டு தவறான

விடைகளை எழுதுவதன் மூலம் தோல்வி அடைகின்ற வாய்ப்பு ஏற்படுவதன் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கேள்வித் தாளில் எதையாவது ஒன்றை பெற்று உடனடியாக அதை தமிழில் மொழி பெயர்த்து கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐ.டி.ஐ. என் பொறுப்பில் இல்லை. அது எம்ப்ளாய்மெண்டு அண்டு டிரையினிங் அமைச்சர் இடத்தில் இருக்கிறது. அந்த மானியம் வரும்போது இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லலாம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே அந்த மானிய கோரிக்கை வருகின்ற போதும் அதன் மீது சொல்லுகின்ற வாய்ப்பு இருக்கிறது. கூட்டு பொறுப்பு இந்த அமைச்சரவைக்கு இருக்கிறது. இதை மனதில் எடுத்துக்கொண்டால் நல்லது என்ற காரணத்திற்காக இதை நான் இங்கே குறிப்பிட்டேனே தவிர இது தவறு ஆகாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற ஆலோசனைக்கும் நன்றி.

அஞ்சல்துறை கல்வியை எடுத்துக்கொண்டால் அந்தத்தேர்வின் முடிவுகளும் சான்றிதழ்களும் கிடைப்பதற்கு கால தாமதம் ஆகிறது. உதாரணமாக சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் மதுரை காமராஜ் கல்லூரி நடத்திய தேர்வின் முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை. அதனால் அந்த மாணவர்கள் அவர்கள் எழுதிய தேர்வின் முடிவுகள் என்ன என்று தெரியாமல் வருந்திக் கொண்டு இருக்கிறார்கள். 5 வருட சட்ட படிப்பு படிக்கும் சட்டக் கல்லூரி மாணவர்கள் உண்ணாநோன்பு இருப்பது பத்திரிக்கையில் வருகிறது. எங்களைப் போன்றவர்கள் நேரில் போய் பிரச்சினை என்ன என்று கேட்கிறோம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அவர்களுக்கு முதல் ஆண்டில் கிடைக்கின்ற சலுகை முதல் ஆண்டில் தங்கள் சில தாட்களில் வெற்றி வாய்ப்பு பெறவில்லை என்றால் 2-வது ஆண்டில் அதை படிக்கிற உரிமை இருக்கிறது. ஆனால் 2-வது ஆண்டு எழுதி வேண்டிய தாட்களில் எதையாவது ஒன்றில் நாங்கள் வெற்றி பெறமுடியாத வாய்ப்பு இருந்தால் 3-வது ஆண்டு வகுப்புக்கு போகமுடியாமல் ஒரு ஆண்டு காலம் வீணாகிறது என்று சொல்லுகிறார்கள். அதோடு அவர்களுக்கு படிப்பதற்கு போதுமான புத்தகங்கள் கிடைக்கவில்லை. சிலபஸ்ஸில் சொல்லப்பட்டு இருக்கிற அளவுக்கு புத்தகங்கள் அவர்களுக்கு சப்ளை செய்ய வில்லை அல்லது வெளியே கடைகளிலும் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதைப்போல வேறு கல்லூரிகளில் எல்லாம் ஜூலை மாதத்தில் தேர்வு நடைபெறுகிறபோது நமது சென்னையில் இருக்கின்ற கல்லூரியில் அதுபோல் இல்லாமல் மே மாதம் தேர்வு நடைபெறுகிற காரணத்தால் அவர்களுக்கு



இருக்கின்ற சிரமங்களை இங்கே எடுத்துச் சொல்லுகிறார்கள். இங்கே கனம் அமைச்சர் அவர்கள் அதனை கவனித்து அவர்கள் குறையை தீர்க்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30.)

அடுத்த செய்தியாக தனியார் தொழில் பயிற்சி கல்லூரிகளைப் பற்றி நான் ஏற்கனவே அவர்கள் சொன்னது போல் சம்மந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் மீண்டும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது சில பள்ளிகளிலே என்ன என்ன முறைகளில் பாடம் நடத்திக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் ஒன்று இரண்டு இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆசிரியப் பெருமக்கள் தாங்கள் சொல்லிக் கொடுக்கின்ற அந்தப் பாடத்தில் முழுத் தேர்ச்சி பெற்றிருக் கிறார்கள் என்ற எண்ணம் நமக்கு இருந்தாலும்கூட, அதையும் சொல்லிக் கொடுப்பதற்குரிய கருவிகள் போதுமானதாக இல்லை. உதாரணமாக, முன்பிருந்த சிலபசுக்கும், இப்பொழுது இருக்கின்ற சிலபசுக்கும் விஞ்ஞான சிலபசுக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது முன்பு சில கருவிகளை வைத்துக்கொண்டே மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து விடலாம், இப்பொழுது அப்படி முடியாது. ஏனென்றால், பாடத் திட்டங்கள் விரிவாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, ஆழக் கல்வி ஏற்பட்ட காரணத்தினாலே அதிகமான கருவிகளைக் கொடுக்க வேண்டுமென்றும் நான் இங்கே உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1980 ஆம் ஆண்டே பி.யு.சி. கல்விமுறை ரத்து செய்யப்பட்டு விட்டது. சித்த மருத்துவப் பட்டப் படிப்புக்கு சிறப்புத் தமிழ் என்று சொல்லுகின்ற ஒரு பாடம் அப்பொழுது பி.யு.சி.யிலே இருந்தது. அது 1980 ஆம் ஆண்டு வரை அந்தத் திட்டம் இருந்த காரணத்தினாலே, அட்வான்ஸ்ட் தமிழ் படித்தவர்கள் அத்தனைபேரும் சித்த மருத்துவக் கல்லூரியிலே பட்டப் படிப்பு படிக்க வேண்டுமென்றால் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். ஆனால் 1979 ஆம் ஆண்டு வரை அப்படி நடந்தது. 1980-க்குப் பிறகு அந்த பி.யு.சி. படித்து இந்த வாய்ப்பினைப் பெறுவதற்கான வசதியில்லாமல் இருக்கிறது. எனவே, அந்த வாய்ப்பைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து, சித்த மருத்துவப் பட்டப் படிப்புக்கு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பிற்பட்ட மாணவர்கள் தங்கிப் படிக்கும் அரசாங்க விடுதிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு தரமானதாக இல்லை. காரணம், அதற்காக ஒதுக்கப் படுகின்ற பணம் போதுமானதாக இல்லை. அரசாங்கம் நடத்து கின்ற விடுதிகளில் கட்டிட வசதி, கழிப்பிட வசதி போன்றவைகள் சரியாக இல்லாததால் அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

குறிப்பாக, பெண்களுக்கான விடுதிகளிலே பாதுகாப்பு அற்ற நிலை இருக்கிறது. சென்னை சட்டக் கல்லூரி, இன்னும் பல இடங்களில் இருக்கின்ற மாணவியர்கள் விடுதிகளிலே கூட போதுமான வசதியும், பாதுகாப்பும் இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அண்மையில், இராணி மேரிக் கல்லூரி மாணவிகள் கூட ஊர்வலம் போனதைப் பத்திரிகைகளிலே பார்த்திருப்பீர்கள். நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

இப்பொழுது உதவித் தொகை கொடுக்கின்றபொழுது புத்தகங்களாகக் கொடுக்கப்படுகின்றவர்களுக்கு முதலிலேயே கொடுத்துவிட்டால் மாணவர்கள் நன்மை பெறுவார்கள். ஆனால், முதலிலே வாராமல் இருக்கின்ற காரணத்தினாலே மாணவர்களுடைய பெற்றோர்கள் ஏழைகளாக இருந்தாலும், சிரமப்பட்டு, புத்தகங்களை வாங்கிக் கொடுத்துவிட்ட பிறகு, பிறகு, கடைசியிலே புத்தகங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, இரண்டு புத்தகங்களை மாணவர்கள் வைத்திருக்கின்ற நிலைமை ஏற்படுகிறது எனவே, முதலிலேயே அதையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. வரையில் இலவசக் கல்வி என்று நாம் அறிவித்திருக்கிறோம். மகிழ்ச்சியானது. எஸ்.எஸ்.எல்.சி.யில் தோற்றவர்களுக்கும் இலவசக் கல்வி என்று அறிவித்த இந்த அரசாங்கத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நீங்கள் தோற்றுப் போனீர்கள், எனவே, வாழ்க்கையிலேயே நீங்கள் தோற்றுப்போனீர்கள் என்று சொல்லாமல், நீங்கள் தோற்றுப் போனாலும் உங்களை நாங்கள் தேர்ச்சி பெறச் செய்கிறோம் என்று சொல்லுகின்ற முயற்சியிலே; ஆயிரம் சமயங்களை— எங்களைப்போன்றவர்கள் விடுத்த வேண்டுகோள்களும் அதிலே உண்டு. அத்தனையையும் மனத்திலே கொண்டு அவர்களுடைய சுய சிந்தனையையும் அதிலே சேர்த்து இன்று ஆயிரம் இடங்களில எஸ்.எஸ்.எல்.சி-யில் தோற்ற மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். அதனை நாம் பாராட்ட வேண்டும். ஆனால் அது போதுமான விளம்பரம் இல்லாமல் இருக்கின்றனவோ என்னவோ, பல கிராமங்களுக்கு நான் சென்றபொழுது, ஏன் சென்னையிலேயே கூட சில கூட்டங்களுக்குச் சென்ற பொழுது இப்படிப்பட்ட வசதிகளையெல்லாம் அரசாங்கம் செய்து கொடுக்கிறது என்பது தெரியவில்லை. எனவே மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வேன், இன்னின்ன இடங்களிலே அந்தப் பயிற்சிகள் நடைபெறுகின்றன என்பதனை இன்னும் விளக்கமாக, தோல்வி அடைந்த மாணவர்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையிலே நீங்கள் எடுத்துச் சொல்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





ஒவ்வொரு கல்வி நிலையத்திலேயும், அதாவது பத்தாவது அல்லது பன்னிரண்டாவது அல்லது அதற்கும் மேலே பட்டப் படிப்பு, அதற்கும் மேல், மேல் பட்டப்படிப்பு என்று இருக்கின்ற கல்வி நிலையங்களிலே, தொழில் கல்வியாக இருந்தாலும், அது பொறியியல் கல்லூரியாக இருந்தாலும், மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், ஓரளவிற்கு மேற்கல்வி நிலையங்களிலேயெல்லாம் அங்கே படித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் அடுத்து என்ன என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுகின்ற ஒரு வழிகாட்டிக் குழு— ஒரு கைடன்ஸ் கமிட்டி இருக்க வேண்டுமென்று வெகு நாட்களாக நாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றோம். இறுதியாண்டு படிக்கின்ற மாணவனை அழைத்து, அவனுடைய சுற்றுச்சார்பை அறிந்து அவனுடைய ஆட்டிட்யூட் என்று சொல்வார்களே அந்த ஆர்வத்தோடு கூடிய அவனுடைய உந்துசக்தி என்னவென்பதைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப அவனுடைய வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதற்கு மேல்படிப்பா அல்லது பணியா அல்லது தொழிலா, எது என்று அவனுக்கு வாழ்க்கையிலே வழிகாட்டிக் கொடுப்பதற்கு ஒரு கைடன்ஸ் கமிட்டி ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட வழிகாட்டிக் குழு இருக்கின்றபொழுது மாணவர்கள் எந்தவிதமான சிக்கலும் இல்லாமல் தங்களுடைய வருங்காலத்தை உருவமைத்துக் கொள்வதற்கு அது உதவும் என்று கருதுகிறேன்.

சாத்தான்குளம் இப்ராகிம் நடுநிலைப் பள்ளி மேனேஜர்— நிர்வாகிகள் பலர் அங்கேயிருந்து கொண்டிருக்கின்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரியாகக் கொடுக்கவில்லை என்று சொல்லுகின்ற ஒரு கோரிக்கை மனு எங்களுக்கு வந்திருக்கிறது. சாத்தான்குளம் தொகுதி எம்.எல்.ஏ., மூலம் அது இங்கே என்னிடம் தரப்பட்டது. இவைகளையெல்லாம் மாண்புமிக்க அமைச்சரவர்கள் மனத்திலே கொண்டு குறைகள் தீர்ந்த, கல்வியிலே நிறைகுடமாகத் ததும்புகின்ற ஒரு தமிழகத்தை நமக்குத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, விளையாட்டுத் துறைபற்றிச் சொன்னதை மீண்டும் நினைவுபடுத்தி நல்லமுறையிலே விளையாட்டை நாம் ஊக்குவித்தோமேயானால், ஒலிம்பிக் போட்டிகளிலே, தங்கமாக நாம் பெற்று வருகின்ற ஒரு தங்கமான வாய்ப்பு இருக்கிறது என்பதனையும் இங்கே நினைவுபடுத்தி, வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் 467 கோடியே 99 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு கேட்டிருக்கின்ற இந்தக்கல்வி மானியத்தில் என்னுடைய கருத்துக்களை நான் கூற முற்படுகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டில் 20 சதவீதம் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது என்பதில் உண்மையிலேயே மகிழ்ச்சிதான். ஆனாலும் பெருவாரியான தொண்டைக் கல்விக்காக [illegible]

ஆண்டாண்டுதோறும் அதிகப்படியாக நாம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பிலே தந்திருந்தாலும் 1983-84 ஆம் ஆண்டு 856 கோடிதான் ஒதுக்கீடு இருந்தது. அதற்கடுத்த ஆண்டில் சுமார் 50 கோடி அதிகப்படியாக ஒதுக்கி இந்த ஆண்டு மேலும் 50 கோடி ரூபாய் கல்வித்துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இப்படி நாம் பெருமைப்பட்டுக்கொள்கிற அதே நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சராசரியாக ஒரு ஆசிரியருக்கு உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 1973-74 ஆம் ஆண்டில் 35 ஆக இருந்தது. அது இன்றைக்கு அதாவது 1984-85-ஆம் ஆண்டில் 42 ஆக உயர்ந்திருக்கின்றது. மேலை நாடுகளில் ஒரு ஆசிரியருக்கு 6 மாணவர்கள் 8 மாணவர்கள், 10 மாணவர்கள் என்றிருக்கின்ற நிலையை இங்கே நாம் கொண்டு வராவிட்டாலும் அதற்கு நம்முடைய பொருளாதாரம் போதிய இடம் தராவிட்டாலும் ஆண்டாண்டுதோறும் அதிகப்படியான தொகையை ஒதுக்கீடு செய்துகொண்டிருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக்கொள்கிற நேரத்தில் ஒரு ஆசிரியருக்கு 42 மாணவர்கள் என்ற அளவுக்கு நிலைமை உயர்ந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கது. சில பள்ளிகளில் 60, 70 மாணவர்களுக்காகக்கூட ஒரு ஆசிரியர் பணியாற்றுகின்ற நிலைமை இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்த்தால்தான் கல்வியின் தரத்தை நம்மால் உயர்த்த முடியும் என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே தொடர்ந்து நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் வாழ்க்கைக் கல்வி முறையைப் புகுத்தியிருப்பது தமிழகத்தில் ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும். இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுவதோடு சுயவேலை வாய்ப்பு பறுவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும் என்றெல்லாம் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1984-85-ல் 98.66 சதவீதம் பேர் 6 முதல் 11 வயதுக்கு உட்பட்டவர்கள் படிக்கிறார்கள் என்று இங்கே தகவல் தரப்படடிருக்கின்றது. இது பெருமைப்படக்கூடிய ஒன்றுதான். இருந்தாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1984-85-ல் 98.66 சதவீதம் பேர் பள்ளிகளிலே பயின்றாலும் அவர்களுடைய கல்வி முறை எப்படி இருக்கின்றது என்பதை நாம் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். சாதாரணமாக விவசாயப் பெருங்குடி மக்கள் கிராமங்களில் இருப்பவர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி நல்ல சூழ்நிலையில் அவர்களும் நகரத்தில் இருக்கின்ற குழந்தைகளைப் போல் மேற்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளைப்போல, அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்களின் குழந்தைகளைப் போல தரமான கல்வியைப் பெறவேண்டும் என்றால் அவர்களுடைய சுற்றுப்புறச் சூழ்நிலை சற்று மாறுபட்டதாக இருக்கவேண்டும். பள்ளிகள் எல்லாம் மரத்தடி நிழல்களில் நடக்கின்ற பள்ளிகளாக கூரைகள் இல்லாத பள்ளிகளாக, சுவர் இடிந்த நிலைமையில் இருக்கின்ற



பள்ளிகளாக 40, 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பள்ளிகளாக, ஆண்டாண்டுதோறும் பராமரிப்பு செய்யப்படாமல் மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கின்ற பள்ளிகளாக இருந்துகொண்டிருந்தால் கிராமங்களில் இருக்கின்ற மாணவர்களின் கல்வித்தரம் அது வகை செய்யாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்,

(முற்பகல் 11-40)

இன்றைக்குக் கிராமங்களில் எத்தனையோ இடங்களில் தனியார்கள் நர்சரிகள் ஆரம்பித்திருக்கிறார்கள். அமைச்சர் கூட கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசுகிற பொழுதும் இங்கே சட்டசபையில் அறிவித்தார்கள். நர்சரிகளை எல்லாம் வகைப்படுத்தி முறைப்படுத்தி, அதற்காகத் தனியாகச் சட்டம் கொண்டு வந்து, நர்சரிகளில் நடைபெறுகிற தவறுகளைத் தவிர்ப்போம் என்ற உறுதியைத் தந்தார்கள். ஆனால், இன்றுவரை அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறவில்லை. சாரிட்டி இன்ஸ்டிடியூஷனாக இருக்க வேண்டிய பாடசாலைகள் எல்லாம் இன்றைக்கு வர்த்தக ஸ்தலங்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. சாதாரணமாக பாலிடெக்னிக்காக இருந்தாலும் அல்லது தனியார் ஆரம்பப் பள்ளிகளாக இருந்தாலும், தனியார் நர்சரிகளாக இருந்தாலும், தனியார் கல்லூரிகளாக இருந்தாலும், இன்றைக்கு வர்த்தக ஸ்தலங்களாக மாறி வருவதை நாம் எல்லாம் நன்கு அறிவோம். அவற்றை எல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு, அங்கே வசூல் செய்யப்படுகிற நன்கொடைகளை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் ஏழை, எளியவர்கள், பள்ளியிலே சேருவதற்கு மிகவும் சிரமப்படுகிற நிலை தொடரும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதே போல இன்றைக்குத் தமிழகத்தில் கல்வி பயில்கிற குழந்தைகளின் எண்ணிக்கை 6 வயது முதல் 11 வயது வரை உள்ள சிறுவர் சிறுமியர்களின் எண்ணிக்கை 71.39 இலட்சம்; 11 முதல் 14 வயது வரை கல்வி பயில்கிற மாணவர்களின் எண்ணிக்கை 32.13 இலட்சம். இது 6 முதல் 11 வயது வரை கல்வி பயில்கிற மாணவர்களின் எண்ணிக்கையில் நேர் பாதியாகத்தானிருக்கிறது. 14 முதல் 16 வயது வரை கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 17.95 இலட்சம். இது 11 வயது முதல் 14 வயது வரை கல்வி பயில்கிற மாணவர்களின் எண்ணிக்கையில் நேர் பாதியாகத்தானிருக்கிறது. உயர்கல்வி பெறுவதற்குக் குழந்தைகளுக்குப் போதிய வசதி செய்யாததால் அல்லது வாய்ப்பு இல்லாததால் உயர்கல்வி பெறமுடியாமல் இருக்கிறார்கள் என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது,

இன்றைக்குப் போதுமான ஆசிரியர்கள் வகுப்புகளிலே இல்லாத காரணத்தால், மாணவர்களின் கல்வித்தரம் குறைந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; சாதாரணமாக, பாடசாலைகளுக்கு ஆண்டாண்டுதோறும் ஒதுக்கப்படுகிற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. இதைச் சுட்டிக்காட்டுவதற்காக ஒரு சம்பவத்தை, ஒரு உதாரணத்தை

நான் குறிப்பிட விரும்புகிறேன். குமரி மாவட்டத்தில் 1984-85-க்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படுவதற்கு 2-11-1984 அன்று மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து படித்த ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கான அட்டைகள் அனுப்பப்பட்டன. ஆனால், இன்றுவரை நேர்முகத் தேர்வுக்கான முடிவுகள் அறிவிக்கப்படாமல், நியமனம் செய்யப்படாமல் கடந்த ஸ்கூல் அக்கடமிக் இயர் முழுவதும் ஆசிரியர்கள் இல்லாத நிலைமையிலே அந்த இடங்கள் காலி இடங்களாக இருந்து கொண்டிருக்கின்றன.

குமரி மாவட்டத்தில் 28 செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். ஆனால், அவர்களுக்கு இன்று வரை சம்பளம் கிடைக்கவில்லை. அரசாங்க வேலை வாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து ஆட்களைப் பெற்று, சி.இ..ஓ அவர்கள் நேர்முகத் தேர்வு நடத்தி, நியமனம் செய்தபிறகு, கிட்டத்தட்ட 8, 9 மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படாததற்கான காரணம் என்ன என்று தெரியவில்லை.

கர்நாடக பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் கர்நாடக பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு நாம் தெளிவாக, விளக்கமாக அரசாணை தந்திருக்கிறோம் என்று இங்கே குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 50 சதவீதம் பெற்றவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்ற நிலைமை இருந்தும் இன்றுவரை கர்நாடக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படவில்லை. கர்நாடக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டும்கூட இன்றைக்குச் சம்பளம் வழங்கப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதை உடனடியாக அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மைனாரிட்டி பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மைனாரிட்டி உரிமை பெற்றவர்கள் சில நேரங்களில் பாடசாலைகளில் தங்களுடைய உறவினர்களை, கர்நாடக மாநில பயிற்சி பெற்றவர்கள், ஆகிய இப்படிப்பட்டவர்களை, தங்களுக்கு நியமனம் செய்கிற உரிமையிருக்கிறது என்ற காரணத்தால் நியமனம் செய்து கொண்டு, சில இடங்களில் முழுமையாகக் கூட சம்பளம் கொடுக்காமல் ஆசிரியர்களை கொத்தடிமைகளாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். முழுமையாக அரசு தான் ஆசிரியர்களுக்கு சம்பளத்தை வழங்குகிறது. மற்ற சலுகைகளையும் செய்கிறது. ஆனால் அந்தச் சம்பளத்தை அவர்களுக்கு நேரடியாக பட்டுவாடா செய்ய ஏற்பாடுகள் செய்யாத காரணத்தினால், தலைமையாசிரியர் மூலமாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யாத காரணத்தால் பல்வேறு பள்ளிகளில் நிர்வாகிகளாக இருப்பவர்கள் பணத்தை சுரண்டுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. ஆகவே நேரடியாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அடுத்து பல தனியார் பள்ளிகளில் போதுமான லேபரட்டரி வசதி இல்லாத காரணத்தால் பிராக்டிக்கல் வகுப்புகள் ஒழுங்காக நடைபெறாமல் மாணவர்கள் தோல்வியடைகிற நிலைமை இருக்கிறது. ஆகவே தனியார் பள்ளிகளில் போதுமான லேபரட்டரி வசதி இருக்கிறதா என்பதை ஒரு கமிட்டி மூலம் ஆய்வுசெய்து சீப் எஜுகேஷனல் ஆபீசர் மூலம் அந்த ரிப்போர்ட்டை வாங்கி, எந்தெந்தப் பள்ளிகளில் வசதியில்லை என்பதைப் பார்த்து அந்தப் பள்ளிகளில் அந்தப் பாடங்களை அனுமதிக்காமல் இருக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சட்டக் கல்லூரி மாணவர்கள் இன்றைக்கு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதிய புத்தகங்கள் கிடைக்காத காரணத்தாலும், தமிழில் உள்ள புத்தகங்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப் பெற்றவை இப்போது கிடைப்பதற்கு வழி செய்யப்படவில்லை என்பதாலும், அந்தப் புத்தகங்களை வெளியிடுவதற்கு சர்க்கார் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதாலும், அவர்கள இதுபோன்ற கோரிக்கைகளை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஜூன் மாதம் தேர்வு நடைபெறுவதாக இருக்கிறது. ஜூலை மாதத்தில் நடைபெற வேண்டுமென்று கோரிக்கையை வலியுறுத்தி, கல்வி அமைச்சர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். கல்வி அமைச்சர் அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். இப்போது ஜூலை மாதத்தில் தேர்வு வைப்பதற்கு பதிலாக ஜூன் மாதத்தில் தேர்வு வைத்திருப்பதாக சொல்லி இருக்கிறார்கள். இப்படி பல கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள், ஆகவே அவர்களுக்கு புத்தகங்கள் கிடைக்க வழி செய்ய வேண்டும். அதேபோல தமிழில் புத்தகங்கள் வெளியிடுவதற்கு அரசு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். தேர்வை ஜூலை மாதத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரண்டாவது ஆண்டு படிக்கிற மாணவர்கள் ஒரு பாடத்தில் தோல்வியுற்றாலும் கூட மூன்றாம் ஆண்டிற்கு செல்வதற்கு அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 'அடல்ட் எஜுகேஷன்' குறித்து ஒரு முக்கியமான பிரச்னையை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன், 'அடல்ட் எஜுகேஷனில்' மேற்பார்வையாளர்கள் எல்லாம் எம்.ஏ., பி.எட்., பி.ஏ., பி.எட். என்று படித்திருக்கிறார்கள். இருந்தும் அவர்கள் தற்காலிக வேலையில் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு கீழே இருக்கிற எழுத்தர்கள், தட்டெழுத்தர்கள், கடைநிலை ஊழியர்கள் அனைவரும் நிரந்தரப் பணியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஜாப் செக்யூரிட்டி இருக்கிறது. ஆனால் இந்த மேற்பார்வையாளர்களுக்கு ஜாப் செக்யூரிட்டி இல்லை. அவர்களுக்கு ஒருங்கிணைந்த சம்பளமாக 500 ரூபாயும், ஈட்டுப்படியாக 600 ரூபாயும்

மட்டுமே வழங்கப்படுகிறது. வேறு மாநிலங்களை எடுத்துக் கொண்டால், ஆந்திர மாநிலத்தில் இவர்களுக்கு ரூபாய் 550—1,200—60 என்ற விதத்திலும், உத்தர பிரதேசத்தில் ரூபாய் 325—575—60 என்ற விதத்திலும், கர்நாடக மாநிலத்தில் ரூபாய் 750—1,500—60 என்ற விதத்திலும் இருக்கின்றன. எனவே இந்த மேற்பார்வையாளர்களை நிரந்தரம் ஆக்கினால் தான் அவர்களுடைய பணி முழுமையான பயனுள்ளதாக அமையும் என்பதைக் கோடிட்டு காட்டி, இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெற அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டு, நல்ல ஊதிய நிலை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

இன்றைக்கு பல்வேறு கல்லூரிகளையும் பள்ளிகளையும் அரசு ஏற்று நடத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இலட்சுமிபுரம் கலை அறிவியல் கல்லூரியை இப்போது அரசு மேற்பார்வையில் நடத்தி வருகிறார்கள். அரசு அந்தக் கல்லூரியைத் தற்காலிகமாக மேற்கொண்டிருந்தாலும் அந்தக் கல்லூரி நிரந்தரமாக அரசுக் கல்லூரியாக ஆக்கப்படுவதுதான் அங்கே இருக்கிற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக இருக்கும், அந்தக் கல்லூரியை தனியாரிடமிருந்து அரசு நேரடியாக எடுத்து நடத்தினால்தான் பல தகுதிகளைப் பெற்ற கல்லூரியாக, பல புதிய பாடங்களைக் கொண்ட கல்லூரியாக இயங்க ஏதுவாக இருக்கும். இல்லை என்றால் அங்கே கல்லூரிக் கட்டிடமும் வராது, போதுமான வசதிகளும் செய்து கொடுக்கமாட்டார்கள்; நல்ல உயர்தரமான கல்வியும் போதிக்கப்பட வசதி ஏற்படாது. அதனால் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே அந்தக் கல்லூரி இயங்கும். அந்தக் கல்லூரியின் பங்குதாரர்களில் பாதி பேர்களுக்குமேல் அரசே அந்தக் கல்லூரியை ஏற்று நடத்த மனு அனுப்பியிருக்கிறார்கள். எனவே அந்தக் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போன்று, பல்வேறு பள்ளிகள் இன்றைக்கு கூரை இல்லாமல் எந்தவிதமான வளர்ச்சியும் இல்லாமல் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழக்காட்டுவிளை என்ற இடத்திலுள்ள பாடசாலை 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கட்டிடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அன்றைக்குக் கட்டப்பட்ட கட்டிடத்தில்தான் இன்றைக்கும் இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பப் பாடசாலையாக இருந்தது இன்றைக்கும் ஆரம்பப் பாடசாலையாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது. 50 ஆண்டு காலமாக அது ஆரம்பப் பாடசாலையாகவே நடந்துகொண்டிருப்பதால் அந்த சுற்று வட்டாரத்தில் கல்வி பெற்றோர் பர்செண்டேஜ் மிகவும் குறை



வாக இருக்கிறது. நகரசபை பள்ளியாக இருந்தாலும் வளர்ச்சி இல்லாததால் இந்நமுறை அவர்கள் தேர்தலின்போது வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் பகிஷ்காரம் செய்தார்கள். இருக்கின்ற சூழ்நிலைகளை அனுசரித்து, அந்தப் பகுதியிலே புதிய பாடசாலை அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவில் நகரில் இருக்கிற மீனாட்சிபுரம் பாடசாலை அங்கே இருக்கிற தாலுகா அலுவலக காம்பவுண்டிற்குள் செயல்படுகிறது. அந்த தாலுகா அலுவலகத்திற்கு வேறு பகுதியில் கட்டிடம் கட்டி, அந்தப் பகுதிக்கு மாற்றிவிட்டு அங்கே பெரிய கட்டிடத்தை எழுப்பி, மாணவர்களுக்கு போதுமான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடசேரி பகுதியில் ஒரு பாடசாலையை மேல்நிலைப் பாடசாலையாக உயர்த்த பொதுமக்கள் தங்களுடைய பங்குத் தொகையை செலுத்தி, அதற்கான இடத்தையும் இனாமாகக் கொடுக்க முன்வந்தும் கடந்த 2, 3 ஆண்டுகளாக அதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முயற்சி மேற்கொள்ளவில்லை. அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் எல்லாம் வியாபார நிலையங்களாக மாறாமல் செய்வதற்கும் தனியார் பள்ளிகள் தங்கள் இஷ்டம்போல் ஆசிரியர்களை அடிமைகளாக நடத்தாமல் இருப்பதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, என் உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1985—86 ஆம் ஆண்டு கல்வி மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக இருப்பது கல்வியாகும். அந்தக் கல்வித் துறைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எப்படி முக்கியத்துவம் அளித்து, செயல்படுகிறது என்பது இந்த மானியத்தின் மூலம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. 1985—86 ஆம் ஆண்டில் தமிழக வரவு—செலவு கணக்கில் மொத்தச் செலவான 2,315 கோடி ரூபாயில் கல்விக்காக மட்டும் 468 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. செலவிடுகிற மொத்தத் தொகையில் 20 சதவீதத்திற்குமேல் கல்வி வளர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது. கல்வி மானியக் கோரிக்கையில் தொடக்கக் கல்வி உயர்நிலைப் பள்ளிக் கல்வி, மேல்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, வயது வந்தோர் கல்வி, தமிழ்

வளர்ச்சி-பண்பாட்டுக் கல்வி, விளையாட்டுத்துறை போன்ற பல்வேறு துறைகளின் செயல்பாடுகளும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. கல்வியில் எடுக்கப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகளைப் பற்றியும், தமிழக வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும் எடுக்கப்பட்டு இருக்கிற சிறப்புத் திட்டங்களையும் அதேபோல் கல்வி நிலையங்கள் தொழில் கூடங்களாக மாற்றவேண்டும் என்ற சீறிய எண்ணத்தின் அடிப்படையிலே எடுத்துச்சொல்லப்பட்டு இருக்கிற பல நல்ல கருத்துக்கள் இந்த மானியக் கோரிக்கையில் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. நான் இந்த கல்வி மான்யத்திலே ஒருசில பிரச்சனைகளை எடுத்துச் சொல்வதற்கு முன்பாக, ஒரு கருத்தை நன் வலியுறுத்த விரும்புகிறேன். கல்வி பற்றிய அதிகாரம் பொதுப் பட்டியலில் வைத்திருப்பதை மாநில அரசுகளுக்கு மாற்றவேண்டும் என்பதையும், அப்படி பொதுப் பட்டியலில் இருப்பது, மாநிலங்களுக்கு சுமையாகவும், தடையாகவும் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாநிலங்களுடைய நியாயமான பிரச்சனை, அதனுடைய கல்வி வளர்ச்சியும், கல்வியின் தரம் உயர்வதற்கும் தன்னிச்சையாக சுதந்திர உரிமைகளைப் பெறவும் தங்களுடைய தாய் மொழியைப் பேணிக்காக்கின்ற உரிமையைத் தரவேண்டும் என்றால் கல்வி பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றித் தீரவேண்டும். அதற்கு இந்திய அரசு திருத்தத்தையும் வழிவகைகளையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தமிழ் வளர்ச்சியிலே தமிழைக் காப்பாற்றுவதிலே தனி அக்கறை எடுத்து கொண்டு இருக்கிற புரட்சித் தலைவருடைய அரசு பல புதிய பல்கலைக் கழகங்களை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறது. புரட்சித் தலைவருடைய அரசு பேரறிஞர் அண்ணாவின் பாதையில் இருந்து சிறிதும் நழுவாமல் எதற்கும் அஞ்சாமல் இன்றைக்கு இருமொழிக் கல்விக் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.

அதுபோல் தொடக்கப் பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்து இலவச சீருடை மற்றும் இலவச பாடப் புத்தகங்கள் போன்ற சலுகைகளை எல்லாம் அளித்து. இந்த நாட்டு மாணவர்களை நல்ல முறையில் உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில், பெற்றோர்களின் சுமையைக் குறைக்கின்ற தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அரசு. பள்ளிக் கல்வி வாழ்க்கை முறையோடு ஒன்றிய கல்வியாக மாற்றுவதற்கு ஒரு சிறப்பான புரட்சிகரமான திட்டத்தை இன்றைக்கு புரட்சித் தலைவர் அரசு செயல்படுத்திக்கொண்டு வருகிறது. பள்ளிக் கல்வி ஏட்டுக் கல்வியோடு நிற்காமல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் இருக்கவேண்டும் என்று இந்த அரசு சிறப்பாக திட்டங்களைத் தீட்டி, இன்றைக்கு செயல்படுத்திக்கொண்டு வருகிறது.



அதேபோல் இன்றைக்கு தொழில் நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில், அதனுடைய நிலையங்களில் மாணவர்கள் அதிக அளவிலே சேருவதற்கு முன்வருகின்ற காரணத்தால், அரசினுடைய நிதி ஆதாரம் பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தால், தனியார்கள் இன்றைக்கு அதை ஆரம்பிப்பதற்கு அரசு அனுமதி அளித்து வருகிறது. எனவே தனியார் நிறுவனங்கள் அதை வியாபார ஸ்தலமாக மாற்றிவிடாமல், சமுதாயப் பணிகளை ஆற்றுவதற்கு அவைகள் பயன்படவேண்டும் என்ற அடிப்படையில், அரசாங்கம் அவைகளைக் கண்காணித்து செயல்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அவைகள் நடைபெறுகின்றனவா என்பதை அரசு கவனிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கல்வியினுடைய தரம் உயரவேண்டும் என்று நாம் எவ்வளவோ முயற்சிகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனாலும் அதிலே நாம் முழு வளர்ச்சியைப் பெறுவதற்கு சில பல மாற்றங்களை ஏற்படுத்தியாகவேண்டும். இந்திய ஆட்சி முறை, போலீஸ் துறை ஆகிய படிப்புகளில் சிறந்த மாணவர்களை நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகம் முன்பு உருவாக்கி, நம்முடைய தமிழகத்திற்கு ஒரு பெருமையைச் சேர்த்துக் கொண்டு வந்தது. ஆனால் இன்றைக்கு பஞ்சாப் பல்கலைக்கழகம் அந்த இடத்தைப் பிடித்து இருக்கிறது. இதற்குக் காரணம் நாம் பழைய கல்வி முறைகளை, பழைய தேர்வு முறைகளைக் கடைப்பிடிப்பதுதான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மீண்டும் நாம் முதலிடம் பெறவேண்டும் என்றால், பழைய திட்டங்களையும், பழைய தேர்வு முறைகளையும் மாற்றி, புதிய வாழ்க்கைக்கு ஏற்ற பாடத் திட்டங்களையும், தேர்வு முறைகளையும் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் தரமான கல்வியை நாம் தர முடியும்.

அடுத்து, ஆரம்பக் கல்வியிலிருந்து கல்லூரி வரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசிரியர்களை நியமனம் செய்யவேண்டும். அப்போதுதான் தரமான கல்வியைத் தர முடியும். இந்த ஆண்டுகூட ஏறத்தாழ 825 புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. இது மிகக் குறைவாக இருக்கிறது. புரட்சித் தலைவருடைய அரசு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பிறகு மாணவர்களுடைய வருகை அதிகமாகி இருக்கிற காரணத்தால், ஆசிரியர்களின் எண்ணிக்கையையும், அதிகப்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தமிழகத்திலே ஆசிரியர்கள் பயிற்சி முடித்து இடைநிலை ஆசிரியர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகளில் பழைய முறைப்படியே அதிக அளவிலே மாணவர்களைச் சேர்க்கவேண்டும். இடைநிலை

ஆசிரியர்கள் பணியிடங்கள் இன்றைக்கு காலியாக இருக்கிறது. தமிழகத்திலே அப் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர்கள் இல்லை என்று சொல்கிற காரணத்தால், தமிழகத்திலே இருக்கிற பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் இன்றைக்கு பல பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே இடைநிலை ஆசிரியர்கள் பணியிடங்களில் அவர்களை நியமனம் செய்யலாம். இடைநிலை ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற சம்பள விகிதத்தைப் பெற்று, அந்தப் பணியைச் செய்வதற்கு இன்றைக்குப் பல B. T. ஆசிரியர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்தால், வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கும், ஆசிரியர்கள் இல்லை என்ற குறையும் நீக்க முடியும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

அதே போல கர்நாடக மாநிலத்திலே பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு தமிழகத்திலே வேலை கொடுக்க அரசு முடிவெடுத்திருப்பதை விரைவாகச் செயல்படுத்த வேண்டும். லோயர் கிரேடு பி. ஈ. டி. படித்தவர்கள் இருக்கும் போ , ஹையர் கிரேடு பி. ஈ. டி. படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை வழங்குவதாக சொல்லப்படுகிறது. இதனால் லோயர் கிரேடு பி. ஈ. டி. படித்தவர்கள் பயிற்சி முடிவடைந்தும் வேலை வாய்ப்பை இழக்கிற அளவிலே இருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தேர்வு ஆணைக் குழுவினால் புறக்கணிப்பட்ட பள்ளிகளில் உள்ள 1100 பட்டதாரி ஆசிரியர்கள் 10(எ) (1) சர்வீஸ் என்ற வகையில் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு பரிகாரம் காண அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு ஆணை எண். 996ன் படி தேர்வு ஆணை கழகத்தின் கீழ் வராத, 12 ஆயிரம் பேர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவிகளையும். உதவியாளர்கள் பதவிகளையும் மற்றும் தட்டச்சர் பதவிகளையும், புரட்சித் தலைவர் அவர்கள் நிரந்தரமாக்கியிருக்கிறார்கள், ஒரு தனி ஆணையின் மூலமாக, அதைப் போல இந்த 1100 பட்டதாரி ஆசிரியர்களையும் நிரந்தரம் செய்கிற வகையில் அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 35 வயதிற்கு அப்பாற்பட்டு அவர்கள் வேறு எந்த வேலைக்கும் போக முடியாத நிலையில், உள்ள அவர்களுக்கு அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கறேன். அதே போல தமிழ்நாடு ஆவண காப்பக நூலகம் இருக்கிறது. அந்த நூலகத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி 1979 ஆம் ஆண்டு 15 நூலக இயல் பட்டதாரிகளை



அரசு தேர்வாணைக் குழுவின்மூலமாக பணியில் அமர்த்தியது 6 ஆண்டு காலத்திற்குப் பிறகு அவர்களை எந்த வித முன்னறிவிப்பும் இல்லாது இன்று பணி நீக்கம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் பணி உத்திரவாதம் அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டம் வந்த பிறகு பள்ளித் துணை ஆய்வர் அலுவலகத்தில் வேலைப் பளு அதிகரித்திருக்கிற காரணத்தால், அங்கே ஒரு இளநிலை உதவியாளரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல ஆங்கிலேயர் காலத்திலிருந்து பள்ளித் துணை ஆய்வர் அலுவலகத்தில் இருக்கும் ஒரே ஒரு இளநிலை உதவியாளர் தான் தபால் எடுத்துக் கொண்டும் வருகிறார்கள். அதோடு அங்கே தட்டச்சு இயந்திரமும் இல்லை, ஆகவே தட்டச்சு இயந்திரம் ஒன்றை அங்கே வாங்கிக் கொடுப்பதோடு ஒரு தட்டச்சாளரை நியமனம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1-6-1981 முதல் ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த கல்வித் துறை பிரிக்கப்பட்டு, ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டதற்குப் பிறகு ஊராட்சிப் பள்ளிகளில், பல வகைகளிலும் கல்விப் பணி நிறைவு பெறாமல் இருக்கிறது. உதாரணமாக பள்ளிக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்று சொன்னால், அதன் பொறுப்பு ஊராட்சி மன்றங்களுக்கு இருந்தது. ஆனால் தற்போது அந்த ஊராட்சி மன்றங்களில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால், அவைகளை முழுமையாகச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அத்தோடு 1-6-1981 முதல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் தளவாட சாமான்கள் போதிய அளவு வழங்கப்படாமலும் இருக்கின்றன. அங்கு தேவைப்படுகின்ற மேசை, நாற்காலி பெஞ்ச் உட்காரும் பலகைகள் மற்றும் கரும்பலகைகள் போன்றவைகள் இதுவரையில் வழங்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே அதில் அரசு சற்று தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அது போல தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்களுக்கும் விடுப்புச் சலுகை மற்றும் ஓய்வு பெற்றால் ரூபாய் 5 ஆயிரம் பெறுவது போன்ற சலுகைகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தொடக்கப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்களைக் கண்காணிக்கிற பொறுப்பு உதவி கல்வி அலுவலருக்கும், பள்ளி துணை ஆய்வாளருக்கும் இருக்கிறது. ஆனால் ஒரு ஊராட்சி ஒன்றியம் என்று எடுத்துக் கொண்டால் அதில் பல ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அத்தனை பள்ளிகளுக்கும் போய் அத்தனை ஆசிரியர்களையும் கண்காணிப்பதற்கு அவர்களுக்கு எந்தவித வாகன வசதியும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே பள்ளிகள் சிறப்பாக நடைபெறுகிறதா?

ஆசிரியர்கள் தங்களுடைய பணிகளைச் சரிவரச் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க உதவி கல்வி அலுவலர் அவர்களுக்கும் பள்ளித் துணை ஆய்வாளர் அவர்களுக்கும் வாகன வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு என்னுடைய தொகுதியின் கல்வி மாவட்டமாக இருக்கக் கூடிய திருப்பத்தூர் கல்வி மாவட்டத்தில் இருக்கும் டி. இ. ஓ. ஆபீஸ் வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கான நிலம் கூட ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு அந்த இடத்திலேயே ஒரு நிரந்தரமான கட்டிடத்தைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு தொடக்கப் பள்ளி கட்டிடங்களைப் பொறுத்தவரை புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தை எடுத்துச் செயலாற்றியதன் காரணமாக தமிழகம் முழுவதும் உள்ள பகுதிகளில் 6 ஆயிரம் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பல இடங்களில் கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. இந்த ஆண்டு கூட அதற்கு ஒரு கோடி ரூபாயை அரசு ஒதுக்கியிருக்கிறது. அந்தத் தொகையை இன்னும் அதிகப்படுத்தி பல உயர்நிலைப் பள்ளிக்கூடங்களை கட்டுவதற்கு அரசு முன் வரவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே கூட ஏறக்குறைய 10 உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் இன்னும் பழைய நிலைமையிலே இருக்கின்றன. அவைகளை கட்டுவதற்கு அரசு ஆவன செய்து வேண்டும். புதிய உயர்நிலைப் பள்ளி துவக்குவதில் ஒரு சில சிக்கல்கள் இருக்கின்றன. புரட்சித் தலைவர் அரசு பொறுப்பு ஏற்ற பிறகு கேட்கின்ற இடங்களில் எல்லாம் புதிய பள்ளிகளை திறப்பதற்கும், உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கும் உத்திரவு இட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் கோரிக்கைகள் அதிகமாக இருப்பதால் அனைத்துப் பகுதிகளுக்கும் புதிய உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் தரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டு 50 பள்ளிகள் தரப்பட்டன. சென்ற ஆண்டு 100 பள்ளிகள் தரப்பட்டன. இந்த ஆண்டு 200 புதிய பள்ளிகளைத் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலும் புதிய பள்ளிகளைத் தருகின்ற பிரச்சனை பெரிதாக வளர்ந்து இருக்கிறது. என்னுடைய தொகுதியில் 9 கிராமங்கள் பணத்தை கட்டி விட்டு அத்தகைய நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட மக்களுக்கு அவர்களுடைய விருப்பத்தை நிறைவு செய்கின்ற வகையில் அதிகமாக உயர்நிலைப்பள்ளி தருவதன் மூலமாக அவர்களுடைய தேவையை அரசு நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி பிற்பட்ட தொகுதி. அதிலே ஒரு புதிய பாலிடெக்னிக்கை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியத்தை ஆதரித்து, சிறப்பாக இந்த மானியத்தின் மூலம் மேலும் கல்வி வளர்ச்சி அடையும் என்பதைக் கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.



திரு எஸ். சிவராமன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1985–86 ஆம் ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின் மீது நான் பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய கோரிக்கையை வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் பெரும் தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது 300 ஜனத்தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பாடசாலையை நிறுவ வேண்டும் என்று சொல்லி ஆரம்பித்து வைத்தார்கள். பெரும் தலைவர் காமராஜர் அவர்களை கல்விக் கண் கொடுத்த காமராஜர் என்று பொது மக்கள் பாராட்டினார்கள். காமராஜருடைய காலம் ஒரு பொற்காலம் என்றும் கருதப்பட்டது. ஆகவே அதை பின்பற்றி ஒவ்வொரு ஆண்டும் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையெல்லாம் ஆண்டுக்காண்டு கூடுதலாகி வருகிறதே ஒழிய குறைவில்லை. அதற்காக இந்த அரசாங்கத்தை பாராட்டுகிறேன். காரணம் ஒரு தனி மனிதனுக்கு அவன் யாராக இருந்தாலும் கல்விதான் மிக முக்கியமான செல்வம். எத்தனைச் செல்வங்கள் இருந்தாலும் கல்விச் செல்வம் இல்லை என்றால் யாரும் அவனை மதிக்க மாட்டார்கள். அந்த அடிப்படையில் இன்றைய தினம் பட்ஜெட் தொகையிலே பெரும்பாலான பகுதியை கல்விக்காக செலவிடுகின்றோம் சென்ற ஆண்டு கல்வியின் ஒதுக்கீட்டுத் தொகையைவிட இந்த ஆண்டு ஒதுக்கீட்டுத் தொகை சற்று கூடுதலாக இருந்தாலும், அது போதுமானதாக இல்லை. காரணம் இன்று இருக்கக்கூடிய விலைவாசிக்கு ஏற்பவும் பள்ளிகளுடைய நடைமுறைக்கு ஏற்பவும் பழைய கட்டிடங்களை புதுப்பிக்கவும் கட்டிடங்கள் இல்லாத பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கும் போதுமான தொகையாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல இன்றையதினம் பல ஆசிரியர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்வதைத் தடுக்க மறியல் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல சங்கடங்கள் அரசாங்கத்திற்கு இருக்கின்றன. இன்றையதினம் கிராமப் பள்ளிகள் எல்லாம் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை. இதற்கு காரணம் என்ன என்று எனக்கு விளங்கவில்லை. எனவே கல்வியிலே பல மாற்றங்களை கொண்டு வந்தாலும் நிர்வாகச் சீர்கேடு இருந்து கொண்டிருக்கிறது.

இன்றைய தினம் ஆசிரியர்களை மாணவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாதது தான் என்வே இண்டர்வியூ வைத்தாலும் ஆசிரியர்கள் வருவதில்லை எனவே இவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ர்நாடக மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றபல மாணவர்கள் வேலை இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அது பற்றி கொள்கை விளக்க குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு சில மாணவர்களுக்கு நன்மை கிடைத்தாலும் கூட மற்றும் சில மாணவர்களுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-10)

17—?—84 என நினைக்கிறேன். அவர்கள் போட்ட உத்திரவுப் படி யார் யார் எந்த வேலையில் இருந்தாலும் அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு அவர்களுக்கு வேலையில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படாது என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. வேண்டுமானால் அரசு ஒன்றைச் செய்யலாம். ஏற்கெனவே படித்துவிட்ட மாணவர்களுக்கு தின்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பைக்கொடுத்துவிட்டுஇனிமேல் படிக்கின்ற மாணவர்களுக்கு வரைமுறைக் குட்பட்ட நிலைமையைக் கொண்டு வரவேண்டும் சாாணம் ஏழை எளிய ஆசிரியர்களின் பிள்ளைகள் தான்படித்து விட்டு வேலை வாய்ப்பு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு வரயறையை வைத்துக் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே வேலை கிடைக்காமல் இருக்கிற அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்லலே படித்துவிட்டு வேலையில்லாமல் இருந்த பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது அதைப்போன்று இந்த அரசும் ஒரு வேலை வாய்ப்பிற்றி திட்டத்தைக் கொண்டு வந்து படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற பட்டதாரிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழ்ப் படித்தவர்கள் வேலையில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ், தமிழ் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம், நாம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் கல்லூரியில் தமிழ் படித்த ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை, அரசு அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





பாரதியார் களவு கண்டார், இந்திய மக்கள் அனைவரும் நல்ல முறையில் வாழவேண்டுமென்று நினைத்தார்கள். பாரதியார் பெயரில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு கோவை, ஈரோடு, நீலகிரி ஆகிய 3 மாவட்டங்கள் அதனுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. நீலகிரியிலே உள்ள கல்லூரியிலே எம்,எஸ்ஸி. படிக்கக்கூடிய மாணவர்களுக்கு செமஸ்டர் சிஸ்டம் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே எம்.எஸ்ஸியில் எலக்ட்ரானிக் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஆசிரியப் பெருமக்கள் சொல்லிக் கொடுப்பதில்லை அந்த மாணவர்களாகவே படித்துக்கொள்ள வேண்டிய அவலநிலை இருக்கிறது. இப்படி இருந்தால் எப்படி அவர்கள் முன்னேறமுடியும்? மற்றவர்கள் பாஸ் செய்தாலும் அவர்கள் பாஸ் செய்யமுடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதிலே அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தின் சார்பாக பொறியியல் கல்லூரிகளும், தொழிற்பயிற்சி கல்லூரிகளும் நாம் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறோம். பொறியியல் கல்லூரிகளிலே வசதி படைத்தவர்களுக்குத் தான் இடங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. வசதியில்லாத மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கின்றது. தனியார் துறையிலே பொறியியல் கல்லூரிகளும், தொழிற் பயிற்சி கல்லூரிகளும் வியாபார ரீதியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கல்விக்காக, கல்வியின் தரம் உயர்வதற்காக பொதுநலத்திற்குப் பாடுபடுவதாக இல்லை, பொறியியல் கல்லூரியிலே சேர்வதற்கு 50 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால் இடம் கிடைக்கிறது. பாலிடெக்னிக் என்று சொல்லக்கூடிய தொழிற்பயிற்சி கல்லூரிகளையும் வியாபார ஸ்தலமாகத்தான் விளங்கிக்கொண்டிருக்கிறது. எவ்வளவு மார்க் வாங்கினாலும்கூட 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் வரை கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து நிர்வாகம் நல்ல முறையிலே இயங்குவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும்.

இராமநாதபுரம், கோவை, திருச்சி போன்ற மாவட்டங்களிலே பாலிடெக்னிக்குகள் ஆரம்பித்து இருக்கிறார்கள். ஆனால் தென் ஆற்காடு மாவட்டம் மிக மிகப் பின்தங்கிய மாவட்டம். நேற்றைய தினம் சட்டமன்றத்திலே பேரவை நேரத்திலே அதிகமான அமைச்சர்கள் அந்த மாவட்டத்திற்கு இருக்கிறார்கள் என்று சொல்லியிருந்தாலும் மின்சாரத் துறை அமைச்சர் மின்சாரத்தைத்தான் கவனிக்கமுடியும், மற்ற துறைகளிலே தலையிட முடியாது, ஆகவே என்னுடைய தொகுதியான சின்னசேலத்திலே ஒரு கலைக் கல்லூரியும் ஒரு தொழிற் பயிற்சி கல்லூரியும் ஏற்படுத்த வேண்டும். கல்ராயன் மலைப்பகுதியில் 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. 25 ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். அங்கே இருக்கிற மக்கள் பின்தங்கிய நிலைமையில் இருப்பதால் அங்கே ஒரு கலைக் கல்லூரியையும் தொழிற்பயிற்சிக் கல்லூரியையும் ஏற்படுத்த வேண்டும்.

அது மட்டும் அல்ல, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் 1966—67 ஆகிய 2 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் தாகம் தீர்த்தாபுரம், பெரியசிறுவத்தூர் ஆகிய 2 இடங்களில் நல்ல கட்டிடங்கள் இல்லை. மாணவர்கள் படிப்பது மரத்தடியில். அதற்கு அரசு சார்பில் ஏதாவது எப்படியாவது ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டிக் கொடுக்கவேண்டும். நிரந்தரமான கட்டிடம் கட்டித்தரவேண்டும் என்று நான் சென்ற முறை 5 ஆண்டுகளாக பலமுறை கோரிக்கைகள் கொடுத்து இருந்தும் இதுவரை கவனிக்காத சூழ்நிலையில் இருக்கிறது. அதற்கு உடனடியாக கட்டிடங்கள் கட்டிக்கொடுப்பதற்கு வழி வகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சி, சின்னசேலம் ஆகிய மேல்நிலைப் பள்ளிகளில் 1,200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கிற காரணத்தால் அங்கே இட நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. அங்கே துணைக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் சத்துணவு என்ற பெயரிலே மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. அந்த சத்துணவைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கக்கூடிய தலைமை ஆசிரியர்கள் பொறுப்பாளர்கள் அதை சரியான முறையில் கண்காணிக்காத காரணத்தால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக கொடுக்கப்படுகின்ற அரிசியை பார்க்கும்போது கலர் நிறைந்த சிகப்பு நிற அரிசியாக இருக்கிறது. ஆகவே சற்று விவரம் தெரிந்த மாணவர்கள் அதை உண்பதற்கு இல்லாமல் இடையூறு ஏற்படுகின்ற காரணத்தால் தரமான அரிசியை கொடுத்து அவர்களுக்கு நல்லமுறையில் உடல் வலிமை தரக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சர்வீஸ் கமிஷன் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அது சாதாரண ஜூனியர் அசிஸ்டெண்டாக வேலையில் இருப்பவர்களுக்கு நிரந்தரமான ஒரு பதவியை கொடுத்து இருக்கிறது. புதியதாக சேர்ந்தவர்களுக்கும் நிரந்தரமான பணியை கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் வேலையில் இருப்பவர்களுக்கு சுமார் 1,200 பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கவில்லை, சர்வீஸ் கமிஷன். சர்வீஸ் கமிஷன் தேர்வு நடத்தினாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்காது திடீர் என்று வேறு சிலரை வேலைக்கு எடுக்க முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. வேலையில் ஏற்கனவே இருப்பவர்களை நிரந்தரமாக்கவில்லை. ஆகவே அவர்கள் வேலையில் இருந்து வீட்டிற்கு செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே அவற்றை எல்லாம் நீக்கிவிட்டு அங்கே ஏற்கனவே வேலையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிரந்தரமாக்கப் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எஞ்சியிள்ள இடங்களை மற்றவர்களுக்குக் கொடுக்கலாம். அதோடு தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தனியார்



கையில் சிக்கிக்கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு என்ன என்ன சலுகைகள் கொடுக்கப்படுகிறதோ அத்தனை சலுகைகளையும் தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு திண்டிவனம் தொகுதியில் கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரி இருக்கிறது. அங்கே எம்.எஸ்.சி. மேத்ஸ் புதிய பட்ட வகுப்பை துவக்கவேண்டும். அதோடு எண்டியூர், நெடிமொழியனூர் என்ற கிராமங்களில் ஐஸ்கூலுக்கு புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திண்டிவனம் தொகுதியில் செண்டூர் கிராமத்தில் உள்ள துவக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக ஆக்கவேண்டும் என்று அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்றையதினம் தமிழகத்தில் நாம் பல ஏட்டு சுவடிகளை வைத்துள்ளோம். பழங்கால சுவடுகளை எல்லாம் பாதுகாப்பதற்காக எபிகிராபிக் என்ற அலுவலகம் நம்முடைய கவனக்குறைவின் காரணமாக மைசூருக்கு போய்விட்டது. அங்கே வரலாற்றில் பண்டைக்காலத்திற்கு ஆதாரமாக இருக்கும் ஓலைச் சுவடிகளை எல்லாம் எடுத்துச் சென்று விட்டார்கள். அதனுடைய செப்பேடுகள், கல்வெட்டுக்கள், தட்டியங்கள் போன்ற தடயங்கள் இருக்கின்றன. இந்த அலுவலகத்தை தமிழகத்திற்கு திருப்பிக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அறிஞர்கள் குழுவை அமைத்து 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டைய சான்றுகளை எடுத்து புதுப்பித்தால் தமிழக வரலாற்றை மாற்றி எழுதலாம். அந்த அளவுக்கு இதை செய்தால் இதில் புகழ் சேர்க்கலாம் என்று நான் கருதுகிறேன்.

சென்னை பல்கலைக் கழகத்தினுடைய எம்.பில் தேர்வு எழுதி 9 மாதங்கள் ஆகிறது. இன்னும் தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை. இவ்வாறு தாமதிக்கப்படுவதால் அங்கே மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே உடனடியாக அந்த ரிசல்ட்டுகளை அறிவித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் ஆசிரிய பெருமக்களை எடுத்துக் கொண்டால் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் இருக்கக் கூடிய ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 12—20)

அப்படிப் பிரிக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பள்ளிகளின் நிலைமைகளைக் கவனித்து, அந்தப் பள்ளிகளைச் சீரமைக்கின்ற நிலையில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் இருந்தாலும், அந்த ஆசிரியர்களை நியமிக்கின்ற நிலையில் ஏ.ஈ.ஓ. என்று சொல்லக்கூடிய உதவி கல்வி அலுவலரை நியமித்திருக்கிறோம்; அவர்கள் தற்காலிகமாக இருப்பதாலும், உயர்நிலைப் பள்ளிகளிலேயிருந்து

வருகின்ற நிலை இருப்பதாலும் அந்த நிர்வாகம் சற்றுச் சீர் கேடான முறையில் இருக்கின்றன. எனவே, பள்ளித் துணை ஆய்வாளர். ஏ.ஈ.ஒ., உதவிக் கல்வி அலுவலர் ஆகியவர்களை ஒரேயிடத்தில் அமர்த்தி, கல்வி நிர்வாகத்தை சிறப்புடையதாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்குக் கடன் வழங்க வேண்டுமென்றாலும், இன்னும் மற்ற அரசாங்க சலுகைகளை அவர்கள் பெற வேண்டுமென்றாலும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் சென்று அனுமதி பெற வேண்டியிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இந்தக் குறையைப் போக்குகின்ற வகையில், உதவிக் கல்வி அலுவலரிடத்திலே அவர்கள் சென்று சி.ஈ.ஒ., அவர்களிடத்திலே சென்று ஆணை பெற வழிவகை செய்ய வேண்டும். நிதி வாங்க வேண்டுமென்றாலும், மேற்படிப்பு படிக்க வேண்டுமென்றாலும் ஊராட்சி ஒன்றிய அளவில் மாறுதல்பெற வேண்டுமென்றாலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஒன்றிய அளவில் மாறுதல் செய்வதைக் கட்டாயமாக அமல்படுத்த வேண்டும். காரணம் என்னவென்றால், தொகுதியில் சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்தில், மாணவர்கள் சரிவர வருவதில்லை என்று சொல்லப்படுகின்ற புகார்கள் ஒருபுறம் இருந்தாலும், ஆசிரியர்கள் சரியாகப் பள்ளிக்கு வருவதில்லை என்று மாணவர்கள் மனுக் கொடுக்கின்ற நிலைமையும் இருக்கிறது. இதுபோன்ற அவல நிலைமைகள் இருப்பதால், அந்த ஆசிரியர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கின்ற முறையில், அவர்களை ஒன்றிய அளவிலாவது மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிற அவர்கள் கல்வியின் தரத்தைக் குறைக்காமல் இருப்பதற்கான தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள பெருமங்கலம் என்ற கிராமத்தில் ஒரு உயர் நிலைப் பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற மொத்த மாணவர்கள் 40 பேர், ஆனால் இருக்கின்ற ஆசிரியர்களோ 12 பேர். அங்கே தலைமை ஆசிரியர் இல்லை. ஆனால் இரண்டு மூன்று ஆண்டுகளாக அங்கே எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவன் ஒரேவொரு மாணவன்தான். அந்த ஒரு மாணவனாவது தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறானா என்று கேட்டால் அவன் தேர்ச்சி பெறவில்லை. ஆகவே, எங்கேயோ ஒரு மூலையில் அது இருக்கின்ற காரணத்தாலோ என்னவோ, அதிகாரிகள் அந்தப் பள்ளிக்குச் செல்லுவது இல்லை. எனவே, அந்தப் பள்ளியிலே உள்ள ஆசிரியர்கள் மாணவர்களைப் பார்த்து, சாராயம் வாங்கிக்கொண்டு வரச் சொல்கிறார்கள், கோழிக் கறி வாங்கி வரச் சொல்கிறார்கள். இந்த அளவிற்கு நிலைமை இருக்கிறது. அதிகாரிகளிடம் சொல்லியும் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இந்த நேரத்தில் மேலதிகாரிகள் இருக்கிறார்கள், அமைச்சர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இந்தப் பள்ளியைச் சீர் செய்ய தக்க நடவடிக்லககளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு நல்கியமைக்காகத் தலைவரவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.



திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985—86ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்த அருமை இதய தெய்வம் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கல்வியமைச்சர் மாண்புமிகு அருமை அண்ணன் அரங்கநாயகம் அவர்களுக்கும் என் இதயம் கலந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்ளுகின்றேன்.

ஏறத்தாழ நிதிநிலையிலே 468 கோடி ரூபாயைக் கல்விக்காக அளித்ததற்காக மீண்டும் முதல்வரவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்கிக் கொள்கிறேன். ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்'' என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப கல்விப் பொறுப்பை அருமை அண்ணன் மாண்புமிகு கல்வியமைச்சரவர்களிடத்தில் ஒப்படைத்ததன் காரணமாக ஏறக்குறைய எட்டு ஆண்டுகளிலே கல்வி இலாக்காவிலே மாபெரும் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்த பெருமை அவர்களையே சாரும் என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஏறத்தாழ 384 கோடி ரூபாயைப் பள்ளிக் கல்விக்காகவே செலவழிக்க இந்த மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் காலத்திலேதான் மேல்நிலைக் கல்வி முதன்மையாக இந்த மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதன் காரணமாக இன்றைய காலக்கட்டத்திலே அனைத்துக் கிராமங்களிலேயும் இருக்கின்ற மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கல்வியைக் கல்லூரிகளிலே சென்று கற்காமல் மேல்நிலைப்பள்ளியிலேயே கல்வி கற்கின்ற நல்ல பாங்கான ஏற்பாட்டைச் செய்து கொடுத்த அரசு புரட்சித் தலைவர் அரசு என்பதை இங்கே மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் காலத்தில் பள்ளிகளில் அதிகமாக பல்வேறுவகைப் பட்ட மாணவர்களைச் சேர்ப்பதற்கொப்ப இன்றைக்குத் தமிழகத்தில் 38,488 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஒட்டுமொத்தமாகச் சேர்த்து எண்ணினால் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2.85 இலட்சம் பேர் என்று வருகின்றது. இவ்வளவு ஆசிரியர்கள் வேலை பார்க்கிறார்கள். மாணவ, மாணவியர் படிக்கின்ற விதத்தை எடுத்துப் பார்த்தால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்தவுடனே அவர்களுடைய விழுக்காடு அதிகரித்துக் கொண்டே சென்றிருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் மொத்தமாக அந்தப் பள்ளிகளில் படிக்கிற மாணவ, மாணவியரின் எண்ணிக்கையை எடுத்துக்கொண்டால் ஏறத்தாழ 105.4 இலட்சம் பேர் படித்துக்கொண்டிருக்கிறார்கள் சத்துணவு அளிப்பதோடு நின்றுவிடாமல் புரட்சித் தலைவர் அவர்களின் நல்லெண்ணத்திற்கேப்ப 15—9—85-லிருந்து அதாவது மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளிலிருந்து அந்த

மாணவ, மாணவியருக்கு இலவசமாகச் சீருடை வழங்குவதற்கும் அதேபோன்று இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்குவதற்கும் அரசு ஆணை பிறப்பித்து இருக்கின்றது என்பதைப் கேட்க மகிழ்ச்சியாக இருக்கின்றது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் கல்வியில் பல்வேறுவகைப்பட்ட மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை மீண்டும் நினைவுகூறி அவர்கள் காலத்தில்தான் ஏறத்தாழ 5, 6 இடங்களில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு உருவாக்கியிருப்பது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு என்பதை நான் மெத்தப்பணிவோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் பல்வேறிடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த மாநாட்டின் மூலம்தான் பள்ளிகளில் உள்ள ஒருசில குறைகளை நிவர்த்தி செய்யுமாறு அங்கேயுள்ள வசதி படைத்த பெருமக்களிடத்திலும், வியாபாரப் பெருமக்களிடத்திலும் கேட்டு பள்ளிக்கு வேண்டிய தளவாடச் சாமான்கள் போன்றவற்றை அங்கே ஆசிரியர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் நினைவு கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். கட்டிடங்களைக் கட்டுவதற்கு நிதிவசதி குறைவாக இருந்தாலும் அதை நிறைவு செய்வதற்கு பள்ளிச் சீரமைப்பு மாநாட்டின் மூலம் அங்கே இருக்கின்ற வணிகப் பெருமக்களிடத்திலிருந்தும், மற்றும் பெரியவர்களிடத்திலிருந்தும் உதவிகளைப் பெற்று அவர்களுடைய மூதாதையர்களின் பெயர்களை வேண்டுமானால் அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொள்ளவேண்டும் என்று ஆசிரியர் பெருமக்களிடத்திலே கேட்டுக் கொள்ள வேண்டும் என்று நான் மனதார விரும்பி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,

1-7-1981.லேயிருந்து ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகிற ஆசிரிய பெருமக்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியது இந்தத் தமிழக அரசு என்பதை நினைவு கூற விரும்புகிறேன். அங்கே பயில வருபவர்களுக்கு உதவவும், அங்குள்ள ஆசிரியர்கள் மற்றவர்கள் முறைப்படி நடப்பதற்கு உதவுகின்ற வகையில் உதவிக் கல்வி அலுவலர்களும், பள்ளித் துணை ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உதவிக் கல்வி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக் கல்வி ஆய்வாளர்கள் தனியாக ஒரு இடத்தில் வாடகைக் கட்டிடங்களில் அலுவலகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல் கல்வித்துறையின் மூலம் ஒரு சரகத்தை எடுத்துக்கொண்டு அங்கே இவர்கள் இருவருக்கும் உரிய கட்டிடங்களைக் கட்டித்தரவேண்டும் என்றும் இது நிச்சயமாக இந்த ஆண்டே கட்டித்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இருந்தால்தான் இருவரும் ஒருமித்து அங்கே இருந்து பள்ளிகளுக்குச் சென்று பார்வையிட்டு முறை தவறிய ஆசிரியர்கள் மீதும், மற்றவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



அதேபோன்று இந்த ஆண்டிலே ஒட்டுமொத்தமாக அனைத்து துறைகளையும் எடுத்துக்கொண்டால் அனைத்துப் பள்ளிகளையும் சேர்த்து 825 ஆசிரியர்களை நியமிப்பது குறித்து மானியக் கோரிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதை விட அதிகமான அளவில் ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். கூடுதலாக மாணவர்களுடைய விழுக்காடு பள்ளிக்கூடங்களில் வருகின்ற காரணத்தால் ஆசிரியர்களுடைய நியமனம் அதிகமாக இருக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்றுதான் ஏறத்தாழ 4,140 குழந்தைகள் காப்பகங்களில் இளஞ்சிறார் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இங்கே குறிப்பிட்டு சொல்லி இருக்கிறார்கள். அதை மேலும் விரிவாக்கி 1[illegible],000 காப்பகங்களில் இளஞ்சிறார் பள்ளிகளை ஆரம்பிக்க இருப்பதாக இங்கே மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாணவர்கள் டிராப் அவுட் என்பதைப் பொறுத்தவரையில் முன்பிருந்த விழுக்காடு 40 ஆகும். ஆனால் முதல்வர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை ஆரம்பித்தவுடன் அந்த விழுக்காடு 26-ஆகக் குறைந்துள்ளது. மேலும் இந்தத் திட்டம் விரிவாக்கப் படும்போதும், இலவசச் சீருடை, பாடப்புத்தகங்கள் போன்றவற்றைக் கொடுக்கும்போது அந்த விழுக்காடு நிச்சயமாகக் குறையும் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அவர்கள் வாழ்க்கைக்காக முதலமைச்சர் கல்வித் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். அதையே மூல ஆதாரமாக வைத்து, மாண்புமிகு இந்திய பாரதப் பிரதமர் ராஜீவ் அவர்களும் அங்கே வாழ்க்கைக்கான கல்வித் திட்டத்தைதான் அறிமுகம் செய்ய வேண்டுமென்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வாழ்க்கையோடு இணைந்த கல்வியைக் கற்பிக்கும்போதுதான் பல பேர்கள் இன்றைய சூழ்நிலையில் பல கிராமங்களில் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் சுயமாக வேலை செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், அவர்கள் வாழ்க்கைக் கல்வியை எடுத்துப் படிக்கும்போதுதான், அந்தப் பகுதியிலே என்ன, என்ன, வேலைகளைச் செய்ய வேண்டுமோ அதை அவர்கள் கல்வியாக எடுத்துப் படித்தால்தான், வேலை வாய்ப்புகள் நன்கு இருக்கும். குறிப்பாக, சிவகாசி தொழில் நகரிலே, பல்வேறு வகைப்பட்ட தொழில்கள் இருக்கின்றன. அந்தப் பகுதிக்கான கல்வியை அவர்களுக்கு கற்றுக்கொடுத்ததால், அத்தனை வழிகளையும் அங்கே இருக்கிற தொழில் மையங்கள் உதவியோடு அந்தப் பணத்தை மூலதனமாகப்பெற்று, இந்தக் கல்வியை நல்லமுறையிலே கற்றதன் காரணமாக, அங்கு தொழிலிலே ஈடுபட்டு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்கிறார்கள் என்பதை

இந்த நேரத்திலே மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர்களுக்கென்றுதான் இன்றையதினம் வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டம் பள்ளிக் கல்வி வரையில் அனைத்து வட்டங்களிலும் தொழில் மற்றும் வேலை வாய்ப்போடு இணைந்ததாக ஆக்குகின்றோம். மாணவியர்களுக்குப் பள்ளிகளில் கற்றுத் தரப்படும் பாடங்கள் பிற்காலத்தில் அவர்களுக்குப் பொருத்தமாக வேலையில் சேருவதற்கு, சுயமாக தொழில் நடத்துவதற்கு, ஆற்றல்களை, வசதிகளை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான்.

(பிற்பகல் 12.30)

எங்கள் பகுதியிலே இருக்கிற தொழில் நிலையங்களிலே நிறைய பேர்கள் ஏழைகள், பாதியிலே தொடக்கக் கல்வியை விட்டுவிட்டு நேரடியாக தீப்பெட்டி அலுவலகங்களிலே வேலை செய்து வந்து விடுகிறார்கள். அதை மனதிலே எண்ணித்தான் தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு, இந்த நேரத்திலே முறைசாரா கல்வியையும் முதியோர் கல்வியையும் அறிமுகப்படுத்தி, ஏறத்தாழ 30 மையங்களிலே கடந்த ஆண்டிலே அறிவித்திருந்தார்கள். அது முழுமையாக வெற்றி பெற்றுள்ள இந்த நேரத்திலே, மேலும் 100 மையங்களிலே யூனிசெப் உதவியுடன் ஆரம்பிப்பதற்குத் தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஏக்கப் பெருமூச்சோடு நாம் விட்ட கல்வியை மீண்டும் கற்க முடியாதா என்று இளம் உள்ளங்களிலே துடிப்போடு எண்ணிக்கொண்டிருக்கிற நேரத்திலே இதய தெய்வம் முதல்வர் அவர்கள் 100 மையங்களிலே அந்த இளம் சிறார்கள் தொழிலைச் செய்துகொண்டு இந்தக் கல்வியையும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முதியோர் கல்வித் திட்டத்தின் மூலமும் முறைசாராக் கல்வித் திட்டத்தின்மூலமும் தமிழக அரசு அனைத்து மாநிலங்களையும் விட நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறது என்பதற்காக, ரூ. 25 இலட்சம் பரிசு மைய அரசு மூலம் இரண்டு முறை பெற்று இருக்கிறது என்பதை இங்கே மகிழ்ச்சிகரமான செய்தியாகத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடகத்திலே இடைநிலை ஆசிரியர்களாகக் கற்றவர்களுக்கு இங்கே சரியாக வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். அதற்காக அருமை அண்ணன் அவர்கள் சரியான ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதையும் நிச்சயமாக இந்த ஆண்டிலிருந்து நிறைவேற்றுவார்கள் என்பதற்காகத் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இறுதியாக, 73 பாலிடெக்னிக் தொழில் பயிலகங்களையும், 24 பொறியியல் கல்லூரிகளையும் தமிழக அரசு இந்த ஆண்டு அனுமதித்து, நல்லமுறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இங்கே பேசுகின்ற பொழுது, அதை வியாபாரஸ்தலமாக மாற்றிவிடக்கூடாது என்பதற்காக மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறுபட்ட கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், 50 விழுக்காடுகள் நல்ல மதிப்பெண்களை பெற்றவர்கள் அரசு மூலம் அந்தக் கல்லூரியில் சேருவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். 50 விழுக்காடுகள்தான் நிர்வாகத்தினர் மூலமாக, சுயமாக நிதி உதவி செய்திருக்கின்ற காரணத்தால், அதை நடத்துகின்ற காரணத்தால், தனியாகக் கட்டிடங்கள் கட்டுவதற்காகவும், எக்குவிப்மென்ட்ஸ் வாங்குவதற்காகவும் தான் அவர்கள் வசூல் செய்கிறார்கள். அவற்றை நல்லமுறையிலே நடத்துவதற்குத்தான் அரசு பல்வேறு முயற்சிகளைக் கையாண்டு கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே இருக்கிற திருத்தங்கல் மேல்நிலைப் பள்ளிக்குத் தனியாகக் கட்டிடமும், ஆலங்குலம் மேல்நிலைப் பள்ளிக்குத் தனியாகக் கட்டிடமும் கட்டித்தரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சி என்கிற குதிரை சீராக ஓடவேண்டுமானால் எதிர்க்கட்சி என்கிற கடிவாளம் இணையாக இயங்க வேண்டும். நாங்கள் சீரோடும், சிறப்போடும், செம்மையாக ஒரு எதிர்க்கட்சியாக திகழ்வோம் என்பதை இந்தநேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எந்தநேரத்திலும் சாடுகிற சில எதிர்க்கட்சிகளைப் போல குதிரை சாட்டையாக திகழ மாட்டோம் என்று இந்தநேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,

தலைவர் அவர்களே, தயவுசெய்து நாங்கள் பேசுகிற பேச்சுக்களை நீங்கள் கவனத்தோடு கேட்டு அதற்கு அமைச்சரவை ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாலாறும், தேனாறும் ஓடுமென்ற இந்தச் சட்டசபையில் பேசிவிட்டால், உடனே எனது தொகுதி மக்கள் எல்லாம் வாயை பிளந்து கொண்டிருப்பார்கள், சட்டமன்ற உறுப்பினர் பேசி விட்டாரே உடனே அமைச்சரவை நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும் என்று அவர்கள் நம்புகிறார்கள். எனவே அனைத்தையும் நிறைவேற்றவில்லை என்றாலும், உங்களால் முடிந்த அளவிற்கு எங்களுடைய பேச்சுக்களுக்கு முன்னுரிமை கொடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று நாவுக்கரசர் பாடுகிறார். எமனுக்குக் கூட பயப்பட மாட்டேன், எந்த மன்னனுக்கும் கீழே ஆளப்படுவன் அல்ல என்று கல்லைக் கட்டி கடலிலே போடுகிறபோது கூட நாவுக்கரசர் பாடுகிறார். அதேபோல நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் எமனைப் பார்த்து வென்று வந்தவர்கள். மூன்றாவது முறையாக இந்த அமைச்சரவையில் வெற்றி முகத்தோடு உட்கார்ந்திருக்கிறார்கள். மக்களின் செல்வாக்கை அவர்கள் பெற்று இருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை. பட்ஜெட்டைப் போடுகிறபோது மயங்கி, மயங்கி தயங்கி, தயங்கி அச்சப்பட்டு, அச்சப்பட்டு, கூச்சப்பட்டு, கூச்சப்பட்டு திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். நீங்கள் எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அது இங்கே நிறைவேற்றப் படும், ஏனென்றால், ''ஏற்போர் ஆமென்க, மறுப்போர் இல்லையென்க, மறுப்போரோ இல்லை. ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்'' என்கிற வாக்கியம் வெற்றிப்பெறுகிற வகையில் நீங்கள் போடுகிற திட்டங்கள் அனைத்துமே வெற்றி பெறும். எனவே நீங்கள் நல்ல திட்டங்களைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாலுக்கா தோறும் தொழில் மையங்கள், தாலுக்கா தோறும் தொழில் கல்விக் கூடங்கள் என்ற நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். அதற்கு நாங்கள் ஆதரவு தருகிறோம் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திட்டங்கள் என்பது பல ஆண்டுகள் பயன்தரும் தென்னங் கன்றுகளைப் போல இருக்க வேண்டுமே தவிர, காலையில் மலர்ந்து, மாலையில் வாடும் கனகாம்பரம் பூவைப் போல இருக்கக் கூடாது என்று நான் உங்களை வேண்டிக் கொள் கிறேன்.

> ''அன்னச் சத்திரம் ஆயிரம் கட்டல் ஆலயம் பதினா
> யிரம் நாட்டலை விடஆங்கொரு ஏழைக்கு எழுத்
> தறிவித்தல் காலச்சிறந்தது''

பெருமையுடையது, கீர்த்தி உடையது என்கிறது தமிழ் மொழி.

அரசு துறைகளில் வருமானமே இல்லாத துறைகள் இரண்டு என்றால் அது கல்வித் துறையும், மருத்துவத் துறையும் ஆகும். ஆகவே கல்வித் துறையும், மருத்துவத் துறையும் சிறந்து செயல்பட அதிக நிதியை ஒதுக்கி அவற்றை மேம்படுத்துவதற்காக, உள்ளத்தையும், உடலையும் செம்மைபடுத்துவதற்காக அதிக நிதி ஒதுக்கங்களைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதனால் அத்துறைகளை 'நோபிள் புரபஷன்' என்று கூட சொல்வார்கள். எனவே இந்த பட்ஜெட்டிலே 850 ஆசிரியர்களை நியமனம் செய்ய இருப்பதற்காகவும், லைப் ஒரியண்டட் எஜுகேஷன், வாழ்க்கையோடு ஒன்றியகல்வியைக் கொண்டு வர இருப்பதற்காகவும், ஒன்று முதல் எட்டு வரையில் இலவச சீருடை, புத்தகங்கள் வழங்க இருப்பதற்காகவும், முதியோர் கல்வியை சிறப்பாக செயல்படுத்தியதற்காகவும் இந்த அரசை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்



பொதுவாக கல்வியின் தரம் 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட இப்போது குறைந்திருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு அறியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய தொகுதியில் வடவாக்கம் என்ற கிராமத்தில் ஒரு ஆதிதிராவிட நலப் பள்ளி இருக்கிறது. அதிலே ஐந்து வகுப்புகள் இருக்கின்றன. அந்த ஊர் மக்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தப் பள்ளியின் மாணவ, மாணவிகளுக்கு 'அ', 'ஆ' கூட தெரியாமல் இருக்கிறார்கள். இதனை உடனே கவனித்து அந்த ஆசிரியர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த நிலை உருவவதே தவறு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து செப்டம்பர் 15 ஆம் நாள் அண்ணா பிறந்த நாளன்று சீருடை வழங்குவதாகவும், இலவச புத்தகங்களை வழங்குவதாகவும் இந்த அரசு அறிவித்திருக்கிறது. அப்படியென்றால் செப்டம்பர் 14-ஆம் நாள்வரையில் மாணவ, மாணவிகள் எல்லாம் நிர்வாணமாகவே பள்ளிகளுக்குச் செல்வதா? ஏழை பெற்றோர்களின் பளுவைக் குறைப்பதற்காகக் கொண்டு வந்தத் திட்டம். அந்த திட்டத்தை கல்வியைப் பொறுத்தவரையில் கல்வியாண்டின் துவக்கத்திலேயே கொண்டு வந்தால் அந்த மாணவர்களுக்கும், பள்ளிக்கும், கல்விக்கும் சிறந்தது. அண்ணா பிறந்த நாள் சிறந்த நாள் என்பதை நாங்கள் மனப்பூர்வமாக ஒப்பு கொள்கிறோம். ஆனால்..

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அண்ணா பிறந்த நாள் நல்ல நாள் என்று கருதி தான் கொண்டு வருகிறோம். நல்ல திட்டத்தை அன்றைக்கு ஆரம்பிப்பதிலே பெருமையோடு அந்தக் காரியத்தைச் செய்ய இருக்கிறோம். சீருடை என்பது அல்லாவுதீன் அற்புத விளக்கைப் போல நினைத்த உடனே வந்து விடக் கூடியதல்ல. கணக்கெடுக்க வேண்டும், அதற்கு துணியை தயாரிக்க வேண்டும், தைக்க வேண்டும் என்று பல நிலைகள் வருகின்றன. அத்தனையையும் தயாரிப்பதற்கு ஒரு கால நிர்ணயம் தேவைப்படுகிறது. இதையெல்லாம் உத்தேசித்து தான் அதைச் செய்ய இருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் ஒரு திட்டத்தைக் கொண்டு வருகிறபோது அந்தத் திட்டம் இல்லையென்றால் மக்கள் நிர்வாணமாக இருக்கிறார்கள் என்று கருதுகிற அளவிற்கு நாடு இல்லை. நாம் தரவில்லையென்றாலும், ஆடை அணிந்து கொண்டு அவர்கள் படிக்கத்தான் போகிறார்கள். ஆகவே உறுப்பினர் குறிப்பிட்டது ஒரு தவறான தகவலாக எனக்குத் தெரிகிறது. அப்படி மக்கள் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.40)

டாக்டர் ந. மாசிலாமணி: தலைவரவர்களே, இலவசப் புத்தகம் இலவச சீருடை போன்றவற்றை கல்வி ஆண்டின் தொடக்கத்தில் கொடுத்தால் நல்ல பயனுடையதாக இருக்கும் என்பதால் இந்தக் கருத்தைச் சொன்னேன்.

1977-78 முதல் 1984-85 வரையில் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்ட 22 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1985-86-க்கு ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல 30-9-1984 நிலவரப்படி, கல்வி கற்கும் மாணவர்கள் 1 முதல் 5 வகுப்பு வரையிலுள்ள மாணவர்கள் 70.44 இலட்சம். இது ஒரு வகுப்புக்கு 14 இலட்சம் என்ற அளவுக்கு வருகிறது, அதேநேரத்தில் 11, 12-வது வகுப்புகளில் படிக்கும் மாணவர்க்ள் 3.31 இலட்சம். இது ஒரு வகுப்புக்கு 1.5 இலட்சமாகும், அதாவது ஒன்றாவது வகுப்பில் 14 இலட்சம் பேர் படித்தால் 12-வது வகுப்புக்கு வரும்போது 1.5 இலட்சம் என்று அளவுக்கு குறைந்துவிடுகிறது. இதற்கு என்ன காரணம் இந்த அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கை குறையாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது? படிக்கின்ற மாணவர்கள் அனைவரும் இல்லாவிட்டாலும் அவர்களில் 50 சதவீதத்திற்கும் மேலே வந்து படிக்கின்ற அளவுக்கு தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல செக்ஸ் எஜுகேஷன் என்று சொல்லப்படுகிற பாலுணர்வுக் கல்வியை அரசு கொண்டுவர வேண்டும்.

முதியோர் கல்வியைப் பொறுத்தமட்டில் 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 5.85 இலட்சம் பேர் படித்திருக்கிறார்கள். அவர்களில் பெண்கள் மட்டும் 5.02 இலட்சம் பேர் படித்திருக்கிறார்கள் என்று சொன்னால் ஆண்கள் 0.83 இலட்சம் பேர்கள் தான். ஆண், பெண் எல்லோருமே படிக்கலாம் என்று இருந்தாலும் கிழவிகள் அதிகமாகப் படித்திருக்கிறார்கள், கிழவர்கள் அந்த அளவுக்குப் படிக்கவில்லை. மிக மிகக் குறைவாகப் படித்திருக்கிறார்கள். இது ஆண் வர்க்கத்திற்கே அவமானமாகும். எனவே, ஆண்களும் அதிக அளவில் படிக்க தேவையான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற 37 ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றியத்திற்கு 5 ஆசிரியர் இடம் காலியாக இருக்கிறது என்று குறைத்து கணக்கிட்டாலும் கூட கிட்டதட்ட 2000 இடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த 2000 காலி இடங்களை நிரப்புவதற்கு கிட்டதட்ட 800 ஆசிரியர்களைத்தான் நியமிக்கவிருப்பதாகத் தெரிகிறது. காலி இடங்கள் முழுவதற்கும் ஆசிரியர்களை நியமித்தால்தான் கல்வியின் தரம் உயரும். அது மட்டுமல்ல, ஆசிரியர், மாணவர்கள் விகிதாச்சாரம் எப்படி இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த விகிதாச்சாரப்படி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் இரட்டை ஆட்சிமுறை இருக்கிறது. பள்ளிக் கட்டிடத்தை பராமரிப்பது உள்ளாட்சித் துறையிலும், ஆசிரியர்கள் நிர்வாகம் கல்வித் துறையிலும் இருக்கிறது. இந்த இரட்டை ஆட்சி முறையை மாற்றி, ஒரே துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும்.

தமிழ்நாட்டில் ஓராசிரியர் பள்ளிகள் ஏறத்தாழ 750 இருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிகளில் கூடுதலாக ஆசிரியர்களை நியமித்து, மாணவர்களுடைய கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, ஜி.பி.எஃப். என்று சொல்லப்படுகின்ற ஆசிரியர் நலநிதி இப்போது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் இருக்கிறது, அதை மாற்றி, ஏ.ஜி. ஆபீசுக்கு அந்தக் கணக்கை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 'ஏ' விங், 'பி' விங் என்று பட்டதாரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள் 1-4-1970-க்கு முன் அரசுப் பணியில் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து, பதவி உயர்வு பெறுவதற்கு வழிவகை செய்து, அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளியில் 10 (எ) (1) ஆக பணியாற்றிக் கொண்டிருக்கும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்களின் பணியை நிரந்தரமாக்கிட வேண்டும். தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களைப் போல், பணிக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அதைப் போன்று எல்லாவிதமான சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியின் தரத்தை உயர்த்த மத்திய அரசு நியமித்த கோத்தாரி கமிஷன் பரிந்துரைகளை அனைத்து மட்டப் பள்ளிகளிலும் அமல்படுத்த வேண்டும்.

என்னுடைய ஜெயங்கொண்டான் சட்டமன்றத் தொகுதியில் 169 ஆரம்பப் பள்ளிகள், 15 உயர்நிலைப் பள்ளிகள், 4 மேல் நிலைப் பள்ளிகள், ஆக மொத்தம் 188 பள்ளிகள் உள்ளன. ஆனால் அங்கே ஒரு கலைக்கல்லூரி கூட கிடையாது. அதைப் போலவே ஒரு பாலிடெக்னிக் பள்ளி கிடையாது, ஒரு ஐ.டி.ஐ. கிடையாது. பெண்களுக்கு என்று தனியாக ஒரு ஐ.டி.ஐ. கிடையாது. எனவே, என்னுடைய தொகுதியில் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்துவதோடு தொழில் நுட்பப் படிப்புக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதைப்போன்று கட்டிடம் இல்லாத தொடக்கப்பள்ளிகள அனைத்துக்கும் உடனடியாக கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டும். பூவாயிகுளம், வளவநேரி, வண்ணங்குழி ஆகிய மூன்று பள்ளிகளுக்கும் மற்றும் மூன்று ஊர்களிலுள்ள பள்ளி களுக்கும் கட்டிட வசதி இல்லை. அந்தப் பள்ளிகளுக்கு நடப்பு நிதியாண்டிலேயே போதுமான நிதி ஒதுக்கி, கட்டிடங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் எறவாங்குடி உயர்நிலைப் பள்ளியில் 6, 7, 8, 9, 10 ஆகிய 5 வகுப்புகள் நடைபெறுகின்றன. அந்த 5 வகுப்புகளும் மூன்று அறைகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தில் நடைபெறுகின்றன அங்கே மாணவர்களுக்கு இடவசதி இல்லை, மற்ற பிற வசதிகளும் இல்லை. அந்தப் பள்ளிக்கு போதுமான இடவசதியுள்ள ஒரு நல்ல கட்டிடத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடாளி கருப்பூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் சரியான முறையில் இல்லை. ஒரு மாடிக் கட்டிடம் எந்த நேரத்திலும் இடிந்துவிழும் நிலையில் அந்த உயர்நிலைப் பள்ளி உயிர் நிலையில்லாப் பள்ளிக் கட்டிடத்தில் நடைபெற்று வருகிறது. அதற்கும் தனியாக ஒரு நல்ல கட்டிடத்தைக் கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீன்சுருட்டி என்ற கிராமத்தில் பொதுமக்களால் இயக்கப் படுகிற ஒரு கட்டிடக் குழு இருக்கிறது. அது பள்ளிகளுடைய கட்டிட வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பல்வேறு வகையில் உதவி செய்துகொண்டிருக்கிறது. அது பொதுமக்களால் இயக்க படுகின்ற கட்டிடக் குழு. அவர்கள் நிதியும் நிலமும் அரசுக்கு இனாமாகத் தர இருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியிலே ஒரு பாலிடெக்னிக்கோ அல்லது ஐ.டி.ஐ.யோ ஏற்படுத்தித் தருமாறு இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு சமூகத் துறையில் அக்கறை எடுத்துக்கொள்கிற அமைப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



த. படூர் என்ற ஊரிலே மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அதற்கு கம்பியூட்டர் பயிற்சி கொண்டுவருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருப்பு கட்டித் தரும்படி அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று ஒரு திட்டம் கொண்டுவருவோமானால் அது பலருக்கு சுகமாக இருக்கும், சிலருக்கு சுமையாக இருக்கும். பலருக்கு சுகம், சிலருக்கு சுமை. திட்டத்தினுடைய அடிப்படை சிலருக்கு சுமையாகவும் பலருக்கு சுகமாகவும் இருக்கவேண்டும் என்று இந்த அரசை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;

பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்''

என்று பாரதியார் பாடினார். பாரதியாருக்கு விழா எடுக்கும் இந்த அரசு, பாரதியாருக்கு சிலை எடுக்கும் இந்த அரசு பாரதியார் கண்ட கனவை நனவாக்கி கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு பல சிறப்பான திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசை அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. * எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் மறுவடிவம், அண்ணாவின் இதயக்கனி, எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவரின் மீஅரசுவைத்த இந்த ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு என்னுடைய வணக்கத்தை முதற்கண் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட நெடுங்காலமாக கல்வித் துறையில் அனுபவமும், ஆற்றலும் உள்ளவர், இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய அரசின் கல்வித்துறை அமைச்சராக பணியாற்றுகிற காரணத்தால், கல்வித்துறை இன்றைக்கு ஒரு சிறப்பான உரியசுவ பெற்று வருகிறது என்று சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய வரலாற்றில், புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சிக் காலம் ஒரு பொற்காலமாகும். கல்வி வளர்ச்சியிலே எந்த மாநிலமும் எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்கு மாபெரும் வளர்ச்சியை நம்முடைய கல்வித்துறை இன்றைக்குப் பெற்றிருக்கிறது. ஏட்டுப் படிப்போடு நின்று விடாமல் சுயவாழ்க்கைக்குப் பயன்படுகிற கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்த புரட்சித் தலைவரின் திட்டங்களை இன்றைக்கு உலகமே வரவேற்கிறது.

நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தினுடைய பிரதமராக இருக்கிற மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் இந்தத் திட்டத்தைப் பரிசீலிப்பதாக பத்திரிகையிலே செய்திகளாகப் பார்த்தோம். அது நமக்கு எவ்வளவு பெருமை தருகிற செய்தி. இங்கே சில நண்பர்கள் வேண்டும் என்றால் பாராட்டாமல் இருக்கலாம். அதை எதிர்க்காமலாவது இருக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று பாடிய பைந்தமிழ்ப் புலவன் பாரதி கண்ட கனவை நனவாக்கும் வகையில், தமிழைப் பயிற்சி மொழியாக்கி, அதை ஊக்குவிக்கும் வகையில் இன்றைக்கு ரூ. 44 இலட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டு உள்ளதை நான் உண்மையிலே வரவேற்கிறேன். ''உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு'' என்ற போர்க்குரல் கொடுத்து தீ நாக்குகளால் கொத்தப்பட்டு, வீர மரணம் அடைந்த தமிழ் மறவர்களின் எண்ணங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்திலே இன்று நடந்தேறி வருகின்றன. நமக்கு 20 மைல் இடைவெளியிலே இருக்கிற ஈழநாடு இன்றைக்கு பற்றி எரிகிறது. அங்கேயிருந்து அகதிகளாகவும், ஆதரவற்றவர்களாகவும் வருகின்ற தமிழ் மாணவர்களுக்கு, தமிழுக்காக தமிழ் மானம் காத்திட, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தொழில் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதை கல்நெஞ்சம் படைத்தவர்கள்கூட நிச்சயமாக கனிந்துருகி பாராட்டுவார்கள், நாடே பாராட்டுகிறது, நல்ல தலைவனுடைய இந்தத் திட்டத்தைப் பற்றி. 'கற்றதனால் ஆய பயன் என்கொல் வால் அறிவன் நற்றாள் தொழா அர் எனின்'' என்ற மரபிலே வந்த வள்ளுவர் வாக்குக்கு இணங்க புரட்சித் தலைவருடைய அரசு இன்றைக்கு கல்விக்காக 468 கோடி ரூபாயை ஒதுக்கி உள்ளது. இது ஒரு பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க காரியத்தை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. மேலும் இலவச சீருடை, இலவச புத்தகம், 1 முதல் 8-வது வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு நம்மை அரசியலில் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த தினமாகிய அன்றைக்கு ஏழை மாணவர்களுக்கு வழங்க இருப்பதாக இன்றைக்கு இந்த அரசு அறிவித்து இருக்கிறது. ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'' என்றார் அண்ணா. அந்த அண்ணாவின் எண்ணங்கள் ஈடேற, ஏழைவீட்டுக் குழந்தைகள் இன்றைக்குப் படித்து, பட்டதாரிகளாக ஆக வேண்டும். விஞ்ஞான மேதைகளாக மாறவேண்டும். அரசியல் வல்லுநர்களாக வந்திடவேண்டும் என்ற உணர்வோடு இன்றைக்கு இந்த அரசு ஏழை எளியவர்களுக்காக நல்ல திட்டங்களைப் போட்டு செயல்படுத்திக்கொண்டு வருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.



அதேபோல் புரட்சித்தலைவருடைய சத்துணவுத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் தொலை தூரப் பார்வையோடு அடுத்த தலைமுறையை எண்ணிப் பார்த்து, இளைய தலைமுறை ஒரு இனிய தலைமுறையாக உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு, புரட்சித் தலைவர் அவர்கள் எந்த திட்டத்தை எடுத்து வைத்தாலும், இந்த நாட்டில் வாழ்கிற ஏழை எளியவர்களுக்காக அந்த திட்டங்களைத் தீட்டித் தருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கோடிட்டுக் காட்டுவதும், சுட்டிக்காட்டுவதும் என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அதைப்போல தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கு விழாக்களை ஆண்டுதோறும் அரசு விழாக்களாக எடுத்து நடத்துகின்ற அந்த முயற்சிக்கு, அந்த தமிழ் உணர்வுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மொழிக்காக உயிர் தியாகம் செய்தவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 150 வழங்கும் திட்டத்தை இன்றைக்கு நம்முடைய அரசு அறிவித்து இருக்கிறது. அந்த உணர்வை பாராட்டி, அதேநேரத்தில் குமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைந்து இருக்க வேண்டும் என்பதற்காக 50 மைலுக்கு அப்பால் இருக்கிற திருவனந்தபுரத்தில் தலைநகரம் இருப்பதை விட 500 மைலுக்கு அப்பால் இருக்கிற சென்னை மாநகரமே தங்களுக்கு தலைநகரமாக இருந்திட வேண்டும் என்கிற தமிழ் உணர்வோடு அந்த மொழி உணர்வோடு போராடிய, தமிழ் தியாக வீரர்களின் குடும்பங்களுக்கும், அவர்களைப் பாராட்டுகிற வகையில், மாதந்தோறும் அவர்களுக்கும் ரூபாய் 150 தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எதிலும் தாய் உணர்வோடு செயல்படும் புரட்சித் தலைவர் அவர்களின் நல் அரசை இதையும் செய்து தருவதற்கு நான் மிகவும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இன்றைக்கு தனியார் கல்லூரிகளுக்கும், தனியார் பாலிடெக்னிக்குகளுக்கும் அரசு உரிமைகள் கொடுத்திருக்கிறது. அதுபோலவே தனியார்கள் ஐ.டி.ஐ நடத்துவதற்கும் சிறப்பு உரிமைகளை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு என்னுடைய குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு பிரச்னைகள் இருந்து வருகின்றன. இன்றைக்கு பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும், பழைய கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்காகவும் இந்த கல்வி மானியக் கோரிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் மிகக் குறைவாக இருக்கிறது என்பதைச் சொல்லி, அந்த தொகையை சற்று அதிகமாக்க வேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே வேண்டுகோளாக விடுக்கிறேன்.

புதிய கல்விக் கூடங்களைக் கட்டுவதற்காகவும் பழைய கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்காகவும் ஒதுக்கியிருக்கிற தொகை 324 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மிக மிகக் குறைவானது. அதை அதிகரிக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பள்ளிக் கூடங்கள் இன்றைக்கு கட்டிடங்கள் இல்லாமல் இருக்கிற கட்டிடங்களும் பழுது அடைந்த நிலைமையிலே உள்ளனவாகவும் இருக்கிறது என்பதை காருண்யம் மிக்க இந்த சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவேதான் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும் பழைய கட்டிடங்களை புதுப்பிப்பதற்காகவும் இந்த மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது என்றும் அதை அதிகரிக்க வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுகிறேன்.

அதேநேரத்தில் 6 வயது முதல் 14 வயது வரையில் உள்ள மாணவ மாணவிகளை பள்ளிகளில் சேர்ப்பதில் சிறந்த சாதனையை புரிந்ததற்காக, சென்ற ஆண்டு எங்கள் கன்னியாகுமரி மாவட்டம் சிறப்பு விருதை பெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சிறப்பு விருதைப் பெற்றிருக்கிற அந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, அந்தப் பணிகளை ஊக்குவிக்கிற முறையில், கல்விக் ாக கூடுதலாக தொகை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக அரசாங்கத்தினுடைய அரசு பள்ளிகளிலும், தனியாருடைய பள்ளிக்கூடங்களிலும் இருக்கிற ஆசிரியர்கள் அனைவருக்கும் சம்பளத்தை நம்முடைய சர்க்கார்தான் வழங்கி வருகிறது. ஆனால் அரசாங்கத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படுகிற அந்த சலுகைகள் எல்லாம் தனியார் பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை, எனவே, எல்லா சலுகைகளையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், தனியார் பள்ளிகளை நடத்துபவர்கள் ஏதோ முதலாளித்துவ எண்ணத்தோடு இருக்கவிடாமல், சம்பளத்தோடு கூட, எல்லா சலுகைகளையும் அரசாங்கம்தான் கொடுக்கிறது என்ற நிலைமையை ஏற்படுத்தி அந்த தனியார் பள்ளி ஆசிரியர்களோடு அரசுக்கு நேரடி தொடர்பு இருக்கும்படியான நிலைமையை உருவாக்க அது உதவும்.

அடுத்தாற்போல், குமரி மாவட்ட அரசுப் பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கையை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். நாகர்கோவிலில் உள்ள முதன்மை கல்வி அலுவலரால் 1982 ஆம் ஆண்டு அக்டோபரில் தயாரிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் பணி மூப்பு பட்டியல்,



தமிழ்நாடு சர்வீஸ் மேன்னுயூவல் விதி 4, ஏ மற்றும் 36—பி செக்ஷன் ஆகியவற்றின் கீழ் நியாயமான வரிசைப்படி அமையாமல், அந்த அதிகாரிகளுடைய மனம் போன போக்கில், அரசு விதிகளுக்கு புறம்பாக, அரசு ஆணைகளுக்குப் புறம்பாக, வயதை அடிப்படையாகக் கொண்டு, அந்த பணி மூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே வயதை அடிப்படையாக வைக்காமல், பணிகளை அடிப்படையாக வைத்து முறைப்படி அந்தப் பட்டியலை திருத்தி தயாரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள இலக்குமிபுரம் கலை விஞ்ஞானம் கல்லூரியினை அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று கோரிக்கையை நான் வைக்கிறேன். அந்தக் கல்லூரியிலே நான் படித்தேன். இன்றைக்கு அந்தக் கல்லூரி அரசினுடைய மேற்பார்வையில் இருந்தாலும் அரசு ஏற்று நடத்தினால்தான் சிறப்பாக பணிகள் இன்னும் நல்ல முறையில் நடைபெறும் என்பதால் இந்தச் சந்தர்ப்பத்திலே அதை வேண்டுகோளாக விடுப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். எல்லா மாநிலங்களுக்கும் கல்வித் துறையில் தமிழகம் வழி காட்டியாக விளங்குகிற வகையில் சிறப்புச் சேர்த்திருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கல்வித் துறையின் அமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்து, இந்த வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. கே. பி. சே. சேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்கு முதன்மை கொடுத்து, அந்தக் கல்வி பயிலும் போது தொழில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு இருந்தால்தான், மாணவர்கள் கல்வி முடிந்ததும் எளிதாக வேலை வாய்ப்பு பெற முடியும் என்ற வகையில் தொழில் பயிற்சி திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் பொற்பாதங்களில் இருகரம் கூப்பி சிரம் தாழ்த்தி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய துணைக் கண்டத்தின் முதன் முதலாக புரட்சித் தலைவர் அரசுதான் மாணவ மாணவியருக்கு சத்துணவு வழங்கியது மட்டுமல்லாமல் சீருடையும், பாட புத்தகங்களையும் வழங்கியது பாரட்டிற்குறியதாகும். கல்விக்காக ரூ. 468 கோடி செலவு செய்யப்படுகிறது. ஆனால் கட்டிடங்களுக்கு ரூ. 1 கோடி தான். அந்தத் தொகை போதாது. குறைந்தது ரூ. 10 கோடியாவது ஒதுக்கினால்தான் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். பள்ளிக் கூடங்களில் கட்டிடங்கள் இல்லாமல்,

மேஜை, நாற்காலி, கரும்பலகை இல்லாமல் இருக்கின்றன. பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், ஒரு ஆசிரியர் பல வகுப்புகளுக்கு பொறுப்பு ஏற்கும் நிலை இருக்கிறது. ஆகவே படித்துவிட்டு, ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையற்று இருக்கும் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்ற வகையில் அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தனியார்கள் தொழில்கல்வி நிறுவனங்கள் அதிகமாக உள்ளன. அரசு நடத்தும் தொழிற் கல்வி நிலையங்களில் இடம் கிடைக்காதவர்கள் தனியார் தொழில் கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெறும் வாய்ப்பு உள்ளது. ஆகவே அரசு அதிக எண்ணிக்கையில் தொழில் கல்வி நிறுவனங்களை நிறுவுவதோடு தனியார் பாலிடெக்னிக்கை உருவாக்குவதற்கு தனியார்களை ஊக்குவிக்க வேண்டும். நன்கொடை என்ற பெயரில் சில முறைகேடுகள் தனியார் நிறுவனங்களில் நடக்கிறது. இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் படித்து பயிற்சி பெற்றவர்கள் வெளிநாடுகளில் அதிகமாக பணி செய்கிறார்கள். அதிக ஊதியமும் பெறுகிறார்கள். ஆகவே நம்முடைய கல்வி, பழைய முறைகளிலிருந்து புதிய முறைகளில் தற்போது செயல்பட்டு வந்தாலும், எலக்ட்ரானிக் யுகமாக மாறி வருகின்ற காலத்தில், எலக்ட்ரானிக் முறைகளை கல்வியில் புகுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

8வது நிதிநிலை அறிக்கை தயாரித்த இந்த நேரத்தில், 9வது பல்கலைக் கழகமாக அழகப்பா பல்கலைக் கழகம் அமைப்பதை வரவேற்கிறேன். ஹைவேய்ஸ், போலீஸ் ஸ்டேஷன் போன்றவைகளுக்கு நிரந்தரமாக ஒரு கலர் இருப்பதைப்போல், பள்ளிக்கூடங்களுக்கு ஒரு நிரந்தர கலர் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கின்ற வகையில் விளையாட்டு இளைஞர் மையங்களை துவக்கி தேக ஆரோக்கியம் பெற்ற சிறந்த விளையாட்டு வீரர்களை பெறுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இளைஞர் மையங்களை உருவாக்குவதைப் போல், தமிழகத்தில் பல கிராமங்களில் மாணவர்கள் அல்லாத இளைஞர்கள, கட்சி மதச் சார்பற்ற இளைஞர் மையங்களை அமைத்து செயல்பட்டு வருகின்ற நேரத்தில், அந்த மையங்களை ஊக்குவிக்கின்ற வகையில் அவர்களுக்கு, பள்ளிகளில் பி. டி. ஆசிரியர்கள் மூலமாக பயிற்சி அளித்து, கருவிகளை வாங்கிக் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலமாக அந்தப் பகுதியில் சிறந்த



விளையாட்டு, வீரர்களை உருவாக்குவதன் மூலமாக, மாவட்ட வாரியாக சிறந்த விளையாட்டு வீரர்களை தமிழகம் பெறுவதோடு, எதிர்காலத்தில் விளையாட்டுப் போட்டியில் தமிழகம் முன்னணியில் நிற்கும். அதற்கு ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு அரங்கங்களை உருவாக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

உடற் பயிற்சியை கட்டாயப் பாடமாக பள்ளிகளிலே ஏற்படுத்த வேண்டும். சென்னைக்கு 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பொன்னேரி தொகுதியில் லோகநாதன் நாராயணசாமி அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. இதற்கு 65 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் சொந்தமாக இருக்கிறது. அந்தக் கல்லூரியில் தடுப்பு சுவர் இல்லாததால், தனியார்கள் அந்தக் கல்லூரிக்குச் சொந்தமான இடத்தில் குடிசை போடும் நிலை உள்ளது. அந்தக் கல்லூரிக்கு தடுப்புச் சுவர், முள்வேலி அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த கல்லூரிக்கு புதிய கட்டிடங்கள் இல்லாததால் பல வகுப்புகள் நடைபெறவில்லை. ஆகவே புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டும். இந்தக் கல்லூரிக்கு எம். ஏ. பாலிட்டிக்ஸ், எம். எஸ். ஸி. மேத்ஸ் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டும். பொன்னேரியில் ஐ. டி. ஐ. ஒன்றும் பாலிடெக்னிக் ஒன்றும் ஏற்படுத்தினால் அநேக மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்னேரியில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அடிப்படை வசதிகள், அறிவியல் ஆய்வுக் கூடங்கள், கருவிகள் வழங்குவது போன்றவற்றை பள்ளிகளுக்கு செய்துத்தர வேண்டும். பொன்னேரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்டது. இப்பள்ளிக்கூடம் வசதி இல்லாமல் இடிந்து விழுந்துவிடக் கூடிய நிலையில் உள்ளது. ஆகவே கட்டிடங்கள் கட்டிக் கொடுத்து இதனை புதுப்பித்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது பொன்னேரி தொகுதியில் பழவேற்காடு பகுதியிலே 14 மீனவ குப்பங்கள் இருக்கின்றன. அவர்கள் ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் விஸ்தரிப்பு காரணமாக கலங்கரை விளக்கம் பகுதிகளுக்கு குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்

(பிற்பகல் 1-00).

அந்த 14 குப்பங்களிலே படித்த மாணவர்கள் அனைவரையும் ஒரே ஒரு பள்ளியான கலங்கரை விளக்கம் பள்ளிக் கூடத்திலேயே திணிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்த மாணவர்களுக்குப் பயன் கிடைக்கிற வகையிலே பள்ளிக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 1 முதல் 5 வகுப்பு வரையிலும் அந்த கலங்கரை விளக்கம் பள்ளிக்கூடத்திலே கட்டடங்கள் இருந்தாலும் 8 ஆம் வகுப்பு வரை அந்தப் பள்ளியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எட்டாவது வகுப்பு வரையில் உள்ள நடுநிலைப் பள்ளிகளிலே பி. டி. ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்ததும் ஆகும். அதே நேரத்திலே கல்வியின் தரமும் உயரும்.

பொன்னேரியில் உள்ள கலைக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதியில்லாமல் இருக்கிறது. ஆகவே அந்த மாணவர்களுக்கு அந்த விடுதியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே மீஞ்சூர், சோழவரம், பழவேற்காடு ஆகிய இடங்களிலேயும் உள்ள ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதிகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே உள்ள மாணவர்களின் நன்மைக்காக மருத்துவக் கல்லூரி, எஞ்சினியரிங் கல்லூரிகளிலே அவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது 10 மார்க் அதிகமாக போனஸ் மார்க் என்ற முறையிலே கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் அரசுப் பொறுப்புக்கு வந்து விட்ட பிறகு மாணவர்கள் தரம் குறைந்து விட்டது. ஆகவே அதைக் கண்காணிக்கின்ற முறையிலே ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பல வருடங்களாக ஒரே பள்ளியில் பணியாற்றும் நிலைமை இருக்கிறது. இதனால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மதிப்பும் மரியாதையும் குறைந்துவிடுவதன் காரணமாக அது மட்டுமல்ல, ஆசிரியர்கள் அரசியல் வாதிகளாக மாறி விடுகிற நிலைமை இருப்பதால் அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எப்படி மற்ற அரசு அலுவலர்களைப் பொறுத்தவரையில் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது என்ற அரசு ஆணை இருக்கிறதோ, அதே போல் ஆசிரியர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் இருக்கக் கூடாது என்ற முறையிலே அவர்களை மாற்றம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கல்விக்கு முதன்மை கொடுத்து இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் அதை வரவேற்று எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்

திரு. வை. பாலச்சந்திரன்: மாற்றுத் தலைவர் அவர்களே. இந்த 1985-86-ஆம் நிதியாண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையிலே நடைபெறுகின்ற விவாதத்திலே நானும் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்குத் தாங்கள் தந்துள்ள வாய்ப்புக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொட்டு வைத்த புலவன் பாரதி, தமிழகத்திலே



இருந்த கல்வி நிலையைப் பற்றிச் சொல்கிறபோது 'கல்வியிற் சிறந்த தமிழ்நாடு' என்று சொல்லுவான். அன்றைக்கு மட்டும் தமிழகம் கல்வியில் சிறந்திருக்கவில்லை. இன்றைய தினமும் கூட தமிழகம் கல்வியில் சிறந்து விளங்குகிறது. அதற்குக் காரணம் நம்முடைய அரசாங்கம் கல்வித் துறையிலே புதிய மாற்றங்களையும் புதிய பொலிவையும், புதிய ஏற்றத்தையும் உருவாக்குகின்ற முறையிலே திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருகிறது என்பது நாடறிந்த உண்மையாக இருந்து கொண்டிருக்கிறது.

இந்தியத் திருநாட்டில் வாழுகின்ற மக்களையெல்லாம் மதத்தின் பெயரால் இனத்தின் பெயரால் வேறு படுத்திப் பார்க்கிற சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி வேறுபடுத்திப் பார்த்தே ஆக வேண்டுமென்ற கட்டாயம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் தமிழகமாக இருந்தாலும் வேறு மாநிலங்களாக இருந்தாலும் அங்கே இருக்கிற சட்டங்களும், அந்த சட்டங்களின் எலும்புக் கூடுகளிலே அமுங்கிக் கிடக்கும் விதிகளும் தான் அதற்குக் காரணம். இந்துவாக இருந்தாலும் முஸ்லீமாக இருந்தாலும் கிறித்துவராக இருந்தாலும் ஒன்றுபட்டு வாழ வேண்டுமென்ற கொள்கையில் அரசாங்கமும் வேறு பல இயக்கங்களும் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய அரசாங்கமும் மனித சமுதாயத்தை இந்து என்றும் கிறித்துவர் என்றும் முஸ்லீம் என்றும் பிரித்துக் கொண்டு கல்வித் துறையில் செயல் பட்டுவருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்து பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக கிறித்துவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் கொடுக்கப்படுகிற சலுகைகள் இந்துக்களுக்கு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. இந்தியத் திருநாடு உலக ஜனநாயக நாடுகளிலேயே இருக்கிற ஆட்சிகளில் பெரிய ஜனநாயக நாடு என்று நாம் சிறப்பாக பெருமையாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் அந்த ஜனநாயக நாட்டிலே மெஜாரிட்டி மக்களுடைய உணர்வுகளை, போற்ற வேண்டிய ஆட்சியாக இருக்க வேண்டுமென்பதுதான் பொருளாகிறது. ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரையில் உலகத்திலே வேறு எந்த நாட்டிலேயும் இல்லாத அளவுக்கு சிறுபான்மையை தோளிலே சுமக்கிற ஒரு சமுதாயமாக அப்படிச் சுமந்தே ஆக வேண்டுமென்ற கட்டாயத்தில் இருக்கிற ஒரு சமுதாயமாக இந்து சமுதாயம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

இன்றைக்கு நான் இந்து மதத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்தால் ஒரு உயர்நிலைப்பள்ளிக்கூடம் ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னால் ஒரு தொடக்கப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு வேண்டிய காப்புநிதி கட்ட வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறேன். ஆனால் என்னுடைய

சகோதரர் என்னை பெற்று எடுத்த தாயின் வயிற்றில் பிறந்த எனது சகோதரன் இந்து மதத்திலிருந்து கிறித்துவனாக மாறி போய், இந்து மதத்திலிருந்து முஸ்லிமாக மாறி போய் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் எனக்கு இருக்கிற தடங்கல், எனக்கு இருக்கிற இடைஞ்சல், எனக்கு இருக்கிற இடையூறுகள் எதுவும் இன்றி என்னை பிடிக்கின்ற சட்டத்திலருந்து அவன் தப்பி சுலபமாக அவன் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க முடிகிறது. நான் ஒரு பெரும்பான்மை மதத்தைச் சார்ந்தவன் என்பதை மனதில் கொண்டு இருந்தாலும் வெட்கத்தை விட்டு உங்களிடத்தில் கேட்பது எல்லாம் ஒரு கண்ணிலே சுண்ணாம்பும், ஒரு கண்ணில் வெண்ணெயும் வைக்கின்ற நிலைமையை இனிமேலாவது மாற்றுவதற்கு தேவையான பரிசீலனையை நமது அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன. இன்றைக்கு சிறுபான்மையினருக்கு சலுகைகள் இருக்கிற காரணத்தால் சிறுபான்மையினர் எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எந்த சூழ்நிலையிலும் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்க முடியும் என்ற நிலைமை இருக்கிற காரணத்தால் கிறித்துவ பள்ளுக்கூடங்களும் இஸ்லாமிய பள்ளிக்கூடங்களும் இன்றைக்கு மதத்தை போதிக்கின்ற ஒரு கூடாரமாக' மதத்தை, மதத்தின கொள்கையை மற்றவர்கள் பின்பற்றி ஆகவேண்டும் என்ற கட்டாயத்தை சொல்லுகின்ற கூடாடமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஒருக்கால் ரெக்கார்டுகளில் அப்படி இல்லை என்று சொன்னாலும் செயல்முறையில் பார்க்கும்போது அங்சே அது நடந்து கொண்டுதான் இருக்கிறது. இன்றைக்கு சொல்லப்போனால், என்னுடையபாவட்டத்தில் இருக்கின்றகிருத்துவ கல்வி நிறுவனங்களில்சேர்ந்து அங்கேஇந்துகுழந்தைசள்படிக்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் நெற்றியில் பொட்டு வைத்துக் கொண்டு போனால் அந்த குழந்தையை வகுப்பறையின் வாயிலில் நிறுத்தி வைத்து கண்டிக்கிற தண்டனையும், கையிலே இரட்சை இருந்தால் அதை அவிழ்த்து விட்டு வர வேண்டும் என்று சொல்லுகின்ற சூழ்நிலையும் எங்களுடைய மத உணர்வோடு அந்த கிருத்துவ நிறுவனங்கள் விளையாடுகின்ற சூழ்நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய ஒரு குழந்தை ஒருகால் கணிதத்தில் மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றால் அவர்கள் கொடுக்கிற தண்டனை என்ன என்று சொன்னால் அன்னை பராசக்தியை வணங்குகின்ற குழந்தை, முருகப்பெருமானை வணங்குகின்ற எங்களுடைய குழந்தை வகுப்பின் வாயில் முழங்கால் இட்டு நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொன்னால்....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மத அடிப்படையில் இருக்கின்ற அறக் கட்டளைகள் கல்வி சேவை செய்பவர்கள் பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். அதிலே சிறுபான்மை இனத்திற்கு பல்வேறு சலுகைகள் என்கின்ற முறையில்அவர்களுக்குதரப்



பட்டு இருப்பதை பயன்படுத்தி அவர்கள் கல்வி நிறுவனங்களை ஆரம்பித்து நடத்துகிறார்கள். ஆனால் அந்தக் கல்வி நிறுவனங்களில் மத கருத்துக்களை கட்டாயப்படுத்தவோ, அல்லது மத அடிப்படையில் தண்டனை வழங்குவதோ அல்லது மத வித்தியாசங்களை வைத்து ஒரு பிரிவினருக்கு கொடுமை படுத்துகின்ற நிகழ்ச்சிகள் இருக்குமானால் அத்தகைய நிறுவனங்களை நாம் நிச்சயமாக கண்டிக்கிறோம்- அத்தகைய நிறுவனங்களுடைய கட்டுப்பாட்டிலிருந்து அந்த பள்ளிக்கூடங்கள் விடுவிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் நிச்சயமாக நாம் எடுப்போம். சட்டப்படி இருக்கின்ற வேறு பல வாய்ப்புகளை, பயன்படுத்தி அத்தகைய பள்ளுகளை காப்பாற்றுவதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். ஆனால் நாம் சொல்லுகின்ற கருத்துக்கள் ஒரு குறிப்பிட்ட தவறான நிர்வாகத்தை கண்டிக்கின்ற விதத்தில் அமைய வேண்டுமே தவிர அதற்கு மாறாக வேறு வேறு மதங்களை புண்படுத்துகின்ற முறையில்,அவர்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வகையில் இருந்து விடக்கூடாது என்ற அச்சத்தில் தான் நான் இந்த கருத்துக்களை சொல்லியிருக்கிறேன். நீங்கள் சொல்வதைப் போன்று ஒரு பள்ளி அல்லது கல்லூரி இருக்குமானால் அந்த நிர்வாகம் தவறான நிர்வாகம் என்ற அடிப்படையில் கண்டிக்க வேண்டியதுதான். மத அடிப்படையில் அல்ல.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) நாம் மத சார்பற்ற நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தாங்கள் பேசும்போது மற்ற சிறுபான்மையினரை தாக்கி பேசுவதை விடுத்து பெரும்பான்மையினருக்கு எப்படி பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று பேசினால் நன்றாக இருக்கும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கையை ஒட்டி தன்னுடைய கருத்துக்களை சொல்லுமாறு கேட்டுக் கொள்கிறேன்

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே. இதுவரை நான் பேசியதில் எந்த வார்த்தையையும் எந்த மதத்தையும் புண்படுத்த வேண்டும் என்பதற்காக பயன்படுத்தவில்லை. ஆனால் பெரும்பான்மை மதத்தினை சார்ந்த நாங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலமாகவே துன்புறுத்தப்படுகின்றபோது அதை சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காக சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய கல்வித் திட்டத்தை இங்கே பார்க்கிற போது ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஒருவனைக் கைது செய்து அவனைத்

(பிற்பகல் 1-10)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காவல் நிலையத்திற்குக் கொண்டுசென்றால், காவல் நிலையத்தில் அவன்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டால், அப்படி பதிவு செய்யப்பட்ட பிறகு காவல் நிலையத்திலேயிருந்து அருகிலே உள்ள நீதிபதியினுடைய நீதிமன்றத்திற்கு 24 மணி நேரமும் அந்த காவல் நிலையத்திலேயிருந்து நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லுகின்ற நேரமும் சேர்த்து அதற்குள்ளாகக் கொண்டு செல்ல வேண்டும். அப்படிக் கொண்டு செல்லவில்லை என்று சொன்னால் அந்த எதிரிக்குக்கூட சட்டத்தில் சில உதவிகள் கிடைக்கும் என்பதாக அரசியல் சட்டமும், வேறு சில சட்டங்களும் சொல்லுகின்றன. அவனைக் காவல் நிலையத்தில் துன்புறுத்தினால் நீதிமன்றத்தில் அது பற்றி, ரிமாண்டிற்கு வருகின்றபொழுது அவன் இல்-ட்ரீட்மெண்ட் ரிப்போர்ட் செய்யலாம் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அப்படி அவன் அப்போது சொல்லவில்லை என்று சொன்னால் அதற்குப்பிறகு தனிநபர் வழக்காக காவல் துறையிலே என்னைப் புண்படுத்தி விட்டார்கள் என்று சொன்னால் அதை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு சூழ்நிலையும் இருந்து கொண்டிருக்கிறது.

ஆனால் இந்த நாட்டிலே வாழ்கின்ற எந்த குடிமகனுக்கும் இப்படியொரு சட்டம் இருப்பதாகவோ, இப்படிச் சட்டத்திலே சொல்லப்பட்டிருப்பதாகவோ அவனுக்குத் தெரியாது.

அதுபோல, ரோட்டிலே செல்லுகின்றவன் பார்வையில் ஒருவன் பிடிக்கக்கூடிய ஒரு குற்றத்தைச் செய்தான் என்றால் அதைப்பார்த்து விட்டு இவன் அருகிலே இருக்கின்ற காவல் நிலையத்திலே தகவல் சொல்லாமல் போனால், அப்படித் தகவல் தெரிவிக்காமல் போனதற்காகத் தண்டனை அவனுக்கு வழங்கப்படும். ஆனால் அப்படியொரு சட்டம் இருப்பதாக எந்தக் குடிமகனுக்கும் தெரியாது. ஆகவே, சட்டத்தைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட சட்டங்கள் ஒவ்வொரு குடிமகனுக்கும் தெரிந்திருக்க வேண்டுமென்று சட்டம் கருதுகிறது அப்படி தெரிந்திருக்கவில்லையென்று சொன்னால் அது சட்டத்தின் தவறாகக் கருதப்படக் கூடாது. ஆகவே, சட்டம் எது என்று மனிதனுக்குத் தெரியாமல் போனாலும் தெரிந்ததாகக் கருதப்பட வேண்டுமென்று சொல்கிறது. எனவே அவைகளையெல்லாம் குடிமக்கள் அறிந்து கொள்வதற்காகப் பள்ளிக்கூடத்தில், நம்முடைய பாடத் திட்டங்களில் சேர்க்கவேண்டுமென்ற வேண்டுகோளை நான் தங்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, தாங்களும் வழக்கறிஞர், நானும் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற விவரத்திற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். Ignorance of law is no excuse என்ற நிலைமை இருக்கக்கூடாது என்ற கருத்தை



ஆதரித்து அவர்கள் சொல்கிறார்கள். சட்டம் தெரியாது என்று சொல்லிவிட்டு, குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டு விடக்கூடாது. தங்களுக்குத் தெரியும், ஒருவர் கொலை செய்து விட்டு, கொலை செய்தால் சட்ட விரோதமானது அதற்கு இந்தத் தண்டனை என்று எனக்குத் தெரியாது. ஆகையினாலே அதைச் செய்துவிட்டேன் என்று குற்றவாளிகள் தப்பித்து விடுவார்கள் என்பதற்காகத்தான் சட்டத்திலே ஒரு பிரிசம்ஷன் வைத்து இருக்கிறார்கள். Ignorance of law is no excuse, என்று. ஆனால், உறுப்பினரவர்கள் அப்படி இருக்கக்கூடாது என்று சொல்வது எவ்விதத்திலும் சரி அல்ல.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலச்சந்திரன் அவர்கள் அந்தப் பொருளில் சொல்லவில்லை. Ignorance of law is no excuse. என்று இருக்கிறது. அதனாலே, சட்டம் தெரியாமல், அதனாலே பாதிக்கப்படக்கூடிய அபாயம் ஒவ்வொரு தனி நபருக்கும் இந்த நாட்டிலே இருக்கிறது. அந்தச் சட்டம் இருக்கக்கூடாது என்று அவர்கள் சொல்லவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே இப்படிப்பட்ட சட்டங்களைப்பற்றிக் கல்வி நிலையங்களிலே பாடப் புத்தகங்கள் மூலம் மாணவர்களுக்குக் கொஞ்சம் சொல்லிகொடுக்க வேண்டுமென்ற கருத்தைத்தான் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, அவர் சொல்வது, கல்வி என்பது வாழ்க்கையோடு இணைக்கப்பட்டு ஒட்டியதாக இருக்க வேண்டுமென்பது. இந்த அரசைப் பொறுத்த வரையில் கல்வி என்பது வாழ்க்கையோடு ஒட்டியதாக இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே இத்தகைய கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாம் பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் நம்முடைய சுதந்திரத்தைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது, கத்தியின்றி இரத்தமின்றி சுதந்திரம் பெற்றோம் என்று சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 1947—ம் ஆண்டிலிருந்து இன்று வரையில் அதை நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்லாமல், வேறு பல மாநிலங்களிலேயும் சொல்லிக்-கொடுத்துக்கொண்டு வருகிறோம். அப்படிப் படித்துக் கொடுப்பதன் காரணமாக, நம்முடைய சுதந்திரத்தைப் பெறுவதற்காக, பாரத மாதாவினுடைய கால்கள், கைகளிலும் பூட்டப்பட்டிருந்த அடிமை விலங்குகளை அடித்து உடைப்பதற்கு தங்களுடைய உயிரைத் தியாகம் செய்த தியாகிகளின் இரத்தத்திற்கு ஒரு மரியாதை இல்லாமல் போய்விட்டது.

வாஞ்சிநாதனாக இருந்தாலும், திருப்பூர் குமரனாக இருந்தாலும், பகத்சிங்காக இருந்தாலும், ஆசாத்தாக இருந்தாலும் ஜாலியன் வாலாபாக்கில் தங்களுடைய உடலைக் காவல் துறையினுடைய குண்டாந்தடிகளுக்கும், துப்பாக்கிக் குண்டுகளுக்கும்

ஆளாக்கிப் பலியாகிப் போனவர்களுடைய இரத்தமெல்லாம், கத்தியின்றி இரத்தமின்றி சுதந்திரம் பெற்றோம் என்று சொல்லு வதன் மூலமாக மரியாதைக்குரியவையாக அல்லாது போய் விடுகிறது.

அதுமட்டுமல்ல, நம்முடைய குழந்தைகளுக்குத் தேசியத்தைப் பற்றிய உணர்வைப் பொறுத்த வரையில், இப்படியிப்படியெல் லாம் கஷ்டப்பட்டுத்தான் நாம்இந்தச் சுதந்திரத்தைப்பெற்றோம் ஆகவே, நாம் நம்முடைய இரத்தத்தை சிந்தியாவது பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு, இந்த நாட்டினுடைய சுதந்திரம் பாதுகாப்பாக இருப்பதற்காக ஒவ்வொருவரும் அதற்குத் தன்னை தயாராக்கிக் கொள்ளவேண்டுமென்ற உணர்வு இல்லாமல் ஆகி விடுகிறது. ஆகவே, தேசிய உணர்வு, தேசத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு. தேசத்திற்கு எந்தத் தியாகமும் செய் வதறகு, இந்த தேசத்திற்காக தன்னுடைய தேகத்தை அழித்துக் கொள்வதற்கு தயார் ஆகின்றவர்களை உருவாக்குவதற்கு இந்த கத்தியின்றி இரத்தமின்றி சுதந்திரம் பெற்றோம் என்ற அந்தக் கொள்கையை நம்முடைய பள்ளிக்கூடங்களிலே பயின்று கொடுக் காமல் நம்முடைய விடுதலைப் போராட்டத் தியாகிகள், இரத்தம் சிந்திய தியாகிகள் இருக்கிறார்களே அவர்களைப் பற்றியும் ஒரு பாடம் பள்ளிகளில் மாணவர்களுக்குப் படித்துக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, கத்தியின்றி, இரத்தமின்றி என்று வருகின்றவாக்கியத்தை எடுத்துவிட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புவதாகத் தெரிகிறது. ஆனால் பின்னாலே அவர்கள் சொல்ல வந்த கருத்துக்களைப் பார்த்தால் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டதாகத்தான் தெரிகிறது. எனவே கத்தியின்றி இரத்தமன்றிஎன்று சொல்லுகிறபோது பலாத்கார அடிப்படையில் நம்முடைய சுதந்திரத்தை நாம் வாங்கவில்லை; நம்மை வருத்திக்கொண்டு மகாத்மா காந்தியடிகள் அவர்களின் தலைமையில் சுதந்திரத்தைப் பெற்றதாகத்தான் அந்த வரிக்குப் பொருள். அது சரியா தவறா என்று நான் சொல்ல வரவில்லை. நாமக்கல் கவிஞர் பெருமகன் எழுதிய வரிக்குள்ள பொருள் இதுதான் கத்தியின்றி, இரத்தமின்றி என்று சொல்லுகிறபோது காந்தியடிகள் தலைமையில் சாத்வக அடிப்படையில், அகிம்சா முறையில் நம்முடைய சுதந்திரத்தை நாம் வாங்கியிருக்கிறோம்; வாங்கவேண்டும் என்பதுதான் பொருள்.

அடுத்த கட்டமாக நம்முடைய நாட்டினுடைய பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்கிறபோது எல்லாவற்றுக்கும் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிற கருத்து அந்த அடிப்படையில்தான் வரவேண்டும். .. .. .. (குறுக்கீடுகள்)..



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். மேலும், மேலும் மற்றவர்கள் எல்லோரும் க்ளாரிஃபிக்கேஷன் கேட்க ஆரம்பித்துவிட்டால் இப்போது பேசிக்கொண்டிருக்கிற உறுப்பின ரால் பேச முடியாது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் ஒரு க்ளாரிஃ பிக்கேஷன் கேட்க நான் விரும்புகிறேன். கத்தியின்றி, ரத்தமின்றி சுதந்திரம் பெறப்பட்டது என்பதை மாநில அரசு ஒப்புக்கொள் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் கவிஞர் எழுதிய வரி இருக்க வேண்டுமா, இருக்கக் கூடாதா என்பதைப் பொறுத்ததாகும் இது. அந்தக் கவிஞருடைய கருத்தின் அடிப்படையில் அது ஆராயப்பட வேண்டும். அவர்கள் எழுதியது பலாத்கார அடிப்படையில் பெறவில்லை என்பதற்காகத்தான். அதை அனை வரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டினுடைய வரலாற்றிலே விடுதலைக் காக நடைபெற்ற போராட்டம் ஏராளம், ஏராளம். 1857–லே யிருந்து 1942 வரை நடைபெற்ற எல்லா போராட்டங்களிலும் அதற்குப் பிறகு அதாவது 1942-க்குப் பிறகு நடைபெற்ற எண்ணற்ற போராட்டங்களிலும் எண்ணற்ற தியாகம் செய்து, ரத்தம் சிந்தி, ஆயுதம் ஏந்திப் போராடித்தான் இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்திருக்கிறது. அவ்வாறுதான் விடுதலை பெற்றிருக்கிறோமே தவிர நாமக்கல் கவிஞர் சொல்வதுபோல் கத்தியின்றி ரத்தமின்றி இந்த நாடு விடுதலை பெறவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, காந்தியார் தலைமையில் ஒரு வகையான போராட்டம்; ரத்தம் சிந்தி ஒரு போராட்டம்; இவைகள் எல்லாவற்றுக்கு மேலாக நான் ஒரு வரலாற்று மாணவன் என்ற முறையில் சொல்கிறேன், இங்கிலாந்து நாட்டிலே சர்ச்சில் ஆட்சிப் பீடத்திலிருந்து மாறி, சுதந்திரம் தரப்படவேண்டும் என்ற கருத்துடைய அட்லி அவர்கள் பிரதமராக வந்ததால்தான் இந்த ட்ரான்ஸ்ஃபர் ஆஃப் பவர் என்ற சுதந்திரம் வெகு விரைவில் கிடைத்தது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சைனா போன்ற நாடுகளிலே நடத்தியது போல் சில நேரங்களில் அப்படிப்பட்ட பலாத்காரப் போராட்டங்கள் நடத்தப்பட்டாலும் கூட அந்தப் போராட்டங்

களின் இறுதியில் சுதந்திரம் வரவில்லை. அப்படிப்பட்ட போராட்டங்கள்பல நடந்திருக்கலாம். பகத்சிங், கட்டபொம்மன் போன்றவர்கள் நடத்தியிருக்கலாம். அது நடைபெறவில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் காந்தியடிகள் சிம்லா பேச்சுவார்த்தை போன்ற பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். பின்னர் மவுண்ட் பேட்டனை அனுப்பி விரைவாகச் சுதந்திரத்தைத் தரவேண்டும் என்று இங்கிலாந்து சர்க்கார் கேட்டுக்கொள்ள, சர்ச்சில் போனதற்குப் பிறகு அட்லி வந்து சுமுகமான முறையில் அந்த சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு முடிவு ஏற்பட்டது. இன்னும் சொல்லப்போனால் சுதந்திரப் போராட்டம் என்பது நாட்டுப் பிரிவினையில் கூட முடிந்திருக்கிறது. பேச்சுவார்த்தையின் மூலம் தான் நாட்டுப் பிரிவினை வந்து சுதந்திரம் பெற்றிருக்கிறோம். ஒரு பலாத்காரப் போராட்டத்தின் முடிவாக இந்த சுதந்திரம் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சுதந்திரப் போராட்ட வரலாறு பற்றி விமர்சிக்க ஆரம்பித்தால் அது முடிவில்லாமல் போய்க் கொண்டே இருக்கும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் கவிஞர் அவர்கள் சொன்னதன் கடைசி வரியை யாருமே சொல்லவில்லை. இந்திய அரசியலில், சுதந்திரப் போராட்டத்தில்காந்தியடிகள் வந்ததற்குப் பிறகுஎப்படி இருக்கும் என்ற நிலைமையைச் சொல்வதற்காகத்தான் கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தமொன்று வருகிறது என்று சொன்னாரே தவிர அதற்கு முன்னால் அப்படிப்பட்ட போராட்டமே நடக்கவில்லை; கத்தி எடுக்கவில்லை; ரத்தம் சிந்தவில்லை என்று சொல்லவில்லை. நாட்டிலே எப்படிப்பட்ட சுதந்திரப்போராட்டம் வரவேண்டும்; வரும் என்ற கருத்தில்தான் அவர் அவ்வாறு கூறியிருக்கிறார்.

(முற்பகல் 1–20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆனால் இந்த பேச்சு வார்த்தையினுடைய அடிப்படை முக்கியமான அம்சம் நம்முடைய குழந்தைகளுக்கு இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும், சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டும் என்கிற அந்தத் தேச பக்தி, உணர்வு, வளர்க்கப் பட வேண்டுமென்பதில் நாம் அனைவரும் ஒருமித்த கருத்து கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லா தரப்புக் கருத்துக்களையும் சொல்லியாயிற்று. இது கல்வி மானியக் கோரிக்கை.





**திரு. ரா. பெரியசாமி :** சுதந்திரம் வாங்கிய பிறகுதான் எல்லோருக்குமே ஓட்டுரிமை கிடைத்தது, அதற்குப் பிறகு தான் பேச்சுரிமை கிடைத்து, நாமெல்லாம் இங்கே சட்டமன்றத் திற்கு வந்திருக்கிறோம். இங்கே பேச்சுரிமை உண்டு, ஆகவே, அவர் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இங்கே யார் பேசலாம், யார் பேசக்கூடாது என்று உறுப்பினர் உத்தரவு போடக் கூடாது, தலைமை பீடத்தில் இருப்பவர்தான் சொல்ல வேண்டும்.

**திரு. ஆர். செங்காளியப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சுதந்திரப் போராட்டத்திலே சிறைக்கு சென்றவன்; 7 ஆண்டுக்காலம் அலிபுரம் சிறையிலே இருந்தவன். கவிஞர் அவர்கள் சொன்னதுபற்றி நம்முடைய எதிர்க் கட்சியினுடைய தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் கவிஞர் அவர்கள் சொன்னார்கள். 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்று சொன்னார் என்றால், வேறு பலாத்காரம் நடக்கப்போகிறது என்று சொல்லவில்லை. அறவழி யிலேதான், அகிம்சா தர்மத்தின் அடிப்படையிலேதான் போராட்டம் நடைபெற வேண்டுமென்று மகாத்மா காந்தி அவர்களும் சொன்னார்கள். ஆனால், தேசத்திலே இருக்கக்கூடிய தொண்டர்கள், ஊழியர்கள், அன்றுபிரிட்டிஷ் அரசாங்கத்தினுடைய கொடுமைகளைத் தாங்க முடியாத நிலைமையிலே எப்படியும் 'செய் அல்லது செத்து மடி' என்று மகாத்மா காந்தி அறை கூவல் விடுத்தார்களோ, அதை ஏற்றுக்கொண்டு நாங்கள் அனைவரும் சிறைச்சாலைக்குச் சென்றோம். அது எந்த வகையிலே வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். நாடு சுதந்திரம் பெற வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஒரே இலட்சியம் என்ற அடிப்படையிலேதான் அன்று காங்கிரஸ்காரர்களாக இருந்த நாங்கள் அத்தனைபேரும் மகாத்மா காந்தியினுடைய தலைமையை ஏற்றுக்கொண்டு சிறைக்குச் சென்றோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

***திரு. ப. ந. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டது ஒருபுறம் அகிம்சையிலும் மறுபுறம் அச்சுறுத்துதல், மிரட்டல்கள், போராட்டங்களினால் இரத்தம் சிந்தல் ஆகிய வற்றினால் இந்த நாடு விடுதலை அடைந்தது என்பதைப் பாடங்களிலே சேர்க்கவேண்டுமென்பது. இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தவர் மகாத்மா காந்தி அவர்கள் மட்டுமல்ல; நேதாஜி போன்றவர்கள் அவர்கள் ஜெர்மனியிலும் சிங்கப்பூரிலும் ஜப்பானிலும் —சென்று, அங்கே இருந்த இந்தியர்களை எல்லாம் திரட்டி வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த காரணத்தால் தான் அன்றைக்கிருந்த வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை விட்டு ஓடுவதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்கள். நாணயம் என்பது ஒருபுறம் மட்டும் அல்ல, மறுபுறமும் பார்க்க வேண்டும். நாணயம் என்பதே தலையோடு முடிந்து விடுவதல்ல,

பூவும் சேர்ந்தால்தான் நாணயம். நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. இந்த நாட்டு விடுதலைக்கும் அப்படித்தான். அஹிம்சையும், அச்சுறுத்தலும், இரத்தம் சிந்தலும் சேர்ந்துதான் இந்திய விடுதலை.

ஆகவே, அதையும் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்தக் கருத்தை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் மறுபடியும் சொல்கிறேன், நாமக்கல் கவிஞருடைய கருத்துதான் அவருடைய பேச்சிலே வந்ததே தவிர, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேதாஜியைப் பற்றிச் சொன்னார்கள். அவர் ஒரு கவிதை எழுதி அதைவெளியிடுவாரானால் அதை மாணவர்கள் படிக்கலாம்; அந்த அடிப்படையிலே அதைப் பார்க்கலாம்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கருத்தெல்லாம் சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்தியவர்களுடைய ரத்தத்தினுடைய புனிதம் கெட்டுவிடக்கூடாது; நம்முடைய தியாகத்தை நாமே நம்முடைய மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து, நாட்டைக் காப்பாற்றக்கூடிய உணர்வை உருவாக்கவேண்டுமென்பதற்காகத் தானே தவிர வேறில்லை. ஆகவே, அதனை இந்த அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி.யிலே வெற்றி பெறுகிறவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தால் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்படுகிறார்கள். ஆனால், தேர்வாணைக் குழு சம்பந்தமாக நடைபெறும் தேர்வுகளில் அவர்கள் கலந்து கொள்வதற்கான தகுதி இல்லாதவர்களாக ஆகி விடுகிறார்கள். ஆகவே, அதைப் பார்க்கிறபொழுது கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்ற அளவிற்கு, தேர்விலே வெற்றிபெற்றும் தேர்வாணைக் குழு தேர்வில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 35 மதிப்பெண்கள் பெற்ற மாணவனை வெற்றி பெற்றவன் என்று சொல்வதை விட, அவனைத் தோற்றவன் என்றே அறிவித்து, மீண்டும் ஒருமுறை தேர்வு எழுதும் வாய்ப்பைக் கொடுத்து, அவன் முறையாக வெற்றி பெறுவதற்கான வழிவகைகளை இந்த அரசாங்கம் ஆராய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுபோல் இன்றைக்கு வர்மக் கலை என்று சொல்கிற வர்மக் கலை பாரத மாதாவின் பாதமாக இருக்கிற எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமே



சொந்தமானது. விரலாலே ஒருவனை சுண்டிவிட்டு இரண்டு மூன்று நிமிஷங்களிலே நீ கீழே விழுவாய் என்று சொன்னால் அவன் கீழே விழுவான், இரண்டு மூன்று நிமிஷங்களிலே நீ இறந்து விடுவாய் என்று சொன்னால் அவன் இறந்து போவான் உடலைத் தொடாது அவனை உடனே தொலைத்து விடுகிற வர்மக் கலை போன்று எத்தனையோ கலைகள் இன்றைக்கு எங்கள் மாவட்டத்திலே இருந்து கொண்டிருக்கின்றன.

எங்கள் மாவட்டத்தில் அத்தனைபேருக்கும் அந்தக் கலை ஓரளவிற்கு தெரியுமென்றாலும், அந்தக் கலை போற்றக்கூடிய பாதுகாக்கக்கூடிய ஒரு கலையாக இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. பாதுகாப்போர் யாருமின்றி அந்தக் கலை இன்றைக்கு அழிந்து விடுகின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, வர்மக் கலையையும், சிலம்புக் கலையையும், கத்தி வீச்சுக் கலையையும் அதுபோன்ற கலைகளையும் எங்கள் மாவட்டத்தில் பாதுகாப்பதற்கு அரசு முன்வந்து, அதற்காக கல்லூரி போன்ற ஏற்பாட்டையோ பள்ளிக்கூடம் போன்ற ஏற்பாட்டையோ செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் பழமையான அந்தக் கலை அழிந்து விடக்கூடாது என்பதற்காக அரசாங்கம் அதற்கு முன்னுரிமை கொடுத்து அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய மாவட்டத்தில் சிறுபான்மையோர் நடத்துகிற பள்ளிக்கூடங்களில் அரசுப் பள்ளிக்கூடங்களிலும் படிக்கிற மாணவர்களுக்கு அந்தந்த பள்ளி வேலை வாய்ப்பு அதிகாரி வாரத்திற்கு ஒருமுறையோ அல்லது மாதத்திற்கு ஒருமுறையோ சென்று, அங்கே இந்து அல்லாத மாணவர்களை மட்டும் வேலை வாய்ப்பிற்காக அவர்களுடைய பெயர்களை பதிவு செய்கிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எங்களுடைய இந்துக் குழந்தைகள் மைனாரிட்டி குழந்தைகள் அருகில் அமர்ந்து கொண்டு, அந்தக் குழந்தைகள் எல்லாம் வேலை வாய்ப்பு அதிகாரியிடத்தில் பெயர்களை பதிவு செய்து கொள்வதற்காக போகிறபோது, எங்களுடைய குழந்தைகள் அநாதைகளைப் போல அங்கே விழித்துக்கொண்டு தாங்கள் புறக்கணிக்கப்படுகிற அந்தச் சூழ்நிலையை தங்களால் தாங்க முடியாத அளவிற்கு இருந்து, வீட்டுக்கு வந்து, அம்மா இப்படி நடக்கிறதே, ஏன் என்று கேட்கிறபோது எங்களுடைய தாய்மார்கள் எல்லாம் குழந்தைகளின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே வேலை வாய்ப்பு அதிகாரி பள்ளிக்கூடங்களுக்கு வந்து மாணவர்களுடைய பெயர்களை பதிவு செய்கிறார்கள் என்று சொன்னால், அந்த இளம் பிள்ளைகளுடைய மனதிலே இந்து, கிறிஸ்துவன், முஸ்லீம் என்று வேறுபாடு வராமல் இருப்பதற்கு, இந்து மாணவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு எங்களுடைய குழந்தைகளுக்கு வராத அளவிற்கு, இந்து மாணவர்

களை விட நாங்கள் எல்லாம் உயர்ந்தவர்கள் என்ற உணர்வு கிறிஸ்துவ மாணவர்களுக்கு, முஸ்லீம் மாணவர்களுக்கு வராத அளவிற்கு, எல்லோரும் பொது மாணவர்கள் என்ற அளவிற்கு நிலைமைகள் இருக்க வேண்டும். வேலை வாய்ப்பு அதிகாரி எல்லோருடைய பெயரையும் பதிவு செய்வதற்கான ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய மாவட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற கிருஷ்ணன் வகை என்ற சமுதாயம் பிறபட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தாலும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கொடுக்கப்படுகிற சலுகைகள் கிடைக்காத ஒரு இனமாக அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் சலுகைகள் கிடைக்கிற அளவிற்கு இந்த அரசாங்கம் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. இதற்கு முன்னாலேயும் இதை நான் குறிப்பிட்டிருக்கிறேன், அரசு முஸ்லீம் பள்ளிக்கூடம் என்பதாகும். அதை சிலபேர் முஸ்லீம் அரசு பள்ளிக்கூடம் என்று கூட சொல்வதுண்டு. அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இரண்டு கட்டிடங்கள் உண்டு. ஒன்று பழைய கட்டிடமாகவும், இன்னொன்று புதிய கட்டிடமாகவும் இருந்து கொண்டிருக்கிறது. என்ன காரணத்தாலோ அந்தப் பள்ளிக்கூடத்தின் புதிய கட்டிடம் இன்றைக்கு கூரைகள் இடிந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தில் மாணவர்கள் படிக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடத்தை அரசாங்கம் தயவுசெய்து கட்டிக் கொடுக்க வேண்டும். அங்கே மரத்தடியில் அமர்ந்திருக்கிற மாணவர்கள் படிப்பதற்கான வசதி இல்லை. சாலை ஓரத்திற்கே வந்து அவர்கள் படிக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் இதனை பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தக்களை அரசு மேல்நிலைப்பள்ளி, இரணியல் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான லேபரட்டரி வசதிகள் இல்லாமல் பல ஆண்டுகளாக அந்தக் குறைபாடுகள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அரசாங்கம் அதிகமான நிதி ஒதுக்கீட்டைச் செய்து லேபரட்டரி வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும் ஒன்றாக பாவிக்கப்படுவார்கள். இந்தியத் திருநாட்டில் எல்லோரும் சட்டத்திற்கு முன்னாலே சமம் என்று சொல்கிற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14-வது பிரிவின்படி, 'ஈக்குவாலிட்டி பிபோர் லா' என்ற தத்துவத்தை நம்முடைய அரசாங்கம் கல்வி சாலைகளில் நிலைநாட்டி காட்டுவதற்காக, இந்துக்கள்



ஆரம்பிக்கிற பள்ளிக்கூடங்களுக்கும், உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் வாங்குகிற எண்டோவ்மெண்ட் தொகையை வாங்காது நாங்களும் அவர்களைப் போல, நாங்களும் எங்களோடு வாழ்கிற கிறிஸ்துவர்களை முஸ்லீம்களைப் போல, நாங்களும் சிறுபான்மை சமுதாயத்ினரைப் போல பள்ளிக்கூடங்களையும். கல்லூரிகளையும் அமைப்பதற்கு இந்த அரசாங்கம் அனுமதி தரவேண்டும். ஒரு கண்ணிலே வெண்ணெயும் இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் இருக்கிற சூழ்நிலை மாற்றப்பட வேண்டுமென்று கேட்டு, எனக்களித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (10-4-1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

160. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் குழு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 25-2-1989 ஆம் நாளிட்ட 190 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட [அறிவிக்கைஇந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5)பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

161. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள். அறிவிப்புகள், ஏனையத் தாள்கள்.

67. கோரிக்கை எண். 17 —தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி குறித்த கொள்கை விளக்க குறிப்பு 1985-86. (தமிழ், ஆங்கிலம்.)

68. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி பற்றிய செயல்முறைத் திட்டம் 1985-86. (ஆங்கிலம்.)

69. நலிந்த பிரிவினருக்கு உதவி என்பது பற்றி நிதி நிறுவனங்கள் துறையின் கையேடு. (தமிழ்.)

[1985 ஏப்ரல் 9

70, கீழ்க்காணப் பெறும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்ற மேலவை 28-8-1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப்பெற்றது).

31-3-1983 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்
திரு. காடுவெட்டி கண்ணப்பன் :

30-6-1983 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்
மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன்,
மேலவை துணைத் தலைவர்.

31-3-1984 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்:

1. திரு. காடுவெட்டி கண்ணப்பன்
2. திரு. நெல்லை பாலாஜி
3. திரு. ஈ. வி. ஏ. வள்ளிமுத்து
4. திரு. கே. அருணாசலம்
5. திரு. பி. அங்கமுத்து
6. திரு பி. மாணிக்கம்
7. திரு. எம். பி. சுப்பிரமணியம்
8. திரு. வி. வி. வி. ஆனந்தம்
9. திரு. எம். மாசிலாமணி



(43-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

தோற்றுவாய்

கல்விச் செலவும் மாநில வரவு செலவுத் திட்டமும்

கல்விக்காக 1985-86 ஆம் ஆண்டில் "மானியக் கோரிக்கை 17—கல்வி" இன் கீழ் ஒதுக்கியுள்ள ரூ. 468 கோடி அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 2,315 கோடியில் 20 விழுக்காட்டுக்கும் அதிகமாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1985—86 வரவு-செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு :—

| | 1985-86 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்ட மில்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 259. அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றின் கட்டட பராமரிப்புச் செலவு. | 75 | .. | 75 |
| 265. பிற நிருவாகப் பணிகள் மாவட்ட விவரச் சுவடிகள். | 3 | .. | 3 |
| 277. கல்வி .. | | | |
| 1. தொடக்கக் கல்வி .. | 1,97,82 | 32,94 | 2,30,76 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி. | 1,19,35 | 1,34 | 1,20,69 |
| 3. மேல்நிலைப் பள்ளிக் கல்வி. | 31,62 | 1,53 | 33;15 |
| 4. கல்லூரிக் கல்வி .. | 40,53 | 5,53 | 46,06 |
| 5. சிறப்புக் கல்வி—வயது வந்தோர் கல்வி, தமிழ் வளர்ச்சிமுதலியவை. | 1,74 | 3,21 | 4,95 |

128—61—17

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6. விளையாட்டும், இளைஞர் நலனும் மற்றும் தேசிய மாணவர் படை. | 2,90 | 1,74 | 4,64 |
| 7. தொழில் நுட்பக்கல்வி | 13,62 | 3.45 | 17,07 |
| மொத்தம் .. | 4,07,58 | 49,74 | 4,57,32 |
| 278. கலை, பண்பாடு— | | | |
| நூலகங்கள், | 4,82 | 20 | 5,02 |
| ஆவணக் காப்பகங்கள் | 31 | 11 | 49 |
| நுண்கலைக் கல்வி | 46 | 13 | 52 |
| கலை, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாடு. | 10 | 67 | 77 |
| தொல்பொருள் ஆராய்ச்சி | 19 | 17 | 36 |
| அருங்காட்சியகங்கள் | 24 | 7 | 31 |
| மொத்தம் .. | 6,12 | 1,35 | 7,47 |
| 279. ஏனைய அறிவியல் பணிகள்— | .. | 2,27 | 2,27 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும். | 16 | .. | 16 |
| மொத்தம்—மானியக் கோரிக்கை "17—கல்வி" | 4,14,64 | 53,36 | 4,68,00 |

துறைவாரியாக நிதி ஒதுக்கீடு விவரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| கல்வித் துறை ... | 4,13,30 | 49,98 | 4,63,28 |
| மின்னணுவியல், அறிவியல், மற்றும் தொழில் நுட்பவியல் துறை. | .. | 2,29 | 2.29 |
| தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை. | 1,34 | 10,9 | 2,43 |
| மொத்தம் .. | 4,14,64 | 53,36 | 4,68,00 |





3. மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டிடங்கள், கடன்கள், முதலியவற்றிற்காக பிற மானியக் கோரிக்கைகளின் கீழ் 1985-86 இல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| | 1985-86 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டமில்லாத செலவினம். | திட்டச் செலவினம். | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| மானியக் கோரிக்கை 28. சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியைகளுக்கு வீடுகள் | .. | 20 | 20 |
| சமூகக் கல்வி .. | .. | 9 | 9 |
| நகராட்சிப் பள்ளிக் கட்டிடங்களுக்கான மானியம். | .. | 30 | 30 |
| கோரிக்கை—37. பொதுப் பணி—அரசுப் பள்ளி கல்லூரிக் கட்டடங்கள் சிறுபணிகள். | 8 | 1:44 | 1.52 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம். | 16,31 | .. | 16,31 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 309. உணவு .. | 36.02 | 53,33 | 89,35 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவுகள் — | | | |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு, ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு அரசுப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றிற்கான கட்டடங்கள். | 8 | 4,93 | 5,01 |
| 677. கடன்கள்— | | | |
| தேசிய கடன், படிப்பு உதவித் தொகைகள். | .. | 32 | 32 |
| தொழில் நுட்பக் கல்வி நிலையங்களுக்குக் கடன். | .. | 4 | 4 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன். | 6 | .. | 6 |
| 767. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடன்கள். | 4,17 | .. | 417 |
| மொத்தம் .. | 56,72 | 60,65 | 117,37 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால் 1985-86 ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 585 கோடியாகும்.

4. இவ்விடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது பின் வருவதர்கும்—அதாவது ஆதி திராவிடர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினர், பின் தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு, சீர்த்திருத்தப் பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கு ஆகும் செலவு, ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.





5. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி 477. கல்விப் பணி குறித்த கட்டடச் செலவு, 677. கடன் முதலியன). கல்விக்காக 1985-86 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளில் செலவு விவரம் வருமாறு—("+" குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினை குறிக்கும்.)

| | 1985–86-ல் புதியதாக பொறுப் பேற்ற செலவினம். | ஒப்பளிப்பு வழங்கும் செலவினங்கள். | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| I. பொதுக் கல்வி— | | | |
| 1. பள்ளிக் கல்வி (மேல் நிலைப் பள்ளிக்கல்வி உட்பட). | 12,34<br>+5 | 26,72 | 39,06<br>+5 |
| 2. வயது வந்தோர் கல்வி. | 1,38<br>+1,63 | 10 | 1,48<br>+163 |
| 3. கல்லூரிக் கல்வி .. | 5,60<br>+32 | 49 | 6,09<br>+32 |
| 4, விளையாட்டு இளைஞர் நலன். | 1,18<br>+92 | 6 | 1,24<br>+92 |
| 5. தமிழ் வளர்ச்சி | 6 | ... | 6 |
| 6. கட்டட வகையில் பொதுப் பணித் துறைச் செலவு. | 45 | | 45 |
| | 21,01<br>+2,92 | 27,37 | 48,38<br>+2,92 |
| II. (அ) தொழில் நுட்பக் கல்வி. | 5,32<br>+10 | 22 | 5,54<br>+10 |
| (ஆ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் | 9 | 2,20 | 2,29 |
| III. கலைப் பணிகள்— | | | |
| கல்வித் துறை. | 27 | 2 | 29 |
| தமிழ் வளர்ச்சித் துறை | 98 | 16 | 1,14 |
| | 27,67<br>+3,02 | 29,97 | 57,64<br>+3,02 |

II. பள்ளிக் கல்வி—

(i) பொது.

1985—86 ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 468 கோடியில் பெரும் பகுதியான ரூ. 384 கோடி பள்ளிக் கல்விக்கே (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. 30—9—1984 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் இருந்த பள்ளிகள் பற்றிய விவரங்கள் வருமாறு;—

| | பள்ளி களின் எண்ணிக்கை. | ஆசிரியர் களின் எண்ணிக் கை. | மாணவ மாணவியர் எண்ணிக் கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்.) | |
| தொடக்க நிலைப்பள்ளிகள் (1—5 வகுப்புகள்). | 28.847 | 1.16 | 48.92 |
| நடுநிலைப் பள்ளிகள் (1—8 அல்லது 6—8 வகுப்புகள்). | 5.691 | 0.67 | 28.27 |
| | 34.538 | 1.83 | 77.19 |
| உயர்நிலைப் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் (பொதுவாக 6-10/6-12 வகுப்புகள்). | 3.950 | 1.01 | 29.27 |
| மொத்தம் .. | 38.488 | 2.84 | 105.46 |

வகுப்புத் தொகுதி வாரியாக மாணவ மாணவியர் எண்ணிக்கை வருமாறு: —

| வகுப்புகள். | | மாணவ மாணவியர் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1—5 | .. | 70.44 |
| 6—8 | .. | 23.19 |
| 9—10 | .. | 8.52 |
| 11—12 | .. | 3.31 |
| | | 105.46 |



நிருவாக வாரியாக பள்ளிகளின் விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

2. 1985—86ஆம் ஆண்டில் பள்ளிகளுக்கு பின்வரும் ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்படவிருக்கின்றன:—

| | |
|---|---|
| இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பணியிடங்கள் | 500 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் உடற்பயிற்சி ஆசிரியர் பணியிடங்கள் .. | 50 |
| நடுநிலைப் பள்ளிகளுக்கும், உயர் நிலைப் பள்ளிகளுக்கும் தமிழாசிரியர் பணியிடங்கள் .. | 75 |
| உயர்நிலைப் பள்ளிகளுக்கு பி.எட்., தர ஆசிரியர் பணியிடங்கள் .. | 150 |
| நடுநிலைப் பள்ளிகளில் (ஏற்கெனவே உள்ள பகுதி நேரக் கைத் தொழில் ஆசிரியர் பணியிடங்களை உயர்த்தி) முழு நேரப் பணியிடங்கள் .. | 50 |
| | 825 |

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்:

3. பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த உள்ளூர் மக்களின் நன்கொடையையும் ஒத்துழைப்பையும் பெறும் நோக்குடன் தொடங்கி நடத்தப்பெறும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் தொடக்க காலம் முதல் 1984 முடிய மொத்தம் 740-ஐ பள்ளிக் கல்வித்துறை நடத்தியுள்ளது. அவற்றில் கடந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த 165 மாநாடுகளில் பெற்ற நன்கொடையின் மதிப்பு ரூ. 139 இலட்சமாகும்.

(ii) தொடக்கக் கல்வி.

வரவு-செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தில் முதன்மையான இடத்தைத் தொடக்கக் கல்வி பெறுகிறது. 1984—85-ல் புதிதாக 355 தொடக்கப் பள்ளிகள் (தொடக்கநிலைப் பள்ளிகள் 299-ம் நடுநிலைப் பள்ளிகள் 56-ம்) தொடங்கப்பட்டுள்ளன. பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்ச திட்டத்தில் 16 ஆவது அம்சம் ஆகும்.

இந்த அம்சத்தின் கீழ் தமிழ்நாட்டின் சாதனை பெருமை தரக் கூடியதாக இருக்கிறது என்பதைப் பின்வரும் விவரங்கள் காட்டும்:—

| (1) | வயதுத் தொகுதி 6—11 (வகுப்புகள் 1—5). (2) | வயதுத் தொகுதி 11—14 (வகுப்புகள் 6—8). (3) |
|---|---|---|
| | (சதவீதத்தில்.) | |
| அனைத்திந்தியாவிலும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1984—85 இறுதியில்) எய்த வேண்டும் எனக் குறித்த இலக்கின்படி பள்ளியில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் விழுக்காடு .. .. .. | 95.00 | 50.00 |
| தமிழ்நாட்டில்— | | |
| 1979—80-ல் சாதனை .. .. | 94.64 | 59.68 |
| 1984—85-ல் சாதனை .. .. | 98.66 | 72.18 |

2. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 1984—85-ல் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை வருமாறு:—

| வயதுத் தொகுதி. (1) | மாணவர். (2) | மாணவியர். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (இலட்சத்தில்.) | | |
| 6—11 .. .. | 0.87 | 0.83 | 1.70 |
| 11—14 | 0.67 | 0.61 | 1.28 |
| | 1.54 | 1.44 | 2.98 |





1984—85-ல் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 2.98 இலட்சம் குழந்தைகள் உட்பட ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1980—81 முதல் 1984—85 முடிய) மொத்தம் 13.67 இலட்சம் குழந்தைகள் (6—11 வயதுத் தொகுதியினரில் 8.15 இலட்சமும் 11—14 வயதுத் தொகுதியினரில் 5.52 இலட்சமும்) கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

3. பள்ளிகளில் 6—14 வயதுத் தொகுதிச் சிறுமியரைச் சேர்ப்பதில் சிறந்த சாதனைக்கு விருதுகள் தரும் திட்டம் ஒன்றை 1983—84—லிருந்து மைய அரசுக் கல்வித் துறை செயல்படுத்தி வருகிறது. 1982—83-ல் நிகழ்ந்த சாதனைக்கான விருதுகள், 1983-84 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின்கீழ் தரப்பட்டன அனைத்து மாநிலங்களிலுமுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திற்கு ஒரு சிறந்த ஊராட்சிக்கு ரூ. 25,000; நாடெங்கிலும் மொத்தம் 150 சிறந்த பிளாக்குகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 50,000; நாடெங்கிலும் மொத்தம் 65 சிறந்த மாவட்டங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 இலட்சம்; சிறந்த மாநிலங்கள் மூன்றுக்கு மாநில விருதுகள் என்றவாறு இவ்விருதுகள் தரப்பட்டன. 1983—84 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு பின்வரும் விவரப்படி மொத்தம் ரூ. 11.25 இலட்சம் விருதாகக் கிடைத்தது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| சிறந்த ஊராட்சிகளுக்கான விருதுகள்—15 ஊராட்சிகளுக்கு .. .. .. | 3.75 |
| சிறந்த பிளாக்குகளுக்கான விருதுகள்—11 பிளாக்குகளுக்கு .. .. .. | 5.50 |
| சிறந்த மாவட்டங்களுக்கான விருதுகள்—2 மாவட்டங்களுக்கு (கன்னியாகுமரி மற்றும் நீலகிரி) .. .. .. | 2.00 |
| | 11.25 |

இந்த விருதுத் தொகையைத் தொடக்கப்பள்ளிகளில் குடிநீர் வசதி, கழிப்பிடவசதி, கைத்தொழில் கருவிகள், தொழிற்கூடங்கள் ஆகியவற்றுக்காகச் செலவிட அரசு ஏற்பளித்துள்ளது.

4. பள்ளிகளில் சேரும் (6—11) மாணவ மாணவியரும் தொடர்ந்து 5ஆவது வரையில் படிக்காமல் இடையிலேயே பள்ளியில் இருந்து நின்றுவிடுவோர் விழுக்காடு (''வியர்த்தவிழுக்காடு'') 1977—78 ஆம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது. 1983—84-ல் 26 சதவீதமாகக் குறைந்து உள்ளது. இந்த நல்ல மாற்றத்திற்கு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் முக்கியமான காரணமாகும்.

5. குழந்தைகள் காப்பகங்கள் 4,140-ல் ஒவ்வொன்றிலும் இப்பொழுது ஒரு இளஞ்சிறார் பள்ளி வகுப்பும் நடத்தப்படுகிறது. இளவயதிலேயே பள்ளி செல்லும் மனப்பாங்கை வளர்ப்பதாலும், சிறுமியர் தங்கள் தம்பி தங்கையரைக் கவனித்துக்கொள்ள வீட்டில் நிறுத்தப்படுவதைத் தவிர்ப்பதாலும் இவ்விளஞ்சிறார் பள்ளிகளும் ''வியர்த்த விழுக்காட்டை'' மேலும் குறைக்க வருங்காலத்தில் உதவும். இக்காப்பகங்களிலுள்ள குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு இளஞ்சிறார் கல்வியில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இளஞ்சிறார் பள்ளி வகுப்புக்களை மேலும் 10,000 குழந்தைகள் காப்பகங்களில் தொடங்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்; 1—10 வகுப்பு பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு:**

6. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1—7—1982/15—9—1982 முதல் 1—5 வகுப்புகளிலும், 15—9—1984 முதல் 6—10 வகுப்புகளில் அமுலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1—10 வகுப்புகளில் படிப்பவர்களில் 55 இலட்சம் குழந்தைகள் 37,447 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகின்றனர். இம்மையங்களில் பெரும்பாலானவை பள்ளிக்கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும்; மற்றவை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை, நகராட்சி நிருவாகத்துறை ஆகியவற்றின் இயக்குநர்கள்; மற்றும் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் ஆணையாளர்கள்; ஆகியோரின் நிருவாகக்கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன.

7. 1—5 வகுப்புக் குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட சில விடுமுறை நாட்கள் (ஆண்டுக்கு சுமார் 20 நாட்கள்) சத்துணவு மையங்களுக்கும் விடுமுறையானாலும் அந்நாட்களுக்குரிய உணவுப் பொட்டலமும்



முதல் நாளன்றே தரப்படுகிறது. 6—10 வகுப்புக் குழந்தைகளுக்கு பள்ளி வேலை நாட்களில் சத்துணவு வழங்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்குத் தரப்படும் உணவின் அளவு வருமாறு;

| | 1—8 வகுப்புகள். | 9—10 வகுப்புகள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (அளவு கிராம்களில்.) | |
| அரிசி .. .. .. | 100 | 120 |
| பருப்பு .. .. .. | 15 | 15 |
| எண்ணெய் .. .. | 5 | 5 |
| காய்கறிகளும் மசாலாப் பொருட்களும் .. .. | 50 | 50 |

8. அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அந்தந்த சத்துணவு மையத்தில் வழங்குகிறது. 1984—85 ஆம் ஆண்டுக்கு கேர் நிறுவனம் 8 இலட்சம் குழந்தைகளுக்கு 120 நாட்களுக்குப் போதுமான அரிசியையும், எண்ணெயையும் இலவசமாக தந்தது. விறகு, காய்கறி, மசாலா பொருள்கள் முதலிய செலவினங்களுக்காக ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு 13 காசு வீதம் கணக்கிட்டு தொடரும் மானியம் தரப்படுகிறது. 500-க்குக் குறைந்த மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்துக்கு மாதம் ரூ. 20-ம், 500-ம் அதற்கு மேலும் மாணவர்களுக்கு உணவளிக்கும் மையத்திற்கு மாதம் ரூ. 30-ம் சில்லறை செலவினமாக அனுமதிக்கப்படுகிறது. பள்ளி சத்துணவு, மையம் ஒவ்வொன்றிலும் மாதம் ரூ. 150 மதிப்பூதியத்தில் சத்துணவு அமைப்பாளர் ஒருவரும், நாளைக்கு ரூ. 2 சம்பளத்தில் ஒரு பகுதி நேர சமையலரும், நாளைக்கு ரூ. 1 சம்பளத்தில் ஒரு பகுதி நேர உதவியாளும் பணி செய்கின்றனர். உணவுபெறும் மாணவர் எண்ணிக்கை 500-க்கு மேல் இருந்தால் கூடுதலாக ஒரு சமையலாளரையும், ஒரு உதவியாளரையும் நியமித்துக்கொள்ளலாம்.

9. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்த நிதி ஒதுக்கமாக கல்வி மானியத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ. 25 கோடியாகும். சமையலாளர் மற்றும் உதவியாளர் சம்பளம்; சத்துணவு அமைப்பாளர்கள் மதிப்பூதியம்; தொடரும் மானியச் செலவு முதலிய செலவினங்களுக்கு மட்டுமே இந்த ரூ. 25 கோடியாகும். பள்ளிச் சத்துணவு மையங்களுக்கு வழங்கும் உணவுப் பொருட்களின் விலையாக நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கான நிதி ஒதுக்கம் மானியக் கோரிக்கை 35. ''நுகர்பொருள் வழங்கலில்'' சேர்க்கப்பட்டுள்ளது.

இலச வஉடை;

10. 1985 செப்டம்பர் 15 ஆம் நாளிலிருந்து 1–8 வகுப்புகளில் பயிலும் தகுதியுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

இலவசப் புத்தகங்கள் கற்பலகைகள் வழங்குதல்:

11. 1–3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்கள் 13 இலட்சம் பேர்களுக்கு முதல் வகுப்பில் பாடப்புத்தகங்களும், சிலேட்டும், 2–3 வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டு வந்துள்ளது. 1972–73 ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக இந்நிறுவனம் இப்பொழுது ஆண்டு தோறும் ரூ. 1.60 கோடி செலவிடுகிறது. 1985–86-லிருந்து இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டம் 1–8 வகுப்புகளில் படிக்கும் தகுதியுள்ள ஏழை மாணவ மாணவியர் அனைவருக்கும் விரிவாக்கப்படவிருக்கிறது.

புத்தக வங்கிகள்:

12. ஏழை மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1–10–1984 நிலவரப்படி 36,553 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 13 இலட்சத்திற்கும் அதிகமாகும். உயர் வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் நன்கொடையாக வழங்கும் புத்தகங்களைக் கொண்டும், பெற்றோர் ஒத்துழைப்புடனும், சமூகத் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும், இப்புத்தக வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொடக்கப்பள்ளிக் கட்டிடங்கள்:

13. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980–81 முதல் 1982–83 முடிய மூன்று ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டித்தருவதற்கான ஒரு பெருந் திட்டம் சுமார் 30 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் 4,500-க்கு கட்டிடங்கள் கட்டித் தரப் பட்டன. தனியார் மற்றும் நகராட்சித் தொடக்கப்பள்ளிகளுக்கு மானியம் தர ரூ. 21 இலட்சமும், அரசு தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்காக ரூ. 3 இலட்சமும் 1985–86-ல் ஒதுக்கப் பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களுக்காக "சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கையின்" கீழ் தனியே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகள்:

14. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1–6–1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டிடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதையும் பள்ளிக் கல்வித்துறை கவனித்து வருகிறது. இப்பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 97,509 ஆகும்.



நகராட்சி/மாநகராட்சி தொடக்கப்பள்ளிகள்:

15. 1983–84-ல் நகராட்சிகளும், சென்னை, மதுரை, கோயம் புத்தூர் மாநகராட்சிகளும் நடத்தி வந்த தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை 1,546 ஆகும் (1,128 தொடக்கநிலை மற்றும் 418 நடுநிலைப்பள்ளிகள்). 16,385 ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணி செய்கின்றனர். நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன்; அவ்வாறு வசூலாகும் தொகையில் 50 விழுக்காட்டுக்கு ஈடான தொகையினை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகள், மாநகராட்சிகள்(சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஆகியவற்றின் தொடக்கக் கல்விக் கணக்கு நிதியில் துண்டுவிழும் முழுத் தொகையினை அரசே ஈடுசெய்து வருகிறது.

(ii) உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1984–85 இல் தமிழ்நாட்டில் 14–16 வயதுத் தொகுதியினர் 17.95 இலட்சம் பேர்களுள் 47.45 விழுக்காடாகிய 8.52 இலட்சம் பேர் உயர்நிலைப்பள்ளிகளில் 9–10 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1984–85 இல் உயர்நிலைப்பள்ளி வகுப்புகள் நடைபெற்று வந்த பள்ளிகளின் எண்ணிக்கை வருமாறு:—

| | சாதாரணப் பள்ளிகள் (ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேஷேன் பள்ளிகள் உட்பட). | மைய அரசின் உயர்நிலைக் கல்வி வாரியம் போன்றவற்றோடு இணைந்தவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உயர்நிலைப் பள்ளிகள் | 2,387 | 89 | 2,476 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 1,421 | 53 | 1,474 |
| மொத்தம் .. | 3,808 | 142 | 3,950 |

1984–85–இல் மேற்கண்ட 3,950 பள்ளிகளில், வெவ்வேறு நிலைகளில் பயின்று வந்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | மாணவர்களின் எண்ணிக்கை. (இலட்சத்தில்). |
|---|---|
| 8 ஆம் வகுப்பும் கீழும் .. .. | 16.44 |
| 9–10 வகுப்புகள் .. .. | 8.52 |
| 11–12 வகுப்புகள் .. .. .. | 3.31 |
| மொத்தம் .. | 28.27 |

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் (1980–81 முதல் 1984–85 முடிய) மொத்தம் 421 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன (1984–85 இல் திறந்த 110 உயர்நிலைப் பள்ளிகள் உட்பட).

2. அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சில உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெறுகின்றன. 1984–85 முடிய 1,123 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்படும் பள்ளிகளுக்கு அண்மை ஆண்டுகளில் ஆய்வுக்கூட கட்டட வகையிலும், அறிவியல் தளவாடங்கள் வகையிலும் சேர்ந்து ஒரு பள்ளிக்கு ஏறத்தாழ ரூ. 1.40 இலட்சம் செலவிடப்படுகிறது. இதுவரையில் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத, கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் சோதனைகளை நடத்திக்காட்ட உதவும் வண்ணம் கல்வி மாவட்டங்கள் 51-இல் ஒவ்வொன்றிலும் ஒரு நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டி செயல்பட்டு வருகிறது.

3. மாநில அளவில் ஆண்டுதோறும் நடத்தும் அறிவியல் கண்காட்சிகள் ஆண்டுதோறும் வெவ்வேறு மாவட்ட தலைமையிடங்களில் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் அறிவியல் திறனை ஊக்குவிப்பதும், அறிவியல் பயிற்றுந் தரத்தினை மேம்படுத்துவதும் இக்கண்காட்சிகளின் குறிக்கோளாகும். தென் மாநிலங்களுக்காக பெங்களூரிலுள்ள விசுவேசவரய்யா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் ஆண்டுதோறும் நடத்திவரும் "தென் இந்திய அறிவியல் கண்காட்சியில்" 1980-ல் இருந்து தமிழகப் பள்ளிகளும் கலந்து கொள்கின்றன. 1985-இல் இக்கண்காட்சி பெங்களூரில் நடந்தது. இக்கண்காட்சியின் மிக உயர்ந்த பரிசு "அறிவியல் காட்சியங்களுக்கான தேசிய மன்றம்"



வழங்கும் படிப்புதவித் தொகையாகும். அப்படிப்புதவித் தொகையை இவ்வாண்டு கோவை பீளமேடு சர்வஜன மேல் நிலைப்பள்ளி மாணவர் திரு. ஏ. ஜி. கல்யாணசுந்தரம் பெற்றுள்ளார். அறிவியல் காட்சிப் பொருள்களிலேயே சிறந்ததை உருவாக்கியதற்காக அப்பள்ளிக்கு கேரள முதலமைச்சர் கேடயமும் கிடைத்துள்ளது.

4. மைய அரசுக் கல்வி அமைச்சகம் சென்னையில் கல்வித் தொலைக்காட்சிக்கான படநிலையம் ஒன்று கட்ட ரூ. 40 இலட்சம் மானியம் தர கொள்கை அளவில் இசைந்துள்ளது. வீடியோ நிழற்படக் காமிராக்களும், அதனோடு இணைந்த கருவிகளும் வாங்க அவ்வரசினர் ஏற்கனவே ரூ. 12 இலட்சத்திற்கு மேல் மானியம் வழங்கியுள்ளனர்.

**உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்கள்:**

5. 1985–86 வரவு-செலவு மதிப்பீட்டில் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளுக்கான கட்டிட மானியம் .. | 13 |
| **அரசு உயர்நிலைப்/மேல்நிலைப்பள்ளிகளுக்கான கட்டிடங்கள் :** | |
| சிறு பணிகள் .. .. .. .. | 144 |
| முன் ஆண்டுகளில் ஏற்பளித்து முடிவுறாமல் உள்ள கட்டட வேலைகளுக்கு 1985-86 இல் நிதி ஒதுக்கம் .. .. .. .. | 62 |
| புதுப்பணிகள் .. .. .. .. | 100 |
| வெள்ளம் முதலியவற்றால் சேதமாகும் கட்டிடங்களின் மராமத்துப் பணிகளுக்காக .. .. | 5 |
| மொத்தம் .. | 324 |

6. பெண்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கழிவறை வசதிகள் செய்வதற்கான ஒரு திட்டம் மொத்தம் ரூ. 5 கோடி செலவில்

செயல்படுத்தப்படுகிறது. இதில் ரூ. 3.25 கோடிக்கு 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் ஏற்பளிக்கப்பட்டது. எஞ்சிய ரூ. 1.75 கோடியில் ரூ. 75 இலட்சம் 1985-86-லும் மீதி ரூ. 1 கோடி அதற்குப் பின்னரும் செலவு செய்யப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படும். சிறு பணிகளுக்காக என்று மேலே குறித்துள்ள ரூ.144 லட்சத்தில் கழிவறைகளுக்கான நிதி ஒதுக்கமும் சேர்ந்துள்ளது.

**கல்விச் சலுகைகள், படிப்பு உதவித் தொகைகள் மற்றும் பிற ஊக்குவிப்புப் பணிகள்:**

7. தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பொதுவாக 1—12 வகுப்புகளில் ஏறத்தாழ அனைத்து நிலைகளிலும் அனைவருக்கும் இலவசமாகும். ஆதிதிராவிடர் மற்றும், பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்கள் சிறப்பு படிப்பு உதவித் தொகைகளையும் இதர வசதிகளையும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். அதேபோன்ற வசதியை பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் பிற்பட்டோர் நலத்துறையிடமிருந்து பெறுகின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தைப் பள்ளிக் கல்வித்துறை நிருவகித்து வருகிறது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு புதிதாகப் படிப்புதவித் தொகைகள் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகையினை பெற்ற மாணவர் மேல்நிலைக் கல்வி உட்பட, பள்ளிக் கல்வியை முடித்து வெளி வரும்வரை இவ்வுதவித் தொகையினைப் பெறுவார். இப்படிப்புதவித் தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

8. ஆதிதிராவிடர் மற்றும்பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்கு பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 500 உயர்நிலைப்பள்ளிகளில் 8—10 வகுப்புகளிலும் 300 மேல் நிலைப் பள்ளிகளில் 11, 12 வகுப்புகளிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1984-85-ல் மொத்தம் 12,000 மாணவர்கள் பயன் பெற்றனர்.

9. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தவறிய மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே மூன்று மாத காலம் சிறப்பு போதனை தரும் புதிய திட்டம் ஒன்று முதன் முதலாக 1984-85-ல் செயல்படுத்தப்பட்டது. அவ்வாறு தவறிய மாணவர்களில் 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு 1984 ஜூலை—அக்டோபர் மாதங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொரு பள்ளியிலும் 20லிருந்து 30 மாணவர்கள் வரை சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக அப்பள்ளிகள் ஒவ்வொன்றிலும் குறிப்பாக நியமிக்கப்பட்ட இரண்டு முழுநேர பி.டி. ஆசிரியர்கள் அவர்களுக்கு போதனை அளித்தனர். அந்தந்த இடத்திலுள்ள தேவை மற்றும் வசதிக்கேற்ப பள்ளி நேரத்திலோ பிற நேரத்திலோ இந்த போதனை தரப்பட்டது.



**(iv) பள்ளிப் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள்:**

வாழ்க்கைக் கல்விக்கான முதல் அமைச்சர் திட்டம்:

பள்ளிகளில் தற்பொழுது குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படும் பாடங்கள் பெரும்பாலும் ஏட்டறிவு சார்ந்தவையாகவே உள்ளன. அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் இக்கல்வி முறை உதவுவதாக இல்லை. தொடர்ந்து படிக்காமல் பல்வேறு கட்டங்களில் பள்ளி வாழ்க்கையை நிறுத்தி விடுபவர்களுடைய தேவைகளை இம்முறை கணக்கிற் கொள்ளுவதேயில்லை. வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் பள்ளிக் கல்வியானது அனைத்து மட்டங்களிலும் தொழில் மற்றும் வேலைவாய்ப்போடு இணைந்ததாக ஆக வேண்டும் என்பதாகும். மாணவ மாணவியருக்குப் பள்ளிகளில் கற்றுத்தரப்படும் திறன்கள் பிற்காலத்தில் அவர்கள் பொருத்தமான வேலையில் சேரவோ, சுயமாகத் தொழில் நடத்தவோ ஆற்றல் வாய்ந்தவர்களாக உருவாக்க உதவ வேண்டும். உழைப்பின் கௌரவத்தைக் குழந்தைகள் உணரும்படியான மனநிலையை உருவாக்க வேண்டும். கல்விமுறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளி குறைக்கப்பட்டு வாழ்க்கைப் பிரச்னைகளை சமாளிக்க வல்லவர்களாக குழந்தைகள் ஆக வேண்டும். இத்திட்டத்திற்கு மிகப்பெரும் முதலீடு தேவை. அண்மைக் காலமாக கல்வியைத் தொழில் மயமாக்குவதன் இன்றியமையாமையை மைய அரசும் வலியுறுத்தி வருகிறது. எனவே, இம்மாபெரும் திட்டத்திற்கு கணிசமான மைய அரசு நிதியுதவி, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிட்டும் என்று இவ்வரசு நம்புகிறது. மேலும் மைய அரசின் ஆதரவுடன் உலக வங்கி உதவியும் இத்திட்டத்திற்கு கிடைக்கும் என்று நம்பிக்கையும் உள்ளது.

2. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் 1984-85 லேயே தொடங்கப்பட்டு விட்டன. தற்பொழுது 1—12 வகுப்புகளில் கற்றுத்தரும் பாடங்கள், பாடத்திட்டம், பாடநூல்கள் ஆகியவற்றை புதிய கல்வித் திட்டத்தின் கோட்பாடுகளுக்கு ஏற்ப திருத்தியமைக்க அரசு குழுக்களை அமைத்துள்ளது. அவை தயாரிக்கும் புதிய பாடத் திட்ட வரைவுகள் வெளியிடப்பட்டு கல்வியாளர்களுடைய கருத்துக்களும் மற்றவர்கள் கருத்துக்களும் கோரப்படும். இதுவரை தொழிற்பாட வகுப்புகள்

தொடங்கப்பட்டிராத பல மேல்நிலைப்பள்ளிகளில். 1984-85 முதல் தொழிற் பாட வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. மேல்நிலைப் பள்ளிகளில் பொதுப் பாடங்களை பயில்பவர்கள் படிக்க வேண்டியுள்ள விருப்பப் பாடங்கள் நான்கில் ஒன்றுக்கு பதிலாக தொழிற் பாடம் ஒன்றைக் கற்றுத்தர 1984-85 ஆம் ஆண்டு முதல் வகை செய்யல மென்று விருப்பமுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது. மேலும் சுமார் 750 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் தங்கள் விருப்பத்தின் மேல் 1984-85 ஆம் ஆண்டு முதல் 9—10 வகுப்பு மாணவர்களுக்கும் தொழிற்பாடம் ஒன்றைக் கற்றுத்தர. அனுமதிக்கப்பட்டன. ஆங்காங்கு கருத்தரங்குகள பல நடத்தி வாழ்க்கைக் கல்வியின் கோட்பாடுகள் ஆசிரியர்களிடையேயும், தலைமை ஆசிரியர்களிடை யயும் பரப்பபப்பட்டுள்ளன.

3. தற்பொழுதுள்ள பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்ட பள்ளிப் பாடப்புத்தகங்களின் புதிய வடிவங்களை அண்மையில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பின்வரும் திட்டப்படி வெளியிட்டுள்ளது:—

பாடப் புத்தகங்களின் புதிய வடிவங்கள் அமுலுக்கு வந்துள்ள வகுப்புகள்:—

| ஆண்டு. | கணிதம். | புவியியல். | அறிவியல். | வரலாறு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980–81.. | 1—3 | .. | .. | .. |
| 1981–82.. | 4, 7, 9 | 4, 6 | 3, 4, 6 | 3, 4, 6 |
| 1982–83.. | 5, 8, 10 | 5, 7, 9 | 5, 7, 9 | 5, 7, 9 |
| 1983–84.. | .. | 8, 10 | 8, 10 | 8, 10 |

| | ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலத் துணைப் பாடம். | தமிழ்த் துணைப் பாடம். | தமிழ் இலக்கணம். |
|---|---|---|---|---|---|
| | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1981–82.. | 3 | 1—3 | .. | 9 | .. |
| 1982–83.. | 4, 6 | 4, 6 | 6 | 6 | .. |
| 1983–84.. | 5, 7, 9 | 5, 7, 9 | 7, 9 | 7 | 9 |
| 1984–85.. | 8, 10 | 8, 10 | 8 | 8 | 8, 10 |



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்:

4. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்ட மற்றும் வட்ட கூட்டுறவு சங்கங்கள் 54 இன் மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங்களின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன. இக் கூட்டுறவு சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் தனது வெளியீடுகளை தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பளை செய்கிறது.

நோட்டுப் புத்தகங்கள்:

5. தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு நோட்டுப் புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்து வருகிறது. 1979–80 முதல் 1983–84 முடிய இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை நோட்டுபுத்தகங்களின் மதிப்பு ரூ. 12 கோடிக்கும் அதிகமாகும். 1985–86 ஆம் ஆண்டில் தயாரிக்க இருக்கும் நோட்டுப்புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 2 கோடியாகும்.

6. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிவரும் வேறு பணிகளில் சில 1—3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக பாட நூல்களை வழங்குதல்; அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்குதல்; பள்ளி சாராக் கல்விக்கான புத்தகங்கள், தமிழில் கல்லூரிப்பாட நூல்கள், தமிழ் வளர்ச்சிக்கான பல்வேறு நூல்கள் ஆகியவற்றை வெளியிடுதல் முதலியவையாகும்.

7. பிஜித் தீவில் வாழும் தமிழர்களிடமிருந்து வந்த வேண்டுகோளின் பேரில் அந்நாட்டுக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்காக தமிழ் பாட நூல்களை இலவசமாக அனுப்பி வைக்க பாடநூல் நிறுவனம் முன்வந்துள்ளது. முதல் வகுப்பிற்கான தமிழ்ப் பாட நூல்கள் 10,000 படிகளும், இரண்டாம் வகுப்பிற்கான தமிழ்ப் பாட நூல்கள் 10,000 படிகளும், ஆக மொத்தம் 20.000 பாட நூற்படிகள் (மொத்தம் ரூ. 60,000 செலவில்) அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன. பிஜித் தீவில் உள்ள தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிப்பதற்காக கணவனும் மனைவியும் ஆசிரியராக உள்ள இரண்டு தம்பதியினரைக் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பிவைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### (v) ஆசிரியர் பயிற்சி.

தற்பொழுது பின்வரும் விவரப்படி அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 74 உள்ளன:—

| | ஆடவர். | மகளிர். | மொத்தம். |
|---|---|---|---|
| அரசு .. .. .. | 14 | 14 | 28 |
| அரசு (சமூகநலத்துறை).. | .. | 1 | 1 |
| (உதவிபெறும்) தனியார் | 14 | 31* | 45 |
| | 28 | 46 | 74 |

[*இவற்றில் சென்னை—7-ல் உள்ள கிறிஸ்தோபர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடு இணைந்த இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பிரிவு 1-ம் இளஞ்சிறாருக்கான ஆசிரியை பயிற்சி நிலையங்கள் 3—ம் அடங்கும்.]

2. 1984-85-லிருந்து ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 40 மாணவர்கள் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

3. கருநாடக இடைநிலை ஆசிரியர் பதவிச் சான்றிதழ்களை மதிப்பீடு செய்வது குறித்த கோட்பாடுகளை வரையறுத்து அரசு தெளிவான ஆணைகளை அண்மையில் பிறப்பித்துள்ளது. இதன் மூலம் அச்சான்றிதழ்களை பெற்றவர்களுடைய பிரச்னை தீர்வடைந்துள்ளது.

4. இளநிலை ஆசிரியர்கள் (ஹையர்கிரேடு), இடைநிலை (செகண்டரி கிரேடு) தகுதி பெற்று இடைநிலைத் தகுதிக்கான ஊதியத்தைப் பெற வகை செய்யும் பொருட்டு தமிழ்நாடு கல்வியாராய்ச்சி—பயிற்சி நிறுவனம் நடத்திவரும் 5 மாத அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சியில் இதுவரை 30,000 ஆசிரியர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இப்பொழுது ஆண்டுதோறும் 10,000 பேர் பயன்பெறுகின்றனர்.

5. ஆங்கில மொழிப் பயிற்றுவிப்பு மேம்பாட்டிற்கான 10 மையங்கள் 1984–85-இல் 6—8 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத் தரும் ஆசிரியர்கள் 2,340 பேருக்கு ஆங்கிலம் கற்பித்தலில் 3 வாரப் பயிற்சியும்; 9—10 வகுப்புகளில் ஆங்கிலம் கற்றுத்தரும் ஆசிரியர்கள் 990 பேருக்கு 4 வாரப் பயிற்சியும் நடத்தின.



6. பெங்களூரிலுள்ள வட்டார ஆங்கிலப் பயிற்சி நிறுவனத்தை நடத்த இவ்வரசு ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் அளவுக்கு நிதியுதவி செய்கிறது. 1984-85 இல் உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளி ஆங்கில ஆசிரியர்கள் 16 பேர் அந்நிறுவனத்தில் நான்கு மாதப் பயிற்சி பெற்றனர்.

### (vi) தமிழ்நாடு கல்வியாராய்ச்சி–பயிற்சி நிறுவனம்.

தமிழ்நாடு கல்வியாராய்ச்சி-பயிற்சி நிறுவனம் பள்ளிக் கல்வித் துறையின் கல்வித்தர வளர்ச்சிப் பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. தொடக்கப்பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி முடிய அனைத்து நிலை ஆசிரியர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், பணிக்களரிகள், புத்தறிவுப் பயிற்சிகள் ஆகியவற்றை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இளநிலை ஆசிரியர்களுக்கான அஞ்சல்வழி மற்றும் நேரடித் தொடர்பு பயிற்சி, மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் உள்ள ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் சுமார் 3,100 பேருக்கும் 10 மாத சான்றிதழ் வகுப்பு ஆகியவையும் இந்நிறுனம் நடத்தும் பயிற்சிகளில் அடங்கும். இந்நிறுவனம் ஆசிரியர்களுக்காக மேலும் பல பயிற்சித் திட்டங்களை நடத்த 1985-86 இல் ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வியைச் சார்ந்த பின்வரும் சிறப்பு முன்னோடித் திட்டங்களை யூனிசெப் உதவியுடன் இந்நிறுவனம் செயற்படுத்தி வருகிறது.—

| திட்டம். (1) | செயற்படுத்தப்படும் இடங்கள். (2) |
|---|---|
| (i) தொடக்கக் கல்விப் பாடத் திட்டத்தைப் புதுப்பித்தல். | 130 தொடக்கப்பள்ளிகள் (50,000 மாணவர்கள்.) |
| (ii) சமுதாய வளர்ச்சியோடு இணைந்த கல்வி வளர்ச்சி–35 வயது முடிய அனைவருக்கும் அவரவருக்கு இசைந்த தொழிற் சார்ந்த கல்வி அளித்தல். | பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 5 சமுதாய மையங்கள். |
| (iii) தொடக்கக் கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்குதல் (பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விட்ட 9– 14 வயதுத் தொகுதியினருக்கு பள்ளி சாராக் கல்வி முறையை உருவாக்குதல்). | 74 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள். |
| (iv) இளஞ்சிறார் கல்வி (3—5 வயதுக் குழந்தைகளுக்கு) | இராமநாதபுரம் மாவட்டம் சாரியாப்பட்டி வட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள 61 இளஞ்சிறார் பள்ளிகள். |

**மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வி:**

3. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ''ஐக்கிய நாடுகள் நிதி'' (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித் தொகையைக் கொண்டு 1980 நவம்பர் முதல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகை கட்டுப்பாட்டுக் கல்வியை செயல்படுத்துவதற்கான ஒரு மாபெரும் திட்டத்தை தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சுமார் 1.5 லட்சம் பேர்களுக்கும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் 7,000 பேர்களுக்கும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியில் பயிற்சி தரப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியின் அடிப்படைத் தன்மை, பயிற்று முறைகள் ஆகியவை பற்றிய வெளியீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

4. சென்னையிலும் வேறு சில இடங்களிலும், ஆசிரியர்கள் பயன் பெறுவதற்கான தொடர்கல்வி மையங்களை கல்வியாராய்ச்சி பயிற்சிநிறுவனம் நடத்தி வருகிறது. தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி, 6—10 வகுப்புகளில் தமிழ் கற்றுத் தரும் ஆசிரியர்கள் திறனை வளர்க்க அஞ்சல் மற்றும் வானொலி வழிப் பயிற்சி ஆகியவற்றையும் நடத்தி வருகிறது.

**அனைவருக்குமான (அஞ்சல் முறைப்) பள்ளி**

5. உயர்நிலைப்பள்ளி நிலையில், பள்ளி சாராக் கல்வியினை விரிவாக்கும் பொருட்டு, அனைவருக்குமான (அஞ்சல் முறைப் பள்ளியை (Open School) மாநில கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் தொடங்கியுள்ளது. ஏற்கெனவே 8-வது வகுப்பு தேறி 15 வயது நிறைந்தவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம். முதலில் 2,500 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர். அஞ்சல் வழிப் பயிற்சியும் நேரடித் தொடர்பும் இணைந்த இப்பள்ளி 12 மாத காலம் நடத்தப்பட்டு எஸ்.எஸ்.எல்.சி.-க்கு இணையான கல்வி தரப்படும். இதற்கான பாடத்திட்டம் ஆயத்தம் செய்யப்பட்டு பாடத் தொகுப்புகளும் அச்சிடப்பட்டு வருகின்றன.

### (vii) பள்ளி ஆசிரியர்கள் ஆசிரியர்களல்லாத பணியாளர்களின் நலன்

கடந்த சில ஆண்டுகளில் ஆசிரியர்கள் பெற்ற நன்மைகளில் முக்கியமானவை வருமாறு: —

(1) ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் 1—6—1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டது.



(2) இளநிலை ஆசிரியர்களை, இடைநிலை ஆசிரியர்களாக உயர்த்த அஞ்சல் வழி மற்றும் நேரடித் தொடர்புப் பயிற்சி தொடங்கப்பட்டது;

(3) இளநிலை மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு அவரவர் ஊதிய விகிதத்தில் 1-6-1981 முதல் ஓர் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. இச்சலுகை ஓராண்டுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கும் மற்றும் நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும், கூடுதல் தலைமை ஆசிரியர்களாகவும் உள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது;

(4 இடைநிலை தகுதிபெறும் இளநிலை ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதம் தரப்படுவது; மற்றும் பி.எட். தகுதி பெறும் நடுநிலைப் பள்ளி (இடைநிலைத்தர) தலைமை ஆசிரியர்களுக்கு பி.எட். சம்பள விகிதம் தரப்படுவது;

(5) நடுநிலைப் பள்ளிகளிலுள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளை படிப்படியாக முழுநேரப் பதவிகளாக உயர்த்துதல்.

(6) இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் அனைவருக்கும் 1-1-198[illegible] முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாகத் தர உயர்வு;

(7) தத்தம் நிலையில் 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்குச் சிறப்புநிலை வழங்கும் சலுகை 1-6-1981 முதல் இளநிலை/இடைநிலை ஆசிரியர்களுக்கும், 1982-83 முதல் பி.எட். தர ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்டது.

(8) அனைத்து ஆசிரியர்களுக்கும், 1982—83 ஆம் ஆண்டிலிருந்து ஈட்டிய விடுப்பு 3 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.

(9) உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி வேலைநாட்கள் 1984—85-லிருந்து 220-லிருந்து 200ஆக குறைக்கப்பட்டது. (அப்பள்ளிகள் நாள்தோறும் வேலை செய்யவேண்டிய நேரம் 5 மணியிலிருந்து 5½ மணியாக மாற்றப்பட்டது).

(10) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியரும், ஓர் இளநிலை உதவியாளரும் விடுமுறையில்லாத பணியைச் சார்ந்தவராக அறிவிக்கப்பட்டது.

(11) ஆசிரியர்களது குறைகளை உடனுக்குடன் உரிய வட்டத்தில் தீர்த்துவைக்கும் பொருட்டு, கல்வி மாவட்டம், வருவாய் மாவட்டம் மற்றும் மாநில நிலைகளில் ''ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழுக்கள்''

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கான நலன்:

(12) மேல்முறையீட்டின் பேரில் மீண்டும் பணியில் சேர்க்கப்பட ஆணையிடப்படுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்களை நிருவாகங்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ள வகை செய்தலும், தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பெற்ற ஆசிரியர்கள் இன்னலுக்குட்படுத்தாமல் தடுத்தலும்;

(13) சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளைத் தவிர பிற தனியார் பள்ளிகளில் நியமனங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலமே செய்யப்பட வேண்டும் என்ற விதியையும் நியமனங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 விழுக்காடும் பிற்பட்டவர்களுக்கு 50 விழுக்காடும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற விதியையும் அமுலாக்குதல்;

(14) தனியார் பள்ளி ஆசிரியர்களும் பிற பணியாளர்களும் பணியிலிருக்கும்பொழுதே இறந்து அவர்கள் குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்தால் அவர்கள் மகன்/மகள்/மனைவி/கணவன் ஆகியோருக்கு கருணை அடிப்படையில் அப்பள்ளிகளில் நியமனம் செய்துகொள்ளும் சலுகை;

(15) தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு பலவகைக் கடன்களும் முன்பணங்களும்;

(16) தனியார் பள்ளிகளில் சராசரி மாணவர் வருகை ஆகஸ்டு மாதத்தில் உள்ளதன் அடிப்படையில் அப்பள்ளிக்கு ஆசிரியர் மாணவர் விகிதத்தின்படி நிர்ணயிக்கும் மொத்த ஆசிரியர் எண்ணிக்கையை அப்பள்ளி ஆண்டு முடியும் வரைத் தொடர்ந்து கடைபிடித்தல்;

*அரசு அல்லாத கல்வி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்.

2. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற பள்ளி ஆசிரியர்களுக்கு 1-6-1970-லிருந்தும் தனியார் பள்ளிகளின் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 1-4-1972-லிருந்தும், தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு 2-10-1970-லிருந்தும், பிற வகையான தனியார் கல்வி நிலையப் பணியாளர்களுக்கு வேறு வேறு நாட்களிலிருந்தும் தாராள ஓய்வூதிய விதிகளின் பயன்கள் தரப்பட்டுள்ளன. தாராள ஓய்வூதிய விதிகளின்கீழ் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் கணக்கிடும் முறையில் 1-10-1979 அல்லது



1985 ஏப்ரல் 9]

அதற்குப் பின் ஓய்வு பெற்றவர்களைப் பொறுத்தவரை சிறப்புச் சலுகை தந்து ஆணைவெளியிட்டது, 30-9-1979 அன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்று 1-10-1979 அன்று உயிருடனிருந்த அரசுப் பணியாளர்களுக்கும் 1-10-1979-க்குப் பின் ஓய்வு பெறுபவர்களுக்குரிய சிறப்புச் சலுகையை 1-10-1979 லிருந்து விரிவாக்கி டெல்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றின்படி 1984 சூன் மாதத்தில் நிதித்துறை ஆணை வெளியிடப்பட்டது. அரசு அல்லாத கல்வி நிறுவனங்களிலிருந்து ஓய்வு பெற்று தாராள ஓய்வூதிய விதிகளின் கீழ் பயன்களுக்கு அருகதையுள்ளவர்களில் 30-9-1979 அன்று அல்லது அதற்கு முன் ஓய்வு பெற்று 1-10-1979 அன்று உயிருடனிருந்தவர்களுக்கும் 1984 சூன் மாத நிதித்துறை ஆணையில் (அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்குத் தரப்பட்ட அதே போன்ற சலுகைகளை விரிவாக்கி கல்வித் துறையிலிருந்து ஆணை வெளியாகியுள்ளது.

ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி—

3. ஆசிரியர்களும், அவர்களது குடுப்பத்தினரும் வறுமை முதலியவற்றால் வாடும் பொழுது, நிதியுதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற்படிப்புக்கான உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைக்குட்பட்டு அளிப்பதற்கும் இந்நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. 1984—85-ல் இந்தப் படிப்புதவித் தொகைகளை 126 மாணவர்கள் பெற்றனர். நிதியுதவி பெற்ற ஆசிரியர்கள் எண்ணிக்கை 23 ஆகும்.

ஆசிரியர்களுக்கான விருதுகள்—

4. பள்ளியாசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1984—85 ஆம் ஆண்டுக்கு பின்வரும் விவரப்படி 207 ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் .. .. .. | 101 |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள். | 102 |
| ஆங்கிலோ—இந்தியப் பள்ளி ஆசிரியர்கள் .. | 2 |
| மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்கள் .. .. | 2 |
| | 207 |

தமிழகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் எண்மரும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஐவரும் மைய அரசிடமிருந்து 1984 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதுகளையும் பெற்றுள்ளனர்.

## III. மேல்நிலைப் பள்ளிக் கல்வி.

தமிழ்நாட்டில் 1984–85-ல் செயல்பட்டு வந்த 1474 மேல்நிலைப் பள்ளிகளின் நிருவாக வாரி விவரங்கள் வருமாறு;—

| | | |
|---|---|---|
| அரசு .. .. .. .. | 675 | |
| அரசு (தொழில் நுட்பம்) .. .. | 14 | |
| நகராட்சி மற்றும் மாநகராட்சி .. | 60 | |
| தனியார் .. .. .. | 582 | 1,331 |
| ஆங்கிலோ-இந்திய மேல்நிலைப் பள்ளி .. .. | | 27 |
| மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி .. .. | | 63 |
| | | 1,421 |
| இடைநிலைக் கல்விக்கான மைய அரசு வாரியத்தோடு (C.B.S.E.) இணைந்த மேல்நிலைப் பள்ளிகள் .. | | 53 |
| | | 1,474 |

இப்பள்ளிகளில் 1984–85-ல் புதிதாகத் தொடங்கிய பள்ளிகள் 39 (அரசு—13; தனியார்—25; நகராட்சி—1). மேற்கண்ட 1,421 மேல்நிலைப் பள்ளிகளில் [(CBSE) உடன் இணைந்த 53 பள்ளிகள் தவிர மற்றவை] மேல்நிலை வகுப்புகளில் பயின்று வந்த மாணவ மாணவியர் எண்ணிக்கை பின்வருமாறு;—

| | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| பொதுப்பாடங்கள். | 1,57,905 | 1,12,165 | 2,70,070 |
| தொழிற் பாடங்கள். | 40,695 | 20,807 | 61,502 |
| | 1,98,600 | 1,32,972 | 3,31,572 |

2. 1978–79-ல் மேல்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்ட பொழுது மேல்நிலை வகுப்புகளில் கலை, அறிவியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவையில் பெரும் பகுதி,



மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பதவிக்கு முழுத் தகுதி பெற்ற உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தும், முதுகலைப்பட்டத் தகுதி பெற்றிராத உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை மேல்நிலை வகுப்புகள் நடத்த ''உட்படுத்தியும்'' பூர்த்தி செய்யப்பட்டது. அவ்வாண்டும் அதற்குப் பின்னர் உள்ள ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தேவைப்பட்ட மேல்நிலைப் பள்ளியாசிரியர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இதுவரை மொத்தம் 7,040 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1985–86-ல் மேலும் 75 பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இவற்றோடு உடற்பயிற்சி இயக்குநர் பணியிடங்கள் 250-ம் ஆய்வுக் கூட உதவியாளர் பணியிடங்கள் 900-ம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

3. மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர், மேல்நிலைப் பள்ளி வகுப்பாசிரியர் பணியிடங்களுக்கான பணி விதிகள் ஏப்ரல் 1981-ல் வெளியிடப்பட்டன. உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக முறையான நியமனம் பெறுவதற்கு மேற்படிப்புத் தகுதி அடைய போதிய காலம் அனுமதிக்கபபட்டுள்ளது. அதுவரை இவ்வாசிரியர்கள் மாதந்தோறும் ரூ. 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். ''உட்படுத்தப்பட்ட'' ஆசிரியர்களுக்கு மாநிலக் கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமாக பத்துமாத, ''பட்ட மேற்படிப்புச் சான்றிதழ்'' வகுப்பை நடத்த அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. இவ்வகுப்பில் தேறி வருபவர் அந்நிறுவனத்திடம் சான்றிதழ் பெற்று அவரவருக்குரிய பாடத்தை மேல்நிலை வகுப்புகளில் நடத்த முழுத் தகுதி உடையவர்களாகக் கருதப்பட்டு மேல்நிலை வகுப்பு ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தை அடையத் தகுதி பெறுவர். மேல்நிலைப் பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்களில் பி.பி.எட். (B.P.Ed.) பட்டம் உள்ளவர்கள் எம்.பி.எட். தேர்ச்சி பெற உதவுவதற்காக அவர்கள் எம்.பி.எட். பயிலும் காலத்தில் 64 நாட்கள் பணிக் காலமாகக் கருதப்பட அரசு ஆணையிட்டுள்ளது. எம்.பி.எட்., பயிற்சிக் காலத்தில் எஞ்சிய பகுதி அவ்வாசிரியர்களுடைய கோடை விடுமுறைக் காலத்திற்குள் அடங்குவதாகும்.

4. மேல்நிலைப் பள்ளிகளில், மேல்நிலை வகுப்புகளில் அறிவியல் பாடங்களின் செயல்முறை வகுப்புகளை நடத்த அறிவியல் ஆசிரியர்களுக்கு உதவியாக 'மானிட்டர்'களை நியமிக்கும் திட்டம் 1983–84-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மானிட்டருக்கும் மாதம் ரூ. 20 வீதம் ஆண்டுக்கு 10 மாதம் மதிப்பூதியம் தரப்படுகிறது. ஒவ்வொரு மேல்நிலைப்பள்ளியிலும் 11 ஆம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு

மாணிட்டரும், 12-ஆம் வகுப்பில் அறிவியல் பாடம் ஒவ்வொன்றிலும் ஒரு மாணிட்டரும், என்றவாறு மொத்தம் அனைத்துப் பள்ளிகளிலும் ஒவ்வோராண்டும் ஏறத்தாழ 7,742 அறிவியல் மாணிட்டர்கள் இருப்பர்.

மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்பாடங்கள்:

5. மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டின் சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினை பெற்றுள்ளது. 1984–85-ல் மொத்தம் 969 மேல்நிலை பள்ளிகளில் தொழிற்பாடங்கள் கற்பிக்கப் பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,432 ஆகும். 1984–85-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.32 இலட்சம் மாணவர் களில் 61,502 பேர் (அதாவது சுமார் 19 விழுக்காட்டினர்) பின் வரும் விவரப்படி தொழிற் பாடங்களைப் பயின்று வந்தனர்.

| தொழிற் பாட வகை. | மாணவர். | மாணவியர். | மொத்தம். |
|---|---|---|---|
| 1. வேளாண்மை .. .. | 4,123 | 375 | 4,498 |
| 2. மனையியல் .. .. | 132 | 2,193 | 2,325 |
| 3. வாணிகத்துறை .. | 19,150 | 14,433 | 33,583 |
| 4. பொறியியலும், தொழில் நுட்பவியலும். | 14,476 | 190 | 14,666 |
| 5. உடல் நலம் .. .. | 2,686 | 2,988 | 5,674 |
| 6. பலவகை .. .. | 128 | 628 | 756 |
| மொத்தம் .. | 40,695 | 20,807 | 61,502 |

6. மைய அரசு நாடெங்கும் அமல்படுத்திவரும் ஒரு திட்டத்தின் கீழ் மின் கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வியானது 1984-85-ல் இம்மாநிலத்தில் 10 மேல்நிலை பள்ளிகளில்தொடங்கப் பட்டுள்ளது. இப்பள்ளிகளில் 16 பள்ளிகள் சென்னையிலும், 6 பள்ளிகள் கோயம்புத்தூரிலும் அதையொட்டியும் அமைந்துள்ளன. இப்பள்ளிகளுக்கு மின் கணிப்புப் பொறி வசதிகளை அளிப்பதுடன் வழிகாட்டும் மையங்களாக செயல்படுபவை இந்தியத் தொழில் நுட்பவியல் நிலையம், சென்னை; பூ.சா.கோ. தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர் ஆகியவையாகும்.



7. மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பொதுப் பாடங்களைப் பயிலும் மாணவர்கள் விருப்பப் பாடங்களாகக் கற்க வேண்டிய 4 பாடங்களில் ஒன்றுக்கும் பதிலாக தொழிற் பாடம் ஒன்றை பயில அனுமதிக்கும் திட்டத்தை விருப்பமுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 1984–85 முதல் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

8. முன்னர் உயர்நிலைப் பள்ளிகளில் இருமுறைப் பாடங் களைக் கற்பித்து வந்தவர்களான 491 முழு நேர தொழிற்பாட ஆசிரியர்களோடு புதிதாக நியமிக்கப்பட்ட 4,300 பகுதி நேர தொழிற்பாட ஆசிரியர்களும் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருகின்றனர். பகுதி நேர ஆசிரியர்கள் மாத ஊதியம் 1984 ஏப்ரல் முதல் ரூ.150-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுவோரில் பொருத்தமானவர்கள் இருப்பின் அவர்களும் பிற இடங்களில் வெளி நபர்களும் பகுதி நேர ஆசிரியர்களாக நியமிக்கப் படுகின்றனர். மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தொழிற் பாடங்களுக்கான தளவாடங்கள் வகையில் அரசுப் பணத்திலிருந்து மட்டும் செய்துள்ள செலவு ரூ. 40 இலட்சத்திற்கு மேல் ஆகும். இதுபோக அந்தந்தப் பள்ளி வசதிக் கட்டண நிதியிலிருந்தும் தனியார் நிருவாகங்களின் பணத்திலிருந்தும் தொழிற்பாட தள வாடங்களுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. தொழிற்பாட மாணிட்டர்களை நியமிக்கும் முன்னோடித் திட்டமும் செயல்பட்டு வருகிறது.

9. மேல்நிலைப்பள்ளித் தொழிற்பாட மாணவர்களின் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், அவர்கள் உயர் கல்வியும் தொடர் கல்வியும் பெற வழி செய்தல், போன்ற நோக்கங்களுடன், மேல் நிலைக் கல்வித் தொழிற்பாட வகுப்புகளின் பாடங்கள் பாடத் திட்டம் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கான அரசு அமைத்த குழந்தைசாமி குழுவின் பரிந்துரைகளை படிப்படியாக அரசு அமுலாக்க எடுத்துக் கொண்டுள்ளது.

10. மேல்நிலைப்பள்ளி தொழிற்பாடங்களைப் பயின்று தேறி வெளிவரும் மாணவர்களுக்கு 6 மாத சிறப்புப் பயிற்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 19 தொழில்களில் ஏதாவது ஒன்றில் அவ்வாறு மொத்தம் 1,300 பேருக்கு "தொழில் பழகு பயிற்சிக் குழு"வின் மூலமாக பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் மாதம் ரூ. 200 ஊதியம் தரப்படும்.

கட்டடங்களும் தளவாடங்களும் :

11. அரசு மேல்நிலைப் பள்ளிகள் 644-க்கு ஒவ்வொன்றிற்கும் ஒரு வகுப்பையும், ஒரு ஆய்வுக் கூடமும் கட்ட பெருந்தொகை யான ரூ. 12 கோடிக்கு மேல் அரசு ஏற்பளித்துள்ளது. இவற்றில் 582 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

12. இதுவரை தொடங்கியுள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகள் அனைத்திற்கும் தேவையான ஆய்வுக்கூட தளவாடங்கள் வகையில் மொத்தம் ரூ. 6.24 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது. சிறு தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) மூலமாக இத்தளவாடங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் மரச் சாமான்கள் வாங்க ரூ. 24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளை மேம்படுத்த அரசு இதுவரை ரூ. 43 இலட்சம் அளவில் செலவிடப்பட்டுள்ளது.

13. அரசு அல்லாத (தனியார் மற்றும் உள்ளாட்சி மன்ற) மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்டவும், தளவாடங்கள் வாங்கவும் ஆகும் செலவில் 40 விழுக்காட்டை பள்ளிக்கு ரூ. ஒரு இலட்சம் என்ற வரம்புக்குட்பட்டு மானியமாக தரும் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஏற்பளித்துள்ளது. இதுவரை அத்தகைய பள்ளிகள் 525 இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளன.

14. கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை மேல்நிலைப் பள்ளி மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் நோக்குடன் ''கல்லூரி இணையங்களும்'' ''பாலிடெக்னிக் இணையங்களும்'' இயன்ற இடங்களில் எல்லாம் அமைக்கப்பட்டுள்ளன.



## IV அரசுத் தேர்வுகள்

அரசுத் தேர்வுத் துறை 1975 பிப்ரவரியிலிருந்து தனித் துறையாக இயங்கி வருகிறது. சென்னையிலுள்ள தலைமை அலுவலகத்துடன் இத்துறையில் பின்வரும் வட்டார அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன. (வட்டார அலுவலகங்களும் ஒவ்வொன்றுக்கும் உட்பட்ட மாவட்டங்களின் விவரங்களும் தரப்பட்டுள்ளன):—

| வட்டார அலுவலகம். (1) | உட்பட்ட மாவட்டங்கள். (2) |
|---|---|
| சென்னை (அக்டோபர் 84-ல் இருந்து செயல்படுகிறது) | சென்னை. செங்கல்பட்டு, வட ஆர்க்காடு. |
| திருச்சிராப்பள்ளி .. | தென் ஆர்க்காடு. திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை. |
| கோயம்புத்தூர் .. | சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி. |
| மதுரை | மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி. |

2. இத்துறை நடத்தும் முக்கியமான தேர்வுகளை எழுதும் மாணவர் எண்ணிக்கை வருமாறு:—

| தேர்வுகள். (1) | 1984 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுதியோர். (2) | 1984 மார்ச்/ஏப்ரல் தேறியோர் விழுக்காடு (3) (சதவீதம்) |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி.— | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட). | 3,75,841 | * |
| பள்ளியில் பயின்று முடித்து விட்டு எழுதுபவர்கள் | 2,86,841 | 57.5 |
| ஆங்கிலோ-இந்தியன் | 2,867 | 88 |
| மெட்ரிக்குலேஷன் | 4,493 | 89 |

| | 1984 செப்டம்பர்/அக்டோபர் தேர்வு எழுதியோர். | 1985 மார்ச்/ஏப்ரல் தேர்வு எழுத இருப்போர் (தோராயமாக) |
|---|---|---|
| | (4) | (5) |
| எஸ்.எஸ்.எல்.சி.— | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட). | 1,53,625 | 3,87,000 |
| பள்ளியில் பயின்று முடித்து விட்டு எழுதுபவர்கள் | .. | .. |
| ஆங்கிலோ-இந்தியன் .. | 425 | 3,500 |
| மெட்ரிக்குலேசன் .. | 475 | 5,800 |
| (1) | (2) | (3) |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு: | | |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட). | 1,75,629 | * |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர். | 1,31,046 | 67 சதவீதம் |
| தொழில் நுட்பத் தேர்வு (வணிகவியல் அல்லாதவை). | 2,900 | .. |
| (1) | (4) | (5) |
| மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட). | 51,758 | 1,87,000 |
| பள்ளியில் பயின்று முடித்துவிட்டு எழுதுவோர். | .. | .. |
| தொழில் நுட்பத் தேர்வு (வணிகவியல் அல்லாதவை). | 15,000 | 16,000 |

* பகுதி முறைத் தேர்வு 1978 மார்ச் மாதத்திலிருந்து அமுலாக்கப்பட்டதன் காரணமாக மொத்தம் (தனிப்பட்ட முறையில் எழுதுவோர் உட்பட) தேர்வு எழுதுபவர்களில் தேறியோர் விழுக்காடு கணக்கிட்டுத்தர இயலவில்லை.



தேர்வு மையங்கள்.

| | செப்டம்பர்/ அக்டோபர். 1984 | மார்ச்/ஏப்ரல் 1985. |
|---|---|---|
| எஸ்.எஸ்.எல்.சி. | 405 | 1,349 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு | 174 | 758 |

3. மேல்நிலைப் பள்ளித் தேர்வை பொதுக் கல்விப் பாடங்கள் 27-க்கும் தொழிற் கல்விப் பாடங்கள் 70-க்கும் நடத்த வேண்டியிருக்கிறது. பல்வேறு பாடங்களின் தொகுப்புகள் 264 ஆகும். தொழிற்பாடத் தேர்வுகள் செயல்முறைக்கு முக்கியத்துவம் தரும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

4. எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளை தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கு கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்படுகிறது.

| தேர்வு. | தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கான தகுதிகள். கல்வித் தகுதி. | குறைந்த பட்ச வயது. |
|---|---|---|
| எஸ் எஸ்.எல்.சி. | 8-வது வகுப்பில் தேறியிருத்தல். | 16 |
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு (தொழிற் சாராத பாடங்கள் அதுவும் செயல் முறை இல்லாத பாடங்கள் மட்டும்). | 10-வது வகுப்பு தேறியிருத்தல். | 18 |

5. பதினான்கு வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் கலந்து கொள்ளும் வகையில் நடத்தப்பெறும் தொடக்கப்பள்ளி இறுதி பொதுத் தேர்வு (ஈ.எஸ்.எல்.சி.) ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப் பெறுகிறது. 1984 டிசம்பரில் இத் தேர்வில் 4,025 பேர் கலந்து கொண்டனர்.

6. தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதுபவர்களுக்கான நுழைவுச் சீட்டுகளும், அவர்களின் தேர்வுச் சான்றிதழ்களும் குறிப்பிட்ட தேர்வு மையங்கள் மூலம் விரைவாக வழங்கப்படுகின்றன.

7. 1984 ஆம் ஆண்டு அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தின் ஆய்வு நடத்திய முதுநிலை ஐ.ஏ.எஸ். அலுவலர். இவ்வியக்ககம் பல்வேறு அரசுத் தேர்வுகளை சுமுகமாகவும் திறமையாகவும் நடத்தி வருவதைப் பாராட்டியுள்ளார்.

## V. வயது வந்தோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்.

வயது வந்தோர் கல்விக்கும் பள்ளி சாராக் கல்விக்கும் 1985–86 நிதி நிலை அறிக்கையில் ரூ. 4 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

### வயது வந்தோர் கல்வி.

2. எழுத்தறிவு பெற்றவர்கள் சதவீதம் தமிழ் நாட்டிலும் அனைத்திந்தியாவிலும் பின்வருமாறு இருந்து வருகிறது:—

தமிழ்நாடு.

| சென்ஸஸ் ஆண்டு. | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| 1971 .. .. | 51.78 | 26.36 | 39.46 |
| 1981 .. .. | 57.19 | 34.12 | 46.74 |

இந்தியா.

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| 1971 | 39.51 | 18.44 | 29.34 |
| 1981 | 45.78 | 24.88 | 36.17 |

3. தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வி கீழே விவரிக்கப் பட்டுள்ள பல்வேறு திட்டங்களின் கீழ் அளிக்கப்படுகிறது.

### ஊரக (தொழில் சார்ந்த) எழுத்தறிவிப்புப் பணி.

4. மைய அரசின் முழுபண உதவியுடன் நடைபெறும் இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் 'உள்ள 16 மாவட்டங் களிலும் மாவட்டத்திற்கு 300 மையங்கள்' வீதம் 4,800 மையங்கள் செயல்படுகின்றன. இத்திட்டத்திற்கு நிதி உதவித் தொகையை 1 2–84 முதல் மைய அரசு உயர்த்தியுள்ளது.



அதன்படி ஒரு திட்டத்திற்கான (300 மையங்கள்) செலவு ரூ. 5.20 இலட்சத்திலிருந்து ரூ. 8.54 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை தவிர பிற மாவட்டங்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமப்புற பகுதிகளில் அருகருகே உள்ள இரண்டு அல்லது மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக் குள்ளாக இந்த 300 மையங்களும் செயல்படுகின்றன. 30 மையங்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். அந்தந்த வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரி ஆசிரியர்கள், பட்டதாரிகள், இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்கள் ஆகியவர்களிடையேயிருந்து மேற்பார்வையாளர்கள் நியமிக்கப் படுகின்றனர். இவர்களுக்கு மாதம் ரூ. 500 சம்பளமும் ரூ.150 போக்குவரத்து செலவுக்கும் வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்று வேலைவாய்ப்பின்றியுள்ள ஆசிரியர்கள், எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் போன்றவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் வயது வந்தோர் கல்வி மையங்களில் ''எழுத்தறிவு ஊக்குநர்கள்'' ஆக நியமிக்கப்படுகிறார்கள். இதற்காக அவர் களுக்கு வயது வந்தோர் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்படு கிறது. மாதம் ரூ. 100 சிறப்பூதியமும் மண்ணெண்ணெய் மற்றும் சில்லரைச் செலவுகளுக்காக ரூ. 35-ம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையத்திலும் பின்வரும் முன்னுரிமைப்படி எழுத்தறிவு இல்லாதவர்கள் 30 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்;—

(1) ஆதி திராவிடர் மகளிர்.

(2) பெண்கள் (பொதுவாக).

(3) ஆதிதிராவிடர் (ஆடவர்).

(4) பிற வகுப்பினர்.

அந்தந்த இடத்துக்கு வசதியான நேரங்களில் இவ்வயது வந்தோர் கல்வி வகுப்புகள் 10 மாத காலம் நடக்கின்றன. 12 மாவட்டங்களிலுள்ள மையங்கள் இத்தகைய 10 மாத வகுப்புகளை ஆண்டுக்கு ஒரு தொகுதியினர் வீதம் ஐந்து தொகுதியினருக்கு நடத்தி முடித்துள்ளன. பெரியார் மாவட்டத்தில் இரண்டாவது தொகுதியினருக்கும் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி மாவட் டத்தில் ஒரு தொகுதியினருக்கும் இப்பணி நடந்து முடித் துள்ளது.

5. மேலும் 11 திட்டங்களை(ஒவ்வொன்றுக்கும் 300 மையங் களைக் கொண்டது) இத்திட்டத்தின்கீழ் தொடங்க மைய அரசு ஏற்பளித்துள்ளது. அவை விரைவில் செயல்படத் தொடங்கும்.

### மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம்.

6. இம்மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் 61-ல் 1980 பிப்ரவரி–மார்ச் மாதங்களில் மொத்தம் 6,100 வயது வந்தோர் கல்வி மையங்களை இவ்வரசு தன் நிதியிலிருந்து தொடங்கியது. இம்மையங்கள் ஐந்து தொகுதியினருக்கு எழுத்தறிவிக்கும் பணியை முடித்து இவற்றின் மூலம் 11.7 இலட்சம் பேர் பயன் பெற்றனர். 1983 அக்டோபர் முதல் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக 5,400 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் ஒரு தொகுதியினருக்கு எழுத்தறிவித்துவிட்டு இரண்டாவது தொகுதியினருக்கு எழுத்தறிவித்து வருகின்றன. ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவுத் திட்ட மையங்களைப் போன்றே இம்மையங்களும் செயல்படுகின்றன. முப்பது மையங்களுக்கு ஒருவர் வீதம் மேற்பார்வையாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 சம்பளமும் போக்குவரத்து செலவுக்கு ரூ. 60ம் தரப்படுகிறது. இந்த 11,500 மையங்களுக்கும் சேர்த்து 1985–86 ல் மொத்தம் ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. 1985-86-ல் 6 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 160 சதவீதம் வயது வந்தோர் கல்வி மையங்கள் 600 தொடங்கப்படும்.

8. வயது வந்தோர் கல்வித் திட்டத்தை பயனுள்ளதாகவும், கல்வியறிவற்றவர்களை எழுத்தறிவு மையங்களுக்கு ஈர்ப்பதற்கும் (எல்லா திட்டங்களின் கீழும் நடத்தப்படும்) எழுத்தறிவு மையங்களில் அந்தந்த வட்டார தேவைக்கேற்ப சிறு சிறு கைத்தொழில்களும் அவர்களுக்கு கற்றுத்தரப்படுகின்றன. அத்தொழில்கள் மூலம் அவர்கள் தம் வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும். அவர்கள் கடன் வசதி பெறுதல், உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் அவர்களுக்கு உதவப்படுகிறது.

### பிற அமைப்புகளின் எழுத்தறிவுப் பணிகள்.

9. தனியார் அமைப்புகளும் வயது வந்தோர் கல்வி மையங்களை (1,379 மையங்கள்) நடத்தி வருகின்றன. நேரு இளைஞர் மையங்கள் 60 மையங்களையும், கல்லூரிகள் 626 மையங்களையும் நடத்தி வருகின்றன.



1985 ஏப்ரல் 9]

10. வயது வந்தோர் கல்விக்கான பல்வேறு திட்டங்களிலும் சேர்த்து மொத்தம் இதுவரை எழுத்தறிவு பெற்றுள்ளவர்கள் விவரம் வருமாறு:—

| திட்டத்தின் பெயர். | ஆடவர். | மகளிர். | மொத்தம் | மொத்த எண்ணிக்கையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சங்களில்) | | | |
| 1 ஊரக தொழில் சாந்த எழுத்தறிவுத் திட்டம். (1979 ஜூலை—1984 டிசம்பர்). | 3.18 | 5.03 | 8.21 | 4.07 |
| 2 மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம் 1980-81——1984-85). | 3.89 | 7.83 | 11.72 | 6.43 |
| 3 தொண்டு நிறுவனங்கள் (1979-80—1984-85). | 0.65 | 1.16 | 1.81 | 0.97 |
| 4 நேரு இளைஞர் மையங்கள் (1979-80,—1984-85.) | 0.13 | 0.13 | 0.31 | 0.15 |
| 5 கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் (1979-80—1984-85). | 0.45 | 2.38 | 0.83 | 0.40 |
| மொத்தம் .. | 8.35 | 14.53 | 22.88 | 12.02 |

மகளிரும் ஆதிதிராவிடர் பழங்குடியினரும் பெரும் அளவில் பயன் பெற்றுள்ளது ஊக்கம் தருவதாகும்.

11. 1984-ம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டுவந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 18,365 ஆகும். அம்மையங்களில் பயின்று வந்தோரின் எண்ணிக்கை 5.85 லட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலானோர் அதாவது 5.02 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 5.85 இலட்சம் பேரில் 2.91 இலட்சம் பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

12. வயது வந்தோர் கல்வி மையங்களில் பெண்களைச் சேர்ப்பதில் சிறந்த பணியாற்றுவதற்கான விருதுகள் வழங்கும் திட்டம் ஒன்றை மைய அரசின் கல்வித்துறை 1983—84 லிருந்து செயல்படுத்தி வருகிறது. அனைத்து மாநிலங்களிலும் உள்ள அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் மாவட்டத்துக்கு 5 சிறந்த வயது வந்தோர் கல்வி மையங்களுக்கு, மையத்துக்கு ரூ 5,000 வீதமும் ஒவ்வொரு மாநிலத்திலும் மிகச் சிறந்த சாதனை செய்த வருவாய் மாவட்டம் ஒன்றுக்கு ரூ. 3 இலட்சமும்; சிறந்த சாதனைகள் செய்த மாநிலங்கள் நான்கிற்கு மாநிலந்திற்கு ரூ. 25 இலட்சம் வீதமும் இவ்விருதுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. 1982-83-ல் நிகழ்ந்த சாதனைக்கான விருதுகள் 1983-84-ல் வழங்கப்பட்டன. அவற்றில்தமிழ்நாட்டிற்கு ரூ. 31.75 இலட்சம் மதிப்புள்ள விருதுத் தொகைகள் கீழ் கண்டவாறு கிடைத்துள்ளது:—

| | | ரூபாய். |
|---|---|---|
| 1 | ஒரு மையத்திற்கு ரூ. 5,000 வீதம் 75 மையங்களுக்கு (மாவட்டத்திற்கு 5 மையங்கள் வீதம் சென்னையைத் தவிர 15 மாவட்டங்களுக்கு). | 3,75,000 |
| 2 | சிறந்த மாவட்டம் (செங்கல்பட்டு) .. | 3,00,000 |
| 3 | மாநில விருது .. | 25,00,000 |
| | மொத்தம் .. | 31,75,000 |

13. 1983-84-ம் ஆண்டில் மாநில விருது பெற்ற நான்கு மாநிலங்களுக்குள்ளும் தமிழ்நாட்டின் சாதனையே முதலிடம் வகித்தது. சிறந்த மாநில விருதாக கிடைத்துள்ள ரூ. 25





இலட்சம் தொகையைக் கொண்டு வயது வந்தோர் கல்விப் பணி புரியும் மகளிருக்குப் பயிற்சி அளிப்பதற்கான விடுதி மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலக வளாகத்தில் கட்டப்படும். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு கிடைத்துள்ள விருதுத் தொகை ரூ. 3 இலட்சத்தை கொண்டு வலம்வரும் ஊர்திகள் இரண்டு வாங்கி அவற்றில் 16 மில்லி மீட்டர் படக்கருவி, படக்சுருள் கருவி, டேப்ரிகார்டர், வானொலிப் பெட்டிபோன்ற ஒலி—ஒளிக் காட்சிகளுக்கான தளவாடங்களும் பொருத்தி வயது வந்தோர் கல்வியை கிராமங்களில் பரப்புதற்கு அவ்வூர்திகள் பயன்படுத்தப்படும். மையத்துக்கு ரூ. 5,000 வீதம் 75 மையங்களுக்கு கிடைத்துள்ள தொகை அம் மையங்களுக்கு தையல் இயந்திரம், பின்னல் இயந்திரம், புத்தகங்கள் போன்றவை வாங்கப் பயன்படுத்தப்படும்.

14. 1983-84-ம் ஆண்டில் நிகழ்ந்த சாதனையின் அடிப்படையில் 1984-85-ம் ஆண்டில் விருதுகள் வழங்கப்படும். இவ்வாண்டும் மாநில விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

### ஏட்டறிவு நிலைத்திட்ட மையங்கள்.

15. புதிதாக எழுத்தறிவு பெற்றவர்கள், மீண்டும் பழைய படி எழுத்தறிவற்ற நிலைக்குப் போய்விடாமல் தடுப்பதற்காக அவர்களுக்குத் தக்க புத்தகங்களும், சஞ்சிகைகளும் அளிப்பது, ஏட்டறிவு நிலைத் திட்ட மையங்களின் நோக்கமாகும். 1983—84-ல் தொடங்கிய இத்தகைய மையங்கள் 426-ம் இப்பொழுது இரண்டாமாண்டாக நடந்து வருகின்றன. 1984-85-ல் தொடங்கிய 1,000 மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இவைபோக ஊரக தொழில் சார்ந்த எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி தவிர பிற 13 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 மையங்கள் வீதம் மொத்தம் 1.300 ஏட்டறிவுத் திட்ட மையங்கள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன.

### நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கான தொழில் சார்ந்த கல்வி.

16. நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்காக 1984-85-ல் தொழில் சார்ந்த பள்ளி சாராக் கல்வி மையங்கள் 66 துவக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் யாதேனும் ஒரு தொழில் பற்றிச் கற்பிக்க, பயிற்சியாளர் ஒருவர் மாதம் ரூ. 100 ஊதியத்தில் பணிபுரிகிறார். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 1,000 செலவில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கித் தரப்பட்டுள்ளன.

### தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

17. சென்னையில் தொழிலாளர் கல்வி நிலையம் ஒன்று 1982 ஜூலை மாதத்தில் அமைக்கப்பட்டது. அது நகர்ப்புறங்களிலும் பிற தொழிற் பகுதிகளிலும் உள்ள தொழிலாளர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கிறது. இத்தகைய நிலையம் ஒன்று மதுரைக்கும் ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது. அது விரைவில் செயல்படத் துவங்கும். இவ்விரு நிலையங்களும் தனித் தனி ஆளுகைக் குழுக்களின் கீழ் உள்ளன.

### பள்ளிசாராக் கல்வி.

18. பள்ளிக்கே செல்லாதவர்களும் சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6—14 வயது சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப் படுகின்றன. 1984-85-ல் 150 மையங்கள் செயல்பட்டு வந்தன. இம்மையங்கள் ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகள் வேலை செய்யும். வெவ்வேறு தொகுதியைச் சார்ந்த (பள்ளியிலிருந்து இடையில் நின்றுவிட்ட) மாணவர்களுக்கான பத்து மாத வகுப்புகளை இம்மையங்கள் நடத்துகின்றன. பள்ளிக் கட்டிடங்களில் இம்மையங்கள் நடைபெறுகின்றன. பள்ளி ஆசிரியர்களே பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் இரண்டு மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு மாத மதிப்பூதியமாக ரூ. 50 பெருகின்றனர். ஒவ்வொரு மையத்திலும் ஏறத்தாழ 30 மாணவர்கள் பயிலுகின்றனர்.

19. மேலும் இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிப் பதிகுயிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1980-81ல் தொடங்கப்பட்டன. இம்மையங்கள் ஒரு தொகுதியினருக்கு கல்வி புகட்டும் பணியை 1983ல் நிறைவேற்றி முடித்துள்ளன. தற்பொழுது வேறு இடங்களில் இந்த 30 மையங்களும் செயல்பட்டு அப்புதிய இடங்களில் உள்ள அத்தகைய சிறுவர்களுக்குக் கல்வி புகட்டி வருகின்றன. வட ஆற்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியிலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக பள்ளி சாராக் கல்வி மையங்கள் 10 விரைவில் திறக்கப்படவிருக்கின்றன. மேலும் "யூனிசெப்" உதவியுடன் சாத்தூர், வெம்பக்கோட்டை பகுதிகளில் பள்ளி சாராக் கல்வி மையங்கள் மேலும் 70 திறக்கப்படவிருக்கின்றன.



20. இம்மையங்களில் சேருகின்ற மாணவர்களுக்கு 8—ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுவதற்கான பயிற்சி மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்படுகிறது. முழுநேர இடைநிலை ஆசிரியர்கள் அல்லது பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் (இடைநிலை ஆசிரியர் சம்பள விகிதத்தில்) இம் மையங்களை நடத்துகின்றனர். இம்மையங்களுக்கென தனியாக நியமிக்கப்பட்டுள்ள களப்பணி அலுவலர்கள் இம்மையங்களை நிருவகிக்கின்றனர்.

## VI. கல்லூரிக் கல்வி.

1985-86 வரவு-செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்கென ரூ. 48 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுக் கல்விக்கான பல்கலைக்கழகங்களுக்கு வழங்கும் மானியம், அரசுக் கல்லூரிக்கான கட்டிடச் செலவு மற்றும் மாணவர்களுக்கான கடனுதவித் தொகை ஆகியவையும் இத் தொகையில் அடங்கும்.

2. தற்பொழுது பின்வரும் விவரப்படி கலை, அறிவியல், வணிகவியல் கல்லூரிகள் 193 செயல்பட்டு வருகின்றன.

| கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகள். | | கல்லூரிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | |
| | | | முறையான வகுப்புகள்.— | |
| அரசினர் கல்லூரிகள் .. | 53 | | பட்டப்படிப்பு .. .. | 1,76,426 |
| மானியம் பெறும் தனியார் கல்லூரிகள். | 134 | 193* | பட்ட மேற்படிப்பு .. | 15,635 |
| மானியம் பெறாத தனியார் கல்லூரிகள். | 6 | | | 1,92,061 |
| | | | மாலை நேர வகுப்புகள். | 14,000 |
| | | | | 2,06,061 |



| | | | |
|---|---|---|---|
| பிற கல்லூரிகள்— | | | |
| கல்வியியல் கல்லூரிகள் .. .. | 23 | | 2,882 |
| இதர கல்லூரிகளு .. .. .. | 22 | | 2,546 |
| | | மொத்தம் .. | 5,428 |

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்கால தொடக்கத்திற்கு முன் (அதாவது 1979-80 இல்) கல்லூரிகளில் பயின்று வந்த மொத்த மாணவர் எண்ணிக்கை 1,36,000 அவ்வெண்ணிக்கை 1984—85-ல் 1.92,000 ஆக அதிகரித்திருப்பது தெரியவரும்.

* சுய ஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் 13 இவற்றுள் அடங்கும்.

3. பல்கலைக்கழக வாரியாக மேற்கண்ட 193 கலை அறிவியல் வணிகவியல் கல்லூரிகளின் விவரம் வருமாறு:—

| பல்கலைக்கழகம். | நிருவாக வரம்பிற்குட்பட்ட மாவட்டங்கள். | கல்லூரிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னைப் பல்கலைக் கழகம். | சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு. தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி. | 63 |
| பாரதியார் பல்கலைக் கழகம் கோயம் புத்தூர். | கோயம்புத்தூர், பெரியார் நீலகிரி. | 22 |
| பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி ராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, தஞ் சாவூர், புதுக் கோட்டை. | 30 |
| மதுரை காமராசர் பல்கலைக்கழகம். | மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி. | 78 |
| | | 193 |

4. பொதுக் கல்விக்கான பல்கலைக்கழகங்களுக்கு (தமிழ்ப் பல்கலைக் கழகம் உட்பட) மானியம் தர 1985-86 நிதிநிலை அறிக்கையில் மொத்தம் ரூ. 7.10 கோடி (திட்டமில்லாத மானியம் ரூ. 2.21 கோடியும் திட்ட மானியம் ரூ. 4.89 கோடியும்) ஒதுக்கப்பட்டுள்ளது.

5. பாரதியார் பல்கலைக்கழகத்துக்கு கோயம்புத்தூரில் ஆயிரம் ஏக்கர் வளாகமும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு திருச்சிராப்பள்ளியில் ஆயிரம் ஏக்கர் வளாகமும் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின்கீழ் உள்ள சிறப்பு கட்டடப் பிரிவுகள் இவ்வளாகங்களில் கட்டட வேலைகளை விரைந்து நிறைவேற்றி வருகின்றன.



6. பாரதியார் பல்கலைக்கழகம் வகுத்துக்கொண்டுள்ள தொலை நோக்குத் திட்டத்திற்கேற்ப அப் பல்கலைக்கழகத்தின் கீழ் இதுவரை பின்வரும் புது ஆய்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன;—

1. மின்கணிப்புப் பொறி மையம்.
2. நிருவாக மற்றும் தொழிலதிபர் திறன் வளர்ச்சிப்பள்ளி.
3. மொழிகள் பள்ளி.
4. கல்வி பயிற்றுவிப்பு ஆதாரங்கள் பள்ளி.
5. சுற்றுப்புற சூழ்நிலை மையம்.
6. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மையம்.

7. பாரதிதாசன் பல்கலைக்கழகம் குறிப்பிட்ட படிப்புகள் மற்றும் ஆய்வுக்கான சிறப்பு மையங்களைத் தொடங்கும் தன் கொள்கையின் அடிப்படையில் முக்கியமாக பாரத கன மின் தொழில் நிறுவனத்துடன் இணைந்த கூட்டு முயற்சியாலும் நெய்வேலி லிக்னைட் நிறுவனம், தமிழக மின்வாரியம் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் பின்வரும் இரு சிறப்புப் பிரிவுகளை, அதாவது

1. நிருவாகப் பயிற்சிக்கான பாரதிதாசன் நிறுவனம்;
2. ஆற்றல் (energy) பற்றிய ஆய்வுக்கான பாரதிதாசன் பள்ளி.

ஆகியவற்றை நிறுவியுள்ளது. வருங்காலத்தில் இவை தலைசிறந்த போதனை மற்றும் ஆராய்ச்சி மையங்களாகத் திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பட்ட வகுப்புகள் அனைத்தையும் சீரமைத்து மேம்படுத்தி நவீனப்படுத்துதல், செயல்முறைப் பாடங்கள் இரண்டை புகுத்துதல், மூன்றாமாண்டு பட்ட வகுப்பில் செயல் முறைப் பணியைச் சேர்த்தல் ஆகிய வளர்ச்சிப் பணிகளின் முதல் கட்டத்தை இப்பல்கலைக்கழகம் நிறைவேற்றியுள்ளது. இப்பல்கலைக்கழகத்தோடு இணைந்த கல்லூரிகள் அனைத்தும் 1982-83 முதல் சீரமைத்த பாடங்களையே நடத்தி வருகின்றன.

8. கொடைக்கானலில் தொடங்கப்பட்டுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும தனித்தன்மை வாய்ந்தவை. அதன் பணி மற்றைய பல்கலைக்கழகங்களுடைய பணியிலிருந்து மாறுபட்டது. மகளிர் பல்கலைக்கழகத்தின் முக்கிய பணி மகளிரைப் பற்றியும் மகளிர் நலனைப் பற்றியும் ஆய்வுகளைச் செய்வதும் ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் அரசு மற்றும் தனியார் துறைகளில் அமைந்துள்ள மகளிர் நல நிறுவனங்களுக்கு அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் வழங்குவதும் ஆகும். (ஆண்களோடு பெண்கள்) ''சரிநிகர் சமானம்'' என்னும் குறிக்கோளை அடைவதற்கான சரியான

வழிமுறைகளை மகளிருக்குக் காட்டி அவர்கள் வளர்ச்சிக்கு உதவி செய்வதே மேற்சொன்ன ஆய்வுகள், அறிவுரைப் பணிகள் ஆகியவற்றின் முடிவான பயனாகும். ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய துறைகள், புலங்கள், ஆகியவற்றை அடையாளம் கண்டுகொள்ளும் நோக்குடன் தமிழகத்திலுள்ள மகளிர் கல்லூரிகள் அனைத்தின் முதல்வர்கள் மாநாடு, மகளிர் நல அமைப்புகளின் மாநாடு, மகளிர் கல்வி பற்றிய கருத்தரங்கு ஆகியவற்றை இப் பல்கலைக் கழகம் நடத்தியுள்ளது. இப் பல்கலைக் கழகம் தன்சிறந்த குறிக்கோளை நோக்கி நேரிய பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளது.

9. ஏற்கெனவே அறிவித்துள்ள காரைக்குடி பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான சட்ட முன்வடிவம் விரைவில் சட்ட மன்றத்தின் முன் வைக்கப்படும், சேலத்தில் சென்னைப் பல்கலைக் கழகமும் திருநெல்வேலியில் மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் பட்ட மேற்படிப்பு மையங்களை ஏற்படுத்தியுள்ளன. உரிய காலத்தில் சேலத்திலும் திருநெல்வேலியிலும் தொடங்கவிருக்கும் பல்கலைக் கழகங்களுக்கு அப்பட்ட மேற்படிப்பு மையங்கள் நிலைக்களன்களாக இருக்கும். அவ்விரு மையங்களிலும் கூடுதல் வசதியை செய்ய 1985—86-ம் ஆண்டில் சிறப்பு மானியங்கள் வழங்கப்படும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்:

10. தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் கண்டறிந்து நிறுவவும், புதுமைக் கருத்துக்களும் பூத்துக் குலுங்கும் வளமிக்க மொழியாக அதனை வளர்க்கவும் உதவும் உயர்நிலை ஆய்வு மையமாக தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. 1984-85ஆம் ஆண்டில் அப்பல்கலைக் கழகத்தில் 50-க்கு மேற்பட்ட பேராசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் இருந்தனர். டி. லிட் பட்டத்திற்கான உயர் ஆய்வில் ஈடுபட்டிருந்தவர்கள் 12 பேர்களாவர். இப்பல்கலைக் கழகத்தின் பல்வேறு புலங்களும் மற்றும் நூலகம், அருங்காட்சியகம், மின் கணிப்பொறி மையம் ஆகியவையும் மேம்படுத்தப்பட்டு ஆராய்ச்சி வசதிகள் அதிகப்படுத்தப்படுகின்றன. இப்பல்கலைக் கழகம் பின்வரும் ஐந்து விரிவுப் பணி மையங்களையும்—அதாவது பழங்குடிகள் பண்பாட்டு ஆய்வு மையம், உதகமண்டலம்; தத்துவ ஆய்வு மையம், காஞ்சிபுரம்; தமிழ்க் கலைக் களஞ்சியம், மற்றும் தமிழ்ப் பேரகராதி மையம் (இரண்டும் தஞ்சாவூரில்); கடலடியில் தொல்பொருளாய்வு குறித்த மையம், மண்டபம் ஆகியவற்றை நடத்திவருகிறது. சிறந்த புத்தகங்கள் பலவற்றை வெளியிட்டு வருவதுடன் இப்பல்கலைக் கழகம் ''தமிழ் கலை'' மற்றும் Tamil Civilization என்னும் இரண்டு முத்திங்கள் ஆராய்ச்சி இதழ்களையும் வெளியிட்டு வருகிறது.



அஞ்சல் வகுப்புகளும் தொடர் கல்வியும் :—

11. மதுரை காமராசர், அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வரும் அஞ்சல் முறை வகுப்புகளில் 1984–85-ல் பட்ட வகுப்புகளிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளிலும் 1.26 இலட்சம் பேர் பயின்று வந்தனர். மேலும் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் நடத்தி வந்த ''அனைவரும் படிக்கத்தக்க பல்கலைக் கழக'' வகுப்புகளில் ஏறத்தாழ 13,540 பேர் பயின்று வந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகள் 12-இல் பி.காம் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

கல்வித் தரமேம்பாடு :—

12. கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசுக் கல்லூரிகளில் புதிதாக 65 பட்ட வகுப்புகளும் (பி.ஏ.—19; பி.எஸ்.சி.—35; பி.காம் —11); 30 பட்ட மேற்படிப்பு வகுப்புகளும், (எம்.ஏ.—14; எம்.எஸ்.சி.—15; எம்.காம்.—1) தொடங்கப்பட்டுள்ளன. 1985—86-இல் புதிதாகப் பட்ட வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சம், பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்க ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளன.

13. அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 14 கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகளும், 3 கல்லூரிகளில் கூடுதல் ஆய்வுக் கூடங்களும், 5 கல்லூரிகளில் விடுதிக் கட்டிடங்களும், 3 கல்லூரிகளில் சுற்றுச் சுவர்களும் கட்டித் தரப்பட்டன. சிதம்பரத்தில் புதிதாகத் தொடங்கியுள்ள அரசு கலைக் கல்லூரிக்கு மொத்தம் ரூ. 87 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அரசுக் கல்லூரிகளுக்குத் தேவையான கூடுதல் ஆய்வகக் கருவிகள், மரச்சாமான்கள் முதலிய வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன,

14. அனைத்துக் கல்லூரிகளில் நடக்கும் பல்வேறு பாடங்களையும் ஒரு சேர நோக்கி தேவையான வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுவதற்காக ''கல்லூரி வளர்ச்சிப் பிரிவு'' ஒன்று கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் 1984—85-லிருந்து அமைக்கப்பட்டுள்ளது.

15. கல்லூரி ஆசிரியர்களுடைய பயிற்றுவிக்குந் தர உயர்வுக்காக அவர்களை ஆராய்ச்சிப் படிப்புக்கு அனுப்புவதற்கான பல்கலைக்கழக மானியக் குழுத் திட்டத்தின் கீழ் 1984—85-இல் 360 ஆசிரியர்கள் எம்.பில். படிப்புக்கு அனுப்பப்பட்டனர். அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் உள்ள பட்டதாரி பயிற்றுநர்களும் விளக்குநர்களும் ஆண்டுதோறும் சிலர் வீதம் எம்.ஏ./எம்.எஸ்.சி. படிப்பிற்கு மாநில அரசு செலவில் முகாமையில் அனுப்பும் திட்டத்தின்கீழ் 1984—85 முடிய 174 பேர் அனுப்பப்பட்டனர். மேலும் பல்வேறு

துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்டி.) பட்டம் பெறுவதற்காக அரசுக் கல்லூரிப் பேராசிரியர்கள் 12 பேர் கடந்த இரண்டு ஆண்டுகளில் முகாமையில் அனுப்பப்பட்டுள்ளனர்.

படிப்புதவித் தொகையும் பயிற்சி உதவிப்பணமும் :—

16. கல்லூரிக் கல்வித்துறை நிருவகித்து வரும் படிப்புதவித் தொகைத் திட்டங்களுள் முக்கியமான சிலவற்றின் கீழ் பயன் பெறுவோர் விவரம் பின்வருமாறு :—

| திட்டம். | 1984–85-ல் புதிதாக தந்த படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை. (மேல்நிலைப் பள்ளிகளில் தரப்பட்டவை உட்பட.) | 1984–85-ல் (புதியவை மற்றும் புதுப்பிக்கப்பட்டவை) மொத்த எண்ணிக்கை. | 1985–86-ல் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை. |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூ. இலட்சத்தில்.) |
| தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம் (ஓரளவு மைய அரசு நிதி உதவி பெறுவது) | 1,785 | 4,424 | 60 |
| தேசிய கடன் படிப்புதவித் திட்டம் (முழுவதும் மைய அரசு நிதியுதவி பெறுவது). | 1,392 | 6,352 | 32 |
| பள்ளி ஆசிரியர்களது பிள்ளைகளுக்குரிய மாநில அரசு படிப்பு உதவித் தொகை. | 70 | 91 | 3 |



17. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவ மாணவியர்களில் மேல்நிலைப்பள்ளித் தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப்பணம் (ஒரு தடவை மட்டும்) தரப்பட்டு வருகிறது.

கல்லூரிகளில் தமிழ்ப்பயிற்று மொழி :—

18. தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. இவ்வுதவிப்பணம் பெற்ற மாணவர் எண்ணிக்கை 1984–85-ல் 24,317 ஆகும். இத்திட்டத்திற்காக 1985–86-ல் ரூ. 44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 900-க்கு அதிகமான பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது.

கல்லூரி ஆசிரியர், பிற பணியாளர்கள் நலன் :—

19. கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மை ஆண்டுகளில் செய்துள்ள நன்மைகளில் மிக முக்கியமானவை வருமாறு :—

பல்கலைக்கழக மானியக் குழு சம்பள விகிதங்களை அளித்தது;

உரிய தகுதி பெற்ற பயிற்றுநர்களையும் விளக்குநர்களையும் உதவிப் பேராசிரியர்களாக உயர்த்தியது;

10 ஆண்டு பணி முடித்த உதவிப் பேராசிரியர்களை பேராசிரியர்களாக உயர்த்தியது;

உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் பணியாளருக்கு நேரடியாக சம்பளம்;

பின்வருவன போன்ற விஷயங்களில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிட்டும் அதே அளவு சலுகைகளை தனியார் கல்லூரி ஆசிரியர் மற்றும் பிற பணியாளர்களுக்கும் விரிவாக்கியது :—

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம்;

விடுப்பு (ஈட்டிய விடுப்பு வசதி உட்பட);

குழு ஈட்டுறுதித் திட்டம்;

பணியிலிருக்கும் போது ஆசிரியர், மற்றும் பிற பணியாளர் இறந்துவிட்டால் அவர்களுடைய மகன் போன்ற நெருங்கிய உறவினருக்கு பணி நியமனம் செய்வதில் முன்னுரிமை.

சட்டக் கல்வி.

20. சட்டக் கல்லூரிகளில் 1984–85 ஆம் ஆண்டில் பயின்று வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| சட்டக் கல்லூரி. | மேல் நிலை சட்டப் படிப்பு (எம்.எல்.) | மூன்றாண்டு சட்டப் படிப்பு. பகல்நேர வகுப்புகள். | மூன்றாண்டு சட்டப் படிப்பு. மாலை நேர வகுப்புகள். | ஐந்தாண்டு சட்டப் படிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை .. | 60 | 840 | 480 | 360 |
| மதுரை .. | 15 | 560 | 240 | 300 |
| திருச்சிராப்பள்ளி | .. | 280 | 120 | 160 |
| கோயம்புத்தூர் | .. | 280 | 120 | 160 |
| மொத்தம் .. | 75 | 1,960 | 960 | 980 |

பெரு மொத்தம் .. 3,975

21. தமிழ்நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளில் ஐந்தாண்டு சட்டப்படிப்பு 1983–84 இல் தொடங்கப்பட்டது, 1984–85 இல் இரண்டாமாண்டு வகுப்புகள் தொடங்கப்பட்டன; 2985–86 இல் மூன்றாமாண்டு வகுப்புகள் தொடங்கப்பெறும். இக்கல்லூரிகளில் மூன்றாண்டு சட்டப்படிப்பும், ஐந்தாண்டு சட்டப்படிப்பும் ஒருங்கிணைந்து நடைபெறுகின்றன. மூன்றாண்டு சட்டப்படிப்பிற்கு சட்டக் கல்லூரிகளில் 1985–86 ஆம் ஆண்டு வரையில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள இந்திய வழக்கறிஞர் மன்றம் அனுமதித்துள்ளது. இந்தியாவில் பிற மாநிலங்கள் மூன்றாண்டு சட்டப்படிப்பை முழுமையாக நிறுத்தும்வரை இங்கும் தொடர்ந்து நடத்திவர தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



22. வேலையில் இருப்பவர்களுக்கென்று 1983–84 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு மாலை நேர சட்ட வகுப்புகளும் நடத்தப்பெற்று வருகின்றன. இம்மாநிலத்தில் இருக்கின்ற நான்கு சட்டக் கல்லூரிகளிலும் 1984–85 இல் பயில்கின்ற மாணவர்கள் மொத்தம் 3,975 பேர்களில் 470 மாணவியர் ஆவர். கடந்த ஆண்டில் 261 மாணவியரே இருந்தனர். சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் மொத்தம் 141 மாணவர்கள் தமிழில் சட்டம் பயில்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 உதவித் தொகை வழங்கப்படுகிறது. திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளிலும் தமிழில் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## VII. விளையாட்டு உடற்பயிற்சி, மற்றும் இளைஞர் நலன்.

### (i) விளையாட்டும் இளைஞர் நலனும்.

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைக்காக 1985—86-ல் மொத்தம் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையின் கீழ் 19 மாவட்ட விளையாட்டு மன்றங்கள் உள்ளன (தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983—84 இல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட). மேலும் 1985—86-ல் காமராசர் மாவட்டம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் புதிய மாவட்ட விளையாட்டு மன்றங்கள் அமைக்கப்படும். மாவட்ட விளையாட்டு மன்றங்கள் அனைத்துக்கும் 1985—86-ல் மொத்தம் ரூ. 4.70 இலட்சம் செலவில் ''மல்டி டிரெய்னர்'' என்னும் உடற்பயிற்சிக்கருவி, பளுதூக்கும் பயிற்சிச் சாதனங்கள், ஜிம்னேஷிய கருவிகள் ஆகியவை தரப்படவிருக்கின்றன.

### விளையாட்டு வளர்ச்சிக் கழகம்.

2 தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் திரு. சிவந்தி ஆதித்தன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு ரூ. 1 கோடியாகும் இக்கழகம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 15—11—1984 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் முக்கியமான நோக்கங்களும் குறிக்கோள்களும் பின்வருமாறு :—

(1) அரசு மானியங்களையும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு கடன் தரும் அமைப்புக்களிடமிருந்து கிட்டும் நிதியுதவிகளையும் கொண்டு மாநிலத்தில் விளையாட்டுக்களுக்கான அடிப்படை வசதிகளைப் பேணுதலும் மேம்படுத்தலும்;

(2) தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் தமிழக விளையாட்டு வீரர்களை பெருமளவில் கலந்து கொள்ளச் செய்தலும் அவர்களை ஊக்குவித்தலும்;

(3) தமிழக விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சிகளை மேம்படுத்துதல்;

(4) மாநிலத்தில் வருங்காலத்தில் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்குடன், குறிப்பாக கல்வி நிலையங்களில் விளையாட்டு வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நிதி சேர்த்தல்;

(5) உலகப் போட்டிகளில் கலந்து கொள்ளும் இம்மாநில விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி மற்றும் வேலை வாய்ப்புக்களை அளித்தல்;



(6) கட்டடங்கள் முதலியவற்றிற்கு ஆகும் செலவைச் சரிக் கட்டவும், கடனாசப் பெற்ற தொகைகளைத் திரும்பத் தரவும், புதியதாக அமைந்துள்ள விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றில் இலாபம் தரத்தக்க விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்;

(7) மாவட்டங்களிலுள்ள விளையாட்டரங்குகளையும், சென்னை நகரிலுள்ள விளையாட்டுத் தளங்களையும் பராமரித்தல்;

(8) மாநில, மாவட்ட விளையாட்டு மன்றங்களுக்கும், விளையாட்டுக் கழகங்களுக்கும் மாநில அரசு மானியங்களை வழங்குதலும், வழங்கப்பட்ட மானியங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்று கண்காணித்தல்.

### விளையாட்டுப் பள்ளிகளும், விளையாட்டில் சிறந்த மாணவர்களுக்குத் தனி விடுதிகளும்.

3. தற்போது பின்வரும் கல்வி நிறுவனங்களோடு இணைந்து விளையாட்டுப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

| | ஆண்டுதோறும் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. ஒய்.எம்.சி.ஏ. உடற் பயிற்சிக் கல்லூரி, சென்னை (8—12 வகுப்புகள்). | 115 |
| 2. மாருதி உடற்பயிற்சிக் கல்லூரி, பெரிய நாயக்கன் பாளையம் (8—12 வகுப்புகள்). | 90 |
| 3. இராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளி, அண்ணாமலைநகர் (8—10 வகுப்புகள்). | 50 |
| 4. பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, பீளமேடு, கோயமுத்தூர் (8—10 வகுப்புகள்). | 50 |
| மொத்தம் .. | 305 |

மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு விடுதிகள் ஒவ்வொன்றிலும் 30 பேருக்குத் தங்கும் இட வசதி உள்ளது.

4. விளையாட்டுகளில் ஆற்றல் மிகுந்த சிறுவர், சிறுமியரை, விளையாட்டுப் போட்டிப் பந்தயங்கள் மூலம் தெரிந்தெடுத்து அவர்களுக்குத் தீவிரமாக பயிற்சி அளித்து அவர்களுடைய திறனை மேம்படுத்தும் நோக்குடன் இத்துறை இளஞ்சிறாருக்கான ''மிக இளமையில் தெரிந்தெடு' என்னும் திட்டத்தையும், தொடக்கநிலை, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளி அளவில் ''இளமையில் தெரிந்தெடு'' என்னும் திட்டத்தையும் செயல் படுத்தி வருகிறது. உயர்நிலைப்பள்ளிகளில் குடியரசு நாள் மற்றும் பொங்கல் நாளன்று நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற முதலாவது, இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கு உதவித் தொகைகள் வழங்கப்படு கின்றன. அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கான ''பாரதியார் விளையாட்டுப் போட்டி''களில் வெற்றி பெற்று முதலாவது, இரண்டாவது இடத்தைப் பெறுவோருக்கும் 1985–86-லிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படும்.

5. அந்தந்த விளையாட்டு மன்றப் பகுதியிலுள்ள உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஏறத்தாழ 30 உடற்பயிற்சி ஆசிரியர்/உடற்பயிற்சி இயக்குநர்களுக்கு இரண்டு அல்லது மூன்று விளையாட்டுகளில் மாவட்ட விளையாட்டு மன்றப் பயிற்சி யாளர்களைக் கொண்டு ஆறு நாள் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் நடத்தும் திட்டம் 1984–85-ல் செயலாக்கப்பட்டது. 1985–86-லும் இத்திட்டம் தொடரும்.

6. மனமகிழ் மன்றங்கள், விளையாட்டுக் குழுமங்கள், நுண் கலை மன்றங்கள் ஆகியவற்றை பரீட்சார்த்த அடிப்படையில் சில கல்லூரிகளில் (ஒவ்வொரு கல்லூரியிலும் ''இளைஞர் நல அலுவலர்'' எனக் குறிப்பிடப்பட்டு இருக்கும் பேராசிரியர் ஒருவர் வழிகாட்டுதலின் கீழ்) நடத்தி வரும் பொருட்டு 8 கல்லூரிகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூ. 12,500 வீதம் 1984–85 இல் தரப்பட்டது. கல்லூரி மாணவர்களுக்கு ஆரோக்கியமான பொழுதுபோக்கு நடவடிக்கைகளைத் தருவனவாக இம் மன்றங்கள் அமையும். இத்திட்டம் செயல்படும் அனுபவத்தின அடிப்படையில் அதனை மேலும் விரிவாக்குவது பற்றி ஆலோசிக்கப்படும்.

7. மாணவர் அல்லாத இளைஞர்களிடம் விளையாட்டையும், உடற்பயிற்சியையும் ஊக்குவிக்கும் வண்ணம், ஊரக விளையாட்டு மையங்கள் நடத்துதல். தனியார் விளையாட்டு மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களையும் இத்துறை செயல்படுத்தி வருகின்றது. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிக் கல்வி ஆராய்ச்சி மாணவப் பணியிடங்கள் 5 ஏற்படுத்தப்பட்டுள்ளன. உடற்பயிற்சிக் கல்வி பற்றிய புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு நிதியுதவியும் அளிக்கப் படுகிறது.



**விளையாட்டு அரங்கங்கள் மற்றும் நீச்சல் குளங்கள்:**

8. தற்போது நீலகிரி தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் திறந்தவெளி விளையாட்டு அரங்கங்கள் ஏற்கனவே உள்ளன; அல்லது அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை நேரு விளையாட்டு அரங்கில் ரூ. 25 இலட்சம் செலவில் ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

9. மாநில மற்றும் மாவட்ட விளையாட்சிமன்றப் பணி யாளர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப காப்பூதியம் மற்றும் இறப்பு ஓய்வுப் பணிக்கொடை முதலியன வழங்குவதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

10. வறுமையில் வாடும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 33 விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரும் மாதம் ரூ. 75 வீதம் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

11. இத்துறை நடத்தும் ''தமிழர் விளையாட்டு மடல்'' என்ற இதழ் மிகவும் பிரபலமாகியுள்ளது. விளையாட்டு வீரர் களுக்கும் விளையாட்டு மன்றங்களுக்கும் இலவசமாக ஆயிரம் பிரதிகள் வழங்கப்படுகின்றன. இவ்விதழின் விலை ஒருரூபாய். சந்தாத் தொகையை செலுத்தி இவ்விதழை வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து 1985-86 ஆம் ஆண்டில் கூடுதலாக மேலும் ஒரு ஆயிரம் இதழ்கள் அச்சிடும் வாய்ப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(ii) சாரண சாரணியர்:**

12. தமிழ்நாட்டில் தற்பொழுது 1.42 இலட்சம் சாரண, சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்தி லும் உள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். தமிழ்நாடு சாரண, சாரணியர் இயக்கத்திற்கு மாநில அரசு மானியமாக ஆண்டுக்கு ரூ. 3 இலட்சம் வழங்கி வருகிறது. 1985–86-லிருந்து இம் மானியம் ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்படும்.

**(iii) தேசிய மாணவர் படை:**

13. தமிழ்நாடு தேசிய மாணவர்படை இயக்கக தலைமை யகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின்கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்

பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமை இடங்கள் 5 அமைந்துள்ளன- தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையில் சேர்க்க அனுமதித்துள்ள மாணவர் எண்ணிக்கை வருமாறு:—

| | பிரிவுகள் படைகள். | அலுவலர் கள். | மாணவர் கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| முதுநிலைப் பிரிவு (மாணவர்) | 45 | 215 | 17,370 |
| முதுநிலைப் பிரிவு (மாணவியர்) | 5 | 38 | 3,680 |
| இளநிலைப் பிரிவு (மாணவர்) | 623 | 621 | 61,650 |
| இளநிலைப் பிரிவு (மாணவியர்) | 51 | 48 | 5,200 |
| மொத்தம் .. | 724 | 922 | 87,900 |

1985-86-ல் தேசிய மாணவர் படைக்காக மாநில அரசு நிதியிலிருந்து ரூ.217 இலட்சம் செலவிடப்படும். இத்துறையில் பணியாற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், அடிப்படை ஊழியர்கள் முதலியோரின் எண்ணிக்கை 1,100 ஆகும்.

14. தேசிய மாணவர் படைக்கான செலவினை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. அப்படை மாணவ மாணவியருக்கான பலவிதமான பயிற்சி முகாம்களுக்கான செலவில் பாதியை மைய அரசும், பாதியை மாநில அரசும் ஏற்றுக் கா ள்கின்றன.

15. வானூர்தி/கப்பல் வடிவமைப்பு; விமானம் ஓட்டுதலும் கிளைடரில் பறத்தலும்; துடுப்புப்படகு, பாய்மரப் படகுகளை செலுத்துதல்; நீர்மூழ்குதல், படகு விடும் பந்தயம் போன்றவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. சைக்கிளில் சென்று இடங்களைக் கண்டு வரவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. பல்வேறு மாநிலங்களின் தேசிய மாணவர் படையினர்களுக்கு இடையிலான பல்வேறு போட்டிப்பந்தயங்களில் தமிழக மாணவ மாணவியர்களும் கலந்து கொள்கின்றனர். டெல்லியில் ஆண்டு தோறும் குடியரசு நாள் அணிவகுப்பில் சிறந்த மாநில விருது பெறுவதற்கு மாநிலங்களுக்கு இடையிலான பந்தய முடிவுகளும் கணக்கிற் கொள்ளப்படுகின்றன. போர்முறைப் பயிற்சிகளும் தரப்படுகின்றன. கனடா நாட்டில் நடைபெறும் இளைஞர் பரிவர்த்தனைத் திட்டத்திலும் தமிழக மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். சமுதாயப் பணிகளிலும் தேசிய மாணவ படையினர் ஈடுபடுகின்றனர்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

33|86

2835

வெளியீடு 26-10-1985

Issued 26—10—1985

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 9, 1985 - தொகுதி V எண் 4

Tuesday the 9th April 1985 - Volume V No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்

Price Rs. 3-50 paise.

16. இராணுவத்தில் அதிகாரிகளாகச் சேர்பவர்களைத் தெரிந்தெடுப்பதற்காக மைய அரசு தேர்வாணைக் குழு நடத்தும் தேர்வில் கலந்து கொள்ளும் தமிழக தேசிய மாணவர் படையினருக்கு சிறந்த பயிற்சி அளிப்பதற்காக 1985-86—ல் பயிற்சி அதிகாரி ஒருவர் தலைமையில் "இராணுவ அதிகாரித் தேர்வுக்கான முன்பயிற்சிப் பிரிவு" ஒன்று அமைக்கப்படும்.

(iv) தேசிய பணித் திட்டம்:

17. தமிழ்நாட்டிலுள்ள தேசியப் பணித் திட்டத்தின் விவரங்கள் 1985-86 நிலவரப்படி பின்வருமாறு:—

| | பங்குபெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கை | அம்மொத்த மாணவர்களில் சிறப்பு பயிற்சி முகாம்களில் பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கல்லூரிகள் .. .. | 55,000 | 27,500 |
| மேல்நிலைப் பள்ளிகளில் (மேல்நிலை வகுப்புகள்—400 பள்ளிகள்). | 20,000 | 10,000 |
| மொத்தம்.. | 75,000 | 37,500 |

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேசியப் பணித்திட்டம் மேல்நிலைப் பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசியப்பணித் திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் பொதுத் திட்டத்தின்கீழ் ரூ. 80—ம், சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகாமிற்கும் ஒரு நபருக்கு ரூ. 100-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும் 5:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக்கொள்ளுகின்றன. இதற்காக 1985-86 மாநில அரசு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் 7/12 பங்கு மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படும். 1985-86 இல் மேலும் 10,000 மாணவர்கள் தேசியப் பணித்திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## VIII. நூலகங்களும் ஆவணக் காப்பகங்களும்

### (i) பொது நூலகங்கள்.

1985-86 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பொது நூலகத் துறைக்கென ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. பொது நூலகத் துறையின் நூலகப் பணிகள் பற்றிய முக்கிய விவரங்கள் வருமாறு :—

| | நூலகங் களின் எண் ணிக்கை. | இருப்பிலுள்ள நூல்களின் எண் ணிக்கை. | உறுப் பினர் எண் ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (இலட்சத்தில்) | (இலட்சத்தில்) |
| மாநில மைய நூலகம் (கன்னிமரா நூலகம், சென்னை). | 1 | 3.82 | 0.25 |
| மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் கீழ் உள்ள நூலகங்கள் : | | | |
| மாவட்ட மைய நூலகங்கள் | 16 | 97.00 | 10.79 |
| கிளை நூலகங்கள் | 1,511 | | |

கன்னிமரா நூலகம்:

2. சென்னையிலுள்ள கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளை இந்நூலகம் இலவசமாகப் பெறுகிறது. வருடத்தில் மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய நாட்கள் அனைத்திலும் (காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை) இந்நூலகம் செயல்படுகிறது. வெளிநாட்டு நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் வாங்குவதற்கென இந்நூலகத்திற்கு 1983—84 மற்றும் 1984-85-ல் மொத்தம் ரூ. 22 இலட்சம் தரப்பட்டது. மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தனியாக பாடநூல் பிரிவு ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது. இந்நூலகத்திற்கென புகைப்படப் பிரதி எடுக்கும் கருவி ஒன்றும் வாங்கப்பட்டுள்ளது.



மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள்:

தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம 16 மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கீழ் மொத்தம் 16 மாவட்ட மைய நூலகங்களும், 1,511 கிளை நூலகங்களும் செயல்படுகின்றன. 20 கிளை நூலகங்கள் 1984-85-ல் புதியதாகத் தொடங்கியவையாகும். மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் பணியாளர்கள் மொத்தம் 3,279. அவர்கள் 1—4—1982 முதல் அரசுப் பணியாளர்களாக ஏற்கப்பட்டுள்ளனர். 1983-84-ல் மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரியாக ரூ. 1.12 கோடி பெற்றன. (சென்னை மாவட்டக்குழு பெற்ற ரூ.56 இலட்சம் உள்பட), சில மாவட்ட ஆணைக்குழுக்களின் வருமானம் புத்தகங்கள் வாங்குவது போன்ற செலவினங்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, நிதிநிலைமை சரியில்லாத நூலக ஆணைக் குழுக்களுக்கு புத்தகங்கள் வாங்க வசதி செய்யும் பொருட்டு 1984-85-லிருந்து ஆண்டுதோறும் ரூ. 11 இலட்சம் சிறப்பு மானியமாக அரசு வழங்கி வருகிறது.

4. பயிற்சி பெறாத மூன்றாம் நிலை நூலகங்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் ஒன்றும் மதுரையில் ஒன்றுமாக நூலபவியல் நிலையங்கள் இரண்டு இயங்கி வருகின்றன.

நூலக கட்டிடங்கள்:

5. சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ், வட்டார நூலகங்கள் 6-க்கும், கிளை நூலகங்கள் 14-க்கும் கட்டடங்கள் முடிக்கப்பட்டு உள்ளன. கிளை நூலகங்கள் மேலும் 14-க்கான கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பிற மாவட்ட நூலக ஆணைக் குழுக்களும், அவற்றின் கீழ் இயங்கும் கிளை நூலகங்களுக்கு கட்டடம் கட்டும் பணியை படிப் படியாக நிறைவேற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகங்களுக்காக பலமாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### (ii) ஆவணக் காப்பகம்

தென் ஆசியாவில் தலை சிறந்த ஆவணத் தொகுப்புகளைக் கொண்ட நிலையமாகத் திகழ்கிறது சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு நிருவாகத்திற்கும் பயன்படுகிறது. கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்கான அரசு மற்றும் துறைத் தலைமையகங்களின் ஆவணங்களும் வேறு சில ஆவணங்களும் இங்கு உள்ளன. அவை வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும் நிருவாகத்திற்குப் பயன்படுபவையும் ஆகும். 1982-ல் நிறுவப்பட்ட நுண் நிழற்படக் கருவிப் பிரிவு நன்கு செயல்பட்டு வருகிறது. ஆராய்ச்சியாளர்கள் பழைய மூல

ஆவணங்களை மீண்டும் மீண்டும் கையாளுவதைத் தவிர்க்கும் வகையில் அப்பழைய ஆவணங்களின் நுண் நிழற்படங்கள் எடுக்கப்படுகின்றன. ஆராய்ச்சி செய்வோருக்கு மூல ஆவணங்களைக் கொடுக்காமல், நுண் நிழற்படப் பிரதிகளை வழங்கினால், மூல ஆவணங்கள் மேலும் நீண்ட காலம் சிதிலமாகாமல் இருக்கும். இக்கருவியைக் கொண்டு இதுவரை 35 மில்லி மீட்டர் படங்கள் 1,11,000-ம் 16 மில்லி மீட்டர் படங்கள் 28,000-ம் எடுக்கப்பட்டு உள்ளன. வாசிக்கத் தக்க அச்சுப் பிரதிகள் 8,500 எடுக்கப்பட்டு உள்ளன.

மாவட்ட ஆவண மையங்கள்:

2. வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும், நிருவாகத்திற்குப் பயன்படுபவையுமான பல ஆவணங்கள் மாவட்டங்களிலுள்ள பல அரசு அலுவலகங்களிலும் உள்ளன, அவற்றையெல்லாம் சேகரித்து மாவட்டந்தோறும் பாதுகாத்துவரும் நோக்குடன் சிதம்பரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் முதற்கண் 1982 மார்ச் மாதம் மாவட்ட ஆவண மையங்கள் அமைக்கப்பட்டன. 1985—86-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியிலும் ஒரு மாவட்ட ஆவண மையம் தொடங்கப்படவிருக்கிறது.

தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு:

3. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் பல்வேறு வரலாற்று மற்றும் பிற வாழ்க்கைத் துறைகள் பற்றி ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் ஆர்வமும் திறமையும் மிகுந்தவர்களை ஊக்குவிப்பதற்காக, 1973-ம் ஆண்டு தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு ஆண்டுதோறும் மாணவப் பணியிடங்கள் நான்கை வழங்கி வருகிறது. 1974-ம் ஆண்டிலிருந்து இதுவரை ஆராய்ச்சி மாணவர்கள் 10 பேர் குழுவில் சேர்ந்து ஆராய்ச்சி செய்து ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். திரு. எஸ். டி. பாஸ்கரன் என்ற ஆராய்ச்சி மாணவர் (1974-76) சமர்ப்பித்த "1919-1945 கால கட்டத்தில் சமுதாயத்திலும் அரசியலிலும் தமிழ் திரைபடக் கலை மற்றும் நாடகக் கலைகளின் பங்கு" என்ற ஆராய்ச்சி அறிக்கை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஏற்றதென குழுவினால் ஏற்கப்பட்டுள்ளது.

மாவட்ட விவரச் சுவடிகள்:

4. புதுக்கோட்டை மாவட்ட விவரச் சுவடியின் ஆங்கிலப் பதிப்பு அண்மையில் வெளியிடப்பட்டு விற்பனைக்கு வந்தது. அதன் தமிழ் வடிவம் அச்சிடப்பட்டு வருகிறது. இராமநாதபுரம்



மாவட்ட விவரச் சுவடியின் தமிழ் வடிவத்தைஅச்சிடுதல், தருமபுரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு விவரச் சுவடிகள் தயாரித்தல் ஆகிய பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

வெளியீட்டுப் பிரிவு:

5. கீழ்க்கண்ட தலைப்புகளில் தெரிந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை அச்சிட்டு வெளியிட இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது:—

1. சென்னை எஸ்டேட் நிலச் சட்டம் : 1908—1948
2. கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும்
3. நகராட்சிகள்—தோற்றமும் வளர்ச்சியும்
4. 1920 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிட சட்ட மன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் ஆற்றிய பணி.

பயிற்சி:

6. அரசு அலுவலகம் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கான ஆவண பராமரிப்பு குறித்த பயிற்சி ஒன்றினை தமிழ்நாடு ஆவணக் காப்பகம் அளித்து வருகிறது. இதுவரை இத்தகைய 15 நாள் பயிற்சிகள் 38 நடந்து 647 பேர் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் 1985—86 லும் தொடர்ந்து நடைபெறும். துறைத் தலைவர்கள அல்லது அவர்களது பிரதிநிதிகளால் கூர்ந்தாய்வுப் படிப்புத் திட்டம் ஒன்று (இரண்டு நாட்கள்) 1982 ஆம் ஆண்டு முதல் நடந்து வருகின்றது.

ஆவணக் காப்பக நூலகம்:

7. மிகப்பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2½ இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலானவை ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ளன. பிற மொழிகளிலும் சில புத்தகங்கள் உள்ளன. இந்நூலகத்தில் பொதுவான புத்தகங்களைத்தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. பழைய அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், நாடாளுமன்ற சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப் பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள், நீதிமன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலை மதிப்பற்ற நூற்தொகுப்புகள் இந்நூலகத்தில் உள்ளன.

## IX. தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்விக்காக 1985-86-ல் சுமார் ரூ. 20 கோடி (கட்டடங்கள், கடன்கள், அண்ணா பல்கலைக்கழகத்துக்கு மானியம் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கங்கள் உட்பட) ஒதுக்கப் பட்டுள்ளது. தொழில் நுட்பக் கலவித்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் தொழிற்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை (1984–85-ல் இருந்தபடி) ஆகியவை வருமாறு:—

| கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை | | | ஆண்டுதோறும் புதிதாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பொறியியல் 24 ; கல்லூரிகள். | மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரியில் தமிழ் நாட்டு மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு. | பட்ட வகுப்புகள்: .. | |
| | | முழு நேரம் .. | 4,495 |
| | | பகுதி நேரம் .. | 640 |
| | | பட்ட மேற்படிப்பு: | |
| | | முழு நேரம் .. | 276 |
| | | பகுதி நேரம் .. | 56 |
| | | பட்ட மேற்படிப்பு பட்டயம் | |
| | | முழு நேரம் .. | 21 |
| | | பகுதி நேரம் .. | 5 |
| பல் தொழில் பயிலகங்கள் (பாலி டெக்னிக்) மற்றும் சிறப்பு பட்டயம் படிப்பு நிறுவனங்கள். | 111 | பட்டய வகுப்புகள்: | |
| | | முழு நேரம் .. | 17,955 |
| | | பகுதி நேரம் .. | 885 |
| | | பட்டய மேற்படிப்பு: | |
| | | முழு நேரம் .. | 299 |
| | | பகுதி நேரம் .. | 90 |
| | | சான்றிதழ் வகுப்பு: | |
| | | முழு நேரம் .. | 110 |
| | | பகுதி நேரம் .. | 230 |
| தொழில் நுட்ப மேல் நிலைப் பள்ளிகள் | | | 840 |



2. கடந்த ஐந்து ஆண்டுகளில் 73 புதிய பல்தொழில் பயிலகங்கள் (மகளிருக்கென்று 7 உள்பட) திறக்கப்பட்டதால் பல் தொழில் பயிலகங்களில் ஆண்டுதோறும் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை அண்மை ஆண்டுகளில் வெகுவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1981-82-ல் பல்தொழில் பயிலகங்கள் இரண்டில் புகுத்தப்பட்ட ஷிப்டு முறை 1983–84-ல் மேலும் 5 பல்தொழில் பயிலகங்களுக்கு விரிவாக்கப்பட்டது.

### தற்சார்பு (Self-financing) தொழிற் கல்வி நிறுவனங்கள்:

3. பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் மாணவ மாணவியர் எண்ணிக்கையோ ஏராளமாகப் பெருகிக் கொண்டு வருகிறது. ஆனால் அத் தேவையை ஈடு செய்யும் அளவுக்கு அரசு அல்லது அரசு மானியம் பெறும் தொழிற் கல்வி நிறுவனங்களைத் தொடங்கி நடத்த அரசு நிதி நிலை இடம் தராததால் கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்கள் ஏற்கனவே தற்சார்பு (Self-finacing) தொழில் கல்வி நிறுவனங்களைத் தொடங்க அனுமதித்துள்ளன — உதாரணமாக கர்நாடகத்தில் 1982-83-லேயே 44 பொறியியல் கல்லூரிகள் இருந்தன. அவற்றில் பயின்ற மாணவர் மொத்த எண்ணிக்கை 28,000 (கர்நாடகத்தின் மக்கள் தொகை 3.71 கோடி: தமிழகத்தின் மக்கள் தொகை 4.84 கோடி) வேலைவாய்ப்புக்குகந்த கைத்திறன்களையும் தொழில் திறமைகளையும் மாணவர்களிடையே உருவாக்கும் நோக்குடன் இவ்வரசு, வாழ்க்கையோடு இணைந்த கல்வியைப் பள்ளிகளில் புகுத்தவிருக்கிறது. பொறியியல் கல்வியானது அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைத் தருவதோடு மட்டுமின்றி சுயமாகத் தொழில் தொடங்கி நடத்தவும் வகைசெய்வதாகும். வளரும் பொருளாதாரத்தின் தொழில் நுட்பக் கல்வி முறை இருக்க வேண்டும் என்று மைய அரசும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் அரசுக்கு தொடராச் செலவோ தொடரும் செலவோ ஒரு காலத்திலும் ஏற்படாத வகையில், தனியார் தொழிற் கல்வி நிறுவனங்களைத் தனியார் நிருவாகங்கள் தொடங்குவதை அனுமதிப்பதற்கான திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தத் தனியார் தொழிற் கல்வி நிறுவனங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்ற கண்டிப்பான நிபந்தனைகளின் பேரில்தான் அத்தகைய அனுமதி வழங்கப்படுகிறது. அந்நிபந்தனைகளில் முக்கியமான சில வருமாறு:— போதுமான நிலத்தைத் தனியார் நிருவாகம் தர வேண்டும்; ரொக்க வைப்புத் தொகையாக பல்தொழில் பயிலகமானால் ரூ. 10 இலட்சமும் பொறியியற் கல்லூரியானால் ரூ.30 இலட்சமும் ஏற்படுத்த வேண்டும். அரசாங்கம் வகுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். சேரும் மாணவர்களிடம் எத்தகைய தலைக் கட்டணமும் (Captiation fee) வசூலிக்கக் கூடாது; நிபந்தனைகள் மீறப்பட்டால் தொழிற் கல்வி நிறுவனங்களை அரசே எடுத்துக் கொள்ளலாம் என்று

முதலிலேயே தனியார் நிருவாகத்தினர் இசைவு தர வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் தனியார் பாலிடெக்னிக்குகள் 53 தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 1984–85-ல் இத்திட்டத்தின் கீழ் 17 பொறியியல் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. (பல்கலைக் கழக இணைப்பு கிடைக்காததன் காரணமாக அந்தப் பொறியியல் கல்லூரிகளில் 3–ல் 1984-85-ல் மாணவர்கள் எவரும் சேர்க்கப்படவில்லை).

4. வரும் 1985-86 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரிலுள்ள பூ. சா. கோ. பல்தொழில் பயிலகத்தில் நெசவுத் தொழில் நுட்பவியலில் பட்டப் படிப்பு ஒன்றும்; திருநெல்வேலியிலுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் மின் மற்றும் மின்னணுவியலில் பி. ஈ. பட்டப்படிப்பு ஒன்றும், தொடங்கப்படவிருக்கின்றன. கோயம்பத்தூரிலுள்ள அரசுத் தொழில் நுட்பவியல் கல்லூரியில் மின் கணிப்புப் பொறியியல் துறையும் உபகரணப் பொறியியல் (Instrumentation Engineering) துறையும் 1985-86-ல் புதிதாகத் தொடங்கப்படவிருக்கின்றன.

5. ஸ்ரீலங்காவிலிருந்து தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழர்களும் மற்றும் தாயகம் திரும்பியவர்களுமான மாணவர்களுக்குப் பொறியியல் கல்வி வசதிகளைத் தருவதற்காக 1984-85-ல் இம்மாநிலத்திலுள்ள பல்தொழில் பயிலகங்கள் அனைத்திலும் மொத்தம் 70 இடங்கள் கூடுதலாக அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டன. மேலும் இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளிலும் அம்மாணவர்கள் மொத்தம் 40 பேர் வரை சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

**கலை கைத்தொழில் மற்றும் சிற்பக் கல்லூரிகள்:**

சென்னையிலும், கும்பகோணத்திலும் உள்ள அரசு கலை–கைத்தொழில் கல்லூரிகளையும் மாமல்லபுரத்திலுள்ள அரசு கட்டடக் கலை–சிற்பக் கல்லூரியும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே நிருவகித்து வருகிறார். 1984–85-ல் மாமல்லபுரம் கட்டடக் கலை-சிற்பக் கல்லூரியில் சிற்பக் கலையில் பி.எஸ்.சி. பட்டப் படிப்பு வகுப்பு ஒன்று தொடங்கப்பட்டது.

**வணிகவியல் பாடங்களில் தேர்வுகள்:**

6. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டச்சு, சுருக்கெழுத்து, வணிகக் கணக்கு, வணிகப் புவியியல், வங்கியியல் முதலிய பாடங்களில் தேர்வுகளையும் நடத்தி வருகிறார். ஆண்டுதோறும் இரு தடவை அதாவது மே, நவம்பர் மாதங்களில் இந்தேர்வுகள் நடக்கின்றன, ஆண்



டுககுச் சுமார் 2,10,000 மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வுகள் அனைத்திலும் 1984 நவம்பர் மாதம் எழுதிய 1,05,633 பேர்கள் ஆவர். தேறியவர்கள் எண்ணிக்கை 56,377 அதாவது 53 விழுக்காடு ஆக இருந்தது.

**அண்ணா பல்கலைக் கழகம் :**

8. பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் இவை சார்பான அறிவியல் புலங்களின் வளர்ச்சிக்காகவும், அவற்றில் மேற்படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும் அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பர் 4-ம் நாள் நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் பொறியியல், தொழில் நுட்பவியல்; கட்டட அமைப்பும் வட்டார அமைப்புத் திட்டமும், செயல்முறைப் பொறியியல்; அறிவியலும் கலைப் பாடங்களும் ஆகிய புலங்களில் மொத்தம் பட்டப்படிப்புகள் 20-ம் பட்ட மேற்படிப்புகள் 29-ம் உள்ளன. இப்பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் 1983-84–ல் படித்து வந்த மொத்த மாணவர் எண்ணிக்கை வருமாறு:

| கல்லூரி. | பட்டப் படிப்பு. | | பட்டமேற்படிப்பு. | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | முழு நேரம் | பகுதி நேரம். | முழுநேரம் | பகுதி நேரம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| கிண்டி பொறியியல் கல்லூரி. | 1,757 | 566 | 510 | 194 | 3,027 |
| சென்னைத் தொழில் நுட்பவியல் நிறுவனம். | 493 | 28 | 85 | 83 | 689 |
| அழ௩ப்பா தொழில் நுட்பவியல் கல்லூரி. | 570 | .. | 61 | 30 | |
| கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புப் பள்ளி. | 106 | .. | 40 | 2 | 148 |
| | 2,926 | 594 | 696 | 309 | 4,525 |

128-61—25

பெரும்பாலான புலங்களில் எம்.பில் மற்றும் டாக்டர் பட்ட ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. இப் பல்கலைக் கழகத்திற்கு மானியமாக ரூ. 239 இலட்சம் வழங்க 1985–86-ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. (இதில் திட்ட மானியம் ரூ.7 லட்சமாகும்.)

9. அண்ணா பல்கலைக் கழகத்தில் தொலைவிலுணர்தல் (Remote Sensing); தொடரும் மற்றும் வளர்ச்சிக் கல்வி, ஆகியவற்றுக்கான ஆய்வு நிலையங்களும் புதிய மற்றும் புதுப்பித்துக் கொள்ளக் கூடிய ஆற்றல் ஆதாரங்கள்; நீர்வள ஆதாரங்கள்; சுற்றுப்புறச் சூழ்நிலை: படிகவியல் (Crystal growth) மானிடர் குடியமைப்பியல் (Human settlement); உடலியல் சார்ந்த தொழில் நுட்பவியல் (Bio technology); ஆகியவற்றுக்கான உயர் ஆய்வு மையங்களும் அமைந்துள்ளது தனிச் சிறப்பாகும். இவ்வாராய்ச்சி மையங்களில் வெளியாருக்காகவும் அவர்களுடைய கணிசமான நிதி உதவியைப் பயன்படுத்தி உயர்மட்ட ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

இதர நிறுவனங்கள் :

10. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரிக்கு மானியமாக ரூ, 54 இலட்சமும், சென்னையிலுள்ள கணித அறிவியல் நிறுவனத்திற்கு மானியமாக ரூ . 5 இலட்சமும் வழங்க 1985–86—ல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



## X அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

அறிவியலும் தொழில் நுட்பவியலும் பலதரப்பட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கியமான அங்கம் வகிக்கவேண்டும் என்பதை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மின்னணுவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை என்ற பெயரில் புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது. இது மின்னணுவியல் தொழில் வளர்ச்சிக்கு நன்கு ஊக்கம் கொடுக்கும். மேலும் இத்துறை அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை நடைமுறைக்குப் பயன்படுத்தும் பணியில் ஈடுபடும்போது படிப்படியாக, பின்தங்கிய நிலையைப் போக்கவும், கிராமப் புற வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவும், வறுமையை அகற்றவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழிலில் ஈடுபடுபவர்களை ஊக்குவிக்கவும் உதவுவதுடன் மக்களிடையே அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டவும் வழி வகுக்கும்.

2. அரசு "தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மாநிலக் குழு" என்ற உயர்மட்ட ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுவிடம் மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான பற்பல கூறுகளில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் பயன்படும் இனங்களைக் கண்டுபிடித்து அவைகளுக்கான திட்டங்களைத் தீட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. புகழ் பெற்ற சமூக விஞ்ஞானி ஒருவர். இக்குழுவிற்குத் தலைமை ஏற்றுள்ளார். திறமையான பேராசிரியர்கள், தொழில் அதிபர்கள், அறிவியல் வல்லுனர்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளில் பொறுப்பு வகிக்கும் நிர்வாகஸ்தர்களை இக்குழு உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இக்குழு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் திட்டங்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான அறிவுரைகளை அரசுக்குக் கொடுக்கும். மேலும் இக்குழு நல்ல முறையில் இயங்க மைய அரசின் நிபுணர் உதவிகளைப் பெறுகிறது.

3 அறிவியலைப் பற்றி மக்கள் அறிய, அரசு "தமிழ்நாடு அறிவியல் (மற்றும்) தொழில் நுட்ப மையம்" என்ற நிறுவனம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிறுவனம் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியகம் மற்றும் கோள்நிலை இயக்க விளக்கக் கூடம் (பிளானெட்டோரியம்) ஆகியவற்றை சென்னையில் ஏற்படுத்த தற்போது முனைந்துள்ளது. கல்கத்தாவில் உள்ள தேசிய அருவியல் அருங்காட்சியகக் குழுவின் ஒத்துழைப்புடன் அறிவியல் மையம் ஒன்று திருநெல்வேலியில் கட்டப்பட இருக்கிறது. நாளடைவில் அறிவியல் (மற்றும்) தொழில் நுட்ப மையம் சமுதாயத்தில் அதிக அளவில் அறிவியலைப் பரப்பி, வாழ்க்கை முறைகளை அறிவியல் மயமாக்கும் வகையில் தனது திட்டங்களைத் தீவிரப்படுத்தும்.

4. ஓர் புதிய தலைமுறை தொழில் விற்பன்னர்களை குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பட்டதாரிகளிலிருந்து, தோற்றுவிப்பதற்காக அரசு பயிற்சித் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இம் முயற்சியானது சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதுடன், புதிய துறைகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்கவும் பெரிதும் வகை செய்யும். இத்திட்டத்தின் கீழ், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் பட்டம் பெற்றுள்ள இம் மாநிலத்தைச் சேர்ந்த 30 பெண்களுக்குப் பயிற்சி தர ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. "தொழில் விற்பன்னர்கள் மேம்பாட்டு நிலையம்" ஒன்றையும் "அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் விற்பன்னர்கள் பண்ணை"களையும் மத்திய அரசின் நிதியுதவியுடன் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் அரசின் தீவிர ஆய்வில் உள்ளன.

5. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள தாவர மற்றும் இயற்கைச் செல்வத்தை ஆராய்ந்து அறிந்து மிகுந்த அளவில் பயன்படுத்துவதற்கும், நிலத்தடி நீர் மற்றும் குடிநீர்ப் பாசனத்தை நெருங்கி இணைத்துச் சிறந்த முறையில் மேலாண்மை செய்வதற்கும் தொலை உணர்வு (Remote Sensing) தொழில் நுட்ப முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அண்ணா பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலை உணர்வு நிலையத்திற்கு (விண்வெளிக் கோள்களிலிருந்து) பெறப்படும் தகவல்களை படமாக்குவதற்காக நுண்ணிய கருவிகளும் மற்றும் விலையுயர்ந்த நவீனக் கருவிகளும் வாங்கப்படவிருக்கின்றன.

6. அறிவியலும் தொழில் நுட்பவியலும் சமுதாயத்தின் கடைகோடியிலுள்ள பகுதிகளுக்கும் ஊடுருவிச் செல்லத் துவங்கியுள்ளன. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்காக செய்யப்படும் செலவினங்கள், கல்வியறிவு பெற்றுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் முறையையும் மிக விரைந்து மாற்றியமைப்பதற்குப் பெரிதும் உதவுகின்றன.



## XI தமிழ் வளர்ச்சி—பண்பாடு

1. நாட்டு மக்களின் வளர்ச்சியும் வாழ்வும் மொழியறிவோடும் மொழி வளர்ச்சியோடும் இரண்டற இணைந்தவையாகும். தமிழ்க் கருவூலங்களைக் காத்தல், கற்பித்தல், படைத்தல், பரப்புதல், முதலிய பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்க வேண்டும் என்னும் அடிப்படையில் தமிழ் தொடர்பான துறைகளெல்லாம் ஒருங்கிணைந்துள்ளன. அவ்விணையம் தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை என்னும் புதிய துறையாகச் செயலகத்தில் மலர்ந்திருப்பது தமிழ் வளர்ச்சிக்கு அரசு வழங்கிய தனித் தகுதியாகும்.

2 தமிழ் வளர்ச்சிக்கும் கலை, மரபு, பண்பாட்டு வளர்ச்சிக்கும் கடந்த ஆண்டுகளில் சிறப்பான பணிகள் நடந்துள்ளன. மாநில அரசு அலுவலங்களின் அனைத்து நிலைகளிலும் தமிழே ஆட்சி மொழியாக அமைதற்கேற்ற முயற்சிகள் புத்துணர்வு பெற்றுள்ளன. 1980 ஆம் ஆண்டு சனவரியில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடந்ததும், 1981 செப்டம்பரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைந்ததும், பாவாணர் நெறியில் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலியின் முதன் மடலத்தின் முதற் பகுதி வெளியிடப் பெற்றதும், உலகத் தமிழ்ச் சங்கம் உருவாகவிருப்பதும் வளர்ச்சிப் பணிகளின் தலைமணிகளாகும்.

### (1) தமிழ் வளர்ச்சித் துறை

3. அரசு அலுவல் நெறிகளிலும் கல்வி நிலையங்களிலும் தமிழ் மொழியின் பயன்பாட்டை மேம்படுத்தும் பணிகளை இத் துறை மேற்கொண்டுள்ளது.

ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்—

4. அனைத்து நிலைகளிலும் ஆட்சி மொழித் திட்டத்தைச் செயலாக்குவது இத்துறையின் பெரும் பொறுப்பாகும். துறைத் தலைமை அலுவலங்களைத் தமிழ்ப் படுத்தும் பணி முன்னேற்றம் குறித்து தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்ட அலுவலகங்களைத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர். ஆட்சி மொழித் திட்டத்தை முழு அளவில் அரசு அலுவலகங்கள் அனைத்திலும் செயற்படுத்துவதற்கென்று 1980 ஆம் ஆண்டில் முனைப்புத் திட்டம் ஒன்று தொடங்கப் பெற்றது. தலைமைச் செயலகம், தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்கள், மாநகராட்சிகள் முதலியவற்றில் ஆட்சி மொழிச் செயற்பாடு விரிவாக்கப்படவிருக்கிறது. அரசு அலுவலகங்களில் உள்ள ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளுக்கு மாற்றாகத் தமிழ் தட்டச்சுப் பொறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்திலுள்ள விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள் ஆகியவை தமிழில் மொழியாக்கம் செய்யப்படுகின்றன. ஆட்சிச் சொல் அகராதி, சிறப்புச் சொல் துணையகராதிகள் உருவாக்கித் தரப்பெறுகின்றன.

[1985 ஏப்ரல் 9

சிறப்பிலக்கிய மொழி பெயர்ப்புத் திட்டம்.—

5. சிறந்த தமிழிலக்கியங்களைப் பிற மொழிகளிலும், பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கான திட்டத்தை இத்துறை தொடர்ந்து செயற்படுத்தும்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்க்கு நிதியுதவி வழங்கு திட்டம்—

6. அகவை முதிர்ந்த தமிழறிஞர்க்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 1978 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் கூடுதலாகத் தமிழறிஞர் முப்பத்தின்மர் நிதியுதவி பெறுகின்றனர். திங்கள் தோறும் ரூ. 250 என்ற நிலையில் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இதுவரை இத்திட்டத்தால் 212 தமிழறிஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

தமிழிற் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி.—

7. தமிழிற் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி 1983–84, 1984–85 ஆகிய ஈராண்டு நிலையில் 25 நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டது. 1985–86 இல் இத்திட்டத்திற்கு ரூ. 60,000 ஒதுக்கீடு செய்யப் பற்றுள்ளது.

தமிழிற் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்—

8. தமிழிற் சிறந்த நூல்களை ஊக்குவிப்பதற்காகத் தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் 21 வகைப்பட்ட சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது. 1983 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த தமிழ் நூல்களுக்குரிய பரிசுகள் 1985 திருவள்ளுவர் திருநாளன்று (சனவரி 15 ஆம் நாள்) வழங்கப்பட்டன.

ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும், பிற மாநிலங்களில் தமிழ் வகுப்புகள் நடத்தவும் நிதியுதவி.—

9. வெளி மாநிலங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறைகளை நிறுவவும், தமிழில் பட்டய வகுப்புகளை நடத்தவும், இவ்வரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகிறது. தென் மொழிகள் புத்தக நிறுவனம், பன்னாட்டுத் திராவிட மொழியியல் ஆய்வுப் பள்ளி, ஆசிய ஆய்வு நிறுவனம், மைசூரில் உள்ள இந்திய மொழிகள் மைய நிறுவனம் முதலிய நிறுவனங்கள் தொடர் மானியங்கள் பெற்றுள்ளன.



1985 ஏப்ரல் 9]

தமிழக வரலாற்று வரைவுத் திட்டம்—

10. தமிழக வரலாற்று நூற் கோவையின் முதல் இரண்டு தொகுதிகளை ''தொல் பழங்காலம்'' ''சங்க காலம்'' என்ற பெயரில் இத்துறை வெளியிட்டுள்ளது. மூன்றாம் தொகுதியான ''பல்லவர்–பாண்டியர் காலம்'' அச்சிற்கு அணியமாயுள்ளது. எஞ்சிய மூன்று தொகுதிகள் ஆயத்தமாகின்றன. தமிழில் வெளியான தொகுதிகளின் ஆங்கில ஆக்கங்களை வெளியிடவும் இத்துறை கருதியுள்ளது.

தமிழ் நூல் விவர அட்டவணை வெளியீடு—

11. 1867 முதல் 1936 வரை வெளியான அச்சிட்ட தமிழ் நூல்களைப் பற்றிய விளக்கக் குறிப்புரை கொண்ட தமிழ் நூல் விவர அட்டவணை 21 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. 1936-40 ஆம் ஆண்டுகளில் வெளியான தமிழ்நூல்களின் விவர அட்டவணை உருப்பெற்று வருகிறது.

விருதுகளும் பாராட்டும்—

12. அறிஞர்களையும் கலை இலக்கியப் படைப்பாளர்களையும் கவிஞர்களையும் பாராட்டிப் பெருமைப்படுத்தும் வகையில் பின்வரும் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன:

| விருதின் பெயர். | விருதின் மதிப்பு. | |
|---|---|---|
| | ரூ. | |
| திரு. வி. கலியாணசுந்தரனார் விருது. | 10,000 | சிறந்த தமிழ் எழுத்தாளருக்கு. |
| பாவேந்தர் பாரதிதாசன் விருது. | 10,000* | சிறந்த தமிழ்க் கவிஞருக்கு. |

(*மேலும் 65 வயதைக் கடந்த சிறந்த புலவர் ஒருவருக்குத் திங்கள்தோறும் ரூ. 500 காணிக்கை நிதி வழங்கப்பட்டு வருகிறது.)

| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் விருது (1986 லிருந்து வழங்கப்பட விருக்கிறது.) | 10,000 | திருவள்ளுவர் குறித்துச் சிறந்த ஆய்வு நடத்துபவருக்கு. |
| அறிஞர் அண்ணா விருது (1985 விருந்து வழங்கப் பட விருக்கிறது) | 10,000 | அறிஞர் அண்ணாவின் கருத்துக்கள் குறித்து சிறந்த ஆய்வு நடத்துபவருக்கு. |

மொழிக் காவலர்களுக்கு நிதியுதவி —

13. தமிழ் மொழியின் பாலும், தமிழ்ப் பண்பாட்டின் பாலும் கொண்ட தணியாத ஆர்வத்தினால் தங்களைத் தமிழ்த் தியாகிகளாக்கிக் கொண்டவர்களுக்குத் திங்களொன்றுக்கு ரூ.150 நிதியுதவி அளிப்பது மற்றும், தமிழ் மொழி பண்பாடு வரலாற்றுக் கருவூலங்களைக் கருத்துடன் காத்திட, வளர்த்திட தாம எடுத்த முயற்சிகளுக்கு ஊக்குவிப்பதாக உதவித் தொகை, மானியம் முதலியவை சிறப்பு நல்கைகளாக அளித்தல் முதலியன இத்திட்டத்தில் அடங்கும். இத்திட்டம் இத்துறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

14. தமிழ்ப் புலவர் பெருமக்களின் விழாக்களை ஆண்டு தோறும் சிறந்த முறையில் இத்துறை கொண்டாடி வருகிறது. திருவள்ளுவர் திருநாள் போலவே இளங்கோவடிகள், கம்பர் விழா இவ்வாண்டு முதல் கொண்டாடப்பட வுள்ளன,

15 சங்கச் சான்றோர் பிறந்த ஊர்களைக் கண்டறிந்து ஆங்காங்கு சான்றோர் நிலைக்கல் நிறுவு திட்டம் செயற்படவுள்ளது. இத்திட்டம் படிப்படியாக மாவட்டந்தோறும் விரிவு படுத்தப்படும்.

நிலவியற் பெயர்கள்—

16. ''மாநில ஊர்ப்பெயர் ஆணைக்குழு'' நிறுவப்பட்டுள்ளது ஊர்ப்பெயர்களின் முறையான வடிவங்கள் குறித்து அறிவுரை கூறுவதும், இந்திய நில அளவைத்துறை, இருப்பூர்தி மற்றும் அஞ்சல் துறைகளுக்கு அறிவுரைகள் வழங்குதலும் இதன் பணியாகும். காலப் போக்கில் ஊர்ப் பெயர்களில் புகுந்துள்ள இலக்கணப் பிழைகள், வழுக்கள், பொருட்பிழைகள் போன்றவற்றைத் திருத்தி சரியான பெயர்களைத் தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வருவாய்த்துறையின் இசைவுடன் ''ஊர்ப் பெயர் அகர வரிசைப் பட்டியலின்'' மறு மதிப்பை வெளியிடவும் கருதப்பட்டுள்ளது.

உலகத் தமிழ்ச் சங்கம். —

17. உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் நிறுவப்படவுள்ளது. தொடக்கமாக நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) மொழி பெயர்ப்புத்துறை.

18. தலைமைச் செயலகத் துறைகள், மற்றும் துறைத் தலைவர் அலுவலகங்களிலிருந்து பெறப்படுகின்ற கோப்புகளைத் தமிழாக்கம் செய்து தருவது மொழிபெயர்ப்புப் பிரிவின்





பணியாகும். அமைச்சர் சுற்றோட்டக் குறிப்புகள், துறைக் குறிப்புகள், பொதுக் கணக்குகள் குழு அறிக்கை (P.A.C.) பொது நிறுவனங்கள் குழு அறிக்கை (P,U.C.) ஆகியவை வழக்கமாகப் பெறப்படும் கோப்புகளாகும். பொது (கடு மந்தணத்) துறை, பொது (சட்டம் ஒழுங்கு)த்துறை, பொது (சிறப்பு)த் துறை ஆகியவற்றிலிருந்து பெறப்படும் கடுமந்தணக் கோப்புகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்துவரும் பணியினமாகும். காபிபோசா (COFEPOSA) சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளுக்குரிய கடுமந்தணக் கோப்புகள் உடனுக்குடன் மொழி பெயர்த்தனுப்பப்படுகின்றன. மேலும் அரசு அறிக்கைகள் சட்டமன்றப்பேரவை வினாக்கள், சட்டமன்ற மேலவை வினாக்கள், அவசரச் சட்டங்கள், சட்டமுன் வடிவுகள், சட்டங்கள், விதிகள், விதிமுறைகள், மானியக் கோரிக்கைகள் துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகள், விசாரணைக் குழுவின் அறிக்கைகள், ஆகிய இனங்களும் இத்துறையால் மொழிபெயர்க்கப்படுகின்றன.

(3) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

19. சிறப்பு நிலையில் தமிழாய்வுப் பணியை வளப்படுத்த பிரெஞ்சு அகாதமி போன்ற தனி நிறுவனம் தேவை எனக் கருதப்பட்டு' உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்கு அரசு ஆண்டுக்கு ரூ. 6 இலட்சம் மானியம் வழங்கி வருகிறது. டாக்டர் பட்ட நிலையிலும் டாக்டர் பட்டத்திற்கு மேலான நிலையிலும், ஆராய்ச்சிகள் இங்கு நடைபெறுகின்றன. ஏறத்தாழ எண்பதின்மர் முழு நேர மற்றும் பகுதி நேர ஆய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழரல்லாதவர்களுக்கு ஒலிப்பதிவு முறையில் தமிழைக் கற்பிக்கும் ஏந்துகள் இந்நிறுவனத்தில் உள்ளன. 160க்கும் மேற்பட்ட பிற நாட்டினர் இந்நிறுவன மொழிப் பயிற்சிக் கூடத்தில் நடத்தப்பெறும் தமிழ் வகுப்புக்களால் பயனடைந்துள்ளனர். புதிதாகத் தமிழ் பயிலும் பிறமொழியினருக்கு ஏற்ற பாட நூலுடன் பதிவு செய்யப்பட்ட ஒலிச் சுருள்களைக் கொண்ட ''தானே தமிழ் கற்றுக்கொள்ளும்'' முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மொழி பெயர்ப்பியலிலும், கையெழுத்துப் படிப்பியலிலும் பட்ட மேற் படிப்புப் பட்டயவியல் படிப்புகளும் இந்நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.

20. இந்நிறுவனம் 104 சிறந்த நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ், இலக்கியம், மொழியியல் வரலாறு, கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றைச் சார்ந்தவை பெரும்பாலானவாகும். சிறந்த ஏட்டுச் சுவடிகளும் ஆராயப்பெற்று அச்சிடப்பெற்றுள்ளன,

நிறுவனத்தில் 12 அறக்கட்டளைகள் நிறுவப்பெற்று திங்கள் தோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்தி அவை நூல் வடிவிலும் வெளியிடப்படுகின்றன. நாடெங்கணுமிருந்து மரபுச் செல்வங்கள் என்ற வரிசையில் "தமிழரின் கோயிற் கலைகள்" என்ற கருத்தரங்கு இவ்வாண்டு நடைபெற்றது.

(4) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்.

21 செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் முதன் மடலத்தின் முதற் பகுதி அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. அசரத்தில் தொடங்கும் சொற்களைக் கொண்ட இப்பகுதி மொழியியல் அறிஞர் மறைந்த திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்ததாகும். அவ்வகர முதலியின் ஏனைய பகுதிகளையும் வெளியிட இத்துறை விழைகிறது. இப்பணிக்குப் பயன்படும் கருவி நூலாகப் பாவாணர் நூல்களிலிருந்து திரட்டிய "பாவாணர் வேர்ச் சொல் வரிசை" என்னும் தொகுப்பு இத்துறையால் விரைவில் வெளியிடப்படும்.

(5) தொல்பொருள் ஆய்வுத்துறை.

22. காலத்தால் பழமை வாய்ந்த பொருள்களையும் கலைச் சின்னங்களையும், கண்டறிவதோடு வரலாற்றுச் செய்திகளையும் ஆராய்வதற்காகத் தொல்பொருள் ஆய்வுத்துறை தோற்றுவிக்கப் பட்டது. அகழ்வாயில் கிடைத்த பழங்காலக் காசுகள், மட் பாண்டங்கள், கட்டட இடிபாடுகள், நகரமைப்புச் சிதைவுகள் கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியன திரட்டப்பெற்று ஆய் வுக்குட்படுத்தப்படுகின்றன. களப்பணி செய்தல், பழம் பொருள்களைத் திரட்டல் பேணுதல், கல்வெட்டு வெளியீடு, ஆகழ்வாய்வு ஆகியவை இத்துறையின் பணிகளாகும். ஒரு நாட்டு வரலாற்றுண்மைகளுக்குத் தொல்பொருள்கள் ஆக்கமூட் டும் ஆவண மூலச்சான்றுகளாகும், இவ்வாறு தொல்பொருள் களைக் காப்பதும் பேணுவதும் இத்துறையின் தலையாய கடப் பாடுகளாம்.

23. தொல் பொருளாய்வுத் துறையின் பணிகளில் பின்வரு வன முதன்மை பெறுகின்றன;—

தமிழக வரலாற்றுக்கு அரணாக அமைந்துள்ள கல்வெட்டு களை ஊர்தோறும் கண்டறிந்து ஆராய்ந்து படியெடுத்து நூல் களாக வெளியிடுதல்;

வரலாற்று முதன்மை வாய்ந்த இடங்களில் அகழ்வாய்வு செய்தல்;



மலைப்பகுதிகளிலும் வனப்பகுதிகளிலும் கள ஆய்வுசெய்து வரலாற்றுக்கு முந்தைய நினைவுச் சின்னங்களையும் ஓவியங் களையும் கண்டறிதல்;

நூற்றாண்டுகளுக்கு முந்தைய தொன்மை வாய்ந்த அரண் மனைகள், கோட்டைகள். பழங்கோயில்கள் முதலியவற்றுள் மைய அரசும் தொல் பொருளாய்வுத் துறையின் காப்பில் வராத வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்:

அகழ்வாய்ந்த இடங்களிலும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களிலும் காட்சியகங்களையும் அகழ் வைப்பகங்களையும் அமைத்தல்;

நூற்றாண்டுக்கு முந்தைய பழங்கலைப் பொருள்களைப் பதிவு செய்தல்;

ஊர்தோறும் ஆராய்ந்து கலைப்பொருள்கள், ஓலைச்சுவடிகள் செப்புப் படிவங்கள் ஆகியவற்றைத் தொகுத்தல்; என அமைகின்றன.

இப்பணிகள் 1985–86 ஆண்டிலும் தொடர்ந்து நடை பெறும்.

24. இந்திய நாடெங்கும் பரவி கிடக்கும் கல்வெட்டுகளில் பாதிக்கு மேற்பட்டவை தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டவை யாகும், தமிழகத்திலுள்ள கல்வெட்டுகளில் பெரும்பாலானவை இன்னும் அச்சுருவம் பெறவில்லை. அச்சுப்பணியை விரைந்து முடிக்க இத்துறை முயன்று வருகிறது. தென் மாவட்டங்களி லுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து வெளியிடும் பணியைச் செய்வதற்காக 1985–86இல் கல்வெட்டுப் பிரிவு ஒன்று திருநெல்வேலியில் அமைக்கப்படும்.

25. பிற்காலச் சோழர்களின் தலைநகராகத் திகழ்ந்த (தஞ்சா வூரிலுள்ள) பழையாறையில் அகழ்வாய்வு தொடர்ந்து மேற் கொள்ளப்படும். உரோமானியர் குடியிருப்பாகக் கருதப்படும் (இராமநாதபுரம் மாவட்டம்) அழகன் குளத்திலும் அகழ்வாய்வு நடைபெறவுள்ளது.

26. ஒவ்வொரு மாவட்டத்துத் தொல் பொருட் சின்னங் களைப் பற்றிய கையேடுகளை எழுதி வெளியிட இத்துறை ஆவன செய்யும்.

27. சேரர் தலைநகரான கரூரில் அருங் காட்சியகம் அமைப்ப தற்காக இடம் தெரிவு செய்யப்பட்டுச் சிற்பங்கள் கலைப் பொருள்கள், ஈட்டப்பெற்று வருகின்றன.

28. தேசிய கடல் ஆய்வு நிறுவனத்தாரின் உதவியோடு 1981 ஆம் ஆண்டில் பூம்புகாரை ஒட்டிய கடற்பகுதியில் ஆய்வுக் கப்பலிலிருந்தவாறு ஆராய்ந்ததில் அப்பகுதியில் கடலுக்கடியில் சில மேடான பகுதிகள் உள்ளாழ்ந்திருப்பதை அறிய முடிகிறது. இத்துறையின் மூழ்குநர்களைக் கொண்டு இந்த ஆண்டில் ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

29. சோழ மாமன்னன் இராசராசனின் ஆயிரத்தாண்டு முடிசூட்டுவிழாவை இத்துறை 1984 செப்டம்பரில் சிறப்பாகக் கொண்டாடியது. இவ்விழாவினையொட்டித் தஞ்சாவூரில் இராசராசன் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

30. இராசராசன் விழாவையொட்டி தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் தொல்லியல்—வரலாற்றுக் கருத்தரங்கு நடத்தப்பெற்று நூல் வடிவம் பெறவுள்ளது.

31. திருமலை மன்னர் 400 ஆவது பிறந்தநாளைக் கொண்டாட அமைந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தக்க முறையில் விழாக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

32. சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள ''கீழ்த் திசைச் சுவடிகள் நூலகத்தையும்'' தொல்பொருளாய்வுத் துறையே நிருவகித்து வருகிறது. அந்நூலகத்திலுள்ள சிறந்த கையெழுத்துப் படிகளில் பயனுள்ளவற்றை அச்சிட்டு வெளியிடவும் இத்துறை ஆவன செய்யும்.

(6) அருங்காட்சியகங்கள் துறை

33. சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அருங்காட்சியக இயக்குநரின் கண்காணிப்பில், காட்சியங்கள் செயற்படுகின்றன. வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேலூர் அருங்காட்சியகம் அண்மையில் செயல்படத் தொடங்கும். கடலூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்களை அமைக்க அரசு 1985–86 இல் ஏற்பளிக்கவிருக்கிறது.

34. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள பாலூட்டிகள் அரங்கம், அஞ்சல்தலைப் பிரிவு, தாவரவியல் பிரிவு ஆகிய காட்சிக் கூடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. புதியதாக ஊரகக் கலைக் காட்சிக்கூடம் அமைக்கப்படவுள்ளது. தேசிய கலைக்கூட இணைப்புக் கட்டிடம் சென்னை அருங்காட்சியக வளாகத்தில் அண்மையில் திறக்கப்பட்டது. குழந்தைகளுக்



கவரும் விதத்திலும், சிறார்களின் அறிவைப் பெருக்கும் வகையிலும், காட்சிக் கூடங்களைக் கொண்ட ''சிறுவர் அருங்காட்சியகம்'' விரைவில் திறக்கப்படும். சென்னை அருங்காட்சியக அரங்கினை 2.43 இலட்சம் செலவில் புதுப்பிக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது, புதியதாக அமைந்துள்ள ''பண்பாட்டுப் பலகணி'' என்னும் சிந்தனை அரங்கத்தில் தமிழ்க்கலை பற்றிய காட்சியுரைகள் திங்கள் தோறும் நடந்துவருகின்றன.

35. புதுகோட்டை மன்னராட்சிக் காலத்தில் 1910 ஆம் ஆண்டு பைரவத் தொண்டைமான் அவர்களால் புதுக்கோட்டையில் தொடங்கப்பட்ட அருங்காட்சியகம் சிறந்த முறையில் அமைந்த நல்லரங்கமாகும். இவ்வருங் காட்சியகத்தின் பவள விழா நடப்பாண்டில் நடைபெறவுள்ளது;

(7) திருக்குறள் நெறிபரப்பு மையம் தமிழ்ப் பழங்கலை இயக்ககம்.

36. தமிழ்ப் பழங்கலை இயக்கம் திருக்குறள் கருத்துக்களைப் பரப்பும் அமைப்பாகத் திருக்குறள் நெறிபரப்பு மையம் என்ற பெயரில் வள்ளுவர் கோட்டத்தில் இயங்குகிறது. இம்மையம், மாவட்டக் கல்வி அலுவலர்களின் துணையோடு திருக்குறள் பரப்பும் பணியை மேல்கொள்ளும். மாணவர்கள் குறட்பாக்களை மனனம் செய்யும் வண்ணம் குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்து ''திருக்குறள் மனனப் பகுதி'' என்னும் சிறு நூலை அச்சிட்டு வெளியிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொது மக்கள் போற்றும் வகையில் வெள்ளிதோறும் திருக்குறள் வகுப்பு வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறுகிறது, உலகளாவிய திருக்குறள் ஆர்வலர்களின் மாநில மாநாட்டை நடத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டு முதல்நிலைப் பணிகள் நடந்து வருகின்றன.

37. செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கிராமக்கலைச் ''செய்திக் களஞ்சியங்கள்'' தொகுக்கப்பட்டு வல்லுநர் குழுவின் இசைவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பாரதியார் பாடல்களைப் பண்ணமைவுக் குறிப்புகளுடன் நூலாக வெளியிடும் பணி முடியும் நிலையில் உள்ளது, மதங்கசூளாமணி நூலை மறுபதிப்புச் செய்வது ஆய்வில் உள்ளது. 1984 மார்ச்சுத் திங்களில் பழங்கலைப் பண்பாட்டு விழா சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பெற்றது.

(8) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.

38. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மத்திய சங்கீத நாடக அகாதமியின் நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்துகிறது. இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புறக்கலைகள் ஆகியவற்றைத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் இம்மன்றம் நன்கு போற்றி வளர்த்துவருகிறது.

39. இந்திய மாநிலங்களிடையே பண்பாட்டுக் கொள் கொடைத் திட்டம்; வறுமையில் வாடும் முதிய கலைஞர்களிடமிருந்து ஓய்வூதியம் கோரி வரும் விண்ணப்பங்களை ஆய்ந்து பரிந்துரை செய்தல்; தமிழகத்தில் இயங்கும் கலை மன்றங்களின் மூலம், தகுதிவாய்ந்த இளைஞர்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்தல்; சிறந்த கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை ஒலி—ஒளிப் பதிவு செய்தல்; தரமான நாடகங்களையும், நாட்டிய நாடகங்களையும் உருவாக்க மானியம் வழங்கல்; சிறந்த கலை நூல்களை அச்சிட்டு வெளியிட மானியம் வழங்கல், இயல், இசை, நாடகம், நாட்டியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகிய துறைகளில் சிறப்பான கலைப் பணியாற்றிய பெருமக்களுக்குக் "கலைமாமணி" விருது வழங்கல், இசை, நாடக மேதைகளின் நினைவைப் போற்றும் விழாக்களை நடத்துதல் ஆகிய பல்வேறு கலைப் பணிகளை இம்மன்றம் செயற்படுத்தி வருகின்றது. குடியரசுத் திருநாளாகிய 26—1—1985 அன்று 30 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டன. இதுவரை 660 கலைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இராசத்தானம் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து கலைக் குழுக்கள் இவ்வாண்டில் தமிழ்நாட்டுக்கு வருகை தந்து நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளன.

40. வறுமையில் துயருறும் 1,616 கலைஞர்கள் திங்கள் தோறும் இத்திட்டத்தின்படி ரூ. 150 ஓய்வூதியமாக பெற்று வருகின்றனர். இந்த ஓய்வூதியம் முதற்கண் 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்டு மீண்டும் மூன்றாண்டு காலத்துக்கு ஒரு முறை ஓய்வூதியம் பெறுபவர்களின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு புதுப்பிக்கப்படுகின்றது. 1985–86 ஆம் ஆண்டில் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 200 கலைஞர்களுக்குப் புதிதாக ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

(9) அரசு இசைக் கல்லூரிகள்.

41. சென்னையிலும் மதுரையிலும் உள்ள அரசு இசைக் கல்லூரிகள் இசையையும் பரத நாட்டியத்தையும் தொடர்ந்து பயிற்றுவித்து வருகின்றன. மேலும் கடம், கஞ்சிரா, நுகர்சங்கம் மற்றும் நட்டுவாங்கம் ஆகிய புதிய வகுப்புகள் இக்கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகுப்புகளில் சேர்ந்து பயிலும் மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு இசைக் கல்லூரிகள் இரண்டிலும் 54 பணியாளர்கள் பணி செய்கின்றனர்; 520 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர்.

(10) தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு.

42 தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு தனது வழக்கமான செயற்பாட்டுத் திட்டங்களுடன், பின்வரும் இன்றியமையாத் திட்டங்களையும் 1984—85 இல் செயற்படுத்தியுள்ளது.



(அ) தமிழ்நாட்டின் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம்: இது தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சற்றொப்ப 280–க்கும் மேற்பட்ட ஓவிய ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

(ஆ) மாநிலங்களிடையே நுண்கலைக் காட்சி நடத்தும் திட்டம்: தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு இவ்வாண்டு இராசத்தானத்தைச் சேர்ந்த ஓவியக் காட்சியொன்றைச் சென்னையில் நடத்தியது.

(இ) 'நுண்கலை' என்னும் அரையாண்டு இதழ் வெளியிடுதல்: சிறந்த ஓவியக் கலைஞர்களின் திறமைமிக்க ஓவியங்களைக் கொண்ட அஞ்சலட்டைகள் வெளியிடுதல்.

(ஈ) ஓவியக் கலையில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கும், வளர்ச்சி பெறும் ஓவியர்களுக்கும் உதவும் வண்ணம், நாடு முழுவதும் உள்ள தலைசிறந்த ஓவிய, சிற்பக்கலை வல்லுநர்களை அழைத்து விளக்கக் கூட்டங்களை அவ்வப்பொழுது நடத்துதல்.

(11) சவகர் சிறுவர் இல்லம்.

43. இந்நிறுவனம் 1979 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மறைந்த பிரதமர் சவகர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து மைய அரசு அளித்த தொகை ரூ. 15.73 இலட்சத்தைக் கொண்டு இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இதுபோன்ற சிறுவர் இல்லங்களைத் தமிழ் நாட்டிலுள்ள 12 மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான கருத்துருக்கள் மாவட்டாட்சியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

44. பள்ளிச் சிறுவர்களின் இயல்பை அறிந்து அவர்களது ஆற்றல்களை வளர்க்கும் நோக்கோடு அவர்களுக்குப் பல்வேறு வகையான செயல்முறைத் திட்டங்களையும் தொழிற் கல்வியுடன் கூடிய பயிற்சிகளையும் அளிக்கக் கருதியுள்ளது. எடுத்துக்காட்டாக படைப்புக் கலைகள், மரவேலைப்பாடுகள், தச்சுத் தொழில், சிற்பம் போன்றவற்றிலும், நடனம், நாடகம், இசை, ஓவியம் போன்ற நுண்கலைகளில் அவர்களிடம் இயல்பாக உள்ள திறன்களை வெளிக்கொணரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை தவிர, அறிவியல், இலக்கிய நடவடிக்கைகளை வளர்க்கவும், பொது அறிவை வளர்க்கவும், திட்டங்கள் தீட்டப் பெற்றுள்ளன.

45. தமிழ் வளர்ச்சி, கலை, பண்பாடு, மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டு இத்துறைகள் செயற்பட்டு வருகின்றன,

## இணைப்பு I

### பள்ளிக் கல்வி பற்றிய விபரங்கள்

(மாணவர்கள் இலட்சத்தில்.)

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1979–80 (4) | 1983–84 (5) | 1984–85 (6) |
|---|---|---|---|---|---|
| **அ. வெவ்வேறு வயதுத் தொகுதி சிறார் மொத்த எண்ணிக்கை—** | | | | | |
| **வயதுத் தொகுதி 6—11** | | | | | |
| சிறுவர் .. .. .. | 30.45 | 31.93 | 33.27 | 35.49 | 36.11 |
| சிறுமியர் .. .. .. | 29.79 | 31.23 | 32.54 | 34.67 | 35.28 |
| மொத்தம் .. | 60.24 | 63.16 | 65.81 | 70.16 | 71.39 |
| **வயதுத் தொகுதி 11—14** | | | | | |
| சிறுவர் .. .. .. | 13.71 | 14.37 | 14.97 | 15.97 | 16.25 |
| சிறுமியர் .. .. .. | 13.10 | 14.05 | 14.64 | 15.60 | 15.88 |
| மொத்தம் .. | 27.11 | 28.42 | 29.61 | 31.57 | 32.13 |
| **வயதுத் தொகுதி 14—17/14—16 (1979-80 லிருந்து)—** | | | | | |
| சிறுவர் .. .. .. | 11.31 | 11.86 | 8.36 | 8.92 | 9.08 |
| சிறுமியர் .. .. .. | 11.07 | 11.60 | 8.15 | 8.72 | 8.87 |
| மொத்தம் .. | 22.38 | 23.46 | 16.51 | 17.64 | 17.95 |



1983-84-லும், 1984-85-லும் பல்வேறு வயதுத் தொகுதியினர் எண்ணிக்கை பின்வருமாறு கணக்கிடப்பட்டது—அதாவது 1981 சென்சஸ்படி தமிழக மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டு, அந்தந்த வயதுத் தொகுதியினர் 1971 சென்சஸ்-இல் எத்தனை சதவீதம் இருந்தனரோ அதே சதவீதம் 1981-லும் இருந்திருக்கலாம் என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டதாகும்.

**ஆ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை—**

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1979–80 (4) | 1983–84 (5) | 1984–85 (6) |
|---|---|---|---|---|---|
| **வயதுத் தொகுதி 6—11—** | | | | | |
| சிறுவர் .. .. .. | 30.64 | 32.02 | 34.34 | 37.24 | 38.11 |
| சிறுமியர் .. .. .. | 23.74 | 25.50 | 27.94 | 31.50 | 32.33 |
| மொத்தம் .. | 54.38 | 57.52 | 62.28 | 68.74 | 70.44 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 11—14— | | | | | |
| சிறுவர் .. .. .. | 9.10 | 9.74 | 11.02 | 13.29 | 13.95 |
| சிறுமியர் .. .. .. | 5.09 | 5.76 | 6.65 | 8.62 | 9.24 |
| மொத்தம் .. | 14.19 | 15.50 | 17.67 | 21.91 | 23.19 |
| வயதுத் தொகுதி 14—17/14—16 (1979-80-லிருந்து)— | | | | | |
| சிறுவர் .. .. .. | 4.97 | 5.34 | 4.20 | 5.06 | 5.42 |
| சிறுமியர் .. .. .. | 2.42 | 2.68 | 2.14 | 2.85 | 3.10 |
| மொத்தம் .. | 7.39 | 8.02 | 6.34 | 7.91 | 8.52 |



இ. பள்ளியில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—

(விழுக்காடுகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 6-11— | | | | | |
| சிறுவர் .. .. .. | 100.6 | 100.3 | 103.21 | 104.92 | 105.53 |
| சிறுமியர் .. .. .. | 79.6 | 81.7 | 85.87 | 90.85 | 91.64 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 90.2 | 91.7 | 94.64 | 97.96 | 98.66 |
| வயதுத் தொகுதி 11—14— | | | | | |
| சிறுவர் .. .. .. | 66.3 | 67.3 | 73.60 | 83.18 | 85.82 |
| சிறுமியர் .. .. .. | 37.9 | 41.0 | 45.44 | 55.28 | 58.21 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 52.3 | 54.4 | 59.68 | 69.40 | 72.18 |
| வயதுத் தொகுதி 14-17/14-16 (1979-80-லிருந்து)— | | | | | |
| சிறுவர் .. .. .. | 43.0 | 44.9 | 50.2 | 56.78 | 59.69 |
| சிறுமியர் .. .. .. | 21.8 | 23.1 | 26.4 | 32.67 | 34.93 |
| சிறுவரும் சிறுமியரும் .. | 33.0 | 34.1 | 38.44 | 44.87 | 47.45 |

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1979–80 (4) | 1983–84 (5) | 1984–85 (6) |
|---|---|---|---|---|---|
| **ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—** | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 26,726 | 27,306 | 27,662 | 28,548 | 28,847 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 5,773 | 5,730 | 5,685 | 5,635 | 5,691 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 2,823 | 3,020 | 2,088 | 2,351 | 2,476 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 1,138 | 1,427 | 1,474 |
| மொத்தம் .. | 35,322 | 36,056 | 36,573 | 37,961 | 38,488 |

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்-மாணவர் விகிதம் போன்ற வகையில் பின்தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் (10 ஆம் வகுப்பும் கீழும்) அப்பள்ளிகளில் பயின்று வந்த மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர்கள் ஆகியோரையும் உள்ளடக்கியவையாகும்.

| (1) | 1973–74 (2) | 1976–77 (3) | 1979–80 (4) | 1983–84 (5) | 1984–85 (6) |
|---|---|---|---|---|---|
| **உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—** | | | | | |
| முதல்நிலைப் பள்ளிகள் . | 1,06,332 | 1,11,033 | 1,12,535 | 1,15,705 | 1,16,305 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 66,843 | 67,846 | 66,568 | 66,399 | 66,849 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 65,959 | 72,838 | 34,102 | 36,831 | 38,328 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 45,257 | 62,087 | 62,932 |
| மொத்தம் .. | 2,39,134 | 2,51,717 | 2,58,462 | 2,81,022 | 2,84,414 |



**ஊ. சராசரி ஒரு ஆசிரியருக்கு மாணவர் எண்ணிக்கை—**

(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகையில் சேர்த்து)—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளிகள் .. | 35 | 36 | 39 | 41 | 42 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 33 | 33 | 37 | 40 | 42 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 24 | 24 | 23 | 27 | 28 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | 28 | 26 | 28 |

(2) வகுப்புத் தொகுதிவாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும், ஆசிரியர் தொகுதியில் சேர்த்து)—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 37 | 36 | 38 | 40 | 41 |
| நடுநிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 33 | 33 | 32 | 34 | 36 |
| உயர்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | 29 | 30 | 26 | 24 | 26 |
| மேல்நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி. | .. | .. | 22 | 20 | 21 |

**1984-85 இல் (1984 அக்டோபர் மாதம் 1 ஆம் நாள் நிலவரப்படி) தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் குறித்த புள்ளி விவரங்கள்.**

| பள்ளிகளின் வகைகள். | | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் (இலட்சத்தில்). | ஆசிரியர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **முதல் நிலைப் பள்ளிகள்—** | | | | |
| அரசு .. .. .. | 1,442 | | | |
| நகராட்சி .. .. .. | 1,128 | 28,847 | 48.92 | 1,16,305 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 21,245 | | | |
| தனியார் .. .. | 5,032 | | | |
| **நடுநிலைப் பள்ளிகள் —** | | | | |
| அரசு .. .. .. | 246 | | | |
| நகராட்சி .. .. .. | 418 | 5,691 | 28.27 | 66,849 |
| ஊராட்சி ஒன்றியம் .. .. | 3,065 | | | |
| தனியார் .. .. .. | 1,962 | | | |
| மொத்த தொடக்கப் பள்ளிகள் .. | | 34,538 | 77.19 | 1,83,154 |



| | | | | |
|---|---|---|---|---|
| **உயர்நிலைப் பள்ளிகள்— சாதாரணம்—** | | | | |
| அரசு .. .. .. | 1,686 | | | |
| நகராட்சி .. .. .. | 73 | 2,229 | 9,53 | 33,145 |
| தனியார் .. .. .. | 470 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | | 14 | 0.11 | 281 |
| மெட்ரிகுலேசன் .. .. .. | | 144 | 0.67 | 2,417 |
| சி.பி.எஸ்.ஈ. முதலியன .. .. | | 89 | 0.51 | 2,490 |
| மொத்த உயர்நிலைப் பள்ளிகள் .. | | 2,476 | 10·82 | 38,328 |
| **மேல்நிலைப் பள்ளிகள்—சாதாரணம்—** | | | | |
| அரசு .. .. .. | 675 | | | |
| அரசு (தொழில் நுட்பம்) .. .. | 14 | 1,331 | 15,70 | 56,533 |
| நகராட்சி .. .. .. | 60 | | | |
| தனியார் .. .. .. | 582 | | | |
| ஆங்கிலோ-இந்தியன் .. .. | | 27 | 0.32 | 777 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மெட்ரிகுலேசன் .. | .. | 63 | 0.69 | 2,722 |
| சி.பி.எஸ்.ஈ. போன்ற பள்ளிகள் | | 53 | 0.74 | 2,900 |
| மொத்தம் மேல்நிலைப் பள்ளிகள் | | 1,474 | 17.45 | 62,932 |
| மொத்தம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் .. | | 3,950 | 28.27 | 1,01,260 |
| மொத்தம் (அனைத்துப் பள்ளிகளும் சேர்த்து). | | 38,488 | 105.46 | 2,84,414 |

மாணவர் 59.46 இலட்சம்.
மாணவியர் 46.00 இலட்சம்.



நிருவாக வாரியாக 1984–85 ஆம் ஆண்டில் இருந்த பள்ளி ஆசிரியர்களின் விவரங்கள்.

| | அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள். | | | | | ஆசிரியர் விவரங்கள். | |
|---|---|---|---|---|---|---|---|
| | அரசுப் பள்ளிகள். | உராட்சி ஒன்றியப் பள்ளிகள். | நகராட்சி. | தனியார். | மொத்தம். | ஆண். | பெண். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| தொடக்கப் பள்ளிகள் | 7,395 | 69,705 | 9,402 | 29,803 | 1,16,305 | 71,563 | 44,742 |
| நடுநிலைப் பள்ளிகள் | 3,385 | 27,804 | 6,983 | 28,677 | 66,849 | 34,301 | 32,548 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 23,895 | .. | 1,506 | 12,927 | 38,328 | 23,366 | 14,962 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 26,731 | .. | 3,336 | 32,865 | 62,932 | 39,018 | 23,914 |
| மொத்தம் .. | 61,406 | 97,509 | 21,227 | 1,04,272 | 2,84,414 | 1,68,248 | 1,16,166 |

## இணைப்பு II.

### கல்லூரிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1973–74. | 1976–77. | 1979–80. | 1983–84. | 1984–85. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| **1. மொத்த மாணவர் எண்ணிக்கை—** | | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. | 72,646 | 84,257 | .. | .. | .. |
| (2) பி.ஏ. .. .. | 51,698 | 44,697 | 47,872 | 62,894 | 61,802 |
| (3) பி.எஸ்சி. .. .. | 49,057 | 48,110 | 56,847 | 79,550 | 82,596 |
| (4) பி. காம். .. .. | 14,859 | 19,195 | 21,744 | 30,877 | 32,028 |
| (5) பட்ட மேற்படிப்பு .. | 6,993 | 7,043 | 9,263 | 14,708 | 15,635 |
| மொத்தம் .. | 1,95,253 | 2,03,302 | 1,35,726 | 1,88,029 | 1,92,061 |
| **2. ஆசிரியர்களின் எண்ணிக்கை—** | | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. | 2,969 | 3,733 | 3,752 | 4,272 | 4,347 |
| (2) தனியார் கல்லூரிகள் .. | 7,090 | 7,883 | 8,438 | 9,448 | 9,540 |
| மொத்தம் .. | 10,059 | 11,616 | 12,190 | 13,720 | 13,887 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| **கல்லூரிகள் எண்ணிக்கை—** | | | | | |
| (1) அரசு .. .. | 51 | 51 | 51 | 53 | 53 |
| (2) தனியார் (மானியம் பெறுபவை). | 127 | 138 | 136 | 134 | 134 |
| (3) தனியார் (மானியம் பெறாதவை). | .. | .. | .. | .. | 6 |
| மொத்தம் .. | 178 | 189 | 187 | 187 | 193 |

பிற கல்லூரிகளுக்கான 1984–85 ஆம் ஆண்டு விவரங்கள்.

| வகை. | கல்லூரிகளின் எண்ணிக்கை. அரசு. | கல்லூரிகளின் எண்ணிக்கை. தனியார். | மாணவர் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. கல்வியியற் கல்லூரிகள் .. | 7 | 16 | 2,882 | 244 |
| 2. உடற்பயிற்சிக் கல்லூரிகள் .. | .. | 4 | 391 | 38 |
| 3. புலவர் கல்லூரிகள் .. | .. | 15 | 1,282 | 165 |
| 4. சமுதாயப் பணிப்பள்ளி .. | .. | 2 | 232 | 19 |
| 5. கிராமப்புற உயர்கல்வி நிலையம் .. | .. | 1 | 641 | 83 |
| மொத்தம் .. | 7 | 38 | 5,428 | 549 |



## இணைப்பு III.

### தொழில் நுட்பக் கல்வி.

| (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1979–80. (4) | 1983–84. (5) | 1984–85. (6) |
|---|---|---|---|---|---|
| (அ) கல்வி நிலையங்களின் எண்ணிக்கை — | | | | | |
| 1. பொறியியல் கல்லூரிகள்— | | | | | |
| (1) அரசு .. .. .. | 4 | 4 | 3 | 4 | 4 |
| (2) தனியார் .. | 3 | 3 | 3 | 3 | 3+17* |
| (3) தன்னுரிமையுள்ளவை .. | 5 | 5 | 7 | 7 | 7 |
| மொத்தம் .. | 12 | 12 | 13 | 14 | 31 |
| 2. பாலிடெக்னிக்குகளும், சிறப்புப் பட்டயப் படிப்பு நிலையங்களும்— | | | | | |
| (1) அரசு .. .. | 19 | 19 | 20 | 23 | 23 |
| (2) தனியார் .. .. | 18 | 19 | 19 | 36 +15* | 36 +53* |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. | 1 | 1 | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 38 | 39 | 40 | 75 | 113 |

* தற்சார்பு (Self Financing) தொழிற் கல்வி நிலையங்கள்

V211,51 N85
N85.5-3 ஆ
136432
சென்னை 600 009

## இணைப்பு III—தொடர்ச்சி.

### தொழில் நுட்பக் கல்வி—தொடர்ச்சி.

| (1) | 1973–74. (2) | 1976–77. (3) | 1979–80. (4) | 1983–84. (5) | 1984–85. (6) |
|---|---|---|---|---|---|
| 3. தொழிற் பாட மேல் நிலைப்பள்ளிகள்— | | | | | |
| (1) அரசு .. .. | 11 | 11 | 11 | 11 | 11 |
| (2) தனியார் .. .. | 3 | 3 | 3 | 3 | 3 |
| மொத்தம் .. | 14 | 14 | 14 | 14 | 14 |
| (ஆ) பயின்ற மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் | 6,796 | 7,885 | 13,084 | 15,792 | 16,295 |
| (2) பாலிடெக்னிக்குகள் .. | 10,591 | 14,131 | 16,560 | 25,655 | 39,215 |
| (3) தொழிற்பாட மேல்நிலைப் பள்ளிகள். | 1,704 | 2,166 | 1,977 | 1,680 | 1,560 |
| மொத்தம் .. | 19,091 | 24,182 | 31,621 | 43,127 | 57,070 |